வருடாந்த செயலாற்றல் அறிக்கை - 2012

පර්යේෂණ මගින් නව තාක්ෂණය හඳුනාගැනීම,



ගුණාත්මයෙන් යුත් උපස් බිජවගිනිපැවැත්ම,



ගොවි ජනතාව වෙත තාක්ෂණ හඳුන්වාදීම,



රට සම්පූර්ණයෙන් තිරසාර දියුණුවක් ළඟා කරගැනීම

விவசாயத் திணைக்களம், பேராதனை, இலங்கை

வருடாந்த செயலாற்றல்

அறிக்கை – 2012

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்
பேராதனை
இலங்கை
2012

இவ்வருடாந்த செயலாற்றல் அறிக்கை இலங்கை, பேராதனை, விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்றக் கண்காணிப்பு, மதீப்பீட்டு அலகினால் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதி, தமிழாக்கம் செய்யப்பட்டு, விரிவாக்கல் பயிற்சிப்பிரிவினால் கணினியில் வடிவமைத்து, எண்மான (டிஜிடல்) முறையில் அச்சிடப்பட்டது.

சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதீப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டது. இலங்கை விவசாயத் திணைக்களம், வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கு இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

தூர நோக்கு

தேசத்தின் சுபீட்சத்துக்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்

பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்து பரவலாக்குவது தொடர்பான சேவைகளை விவசாயிகளை முன்நிலைப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் போஷணைப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திய நிலைபேறானதும் சமநிலையானதுமான விவசாய அபிவிருத்தியை எய்துதல்.

பணிப்பாளர் சபை -2012

திரு. K.G.சிறியாபால (பணிப்பாளர் நாயகம்)

திரு. P.K.K.R.பெரேரா (மேலதிக பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி)

கலாநிதி. E.M.தசநாயக்க (மேலதிக பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சி)

திருமதி. H.P.தயாமெனிகே சரத்சந்ர (மேலதிக பணிப்பாளர் நாயகம், நிர்வாகம்)

கலாநிதி. D.M.N.திசாநாயக்க

திரு. K.B.வகுன்தெனிய

திரு. W.G.M.G.தயாவன்ச

கலாநிதி. ரொஹான் விஜேகோன்

திரு. T.H.C.S பெரேரா

கலாநிதி. W.M.A.D.B.விக்ரமசிங்ஹ

திரு. O.P.Kசந்திரசிறி

கலாநிதி. W.M.W.வீரகோன்

கலாநிதி. G.M.W.சித்ரால்

கலாநிதி. H.M.S.ஹீன்கெந்த

பொறியியலாளர். M.H.M.A.பண்டார

திரு. K.U.ரணவக்க

திரு. R.P.பிரேமரத்ன

ஆலோசகர்

P.K.K.R. பெரேரா

ஒருங்கிணைப்பாளர்

P.C பீரிஸ்

சரிபார்த்தவர்

R. சிவநேசன்

பக்க வடிவமைப்பு

A. தேவமலர்

மொழி பெயர்ப்பாளர்கள்

S. பார்த்தீபன்

P. பெரியசாமி

R. சிவநேசன்

குமுதினி சந்திரகாந்தன்

சுகந்தனி செந்தில்குமரன்

சுதாஷினி சஞ்சீபன்

S. ரினூஸ்

N. ரவிச்சந்திரன்

Consultant

P.K.K.R.Perera

Coordinator

P.C.Peris

Editor

R.Sivaneshan

Type Setting

A. Devamalar

Translators

S. Parthipan

P. Periyasamy

R. Sivaneshan

Kumuthini Chandrakanthan

Suganthini Senthilkumaran

Suthajini Sanjeepan

S. Rinoos

M. Ravichandran

பொருளடக்கம்

முன்னுரை viii

1.1 வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), மஹாஇலுப்பள்ளம 1

1.1.1 தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்திநிலையம் (GLORDC), அங்குனுகொலபலஸ்ஸ 32

1.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), அரலகன்வில 43

1.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), வட பிராந்தியம் கிளிநொச்சி 52

1.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI), கன்னொறுவை 60

1.2.1 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கன்னொறுவை 91

1.2.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), பண்டாரவளை 95

1.2.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை 102

1.2.4 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), சீதாஎலிய 109

1.2.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS) – தெலிஜவில 116

1.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), கிராந்துருகோட்டை 121

1.3. பழப்பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (FCRDC), ஹொரண 126

1.3.1 பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDS), கன்னொறுவை 140

1.3.2 தாவர வைரசுக்கள் சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம 149

1.4 நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RRDI), பத்தலகொட 157

1.4.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRRDC), போம்புவளை 193

1.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதனை 202

2.1 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவர பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை 216

2.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (SCS), கன்னொறுவை 222

2.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை 237

2.1.3 தேசிய தாவரத் தடுப்புக்காப்பு சேவை (NPQS), கட்டுநாயக்க 247

2.1.4 பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP), பேராதனை 256

2.1.5 தாவர பிறப்புரிமை மூல வள நிலையம் (PGRC), கன்னொறுவை 271

2.2 விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை 280

2.3 சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை 300

3.1 விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் (ETC), பேராதனை 309

3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் (ICC), பேராதனை 334

4.1 நிர்வாகப் பிரிவு (AD), பேராதனை 348

4.2 பொறியியற் பிரிவு (ED), பேராதனை 354

4.2.1 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (FMRC), மகாஇலுப்பள்ளம 359

4.3 நிதிப் பிரிவு (FD), பேராதனை 363

4.4 முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு (PMEU), பேராதனை 369

5. காலநிலை அறிக்கை 375

6. வெளியீடுகளும், வெளிப்படுத்தல்களும் 390

7. விவசாயத் திணைக்கள சிரேட அலுவலர்கள் (2012.12.31) 402

8. தொழில்நுட்ப அலுவலர்களின் தகைமைகள் (2012.12.31 இன் படி) 423

முன்னுரை

இலங்கையின் விவசாயத் துறையின் அபிவிருத்திக்கு உரித்தான மிக முக்கிய பொறுப்புக்களை வெளிப்படுத்தும் இவ் 2012 வருடாந்தச் செயலாற்றல் அறிக்கைக்கு முன்னுரை வழங்குவதில் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில் நான் மிகவும் பெருமை கொள்கின்றேன். 100 வருடங்களுக்கும் அதிகமான காலச் சுழற்சி வரலாற்றைக் கொண்டுள்ள DOA ஆனது தீவு முழுவதும் பரந்து காணப்படுகின்ற 192 நிறுவனங்கள், நிலையங்கள் மற்றும் பிரிவுகளில் 19000ற்கும் அதிகமாக அலுவலர்களைக் கொண்டு இயங்குகின்றது.

இந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது விவசாயத் திணைக்களத்தின் 10 தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் 3 உதவிச் சேவைப் பிரிவுகள் ஆகியவற்றால் 2012இல் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றது. விவசாயத் திணைக்களத்தின் தற்போதைய மூலவளங்களின் நிலை தொடர்பான தகவல்களைக் கொண்டுள்ள இவ்வறிக்கையானது கொள்கை வகுப்பாளர்கள், சட்டம் இயற்றுபவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோருக்குத் தமது எதிர்காலத் திட்டமிடலுக்கு மிகப் பெரியளவில் நன்மைபயக்கும்.

இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் 2012 காலப்பகுதியில் குறிப்பிடக்கூடிய அடைவுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் விவசாயத் துறையில் முதன்மையானதாகத் திகழும் விவசாயத் திணைக்களமானது அதன் நூற்றாண்டு விழாவை மேன்மை தாங்கிய ஜனாதிபதி அவர்களின் பங்கு பற்றலுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது.

விவசாயத் திணைக்களமானது 92% நிதி முன்னேற்றத்திலும் கூடிய நிதி ஒதுக்கீட்டின் மூலமாக ரூபா 3,507 மில்லியனை 2012 இல் பெற்றது. இதில் ரூபா 700 மில்லியன் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் விதைப் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு செலவு செய்யப்பட்டது. இதன் விளைவாக 16 பண்ணைகள் அதிக இலாபத்தை பெற்றமையானது மேலும் ஒரு குறிப்பிடத்தக்க அடைவாக அமைந்தது.

விவசாயத் திணைக்களத்தால் 2012ல் வெற்றி கொள்ளப்பட்ட மற்றுமொரு மைல்கல், நாட்டில் சோளத்தின் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தமை ஆகும். இது திணைக்களத்தின் விரிவாக்கல் நிகழ்ச்சிகளின் மூலம் நாட்டின் மொத்தத் தேசிய தேவையை உள்ளூர் உற்பத்தியின் வாயிலாக நிறைவேற்றும் நோக்குடனும், வருடாந்தம் இறக்குமதியாகும் 150,000 தொன்னைக் குறைப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு மனிதவளப் பற்றாக்குறை பெரும் தடையாகக் காணப்பட்டது. தொழில்நுட்ப சேவையில் உள்ள சிறிய மற்றும் திறனுடைய தரம், விவசாய சேவை போன்றவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்பியதன் மூலம் கடந்த ஒரு தசாப்த காலமாக நிலவி வந்த இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

மேற்படி குறிப்பிட்டுக் கூறக்கூடிய விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்றம் மற்றும் பல்வேறு அடைவுகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பையும் உறுதுணையையும் நல்கிய திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இவ்வறிக்கையை உருவாக்கி வடிவமைத்து வெளியிடுவதற்கு பாரிய முயற்சி செய்த முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டு பிரிவின் அலுவலர்கள் மற்றும் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்த உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விசேடமாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே.ஜீ.சிறியாபால

விவசாயப் பணிப்பாளர் நாயகம்

1.1 வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), மஹாஇலுப்பள்ளம

சரக்குப் பயிர்கள் (வெங்காயம், மிளகாய்), அவரைப் பயிர்கள் (பயறு, கௌபீ, உழுந்து), எண்ணெய்ப் பயிர்கள் (நிலக் கடலை, சோயா அவரை, எள்ளு, சூரியகாந்தி), வன் தானியப் பயிகள் (சோளம், குரக்கன், இறுங்கு), ஏனைய சிறுதானியங்கள் போன்ற மறுவயற் பயிர்கள் உள்ளடங்கலாக இந்நிறுவனத்திற்குப் பொறுப் பளிக்கப்பட்ட அனைத்து பயிர்களினது புதிய வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதும், இவற்றுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகளையும், ஏனைய தொழில் நுட்பங்களை யும் அதன் பயனாளிகளிற்கு பிரச்சாரம் செய்வதும் மஹா இலுப்பள்ளமை, வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்திற்கும், அதன் துனை நிலையங்களும் பொறுப்பளிக்கப்பட்டப் பணிகளாகும் இத்துடன் இந்நிறுவனத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளஅனைத்துப் பயிர்களின தும் கரு விதைகளை **(Nuclear)** போதியளவில் உற்பத்தி செய்வதும் இதன் பொறுப்பாகும். பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த நெல், பழப்பயிர்கள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட உலர் வலயத்திற்கான பழப் பயிர்களை வெளிக்களத்தில் அதே இடத்தில் சேகரித்து வைத்து, பயிரிடும் வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்துவதும். மூலயுயியிருருக்களை அறிமுகப்படுத்துவதும், அவற்றைப் பரிசோதிப்பதையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இந்த அனைத்து இலட்சியங்களையும் அடைவதற்காக இது தேசிய, சர்வதேச ஆராயச்சி, அபிவிருத்தி நிறுவனங்களுட பல்கலைக்கழகங்களுடனும், தனியார் நிறுவனங்க ளுடனும் இணைந்து பணியாற்றி வருகின்றது.

மறுவயற் பயிர்களிற்கான தேசிய கொள்கை யானது 2015இல் அவரைத் தானியங்கள், தானியங்கள், சிறு தானியங்கள், நிலக்கடலை ஆகியவற்றில் தன்னிறைவை எய்த வேண்டும் என வலியுறுத்துகின்றது. இந்த இலக்கை அடைவதற்கு உற்பத்தித்திறன், செய்கை பண்ணப்படும் பரப்பளவு என்பனவற்றை அதிகரிக்க வேண்டும். எனினும் கிடைக்கும் நீர், மறு வயற் பயிர்களைத் தவிர்ந்த ஏனைய தேவைகளிற்கு நிலத்திற்கு ஏற்பட்டுள்ள அதிகரித்த போட்டி போன்ற காரணிகளினால் பயிர்செய்யும் விஸ்தீரணத்தை அதிகரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை வளங்களை உச்ச அளவிற் பயன்படுத்தி பண்ணை உற்பத்தித்திறனை அதிகரிப்பதே தெரிவு செய்யக் கூடிய இதற்கான ஒரேயொரு தீர்வாகும். மறுவயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனக் கட்டமைப்பின் பிராதன ஆராய்ச்சி நிலையம் மஹா இலுப்பள்ளமையிலும் அதனுடன் தொடர்புள்ள அவரைப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையங்கள் (பி.வி.ஆ.அ.நி) அங்குனுகொலபலஸ்ஸ, அரலங்கன்வில, கிளிநொச்சி ஆகிய இடங்களிலும், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் திருநெல்வேலி, வவுனியா, தெலிஜ்ஜவில ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன. பி.வி.ஆ.அ. நிலையம், கரடியனாறு, விவசாய ஆராய்ச்சி நிலையம், முல்லைத்தீவு என்பன சேதமடைந்துள்ள தோடு, அவற்றை இசைவாக்க ஆராய்ச்சி நிலையங்க ளாக அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதீடு

அட்டவணை 1.1.1: வருடாந்தப் பாதீடு (2012 ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	10,296,988.00	8,713,507.65	85
மீண்டு வரும் செலவீனம்	28,346,293.00	25,203,362.98	89
திட்டங்கள்			
தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டம்			
I. வெங்காயம்	2,200,000.00	2,058,341.00	94
II. மிளகாய்	2,590,000.00	2,433,379.35	94
III. நீர் முகாமைத்தவம்	2,190,000.00	2,029,301.25	93
IV. மரக்கறி	250,000.00	185,810.10	74
சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட விதை உற்பத்தி (மிளகாய்)	1,000,000.00	939,026.22	94
பண்ணை அபிவிருத்தி	8,050,000.00	7673,410.47	95
பழ உற்பத்தி (திராட்சை)	1,600,000.00	1,541,740.53	96
KOPIA	426,461.07	426,461.07	100
கலப்பின சோள அபிவிருத்தி	835,000.00	822,457.16	98
மொத்தம்	**57,784,742.00**	**52,026,797.78**	**92**

முன்னேற்றம்

பயிர் மேம்பாடு

சரக்குப் பயிர்

மிளகாய்

இலங்கையில் செய்கைபண்ணப்படும் மிகவும் முக்கியமான சரக்குப் பயிர் மிளகாய் ஆகும். தற்போது செய்கைபண்ணப்படும் மொத்த விஸ்தீரணம் 13,313 ஹெக்டயர்கள் ஆகும். சராசரி பச்சை மிளகாய் விளைச்சல் 3.33 தொன் / ஹெக்டயர் ஆகும். 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட பச்சை மிளகாயின் அளவு 44,398 தொன்னாகும். உண்ணாட்டுத் தேவையை விட குறைந்த அளவிலேயே உற்பத்தி செய்யப்பட்டமை யால் 42,782 தொன் மிளகாய் 2011 இல் இறக்குமதி செய்யப்பட்டது.

நீர்ப்பாசன நிலைமையின்கீழ் நன்கு முகாமைத்து வம் செய்யப்பட்ட வாய்ப்பான உற்பத்தி 15 தொ/ ஹெ ஆகும். விவசாயிகளின் தோட்டங்களில் குறைந்தளவான விளைச்சலைப் பெறுவதற்கான முக்கிய காரணம் நோய், பீடைகளின் தாக்கமாகும். இதன் காரணமாக விளைச்சலின் தரமும், அளவும் குறைகின்றது. எனவே தரமான காய்களையும், நோய், பீடைகளிற்கு எதிர்ப்புத் தன்மை / சகித்து வளரக் கூடிய உயர் விளைச்சலைத் தரும் வர்க்கங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் மிளகாயின் பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சாதனைகள்

இரண்டு புதிய மிளகாய் வர்க்கங்கள் வெளியிடப்பட்டன

- இரண்டு புதிய மிளகாய் வர்க்கங்கள் சிபாரிசு செய்யப்பட்டு, செய்கைபண்ண வெளியிடப் பட்டன.

  எம். ஐ. சி. எச் 3 என்னும் வர்க்கம் பச்சை மிளகாய் உற்பத்திக்கு மிகப் பொருத்தமான தாகும். இவ்வர்க் கத்தின் காய்கள் மத்தியளவு பருமனானதோடு, கவர்ச்சிகரமான மினுங்கும் கடும் பச்சை நிறமானவை ஆகும். இவ்வர்க்கம் மிளகாய் இலைச்சுருளல் நோய்க்கு மத்தியளவான எதிர்ப்புத் தன்மை கொண்ட தாகும். இது தீவெங்கிலும் பயிரிடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

  இவ்வர்க்கத்தின் இன விருத்தியாளர் விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2.5 கி.கி இன விருத்தியாளர் விதைகள் விவசாயத் திணைக்கள விதை, நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு விதை உற்பத்திச் செயன்முறைகளில் உள்ளடக்குவதற்காக வழங்கப்பட்டது. இவ்வர்க்கம் ஹெக்டயரொன்றில் 15 தொன்னிற்கும் அதிகமான பச்சை மிளகாய் விளைச்சலைத் தரவல்லது.

  வெரணிய என்பது ஈரவலய விவசாயிகளிடையே பிரபல்ய மான ஒரு மிளகாய் பிரதேச ரகம் (Land race) ஆகும். இரண்டாவது புதிய வர்க்கமான எம்.ஐ. வெரணிய 1 தற்போ துள்ள வெரணிய பிரதேச ரகத்தினை தூய்மையாக்கி, தெரிவு செய்யப்பட்டதாகும். இந்த வர்க்கம் 18 ச.மீ இற்கும் அதிகமான நீளத்தைக் கொண்ட, மத்தியளவான காரத் தன்மை கொண்ட, மஞ்சள் நிறமான பழங்களைக் கொண்டது. எம்.ஐ. வெரணிய 1 வர்க்கத்தை கறி மிளகாயிற்கான பதலீட்டு மரக்கறியாகப் பயன்படுத்த முடியும். இது ஒரு ஹெக்டயரில் 25 தொன்னிற்கும் அதிகமான விளைச்சலைத் தரவல்லது. இது வீட்டுத் தோட்டப் பயிராகவும், சாடிகளிலும் செய்கைபண்ணவும் பொருத்தமான தாகும்.

நம்பிக்கையூட்டும் மிளகாய் வம்சாவழிகள்

நம்பிக்கையூட்டும் இரண்டு மிளகாய் இன விருத்திப் வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்ட தோடு, தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையின் பின்னர் பச்சை மிளகாய் உற்பத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பரம்பரைகளில் பீ. சி. 2 தெரிவு, ஐ.சி.பீ.என் தெரிவு என்பன ஏனைய வர்க்கங் களை விட அதிகளவான விளைச்சலைக் கொடுத்தன. தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகள் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டன: அரலகன்வில, வ.ப.ஆ.அ.நி /மஹாஇலுப்பள்ளமை, கல்பிட்டிய, அ.தா.எ.வி.ஆ.அ.நி / அங்குணகொலபெலஸ், வி.ஆ.நி / தின்னவேலி, பி.வி.ஆ.அ.நி /

மாக்கந்துறை. நம்பிக்கையூட்டும் பரம்பரையான பீ.சி.1 தெரிவுவானது கூம்பு வடிவான காய்களை யும், இளம் பச்சை நிறமான, அதிகளவான காரத்தையும் கொண்டது. இது பச்சை, செத்தல் மிளகாய் இரண்டையும் உற்பத்தி செய்ய பொத்தமா னதாகும். இது ஒரு ஹெக்டயரில் 15 தொன்னிற்கும் அதிகளவான விளைச்சலைத் தரக் கூடிய வல்லமையைக் கொண்டுள்ளது. எதிர்வரும் போகத்தில் இது வர்க்க இசைவாக்கப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட உள்ளன. நம்பிக்கையூட்டும் வர்க்கங்களின் விதைகள் தெளிவான பண்புகள், சீரான தன்மை, நிலைபேறான தன்மை என்பனவற்றிற் காக விதை அத்தாட்சிப்படுத்தும் சேவைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது நம்பிக்கையூட்டும் பரம்பரையான ஐ.சி.பி.என் தெரிவு ஆசிய மரக்கறி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மூலயுயிருருவிலிருந்து தெரிவு செய்யப்பட்டது. இது 18தொ/ஹெ ஐ விட அதிகளவான பச்சை மிளகாயைத் தரும் வல்லமையைக் கொண்டு ள்ளது. இப்பரம்பரை மினுங்கும், மஞ்சள் நிறமான தோற்றத்தைக் கொண்ட, காரமான நீண்ட காய்களைக் கொண்டது. எமது பச்சை மிளகாய் வர்க்கங்களை விட ஐசிபீஎன் வர்க்கத்தின் தோல் (சுற்றுக் கனியம்) தடிப்பானதாகும். இது மரக்கறிக்கு மிகவும் உகந்தது ஆகும். ஆனால் அதிகளவான காரத் தன்மையைக் கொண்டது. பாதுகாப்பதற்காக இவ்வர்க்கத்தின் விதைகள் தாவரலக் கரு மூலவள நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இதனை மேலும் ஆய்வு செய்வதற்காக கறிமிளகாய் வர்க்கத்துடன் ஒப்பிட வேண்டி யுள்ளது.

மிளகாயில் கலப்பின இனவிருத்தி

உண்ணாட்டில் விருத்தி செய்யப்பட்ட நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட F1 கலப்பினங்கள் அவற்றின் பெற்றோர் பரம்பரைகளுடன் வெளிக்கள நிலைமைகளின் கீழ் ஆரம்ப மதிப்பீடாக பரிசோதிக்கப்பட்டன. இவற்றின் செயற்றிறனிற்கு அமைய ஆறு F1 கலப்பினங்கள் பல்வேறு இடங்களில் பெரியளவான பரிசோதனைகளில் மதிப்பிடுவ தற்குத் தெரிவு செய்யப்பட்டன. 2012 சிறுபோகத்தின் போது நிலவிய மிகக் கடுமையான வெப்பம் நிலவியமயால் கலப்புகளை மேற்கொள்வதன் வெற்றி அதிகளவிற் பாதிக்கப் பட்டது.

வெங்காயம்

இலங்கையில் செய்கைபண்ணப்படும் அத்தியாவசி யமான சரக்குப் பயிர் வெங்காயம் ஆகும். 2011 இல் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் என்பன பயிரிடப்பட்ட விஸ்தீரணம் முறையே 3451, 6145 ஹெக்டயர் ஆகும். இவற்றின் சராசரி விளைச்சல் முறையே 13.24 மெ.தொ/ஹெ, 11.77 மெ.தொ/ஹெ ஆகும். 2012 இல் பெரிய வெங்காயத்தின் உற்பத்தி மட்டம் 45,682 மெ.தொ. ஆகும். இதேவேளை 72,339 மெ.தொ சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த உற்பத்திகளின் அளவு நாட்டின தேவையை விடக் குறைவாகையால் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 170,339மெ.தொ பெரிய வெங்காயமும், 6,807மெ.தொ சின்ன வெங்காயமும் இறக்குமதி செய்யப்பட்டன. உயர் விளைச்சலைத் தரும், விதைகளை உற்பத்தி செய்யும் வர்க்கங்களை விருத்தி செய்தல், நோயகளிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட, நீண்ட காலத்திற்கு வைத்திருக்கக் கூடிய வர்க்கங்களை அபிவிருத்தி செய்வது உற்பத்தியை அதிகரித்து, வெங்காய இறக்குமதியைக் குறைக்க உதவும். எனவே அவ்வாறான வர்க்கங்களை விருத்தி செய்வதற்கு வெங்காயப் பயிர் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2012 சிறு போகத்தின் போது தொடர்ச்சியான வர்க்க அபிவிருத்தி செயன்முறையின் பல்வேறு அவத்தைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சாதனைகள்

- தம்புள்ளை தெரிவை கட்டுப்பாட்டு வர்க்கமாகக் கொண்டு களஞ்சியப்படுத்தி வைக்கும் தன்மைக்காக புதிதாக விருத்தி செய்யப்பட்ட 19 வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. அழுகல், முளைத்தல், உலர்தல் என்பன 2 வார கால இடைவெளியில் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

- தம்புள்ளை தெரிவை கட்டுப்பாட்டு வர்க்கமாகக் கொண்டு விளைச்சல், ஏனைய

பயிராக்கவியற் பண்புகள் என்பனவற்றிற்காக புதிதாக விருத்தி செய்யப்பட்ட 13 வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில் 2 வம்சாவழிகள் தமது உடற்றொழிலியல் முதிர்ச்சியை கட்டுப்பாட்டு வர்க்கத்தை விட 10 – 12 நாட்கள் முந்தி அடைந்ததோடு, 3 வம்சாவழிகள் உயர் குமிழ் விளைச்ச லைக் கொடுத்தன.

- கலப்பின இனவிருத்தித் திட்டத்தில் 2010/11 காலபோகத்தில் மேற்கொள்ளப்பட்ட 4 வித்தியாசமான கலப்புகளிலிருந்து F2 பரம்பரையைச் சேர்ந்த 10 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன. சீரான தன்மையை விட ஏனைய நன்மை தரும் பண்புகளிற்காக இவற்றை மதிப்பிட வேணடியுள்ளது. எதிர்காலத்தில் கலப்பின விருத்திக்காக உயர்ந்த பண்புகளைக் கொண்டவை பெற்றோராக தெரிவு செய்யப்படல் வேண்டும்.

- தனியார் துறையினரால் வெங்காய விதைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதோடு, அது விவசாயிகளிடையே மிகவும் பிரபல்ய மடைந்து வருகின்றது. உண்ணாட்டு பயிராக்க நிலைமைகளிற்கு இசைவாக்கத் தன்மை அல்லது உள்ளூர் நோய், பீடைகளினால் அவை பாதிக்கப்படும் தன்மை என்பனவற் றிற்குத் தெரிவு செய்யப்படாது இவை சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே நோய் அல்லது பீடைகளின் தொற்றலைத் தவிர்க்க முடியாமற் போய்விடும். குறிப்பிட்டதொரு நோய் அல்லது பீடையினால் இறக்குமதி செய்யப்படும் வர்க்கங்கள் பாதிக்கப்படுமாயின் வெங்காயப் பயிர்ச்செய்கைக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே இறக்குமதி செய்யப்பட்ட வெங்காய த்தின் வெளிக்கள செயற்றிறன், நோய், பீடைத் தாக்கங்கள் என்பனவற்றை அவதானிப்பதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

- பொதுவான பயிர்ச்செய்கைக்கென சிபாரிசு செய்வதற்காக மதிப்பிடப்பட்ட ஆறு வெளிநாட்டு வர்க்கங்களில் இரண்டு வர்க்கங்கள் தம்புள்ளை வர்க்கத்துடன் ஒப்பிடும் போது சிறந்த விளைச்சலைக் கொடுத்தன. தம்புள்ள தெரிவு, கலேவல லைட் ரெட், எக்ரி பௌன்ட் லைட் ரெட் ஆகிய வர்க்கங்களுடன் வெளிநாட்டு வர்க்கமான "கொஹினூர் 9" பருவமல்லாத காலங்களில் பயிர்செய்வதற்காக மதிப்பிடப் பட்டது.

- தம்புள்ளை தெரிவு வர்க்கத்தின் நடுகை இடைவெளி இறுதி விதை விளைச்சலில் ஏற்படுத்தும் தாக்கத்தினை கண்டு பிடிக்க 2012 சிறுபோகத்தின் போது ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதோடு, இதனை அடுத்த மூன்று போகங்களிற்கு தொடர்ந்து மேற் கொள்ள வேண்டும்.

- உயிருள்ள, உயிரற்ற தகைப்புகளைத் தாங்கி வளரும் / எதிர்ப்புத் தன்மை போன்ற முக்கியமான பண்புகளிற்கு வெங்காயத்தி லுள்ள பரம்பரை இயல்புகளின் வேறுபாடுகள் குறைந்த அளவிலேயே உள்ளன. எனவே விகாரிகளைத் தூண்டுவதன் மூலம் பரம்பரை இயல்புகளில் வேறுபாடுகளை உருவாக்குவத ற்காக 2012 சிறுபோகத்தின் போது ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. தம்புள்ளை தெரிவு என்னும் வர்க்கம் இரசாயன விகாரித் தூண்டியான ஈதைல் மெதேன் சல்போனேட்டினால் (EMS) பல்வேறு செறிவுகளில் பரிகரிக்கப்பட்டன. பரிகரிக்கப் பட்ட விதைகள் விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுகளிற்கு அமைய வெளிக்களத்தில் நடப்பட்டன. முக்கியமான வளர்ச்சி நியமங்கள் அளவிடப்பட்டன. முடிவுகளிற்கு அமைய அடுத்த போகத்திற்கு செறிவையும், பரிகரிக்கப்படும் நேரத்தையும் மாற்றுவதன் மூலம் பரிசோதனைப் பரிகரணங்களை மீள ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- சின்ன வெங்காயத்தில் குறைந்தளவில் விதைகள் உருவாகுதல் அல்லது விதைகள் உருவாகமலிருப்பது மிகப் பொதுவானதாகும். விதைகள் உருவாகுவது விருத்தி செய்யப் பட்ட சின்ன வெங்காயத்தில் குமிழ் விளைச்சல், ஏனைய பயிராக்கவியற் பண்புகளை மதிப்பிடுவதற்காக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் உள்ளூர் சின்ன வெங்காயமான வேதாள வர்க்கத்தை விட சின்ன வெங்காய பரம்பரையான MICLO

விலிருந்து அதிகளவான விளைச்சல் பெறப் பட்டது.

- பரம்பரை விருத்திக்காக சீரான ஆறு வெங்காயக் குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டன.

வன் தானியங்கள்

சோளம்

இலங்கையில் சோளச் செய்கை கடந்த பல வருடங்களில் பெருமளவில் விருத்தியடைந்துள்ள தோடு, அதிகளவில் வர்த்தகமயமாக்கப்பட்ட தொழில் முயற்சியாகவும் மாறியுள்ளது. 2011 இல் 50,545 ஹெக்டயர் நிலப்பரப்பில் இது செய்கை பண்ணப்பட்டது(தொகை மதிப்பு, புள்ளி விபரவியற் திணைக்களம், 2012). இது பெருமளவில் கால போகத்தில் மானாவாரி நிலைமையின் கீழ் மேட்டு நிலங்களில் பிரதானமாகப் பயிரிடப்படுவதோடு, சிறுபோகத்தில் மேட்டு நிலங்களிலும், தாழ் நெல் வயல்களிலும் மேலதிக நீர்ப்பாசனத்துடன் செய்கை பண்ணப்படுகின்றது. கடந்த நான்கு வருடங்களில் சோளத்தின் உற்பத்தித்திறன் 1.65தொ/ஹெ இலிருந்து 2.88 தொ/ஹெ வரை அதிகரித்துள்ளது. சோளச் செய்கையை மேலும் அதிகரித்து, இறுதியாக விளைச்சலை அதிகரிப்பதில் பங்கு வகிக்கும் முக்கியமான காரணிகளில் ஒன்று கலப்பின விதைகளை நடுவதோடு, அதனோடு இணைந்துள்ள தொழில் நுட்பங்களையும் பின்பற்றுவதாகும். தற்போது நாடு சோள உற்பத்தியில் ஏறத்தாழ தன்னிறைவை அடைந்துள்ளது. எனினும் மொத்த கலப்பின விதைத் தேவையில் சுமார் 95% வரை இன்றும் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுவதோடு, இத் தொகை 707 மெ.தொ ஆகும் (சுங்க அறிக்கை, 2009). விதைகளை இறக்குமதி செய்ய செலவிடப்பட்டத் தொகை ரூபா 164.48 மில்லியன்கள் ஆகும். எனவே உயிருள்ள, உயிரற்ற தகைப்புகளிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட கலப்பின சோளங்களையும், உயர் விளைச்சலுடன் (5 – 7 தொ/ஹெ) திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்களையும் விருத்தி செய்யும் செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சாதனைகள்

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட உள்ளக விருத்திப் பரம்பரைகளையும், சர்வதேச சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி நிலையத்தின் (CIMMYT) உள்ளக விருத்தி பரம்பரைகளையும் பயன்படுத்தி உருவாக்கப் பட்ட 700 தனிக்கலப்புகளிலிருந்து ஏழு பொதுவான கலப்பினச் சோளங்கள் தெரிவு செய்யப்பட்டு, கடந்த இரண்டு போகங்களிலும் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகளிலும் மதிப்பீடு செய்யப்பட்டன. இக்கலப்பினங்கள் சராசரியாக 4.5 – 5.5 தொ/ஹெ விளைச்சலைக் கொடுத்தன.

- இந்தோனேசியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று திறந்த மகரந்தச் சேர்க்கை அடையும் வர்க்கங்கள் முன்னேற்றமான விளைச்சற் பரிசோதனைகளிலும், தேசிய ஒருங்கிணை க்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகளிலும் மதிப்பீடு செய்யப்பட்டன. ஒரு வர்க்கமான ஸ்ரீகந்திகுனிங் “MIOPV 1” விவசாயிகளின் தோட்டங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளிற்காகத் தெரிவு செய்யப் பட்டது. தெரிவு செய்யப்பட்ட இந்தோனேசிய திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கம் சுமார் 4 – 5 தொ / ஹெ விளைச்சலைக் கொடுத்தது.

- சர்வதேச சோளம் மற்றும் கோதுமை அபிவிருத்தி நிலையத்திலிருந்து (CIMMYT) பெறப்பட்ட பதினான்கு கலப்பின சோள வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதோடு, மேலும் மதிப்பீடு செய்ய 4 கலப்பினங்கள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்டக் கலப்பின வர்க்கங்கள் ஒப்பிடப்பட்ட வர்த்தக வர்க்கங்களுடன் ஒப்பிடக் கூடியவான விளைச்சலைக் (6 -7 தொ/ஹெ) கொடுத்தன.

- இசைவாக்கம், பொதுவான நோய், பீடைகளினால் பாதிக்கப்படும் தன்மை என்பனவற்றைப் பரிசோதிப்பதற்காக (தனியார் கம்பனிகளால் இறக்குமதி செய்யப்பட்ட) ஐந்து வெளிநாட்டுக் கலப்பின சோளங்களும், “ஸ்வீட் கோன்” கலப்பின வர்க்கங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. “ஸ்வீட் கோர்ன்

ஹைபிறிட் 75, சன்வீட், கோல்டன் 95, சுப்பர் பிக் ஆகியவற்றின் மதிப்பீட்டு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட கம்பனிகளிற்கு சமர்பிக்கப்பட்ட தோடு, சோளத்திற்கான மதிப்பீடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குரக்கன்

கடந்த பல வருடங்களாக இலங்கையில் குரக்கன் பயிர்ச்செய்கை ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது. 2011 இல் பயிரிடப்பட்ட விஸ்தீரணம் சுமார் 5,251 ஹெக்டயர்கள் ஆகும் (சனத்தொகை மதிப்பீட்டு, புள்ளி விபரவியற் திணைக்களம், 2012). கால போகத்தில் மேட்டு நிலங்களில் பிரதானமாக மானாவாரியாகப் பயிரிடப்படுவதோடு, சிறுபோகத்தில் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலான விஸ்தீரணத்தில் மேட்டு நிலங்களிலும், தாழ் நில நெல் வயல்களிலும் மேலதிக நீர்ப்பாசனத்துடன் பயிரிடப்படுகின்றது. இதன் உற்பத்தித் திறன் கூட கடந்த ஐந்து வருடங்களாக மாற்றமடையாது 1.0 - 1.1 மெ.தொ/ ஹெ அளவிலேயே உள்ளது. தற்போது மொத்த தேசிய உற்பத்தி 5,411 தொன் ஆகும். மொத்த இறக்குமதி 3,622 தொன் ஆகும் (சனத்தொகை மதிப்பீட்டு, புள்ளி விபரவியற் திணைக்களம், 2012). குரக்கனை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட அந்நிய செலாவணி ரூபா 105.3 மில்லியன்கள் ஆகும். எனவே உயர் விளைச்சலுடன் (2-2.5 மெ.தொ/ஹெ), உயிருள்ள, உயிரற்ற தகைப்புகளிற்கு எதிர்ப்புத்தன்மையான வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக பயிர் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

சாதனைகள்

- 2011 / 12 கால போகத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை யின்கீழ் நான்கு நம்பிக்கையூட்டும் 4 சேகரிப்பு களும், 3 நம்பிக்கையூட்டும சேகரிப்புகளும் விவசாயிகளின் தோட்டங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளை மேற் கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டன. இச்சேகரிப்புகள் சராசரி விளைச்சலாக 3.0 – 3.5 தொ/ஹெ விளைவை 2012 சிறுபோகத்திற் கொடுத்தன. இவை தொடர்ந்தும் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளிலும், பெரியளவான வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளிலும் மதிப்பீடு செய்யப்பட உள்ளன.
- ஆரம்ப விளைச்சற் சோதனையில் எட்டு குரக்கன் சேகரிப்புகள் உள்ளன. இச்சேகரிப்பு கள் சராசரி விளைச்சலாக சுமார் 3.0 – 3.5 தொ/ஹெ விளைவைக் கொடுத்தன.
- தாவரக்கரு மூலவள நிலையத்திலிருந்து பெறப்பட்ட நாற்பத்தி மூன்று குரக்கன் சேகரிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டு, எதிர்கால இனவிருத்தி நோக்கங்களிற்காக இனப்பெருக் கம் செய்யப்பட்டன.

அவரைத் தானியங்கள்

பாசிப்பயறு

இலங்கையில் பயிரிடப்படும் மிகவும் முக்கியமான ஒரு அவரைத் தானியப் பயிர் பாசிப்பயறு ஆகும். தற்போது 15,772 ஹெக்டயரில் (3வது போகம் உட்பட) பயிரிடப்பட்டு, சராசரி விளைச்சலாக 1.16 தொ/ஹெ பெறப்படுகின்றது. 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட பாசிப்பயறின் அளவு 10,838 மெ.தொ ஆகும். இதன் விளைவாக நாட்டின தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 10,447 மெ.தொ பயறு இறக்குமதி செய்யப்பட்டது. விவசாயிகளின் தோட்டங்களில் உற்பத்தித்திறன் குறைவாகக் காணப்படுவதற்கான முக்கிய காரணிகளானவன, நோய்கள் விசேடமாக பாசிப்பயறு சித்திர வடிவ வைரசு, தரமான நடுகைப் பொருட்கள் கிடைக்காமை என்பனவாகும். இதன் மொத்த, சில்லறை விலைகள் முறையே ஒரு கிலோவிற்கு ரூபா 170.00, 220.00 ஆகும். இதன் சந்தை விலை அதிகளவிற் காணப்படுவதற்கான முக்கிய காரணங்கள் களஞ்சியப் பீடைகளினால் ஏற்படும் பாதிப்புகளும், அறுவடை செய்வதற்கு ஏற்படும் அதிகளவான செலவும் ஆகும்.

எனவே உயர் விளைச்சலைத் தரும், நோய், பீடைகளிற்கு எதிர்ப்புத் தன்மையுள்ள, விரும்பத்தக்க பயிராக்கவியற் பண்புகளைக் கொண்ட வர்க்கங்களை இனவிருத்தி செய்வது உயர் உற்பத்தி இலக்கை அடைவதற்கு மிகவும் முக்கியமானதாகும். இதன் விளைவாக இலங்கையில் பாசிப்பயறில் தன்னிறைவை அடைய முடியும்.

சாதனைகள்

- உயர் விளைச்சல் (>2.5 தொன்/ஹெ), களஞ்சியப் பீடைகள், காய்துளைப் புழு, இலையுண்ணும் மயிர்கொட்டிகள், பாசிப்பயறு மஞ்சள் சித்திர வடிவ வைரசு, தூள் பூஞ்சண நோய்கள், சேர்கொஸ்போரா இலைப் புள்ளி ஆகியவற்றிற்கான எதிர்ப்புத்தன்மை, குறுகிய அல்லது நீண்ட வயதுடைய 60 நாட்கள் அல்லது 75 நாட்களை விட அதிகமானது, சிறந்த தரம் (வன் விதைகளின் வீதம் 1 I விடக் குறைவு, பெரிய விதைகள் (1000 விதைகளின் நிறை 70 கிராமை விட அதிகம்), ஒத்திசைவான முதிர்ச்சி ஆகிய நோக்கங்களிற்காக 2011/12 காலபோகத்தின் போது கலப்புப் பிறப்பாக்கம் செய்யப்பட்ட இருபத்தியொரு F1 குடித்தொகை வெளிக் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

- 2011/12 கால போகத்தில் F1 குடித்தொகையி லிருந்து தெரிவு செய்யப்பட்ட பன்னிரெண்டு F2 குடித்தொகைகள் பரம்பரை முன்னேற்ற த்திற்கான தொகையாக வெளிக் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன.

- 2தொன்/ஹெ அளவாள வாய்ப்பான விளைச்ச லைக் கொண்ட, பாசிப் பயறு மஞ்சள் சித்திர வடிவ வைரசுவிற்கு மத்தியளவான எதிர்ப்புத் தன்மை கொண்ட நம்பிக்கையூட்டும் ஐந்து வர்க்கங்கள் எம்.ஐ 6 வர்க்கத்துடன் ஒப்பிடப் பட்டு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் வாய்ப்புப்பார்க்கப்பட்டன.

- உயர் விளைச்சலைத் தரும் நான்கு பரம்பரைகள் (எம்ஜசிபீ 11, எம்ஜசிபீ 113, எம்ஜசிபீ 114, எம்ஜசிபீ 539-17) விவசாயி களின் தோட்டங்களில் அவற்றின் இசைவாக்கத் தன்மையைப் பரிசோதிப்பதற் காக மொனராகலை, ஹம்பாந்தோட்டை, வவுனியா, அங்குணகொலபெலஸ்ஸ, அரலகன்விலை, அநுராதபுரம், பொலன்னறுவை, குருநாகலை, புத்தளம் ஆகிய இடங்களில் விவசாயிகளின் தோட்டங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனையில் சோதிக்கப்பட்டன.

கௌபீ

மிகவும் முக்கியமான உணவு அவரைப் பயிர்களில் கௌபீ மிக முக்கியமானது. இது பிரதானமாக இலங்கையின் உலர், இடை வலயங்களில் மானாவாரியாகச் செய்கை பண்ணப்படுகின்றது. சோளம், பாசிப்பயறு, உழுந்து, சோயா அவரை போன்ற வர்த்தகப் பயிர்களின் பயிர்ச் செய்கைக் காரணமாக கௌபீ பயிரிடப்பட்ட விஸ்தீரணம் படிப்படியாகக் குறைந்து சென்றது. தற்போது கௌபீக்கு எவ்விதமானதொரு வர்த்தகப் பெறுமானமும் இல்லாவிட்டாலும் கூட இது நிலைபேறான பயிர்ச்செய்கை முறையிலும், மானவாரிச் செய்கையிலும் மிகவும் முக்கியமான தாகும். எனவே உயர் விளைச்சலைத் தரும் வர்க்கங்களை அபிவிருத்தி செய்வது உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒரு பிரதான தந்திரோபாயம் ஆகும்.

தற்போது பயிர் செய்யப்படும் விஸ்தீரணம் 9, 267 ஹெக்டயர் ஆகும். சராசரி விளைச்சல் 1.13 தொ/ஹெ ஆகும். 2011 இல் கௌபீயின் உற்பத்தி மட்டம் சுமார் 10,453 தொன் ஆகும். 2011 இல் சுமார் 905 மெ.தொ கௌபீ தேசிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இறக்குமதி செய்யப்பட்டது.

பூச்சித் தாக்கப் பிரச்சினையை எதிர் கொள்வதற் கான தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதே தேசிய தேவைக்கும், தேசிய உற்பத்திக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கான ஒரு அணுகு முறையாகும். ஏனெனில் அனைத்து வளர்ச்சிப் பருவங்களின் போதும் பரந்த வீச்சிலான பூச்சிப் பீடைகள் இதனைத் தாக்குகின்றன. கௌபீ பிரதானமாக தானியங்களிற்கேப் பயிரிடப்படுவ தால் இப்பீடைகளில் விருத்தியடையும் விதைகளை சேதப்படுத்தும் பீடைகளே பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

சாதனைகள்

- கலப்புப் பிறப்பாக்கம், தெரிவு செய்யும் செயற்றிட்டங்கள் என்பனவற்றின் நான்கு முப்பத்தி இனப்பெருக்கப் பரம்பரைகள் விளைச்சல் மதிப்பீடுட்டிற்காக உற்பத்தி செய்யப்பட்டன.

உழுந்து

உணவுப்பதப்படுத்தற் துறையின் முக்கிய மூலப் பொருளாக மாறியது முதல் உழுந்து

இலங்கையில் பயிரிடப்படும் முக்கியமானதொரு பணப் பயிராக மாறியுள்ளது. சுமார் 8,669 ஹெக்டயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு, 0.67 தொன் / ஹெ விளைச்சல் பெறப்பட்டது. 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட உழுந்தின் அளவு 5782 தொன் ஆகும். இதேவேளை நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 7084 தொன் இறக்குமதி செய்யப்பட்டது.

உயர் விளைச்சலைத் தரும், பிரதான நோய், பீடைகளிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட முந்தி அல்லது பிந்தி முதிர்ச்சியடையும் உழுந்து வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல், இதன் போசணை, பதப்படுத்தற் தரங்களை மேம்படுத்தல் எனபனவே இதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான சில மாற்றுக்கள்.

சாதனைகள்

- F_2 பரம்பரையை உற்பத்தி செய்வதற்காக உயர் விளைச்சல் (>2.5 தொன் / ஹெ), நோய், பீடைகளிற்கான(களஞ்சியப் பீடைகள், மஞ்சள் சித்திர வடிவ வைரசு) எதிர்ப்புத் தன்மை, குறுகிய அல்லது நீண்ட வயதுடையவை (90 நாட்களிற்கும் குறைந்தவை, 100 நாட்களிற்கும் அதிகமானவை) ஆகிய நோக்கங்களுடன் 2011/12 கால போகத்தில் கலப்புப் பிறப்பாக்கம் செய்யப்பட்ட ஒன்பது F_1 குடித்தொகைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

எண்ணெய்ப் பயிர்கள்

சோயா அவரை

இலங்கையில் சோயா அவரை பிரதானமாக கோழித் தீன் உற்பத்திக்கும், மனிதர்களிற்கு இலாபகரமான புரதத்தை உற்பத்தி செய்யவும் பயன்படுத்தப்படுகின்றது. கோழி உற்பத்தித் துறை பிரதானமாக இறக்குமதி செய்யப்படும் சோயா கேக்குகளிலேயே தங்கியுள்ளது. தற்போது இறக்குமதி செய்வதற்குக் கட்டுபாடுகள் உள்ளமையால் உள்ளூர் சோயா அவரை உற்பத்திக்கான கிராக்கி மிக அதிகளவில் உள்ளது. எனினும் தேசிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உள்ளூர் உற்பத்தி போதுமானதா யில்லை. 2011 இல் 2451 ஹெக்டயரில் பயிரிடப்பட்டு, 1.57 தொ/ஹெ சராசரி விளைச்சலாகப் பெறப்பட்டது. மொத்த உற்பத்தி 3,847 தொன்கள் ஆகும். அதிக விளைச்சலைத் தரக் கூடிய வர்க்கங்கள் இல்லாமையே உற்பத்தி குறைவதற்கான பிரதான காரணியாகும். பீபி1 என்னும் வர்க்கமே இலங்கை விவசாயிகள் அதிகளவில் பயிரிடும் வர்க்கம் ஆகும். எனவே உயர் விளைச்சலைத் தரும் சோயா வர்க்கங்களை விருத்தி செய்வதே உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பிரதான ஒரு தீர்வாகும்.

சாதனைகள்

- உயர் விளைச்சலைத் தரும் (> 5 தொ / ஹெ), பெரிய (12 – 13 கி / 100 விதைகள்), வெண்ணெய் நிறமான விதைகளைக் கொண்ட ஒரு வர்க்கமான எம்.ஐ.எஸ்.பி 1 சில நிபந்தனைகளின் கீழ் வெளியிடப் பட்டது. இது சுமார் 90 நாட்களில் முதிர்ச்சியடையும். பக்றீரியா கொப்புள நோயினால் பாதிக்கப்படுவதோடு, விதை உதிர்வதற்கும் எதிர்ப்பு தன்மை கொண்டதாகும்.

- எதிர்காலத்தில் விவசாயிகள் செய்கை பண்ணுவதற்குச் சிபாரிசு செய்ய உயர் விளைச்சலைத் (>4 தொ/ஹெ) தரும், பெரிய, வெண்ணெய் நிறமான விதைகளைக் கொண்ட நம்பிக்கையூட்டும் பரம்பரைகளை உருவாக்க கலப்புப் பிறப்பாக்கம் செய்வதற்கென ஆசிய மரக்கறி ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்தின் ஒன்பது சோயா அவரை மூலவுயிருருக்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

உலர் வலய மரக்கறிகள்

வெண்டி

இரண்டு போகங்களிலும் பயிரிடக் கூடியதாயிருப்ப தோடு, விரைவாக வருமானத்தைப் பெறக் கூடியதாகவும் உள்ளமையால் உலர் வலய விவசாயிகளிடையே மிகவும் பிரபல்யமான மரக்கறிப் பயிராக வெண்டி மாறியுள்ளது. தீவில் வெண்டியின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உயர் விளைச்சலைத் தரும், நோய், பீடைகளிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட வெண்டி வர்க்கங் களை விருத்தி செய்வது மிக முக்கியமாகும். அநுராதபுர மாவட்டத்தில் விவசாயக் கிணறுகளின்

கீழ் பயிரிடும் விவசாயிகளிடையே வெண்டி மிகவும் பிரபல்யமான ஒரு மரக்கறிப் பயிராகும். இவர்கள் முன்னரே வருமானத்தைப் பெற வெண்டியைப் பயிரிடுவதோடு, ஒரு நாள் விட்டு ஒரு நாளில் அறுவடை செய்கின்றனர்.

சாதனைகள்

- ஆராய்ச்சிக் மட்டத்தில் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் குறைவான வைரசுத் தாக்கங்கள், காய்களின் சிறந்த பண்புகள் என்பனவற்றின் அடிப்படையில் ஓகேஎஸ் 1, ஓகேஎஸ் 3 ஆகிய இரண்டு வெண்டி பரம்பரைகள் விவசாயிகளின் தோட்டங்களில் மதிப்பீடு செய்வதற்காக வர்க்க இசைவாக்கப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

- காய்களின் சிறந்த பண்புகள், கிளை விடும் தன்மை, குறைந்த நீர் தேவை என்பனவற்றின் அடிப்படையில் 25 சேகரிப்புகள், பரம்பரைகளி லிருந்து மூன்று வெண்டி பரம்பரைகள் தெரிவு செய்யப்பட்டதோடு, இவை எதிர்கால இனவிருத்தித் திட்டத்தில் பயன்படுத்தப் படவுள்ளன.

பழங்கள்

திராட்சை

- திராட்சைக் கொடிகளைப் பயிற்று விப்பதற்குத் உகந்த காட்டு இனத் தாவரங்களாகப் பயன்படுத்த இனங்காண திராட்சையின் நான்கு வர்க்கங்கள் (இஸ்ரேல் புளூ, மஸ்கட் எம்.ஐ, பிரன்ச் எம்.ஐ, கன்தர) உயிருள்ள காட்டு தாவரங்களில் (கிளிறிசிடியா, இப்பில் - இப்பில், பூவரசு, கிளவெளி) பயிற்றுவிக்கப்பட் டன. இப்பில் - இப்பில், கிளாவெலி என்பனவற்றில் வளர்ச்சி வீதம் குறைவாகவேக் காணப்பட்டது.

வினா

- உயர் விளைச்சலைத் தரும், தரமான பண்புகளைக் கொண்ட பழங்கள் ஆகியவற்றை இனங்காண இலங்கையின் உலர் வலயத்திலிருந்து எட்டு விளா இனங்கள் சேகரிக்கப்பட்டன. பண்ணை இயந்திரயமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்தின் வளவில் சேகரிக்கப்பட்ட தாவரம் சிறப்பாகக் காணப்பட்டது. ஒரு மரத்திலிருந்து பெறப்பட்ட சராசரி பழங்களின் எண்ணிக்கை 474 ஆகக் காணப்பட்டதோடு, இவற்றின் நிறை 200 – 380 கிராம் / பழம் என்னும் வீச்சில் காணப்பட்டது.

பயிராக்கவியல்

- மிளகாயிற்கு பத்திரக்கலவையிடல், ஆழ உழல், சேதனப் பொருட்களை இடல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்தத் தாக்கங்கள் ஆராயப்பட்டன. மேற் குறிப்பிட்ட அனைத்தும் காலபோகத்தில் மிளகாயின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் குறிப்பிடத்தக்க சாதகமானத் தாக்கத்தினைக் காட்டின. இவ்விளைவை சரி பார்க்கவும், உறுதி செய்யவும் மேலும் மூன்று போகங்களிற்கு இந்த ஆய்வு தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- 3, 3½, 4 - 4½ ஆகிய மூன்று மாத வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த நெல் வர்க்கங்களின் பிராந்திய இசைவாக்கங்களைக் கண்டு பிடிக்க நான்கு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்வதற் காக சேகரிக்கப்பட்டத் தகவல்கள் பத்தலகொட, நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

- பரசூட் தட்டுகளைப் பயன்படுத்தி மிளகாய், குரக்கன் என்பனவற்றிற்கான மாற்று நாற்று மேடைத் தொழில்நுட்பங்கள் பரிசோதிக்கப் பட்டன. இதில் மத்தியளவான தட்டுகள் (128 துளை / தட்டு) பெரியளவான தட்டுகள் (72 துளை/தட்டு) பயன்படுத்தப்பட்டன. இவை பொதுவான நில நாற்று மேடைகளுடன் ஒப்பிடப்பட்டன. மத்தியளவான, பெரிய தட்டுகளிலுள்ள தாவரங்களை நடுகை செய்யும் சந்தர்ப்பத்தில் அவற்றின் மொத்த உயிரியற் திணிவுகளில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வேறுபாடுகளும் அவதானிக்கப் படவில்லை. ஆனால் வழமையான நில நாற்று மேடையுடன் ஒப்பிடும் போது நடும் வேளையில் தட்டுக்களிலுள்ள நாற்றுக்களின் அதிர்ச்சி குறைக்கப்பட்டது. மேலும் நாற்று

மேடைக் காலத்தைக் குறைக்கவும், சிறந்த தட்டினை இனங்கண்டு, இலாபகரமான மாற்று நாற்றுமேடைத் தொழில்நுட்பங்களை விருத்தி செய்ய இப்பரிசோதனை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

- சராசரிக் காலநிலையில் ஏற்படும் மாற்றம் அல்லது காலநிலையின் சராசரி பரவலில் ஏற்படும் மாற்றங்கள் தற்போதைய சூழலில் மிக அதிகமானதாகும். சராசரி வளிமண்டல வெப்பநிலை மாற்றமடைதல், மழை வீழ்ச்சிப் போக்கில் ஏற்படும் மாற்றங்கள், அதனை எதிர்வு கூற முடியாமை ஆகியன உயிருள்ள, உயிரற்ற தகைப்புகளை உருவாக்கும். உயிருள்ள, உயிரற்ற தகைப்புகளின் குந்தகமான விளைவுகள் உணவு உற்பத்தித்திறனைக் குறைக்கும். வெப்ப நிலை அதிகரிக்கும் போது கிடைக்கும் நீரின் அளவு குறையும். இது தாவர ஒளித் தொகுப்பிற் செல்வாக்குச் செலுத்தும். எனவே உள்ளகக் கலப்பில் உருவாக்கப்பட்ட பத்து சோள பரம்பரைகள் நீர்பற்றாக்குறை நிலைமைகள், வழமையான நீர்ப்பாசன நிலை என்பனவற்றின் கீழ் தெரிவு செய்யப்பட்டன. இவை அவற்றின் இலை ஒளித்தொகுப்பு, குளோரபில் உள்ளடக்கம், சுவாச வீதம், ஆவியுயிர்ப்பு வீதம், இலைப் பரப்புச் சுட்டி, தண்டு, வேர் உலர் நிறை, 50% கதிர்க் குஞ்சம் (ஆண் பூ) உருவாகல், 50% பெண் பூக்கள் மலர்தல், ஆகியவற்றிற்கிடையிலான இடை வெளி, அறுவடைச் சுட்டி, தானிய விளைச்சல் என்பனவற்றின் அடிப்படை யில் தெரிவு செய்யப்பட்டன. தகைப்பான நிலைமைகளிற் கூட பீ 31 – 7 – 1, இல 20 x, இல 11 மஞ்சள், பீ 36 – 4 ஆகியன சிறப்பாக வளர்ந்ததோடு, இந்த உள்ளகக் கலப்பினங்களை எதிர்கால இனவிருத்திச் செயன்முறைகளில் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த ஆய்வு 2012 சிறு போகத்திலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப் படும்.

- சம்பத் பெற்றோர் சந்ததிக்கான சோளத்தின் பூக்கும் ஒத்திசைவு ஆராயப்பட்டது. சம்பத் கலப்பின ஆண் வம்சாவழி சிளம்எல் 348 ஆகும். பெண் வம்சாவழி சிளம்எல் 20 ஆகும். பூக்களின் ஒத்திசைவான மலர்தலை ஆராய்வதற்கான நோக்கம் ஆண் தாவரத்தின் குஞ்சம் வெளிவரும் (மலரும்) நேரத்தையும், பெண்தாவரம் மலரும் நேரத்தையும் ஒன்றாக ஒத்திசையச் செய்வதாகும். நாள் வளர்ச்சி வீதத்தைக் கணக்கிட்டு இவ்வாறு இரண்டு நிகழ்வுகளும் ஒரே நேரத்தில் நடக்கும் காலத்தைக் கணித்துக் கொள்ள முடியும். ஆண் தாவரமும், பெண் தாவரமும் ஒரே நேரத்தில் மலர்வதற்கு காலபோகத்தில் ஆண் தாவரங்களை நட்டு ஏழு நாட்களின் பின்னரே பெண் தாவரங்களை நடுகை செய்ய வேண்டும் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு உள்ளகக் கலப்பு வம்சாவழிகளிற் கிடையே உள்ள இடைவெளியை மாற்றுவதன் மூலம் விதைகள் உருவாகும் அளவைக் கண்டுபிடிக்க இந்த ஆய்வினை மேலும் மேற்கொள்ள வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு

நோயியல்

- இறக்குமதி செய்யப்படும் வெங்காய விதைகள் வர்த்தக மட்டத்தை அடைய முன்னர் அவற்றின் நோய் எதிர்ப்புத் தன்மையையும், புதிய நோய்களையும் இனங் காண்பது முக்கியமானதாகும். பிரதான நோய்களிற்கு வெளிநாட்டு வர்க்கங்களின் எதிர்ப்புத் தன்மையைக் கண்டுபிடிக்க இந்த ஆய்வு 2012 சிறு போகத்தின் போது மேற்கொள்ளப்பட்டது. தம்புள்ளை தெரிவுடன் பதினேழு வெளிநாட்டு பெரிய வெங்காய வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டன. இப்போகத் தின் போது நிலவிய காலநிலை நோய் விருத்தியடைய சாதகமானதாக அமை ந்திருக்கவில்லை. ஆனாலும் சில வர்க்கங்கள் பங்கசு குமிழ் அழுகல், அந்திரக்நோசு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டன. இவற்றில் எந்தவொரு வர்க்கமும் ஊதாப்புள்ளி நோயினால் பாதிக்கப்படவில்லை. எம்.ஐ பி ஓ 10 – 1 என்னும் வர்க்கம் அந்திரக்நோசு நோயினால் அதிகளவிற் பாதிக்கப்படும். டபிள்யு 241 கலுதான், டி ஆர் 1 ஆகிய இரண்டு வர்க்கங்களும் அந்திரக்நோசு நோயினால் பாதிக்கப்படும். இவற்றில்

எந்தவொரு வர்க்கமும் பங்கசு குமிழ் அழுகலினால் பாதிக்கப்பட மாட்டாது. இம்முடிவுகளை உறுதி செய்வதற்காக 2012 – 13 கால போகத்தின் போது இப்பரிசோதனை மீளவும் மேற்கொள்ளப்படும்.

- நோய்களினால் விளைச்சல் இழப்பைத் தவிர்ப்பதற்கு பெரும்பாலான மிளகாய் செய்கையாளர்கள் அதிக நைதரசன் பசளைகளை இடுகின்றனர். ஆனால் போதியளவான பயிர் போசணைகள் தாவரங்களை நோய்களிற்கு எதிர்ப் புள்ளனவாகவோ அல்லது பாதிக்கப்படக் கூடியனவாகவோ மாற்றக் கூடியனவாகும். எனவே பல்வேறு நைதரசன் அளவுகள் மிளகாயின் பிரதான நோய்களில் ஏற்படுத்தும் தாக்கங்களை இனங்காண்பதற்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட முச்சுப்பர் பொசுபேற்று, மியுறியேற்றுப் பொட்டாசு என்பனவற்றோடு வித்தியாசமான 5 அளவுகளில் யூறியா இடப்பட்டது. இதில் 100 கி.கி நைதரசன்/ ஹெ, 150 கி.கி நைதரசன் / ஹெ, 200 கி.கி நைதரசன் / ஹெ, 250 கி.கி நைதரசன் / ஹெ, 300 கி.கி நைதரசன் / ஹெ ஆகிய ஐந்து வித்தியாசமான யூறியா இடப்பட்டது. இப்பரிசோதனைக்கு அமைய நைதரசனின் அளவு அதிகரிக்கும் போது நோய் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்தன. இப்பரிசோதனை 2012 – 13 கால போகத்திலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது.

- பாசிப்பயறு, உழுந்து ஆகியவற்றில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த இரசாயனங்க ளைப் பயன்படுத்துவது முறையற்றதோடு, பயிர் எதிர்ப்புத் தன்மையைப் பயன்படுத்து வதே மிக இலாபகரமான முறையாகும். எனவே பாசிப்பயறு, உழுந்து என்பனவற்றின் பிரதான நோய்களிற்கான எதிர்ப்புத் தன்மை/ பாதிக்கப்படும் தன்மை கொண்ட பரம்பரைகளை கண்டறிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான வர்க்கங்கள் (பரப்பும் வர்க்கம் உட்பட) நடுகை செய்து ஒரு மாதத்தின் பின்னர் இலைச் சுருங்கல் வைரசு நோயினால் அதிகளவிற் பாதிக்கப்பட்டன. பயிரின் பிந்திய வளர்ச்சிப் பருவங்களில் வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டப் பயிர்கள் எதுவும் இனங் காணப்படவில்லை. இலைச் சுருங்கல் வைரசு நோயினால் 6 பாசிப்பயறு பரம்பரைகள் அதிகளவிற் பாதிக்கப்பட்டதோடு, 14 பரம்பரைகள் பாதிக்க ப்பட்டன. உழுந்தில் 2 பரம்பரைகள் அதிகளவிற் பாதிக்கப்பட்டதோடு, 11 பரம்பரைகள் பாதிக்கப்பட்டன. பரிசோ தனை மீளவும் மேற்கொள்ளப்படும்.

பூச்சியியல்

- விளைச்சலை அதிகரிக்க விவசாயிகள் அதிகளவான நைதரசன் பசளைகளை மிளகாயிற்கு இடுகின்றனர். எனினும் அதிகளவான நைதரசன் பசளைகளை இடுவதால் பீடைகளின் குடித்தொகை அதிகரித்து, இலைச் சுருளல் சிக்கல் பிரச்சினை மேலும் அதிகரிக்கும். எனவே வித்தியாசமான நைதரசன் அளவுகளிற்கும்/ நைதரசனை வழங்கும் மூலாதாரங்களிற்கும், நோய்த் தாக்கத்திற்கிடையிலான தொடர்பை ஆராய பரிசோதனையொன்று மேற்கொள்ளப் பட்டது. ஏனையவற்றுடன் ஒப்பிடும் போது கல்சியம் நைட்ரேட் இடப்பட்டத் துண்டத்தில் நோய்த் தீவிரம் குறைவாகவேக் காணப்பட்டது. இப்பரிசோதனை மீளவும் மேற்கொள்ளப்படும்.

- மிளகாய் இலைச்சுருளல் சிக்கல் நோய்க்கு எதிரான பூச்சி நாசினிகளின் முன்னோடி மட்டத்திலான பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. மிளகாய் இலைச் சுருளல் சிக்லை பயனுறுதியாகக் கட்டுப்படுத்த இரண்டு பூச்சி நாசினிகளை (இமிடாகுளோபிறிட் 70% டபிள்யுஜி, அபமெக்றின் 3.6 ஈ. டபிள்யு) சிபாரிசு செய்யலாம்.

- வெங்காயத்தினதும், ஏனைய பயிர்களினதும் மிக முக்கிய பீடை பனிப்பூச்சி ஆகும். பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்த வித்தியாசமான முறையிற் தொழிற்படும் ஒரு மாற்று பூச்சி நாசினியைக் கண்டுபிடிக்க ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஏழு பூச்சி நாசினிகள் பரிசோதிக்கப்பட்டதோடு, இப் பரிசோதனை

களிடையே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வேறுபாடுகள் எதுவும் அவதானிக்கப்பட வில்லை. இப்பரிசோதனைகள் 2013 சிறு போகத்திலும் மீளவும் மேற்கொள்ளப்பட வுள்ளது.

- பீடைகளின் தாக்கத்திற்காக இருபது வெங்காயப் பரம்பரைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. அனைத்து பரம்பரைகளும் பனிப்பூச்சிகளினால் பாதிக்கப்பட்டன. பரிசோதி க்கப்பட்ட அனைத்துப் பரம்பரைகளிலும் வெங்காயப் புழுக்களின் தாக்கம் குறைவாகவேக் காணப்பட்டது.

- பயிர்களை நோய்கள், பீடைகளிலிருந்து பாதுகாப்பதற்கு விதைப் பரிகரணங்களைப் பயன்படுத்துவதே மிகவும் பயனுறுதியான ஒரு வழியாகும். எனவே சோளத்தில் மண் பீடைகள், அழுக்கணவன்கள், தண்டு கோதிப் புழுவின் முதலாவது பரம்பரை ஆகியவற்றைக் குறைப்பதற்கு விதைப் பரிகரணத்தில் இரண்டு பீடை நாசினிகளின் வினைத்திறனைக் கண்டு பிடிக்க பரிசோதனையொன்று மேற்கொ ள்ளப்பட்டது. பயிரின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டத்தில் இரண்டு விதைப் பரிகரணங்களுமே (தியமெதொக்சாம் 70% டபிள்யு எஸ், இமிடாகுளோபிறிட் 70% டபிள்யு எஸ்) பீடைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வினைத் திறனாகக் காணப்பட்டன.

- அவரைத் தானியங்களின் தரத்திலும், விளைச்சலிலும் பூச்சிப் பீடைகள் பெரும் சேதங்களை ஏற்படுத்துகின்றன. தற்போதுள்ள பூச்சிநாசினிகளைப் பயன்படுத்தி பீடைகளைக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்குக் கட்டுப்படுத்த முடியாது. எனவே பீடைகளின் எதிர்ப்புத்தன்மைக்காக 33 பாசிப்பயறு மூலவுயிருருக்கள்/ பரம்பரைகளும், 28 உழுந்து வர்க்கங்களும் மதிப்பீடு செய்யப்பட்டன. 18 பாசிப்பயறு பரம்பரை களும், 10 உழுந்து வம்சாவழிகளும் பீடைகளின் தாக்கத்திற்கு மத்தியளவில் எதிர்ப்புத் தன்மை கொண்டனவாகும். இம்முடிவுகளை உறுதி செய்வதற்காக இப்பரிசோதனை மீளவும் மேற்கொள்ளப்பட உள்ளது.

களை முகாமைத்துவம்

மறு வயற் பயிர்களிற்கு குறைந்த எண்ணி க்கையான களைநாசினிகள் மாத்திரமே சிபாரிசு செய்யப்பட்டுள்ளதோடு, களைகளைக் கட்டுப் படுத்த அதிக வேலையாட் செலவும் ஏற்படுவதால், இத்துறையில் களைகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கிய பிரச்சினையாக மாறி வருகின் றது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந் நிறுவனத்தின் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய களைநாசினிகள் தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்டு வருகின்றன. 2012 இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, அவற்றின் முடிவுகளும் கூடத் தரப்பட்டுள்ளன.

- மிளகாய், நிலக்கடலை என்பனவற்றின் களைக் கட்டுப்பாட்டில் குயிசாலொப் - பீ - ஈதைல் 50 கிராம் / லீ ஈசி இன் பலாபலன்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 1.0, 1.5, 2.0 லீ/ஹெ ஆகிய மூன்று அளவுகளில் மிளகாய், நிலக்கடலை ஆகியவற்றில் பரிசோதிக்கப்பட்டன. புற்களை மாத்திரமே புதிய களைநாசினி வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியது. முன்மாதிரி அடிப்படையி லான பரிசோதனைக்காக பரிசோதனை அறிக்கைகள் தாவரப் பாதுகாப்பு அலகிற்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

- சோளத்தின் களைக் கட்டுப்பாட்டில் ஹலோசல்பியுரொன் - மீதைல் 75 டபிள்யு ஜி இன் பலாபலனைக் கண்டுபிடிக்க ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 60, 80, 100 கிராம்/ஹெ ஆகிய மூன்று அளவுகளில் சோளத்தில் பரிசோதிக்கப்பட்டது. கோரை களை மாத்திரமே இது கட்டுப்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டது. முன்மாதிரி அடிப்படையி லான பரிசோதனைக்காக பரிசோதனை அறிக்கைகள் தாவரப் பாதுகாப்பு அலகிற்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

- அவரைத் தானியங்களின் களைக் கட்டுப்பாட்டில் இமாசெதபிர்இன் பலா பலனைக் கண்டு பிடிக்க ஒரு பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டது. 600, 700, 800 மி.லீ/ஹெ ஆகிய மூன்று அளவுகளில் பாசிப்பயறில் முளைத்தலிற்கு முன்னரும், முளைத்த பின்னரும் பரிசோதிக்கப்பட்டது. முளைத்தலிற்கு முந்திய பரிகரணத்தில் நம்பிக்கையூட்டும் முடிவுகள் பெறப்பட்டன. தொடர்ந்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளன. முன்மாதிரி அடிப்படையிலான பரிசோதனைக்காக பரிசோதனை அறிக்கைகள் தாவரப் பாதுகாப்பு அலகிற்குக் கையளிக்கப் பட்டுள்ளன.

- சோளத்திற் களையைக் கட்டுப்படுத்த நிக்கோசல்பிரொன் இன் உகந்த விசி றல் அளவு, உருவாக்கம் (வடிவம்) ஆகிய வற்றைக் கண்டு பிடிக்க ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 3 உருவாக்கங்களும் (நிக்கொசல்பியுரொன் 25% எஸ்எல் 150 மிலீ / ஹெ, நிக்கொசல்பியுரொன் 4% எஸ்சீ 100 மிலீ / ஹெ, நிக்கொசல்பியுரொன் 75% டபிள்யுடிஜி 40 கிராம் / ஹெ) ஒவ்வொரு உருவாக்கத்திலும் மூன்று அளவுகள் பரிசோதிக்கப்பட்டன. சோளத்திற் மூன்று உருவாக்கங்களும் வெற்றிகரமாகக் களைகளைக் கட்டுப்படுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் மதிப்பீடுகள் நடாத்தப்பட உள்ளன.

- வெங்காயத்தின் களைக் கட்டுப்பாட்டில் ஒக்சிபுளோபென் 480 கி/லீ எஸ்சீ இன் பலாபலன் ஆராயப்பட்டது. தற்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ள உருவாக்கமான 240 கி/லீ ஈசீ ஐ விடச் சிறப்பாக புதிய உருவாக்கம் தொழிற்படுவது அவதானிக்கப்பட்டது. மேலும் மதிப்பீடுகள் தொடரப்பட உள்ளன.

மண் வளம்

- கிளிறிசிடியா இலைகள் நைதரசனை வழங்கும் சிறந்த மூலாதாரமாகும். மிளகாய் பயிரின் இரசாயன நைதரசன் பசளைத் தேவையைக் குறைக்க இரசாயன பசளைகளுடன், கிளிறிசிடியாவின் ஒருங்கி ணைந்த பாவனை பரிசோதிக்கப்பட்டது. ஒரு ஹெக்டயர் நிலத்திற்கு 6 தொன் கிளிறிசிடியா இலைகளை இடுவதன் மூலம் மிளகாய் பயிரின் இரசாயன நைதரசன் தேவையில் 25% ஐக் குறைக்க முடியும் என முடிவுகள் வெளிப்படுத்தி உள்ளன. இதில் அரைவாசி யை நடுவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் இட வேண்டும். மீதியை நட்டு 4 வாரங்களின் பின்னர் இடல் வேண்டும்.

- சோளத்திற்கு முச்சுப்பர் பொசுபேற்றிற்குப் பதிலாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட எப்பாவல தனி சுப்பர் பொசுபேற்றின் (ESSP) பொருத்தமான தன்மை தொடர்பாக சாடிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட நம்பிக்கை யூட்டும் முடிவுகளை உறுதி செய்ய தொடரான வெளிக்களப் பரிசோதனை களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. 2011 – 12 காலபோகத்திலும், 2012 சிறுபோகத்திலும் மேற்கொள்ளப்பட்டப் பரிசோதனைகளில் சோளத்தின் வளர்ச்சி, விளைச்சல் செயற்றிற ன்களில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வேறுபாடுகளையும் காட்டவில்லை. முடிவு களைச் சரிபார்த்து, உறுதி செய்து சிபாரிசு களை வழங்குவதற்காக இப்பரிசோதனை அடுத்துவரும் போகங்களிலும் மேற்கொள்ளப் பட உள்ளது.

நீர் முகாமைத்துவம்

- தற்போதைய விவசாய முறைகளில் நீர் பாவனை வினைத்திறன் / நீரின் உற்பத்தித்திறனனை அதிகரிக்க நுண் நீர்ப்பாசன முறைகள் முக்கியமான ஒரு பாகமாக இனங்காணப்பட்டுள்ளன. பசளைப் பாசனம் ஒரு விருத்தியடைந்த தொழில்நுட்பம் ஆகும். இதில் நுண் நீர்ப்பாசனத்தின் ஊடாக விசேடமாக சொட்டு நீர்ப்பாசன முறைகளின் ஊடாக தாவரத்தின் வேர் வலயத்திற்கு கரையக் கூடிய பசளைகள் நேரடியாக வழங்கப்படுகின்றன.

  எனினும் முறையாக நடாத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு மிளகாய் பயிரிற்கு உறுதி செய்யப்பட்ட பசளைப்பாசன சிபாரிசுகள் எதனையும் விவசாயத் திணைக்களம் கொண்டிருக்க வில்லை. எனவே மிளகாயிற்கு பசளைப்பாசன

சிபாரிசுகளை வழங்குவதற்காக செங்கபில மண்ணில் ஆரம்பிக்கப்பட்டது. 2012 சிறுபோகத்தின் போது மேற்கொண்ட ஆய்வில் விவசாயத் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளை பசளைப் பாசனத்தில் பயன்படுத்தும் போதும், கையால் இடும் போதும் சமமான வளர்ச்சியையும், பச்சை மிளகாய் விளைச்சலையும் கொடுத்த மை கண்டுபிடிக்கப்பட்டது. பசளைப்பாசனத்தை மேற்கொள்ளும் தடவைகளில் மாற்றங்களை மேற்கொண்டு இப்பரிசோதனை 2013 சிறுபோகத்திலும் தொடரப்படும்.

- மிளகாயின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் நீர்ப்பாசன இடைவெளியின் செல்வாக்கை ஆராய, நீர்ப்பாசன நீர்த் தேவையை காலநிலை முறைகளினால் தீர்மானிப்பதைப் பயன்படுத்தி செங்கபில மண்ணின் நீர் நன்கு வடிந்து செல்லும் வகுப்பில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. பரிசோதிக்கப்பட்ட 3 நாட்கள், 6 நாட்கள், 9 நாட்கள், 12 நாட்கள் நீர்ப்பாசன இடைவெளிகளில் 6 நாள் நீர்ப்பாசன இடைவெளியே பச்சை மிளகாயின் வளர்ச்சி, விளைச்சல் செயற்றிறன்களிலும், நீர்ப்பாசன நீரின் வினைத்திறனிலும் சிறப்பாகக் காணப்பட்டது. மேலும் முன்னர் வழங்கப்பட்ட 7 நாட்கள் இடைவெளியின் பிரயோகத் தன்மையையும் இந்த முடிவு வலியுறுத்துகின்றது.

உணவுத் தொழில்நுட்பம்

- மூன்று சோயா அவரை வர்க்கங்கள் / பரம்பரைகள் (பீபி 1, 10966, பீஎம் 13) அவற்றின் பண்படுத்தாத புரதம், பண்படுத்தாத கொழுப்பு உள்ளடக்கம் என்பனவற்றிற்குப் பரிசோதிக்கப்பட்டன. பண்படுத்தாத கொழுப்பு, பண்படுத்தாத புரதம் ஆகிய இரு உள்ளடக்கங்களில் எவ்விதமான குறிப்பிடத் தக்க மாற்றங்களும் காணப்படவில்லை. பீஎம் 13, 10 966 ஆகியவற்றை விட பீபி 1 அதிகளவான புரதத்தைக் (38.33 %) கொண்டுள்ளதை முடிவுகள் வெளிப்படு த்தியுள்ளன. பரம்பரை 10 966 மற்றைய இரண்டு வர்க்கங்களான பீஎம் 13, பீபி 1 ஆகியவற்றை விட அதிகளவான (18%) பண்படுத்தாதப் புரதத்தைக் கொண்டுள்ளது.
- பௌதிகப் பண்புகள் (நீளம், நிறை, சுற்றளவு, தடிப்பு போன்றன), இரசாயனப் பண்புகள் (பிறிக்ஸ் பெறுமானம், பீஎச், செறிவறிதகு அமிலத் தன்மை, சதையின் நிறம் போன்றன) ஆகிய இரண்டிற்காகவும் இருபத்தியாறு மா வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. "சில்" எனப்படும் வர்க்கம் ஏனைய வர்க்கங்களை விட அதிக செறிவறிதகு அமிலத் தன்மை யைக் காட்டியதையும், "அன்வர் ரட்டுல்" வர்க்கம் (பசுமையாக நுகரும் போது) ஏனைய வர்க்கங்களை விட அதிக பிறிக்ஸ் பெறுமானத்தைக் கொண்டிருந்த தையும் முடிவுகள் காட்டின.

உயிரியற் தொழில்நுட்பம்

நாட்டின் உணவுற்பத்தியை அதிகரிக்க உள்ளீடு களை உகந்த முறையிற் பயன்படுத்துவதைச் சூழவுள்ள தந்திரோபாயங்களை கிரமமாக மேம்படுத்துவதை வலியுறுத்துகின்றது. பயிர் அபிவிருத்தியில் புத்தமைக்கும் பீடைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், நவீன தொழில்நுட்பங்கள் என்பன பின்பற்றப்படுகின்றன. பெரும்பாலான இச்சாதனைகள் பாரம்பரிய நுட்பங்களின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பாரம்பரிய இனவிருத்தி நுட்பங்களிற்கு அதிக காலம் எடுப்பதோடு, நவீன உயிரியற் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மறு வயற் பயிர்களின் புதிய வர்க்கங்களை விரைவாக உருவாக்க முடியும். மேலும் நோய் பகுப்பாய்வு, அதனோடு தொடர்புடைய தாவரப் பாதுகாப்பு ஆராய்ச்சி ஆகியவற்றையும் மூலக்கூற்று உயிரியற் தொழில் நுட்பங்களின் ஊடாக விரைவுபடுத்துவதோடு, இழைய வளர்ப்பு தொழில் நுட்பங்களையும் இவற்றோடு ஒன்றிணைக்க முடியும்.

சாதனைகள்

- மூலக்கூற்று அடையாளப்படுத்திகளைப் பயன் படுத்தி QPM ஒன்றிணைக்கப்பட்ட சோள பரம்பரை / வர்க்கம் ஒன்றின் அபிவிருத்தியை நோக்கி;
  - மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட QPM அல்லாத பரம்பரையினுள் ஒபேக் - 2 - மரபணுவை (Opeque -2) இணைத்தல்.

- பரம்பரைகளை பிறிப்பதற்காக F1 குடித்தொகையை தன் மகரந்தச் சேர்க்கை செய்தல். டிஎன்ஏ பிரித்தெடுப்பு முறைகளை மேம்படுத்தும் முறைகள் ஆரம்பிக் கப்பட்டன.

- மூலக்கூற்றுத் தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி மிளகாய் இலைச்சுருளல் சிக்கல் நோயிற்கான எதிர்ப்புத்தன்மை / சகிப்புத் தன்மைகளின் மூலாதாரங்களை (பரம்பரை / வர்க்கம்) இனங்காண்பதற்கான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

- அடைகாக்கும் அறை, பௌதீக, இரசாயன தேவைகள் என்பனவற்றைப் பூர்த்தி செய்தவுடன் பாரியளவான உற்பத்தி விதை / அங்குர நுனி வளர்ப்பின் ஊடாக, குழாய் நிலைமைகளின் கீழ் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளது. வளர்ப்பூடகத் தொடக்க நிலைமைகளை மேம்படுத்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

விதை உற்பத்தி

உற்பத்தியாளர், அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதை உற்பத்தி

பின்வரும் அளவிலான இனவிருத்தியாளர் அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதைகள் வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட அலகுகளினால் உற்பத்தி செய்யப்பட்டு, விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கப்பட்டது (அட்டவணை 4.1.2).

அட்டவணை 4.1.2: 2012 இல் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர், அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதைகளின் அளவுகள்

பயிர்	வர்க்கம்	உற்பத்தியாளர் விதை உற்பத்தி (கி.கி)	அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதை உற்பத்தி (கி.கி)
சோளம்	சம்பத் கலப்பின சோள வர்க்க பெற்றோர் பரம்பரைகள்	ஆண் 262.0	-
		பெண் 760.0	
	ருவன்	20.0	-
	பத்ரா	16.0	-
குரக்கன்	ராவனா	14.5	-
	ஓசத	20.0	-
மிளகாய்	எம்.ஐ பச்சை	2.65	50.0
	கல்கிரியாகம தெரிவு	2.4	23.5
	எம்.ஐ.2	2.6	34.5
	எம்.ஐ வலணிய	10.0	1.85
	எம்.ஐ பச்சை	-	150.0
	எம்ஐசிஎச் 3	3.15	10.7
பாசிப்பயறு	ஆரி	43.5	80.0
	எம்.ஐ 5	51.0	39.0
	எம்.ஐ 6	58.0	87.0
பெரிய வெங்காயம்	தம்புளை தெரிவு	தாய்குமிழ்கள் 280.0	790.0
		உண்மை விதைகள் 3.34	8.5
உழுந்து	எம்.ஐ 1	50.5	-
	அநுராத	68.5	791.0
சோயா அவரை	பீபி 01	75.0	-
கௌபீ	தவள	75.0	-
	எம்.ஐ 35	15.0	-
	எம்.ஐ 6	30.5	-
	பொம்பே	10.0	-
வெண்டி	ஹரித்த	-	-
	எம்.ஐ 7	9.75	-
பாகல்	எம்.சி 43	-	-
முருங்கை	கட்டை வர்க்கம்	10.0	-
தக்காளி	கேசி 1	0.68	-
பயிர்	**வர்க்கம்**	**இனவிருத்தியாளர் விதை உற்பத்தி (கி.கி)**	**அத்தாட்சிப்படுத்திய / வர்த்தக விதை உற்பத்தி (கி.கி)**
பாகல்	எம்.ஐ கட்டை	3.6	-
புஷிட்டாவோ	பிஎஸ் 1	26.5	-

தொழில்நுடபப் பரம்பல்

பயிற்சிகள், விரிவுரைகள், பயிற்சிப் பட்டறைகள், வெளிக்கள செய்து காட்டல்கள், தாவர மருத்துவ நிலையங்கள், வயல் விழாக்கள், கண்காட்சிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள்

இவ்வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- விவசாயிகள், பாடசாலை, பல்கலைக் கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் உள்ளடங்கலாக 2,620 இற்கும் மேற்பட்டோ ரிற்கு 110 இற்கும் அதிக பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.

- வயற் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் பல்வேறு நிகழ்ச்சிகளில் வளவாளர்களாகப் பங்கு பற்றினர்
  - 30 இற்கும் மேற்பட்ட வெளிக்கள செய்து காட்டல்கள்
  - ஏழு தாவர மருத்துவ நிலையங்கள்
  - இரண்டு தேசிய கண்காட்சிகள்: நூற்றாண்டு விழா, "தெயட்ட கிருல"
  - விரிவாக்க அலுவலர்களுடன் பல வெளிக்கள விஜயங்கள்

- நிறுவனத்திற்கு விஜயம் செய்த 500 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களிற்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டதோடு, தொலைபேசி ஊடாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- தொழில்நுடபத் தகவல் தொடர்பான 1,500 இற்கும் மேற்பட்ட பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டன.

- விவசாயிகளிற்கும், ஏனைய நிறுவனங்க ளிற்கும் நடுகைப் பொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.
  - திராட்சை நாற்றுக்கள் - 05
  - முருங்கை நாற்றுக்கள் - 700
  - விதை உற்பத்திக்காக இராஜாங்கனைப் பிரதேசத்திலுள்ள விவசாயிகளிற்கு சுமார்

- 60,000 "கல்கிரியாகமை தெரிவு" மிளகாய் நாற்றுக்கள் (5 ஏக்கரிற்குப் போதுமானவை) விநியோகிக்கப்பட்டன.
  - விதைப் பொருட்கள்: 125 கி.கி (மிளகாய், பெரிய வெங்காயம், பாசிப்பயறு, உழுந்து, சோளம், இறுங்கு, கௌபீ, சோயா அவரை, நிலக்கடலை, சூரியகாந்தி, வெண்டி, தக்காளி, பாகல், திணை, சாமை, முருங்கை)

- இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் தமது தொழிற் பயிற்சியை இந்நிறுவனத்தில் பூர்த்தி செய்தனர். ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் தமது இறுதியாண்டிற்கான ஆராய்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்தனர்.

தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள்

- 2012 இல் 4 வானொலி நிகழ்ச்சிகளும், 3 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் வயற் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவன விஞ்ஞானிகளின் பங்குபற்றலுடன் ஒலி / ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

அபிவிருத்தித் திட்டங்கள்

"பண்ணை அபிவிருத்தி" திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

- 40 ஏக்கரில் "வெளிக்கள மரபணு வங்கி"யை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள்
- 2 ஏக்கர் நிலத்தில் புற்கள் / வெட்டுப் புற்கள் ஸ்தாபிக்கப்பட்டன
- 2 காவலாளிக் கூடங்களை நிர்மாணித் தல்
- 2 ஆழக் கிணறுகளை தோண்டுதல்
- தற்போதுள்ள விசிறற் பாசனத் தொகுதி யை 4 ஏக்கர் வரை விரிவுபடுத்தல்
- இணைந்த விதையிடு இயந்திரத்தை கொள்வனவு செய்தமை
- கால்நடை அலகை அபிவிருத்தி செய்வதற்கானப் பொருட்களை கொள்வனவு செய்தமை

பிரசுரங்கள்

- குணவர்த்தன கே.என்.சி. உம், எம். ஏ. எஸ். ஆர். கே மடுகல்ல (2012) உம். வயற் பயிர்களில் பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணிகளின் தாக்கம். நூற்றாண்டுப் பிரசுரம். 77 பக்கங்கள்.

- குணவர்த்தன கே.என்.சி. உம், மடுகல்ல எம். ஏ. எஸ். ஆர். கே (2012) உம். பீடைகளின் பிரச்சினைகளைக் குறைத்து வயற் பயிர்களைச் செய்கைபண்ணல். சௌபாக்கியா, இலங்கை விதை உற்பத்தியாளர்கள் சங்கம், மலர் 20: 23 - 30

- கன்னங்கரா கே. என். (2012) ஒரு புதிய மிளகாய் (கெப்சிகம் அனும் எல்.) வர்க்கம் - கல்கிரியாகம தெரிவு. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த வெளியீடு இல.14, பக்கம் 47.

- மலவிஆராச்சி, எம். ஏ. பீ. டபிள்யு. கே (2012). சோளத்திலிருந்து உயர் விளைச்சல். கொவிகம் சங்கராவ.

- பத்திரன, எம். ஜி. எஸ். பீ., ஜே. ஏ. சி. கே.ஜயசிங்ஹ (2012). விதை உற்பத்திக்கான பெரிய வெங்காயத்தை குளிரான இடத்தில் சேமித்து வைக்க (வசந்தகால நிலைப் படுத்தல்) இலங்கை யிலுள்ள ரெவலஸ்டனின் பொருத்மான தன்மை. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த வெளியீடு இல. 14, பக்கம் 87.

விவசாயத் திணைக்கள பிரசுரங்களிற்கான பங்களிப்புகள்

- குணவர்த்தன கே.என்.சி. - சோளம் தொடர்பான புத்தகத்தை வெளியிட பங்களிப்புச் செய்தார். விவசாயத் திணைக்களம், பேராதனை, இலங்கை. பக்கம் 81.

- கன்னங்கரா கே.என். - மிளகாய் பயிர்ச்செய்கை தொடர்பான திருத்தப்பட்ட புத்தகத்தை மீள வெளியிட பங்களிப்புச் செய்துள்ளார்.

- கன்னங்கரா கே.என்.சி - மிளகாய் பயிர்ச் செய்கை தொடர்பான திருத்தப்பட இறுவட்டை வெளியிட விவசாயத் திணைக்களத்தின் கட்புல, செவிப்புல நிலையத்துடன் இணைந்து பணியாற்றினார்.

பத்திரிகைக் கட்டுரைகள்

2012 இன் போது வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவன விஞ்ஞானிகளின் பங்களிப் புடன் ஏழு செய்தித் தாள் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- குணவர்த்தன கே.என்.சி.(2012), சோளத் தில் பீடைகளைக் கட்டுப்படுத்தல், “திவ யின”, 2012.08.28.

- குணவர்த்தன கே.என்.சி.(2012), சோளத் தில் பீடைகளைக் கட்டுப்படுத்தல், “திவ யின”, 2012.08.28.

- குணவர்த்தன கே.என்.சி., மடுகல்ல எம். ஏ. எஸ். ஆர். கே (2012), பாசிப்பயறின் பீடைகள், “திவயின”, 2012.11.13.

- கன்னங்கரா கே. என். சி, வாழ்வெழுச்சிக்கு வரணிய மிளகாய் செய்கையைப் பயன்படுத்துவோம், “திவயின”, 2012.12.04.

- குமாரரத்ன, எம். ஜே. எம் (2012), பாசிப்பயறு பயிர்ச்செய்கை, “திவயின”, 2012.10.23.

- பெர்னான்டோ, டபிள்யு. எம். கே (2012), சோளத்தில் நோய் முகாமைத்துவம், “திவயின”, 2012.9.04.

- பெர்னான்டோ, டபிள்யு. எம். கே (2012), பாசிப்பயறுச் செய்கையில் நோய் முகாமைத்துவம், “திவயின”, 2012.11.06.

2013 இற்கான திட்டங்கள்

ஆராய்ச்சி

சரக்குப்பயிர்கள்

மிளகாய்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற் கான திறந்த அயன் மகரந்தச் சேர்க்கை, கலப்பின மிளகாய் வர்க்கங்களை (இருநோக்க) விருத்தி செய்தல்.

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- பச்சை மிளகாயின் எதிர்பார்க்கப்படும் விளைச்சல் - 18 – 20 தொன் / ஹெ, செத்தல் மிளகாய் - 3 – 4 தொன் / ஹெ.
- உயர்ந்தளவான காரம்
- பிரதான நோய், பீடைகளிற்கு எதிர்ப்பு / சகிப்புத்தன்மை – மிளகாய் இலைச் சுருளல் சிக்கல், அந்திரக்நோசு, செர்கொஸ்போரா இலைப்புள்ளி, வைரசுகள், ஒடுங்கிய இலை நோய்கள்.
- மிளகாய் செய்கைபண்ணப்படும் அனைத்து சூழற்தொகுதிகளிற்கும் அதிகளவில் இசைவாக்கமடைதல்.
- வீட்டுத்தோட்டச் செய்கைக்குப் பொருத்தமான பச்சை மிளகாய்

நிகழ்ச்சிகள்:

- மிளகாய் கலப்பின வர்க்கங்களிற்கு புதிய கலப்புகளை உற்பத்தி செய்தல்.
- நம்பிக்கையூட்டும் மிளகாய் பரம்பரைகளிற்கு புதிதாக விருத்தி செய்யப்பட்ட F1 கலப்பினங்களை தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைக் கான ஆரம்ப மதிப்பீடு.
- பெற்றோர் பரம்பரைகளின் தூய தன்மையைப் பராமரித்தலும், விதைகளை இனப்பெருக்கம் செய்தலும்.
- வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்களின் பரம்பரை மேம்படுத்தல்களின் ஊடாக உள்ளகக் கலப்புப் பரம்பரைகளை உற்பத்தி செய்தல்.
- நம்பிக்கையூட்டும் வர்க்கங்கள், இனப் பெருக்கப் பரம்பரைகளிற்கு பிறப்புரிமையியல் ஆண் மலட்டுத்தன்மையை இடமாற்றல்.
- அயன் மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்களிற்கு புதிய கலப்புகளை உற்பத்தி செய்தல் (இரட்டை, மூன்று வழிகள்)
- உள்ளூர் பிரதேச வர்க்கங்களையும், மூலவுயிருருக்களையும் மதிப்பிடல், தெரிவு செய்தல், தூய்மைப்படுத்தல்
- வரணிய பயிரிடும் வர்க்கங்களிலிருந்து நம்பிக்கையூட்டும் பரம்பரைகளிற்கு வைரசு எதிர்ப்புத் தன்மையை (வெளிக்களச் சகிப்புத்தன்மை) இடமாற்றல்
- நம்பிக்கையூட்டும் மிளகாய் இனப்பெருக்கப் பரம்பரைகளிற்கு தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட வர்க்கப் பரிசோதனைகள்
- நம்பிக்கையூட்டும் வர்க்கங்களிற்கு வர்க்க இசைவாக்கச் சோதனை
- வெளிநாட்டு மிளகாய் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்
- சிபாரிசு செய்யப்பட்ட மிளகாய் வர்க்கங்களிற்கு இனவிருத்தியாளர் விதை உற்பத்தி

வெங்காயம்:

எதிர்கால வழிகாட்டல்கள்:

- பெரிய வெங்காய வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல் (மத்திய கால வர்க்கங்கள் - 3 மாதங்கள்)
- குமிழ் விளைச்சல் - 35 தொ / ஹெ
- உண்மை விதை விளைச்சல் - 800 கி.கி / ஹெ
- நீண்ட காலம் சேமித்து வைத்திருக்கும் தன்மை (4 மாதங்களிற்கான இழப்பு < 25 % விடக் குறைவு)
- உயர்ந்தளவான காரம்
- குமிழின் அளவு 70 – 90 கிராம்
- குமிழின் நிறம் - சிவப்பு / இளஞ் சிவப்பு (அதிக முன்னுரிமை), மஞ்சள்/ வெள்ளை (குறைவான முன்னுரிமை)
- பிரதான நோய், பீடைகளிற்கு எதிர்ப்பு / சகிப்புத்தன்மை அந்திரக்நோசு, ஊதாப்புள்ளி நோய், பனிப்பூச்சி, வெங்காய தாள்கோதிப்புழு
- பருவமல்லாத காலத்திற் பயிர் செய்வதற்கு உகந்தவை

நிகழ்ச்சிகள்:

- பெரிய வெங்காயத்தின் விருத்தி செய்யப்பட்ட பரம்பரைகளை குமிழ் பயிர்ச்செய்கைக்கு மதிப்பிடலும், தெரிவு செய்தலும்
- பெரிய வெங்காயத்தின் விருத்தி செய்யப்பட்ட பரம்பரைகளை விதைப் பயிர்ச்செய்கைக்கு மதிப்பிடலும், தெரிவு செய்தலும்
- பருவமல்லாத காலங்களில் பயிரிட பெரிய வெங்காய வர்க்கங்களை மதிப்பிடல்
- தெரிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயப் பரம்பரைகளின் சேமித்து வைக்கும் தன்மையை ஆராய்தல்
- கால போகத்தில் நிலவும் குறைவான வெப்பநிலையின் கீழ் உண்மை விதை உற்பத்திக்குப் பொருத்தமான பெரிய வெங்காய பரம்பரைகளை விருத்தி செய்தல்
- பெரிய வெங்காயத்தின் பரம்பரை முன்னேற்றம்
- விதை நாற்றுக்களில் உற்பத்தி செய்யப்பட்ட விருத்தி செய்யப்பட்ட சின்ன வெங்காயப் பரம்பரைகளை மதிப்பிடல்
- மேம்படுத்தப்பட்ட சின்ன வெங்காய பரம்பரைகளின் விதைப் பயிர்களை மதிப்பிடல்
- நம்பிக்கையூட்டும் பரம்பரைகள், தெரிவு செய்யப்பட்டச் சேகரிப்புகள் ஆகியவற்றின் விதைகள், குமிழ்களை இனப்பெருக்கம் செய்தல்
- தம்புள்ள தெரிவு பெரிய வெங்காய வர்க்கத்தின் அடிப்படை விதை உற்பத்தி

அவரைத் தானியங்கள்

பாசிப்பயறு

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு பாசிப்பயறு வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல் - 2.2 தொ / ஹெ
- விரைவான முதிர்ச்சி - < 60 நாட்கள்
- சீரான முதிர்ச்சி
- விதைகளின் சிறந்த பண்புகள்
  - குறைவான வன் விதைகள்
  - பெரியளவான விதைகள் - < 65 கிராம் / 1000 விதைகள்
  - மினுங்கும் பச்சைத் தோற்றம்

- மஞ்சள் சித்திர வடிவ வைரசுவிற்கும், காய் துளைப்புழுவிற்கும் அதிகளவான எதிர்ப்புத் தன்மை

நிகழ்ச்சிகள்:

- பாசிப்பயறு மூலவுயிருருக்களை மதிப்பிடலும், தெரிவு செய்தலும்
- பாசிப்பயறை கலப்புப் பிறப்பாக்கம் செய்தலும், தெரிவு செய்தலும்
- நம்பிக்கையூட்டும் பரம்பரைகளின் ஆரம்ப விளைவுச் சோதனை
- நீர்ப்பாசன, மானாவாரி நிலைமைகளின் கீழ் நம்பிக்கையூட்டும் வர்க்கங்களிற்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- நம்பிக்கையூட்டும் பரம்பரைகளிற்கான வர்க்க இசைவாக்கச் சோதனை

உழுந்து

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு உகந்த உழுந்து வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல் - 2.5 தொ / ஹெ
- விரைவான முதிர்ச்சி - < 60 நாட்கள்
- நீண்ட கால முதிர்ச்சி - > 90 நாட்கள்
- நோய், பீடைகளிற்கு அதிகளவில் சகித்து வளரும் தன்மை
- பெரியளவான விதைகள்
- வறட்சிக்கான சகிப்புத் தன்மை
- வித்தியாசமான கைத்தொழில்களிற்கான விருப்பத் தெரிவுகள்

நிகழ்ச்சிகள்:

- உழுந்து மூலவுயிருருக்களை மதிப்பிடலும், தெரிவு செய்தலும்
- உழுந்தை கலப்புப் பிறப்பாக்கம் செய்தலும், தெரிவு செய்தலும்

கௌபீ

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு உகந்த கௌபீ வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல்
  - 1.2 தொ / ஹெ (மானாவாரி)
  - 3 தொ / ஹெ (நீர்ப்பாசனம்)
- விரைவான முதிர்ச்சி - < 70 நாட்கள்
- நீண்ட கால முதிர்ச்சி - > 85 நாட்கள்
- நுகர்வோர் அதிகளவில் ஏற்றுக் கொள்ளும் தன்மை
- காறையழுகல், காய்துளைப் புழுவிற்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை

நிகழ்ச்சிகள்:

- கௌபீயை கலப்புப் பிறப்பாக்கம் செய்தலும், தெரிவு செய்தலும்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை – கௌபீ
- மானாவாரி நிலைமைகளின் கீழ் நம்பிக்கையூட்டும் கௌபீ பரம்பரைகள்
- புதிய நம்பிக்கையூட்டும் இனவிருத்திப் பரம்பரைகளை வருணனை செய்தல்
- வர்க்க இசைவாக்கப் பரிசோதனை – கௌபீ

சோயா அவரை

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு உகந்த சோயா அவரை வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல்
  - 3.0 தொ / ஹெ (மானாவாரி)
  - 4.0 தொ / ஹெ (நீர்ப்பாசனம்)

- விரைவான முதிர்ச்சி - < 70 - 90 நாட்கள்
- பெரியளவான விதைகள்
  > 16 கிராம் / 100 விதைகள்
- நுனி வளரா வளர்ச்சிக் போக்கு
- நீண்ட வாழ்தகவு - > 3 மாதங்கள்
- விதை உதிரல், சாய்ந்து விழுதலிற்கு சகிப்புத்தன்மை
- நுகர்வோர் அதிகளவில் ஏற்றுக் கொள்ளும் தன்மை
- ஊதாக் கறை நோய்க்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை

நிகழ்ச்சிகள்:

- சோயா அவரையைக் கலப்புப் பிறப்பாக்கம் செய்தலும், தெரிவு செய்தலும்
- ஆசிய மரக்கறி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்ட சோயா அவரை மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை – ஆசிய மரக்கறி ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மரக்கறி சோயா அவரை மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- தற்போதுள்ள சோயா அவரை மூலவுயிருருக்களை பராமரித்தல்

எண்ணெய் வித்துப் பயிர்கள்

நிலக்கடலை

- நிலக்கடலையின் நம்பிக்கையூட்டும் பரம்பரைகளின் விதை இனப்பெருக்கம்
- வர்க்க இசைவாக்கச் சோதனை – மத்திய கால அளவுள்ள நம்பிக்கையூட்டும் பரம்பரைகள்
- நிலக்கடலையில் அரும்பு கருகல் நோயிற்கான வர்க்க இசைவாக்கச் சோதனை

கடுகு

- கடுகிற்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- விவசாயிகளின் தோட்டங்களில் கடுகிற்கான வர்க்க இசைவாக்கச் சோதனை

வன் தானியங்கள்

சோளம்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு சோளக் கலப்பினங்கள், அயன் மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்கள், சோள உள்ளகக் கலப்புப் பரம்பரைகளை விருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல்
  - கலப்பினம் 7.0 தொ/ ஹெ
  - அயன் மகரந்தச் சேர்க்கை அடைவன 6.0 தொ / ஹெ
- மத்திய வயது: முதிர்ச்சியடைய 105 –110 நாட்கள்
- இரு நோக்கங்கள் - பச்சைப் பொத்திகளிற்கும், தானியங்களிற்கும்
- விதை நிறம் - மஞ்சள் முதல் செம்மஞ்சள்
- தண்டுதுனைப் புழு, சதர்ன் துரு நோய், மடல் அழுகல், ஹெல்மிந்தஸ்போறியம் இலைப் புள்ளி ஆகியவற்றிற்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை
- வறட்சியைச் சகித்து வளரல்

நிகழ்ச்சிகள்:

- தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கையூட்டும் அயன் மகரந்தச் சேர்கை அடையும் இந்தோனேசிய வர்க்கங்களை வர்க்க இசைவாக்கச் சோதனைகளில் மதிப்பீடு செய்தல்
- மெக்சிகோவிலிருந்து பெறப்பட்ட ஊஐஆஆலுவு சோளக் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்

- ஆசிய சோள திட்டத்தில் இந்தியாவிலிருந்து பெறப்பட்ட CIMMYT சோளக் கலப்பினங் களை மதிப்பீடு செய்தல்
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட நம்பிக்கையூட்டும் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்.
- "கலப்பினக் கலப்பு" குடித்தொகையில் இருந்து சோளத்தின் உள்ளகக் கலப்பினங்களை அபிவிருத்தி செய்தல் - பரம்பரை மேம்பாடு
- வெளிநாட்டு ஸ்வீட் கோர்ன், கலப்பினச் சோளம் என்பனவற்றை மதிப்பிடல்
- நம்பிக்கையூட்டும் கலப்பினங்கள், பெற்றோர் பரம்பரைகளின் விதை உற்பத்தி

குரக்கன்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு குரக்கன் வர்க்கங்களை விருத்தி செய்தல்

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- இலக்கான விளைச்சல் 4.0 தொ/ ஹெ
- மத்திய வயது: 3 - 3½ மாதங்கள்
- சிறுபோகம், காலபோகம் இரண்டிற்கும் பொருத்தமானவை
- எரிபந்த நோய்க்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை

நிகழ்ச்சிகள்:

- மானாவாரி, நீர்ப்பாசனம் ஆகிய இரு நிலைமைகளின் கீழும் வர்க்க இசைவாக்கச் சோதனைகளில் குரக்கன் சேகரிப்புகளை மதிப்பீடு செய்தல்
- புதிய குரக்கன் சேகரிப்புகளை AYT இல் மதிப்பீடு செய்தல்
- குரக்கனின் மூலவுயிருரு மதிப்பீடு
- PYT இல் தினையை மதிப்பீடு செய்தல்
- இறுங்கு சேகரிப்புகளை PYT இல் மதிப்பீடு செய்தல்
- தினையில் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கத்தை (ரவி) பராமரித்தல்
- இறுங்கு வர்க்கமான ஐசிஎஸ்வீ 112 இனப்பெருக்கம் செய்தல்

ஏனைய உலர் வலய வன் தானியங்கள்

- நம்பிக்கையூட்டும் சாமை மூலவுயிருருக் களைப் பராமரித்தல்
- நம்பிக்கையூட்டும் தினை மூலவுயிருருக் களைப் பராமரித்தல்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனைகள்

மரக்கறிகள்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளிற்கு மரக்கறி வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

வெண்டி

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- விளைச்சல் இலக்கு 15 – 20 தொ/ஹெ
- மஞ்சள் சித்திர வடிவ நோய்க்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை
- அதிகளவான நுகர்வோர் ஏற்றுக் கொள்ளும் தன்மை

நிகழ்ச்சிகள்:

- வெண்டியின் வர்கக் அபிவிருத்தி (கலப்புப் பிறப்பாக்கம்)
- வெளிநாட்டு வெண்டி மூலவுயிருருக்களை மதிப்பிடல்
- மதிப்பீடு செய்யப்பட்ட வெண்டி மூலவுயியிருருக்களை கலப்புப் பிறப்பாக்கம் செய்தல்

- நம்பிக்கையூட்டும் வெண்டி பரம்பரைகளிற்கு வர்க்க இசைவாக்கச் சோதனைகள்
- தற்போதுள்ள சோயா அவரை மூலவுயிருருக்களை பராமரித்தல்

பயற்றை / மரக்கறி கௌபீ

வர்க்கங்களின் எதிர்பார்க்கப்படும் பண்புகள்:

- விளைச்சல் இலக்கு 15 தொ/ஹெ
- காறை அழுகல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மை
- அதிகளவான நுகர்வோர் ஏற்றுக் கொள்ளும் தன்மை

நிகழ்ச்சிகள்:

- மரக்கறி கௌபீ மூலவுயிருருக்களை மதிப்பிடல்
- மரக்கறி கௌபீயை கலப்புப் பிறப்பாக்கம் செய்தலும், தெரிவு செய்தலும்
- பயற்றை மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- பயற்றைக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- கத்தரிக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

பழங்கள்

நிகழ்ச்சியின் நோக்கம்

- உயர் விளைச்சலைத் தரும் வர்க்கங்களை இனங் காணல்
- உற்பத்தித்திறனை அதிகரிக்க பயிராக்கவியல் முறைகளை அபிவிருத்தி செய்தல்
- பயிற்றுவிக்கும் கட்டமைப்புகள், கத்தரிக்கும் இடைவெளிகள், பூத்தலைத் தூண்டும் ஹோமோன்களின் தாக்கம் என்பனவற்றை ஆராய்தல்
- "வெளிக்கள மரபணு வங்கி"யை ஸ்தாபித்தல்
- மூலவுயிருருக்கள்/ தாய்த் தாவரங்களை பராமரித்தல்

நிகழ்ச்சிகள்:

- திராட்சை, மா வர்க்கங்களைப் பராமரித்தல்
- விளாம்பழ மூலவுயிருருக்களைப் பராமரித்தல்
- மென்மையான விதைகளைக் கொண்ட கொய்யா வர்க்கங்களை மதிப்பிடல்
- மூன்று திராட்சை வாக்கங்களின் தாய்த் தாவரங்களை மதிப்பீடு செய்தல்
- வெளிநாட்டு வத்தகை வர்க்கங்களை மதிப்பீடு செய்தல்
- தரத்தை மேம்படுத்துவதற்காக திராட்சைக்கு ஜிபெரலிக் அமிலத்தைப் பிரயோகித்தல்
- திராட்சையைப் பயிற்றுவிக்கும் முறைகளை மதிப்பீடு செய்தல்
- உலர் வலயத்தின் DL1 இல் ட்றகன்புருட் இன் நீண்ட கால சாத்தியவளங்களை ஆய்வு செய்தல்
- முருங்கையில் விதை உற்பத்திக்காக தாய்த் தாவர பரம்பரைகளைப் பராமரித்தல்
- பழப்பயிர்களிற்கு வெளிக்கள மரபணு வங்கியை ஸ்தாபித்தல் (30 ஏக்கர்)
- பப்பாசி கலப்பினங்களின் மதிப்பீடு

பூச்சியியல்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- வயற் பயிர்களின் பீடைகளினால் ஏற்படும் பயிர் இழப்பைக் குறைப்பதற்கு பொருளாதார இரீதியில் நிலைத்திருக்க கூடிய, சுற்றாடல் நேயமுள்ள, பயனுறுதியான பீடை முகாமைத்துவ தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்தல்.

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- வயற் பயிர்களின் பீடைப் பிரச்சினைகளை இனங் காணல்

- பிரதான பீடைகளிற்கு எதிர்ப்புத் தன்மை / சகிப்புத் தன்மை கொண்ட மூலவுயிருருக்கள், வர்க்கங்கள், வெளிநாட்டு கலப்பினங்கள் என்பனவற்றை இனங்காணல்
- பீடைகளின் எதிர்ப்புத்தன்மைக்கான கொடை மூலாதாரங்களை இனங் காணல்
- பிரதான பீடைப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த பூச்சிநாசினிகளைத் தெரிவு செய்தல்
- கலாசார பீடைக்கட்டுப்பாட்டு முறைகளை அபிவிருத்தி செய்தல்
- ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதிகளை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சி

- மிளகாய் இலைச் சுருளல் சிக்கலிலும், விளைச்சலிலும் வித்தியாசமான நைதரசன் அளவுகளின் / மூலாதாரங்களின் செல்வாக்குகள்
- பிரதான மிளகாய் பீடைகள் போகங்களில் பெருகும் தன்மை
- மிளகாயில் இலைச்சுருளல் சிக்கலைக் குறைக்க பல்வேறு பத்திரக் கலவைகளின் தாக்கம்
- வெங்காயத்தில் பனிப்பூச்சிகளைக் கட்டுப் படுத்த பூச்சி நாசினிகளைப் பரிசோதித்தல்
- நாற்றுமேடைப் பருவத்தில் வெங்காயத்தி லுள்ள பீடைகளைக் கட்டுப்படுத்த விதைப் பரிகரணத்தின் தாக்கங்கள்
- வெங்காயத்தின் பிரதான பீடைகளிற்கான எதிர்ப்புத் தன்மைக்கு இனப்பெருக்கப் பரம்பரைகள், வெளிநாட்டு வர்க்கங்கள் என்பனவற்றை மதிப்பீடு செய்தல்
- பீடைகளின் தாக்கத்திற்கு வெளிநாட்டு சோளக் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்
- பாசிப்பயிறில் பிரதான பீடைகளிற்கான எதிர்ப்புத் தன்மைக்காக மூலவுயிருருக்கள் / வர்க்கங்களை மதிப்பீடு செய்தல்
- உழுந்தில் பிரதான பீடைகளிற்கான எதிர்ப்புத் தன்மைக்காக மூலவுயிருருக்கள் / வர்க்கங்களை மதிப்பீடு செய்தல்
- சோயா அவரையில் பிரதான பீடைகளிற்கான எதிர்ப்புத் தன்மைக்காக மூலவுயிருருக்கள் / வர்க்கங்களை மதிப்பீடு செய்தல்

நோயியல்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- வயற் பயிர்களின் நோய்களினால் ஏற்படும் பயிர் இழப்பைக் குறைப்பதற்கு பொருளாதார இரீதியில் நிலைத்திருக்க கூடிய, சுற்றாடல் நேயமுள்ள, பயனுறுதியான நோய் முகாமைத்துவ தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்தல்.

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- வயற் பயிர்களிலுள்ள நோய்களை இனங் காணல்
- பிரதான நோய்களிற்கு எதிர்ப்புத் தன்மை / சகிப்புத் தன்மை கொண்ட மூலவுயிருருக்கள், வர்க்கங்கள், வெளிநாட்டு கலப்பினங்கள் என்பனவற்றை இனங் காணல்
- நோய்களின் எதிர்ப்புத்தன்மைக்கான கொடை மூலாதாரங்களை இனங் காணல்
- பிரதான நோய்களைக் கட்டுப்படுத்த பங்கசு நாசினிகளைத் தெரிவு செய்தல்
- கலாசார நோய்க் கட்டுப்பாட்டு முறைகளை அபிவிருத்தி செய்தல்
- ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவ பொதிகளை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சி

- மிளகாயின் பிரதான நோய்களில் வித்தியாசமான நைதரசன் அளவுகளின் செல்வாக்குகள்
- மிளகாயின் பிரதான நோய்களில் வித்தியாசமான நைதரசன் பசளைகளின் செல்வாக்குகள்

- மிளகாய் கொனேபோரா வெளிறல் நோய்க்கான பங்கசு நாசினிகளைத் தெரிவு செய்தல்
- வெங்காயத்தில் அந்திரக்நோசு, ஊதாப்புள்ளி நோய் என்பனவற்றிற்கு பங்கசு நாசினிகளைத் தெரிவு செய்தல
- பிரதான நோய்களிற்கு வெளிநாட்டு வெங்காய வர்க்கங்களை மதிப்பிடல்
- பருவமல்லாத காலத்தில் பிரதான நோய்களிற்காக பெரிய வெங்காய இனப்பெருக்க பரம்பரைகளை மதிப்பீடு செய்தல்
- பிரதான நோய்களிற்காக வெண்டி வர்க்கங்கள் / பரம்பரைகளை மதிப்பீடு செய்தல்
- பிரதான நோய்களிற்காக கொச்சி மிளகாய் சேகரிப்புகளை மதிப்பீடு செய்தல்
- சோள மடல் வெளிறல் நோயிற்கு வர்க்கங்களைத் தெரிவு செய்யும் நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்
- பிரதான நோய்களிற்காக பாசிப்பயறின் மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- பிரதான நோய்களிற்காக உழுந்தின் மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- பிரதான நோய்களிற்காக கௌபீயின் நம்பிக்கையூட்டும் பரம்பரைகளைத் தெரிவு செய்தல்
- பிரதான நோய்களிற்காக சோயா அவரையின் பரம்பரைகளைத் தெரிவு செய்தல்
- திராட்சை கீழ்ப் பூஞ்சண நோய்க்கு பங்கசு நாசினிகளைத் தெரிவு செய்தல்
- பாசிப்பயறு மஞ்சள் சித்திர வடிவ நோய்க்கு வர்க்கங்களைத் தெரிவு செய்யும் முறைகளை அபிவிருத்தி செய்தல்
- உழுந்தின் வைரசு நோய்க்கு வர்க்கங்களைத் தெரிவு செய்யும் முறைகளை அபிவிருத்தி செய்தல்

பயிராக்கவியல்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- உலர் வலய பண்ணை முறைகளிற்கு பயிர் முகாமைத்துவ முறைகளையும், பயிர்ச் செய்கை முறைகளையும் அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- பெரிய வெங்காய விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை மேம்படுத்தல்
- பெரிய வெங்காயம் / மிளகாயில் விளைச்சல் இடைவெளியைக் குறைப்பதற்கான பயிராக்க வியல் தந்திரோபாயங்கள்
- அவரைத் தானியங்களில் விளைச்சல் இடைவெளியைக் குறைப்பதற்கான பயிராக்க வியல் தந்திரோபாயங்கள்
- மிளகாய், பெரிய வெங்காயம், குரக்கன் என்பனவற்றிற்கான புதிய நாற்று மேடை முகாமைத்துவ தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்தல்
- உயிரற்ற தகைப்புகளிற்கான (வறட்சியும், வெப்பநிலையும்) உடற்றொழிலியல் ஆய்வு கள் / பரம்பரைகளை இனங் காணல்
- அவரைகளின் பல்வேறு பரம்பரைகளின் நைதரசனைப் பதிக்கும் உடற்றொழிலியல் ஆய்வுகள்
- நீர் பொருளாதாரம், மாற்றமடையும் காலநிலைத் தோற்றங்கள் ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தி நெல்லை அடிப்படையாகக் கொண்ட பயிர் மாதிரிகளைச் சரிபார்த்தல்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை, வர்க்க இசைவாக்கப் பரிசோதனை என்பனவற்றில் புதிய மறு வயற் பயிர் பரம்பரைகளைத் தெரிவு செய்தல்
- நீர்ப்பாசனம் செய்யப்பட்ட தாழ் நில நிலைமைகளின் கீழ் நெல் பரம்பரைகளைத் தெரிவு செய்தல் - ஊசுஏவு.. வர்க்க இசைவாக்கப் பரிசோதனை

- சிறுகாம்பிலியின் மலட்டுத் தன்மையில் தாவர விதானத்தின் வெப்பநிலையின் தாக்கங்களை ஆராய்தல்

நிகழ்ச்சி

- மிளகாயின் வளர்ச்சியையும், விளைச்சலையும் ஊக்குவிக்க ஒருங்கிணைந்த மண் முகாமைத் துவ அணுகுமுறையைப் பரிசோதித்தல்
- விதைகளை உற்பத்தி செய்வதற்காக பருவமல்லாத காலங்களில் தாய்க் குமிழ்களை உற்பத்தி செய்வதற்கு ஆரம்ப சாத்தியவள ஆய்வுகள்
- மிளகாயிற்கான கேள்வியை அடிப்படையாகக் கொண்ட நைதரசன் முகாமைத்துவம்
- அதிகளவான வெப்பநிலைக்கு சகிப்புத் தன்மைக்காக மறு வயற் பயிர்களைத் தெரிவு செய்தல்
- தகைப்பின் கீழும் தகைப்பில்லாத போதும் அவரைகளின் சிறுகனுக்கள் தோன்றும் போக்கினை ஆராய்தல்
- இலங்கையின் தாழ் நாட்டு ஈர வலயத்தில் சிறு போகத்தின் போது நீர்ப்பாசன நீரின் அளவினால் பாசிப்பயறு (விக்னா ரேடியேட்டா (எல்.) வில்செக்) பிறப்புரிமையியற் தோற்றங் களின் செயற்றிறன்
- வெங்காய (அலியம் சீப்பா) விதை உற்பத்தியின் விளைச்சலிலும், வளர்ச்சியிலும் பொட்டாசியம் நைட்ரேட்டுப் ($முழே_3$) பிரயோகத்தின் தாக்கங்கள்
- பொட்டாசியம் நைட்ரேட்டினால் ($முழே_3$) பரிகரிக்கப்பட்ட வெங்காயத்தின் விதை விளைச்சலில் குமிழ்களின் அளவு, இடைவெளி என்பனவற்றின் தாக்கங்கள்
- நீர்ப்பாசனத்தின் கீழும், நீர்ப்பாசனம் இல்லாத போதும் பாசிப்பயறு (விக்னா ரேடியேட்டா), மிளகாய் (கப்சிகம் அனும்) என்பனவற்றின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் மெதனோலை இலைகளிற்கு விசிறுவதன் தாக்கம்.
- இலை ஒளித்தொகுப்பினை அடிப்படையாகக் கொண்டு தகைப்பு சூழலிற்கு சோள பரம்பரைகளைத் தெரிவு செய்தல்
- "APSIM Oryza" மாதிரி சரிபார்த்தலிற்காக பல்வேறு பயிர் சுழற்சிகளை மதிப்பீடு செய்தல்
- காலநிலை மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு சோளம், மிளகாய், பாசிப்பயறு என்பனவற்றின் செயற்றிறனை இனங் காணலுல்.
- சோளத்தின் பூத்தல் ஒத்திசைவுப் போக்கினை ஆராய்தல்
- தானிய மலட்டுத் தன்மையில் தாவர விதான வெப்பநிலையின் தாக்கங்களை ஆராய்தல்
- பூக்கும் கட்டத்தில் உயர் வெப்பநிலைத் தகைப்பிற்கான நெல் வர்க்கங்களைத் தெரிவு செய்தல்
- உலர் வலயத்திற்கு காற்றுள்ள மண் நிலைமைக்கான நெல் வர்க்கங்களைத் தெரிவு செய்தல்
- நம்பிக்கையூட்டும் நெல் வர்க்கங்களின் விதை உற்பத்தி
- வித்தியாசமான முகாமைத்துவ மட்டங்களில் அயன் மகரந்தச் சேர்க்கையடையும் வெளி நாட்டு சோள வர்க்கங்களின் செயற்றிறன்
- மிளகாய், குரக்கன், வெங்காயம் என்பனவற் றிற்கு ஒரு மாற்று நாற்று மேடைத் தொழில்நுட்பத்தை இனங் காணல்
- பல்வேறு மறுவயற் பயிர்களிற்கான வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகள்
- வித்தியாசமான முகாமைத்துவ நிலைமை களின் கீழ் மீதேன் வெளியேறல்
- பல்வேறு களை முகாமைத்துவ நிலைமை களின் கீழ் காற்றிற்குறிய நெல் வர்க்கங் களைத் தெரிவு செய்தல்

களை முகாமைத்துவம்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- வயற் பயிர்களில் களைகளினால் ஏற்படும் பயிர் இழப்பைக் குறைப்பதற்கு பொருளாதார இரீதியில் நிலைத்திருக்க கூடிய, சுற்றாடல் நேயமுள்ள, பயனுறுதியான களை

முகாமைத்துவ தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்தல்.

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- பல்வேறு மறு வயற் பயிர்களின் களைப் போட்டியை ஆராய்தல்
- மறு வயற் பயிர்களின் பிரதான களைகளிற்கான களைநாசினிகளைத் தெரிவு செய்தல்

நிகழ்ச்சி:

- சோளத்தின் களைக்கட்டுப்பாட்டில் நிக்கோசல்பியுரானின் வினைத்திறன்
- வெங்காயத்தின் களைக்கட்டுப்பாட்டில் ஒக்சிபுளோபென் 480 கி / லீ இன் வினைத்திறன்
- வெங்காயத்தில் முளைத்தலிற்குப் பின் களைகளைக் கட்டுப்படுத்தும் களைநாசினி களைத் தெரிவு செய்தல்

மண் வளம், பசளைகள், சுற்றாடல்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மானாவாரி, நீர்ப்பாசன நிலைமைகளில் நிலையான உற்பத்தி நிலையை அடைவதற்கு போசணை முகாமைத்துவ தந்திரோபாயங் களை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- பசளைப் பாவனை வினைத்திறனை அதிகரித்தல்
  - சோளம், குரக்கன், மிளகாய் என்பனவற்றிற்கு கேள்வியை அடிப்படையாகக் கொண்ட நைதரசன் முகாமைத்துவ முறை
  - சோளத்தின் ஒருங்கிணைந்த போசணை முகாமைத்துவ முறைகளிற்கு அதேயிடத்தில் பெறப்படும் உகந்த பசுந்தாட் பசளை
- நெல் வயல்களிலிருந்து மீதேன் வெளியேறல் தொடர்பான ஆய்வுகள்

நிகழ்ச்சி:

- மிளகாயின் வளர்ச்சி, விளைச்சலில் prilled urea, மணியுரு யூறியா என்பனவற்றின் தாக்கங்களை ஒப்பிடல்
- இலை நிறச் சுட்டியைப் பயன்படுத்தி சோளத்தின் நைதரசன் தேவையைத் தீர்மானித்தல்
- செப்பு, நாகம், மங்கனீசு என்பனவற்றை இலைகளிற்கு விசிறுவதால் மிளகாயின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் ஏற்படும் தாக்கங்கள்
- அரிசிக்கான உயிரியல் உற்பத்திகளை பரிசோதித்தல்
- சோளத்தின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் நுண் போசணையாக நாகத்தின் தாக்கம்
- HERP, எப்பாவலை தனி சுப்பர் பொசுபேற்று ஆகியவற்றை இடுவதனால் சோளத்தின் தூண்டற்பேறு தொடர்பான ஒரு ஆய்வு

நீர் முகாமைத்துவம்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- உச்ச அளவான பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கு கிடைக்கும் நிலம், நீர் என்பனவற்றை வினைத்திறனாகப் பயன்படுத்த பொருத்தமான நீர் முகாமைத்துவ உபாயங்களை அபிவிருத்தி செய்தல்

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- நீர் முகாமைத்துவ ஆய்வுகள்
  - மானாவாரி விவசாயம்
    - மழை நீர் அறுவடை, மண் / நீர் பாதுகாப்பு
  - நீர்ப்பாசன விவசாயம்
    - நிலத்தடி நீரை அறுவடை செய்தல்
    - மேற்பரப்பு, நுண் நீர்ப்பாசனத்திற்கு வினைத்திறனான நீர் முகாமைத்து வத்தை அபிவிருத்தி செய்தல்
- பிரச்சினைக்குறிய மண்களை (உவர்த்தன்மை, மண் இறுக்கமடைதல்) முகாமைத்துவம் செய்தல்

நிகழ்ச்சி:

- செங்கபில மண்ணில் கலப்பின சோளத்திற்கான (சம்பத்) நீர்ப்பாசன நீர்த் தேவை
- சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழ் மிளகாயிற்கான பசளைப்பாசன சிபாரிசுகள் தொடர்பான ஓர் ஆய்வு
- வெங்காயத்திற்கான விசிறல் பாசனம் தொடர்பான ஓர் ஆய்வு
- உலர் வலயத்தில் மானாவாரி மேட்டு நிலங்களிற்கு பல் - தொழிற்பாட்டு மட் காப்பு அணை முறையை அபிவிருத்தி செய்தல்

உணவுத் தொழில்நுட்பம்

எதிர்கால வழிகாட்டல்கள்:

- மறுவயற் பயிர் வர்க்கங்களின் தர மதிப்பீடும், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்களை யும், பெறுமானம் சேர்க்கும் தொழில்நுட்பங் களையும் விருத்தி செய்தல்

நிகழ்ச்சியின் நோக்கங்கள்:

- இனவிருத்தி பரம்பரைகளின் இரசாயன, பௌதீக, சுவை பண்புகளையும், உணவுப் பதப்படுத்தற் தரத்தையும் பகுப்பாய்வு செய்தல்
- முறையான அறுவடைக்குப் பிந்திய பொதிகளை அபிவிருத்தி செய்தல்
- மறு வயற் பயிர்களிலிருந்து பெறுமானம் சேர்க்கப்பட்ட புதிய உணவு உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல
- செலவு குறைந்த களஞ்சிய முறைகளை அறிமுகப்படுத்தல்

நிகழ்ச்சி:

- மறுவயற் பயிர்கள் / பழங்கள் / மரக்கறிகள் ஆகியவற்றின் வர்க்கங்கள் / இனப்பெருக்கப் பரம்பரைகளின் தர மதிப்பீடு
- தானிய, அவரை மா கலவையைப் பயன்படுத்தி பெறுமானம் சேர்த்தல்
- வன் தானியங்களையும், அவரைத் தானியங்களையும் அறுவடை செய்யும் போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்க ளைத் தீர்மானித்தல்
- வன் தானியங்களையும், அவரைத் தானியங்க ளையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொறித்த சிறு தின்பண்டங்களின் தரத்தை மதிப்பீடு செய்தல்
- மிளகாய் வர்க்கங்களின் பச்சை மிளகாய் தரத்தை மதிப்பீடு செய்தல்
- சிபாரிசு செய்யப்பட்ட மறு வயற் பயிர் வர்க்கங்களின் அண்ணளவான உள்ளடக்கங் களை மதிப்பீடு செய்தல்

உயிரியல் தொழில்நுட்பம்

- மூலக்கூற்று அடையாளப்படுத்திகளைப் பயன்படுத்தி QPM உட்புகுத்தப்பட்ட ஒரு சோள பரம்பரையை / வர்க்கத்தை அபிவிருத்தி செய்தல்
- மிளகாய் இலைச்சுருளல் வைரசுவிற்கான எதிர்ப்புத்தன்மை / சகிப்புத்தன்மையை இனங் காணல்
- மிளகாய் பரந்த கலப்புப் பிறப்பாக்கத்திற்கு முளையக் காப்பு தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்தல்
- விதை / அங்குர நுனி வளர்ப்பின் மூலம் திராட்சை பரம்பரை / வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்
- இரசாயன பண்பு மாற்றிகளின் ஊடாக புதிய பெரிய வெங்காய பரம்பரைகள் / வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல்

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- பின்வரும் பயிர்களின் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களின் இனவிருத்தியாளர் விதை உற்பத்தி; மிளகாய் (எம்ஐ – கிறீன், எம்ஐ 2), சோளம் (பத்ரா, ருவன், சம்பத்தின் பெற்றோர் பரம்பரை), குரக்கன் (ஓசத,

ருவன), பாசிப்பயறு (எம்ஐ 5, எம்ஐ 6, ஆரி), உழுந்து (எம்ஐ 1, அநுராத), கௌபீ (தவள, எம்ஐ 35, வருணி, பொம்பே), சோயா அவரை (பீபி 1), மரக்கறிக் கௌபீ (பிஎஸ் 1), தக்காளி (கேசி 1), வெண்டி (ஹரித்த), பாகல் (எம்சி 43).

- வெங்காயத்தின் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்களின் (தம்புளை தெரிவு) இனவிருத்தியாளர் குமிழ்களையும், விதைகளையும் உற்பத்தி செய்தல்.

தொழில்நுட்பப் பரம்பல்

- ஆராய்ச்சிக் கட்டுரைகளில் ஆராய்ச்சிக் கண்டு பிடிப்புகளை வெளியிடல்
- மாகாண தொழில் நுட்பக் குழுக் கூட்டங்களிலும், ஏனைய பருவகால மீளாய்வுக் கூட்டங்களிலும் தகவல்களைப் பரிமாறல்
- பயிற்சி நிகழ்ச்சிகள், விரிவுரைகள், பயிற்சிப் பட்டறைகள், வெளிக்கள செய்து காட்டல்கள், பயிர் மருத்துவ நிலையங்கள், வயல் விழாக்கள், கண்காட்சிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், செய்திப் பத்திரிகைக் கட்டுரைகள், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் போன்ற வெகுசன ஊடகங்களின் ஊடாக தொழில்நுட்பப் பிரசாரங்களை மேற்கொள்ளல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி அலுவலர்கள்	29
விவசாயப் பொருளியலாளர்	01
நிகழ்ச்சி உதவியாளர் - விவசாயம்	04
ஆராய்ச்சி உதவியாளர்	26
விவசாயப் போதனாசிரியர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	09
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	15
அலுவலக உதவியாளர் (கேகேஎஸ்)	02
சாரதிகள்	05
தாவர ஒட்டுபவர்கள்	01
களஞ்சிய உதவியாளர்	02
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
உழவு இயந்திர இயக்குனர்	04
காவலாளி	08
தொழிலாளர் (நிரந்தரம்)	129
தொழிலாளர் (ஒப்பந்தம்)	138
மொத்தம்	**378**

1.1.1 தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (GLORDC), அங்குணுகொலபலஸ்ஸ

தானிய அவரைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது தென் உலர் வலயத்தில் அமைந்துள்ள பிரதான விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகும். இந்நிலைய மானது பிரதானமாக அவரைத் தானியப் பயிர்கள், எண்ணெய் வித்துப் பயிர்கள், மற்றும் பிரதேச ரீதியில் முக்கியத்துவமுடைய மரக்கறி மற்றும் பழப்பயிர்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் முக்கிய கவனம் செலுத்துகின்றது. அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வீரவிலவில் அமைந்துள்ள இணை நிலையத்துடன் இணைந்து நாட்டின் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் தொழில்நுட்பப் பரம்பலையும் மேற்கொள்கிறது. அனைத்து ஆராய்ச்சி நிகழ்ச்சிகளும் நாட்டினதும் பிராந்தியத்தினதும் ஆராய்ச்சித் தேவைகளின் அடிப்படையிலேயே திட்டமிடப்படுவதுடன்: பயிர் விருத்தி, பயிராக்கவியல், தாவரப்பாதுகாப்பு மற்றும் மண்-நீர் முகாமைத்துவம் போன்றவை பிரதான பகுதிகளாகக் கவனத்தில் கொள்ளப்படுகிறது. மேலும் இந்நிலையமானது உற்பத்தியாளர் விதை மற்றும் விடுவிக்கப்பட்ட வர்க்கங்களின் அடிப்படை நடுகைப் பொருட்கள் வழங்குதல், இடங்களுக்கே உரித்தான பசளைப் பிரயோகச் சிபாரிசு மற்றும் கள அலுவலர்கள், விவசாயிகள், ஈடுபாடுள்ள மக்களுக்கு தொழில்நுட்பத் தகவல்களைப் பரம்பலடையச் செய்தல் ஆகியவற்றையும் நிறைவேற்றுகின்றது.

பாதீடு

அட்டவணை 1.1.1.1: வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	6,866,527	6,621,588	96
மீண்டுவரும் செலவு	16,817,600	13,175,871	78
செயற்திட்டங்கள் (NARP)			
நடுத்தர வயதுடையதும், பெரிய விதைகளைக் கொண்டதும் உயர் விளைச்சல் தருவதுமான நிலக்கடலை வர்க்கங்களின் அபிவிருத்தி.	363,000	335,616	93
தெரிவு செய்யப்பட்ட கடுகுத் தெரிவுகளின் இசைவாக்கச் சோதனை.	647,000	632,148	98
உயர் விளைச்சல் மற்றும் தண்டு- வேர் அழுகல் நோய்க்கான சகிப்புத் தன்மையுடைய வெள்ளை வித்தைக் கொண்ட எள்ளு வர்க்கங்களின் அபிவிருத்தி.	435,000	410,570	94
வறட்சியை சகித்துக் கொள்ளும் கௌபி வர்க்கங்களின் விருத்தி	604,600	554,930	92
நெல் வயல்களின் கீழ் பிடி பயிர் செய்கைக்குப் பொருத்தமான உயர் விளைச்சல் மற்றும் குறைந்த வயதுடைய பாசிப் பயறு வர்க்கங்களின் விருத்தி	367,7000	353,650	98

பாசிப் பயறுக்கும், கௌபிக்கும் ஏற்ற வினைத்திறனான நீர் முகாமைத்துவப் பொதியின் அபிவிருத்தி.	950,000	902,156	95
கௌபி செய்கையில் வைரசு நோய்களை அடையாளம் காணல் மற்றும் கட்டுப்பாட்டுக்கான பொதியை அபிவிருத்தி செய்தல்.	431,200	423,6477	98
பாசிப் பயறில் மொசக் வைரஸ் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் வினைத்திறனான முகாமைத்துவப் பொதியை இனங்காணல்.	493,250	491,553	100
தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் நிலக்கடலை செய்கை பண்ணப்படும் பிரதேசங்களில் உள்ள மண்ணில் காணப்படும் கந்தகத்தின் தற்போதைய நிலை.	600,000	410,570	94
தினை செய்கையின் விளைச்சலில் நடுகைப்பொருள் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடல்.	150,000	148,300	100
நிலக்கடலை விளைச்சலில் களைகளின் தாக்கம் பற்றிய கற்கை மற்றும் நிலக்கடலையில் பயிர் - களை அவதிப் போட்டிக் காலத்தை அறிதல்.	220,400	218,128	99
வித்துக்களற்ற திராட்சை வர்க்கங்களின் அபிவிருத்திக்காக மூலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் மதீப்பீடு.	1,031,500	1,019,417	99
பூசணி அபிவிருத்தி நிகழ்ச்சி	350,000	348,200	100
பூசணி விதை அபிவிருத்தி நிகழ்ச்சி	240,000	336,000	98
மரக்கறிக் கௌபியின் அபிவிருத்தி.	75,000	74,344	100
ரத்னா பப்பாசி வர்க்கத்தில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி.	300,000	286,345	97
இலங்கையின் வலயங்களில் காணப்படுகின்ற வாழை மூலவுயிருருக்களின் சேகரிப்பு, நிர்மாணம் மற்றும் மதிப்பிடல்.	130,000	125,755	98
வாழையில் பியுசாரியம் வாடல் நோய்க்கெதிரான விகாரப் பிறப்பாக்கம்	2,165,000	2,089,345	97
பண்ணை அபிவிருத்தி			
உலர்த்தும் தளம் மற்றும் குளிர் அறை நிர்மாணம், நில அபிவிருத்தி (15ha) நிலமட்டப்படுத்தல் (8ha) விதை உற்பத்தி, வேலி அமைத்தல் மற்றும் நுண் நீர்ப்பாசனத் தொகுதி (05ha)	9,700,000	6,307,262	65
பண்ணை அபிவிருத்தி ARS வீரவில	1,000,000	993,200	100
நிலக்கடலை விதை உற்பத்தி – கிராமிய நிகழ்ச்சி	5,000,000	4,173,494	83
கலப்பினச் சோள (சம்பத்) விதை உற்பத்தி	260,000	243,560	94
மொத்தம்	**49,197,777**	**44,653,903**	**91**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

- கௌபி பயிரின் புதிய வர்க்கங்களில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள நடுகைச் செறிவை உறுதிப் படுத்துவதற்கான பரிசோதனை ஒன்று வெற்றி கரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

- மழையை நம்பி செய்கைப்பண்ணப்படும் கௌபியில் உள்ளக நீர் அறுவடையின் நிலை பேறான தன்மையின் விளைவை அறிவதற்கான பரிசோதனை ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

- தென்பகுதி உலர் வலயங்களில் (DL_{1b}, DL_5) மழையை நம்பிய விவசாயத் தொகுதிகளின் தன்மையை இனங்காண்பதற்கான ஆய்வு ஒன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

- தாவரங்களின் வளர்ச்சியிலும், விளைச்சலிலும் வெப்பநிலை மற்றும் ஒளியாவர்த்தனம் ஆகிய வற்றின் இணைந்த தாக்கத்தை அறிவதற்கான பரிசோதனை ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை (NCVT)

கௌபி

MICPI, வருணி, தவள, MI 35 மற்றும் பொம்பே ஆகிய நியம வர்க்கங்களுடன் இரு பரிசோதனை களில் ஏழு பதிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

கொள்ளு

ஐந்து பதிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

பாசிப்பயறு

MI 35 மற்றும் MI 6 ஆகிய நியம வர்க்கங்களுடன் பத்துப் பதிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

சோயா அவரை

PB 35 எனும் நியம சோதனை வர்க்கத்துடன் ஐந்து பதிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

தாவர இனங்கலப்பு (பயிர் விருத்தி)

எண்ணெய்ப் பயிர்கள்

நிலக்கடலை:~

- நாட்டின் பொதுவான பயிர் செய்கைக்காக "அங்கி" (ANKGI) என்னும் பெயரில் மூன்று மாத வயதுடையதும் சிவப்பு நிற கோதுடையதும், நுனி கருகுதல், வாடல் மற்றும் துரு ஆகிய நோய்களுக்கு எதிர்ப்புடையதுமான ஒரு வர்க்கம் விடுவிக்கப்பட்டுள்ளது.

- ஆறு இடங்களில் உள்ள விவசாயிகளின் வயல்களில் நுனி கருகல் நோயை சகித்து வளர்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட இரண்டு தெரிவுகள் வர்க்க இசைவாக்கச் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

- தெரிவு செய்யப்பட்ட ஐந்து நிலக்கடலை வர்க்கத் தெரிவுகளில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை (VAT) ஐந்து இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

- பெரிய விதையையுடைய ஏழு நிலக்கடலைத் தெரிவுகளிலும் மற்றும் நடுத்தர வயதுடைய நிலக்கடலைத் தெரிவுகளிலும் முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகள் (PYT) மதிப்பிடப்பட்டன.

- நிலக்கடலையில் பின்வரும் அளவுகளில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

வர்க்கம்	அளவு (Kg)
திகிரி	115.7
இந்தி	186.3
திஸ்ஸ	272.6

எள்ளு

- கறுப்பு நிற வித்துடைய தெரிவு செய்யப்பட்ட ஆறு எள்ளுத் தெரிவுகளில் முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன (PYT).
- வெள்ளை நிற வித்துடைய தெரிவு செய்யப்பட்ட ஆறு எள்ளுத் தெரிவுகளில் முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன (PYT).
- பின்வரும் அளவுகளில் எள்ளில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

வர்க்கம்	அளவு (Kg)
மாலி	5
உமா	3

கடுகு

தெரிவு செய்யப்பட்ட ஆறு தெரிவுகளில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை ஆறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

தானிய அவரைகள்

பாசிப்பயறு

- பதினாறு F_1 சந்ததிகள் F_2 சந்ததிகளாக முன்னேற்றப்பட்டுள்ளன.
- ஒரே நேரத்தில் முதிர்ச்சி அடைகின்ற 5 பாசிப்பயறுத் தெரிவுகள் முதற் கட்ட விளைச்சல் பரிசோதனையில் (PYT) மதிப்பீடு செய்யப்பட் டுள்ளன.
- தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாசிப்பயறு தெரிவுகளில் பாரிய விளைச்சல் பரிசோதனை கள் (MYT) மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.
- விடுவிக்கப்பட்ட வர்க்கங்கள் மற்றும் உன்னதமான தெரிவுகளில் விதைப் பெருக்கம் தொடர்கின்றது.

கௌபி

- விளைச்சல் மற்றும் ஏனைய பயிராக்கவியல் இயல்புகளுக்காக மூன்று சிறந்த செயற்றிற னுடைய கௌபி தெரிவுகள் மூலவுயிருரு மதிப்பீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 35 தெரிவுகளில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளன.
- நடுத்தர வயதுடைய 10 கௌபி தெரிவுகள் பாரிய விளைச்சல் பரிசோதனைகளில் மதிப்பிடப் பட்டுள்ளன (MYT).
- முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகளில் (PYT) நடுத்தர வயதுடையதும் சிறந்த செயற்றிறன் கொண்டதுமான 15 கௌபி தெரிவுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.
- சிறந்த தாவரக் கட்டமைப்புகளைக் கொண்டதும் மற்றும் உயர் விளைவைக் கொண்டதுமான நடுத்தர/குறுகிய வயதுடைய (60 -75 நாட்கள்) கௌபி தெரிவுகளின் விருத்திக்காக F_3 சந்ததியின் ஒன்பது கலப்புக்கள் மதிப்பிடப் பட்டுள்ளன.

கொள்ளு

- ஐந்து கொள்ளு தெரிவுகள் NCVT இல் மதிப்பிடப்பட்டுள்ளன.

மரக்கறிகள்

தும்பை

- சிபாரிசு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு தும்பை வர்க்கத்திலும் பெண் பெற்றோர் தொகுதிகளின் நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- எண்பத்து இரண்டு தும்பை மூலவுயிருருக்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- சிபாரிசு செய்யப்பட்ட தும்பை வர்க்கங்களில் இருந்து 1500 தாவரங்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

வெண்டி

- வெண்டிக் கலப்பினங்களின் அபிவிருத்திக்காக 72 F_1 எச்சங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

பூசணி

- கலப்பினப் பூசணி வர்க்க விருத்தி நிகழ்ச்சியில் 20 மூலவுயிருருக்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

மரக்கறிக் கௌபி

- இரண்டு நியம வர்க்கங்களுடன் சேர்த்து (போலன் பயற்றை மற்றும் கவரி பயற்றை) ஐந்து தெரிவுகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனையில் (NCVT) இல் மதிப்பிடப்பட்டுள்ளன.

கத்தரி

- நியம கத்தரி வர்க்கங்களான BW 11 மற்றும் அமந்தா ஆகியவற்றுடன் மூன்று தெரிவுகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனையில் NCVT இல் மதிப்பிடப்பட்டுள்ளன.

பழப்பயிர்களின் மேம்பாடு

விளா மற்றும் வில்வம் பழம்

- வெலி மற்றும் விளா ஆகியவற்றில் மூலவுயிருருச் சேகரிப்பு, நிர்மாணம் மற்றும் மதிப்பீடு ஆகிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. விளாவில் 6 தெரிவுகள் சேகரிக்கப் பட்டுள்ளதோடு 2000 ஒட்டுக் கட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இவ்வருடம் வில்வையில் 500 ஒட்டுக் கட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- வில்வை மற்றும் விளா ஆகிய பழமரங்களின் களப் பரம்பரை அலகு வங்கி நிர்மாணிப்புக்காக 5 ஹெக் நிலம் தயார் படுத்தப்பட்டுள்ளது.

வாழை

- பல்வேறு வாழை வகைகளில் இருந்து 23 தெரிவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் பெருக்கம் தொடர்கின்றது.

- தனிமைப்படுத்தப்பட்ட தாய்த்தாவர வாழைத் தோட்டத்தில் 250 "அக்றா" கோழிக்கூடு மற்றும் 54 "நதீ" புளிவாழைத் தாவரங்கள் நிர்மாணிக்க ப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இது நாடு முழுவதுமான இழைய வளர்ப்பு வாழை இனப்பெருக்கத் தேவையை நிறைவேற்ற உதவும், தரமான தாய்த்தாவரங்களின் உற்பத்தி நிகழ்ச்சியாகும் (NARP நிகழ்ச்சித் திட்டம்).

பப்பாசி

- உற்பத்தியாளர் விதை உற்பத்திக்காக 180 "ரத்னா" வர்க்க, பப்பாசித் தாவரங்கள் நடுகை பண்ணப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

- சிறந்த விளைச்சல் இயல்புகளைக் கொண்டதும் பப்பாசி வளையப் புள்ளி வைரஸ் நோய்க்கு எதிர்புடையதுமான வர்க்கம் / வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக பரிசோதனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மூன்றாவது சந்ததி யினை வயல்களில் மதிப்பீடு செய்வதற்காக இரண்டாவது சந்ததியிலிருந்து விதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மா

- கச்சிக்கலரா, கட்டக்காடுவ, மகாகந்த மற்றும் மகாகம ஆகிய மகாவலிப் பிரதேசப் பண்ணை களில் உள்ள 300 மாமரங்களில் கடின மற்றும் மென்மையான கத்தரித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. மீள இளமையாக்கல் மற்றும் மீள் நிர்மாணம் தொடர்பான தகவல் களின் சேகரிப்பு தொடர்கின்றது.

சித்திரசு

இனிப்புத் தோடை

- பதினைந்து தெரிவுகள் NCVT சித்திரசு நிகழ்ச்சி யின் கீழ் மதிப்பிடப்பட்டன.

திராட்சை

- வித்துக்களற்ற 3 திராட்சைத் தெரிவுகள் சேகரிக்கப்பட்டு களப் பரிசோதனை மதிப்பீட்டுக் காக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இழைய வளர்ப்பு மற்றும் உயிர்த் தொழில்நுட்பம்

- வாழையில் பியுசாரியம் வாடல் நோய்க்கான எதிர்ப்பு / சகிப்புத் தன்மைக்கான ஆய்வுகூட விகாரப் பிறப்பாக்கப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. வளர்முனை வளர்ப்பு ஆரம்பமும் மற்றும் வளர் துண்டங்களின் பெருக்கமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- தும்பையில் (Momordica dioica) இழையவளர்ப்பு முறையிலான நுண் இனப்பெருக்கப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. வளர்முனை வளர்ப்பின் ஆரம்பம் மற்றும் நிர்மாணம் என்பன நிறைவேற்றப்பட்டுள்ளன.

மண் விஞ்ஞானம்

- தென் பகுதியில் உள்ள உலர் வலய மண்ணின் நுண் போசணை நிலமையை கண்டறிவதற்கான மண் ஆய்வு ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் இருந்து 100 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, Zn, Fe மற்றும் S ஆகிய மூலகங்களுக்கான பகுப்பாய்வு மேற் கொள்ளப்பட்டது. ஏனைய நுண் போசணை மூலகங்களுக்கான பகுப்பாய்வு தொடரப்பட வுள்ளது.

- நிலக்கடலையில் கந்தகச் சிபாரிசு ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கான பரிசோதனை ஒன்று நடாத்தப்பட்டது. இதன் போது 5 – 10 ppm என்ற கந்தகப் பிரயோகத்தின் போது சிறந்த பிரதிபலன் பெறப்பட்டது.

- கலப்பினச் சோள வர்க்கமான சம்பத்தின் விளைச்சலில் N, Zn ஆகியவை ஓர் இணைந்த தாக்கத்தைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.

நீர் முகாமைத்துவம்

- இலங்கையின் விவசாயச் சூழலியல் வலயங்க ளான DLIb மற்றும் DL_5 ஆகியவற்றில் பாசிப் பயறுச் செய்கைக்கான பயிர் நீர்த்தேவை மற்றும் பயிர்க் குணகம் ஆகியவற்றை அறிவதற்கான அவதானப் பரிசோதனை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

- அங்குணகொலபலஸ்ஸ பண்ணை வயலுக்கான உவர்த் தன்மை வரைபட அபிவிருத்திக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தற்காலிக வரைபடம் ஒன்று பூரணப்பட்டுள்ளது.

- வேறுபட்ட மண் சீராக்கிகளை இடுவதன் மூலம் நீர் கொள்ளும் திறனை விருத்தி செய்வதற்கான ஆய்வு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதன் வேலைகள் இன்னும் தொடர்கின்றது.

- மேற்பரப்பு நீர்ப்பாசனத்தில் உத்தம பாத்தியின் பருமனைக் கண்டறிவதற்கான பரிசோதனை ஒன்று இலங்கையின் உலர் வலயங்களின் பல்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (NARP நிகழ்ச்சி திட்டம்)

உணவு விஞ்ஞானம்

- புளி வாழையில் இருந்து தேனைப் பிரித்தெடுப் பதற்கான முறைகள் வெற்றிகரமாகப் பரிசோதிக் கப்பட்டுள்ளன.

- சிபாரிசு செய்யப்பட்ட பாசிப் பயறு வர்க்கங்கள் மற்றும் உன்னத தெரிவுகள் ஆகியவற்றின் போசணைத் தன்மையை மதிப்பிடுதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

நோயியல்

- Sclerotium rolfsii இணை Trichuderma harsinia வைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்துவதற்குரிய

சிறந்த முறை ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கான பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. நடுகைக்கு முன்பான விதை மற்றும் மண் பரிகரணங்கள் வினைத்திறனுடையனவாகக் காணப்பட்டன. (NARP நிகழ்ச்சி திட்டம்)

- நிலக்கடலையில் Sclerotium rolfsii யைக் கட்டுப்படுத்துவதற்கு, தாவரப் பாகங்களின் செயற்றிறன் பற்றிய கற்கை ஒன்று நடாத்தப் பட்டது. இதில் Mikania cordata வின் இலை யினை, பயிர் நடுகைக்கு முன்பு மண்ணுடன் கலந்த போது குறைவான நோய்த் தாக்கங் களைக் காட்டியமை கண்டறியப்பட்டுள்ளது.

பூச்சியியல்

- பாசிப் பயறு மஞ்சள் சித்திரவடிவ வைரசு நோயினை முகாமைத்துவம் செய்வதற்கான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தயோமெத்தொக்சாம் பாவனையுடன் பத்து நாள் இடை வெளியில் Buprefezin பாவனையைக் கொண்ட விதைப் பரிகரணப் பொதியானது வினைத்திறனுடையதாகக் காணப்பட்டது. அத்து டன் தினைப் பயிர்ச் செய்கையுடன் கூடிய ஊடு பயிர்ச் செய்கையுடன் இணைந்த மஞ்சள் நிற ஒட்டும் தன்மையுடைய பொறிகளின் நிர்மாணமும் உயர் வினைத்திறனுடையதாகக் காணப்பட்டது.

- கடுகுச் செய்கையில் பிரதான பீடைகளையும், அவற்றின் தாக்கத்தின் அளவுகளையும் இனங்காண்பதற்கான பரிசோதனைகள் தொடங்க ப்பட்டன.

- தண்டு மற்றும் வேர் அழுகல் நோயைச் சகித்து வளரக் கூடிய 2 எள்ளுத் தெரிவுகள் தெரிதல் முறையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளன.

களை விஞ்ஞானம்

நிலக்கடலைப் பயிர்ச் செய்கையில் பயிருக்கும் களைக்கும் இடையிலான அவதிப் போட்டிக் கால மானது நடுகையின் பின்பு 3 – 8 வாரமாகக் காணப்படுகின்றது.

தொழில்நுட்ப இடமாற்றம் மற்றும் பயிற்சி

- பாரிய வயல் விழா ஒன்று 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

- பின்வரும் தலைப்புகளில் வானொலி நிகழ்ச்சி கள் நடாத்தப்பட்டன.

(அ) பீடை நாசினிகளைப் பாதுகாப்பாகக் கையாழுதல் மற்றும் மிளகாய்ச் செய்கையில் நோய் பீடைக் கட்டுபாடு.

(ஆ) எண்ணெய்ப் பயிர்களின் முக்கியத்துவமும், அவற்றின் எதிர் காலமும்.

(இ) நமது நாட்டில் எள்ளு மற்றும் நிலக்கடலைப் பயிர்ச் செய்கை.

- பின்வரும் விடயங்களில் பயிற்சிகள் இடம் பெற்றன.

(அ) தொழில் நுட்ப அலுவலர்களுக்கான புள்ளி விபரவியல் பகுப்பாய்வு

(ஆ) எண்ணெய்ப் பயிர் மற்றும் அவரைத் தானியப் பயிர்ச் செய்கை (இது விவசாயப் பாட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது)

(இ) தென் மாகாணத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர்களுக்கான மறுவயற் பயிர்கள் தொடர்பான பயிற்சி

(ஈ) அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்காக எள்ளு மற்றும் நிலக்கடலைச் செய்கை தொடர்பான பயிற்சி

வழங்கப்பட்ட சேவைகள்

பசளை சிபாரிசுக்காக 350 மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அத்துடன் பின்வரும் சேவைகளும் வழங்கப்பட்டன.

(அ) விவசாயிகளுக்கான ஆலோசனை சேவை

(ஆ) பயிர்ச் சிகிச்சைகள்

(இ) விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி

விதை உற்பத்தி

அட்டவணை 1.1.1.2 2012ல் விதை உற்பத்தி

பயிர்	விதை நடுகை நோக்கம் (Kg)	நுகர்வு (Kg)
நிலக்கடலை	4431	-
எள்ளு	1849	787
கௌபி	771.5	-
உழுந்து	215	-
பாசிப்பயறு	95	-
நெல்	34553	16594
தினை	-	51

2013 ற்கான திட்டம்

தாவர இனவிருத்தி – எண்ணெய் விதைப் பயிர்கள்

நிலக்கடலை

- நிலக்கடலை வர்க்கங்களில் கலப்பினப் பிறப்பாக்கமும் தெரிவும்
- முதற் கட்ட விளைச்சல் பரிசோதனைகள்
  - பெரிய விதையுடைய நிலக்கடலை வர்க்கங்கள்.
  - நடுத்தர வயதுடைய நிலக்கடலை வர்க்கங்கள்.
- வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகள் (VAT)
  - நிலக்கடலையில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி (வளவ, இந்தி, டிக்கிரி மற்றும் திஸ்ஸ ஆகிய வர்க்கங்களில்)
  - நான்கு உன்னத நிலக்கடலைத் தெரிவு களில் விதைப் பெருக்கம்.

எள்ளு

- மூலவுயிருரு மதிப்பீடு
- எள்ளு வர்க்கங்களின் கலப்பினப் பிறப்பாக்கமும் தெரிவும்
- கறுப்பு நிற விதையுடைய எள்ளில் முதற் கட்ட விளைச்சல் பரிசோதனைகள்
- மாலீ மற்றும் உமா ஆகிய எள்ளு வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி

கடுகு

- தேர்வு செய்யப்பட்ட கடுகுத் தெரிவுகளில் விதைப் பெருக்கம்

தாவர இனவிருத்தி – அவரைத் தானியங்கள்

பாசிப்பயறு

- பாசிப் பயறு வர்க்கங்களின் கலப்பினப் பிறப்பாக்கம் மற்றும் தெரிவு
- தேர்வு செய்யப்பட்ட ஏககாலத்தில் முதிர்வடை யும் பாசிப் பயறு வர்க்கத் தெரிவகளில் முதற் கட்ட விளைச்சல் பரிசோதனைகள் (PYT)
- தேர்வு செய்யப்பட்ட பாசிப்பயறு வர்க்கங்களில் பாரிய விளைச்சல் பரிசோதனைகள் (MYT)
- சிபாரிசு செய்யப்பட்ட பாசிப்பயறு வர்க்கங்களில் விதைப் பெருக்கம்
- தேர்வு செய்யப்பட்ட பாசிப் பயறு வர்க்கத் தெரிவுகளில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகள் (NCVT)
- தேர்வு செய்யப்பட்ட பாசிப் பயறு வர்க்கத் தெரிவுகளில் வர்க்க இசைவாக்கச் சோதனை கள் (VAT)

கௌபி

- விளைச்சல் மற்றும் நோய் பீடைத் தாக்கங்களைச் சகித்து வளரக் கூடிய கௌபி மூலவுயிருருக்களின் மதிப்பீடு

- தேர்வு செய்யப்பட்ட நடுத்தர வயதுடைய கௌபி தெரிவுகளில் பாரிய விளைச்சல் பரிசோதனைகள் (MYT)
- தேர்வு செய்யப்பட்ட நடுத்தர வயதுடைய கௌபி தெரிவுகளில் முதற்கட்ட விளைச்சல் பரிசோதனைகள்
- சிறந்த தாவரக் கட்டமைப்பு உடையதும், குறுகிய / நடுத்தர வயதுடையதும் (60 – 75 நாட்கள்) உயர் விளைச்சலைத் தருவதுமான கௌபி வர்க்கங்களின் அபிவிருத்தி (F_5 மற்றும் F_6 சந்ததிகளின் மதிப்பீடு)
- பெரும் போகத்தில் மழையை நம்பிப் பயிருடுவதற்கான நடுத்தர வயதுடைய கௌபி வர்க்கங்களில் கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி
- பரிந்துரைக்கப்பட்ட கௌபி தெரிவுகளில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை களின் ஊடான விதைப் பெருக்கம்

கொள்ளு

- கொள்ளுப் பயிரில் மூலவுயிருரு மதிப்பீடு
- பரிந்துரைக்கப்பட்ட கொள்ளுத் தெரிவுகளில் NCVT யின் கீழான விதைப் பெருக்கம்

பயிராக்கவியல்

- புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட கௌபி வர்க்கங்களில் பயிர் அடர்த்தியின் பெறுபேற்றை உறுதிப்படுத்துவதற்காக விவசாயிகளின் வயல்களில் செய்து காட்டல் சோதனைகளை நடாத்துதல்
- கடுகுப் பயிரின் செயற்றிறனில் நடுகை அடர்த்தி யின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
- பாசிப்பயறு, கொள்ளு, சோயா அவரை மற்றும் கௌபி ஆகியவற்றில் தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட வர்க்கப் பரிசோதனைகள் (NCVT)
- மழையை நம்பிச் செய்கைப்பண்ணப்படும் கௌபியின் நிலைபேறான தன்மையில் உள்ளக மழைநீர் அறுவடையின் தாக்கம்
- தென்பகுதி உலர் வலயங்களில் (DL_5 , DLIb) மழையை நம்பிய விவசாயத் தொகுதிகளில் ஆய்வுத் தரவுகளின் பகுப்பாய்வு
- எள்ளிற்கான உத்தம நடுகைக் காலத்தைக் கண்டறிதல்

களை விஞ்ஞானம்

- நிலக்கடலையின் விளைச்சலில் களைகளின் தாக்கம் மற்றும் பயிர்களை ஆகியவற்றிற் இடையிலான அவதிப் போட்டிக் கால எல்லையைத் தீர்மானித்தல் தொடர்பான கற்கை

மண் விஞ்ஞானம்

- கலப்பின வர்க்கச் சோளமான சம்பத்தின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் நைதரசன் மற்றும் நாகம் என்பவற்றின் தாக்கம்.
- நிலக்கடலையில் வேறுபட்ட கந்தக மூலங்களின் தாக்கம்.
- நைதரசன் பதித்தல் மற்றும் பொசுபரசு கரைதலடைதல் ஆகியவற்றுக்கான உயிர் வளமாக்கிகளுக்கான பரிசோதனை
- புதிதாக விடுவிக்கப்பட்ட நிலக்கடலை வர்க்கமான "அங்கி" இல் நைதரசனின் துலங்கல்

நீர் முகாமைத்துவம்

- இலங்கையின் பல்வேறு உலர் வலய மண்ணில் வெவ்வேறு மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகளுக் கான உத்தம பாத்திகளின் பருமனைத் தீர்மானித்தல் (NARP செயற்திட்டம்)
- இலங்கையின் விவசாய சூழலியல் பிரதேசங்களான DL_5 மற்றும் DL_{Ib} ஆகிய வற்றில் பாசிப்பயறுச் செய்கைக்கான பயிரின் நீர்த்தேவை மற்றும் பயிர்க் குணகம் என்பவற்றைத் தீர்மானித்தல்
- அங்குணகொலபலஸ்ஸ பண்ணை வயலுக்கான மண் உலர்த்தன்மை வரைபடத்தை அபிவிருத்தி செய்தல்.

உயிர்த் தொழில்நுட்பம்

- பியுசாரியம் வாடல் நோய்க்கு எதிர்ப்பு / சகிப்புத் தன்மையுடைய வாழைகளின் ஆய்வு கூட விகாரப் பிறப்பாக்கம் (Mutagenesis)

- தும்பையில் (Momordica dioica) பொருத்தமான நுண் பிறப்பாக்க நுட்பம் ஒன்றின் அபிவிருத்தி

நோயியல்

- விவசாயிகளின் வயல்களில் Sclerotium rolfsii ஐ Trichoderma harsiana வைக் கொண்டு கட்டுப்படுத்துவதற்கான சிறந்த முறை ஒன்றை இனங்காணல்

- விவசாயிகளின் வயலில் நிலக்கடலைச் செய்கையில் Sclerotium rolfsii ஐ கட்டுப்படுத்து வதற்குத் தாவரப் பிரித்தெடுப்பின் செயற்றிறன் பற்றிய கற்கை

- எள்ளில் தண்டு வேர் அழுகல் நோய்க் கெதிரான தெரிவுகளைத் தேர்வு செய்தல்

பூச்சியியல்

- பாசிப்பயறில் மொசைக் வைரசின் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதற்குப் பொருத்தமான முகாமைத் துவப் பொதி ஒன்றை அடையாளம் காணல்

- பாசிப்பயறில் மொசைக் வைரசின் தாக்கங் களைக் குறைப்பதற்கான வேறுபட்ட ஒருங்கி ணைந்த நுட்பங்களின் விளைவினை ஒப்பிடல்

- பாசிப்பயறில் மொசைக் வைரசு சகிப்பத் தன்மையுடைய மூலவுயிருருக்களின் தெரிவு

- பிராந்தியத்திற்குரிய தாவரங்களின் பல்வகைமை யை அடையாளங் காணல்

- கடுகுச் செய்கையுடன் தொடர்புடைய முக்கிய பீடைகளைக் வினைத்திறனாகக் கட்டுப்படுத்துவ தற்கான பொதி ஒன்றை விருத்தி செய்தல்

- களஞ்சியப்படுத்தல் நிலமைகளின் கீழ் Callosobruchus maculates பீடையைக் கட்டுப் படுத்தும் உத்தம வெப்ப அல்லது குளிர் தகைப்பு நிலமைகளை இனங்காணல்

உணவுத் தொழில் நுட்பமும் விஞ்ஞானமும்

- இலங்கையில் செய்கை பண்ணப்படுகின்ற பாசிப் பயறு வர்க்கங்களின் போசணைத் தன்மையின் மதிப்பீடு

- புளி வாழைகளில் தேன் பிரித்தெடுப்பு முறை ஒன்றை விருத்தி செய்தல்

மரக்கறிப் பிரிவு

- சிபாரிசு செய்யப்பட்ட தும்பை வர்க்கங்களின் பெண் பெற்றோர் தொகுதியின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு

- தும்பை மூலவுயிருருக்களின் பாதுகாப்பும் பராமரிப்பும்

- சிபாரிசு செய்யப்பட்ட தும்பை வர்க்கங்களில் நடுகைப் பொருள் உற்பத்தி

- பூசணியில் மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் தெரிவு

- கலப்பின வெண்டி வர்க்க அபிவிருத்தி நிகழ்ச்சி

- பூசணியில் கலப்பின அபிவிருத்தி நிகழ்ச்சி

- பூசணியில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

- தென் பிராந்தியத்தில் பருவமல்லாத காலங் களில் பெரிய வெங்காயச் செய்கைக்கான வர்க்க மதிப்பீடு

பழப் பயிர்ப் பிரிவு

- தேசி, விளா, மாதுளை, வாழை, கொய்யா மற்றும் வத்தகை ஆகியவற்றில் சேகரிப்பு, நிர்மாணம் மற்றும் மதிப்பீடு

- ரத்னா வர்க்கப் பப்பாசியில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- நாடளாவிய ரீதியில் நடைபெறும் இழைய வளர்ப்பு இனவிருத்தி நிகழ்ச்சிக்காக நோய்க ளற்ற தாய்த் தாவரங்களை உற்பத்தி செய்வதற் குரிய தனிமைப்படுத்தப்பட்ட வாழைத் தோட்டத் தின் நிர்மாணம்

- உயர் விளைச்சல் மற்றும் சிறந்த தரம் ஆகிய இயல்புகளைக் கொண்டதும் வளையப் புள்ளி வைரசுக்கு எதிர்ப்புடையதுமான பப்பாசி வர்க்கங்களின் விருத்தி

வெளிநாட்டுப் பயிற்சிகள்

- திருமதி W.M.P.N டிலுக்சா (ஆராய்ச்சி அலுவலர்) சீனாவில் நடைபெற்ற வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளுக்கான எண்ணெய்ப் பயிர்கள் புரிந்துணர்வு தொழில்நுட்பம் தொடர் பான பயிற்சி

- திரு. காமினி அபேயவிக்கிரம (ஆராய்ச்சி அலுவலர்) சீனாவில் நடைபெற்ற வளர்ச்சி யடைந்து வரும் நாடுகளுக்கான எண்ணெய்ப் பயிர்கள் புரிந்துணர்வு தொழில்நுட்பம் தொடர் பான பயிற்சி

அலுவலர் பட்டியல்

GLORDC அங்குணகொலபலஸ்ஸ

பதவி	எண்ணிக்கை
1. மேலதிகப்பணிப்பாளர்	01
2. ஆராய்ச்சி அலுவலர்	14
3. பொருளியலாளர்	01
4. பண்ணை முகாமையாளர்	01
5. ஆராய்ச்சி உதவியாளர்	16
6. விவசாயப் போதனாசிரியர்	07
7. ஆராய்ச்சி துணை உதவியாளர்	05
8. நிருவாக உத்தியோகத்தர்	01
9. முகாமைத்துவ உதவியாளர்	05
10. உழவு இயந்திர இயக்குனர்	02
11. சாரதி	05
12. குழாய் பொருத்துனர்	01
13. காவலாளி	14
14. தொழிலாளி (நிரந்தரம்)	45
15. தொழிலாளி (அமையம்)	120
மொத்தம்	**238**

ARS, வீரவில

பதவி	எண்ணிக்கை
1. ஆராய்ச்சி அலுவலர் - நிலைய பொறுப்பதிகாரி	01
2. ஆராய்ச்சி உதவியாளர்	02
3. பண்ணை எழுதுவினைஞர்	01
4. சாரதி	01
5. காவலாளி	02
6. தொழிலாளி (நிரந்தரம்)	11
7. தொழிலாளி (அமையம்)	06
மொத்தம்	**24**

1.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), அரலகன்வில

அரலகன்வில பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது இப்பிராந்தியத்தில் உள்ள மகாவலி B,C,D,G ஆகிய வலயங்களுக்கும், கிழக்குமாகாணம் மற்றும் மாகாணங்களுக் கிடைப்பட்ட பிரதேசங்களுக்கும் பொருத்தமான தொழில்நுட்பங்களை விருத்தி செய்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகக் காணப்படுகின்றது. பிராந்திய நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக தேசிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் இந்நிலையம் இணைந்து செயற்படுகின்றது. இந்நிலையமானது மறுவயற்பயிர்களின் ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நிருவாக ரீதியில் பொறுப்பாக இருப்பினும் பழங்கள், மரக்கறிப்பயிர், நெற்பயிர் ஆகியவற்றுடனும் ஓரளவு ஈடுபாட்டினைக் கொண்டுள்ளது. பூச்சியியல், பயிராக்கவியல், பிறப்புரிமையியலும் தாவர இனங்கலப்பும், தாவர நோயியல், பூங்கனியியல், மண்-நீர் முகாமைத்துவம் ஆகிய வேறுப்பட்ட துறைகளில் இந்நிலையத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் கவனம் செலுத்து கின்றது.

பாதீடு

அட்டவணை 1.1.2.1: வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு
மீண்டு வரும் செலவு	9,848,439	9,153,653
மூலதனம்	5,138,000	2,919,007
செயற்திட்டங்கள்		
பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சி	7,500,000	4,370,000
பப்பாசி உற்பத்தியாளர் விதை நிகழ்ச்சி	300,000	281,000
வாழை (NARP)	50,000	48,000
நீர் முகாமைத்துவம் (NARP)	1,140,000	1,071,919
மொத்தம்	**13,976,439**	**17,843,579**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

நெல்

பத்தலகொட RRDI உடன் இணைந்து சகல வயது வகுப்புகளிலும் (4- 4½ மாதங்கள், 3½ மாதங்கள், 3 மாதங்கள்) தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகள் (NCRVT) மேற்கொள்ளப் பட்டன.

அரலகன்வில RARDC யில் கல்சியமல்லாத கபில மண்ணில் (NCB) வெள்ளப்படுத்திய நிலமையில் கீழும், ஒன்றுவிட்ட முறையிலான ஈரமாக்கல் மற்றும் உலரவிடல் நிலமையின் கீழுமாக 22 நெல் வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன.

மேற்படி நீர்ப்பாசனப் பரிசோதனையுடன் களையகற்றிய மற்றும் களை அகற்றாத இரு பரிகரணங்களும் பரீட்சிக்கப்பட்டன. Bg 366 எனும் வர்க்கம் உயர்விளைச்சலை (5.72 தொன்/ஹெக்) ஒன்றுவிட்ட முறையிலான உலரவிடல் மற்றும் ஈரமாக்கல் நிலமைகளின் கீழ் வர்க்க விளைவாகக் கொடுத்தது. ஒன்றுவிட்ட முறையிலான ஈரமாக்கல் மற்றும் உலரவிடல் நிலமையுடன் களைகள் அற்ற நிலமையில் Bg 300 உயர் விளைச்சலைத் தந்தது (6.50 தொன்/ஹெக்). Bg 07-2828, Bg 358, Bg 366, Ld 8-15-30, Bg 10-1399, Bg 10-2907, Ld 6-7-8 ஆகிய பேதங்கள் கிட்டத்தட்ட 05 தொன் / ஹெக் விளைவைத் தந்தன. எனினும் ஒன்றுவிட்ட முறையிலான ஈரமாக்கல் மற்றும் உலரவிடல் நிலமையுடன் களைகள் உள்ள போது Bg 366 உயர் விளைவைக் கொடுத்தது. Bg 10-1407, Bg 07-2828, Bg 357, At 08-563 ஆகியன தேசிய சராசரி விளைச்சலிலும் பார்க்கக்கூடிய விளைவைத் தந்தன. அவை முறையே 5.48, 5.11, 5.00, 4.55 தொன்/ஹெக் ஆகும்.

களைகள் இல்லாத மற்றும் வெள்ளப்படுத்திய நீர்ப்பாசனம் ஆகிய நிலமைகளில் Ld 8-15-15 தவிர்ந்த ஏனைய வர்க்கங்கள் அனைத்தும் 05 தொன்/ஹெக் இலும் கூடிய விளைவைச் தந்தன. மிகக் கூடிய விளைவினை Bg 300 வர்க்கம் தந்தது. (9.85 தொன்/ஹெக்). மேலும் வெள்ளப்படுத்திய நீர்ப்பாசனம் மற்றும் களைகள் உள்ள நிலமைகளில் Ld 3-12-50, Ld 8-15-30 ஆகிய இரு வர்க்கங்களும் உயர் விளைவைக் காட்டியது. Bg 250, Bg 357, Bg 2828, Bg 359, Bg 358 ஆகிய வர்க்கங்கள் முறையே 7.64, 7.62, 7.58, 7.57, 7.54 தொன்/ஹெக் தானிய விளைவைத் தந்தன.

இரு நீர்ப்பாசன நிலமைகளின் கீழும் Bg 357, Bg 2828 ஆகிய இரு வர்க்கங்களும் ஹெக்ரயர் ஒன்றிற்கு ஐந்து தொன்னிலும் பார்க்க அதிக விளைச்சலைக் காட்டியது. எனவே Bg 2828 வர்க்கமானது அனைத்து நிலமைகளிலும் சிறந்த பெறுபேற்றினைத் தரும் வர்க்கமாத் திகழ்ந்தது.

சோளம்

அடிக்கட்டுப் பசளையாகவும், விதைத்து நான்கு வாரங்களின் பின்புமாக இரண்டு தடவை பசளைப் பிரயோகத்தின் தாக்கமானது “சம்பத்” சோள வர்க்கத்தில் பரிசோதிக்கப்பட்டது. இங்கு நைதரசன் பசளையானது மூன்று வேறுபட்ட அளவுகளிலும் (150, 225, 300Kg/ha) பொட்டாசியமானது நான்கு வேறுபட்ட அளவுகளிலும் (15, 30, 45, 60 Kg/ha K_2O) பிரயோகிக்கப்பட்டது.

நைதரசன் அளவுகளான 225 Kg/ha, 300 Kg/ha என்பன அதிக விளைச்சலைக் காட்டியது. 45 Kg/ha என்ற அளவிலான பொட்டாசியப் பிரயோகத்தில் குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்பு காணப்பட்டது. பொட்டாசியம், நைதரசன் ஆகியவற்றின் இடைத்தாக்கமானது சோளத்தின் விளைச்சலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காண்பிக்கவில்லை. எனினும் 45 Kg/ha K_2O உடன் 225 Kg/ha என்ற அளவில் நைதரசன் பிரயோகித்த சோளமும், 300Kg/ha என்ற அளவு நைதரசனுடன் 15 Kg/ha K_2O பிரயோகித்த சோளமும் முறையே

4.45, 4.47 தொன்/ ஹெக் என்ற அளவில் உற்பத்தியைக் காட்டியது.

பிறப்புரிமையியலும் தாவர இனங்கலப்பும்

சின்ன வெங்காயம்

- உருபவியல் இயல்புகளுக்கமைய 34 சின்ன வெங்காயத் வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஆறு வம்சாவழிகள் ஆரம்ப விளைவுப் பரிசோத னைக்காகத் (PVT) தெரிவு செய்யப்பட்டன. பதினொரு வம்சாவழிகள் பூக்கும் வகைக்காகவும், ஆறு வம்சாவழிகள் குறுகிய கால வயது டையதாகவும் தெரிவு செய்யப்பட்டன. இரண்டு பரிசோதனைகளுடன் நான்கு பதிவுகள் 3 இடங்களில் NCVT சோதனைகளாக மேற்கொள் ளப்பட்டன.

கௌபி

- தவள எனும் கௌபீ வர்க்கத்தில் இருந்து உத்தரவாத தரமுடைய நடுகைப் பொருளாக 107Kg உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

குறைந்தளவிலான பயன்பாடுடைய பயிர்கள்

சுண்டங்கத்தரி

- உத்தரவாத தரமுடைய நடுகைப் பொருள் உற்பத்திக்காக பரம்பரை அலகு வங்கி பராமரிக்கப்பட்டதோடு 1Kg உற்பத்தியாளர் விதையும் உற்பத்தி செய்யப்பட்டது.

தும்பை (Spine gourd)

- புதிய தெரிவுகள் தற்போதுள்ள பரம்பரை அலகு வங்கிக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது காணப்படுகின்ற மூலவுயிருருக்களுடன் தரம், வெப்ப சகிப்புத் தன்மை ஆகியவற்றுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன.

- உள்ளூர், வெளியூர் நடுகை வர்க்கங்களைப் பயன்படுத்தி ஓர் கலப்பின விருத்தி நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது காணப்படுகின்ற வர்க்கங்களில் இருந்து தரமான நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விருப்புடைய விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

கறிவேப்பிலை

- வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவதற்கான உயர் தரமுடைய வர்க்கங்களைத் தெரிவு செய்வதற்காக கறிவேப்பிலை மூலவுயிருருத் தேர்வு ஆரம்பிக்கப் பட்டு அவை பராமரிக்கப் படுகின்றன.

பூங்கனியியல்

வாழை

- சீனி வாழை தொகுதிக்குரிய எழு தெரிவுகளின் மதிப்பீடுகள் யூலை 2011 இல் ஆரம்பிக்கப்பட்டு ள்ளதுடன் இது அடுத்த ஆறு பருவங்களுக்குத் தொடரப்படவுள்ளது.

பப்பாசி

- ரத்னா வர்க்கத்தில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி ஆரம்பக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு கிலோகிராம் உற்பத்தியாளர் விதை, உற்பத்தி செய்யப்பட்டு மேலதிக பெருக்கத்திற்காக விதை மற்றும் நடுகைப் பொருள் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மா

- அரலகன்வில RARDC இன் களப் பரம்பரை யலகு வங்கியில் பத்து உன்னதமான மாமரத் தெரிவுகள் பராமரிக்கப்பட்டு, வர்க்க விருத்தி நிகழ்ச்சிக்காக வளர்ச்சி மற்றும் இனவிருத்தி தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

வற்றாளை

- தெரிவு செய்யப்பட்ட புதிய 4 வற்றாளை வம்சாவழிகள் இரு சோதனை வர்க்கங்களுடன் மூன்று தரம் மீண்டும் திகழ்கின்ற வகையில்

RCBD ல் பரிசோதிக்கப்பட்டன. இவற்றுள் சில 2.5 மாதத்திற்கும் குறைவான வர்க்கங்களாகவும் ஏனையவை 3.5 மாத வர்க்கங்களாகவும் காணப்பட்டன. உற்பத்தித் தரவுகளின் படி 2.5 மாத வயதுடைய மலேசியன் வர்க்கம் அதிக விளைச்சலைப் பதிவாக்கியதுடன் (22.6 தொன்/ ஹெக்) HORD C -5 எனும் வர்க்கம் மிகக் குறைவான விளைவைப் பதிவு செய்தது.

தாவர நோயியல்

சின்ன வெங்காயம்

- சின்ன வெங்காயத்தில் குமிழ் அழுகல் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வினைத் திறனான பங்கசு நாசினி மற்றும் குமிழ் பரிகரண காலத்தின் தாக்கம் என்பன தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அரலகன்வில, தின்னவேலி ஆகிய இடங்களில் இணைந்த நிகழ்ச்சியாக ஆய்வு ஒன்று இரண்டு பருவங்களிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது. வினைத்திறனான பரிகரணம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- பிராந்திய வாரியாக நோய் தாக்கங்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய சிறந்த சின்ன வெங்காய வர்க்கத்தைத் தெரிவு செய்வதற்காக ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அரலகன்வில, கிளிநொச்சி, கல்பிட்டி ஆகிய இடங்களில் ஓர் இணைந்த நிகழ்ச்சியாக இரு பருவங்களிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது. சிறந்த வர்க்கங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

- விதை நடுகை மற்றும் குமிழ் நடுகை மூலம் செய்கை பண்ணப்பட்ட சின்ன வெங்காயத் தோட்டங்களில் வேறுபட்ட சேதனப் பசளை மட்டங்கள் நோய்த் தாக்கங்களில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக ஒரு கற்கை மேற்கொள்ளப்பட்டது. இது இரண்டு பருவங்களிலும் அரலகன்விலவில் ஓர் ஆய்வாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. சிறந்த சேதனப் பசளை மட்டங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளது.

பூச்சியியல்

சுண்டங்கத்தரி

சுண்டங்கத்தரியில் கத்தரி வன் தண்டு துளைப்பான் (Euzofera ferticella) பீடையைக் கட்டுப்படுத்துவ தற்காக ஓர் கற்கை மேற்கொள்ளப்பட்டது. இங்கு பயிர் 2.5 – 3 மாத வயதாகக் காணப்படும் போதே தாக்கம் ஆரம்பிப்பதாகவும், பயிர் சிறிதாக உள்ள போது பயிரின் அடியில் இருந்து தாக்கம் தொடங்குவதாகவும் அறிய முடிந்தது. ஆரம்ப நிலைத் தாக்கங்களை பயிரின் அடிப்பகுதியில் உலர்ந்த களைகள் போன்ற பௌதீகத் தடைகளை இடுவதன் மூலம் கட்டுபடுத்தக் கூடியதாகவுள்ளது. நுளம்பு வலைகள், கறுப்பு நிற பொலித்தீன், பொலித்தீன் பைகள் போன்றன பௌதீகத் தடைகள் போன்று வெற்றிகரமாகச் செயற்படவில்லை. ஆனால் நப்தலின் உருண்டைகள் தண்டுகளில் தொங்கவிடும் பரிசோதனை மீண்டும் மேற்கொள்ளப்பட முடியும்.

கிழக்கிலங்கையின் உலர் வலயத்தில் பழப் பயிர்களுடனும், பராம்பரியமற்ற மரக்கறிப் பயிர்களுடனும் தொடர்புடைய இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள் மகரந்தச் சேர்க்கையாளர்கள் போன்ற பீடைகள் தொடர்பில் ஒரு கற்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது பின்வரும் பீடைகள் இனங்காணப்பட்டன. வன் தண்டு துளைப்பான் (Euzotera ferticella), தண்டு, காய் துளைப்பான் (Leucinodes orbonalis) எபிலக்கணா வண்டு (Epilachna Sp.) இலைத் தத்திகள் (Amrascs devastans) மரத் தத்தி, அழுக்கணவன் (Aphis gossipi) கப்சிட் மூட்டுப்பூச்சி (Helopeletis annotoni) லேஸ் சிறகு மூட்டுப் பூச்சி (Urentiuss echinus), நிசாறா மூட்டுப்பூச்சி (Nizara viridula), பருத்தி வெண்மூட்டுப்பூச்சி (Phenococcus solenopsis), மற்றும் இரு வேறு இனங்கள், சிற்றுண்ணிகள் (Teteanychus Sp.) இரு செதில் இனங்கள் என்பனவாகும்.

மண் மற்றும் நீர் முகாமைத்துவம்

மண் விஞ்ஞானம்

1W / CPW விகித முறையைப் பயன்படுத்தி நீர்ப்பாசன நீர்த் தேவையைத் தீர்மானித்தல்

அரலகன்வில RARDC இல் 2012 சிறுபோகக் காலத்தில் நீர்ப்பாசனப் பரிகரணங்கள் ஏழு (1W/CPW = 0.25, 0.5, 0.75, 1, 1.25, 1.5, 1.75) ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. உயர் பயிர் வளர்ச்சியும் விளைச்சலும் 1W/CPW = 2.5 எனும் பரிகரணத்தில் கிடைக்கப் பெற்றதை பெறுபேறுகள் தெளிவு படுத்தின. எனினும் 1W/CPW = 2.5, 0.3 ஆகியவற்றிற்கிடையே குறிப்பிடத்தக்க அளவில் விளைச்சல் வேறுபாடு காணப்படவில்லை.

கல்சியமல்லாத கபில மண்ணில் (NCB) வேறுபட்ட சேதனப் பசளைப் பிரயோகத்தின் கீழ் பாசிப்பயறில் தாவரப் போசணை உள்ளெடுத்தெலுக்கும் உலர் திணிவு உற்பத்திக்குமிடையிலான தொடர்பு.

பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம், அரலகன்விலவில், கல்சியமல்லாத கபில மண்ணில் வேறுபட்ட சேதனப் பசளைப் பிரயோகத்தின் கீழ் மண் போசணை உள்ளெடுத்தெலுக்கும் உலர் திணிவு உற்பத்திக்குமிடையிலான தொடர்பை அறிவதற்கான பரிசோதனை ஒன்று பாசிப்பயறில் (Vigna radiate(L) Wilczek) மேற்கொள்ளப்பட்டது. சீமைக்கிளுவை (Gliricidia Sepium), இபில்இபில் (Leucaena leucocephala), கினிப்புல் (Panicum marcimum) வைக்கோல், மாட்டெரு, கோழிக்கூட்டுக் கனகூழம் மற்றும் கூட்டெரு ஆகிய சேதனப் பசளைகள் 10 தொன்/ஹெக் எனும் அளவில் இடப்பட்டு எழுந்தமானமான பூரண தொகுதி வடிவமைப்பில் (RCBD) மூன்று தடவைகள் மீண்டும் திகழ்கின்ற வகையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சேதனப் பசளை சிதை வடைகின்ற மற்றும் போசணைகள் விடுவிக்கப் படுகின்ற வீதத்தை அறிவதற்காக லிற்றர் பை தொழில்நுட்பம் கடைப் பிடிக்கப்பட்டது. ஒவ்வொரு துண்டத்திலும் எட்டு லிற்றர் பைகள் வைக்கப்பட்டு கற்கை மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு துண்டத்தில் இருந்தும் வாரம் ஒன்றுக்கு ஒரு பை வீதம் எட்டு வாரங்களுக்குப் பரீட்சிக்கப்பட்டது. சீமைக்கிழுவையானது (6.745g / வாரம் என்ற உக்கலடையும் வீதத்தையும், அரை ஆயுளுக்கு 3.74 வாரத்தையும்) உயர் சிதவடையும் வீதத்தையும் குறைவான அரை ஆயுளையும் பதிவு செய்தது. எனினும் இடப்பட்டு ஒரு வாரத்தின் பின்பு கினிப் புல்லானது அதிகளவில் K மற்றும் N விடுவிக்கும் வீதத்தைக் காட்டியது. அதே வேளை வைக்கோலானது உயர்ந்தளவில் P விடுவிக்கும் வீதத்தைக் காட்டியது. சீமைக்கிழுவையில் அதிகளவில் N மீதமாகவும் (0.83%) அதேவேளை கோழிக்கூட்டுக் கனகூழத்தில் அதிகளவில் (0.009%), பொசுபரசும் கினிப்புல்லில் அதிகளவான பொட்டாசியமும் மீதமாகக் காணப்படுவதாகப் பதிவாகியது. இந்தப் பதிவானது இடப்பட்டு எட்டு வாரங்களின் பின்பு பெறப்பட்டதாகும். பறவைக் கூட்டு கனகூழம் இடப்பட்ட பாசிப் பயறானது மிக உயரமான பயிர்களையும் (29.50cm), தாவரம் ஒன்றில் அதிகளவில் இலைகளையும் (13.167) அதிக விளைச்சலையும் காட்டியது. எனினும் வேறு சில சேதனப் பசளைகளும் உயர் சிதைவடைதல், விரைவான போசணை விடுவித்தலைக் காட்டிய போதும் இவை பாசிப்பயறின் விளைச்சலிலோ, வளர்ச்சியிலோ குறிப்பிடக் கூடிய தாக்கத்தைக் காண்பிக்கவில்லை.

மண்ணிற்கான சேதனப் பசளைப் பிரயோகமானது மண்ணின் pH, மின் கடத்துதிறன் (EC), சேதனப் பதார்த்தங்களின் அளவு, மொத்த N, கிடைக்கக் கூடிய P, பரிமாற்றம் செய்யக்கூடிய K ஆகியவற்றின் அளவுகளை அதிகரித்திருந்தது. பறவைக் கூட்டுக் கனகூழம் இடப்பட்ட துண்டங்களிலேயே அதிகளவான மொத்த N, கிடைக்கக்கூடிய P, மற்றும் பரிமாற்றம் செய்யக்கூடிய K காணப்பட்டது. பாசிப் பயறு பயிர்ச் செய்கையில் பறவைக் கூட்டுக் கனகூழப் பிரயோகமானது மண் வளத்தை விருத்தி செய்து பயிரின் வளர்ச்சியையும் விளைச்சலையும் அதிகரிக்கும் என்பது மேற்படி பரிசோதனை மூலம் தெளிவாகின்றது.

நீர் முகாமைத்துவம்

கல்சியமல்லாத கபில மண்ணில் மண்ணரிப்பு, மேற்பரப்பு நீரோட்ட உருவாக்கம். பயிர் விளைச்சல் போன்றவற்றில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தாக்கம் பற்றிய ஒரு மதிப்பீடு RARDC, அரலகன்விலவில் மேற்கொள்ளப்பட்டது. மேற்பரப்பு நீரோட்ட உருவாக்கம் ஒரு ஹெக்டயருக்கு $2973m^3$ ஆகக் காணப்பட்டதுடன், வெண்டியை தனிப் பயிராகச் செய்கை பண்ணிய போது இது குறிப்பிடத்தக்களவு உயர்வாகவும் காணப்பட்டது. சமவுயரக் கோட்டுக் கால்வாய் பரிகரணங்களில் மண்ணரிப்பு அதிகமாகக் காணப்பட்டது (6தொன்/ஹெக்). ஏனைய பொறிமுறையிலான மண் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது மொத்த மண்ணரிப்பு, மொத்த மேற்பரப்பு நீரோட்டம் போன்றவற்றைக் கட்டுபடுத்துவதில் பயிராக்கவியல் நடவடிக்கைகள் வினைத்திறனுடன் காணப்படுகின் றமை மேற்படி பரிசோதனை மூலம் முடிவாகின்றது.

கல்சியமல்லாத கபில மண்ணில் நெற் செய்கைக்கான நீர்த் தேவையைக் குறைப்பதற்காக களை நாசினிகளின் பிரயோகத்துடனான வெவ்வேறு நீர்முகாமைத்துவ முறைகளின் தாக்கத்தைத் தீர்மானித்தல்; நிரம்பிய நிலை, வன்மை நிலை வரையும் 5cm உயரம் வரை நீர்மட்டம், சுழற்சி முறை நீர்ப்பாசனம் (ஒரு நீர்ப்பாசனத்தின் போது 5cm உயரத்திற்கு நீர் மட்டம்) ஆகிய நீர்ப் பரீகரணங்களுடன் களை நாசினி அற்ற நிலை (பூச்சியம்), களை நாசினிகள் (3.4 DPA, MCPA) களை நாசினி (GUAL) ஆகிய பிரயோகங்களும் அமைந்திருந்தன. விளைச்சலானது 5cm + 3,4 DPA / MCPA மற்றும் 5cm சுழற்சிமுறை 3.4 DPA, MCPA சேர்க்கைகளில் உயர்வாகக் காணப்பட்டது.

கல்சியமல்லாத கபில மண்ணில் மேற்பரப்பு நீர்ப்பாசனத்தில் உத்தம பாத்திகளின் பருமனைத் தீர்மானிப்பதற்கான பரிசோதனை ஒன்று NARP திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சீரான தன்மை, மட்டப்படுத்தல் அளவு, நீர்ப்பாசன வினைத்திறன் என்பன பரிசோதனையின் போது கணிப்பிடப்பட்டன.

அறிவிருத்தி நடவடிக்கைகள்

ரகன் பழம்

- இவ்வருடம் முழுவதும் வயல்களில் நிர்மாணிப்ப தற்காகச் சாடிகளில் இடப்பட்ட 250 தாவரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தும்பை (Spine gourd)

- தாய்த்தாவரங்களாக நிர்மாணிப்பதற்காக சாடி களில் இடப்பட்ட 500 கொடிகள் பகிர்ந்தளிக்கப் பட்டன.

சுட்டங்கத்தரி

- நாடு முழுவதும் உள்ள விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க "பிந்து" எனும் வர்க்கத்தின் 200g உற்பத்தியாளர் விதை விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

பயிற்சிப் பட்டறை

- ஆராய்ச்சி அடைவுகளின் 30 வருடப் பூர்த்தியைக் கொண்டாடும் முகமாக ஆராய்ச்சி மீள்நோக்குப் பயிற்சிப் பட்டறை ஒன்று RARDC அரலகன்வில வில் இடம் பெற்றது.

கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள்.

சின்ன வெங்காய இணைப்பு நிகழ்ச்சி – 2012

- சின்ன வெங்காயச் செய்கை மற்றும் சின்ன வெங்காயச் செய்கையில் நோய் முகாமைத் துவம் தொடர்பிலான விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி ஒன்று நாடு முழுவதும் நடாத்தப்பட்டது. இதன் போது அலுவலர்களும், விவசாயிகளுமாக அண்ணளவாக 750 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

பல்கலைகழக மாணவர்களின் ஆராய்ச்சிகளின் மேற்பார்வை

- ரஜரட்டைப் பல்கலைகழகத்தில் கல்வி பயிலும் இரண்டு இறுதியாண்டு மாணவர்களின் பட்டப் படிப்பு கல்வி நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகக் காணப்படும் தனிப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. அவையாவன: ''சோளத்தின் வளர்ச்சியில் N மற்றும் K ஆகிய பசளை வீதங்கள் ஏற்படுத்தும் தாக்கம்'' மற்றும் ''இலங்கையின் வெவ்வேறு உலர் வலய மண் வகைகளுக்குரிய பல்வேறு மேற்பரப்பு நீர்ப்பாசன முறைகளுக்கான பாத்தியின் பருமனைத் தீர்மானித்தல்'' என்பனவாகும்.

தொழில் நுட்ப அறிவுப் பரம்பல்

துண்டுப் பிரசுரங்கள்

வெங்காயம்

- வெங்காய நோய்கள் எனும் துண்டுப் பிரசுரம் விவசாயத் திணைக்கள பிரசுரப் பிரிவினால் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்க ப்பட்டது.

பயிற்சிகளும் வயல் விழாக்களும்

பயிற்சி நிகழ்ச்சிகள்

- விவசாய உத்தியோகத்தர்கள், கள உதவி யாளர்கள், விவசாயிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன.

பயிர் சிகிச்சை

- இச்சிகிச்சை நிகழ்ச்சிகளில் உத்தியோகத்தர்கள் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். இவை தவிர மண் விஞ்ஞானம், பூச்சியியல், நோயியல் தொடர்பிலான வயல் பிரச்சினைகளுக்கான தொழில் நுட்பத் தீர்வுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மாகாண மற்றும் மகாவலி தொழில்நுட்பக் குழு கூட்டங்கள்

- மகாவலி B, C மற்றும் G வலயங்களுக்கு இரு பருவங்களுக்குமான தயார்படுத்தல் கூட்டங்களு க்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன. கிழக்கு, சப்பிரகமுவ, தெற்கு மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மாகாண தொழில்நுட்பக் குழுக் கூட்டங்களிலும் எமது உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.
- குறிப்பாக மகாவலி B மற்றும் C வலயங்களில் உள்ள விவசாயிகளின் வயல் பிரச்சினைகளுக் குரிய தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்கப்பட்டன. களங்களைச் சென்று பார்த்தல் மற்றும் மாதிரிகளின் பகுப்பாய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் இவை அமைந்திருந்தன.

சேவைகள்

மண் பரிசோதனை

- இந்நிலையத்தில் 820 மண் மாதிரிகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு, அதன் அடிப்படை யில் சிபாரிசுகளும் வழங்கப்பட்டன.

2013 ற்கான திட்டங்கள்

பயிராக்கவியல்

வெங்காயம்

- சின்ன வெங்காயத்தில் பூத்தூண்டலுக்கான குறைந்த செலவுடைய முறையைக் கண்டு பிடித்தல்

பிறப்புரிமையியலும் தாவர இனங்கலப்பும்

வெங்காயம்:-

- மூலவுயிருருக்களை இயல்பாக்கம் செய்தல்
- சின்ன வெங்காயத்தில் நோய் மற்றும் பீடைகளுக்கு எதிர்ப்புடைய வர்க்கங்களை விருத்தி செய்தல்

- சின்ன வெங்காயத்தில் பூக்கும் வகை மற்றும் பூக்காத வகை வர்க்கங்களை விருத்தி செய்தல்
- சின்ன வெங்காயத்தில் தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட வர்க்கப் பரிசோதனை (NCVT)
- சின்ன வெங்காயத்தில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை (VAT)

தும்பை

- கலப்பினவிருத்தி மற்றும் தெரிவு நிகழ்ச்சிகள்
- உற்பத்தியாளர் விதை உற்பத்தி

சுண்டங்கத்தரி

- உற்பத்தியாளர் விதை உற்பத்தி

குறைந்த பாவனையுடைய பயிர்கள்

கறிவேப்பிலை

- மூலவுயிருருக்களை வயலில் நிர்மாணித்தலும், பதிப்பீட்டைத் தொடங்குதலும்

பாசிப்பயறு

- FCRDI இனால் ஒருங்கிணைக்கப்படுகின்ற NCVT

கௌபி

- தவள வர்க்கத்தில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- GLORDC இனால் ஒருங்கிணைக்கப்படுகின்ற NCVT

கொள்ளு

- GLORDC இனால் ஒருங்கிணைக்கப்படுகின்ற NCVT
- பிரதேசத்திற்குரிய வர்க்க அபிவிருத்தியின் ஆரம்பம்

பூங்கனியியல்

வாழை

- வாழையில் NCVT நிகழ்ச்சியின் தொடர்ச்சி

பப்பாசி

- ரத்னா வர்க்கத்தில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி

வற்றாளை

- வர்க்கங்களின் செயற்திறனை மதிப்பீடு செய்வதற்கான NCVT நிகழ்ச்சி

இனிப்புத் தோடை

- வெவ்வேறான நடுகை இடைவெளியில் நடப்பட்ட பல்வேறு இனிப்புத் தோடை வர்க்கங்களின் செயற்திறன்

விளாம் பழம்

- வேறுபட்ட நடுகை இடைவெளி மற்றும் கத்தரித்தல் முறைகளில் விளாம் பழங்களின் செயற்திறன்

கத்தரி

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை NCVT

பாகல்

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை NCVT

கெக்கரி

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை NCVT

பூசணி

- இசைவாக்கப் பரிசோதனை

தாவரநோயியல்

சின்னவெங்காயம்

- சின்ன வெங்காயத்தில் ஏற்படும் பங்கசு குமிழ் அழுகலைக் கட்டுப்படுத்துவதற்குரிய வினைத் திறனான பங்கசு நாசினி மற்றும் குமிழ் பரிகரிப்புக் காலம் ஆகியவற்றின் தாக்கம்
- பிரதேசத்திற்குரிய நோய்த் தாக்கங்களுக் கெதிரான சிறந்த சின்ன வெங்காய வர்க்கங்களைத் தெரிவு செய்தல்
- குமிழ் மற்றும் விதை மூலம் செய்கைப் பண்ணப்பட்ட சின்ன வெங்காயத்தில் வெவ்வேறான சேதனப் பசளை மட்டங்களில் நோய் தாக்கங்களின் விளைவு
- விதை நடுகை சின்ன வெங்காயச் செய்கையில் வெவ்வேறான நாற்று மேடை முறைகளின் மதிப்பீடு
- விவசாயப் பிரதேசங்களில் பயன்படும் விவசாய இரசாயனங்கள் பற்றிய சமூக மற்றும் தொழில்நுட்ப நோக்கு
- மறுவயற் பயிர்களில் (OFC) நோய்களை இனங்காணலும், கட்டுபாட்டு முறைகளை அறிதலும்.

மண் மற்றும் நீர் முகாமைத்துவம்

சின்ன வெங்காயம்

- உலர் பிரதேச மண்ணில் வளர்கின்ற சின்ன வெங்காயத்தின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் நீர்ப்பாசன இடை வெளியின் தாக்கம் (NARP செயற்திட்டம்)
- சின்ன வெங்காயச் செய்கையில் நுண் தூவல் நீர்ப்பாசனத்தின் மதிப்பீடு (NARP செயற்திட்டம்)

மிளகாய்

- மிளகாய் செய்கையில் துளி (சொட்டு) நீர்ப்பாசனத்தில் பசளைப் பாசனம் பற்றிய கற்கை
- வெலிக்கந்த மண் தொடரில் பயிர்ப் பொருத்தத் தன்மை வரைபடமிடல் (விடய ஆய்வு)
- மண்ணரிப்பு, மேற்பரப்பு நீரோட்ட உருவாக்கம் மற்றும் பயிர் விளைச்சலில் பயிராக்கவியல் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளின் மதிப்பீடு. இது இலங்கையின் தாழ் நில உலர் வலயப் பிரதேசங்களுக்கான ஒரு விடய ஆய்வு.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
1. ஆராய்ச்சி அலுவலர் (SLAgS)	08
2. பண்ணை முகாமையாளர்	01
3. ஆராய்ச்சி உதவியாளர்	07
4. விவசாயப் போதனாசிரியர்	03
5. பதில் நிர்வாக உத்தியோகத்தர்	01
6. முகாமைத்துவ உதவியாளர்	02
7. களஞ்சியப் காப்பாளர் (MA)	01
8. சாரதி	05
9. மின்னியலாளர்	01
10. காவலாளி	12
11. உழுவு இயந்திரம் இயக்குனர்	03
12. தச்சர்	02
13. கொல்லர்	01
14. மேசன்	01
15. சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
16. தாவர ஒட்டுனர்	01
17. தொழிலாளி	30
18. அமைய ஊழியர்	50
மொத்தம்	**130**

1.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), வட பிராந்தியம் - கிளிநொச்சி

வட பிராந்திய விவசாய சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான செயற் பாடுகள் அனைத்தும் கிளிநொச்சியில் அமைந்து ள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நிலையத்தின் செயற்பாடுகள் கடந்த 20 வருடங்களாக மந்த நிலையில் இருந்த போதிலும், சமாதானத்தின் பின்பு இச்செயற்பாடு கள் உத்வேகமடைந்துள்ளன.

இந்நிலையம் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களில் உப நிலையங்களை கொண்டுள்ளது. இவை அனைத்தும் மகா இலுப்பள்ளமவில் உள்ள வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை இப்பிராந்தியத்தில் பொருளாதார முக்கியத்துவமுடைய நெல் மற்றும் வயற் பயிர்கள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுகின்றன. மேலும், பூங்கனியியல் பயிர்களின் அபிவிருத்தி யிலும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

முல்லைத்தீவு தவிர்ந்த மற்றைய நிலையங்கள் தற்சமயம் செயற்பாட்டில் உள்ளன. முல்லைத்தீவில் விவசாய ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கு, தனியார் ஸ்தாபனம் ஒன்றினால் 5 ஹெக்டயர் நிலம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்நிலம் விவசாய நிலையம் அமைப்பதற்கு பொருத்தமற்றதாக இருந்தமை யாலும், மனிதவளம் குறைவாக இருந்தமை யாலும் இந்நிலையம் அமைக்கப்படவில்லை. இருந்த போதிலும், பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் - கிளிநொச்சி, விவசாய ஆராய்ச்சி நிலையம் - தின்னவேலி, விவசாய ஆராய்ச்சி நிலையம் - வவுனியா, நெல் ஆராய்ச்சி நிலையம் - பரந்தன், நெல் ஆராய்ச்சி நிலையம் - முருங்கன் என்பவற்றில் ஆராய்ச்சி, அபிவிருத்தி செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

விவசாய அமைச்சின் விசேட திட்டத்தின் கீழ் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிளிநொச்சி மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம்- பரந்தன் என்பவற்றில் கட்டிடம், உள்ளக வீதிகள், வேலிகள் என்பன அமைக்கப் பட்டுள்ளன.

பாதீடு

வெவ்வேறு செலவு தலைப்புகளில் ஒதுக்கப்பட்டதும், செலவிடப்பட்டதுமான தொகை கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1.3.1 வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவு தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவிடப்பட்ட தொகை	செலவு வீதம்
நடைமுறை கணக்கு	4,984,000	4,899,129	98
மூலதனக் கணக்கு	2,830,000	2,581,025	91
செயற்திட்டங்கள்			
பண்ணை அபிவிருத்தித் திட்டம்	1,650,000	1,369,714	83
மொத்தம்	**9,464,000**	**8,849,867**	**94**

முன்னேற்றம்

பயிர் மேம்பாடு

சின்னவெங்காயம்

சலாது வகை சின்ன வெங்காய வர்க்கம் தின்னவேலி சிவப்பு, பக்கப்பரவலுக்காக அதன் இனப்பெருக்க விதை 320Kg உற்பத்தி செய்யப் பட்டது.

மூன்று பெருக்கவகை (Multiplier) கலப்பின வர்க்கங்கள் அதன் அதிக விளைச்சல் மற்றும் நல்ல இயல்புகளுக்காக தெரிவு செய்யப்பட் டுள்ளது.

மூன்று பெருக்க வகை இனப்பெருக்க வம்சாவழிகள் TMV–1, TMV–2, TMV–4 என்பன தெரிவு செய்யப்பட்டு தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் (NCVT) சேர்க்கப் பட்டன.

NCVT – நிகழ்ச்சி

ARS தின்னவேலி மற்றும் RAADC அரலகன்வில ஆகிய நிலையங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இனவிருத்தி வம்சாவழிகள் ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது. இரண்டு பெருக்கவகை வம்சாவழிகள் (ARS தின்னவேலியில் இருந்து தெரிவு செய்யப்பட்டவை) TMV–1, TMV–2, ஆகியன ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை யில் இணைக்கப்பட்டன.

மூன்று பெருக்கவகை கலப்பின வெங்காய வர்க்கங்கள் பராமரிக்கப்பட்டன.

மிளகாய்

MI-1, KA-2 ஆகிய ஒப்பீட்டு வர்க்கங்களுடன் 6 மிளகாய் இனப்பெருக்க வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டன. ICPL – 18-7 வம்சாவழி ஆகக்கூடிய பச்சை மிளகாய் விளைச்சலான 28t/ha உற்பத்தி செய்த போதிலும், இதன் இயல்புகள் கறிமிளகாயை ஒத்திருப்பதனால் இவ்வம்சாவழி பச்சை மிளகாய் உற்பத்திக்கோ, காய்ந்த மிளகாய் உற்பத்திக்கோ உகந்ததல்ல. இரண்டு வம்சாவழிகள் TVC-4, TVC-5 (ARS தின்னவேலியில் இருந்து தெரிவு செய்யப் பட்டவை) என்பன அதிக விளைச்சலாக முறையே 15.3, 14t/ha பச்சை மிளகாயை உற்பத்தி செய்தன.

உழுந்து

33 வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டு நல்ல இயல்புகளை உடைய 6 வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. இவை அதிக விளைச்சலையும், YMV எதிர்ப்புத் தன்மையுடைய வர்க்கங்களை உருவாக்குவதற்காக கலப்பினத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

நிலக்கடலை

பிராந்தியத்திற்கு உகந்ததான, கூடிய விளைச்சல் தரக்கூடிய வர்க்கங்களை உருவாக்குவதற்காக 6 பிராந்திய மற்றும் 20 PGRC சேகரிப்புகள் பரிசோதிக்கப்பட்டன.

பீர்க்கு

ஏழு இனப்பெருக்க வம்சாவழிகளான 10020xIn 17, 10656x9895, In 19,2338x10014, La 33xTD, Naga LA33 பரிசோதிக்கபட்டு இதில் Naga கூடிய விளைச்சலை (33.9t/ha) கொடுத்தது அறியப்பட்டது.

உருளைக்கிழங்கு

ஒரு மதிப்பிட்டுப் பரிசோதனையில் Arnova, Cal White, Red Lassoda, Zafira, Rodoph என்பன மதிப்பிடப்பட்டன. இதில் Cal White உம் Red Lassoda என்பன உயர் விளைச்சலை கொடுத்தன. அதிகூடிய விளைச்சலான 1030 g/ தாவரம் Cal White இனால் உற்பத்தி செய்யப் பட்டது.

பாசிப்பயறு

MIMB-901, MIMB-902 MIMB-903, MIMB-904, MIMB-905, MIMB-906, MIMB-907, MI6, MI5, ARI என்பன பரிசோதிக்கப்பட்டன. MIMB-904 கூடிய விளைச்சலை கொடுத்தது. சிறு போகத்தில் 14 வம்சாவழிகள் பரிசோதிக்கப் பட்டதில் MIMB-901 அதிக விளைச்சல் கொடுத்தது.

நிலக்கடலை

ICGV 01276, ICGV86590, சிவப்பு திஸ்ஸ, இந்தி திஸ்ஸ ஆகியன பரிசோதிக்கப்பட்டன. வர்க்கம் திஸ்ஸ அதிக விளைச்சலை (3120Kg/ha) கொடுத்தது.

கடுகு

AP26, C108, C189, புத்தள (Buththala) (ஒப்பீட்டு வர்க்கம்) பரிசோதிக்கப்பட்டதில் வர்க்கம் புத்தள (Buththala) அதிக விளைச்சலான 810Kg/ha கொடுத்தது.

தக்காளி

வர்க்கங்கள் மகேசி (Maheshi), HF 03, ராஜித (Rajitha) MI121, MI127 என்பன மதிப்பிடப்பட்டன. பத்தியா (Bathiya) அதிக விளைச்சலை (18t/ha) கொடுத்தது.

கத்தரி

EGH5, EGH6, EGH7, EGH8 அமந்தா, அஞ்சலி, BW11 என்பன மதிப்பிடப்பட்டன. அஞ்சலி ARS தின்னவேலியில் கூடிய விளைச்சலையும் (10.5t/ha), ECH5 என்னும் வம்சாவழி ARS வவுனியாவில் கூடிய விளைச்சலையும் (54.42t/ha), வம்சாவழி EGH8, RARDC, கிளிநொச்சியில் கூடிய விளைச்ச லையும் (43t/ha) கொடுத்தன.

கறிமிளகாய்

HYW, 300xHYW, CA 8, 1782HYW என்பன மதிப்பிடப்பட்டுள்ளன. இதில் 1782HYW அதி கூடிய விளைச்சலான 10.5t/ha கொடுத்தது.

கௌபி

காலபோகத்தில் 9 வம்சாவழிகளும் 3 ஒப்பீட்டு வர்க்கங்களும் மதிப்பிடப்பட்ட போதிலும் இப்பரிசோதனை பாதகமான காலநிலையால் பாதிப்படைந்து விட்டது. ஆனால் சிறுபோகத்தில் 6 வம்சாவளிகளும், 3 ஒப்பீட்டு வர்க்கங்களும் மதிப்பிடப்பட்டதில் ANCH14 அதிக விளைச்சலை கொடுத்தது.

வற்றாளை

ஏழு இனப்பெருக்க வம்சாவழிகள் 2011/12 கால போகத்திலும், 2012 சிறுபோகத்திலும் மதிப்பிடப்பட்டன. மலேசியன் அதிகூடிய விளைச்சல் 30t/ha வை ARS, வவுனியாவிலும் 28t/ha வை RARDC, கிளிநொச்சியிலும் கொடுத்தன.

பயற்றை

ஐந்து குறுகிய கால, நீண்ட காய்களை கொண்ட வம்சாவழிகள் இரண்டு மதிப்பீட்டு வர்க்கங்களுடன் மதிப்பிடப்பட்டன. T39-2 எனும் வம்சாவழி அதி கூடிய விளைச்சலை (6.2t/ha) கொடுத்தது. இது மதிப்பீட்டு வர்க்கங்களான பொலன் மாயை விட மூன்று மடங்கு அதிகமாகவும், கவாரி மாயை விட பத்து மடங்கு அதிகமாகவும் இருந்தது குறிப்பிடத் தக்கது.

நெல்

வர்க்க இசைவாக்கப் பரிசோதனை, NCRVT, பல இடப் பரிசோதனை மற்றும் தொழில்நுட்ப இசைவாக்க பரிசோதனைகள்

2½, 3, 3½ மாத தொகுதிகள் RRS பரந்தன், ARS- வவுனியா, ARS- முருங்கன் ஆகிய

நிலையங்களில் நீர்ப்பாசனத்துடனும், மழையுட னும் பரிசோதிக்கப்பட்டன.

2½, 3, 3½, 4, 41/2 மாத தொகுதி இனப்பெருக்க வம்சாவழிகள் பரிசோதிக்கப்பட்டு அதன் பெறுபேறுகள் NCVT இணைப்பாளரிடம் அறிவிக்கப்பட்டன. 2012 சிறுபோக பரிசோதனை பாதகமான காலநிலையால் பாதிப்படைந்து விட்டது. 2½ மாத தொகுதியில் ஒப்பீட்டு வர்க்கம் Bg250 மற்ற வர்க்கங்களை விட சிறந்ததாக அவதானிக்கப்பட்டது. 3மாத தொகுதியில் Ld 762 அதிகூடிய விளைச்சலை (6.41t/ha) கொடுத்தது. At 08-593 வம்சாவழி, 3 மாத தொகுதியில் (இரண்டாவது) அதிக விளைச்சலை கொடுத்தது. 3½ மாத தொகுதியில் Bg 08-1258 அதிக விளைச்சலை (6.36t/ha) கொடுத்தது. 4 – 4 1/2 மாத தொகுதியில் இரண்டு வம்சாவழிகள் Bg10-551, Bg 08-1909 என்பன 7t/ha யை விட கூடிய விளைச்சலை கொடுத்தன.

பயிர் பாதுகாப்பு

பாசிப் பயறு – காய் துளைப்பான் பராமரிப்பு

நான்கு எல்லைப் பயிர்கள் பரிசோதிக்கப்பட்டன. ஆமணக்கு மற்றையவற்றை விட பாசிப்பயறில் காய் துளைப்பானை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயற்பட்டது.

வெப்பத்தை தாங்கி வளரும் உருளைக் கிழங்கு வர்க்கங்களில் நோய்த் தாக்கத்தை மதிப்பீடல் – யாழ்ப்பாண மாவட்டம்

அர்னோவா, கோல்டின் ஸ்ரார், AIDA, அற்லஸ் (Atlas), Cal white, Red lassoda, YP-03-107, Rossana என்பன மதிப்பிடப்பட்டன.

Cal white. Red lassoda ஆகியவற்றில் பின்கூற்று வெளிறல் நோயின் தாக்கம் குறைவாகும்.

சேதனப் பசளையைப் பாவிப்பதன் மூலம் வெங்காயத்தில் நோய் பராமரிப்பு

கோழிஉரம், ஆட்டெரு, மாட்டெரு, சீமைக் கிழுவை இலை, வேப்பிலை, அசேதன பங்கசு நாசினி கோமாய் (Homai) என்பன கட்டுப்படுத்தப்பட்ட பரிகரணத்துடன் பரிசோதிக்கப்பட்டன. கோழிஉரம் பாவிக்கும் போது குமிழ்களில் நோயின் தாக்கம் குறைவாகவும், அதிகூடிய சந்தை விளைச்சலை யும் கொடுத்தது.

வெங்காய நோய்களுக்கு எதிராக சேதன பங்கசு நாசினிகளை மதிப்பீடல்

வேப்பம் விதை நீர் பரித்தெடுப்பு, வெள்ளைப் பூண்டு வடி, சீமைக்கிழுவை இலை, குளோரோத லோனில் இரசாயனம் (Cholorothalonil) என்பன கட்டுப்படுத்தப்பட்ட பரிகரணத்துடன் பரிசோதிக்கப் பட்டன. குளோரோதலோனில் பாவித்ததில் நோயின் தாக்கம் குறைவாக இருந்ததோடு அது கூடிய சந்தை விளைச்சலையும் கொடுத்தது. இருந்த போதும் இது மற்றைய பரிகரணங்க ளுடன் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை கொண்டிருக்கவில்லை

வெங்காய குமிழ் அழுகல் நோய் பராமரிப்பில் பங்கசு நாசினிகளினதும் அதன் பரிகரணக் காலத்திடையதும் தாக்கம்

ஐந்து பங்கசு நாசினிகள் கப்ரான், திராம், புலுசினம் (Fluzinom) தயேபினேற் மீதைல் 50% உடன் திராம் 30% WP ரிபோகொனாசோல் 250m/l (Tebuconazole 250 ml/l) என்பன ஐந்து பரிகரண நேரத்துடன் 30 நிமிடங்கள், 1 மணித்தியாலம், 3 மணித்தியாலம், 6 மணித்தியாலம், 24 மணித்தியாலம், சேர்த்து பரிசோதிக்கப்பட்டன. தயோபினேற் மீதைல் 50% திராம் 30% பங்கசு நாசினி 30 நிமிட பரிகரணத்தின் போது குறைந்த குமிழ் அழுகல் ஏற்படுவது அவதானிக்கப்பட்டது.

பாகல் மஞ்சளாதல் ~ பராமரிப்பு

கோழிஉரம், கூட்டெரு, சிபாரிசு செய்யப்பட்ட NPK, சிபாரிசு செய்யப்பட்ட PK உடன் N அமோனியம் சல்பேற்றாக, சிபாரிசு செய்யப்பட்ட NPK உடன் 50g $MgSO_4$ கொடிக்கு அடியுரமாக 2&4 WAP என்பன கட்டுப்படுத்தப்பட்ட பரிகரணத்துடன் சேர்ந்து பரிசோதிக்கப்பட்டன.

சிபாரிசு செய்யப்பட்ட NPK உடன் 50g $MgS0_4$ கொடி அடியுரம், 2&4 WAP கூடிய விளைச்சலை கொடுத்ததுடன் (10.5t/ha) மஞ்சளாதலை பிற் போட்டது. இப்பரிசோதனை தொடர்கின்றது.

விதை உற்பத்தி

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பயிர்களின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 1.1.3.2 விதை உற்பத்தி (2012)

பயிர்	வர்க்கம்	அளவு
சோளம்	ரூவான்	250kg
குரக்கன்	ஒசாடா (Oshada)	300 kg
பயறு	MI6	65 kg
மிளகாய்	MI Green	1100Kg (காய்)

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

குறிக்கப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1.3.3 உற்பத்தியாளர் விதை உற்பத்தி 2012

பயிர்	வர்க்கம்	அளவு
பாகல்	தின்னவேலி வெள்ளை	10.6 kg
புடோல்	தின்னவேலி நீளம்	6 kg
கத்தரி	தின்னவேலி ஊதா	2 kg
தக்காளி	KC – 1	100 g

மண், நீர் முகாமைத்துவம்

- கிளிநொச்சி மாவட்டத்தில் உவர்த் தன்மையை அறிந்து கொள்ள பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து மண் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்டன.
- RARDC, கிளிநொச்சியில் நீர்ப்பாசன பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, 9 - 10 நாள் நீர்ப்பாசன இடைவெளி RYL மண்ணிற்கு சிறுபோகத்தில் சிறந்ததென அறியப்பட்டது.
- வவுனியா மாவட்டத்தில் மண் ஈரப்பதன் பரிசோதனைகள் Romote sensing ஐ பாவித்து மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் இம்மாவட்டத்தில் மண் ஈரப்பதன் சீர் செய்யப்பட முடியுமென அறியப்பட்டது.
- FAO திட்டத்தின் கீழ் 550 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. விவசாயிகளின் விவசாய நிலத்தில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளும் பரிசோதிக்கப்பட்டன.
- கிளிநொச்சியில் உள்ள அறிவியல் நகரில் புற்கள் மற்றும் பயிர்கள் வளர்ப்பதற்கு சிபாரிசு செய்வதற்காக மண் மாதிரிகள் பரிசேதிக்கப்பட்டன.
- கிளிநொச்சி DATC கிணற்றில் இருந்தும் கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் விவசாயிகளின் கிணறுகளில் இருந்தும் இருபது நீர் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ARS வவுனியாவில் பூசணி பயிர் செய்கையில் நீர்ப்பாதுகாப்பு பரிசோதனை முடியும் தருவாயில் உள்ளது.
- மண் போசனை படமாக்கல் திட்டத்திலும், NRMC நிலத்தடி நீர் தொடர்பான கற்கையிலும் பங்கு பற்றியுள்ளார்கள்.

மிளகாயில் ஒருங்கிணைந்த தாவர போசணை முறை (IPNS)

மிளகாய் செடிகள் சீமைக்கிழுவையின், நிரையான (Alley) பயிர்ச் செய்கையின் கீழ் வளர்க்கப்பட்டு அதன் பசுந்தாள் பசளை 25t/ha, 18.75t/ha, 12.5t/ha உடன் 50 & 75% அசேதனப் பசளை என்ற அடிப்படையில் மண்ணுடன் சேர்க்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட அசேதனப் பசளை 50 இருந்து 75% உடன் 50 தொடக்கம் 75% பசுந்தாள் பசளை சேர்த்து பாவித்த முறை கூடிய வளர்ச்சியையும், கூடிய விளைச்சலையும் கொடுத்தது.

சேதனப் பசளை உற்பத்தியும், அதன் பாவனையும்

இருபது தொன் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டு அவை 10Kg பக்கற்றுகளாக பொதி செய்யப்பட்டு 250 விவசாயிகளுக்கு உட் புகுத்தி யாக (Inoculum) கொடுக்கப்பட்டது. 30% கூட் டெரு பரிசோதனைகளுக்கு உபயேகிக்கப்பட்டது.

200Kg சணல் (Sunhemp) விதை உற்பத்தி செய்யப்பட்டது.

பசுந்தாள் பசளையாக பாவிப்பதற்கும், கூட்டெரு தயாரிப்பில் சேர்ப்பதற்கும் சீமைக்கிழுவை, இபில் இபில் என்பன வளர்க்கப்பட்டன.

மண், நீர் மாதிரிகள் பரிசோதனை

மண் நீர் மாதிரிகள் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு pH, EC என்பன பரிசோதிக்கப்பட்டு உவர்த்தன்மை திருத்தத்திற் கான அறிவுரைகள் விவசாயிகட்கு வழங்கப் பட்டன.

மண் மாதிரிகள் பெறப்பட்டு போசணை பரிசோதிக்கப்பட்டது.

வடமராச்சி விவசாயிகளின் குழாய் கிணற்றில் இருந்தும், கிளிநொச்சி DATC கிணற்றில் இருந்தும் நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு இவை நீர்ப்பாசனத்திற்கு உகந்ததா என அறியப்பட்டன.

பழப்பயிர் மூலவுயிருரூப் பராமரிப்பு

கீழ்வருவன பராமரிக்கப்படுகின்றன.

மா (3 விலாட், 3 கறுத்த கொழும்பான்), பலா (14 உள்ளூர்), வாழை (20 கதலி, கப்பல், மொந்தன், எம்பன், (சாம்பல், பச்சை), இதரை, கவின்டிஸ், தேசி உள்ளூர், தோடை பிபிலை, மாதுளை நிமாலி, தயா (மென்மையான விதை வர்க்கங்கள்)

500 மாதுளங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கிளிநொச்சியில் குடியேறிய விவசாயிகட்கு கொடுப்பதற்காக DD (Extension) இடம் ஒப்படை க்கப்பட்டன.

வழங்கப்பட்ட சேவைகள்

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் விரிவுரைகள் எடுத்தமை
- Oxfam மற்றும் செவாலங்கா திட்டங்களில் விரிவுரையாளராக ஆக செயற்பட்டமை
- Oxfam GB திட்டத்தின் கீழ் விவசாயிகளுடன் வயல்களுக்கு சென்றமை
- மண் மாதிரி சேகரிப்பதிலும், மண் பரிசோதனை அறிக்கை தயாரிப்பிலும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தமை
- விவசாயப் பாடசாலைகளில் மண் மாதிரி சேகரிப்பை பற்றிய பயிற்சிப் பட்டறை நடத்தியமை

கண்காட்சி

ஒட்டி சுட்டான் மகா வித்தியாலயத்தில் கண்காட்சி நடத்தப்பட்டது.

2013 இற்கான திட்டங்கள்

- சோயா இனப்பெருக்க வம்சாவழிகளுக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை (NCVT)

- நிலக்கடலை மூலவுயிருருக்களை மதிப்பிடல், தெரிதல், தூய்மைபடுத்துதல்.
- நிலக்கடலை வம்சாவழிகள் விதை உற்பத்தி
- நிலக்கடலையில் நம்பிக்கை தரக்கூடிய வம்சாவழிகளுக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை (NCVT)
- பயற்றைக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- கத்தரிக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- கறிமிளகாய்க்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- தக்காளிக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- கீரைக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- பீர்க்கிற்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை (NCVT)
- மா வர்க்கங்கள் பராமரிப்பு
- பப்பாசி கலப்பின வர்க்கம் மதிப்பீடு
- மிளகாயில் இலை சுருளல் சிக்கலில் நுண் காலநிலையின் (Micro claimate) தாக்கம்
- எருக்கலை இலைகளைப் பயன்படுத்தி நெல்லின் இலைமடிச்சி பராமரிப்பு
- நெல்லில் வெண்மூட்டுப் பூச்சிகளை ஒருங்கிணைந்த பீடை கட்டுப்பாட்டு முறையில் பராமரித்தல்
- களை நாசினிக்கு சைப்பிரஸ் இரியாவின் (Cyperug irio) எதிர்ப்புதன்மை மதிப்பிடல்
- காற்றுவாழ் நெல் வம்சாவழிகளின் மதிப்பிடல்
- மண் ஈரப்பதன் மதிப்பிடல்
- நில மேற்பரப்பு வெப்பநிலை (LST) வேறுபாடு
- மேற்பரப்பு மண் ஈரப்பதன் பற்றிய கற்கை
- மண் மாதிரிகள் பரிசோதனையும், போசணை யும்
- உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- நீரின் தர மதிப்பீடு
- பயிர் அபிவிருத்தி – மிளகாய்
- பயிர் அபிவிருத்தி – சின்ன வெங்காயம்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
RARDC கிளிநொச்சி	
பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	03
விவசாயப் போதனாசிரியர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	01
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
காவலாளி	01
வேலையாட்கள் (நிரந்தரம்)	26
ARS தின்னவேலி	
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	02
விவசாய போதனாசிரியர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	03
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
காவலாளி	01
நீர் இறைக்கும் இயந்திரம் இயக்குனர்	01
தொழிலாளி (நிரந்தரம்)	07
ARS வவுனியா	
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	01
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
ARS பரந்தன்	
ஆராய்ச்சி உதவியாளர்	01
வேலையாள் (நிரந்தரம்)	01
ARS முருங்கன்	
ஆராய்ச்சி உதவியாளர்	01
வேலையாள் (நிரந்தரம்)	01
மொத்தம்	**67**

1.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI), கன்னொறுவை

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளினூடாக தேசிய ரீதியில் பூங்கனியியல் பயிருற்பத்தியினை மேம்படுத்து வதற்கான அதிகாரம் பெற்றுள்ளது. இதன் அதிகாரத்திற்குட்பட்ட பயிர்கள்; மரக்கறி, பழ வகை, காளான், கிழங்குப் பயிர்கள் மற்றும் அலங்காரப் பயிர்கள் என்பனவாகும். ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமானது பிரதானமாக மேம் படுத்தப்பட்ட பூங்கனியியல் பயிர் வர்க்கங்கள், மேம்படுத்திய பயிருற்பத்தி மற்றும் முகாமை த்துவ நுட்பங்கள், தாவரப் போசணை முகாமை த்துவ நுட்பங்கள், நோய் பீடை முகாமைத்துவம், அறுவடைக்குப் பின்னான மற்றும் உணவுப் பதப்படுத்தும் முறைகள், நடுகைப் பொருளுற்பத்தி மற்றும் வீட்டுத் தோட்டம் ஆகியவற்றை நோக்காகக் கொண்டது.

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது பூங்கனியியல் பயிர்களில் உயரு ற்பத்தியுடைய, சூழல் நேயமான நிலைத்திரு க்கக் கூடிய பொருளாதார உறுதிப்பாடுடைய மற்றும் சமூக சமனிலைத் தன்மையானதும் உயர் கேள்வியுடையதுமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாகும். இதனால் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளானவை மேற்சொன்ன அதிகாரத்தை நிறைவேற்றுதலைக் குறிக்கோளாகக் கொண்டவை. இவற்றுடன் வேறு பொறுப்புக்களாக விவசாயிகளுக்கான பயிற்சிகள், விவசாயப் பட்டதாரி மற்றும் டிப்ளோமா மாணவர்களுக்கான பயிற்சி, விவசாயிகளிடத்தி லும் ஏனைய பங்குதாரர்களிடமும் புதிதாக விருத்தி செய்த நுட்பங் களை பரம்பலடையச் செய்வதற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் என்பவற்றையும் கொண்டது.

பாதீடு

அட்டவணை 1.2.1 – வருடாந்தப் பாதீடு – 2012 (ரூ)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனச் செலவு	22,102,908	18,377,145	83
மீண்டுவரும் செலவு	82,503,697	81,639,752	99
செயற்திட்டம்			
மரக்கறி மற்றும் பழவகைக்கான கலப்பின விதை உற்பத்தி	5,000,000	3,901,305	78
ANSOFT	1,150,000	919,451	80
பண்ணை விருத்தி	25,285,600	25,059,194	99
தேசிய விவசாயத்திற்கான ஆராய்ச்சி திட்டம் (NARP)	19,153,000	14,034,066	73
சர்வதேச விவசாயத்திற்கான கொரிய செயற்றிட்டம் (மரக்கறிச் செய்கை)	2,510,000	904,515	36
தாவர பிறப்புரிமை மூலவளத்திற்கான ஒருங்கிணைந்த முகாமைத்துவ தொகுதி	1,698,019	597,480	35
இழைய வளர்ப்பு	27,500,000	27,475,000	100
மொத்தம்	**190,030,724**	**146,583,760**	**77**

முன்னேற்றம்

செயற்றிட்டங்கள்

மரக்கறி மற்றும் பழங்களினது கலப்பின விதை உற்பத்தி

இந்நிகழ்ச்சியின் பிரதான செயற்பாடுகளாக உயர் தரமான மரக்கறி மற்றும் பழப்பயிர் களுக்கான கலப்பின விருத்திக்கான ஆராய்ச்சி, சிபாரிசு செய்யப்பட்ட பேதங்களுக்கான பெற்றோர் குலவகை முகாமை செய்தல் ஆகியனவாகும். அத்துடன் ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்ட கலப்பின விதையுற்பத்தியானது தக்காளி, கத்தரி, பீர்க்கு, கறிமிளகாய் கெக்கரி, பயற்றை, பாகல், மற்றும் (பழப்பயிர்கள்) பப்பாசி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டம் (NARP)

தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தின் (NARP) கீழ், 2012ம் ஆண்டுக்கென 09 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

புதிய மரக்கறி, பழவகை மற்றும் அலங்காரப் பயிர் வர்க்கங்களை விருத்தி செய்தல், உருளைக்கிழங்கு விதை உற்பத்தியில் தற்போதுள்ள நுட்பத்தினை மேம்படுத்தல் என்பவற்றுடன் பூங்கனியியல் பயிர்களினது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான பொருத்தமான பயிராக்கவியல் பொதிகள், நோய் பீடை முகாமைத்துவ பொதிகள் என்பவற்றை விருத்தி செய்தல் ஆகியவை இத்திட்டத்தினது நோக்கமாகும்.

ANSOFT திட்டம்

ஆசியாவில் பாரம்பரிய மற்றும் நிலைபேறான சிறியளவிலான சேதன விவசாயப் பண்ணைகளை மேம்படுத்துதலை இத்திட்டம் நோக்காக கொண்டது. இலங்கையில் சேதன விவசாய நடவடிக்கை களை வலுவூட்டுவதற்கென ANSOFT திட்டத்தின் கீழ் பணிக்குழுவொன்று உருவாக்கப்பட்டது. விவசாயிகளிடத்தில் தற்போதுள்ள சேதன விவசாய தொழிநுட்பங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கவும் தொகுக்கவும் அத்தியவசியமான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மரக்கறிப் பயிர்களில் நோய் பீடை முகாமைத்துவம், பயிருணவு முகாமைத்துவம் தொடர்பான புதிய தொழில்நுட்ப விருத்தியானது தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

பண்ணை அபிவிருத்தித் திட்டம்

தெரிவு செய்யப்பட்ட ஆராய்ச்சிப் பண்ணைகள்/ அலகுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தலை நோக்காகக் கொண்டு அவற்றினது உட் கட்டுமான வசதிகளைத் தரமுயர்த்துவதற்கென பண்ணை அபிவிருத்தி திட்டமானது ஆரம்பிக்கப் பட்டது. ஆரம்பக் கட்டத்தில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தல், பாதுகாப்பு வேலி அமைத்தல் மற்றும் வலையில்லங்கள் அமைத்தல் நடவடிக்கைகளுக்கென 12அலகுகள்/ ஆராய்ச்சி பண்ணைகள் தெரிவு செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, பயிரிடப்படாதிருந்த காணிகள் துப்பரவு செய்யப்பட்டு பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பண்ணையிலும் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. அத்துடன் நடுகைப் பொருளுற்பத்தியானது கீழ்வரும் அட்டவணையில் சாராம்சப் படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 1.2.2 பண்ணை அபிவிருத்தி திட்ட முன்னேற்றம்

ஆராய்ச்சிப் பிரிவு / பண்ணையின் பெயர்	உட்கட்டுமான வசதிகள் அபிவிருத்தி	நடுகைப் பொருள் உற்பத்தி
RARDC, பண்டாரவளை	வேலி அமைப்பு மற்றும் காணி துப்பரவு	சாடிகளில் மரக்கன்றுகள் -8365 (ஓரேஞ், மண்டரின்)
ARS, கிராந்துருகோட்டை	ஏலவே இருந்த நீர்ப்பாசன வாய்க் கால்கள் புனரமைப்பு	-
ARS, கல்பிட்டிய	நீர்ப்பாசன தொகுதி மேம்படுத்தல், வலையில்லம் நிருமாணம்	திராட்சை 4900- மாதுளை 13,870
ARS, எழுவன்குளம்	நீர்ப்பாசன தொகுதி மேம்படுத்தல், காணி துப்பரவு, வலையில்லம் நிருமாணம்	3500-மா ஒட்டுக் கட்டைகள் 100 தேசிக் கன்றுகள்
ARS, றகன்கல	-	மண்டரின் (ஒட்டப்பட்ட 2000) தோடை (ஒட்டப்பட்ட 2000) பியர்ஸ் (ஒட்டப்பட்ட 900)
ARS, முத்துக்கண்டிய	களத்தில் நீர்ப்பாசன தொகுதி உருவாக்கம்	தோடை (ஒட்டுக்கட்டை 2000) விளா (ஒட்டுக்கட்டை 250) தும்பை- 200 கொடிகள் சாடிகளில் நடுகை
ARS, மதுருகெட்டிய	நீர்ப்பாசன தொகுதி உருவாக்கம்	**ஒட்டப்பட்ட தாவரங்கள்** மா – 375, தோடை -600 விளா 200, தும்பை – 1200 **நாற்றுக்கள் / கன்றுகள்** தேசி – 980, காட்டு மா – 70 முள்அன்னாமுன்னா – 100, அன்னாசி- 400 மாதுளை – 75 **ஒட்டுக்கட்டை** மா – 1400, ஒரேஞ் - 1500 மா – 265, தேசி- 657, விளா- 76 தும்பை – 80 ஏனைய – 50
ARS, பிபிலை	பொலித்தீன் இல்ல நிருமாணம் களத்தில் நீர்ப்பாசன தொகுதி உருவாக்கம்	**தேசி** – ஒட்டுக்கன்று 1002, ஒட்டுக் கட்டை 2500 **மா -** ஒட்டுக்கன்று 485, தோடை - பிபிலை இனிப்பு – 500 மண்டரின் (மது 220)
ARS, எரமினிகொல்ல	சாடியிடும் இல்ல நிருமணம் காணி விருத்தி	**றம்புட்டான்**– ஒட்டுக்கன்று 1004, ஒட்டுக் கட்டை – 3000 **பலா-** ஒட்டுக் கன்று – 302 ஒட்டுக் கட்டை 500

HRF, அம்பதன்னை	நீர்ப்பாசன தொகுதி புனரமைப்பு வலையில்லம், தாவர இல்லம் நிருமாணம்	**ஒட்டப்பட்ட தாவரங்கள்** பலா – 1000, தூரியன் - 1000 தாமரங்காய் - 750, கொய்யா 500 **நாற்றுக்கள் / கன்றுகள்** பலா – 1500, தூரியன் - 1000 தாமரங்காய் - 500, கொய்யா 1500 றம்புட்டான் 2000, கொடித்தோடை 250, ஜம்பு 1000, வேர் விட்ட துண்டம்
HRF, உல்பொதகம	ஏலவே இருந்த நீர்ப்பாசன தொகுதி புனரமைப்பு, வலையில்லம் நிருமாணம்	மா ஒட்டுக்கன்று - 8962 ஒட்டுக்கட்டை - 6000 லெமன் - 300, தோடை ஒட்டுக்கட்டை 2500, காட்டுமா 140
HRF, வல்பிட்ட	நீர்ப்பாசன தொகுதி நிருமாணம் வலையில்லம் புனரமைப்பு	**றம்புட்டான்** - ஒட்டுக்கன்று 10245, ஒட்டுக்கட்டை – 1300 **மா** – ஒட்டுகன்று – 1352, ஒட்டுக்கட்டை – 2300 ஆனைக்கொய்யா- ஒட்டுகன்று 1186, **தூரியன் -** ஒட்டுகன்று 227 **ஏனைய-** ஒட்டுகன்று 190, ஒட்டுக்கட்டை – 500, லெமன் 911
HRF, பசியால	பொலித்தீன் வலையல்ல நிருமாணம் நீர்ப்பாசன தொகுதி விருத்தி	**றம்புட்டான் -** ஒட்டுக்கன்று 7400, ஒட்டுக்கட்டை – 10000 **மா** – ஒட்டுகன்று – 300, ஒட்டுக்கட்டை – 600, லெமன் 500 அன்னாசி – 1400, ஜம்பு – 25
HRF, வீரப்பன	வலையில்ல நிருமாணம் (30'x80') சாடியிடல் இல்ல நிருமாணம்	**றம்புட்டான்** - ஒட்டுக்கன்று 1445, ஒட்டுக்கட்டை – 3000 **தூரியன் -** ஒட்டுகன்று 250 **கொருத்தா-** ஒட்டுகட்டை 10000 ஒட்டுக்கன்று – 9500 மங்குஸ்தீன் ஒட்டுகன்று 1400 மண்டரின் ஒட்டுகன்று 305 ஒட்டுகட்டை 5000 ஜம்பு ஒட்டுகன்று 250, ஒட்டுகட்டை 1000, மா ஒட்டுகன்று 980, ஒட்டுகட்டை 3000

சர்வதேச விவசாயத்துக்குரிய கொரிய திட்டம் (KOPIA)

மரக்கறிச் செய்கைத் தொழில்நுட்பம்

இலங்கை மரக்கறிச் செய்கையில் ஒரு நீண்ட பாரம்பரியத்தை கொண்டிருப்பதுடன், விவசாயிக ளால் தற்போது பெரும் எண்ணிக்கையான உள்நாட்டில் மேம்படுத்தப்பட்ட மரக்கறி வர்க்கங்களும், அதே போல் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி வர்க்கங்களும் செய்கை பண்ணப்படுகின்றன. எவ்வாறாயிருப்பினும் விவசாயிகள் தற்போது பெறுகின்ற விளைச்சலுக்கும் பயிரின் சாத்தியமான விளைச்சலுக்குமிடையே ஒரு இடைவெளி காணப்படுகின்றது. உயர் விளைச்சல் கிடைக்கப்பெறும் நாடுகளினுடைய உயர் தொழில்நுட்பங்களினது பிரயோக ரீதியிலான செயன்முறைப் பயிற்சியின் மூலம் உள்நாட்டு விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளுக்கு அறிவினைப் பரம்பலடையச் செய்வதன் மூலம் இவ்விளைச்சல் இடைவெளியினை குறைக்க முடியும் என கருதப்படுகிறது.

KOPIA திட்டமானது மேம்படுத்திய மரக்கறி உற்பத்தி தொழில்நுட்பங்களினது பிரயோக ரீதியிலான செய்து காட்டல் மற்றும் பரீட்சிப்பு நடவடிக்கைகள் என்பவற்றுடன் உள் நாட்டில் செய்கை பண்ணப் பொருத்தப்பாடுடைய கொரிய நாட்டு மரக்கறிகளை அடையாளம் காணல் என்பவற்றை முனைப்பாக கொண்டது. இவற்றுடன் மரக்கறி உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றில் மனிதவள கொள்திறன் மேம்பாடு, மரக்கறி உற்பத்தியுடன் தொடர்பான ஆராய்ச்சிகளில் இலங்கை – கொரியா இடையிலான இணைச் செயற்பாடு களை வலுவூட்டல் என்பன இத்திட்டத்தினது ஏனைய பிற நோக்கங்களாகும்.

பசளை முகாமைத்துவம் (KOPIA)

பொருளாதார ரீதியில் பயனுறுதியுடையதும், சூழல் நேயமுடையதுமான பசளைப் பிரயோகம் தொடர்பான பிரயோக செய்து காட்டல்களை விவசாயிகளுக்கு வழங்கும் அடிப்படையில் KOPIA பசளை முகாமைத்துவ திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மண்ணில் மீதமாயுள்ள தாவரப் போசணையை பயன்படுத்தும் கொள்கை மற்றும் அவசியமற்ற விதத்தில் பசளை உள்ளீடு பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஆகியன இத்திட்டத்தின் மூலம் வெளிக்கொணர முனையும் இரு பிரதான விடயங்கள் ஆகும். இத்திட்டமானது பிரதான மூலகங்களினது பாவனையினது முக்கியத்து வங்களையும் அழுத்தமாக வெளிப்படுத்தும். இவற்றுடன் இத்திட்டமானது மனிதவள கொள்திறன், இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டு ஒத்துழைப்பு என்பவற்றை வலுவூட்டுவதிலும் கவனம் செலுத்தும்.

இழைய வளர்ப்பு

வாழை, அன்னாசி, விதை உருளைக்கிழங்கு, ஸ்டோபெரி மற்றும் அலங்கார தாவரங்கள் ஆகிய பூங்கனியியல் பயிர்களுடைய நடுகைப் பொருட்களுக்கான பெருகி வரும் கிராக்கியினை ஈடு செய்யவென ‘‘இழைய வளர்ப்பு நுட்பத்திற்கூடாக பொருளாதார முக்கியத்துவ முடைய பயிர்களின் தரமான நடுகைப் பொருள் உற்பத்தி’’ எனும் திட்டமானது 2011ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி யினை பத்து மடங்கினால் அதிகரிக்கக் கூடியளவுக்கு இழைய வளர்ப்பு ஆய்வு கூடங்கள் வசதியளிக்கப்பட்டதுடன் நவீன மயப்படுத்தப்பட்டன. ஏனைய உட்கட்டுமான வசதிகளான வலையில்லங்கள், பொலித்தீன் இல்லங்கள் என்பனவும் விருத்தி செய்யப்பட்டன.

மரக்கறிப் பிரிவு

பீடைகளுக்கான எதிர்ப்பினை உறுதி செய்த வண்ணம், தரமான உயர் விளைச்சல் தரக்கூடிய மரக்கறிப் பயிர் வர்க்கங்களை இனவிருத்தி செய்தலுடன் நிறுவனத்தின் மரக்கறிப் பிரிவானது பிரதானமாக ஈடுபட்டுள்ளது. கலப்பின மரக்கறிகளின் விருத்தி முதன்மையான விடயமாக உள்ள போதிலும் திறந்த மகரந்த சேர்க்கையடையும் வர்க்கங்கள் புறக்கணிக்கப்

படவில்லை. தேவைக்கேற்றபடி மரக்கறி செய்கையில் பயிராக்கவியல் கற்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அடிப்படை விதை உற்பத்தியுடன் மேலதிகமாக பல்வேறு வகைகளில் தொழிநுட்ப பரப்பல் அபிவிருத்தி நடவடிக்கைகளாக உள்வாங்கப்பட்டன.

கொடிப் பயற்றை

- ஐந்து உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட திறந்த மகரந்த சேர்க்கையுடைய கொடிப் பயற்றை வம்சாவழிகள் பல்வேறு ஆராய்ச்சி சூழல்களில் அவற்றின் உறுதித்தன்மை மதிப்பீடு செய்யப்பட்டது. அவற்றுள் நான்கு வம்சாவழிகள் உயர் விளைச்சல் (790 - 867 கிராம் /தாவரம்), கழுத்தழுகல் நோய்க்கு களத்தில் எதிர்ப்பு, விரைவான பூத்தல் மற்றும் காய்த்தல், சிறந்த வைத்திருத்தல் மற்றும் உண்ணல் தரங்கள் என்பவற்றை காட்டின. எதிர் வருகின்ற போகங்களில் வேறுபட்ட விவசாய சூழல் வலயங்களில் இவற்றினது இசைவாக்கச் சோதனைகள் மேற்கொள்ளப்படும்.
- உயர் விளைச்சல், கழுத்தழுகல் நோய்க்காக எதிர்ப்பு என்பவற்றைக் காட்டிய நான்கு திறந்த மகர்ந்த சேர்க்கையுடைய கொடிப் பயற்றை வர்க்கங்கள் அவற்றின் விளைச்சல், தரம் என்பவற்றின் அடிப்படையில் மேலதிக மதிப்பீடுகளுக்காக தெரிவு செய்யப்பட்டன.

பீர்க்கு:~

- உன்னத செயற்றிறனுடைய கலப்பினமும், ஒரு திறந்த மகரந்த சேர்க்கையடையும் வர்க்கமும் அடையாளங் காணப்பட்டன.

போஞ்சி மற்றும் சிறகவரை

- ஒரு போஞ்சி வர்க்கம் வர்க்க விடுவிக்கப் பட்டது. 28 தொன் / ஹெக்டயர் விளைச்சல் திறனுடைய HORDI - பச்சை வர்க்கம் விவசாயிகளுக்கென விடுவிக்கப்பட்டுள்ளது.
- உயர் விளைச்சலைக் காட்டிய ஒரு சிறகவரை மூலவுயிருரு சேகரிக்கப்பட்டது.

பயற்றை

- ''கன்னொறுவை ஹவரி பயற்றை'' வர்க்க விடுவிக்கப்பட்டது. இது 30 தொன்/ ஹெக்டயர் விளைச்சல் திறனுடையதும், விரைவான அறுவடை தரக்கூடியதுமான வர்க்கமாகும்.

கத்தரி

- ஒரு ''லேனாரி'' கத்தரிக் கலப்பினம் வர்க்க விடுவிப்புக்கென முன்மொழியப் பட்டது. அது ''லேனாரி – 1'' எனும் பெயருடன் வர்க்க விடுவிக்கப்பட்டது.

தக்காளி

- 18 வெளிநாட்டுக்குரிய தக்காளி வர்க்கங்கள் அவற்றின் விளைச்சல் பெறுபேற்றுக்கென சோதிக்கப்பட்டன. 14 வர்க்கங்கள் மேலதிக சோதனைக்கென தெரிவு செய்யப்பட்டன.
- அண்மையில் விடுவிக்கப்பட்ட ''லங்கா செர்ரி'' தக்காளி வர்க்கத்தினது விதைகள் பெருக்கப்பட்டு ஆர்வமுடைய விவசாயி களிடத்தே பகிர்ந்தளிக்கப்பட்டது.
- உன்னத செயற்றிறனுடைய வர்க்கம் HF_3 மற்றும் விகாரி வர்க்கம் MI27 என்பவற்றின் பொருத்தப்பாட்டை சோதித்தறியவென மேலதிக சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.
- வெளிநாட்டுக்குரிய தக்காளி அறிமுகங்க ளான மொங்கல்(Mongal) Tm701, FI-15043, ஸ்டார் 9062 மற்றும் ஸ்டார் 9064 என்பன வியாபார ரீதியிலான அறிமுகத்து க்கு ஏற்புடையன என அடையாளம் காணப்பட்டது. களப்பரிசோதனைகளின் அடிப்படையில் மேலும் இரு தக்காளி வர்க்கங்கள் வர்த்தக ரீதியிலான

இறக்குமதிக்குப் பொருத்தமற்றவையென இனங்காணப்பட்டது.

- மேற்தரமான உள்ளகக்கலப்புப் பிறப்புக் களை தன்விருத்திகளை உருவாக்கவென உயர் விளைச்சல், பீடை, நோக்களுக்கு எதிர்ப்பு மற்றும் ஏற்புடைய பழப்பண்புகள் என்பவற்றுக்காக நான்கு வெவ்வேறான குடித்தொகையில் வம்சாவழிகளுக்கிடையே யும், வம்சாவழிகளினுள்ளும் தெரிவு மேற் கொள்ளப்பட்டது.

கறிமிளகாய்

- புதிய F_1 கலப்பினம் (1782 x HYW) நிலை பேறாக உயர் விளைச்சலை வெளிப் படுத்தியது.

- உன்னத செயற்றிறனுடைய கலப்பின வர்க்கம் HCAI இன் பொருத்தப்பாட்டினை இனங்காணவென மேலதிக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- வெளிநாட்டுக்குரிய அறிமுக கறிமிளகாய் வர்க்கங்களான 21348, Hp210, FST-403, மற்றும் Jalapeno வகை Perpecto மற்றும் Magnificio என்பன வர்த்தக ரீதியான அறிமுகத்துக்கு ஏற்புடையதென இனங் காணப்பட்டன. களப் பரிசோதனைகளின் அடிப்படையில் ஏனைய ஐந்து வர்க்கங்கள் வர்த்தக ரீதியலான இறக்குமதிக்கு பொருத்தமற்றன என காணப்பட்டன.

கெக்கரி

- உயர் விளைச்சல் கொள்திறனுடைய ஒரு கலப்பின கெக்கரி வர்க்கமான HORDI பச்சை– F_1 ஆனது (மொறுமொறுப்பு, சுவை, பச்சை நிற வெளித்தோல் மற்றும் சீரான தோற்றம்) விவசாயிகளுக்கென வர்க்க விடுதலை செய்யப்பட்டது. இவ்வர்க்கமானது பச்சடி மற்றும் கறிசமைக்க பயன்படுத்தலாம்.

- உயர் விளைச்சல், சிறந்த தோற்றமுடைய இன்னொரு கலப்பின கெக்கரி வர்க்கமானது விடுவிக்கக்கூடிய தருவாயில் உள்ளது. தற்போது இது DUS பரிசோதனையில் உள்ளது.

பாகல்

- விருத்தி செய்யப்பட்ட கலப்பினங்கள் பரிசோதனைகளின் இறுதி கட்டங்களில் உள்ளன. இரு கலப்பினங்கள் NCVT பரிசோதனை கட்டத்திலும் ஒரு கலப்பினம் NCVT பரிசோதனைக்கென முன் மொழியப்பட்ட நிலையிலும் உள்ளன.

பழங்கள் மற்றும் இழையவளர்ப்பு பகுதி

இப்பிரிவானது பழப்பயிர் தொடர்பில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைகளிலும் மற்றும் பழப்பயிர்களின் உற்பத்தி திறனையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கு பழப்பயிர்களின் உள்ளக வளர்ப்பு பெருக்க முறைகளுக்கான அத்தியவசியமான நியதித் தொகுப்புக்களின் விருத்தியிலும் ஈடுபடுகின்றது. உயர் தரம், விளைச்சல் மற்றும் நோய் பீடைக்கு எதிர்ப்புடைய பழ வர்க்கங்களினது விருத்தியிலேயே ஆராய்ச்சி முயற்சிகள் கருத்தூன்றலாயுள்ளன. அத்துடன் இப்பிரிவு உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குரிய பயிராக்கவியல் பொதி விருத்தியிலும் கூடிய அக்கறையுடனுள்ளது. நடுகைப் பொருள் உற்பத்தி, உட்கட்டுமானங்களின் விருத்தியூடாக ஆராய்ச்சிப் பண்ணைகளின் உற்பத்திக் கொள்திறனை அதிகரித்தல் போன்றன அபிவிருத்திச் செயற்பாடுகளாக உள்வாங்கப் பட்டுள்ளன. இடைவிடாது தொழிநுட்பப் பரம்பல் நடவடிக்கைகள் பல்வேறு முறைகளூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

வாழை

உயர் விளைச்சல், சிறந்த தரம் மற்றும் பனாமா நோய்க்கான சகிப்புத் தன்மை என்பவற்றுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வாழை குலவகையில் மூன்று வாழை குலவகை மேலும்

மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டன. ஒரு 'எம்புல்' வாழை குலவகையும் ஒரு 'சீனி' வாழை குலவகையும் NCVT நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

வாழையில் விகார இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது அங்குரநுனி வளர்ப்பு நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது. 'பனாமா' நோய்க்கான எதிர்ப்புடைய குலவகையைப் பிரித்தெடுக்கும் நிகழ்ச்சி முன்னேற்றத்தில் உள்ளது. இவ்வருடத்தில் சோதிக்கப்பட்ட 37 வகை 'எம்பன்' குலவகைகள் மேலும் மதிப்பீடுகளுக்கு ட்படுத்தப்பட்டன. வாழைக்கென வடிவமைக்கபட்ட NCVT நிகழ்ச்சித் திட்டமானது ஒருங்கமைக்கப் பட்டது.

பப்பாசி

பொருத்தமான உள்ளகக் கலப்பு பப்பாசியினை விருத்தி செய்யும் நோக்குடன் பப்பாசி வர்க்க குடித்தொகையில் 12 வம்சாவழிகளில் மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட கலப்பின விதைகளின் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமானது உலர், இடை மற்றும் ஈரவலயங்கள் உள்ளடங்கலாக 4 இடங்களில் ஆரம்பிக்கப் பட்டது.

சித்திரசு

பதினைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மூன்று வெளிநாட்டு வர்க்கங்களும் ஒரு உள்நாட்டு வர்க்கமும் மேலும் மதிப்பீடுகளுக்காக தெரிவு செய்யப்பட்டன. நடுகைப் பொருள் உற்பத்தியானது முன்னேற்றத்தில் உள்ளது.

தூரியன்

NARP திட்டத்தின் கீழ் தூரியன் வர்க்கங்களினது மதிப்பீடு தொடரப்பட்டது. 14 வர்க்கங்கள் மதிப்பிடப்பட்டதுடன் 5 வர்க்கங்களில் பதியப் பகுதிகளின் இயல்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஆறு வர்க்கங்கள் பூக்களினை உற்பத்தி செய்தன அத்துடன் தரமான பழங்களைத் தருகின்ற சிறந்த இணைவினைக் கண்டறிய 7 குறுக்குக் கலப்பு இனவிருத்திகள் மேற் கொள்ளப்பட்டன. இதன் போது பழங்களின் தரம் தொடர்பான தரவுகள் பதியப்பட்டுள்ளதோடு மதிப்பீடுகள் தொடர் முன்னேற்றத்தில் உள்ளன.

உக்குரஸ்ஸ

இவ்வருடத்தில் சேகரிக்கப்பட்ட வர்க்கங்களினது மதிப்பீடுகள் தொடரப்பட்டன. ஒரு வர்க்கமானது இவ்வருடத்தில் பூக்களை உற்பத்தி செய்தது. ஏனைய வர்க்கங்கள் இன்னும் பூக்கத் தொடங்கவில்லை மேலதிக மதிப்பீடுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மா

வெளிநாட்டுக்குரிய மற்றும் உள்நாட்டுக்குரிய மாவின் தெரிவுகள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன. எட்டுத் தெரிவுகள் சிறப்பான பெறுபேறு தந்தன. மதிப்பீடுகள் முன்னேற்றத்தில் உள்ளன. உல்பொத்தகம ஆராய்ச்சிப் பண்ணையில் மா வர்க்கங்களினது ஒட்டுக்கட்டை, இடைக் கட்டைகளினது பல்வேறு இணைவுகள் மதிப்பிடப் பட்டன. அவற்றின் புதியப் பண்புகளுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. சில மா மரங்கள் அவற்றின் முதலாம் காய்த்தலின் போது சிறிதளவு பழங்களை உற்பத்தி செய்தன. கற்கையானது முன்னேற்றத்தில் உள்ளது.

டிராகன் பழம்

ஒரு நிலையத்தில் / கணுவில் எத்தனை வெண்ணிற சதையம் மற்றும் செந்நிற சதையம் உடைய பழங்கள் உருவாகின்றன என்பது தொடர்பான மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சில தாவரங்கள் இவ்வருடத்தில் பூக்கள், பழங்கள் என்பவற்றை உற்பத்தி செய்தன. வளர்ச்சி மற்றும் விளைச்சல் செயலாற்றுகைகள் பதியப்பட்டன. மதிப்பீட்டு வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இழைய வளர்ப்பு

வாழை

'கோழிக்குட்டு' (கப்பல்) வாழை உள்ளக வளர்ப்பு (In-vitro) பெருக்க நுட்பத்தின் மூலம்

வெற்றிகரமாக பெருக்கப்பட முடியும். ஒரு அங்குர நுனித் தாவர பகுதியில் இருந்து ஏறத்தாழ 500 சிறு தாவரங்கள் பெறப்பட முடியும். வேறுபட்ட பாரம்பரிய அமைப்புடைய வேறுபட்ட 'கோழிக்குட்டு' வாழைகள் வேறுபட்ட முறையில் துலங்கலை காட்டின. அண்மையில் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கம் 'ஆக்ரா' உள்ளக வளர்ப்பு நுட்பத்துக்கு சிறப்பான துலங்கலை காட்டவில்லை. வர்க்கம் ஆக்ராவினது பெருக்க வீதத்தினை அதிகரிப்பதற்கான பரிசோதனைகள் தொடராய் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திராட்சை

விதையற்ற தொம்சன் வர்க்கமானது உள்ளக வளர்ப்பு முறைக்கு வெற்றிகரமாக அறிமுகப் படுத்தப்படுத்த முடியும். ஆரம்ப பெருக்கப் பொருட்களாக அங்குரநுனி மற்றும் கணுவிடை வெட்டுத் துண்டங்கள் பயன்படுத்தப்பட முடியும். இரு வார உப வளர்ப்புச் சக்கர காலத்தில் நான்கு துளிர்கள் பெறப்பட முடியும்.

பெறப்பட்ட தாவரங்கள் வன்மையாக்கலுக்கும் கள மதிப்பீடுகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டன. மற்றொரு விதையற்ற வர்க்கமான 'செனாடா' வும் வெற்றிகரமாகப் பெருக்கப்பட்டது. வேர்விடல் கட்டத்தினை மேம்படுத்துவதற்கான பரிசோதனை கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

இழையவளர்ப்புத் தாவரங்களின் கள மதிப்பீடு

இழைய வளர்ப்பு (நேத்திரம் பழம்) செயலாற்றுகை மதிப்பீடுகளுக்காக களத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பாதிப்புக்களை தரும் மாறுபாடுகள் எவையும் அவதானிக்கப்படவில்லை. இழைய வளர்ப்பு அன்னாசி (மொறிசியஸ்) களத்தில் தாபிக்கப்பட்டுள்ளதுடன் இதன் கள மதிப்பீடுகள் தொடராய் நடைபெற்ற வண்ணமுள்ளன.

தாவரங்கள் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருகிறது.

பூச்சியியல் பிரிவு

சித்திரசுப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதி விருத்தி

சித்திரசில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதியினை விருத்தி செய்வதற்கென ஆராய்ச்சிச் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்பயிரை சேதப்படுத்தும் பீடைகள் தொடர்பில் அடையாளம் காண பேராதனை, தெல்தெனிய, பண்டாரவளை மற்றும் மடுல்சீம ஆகிய பகுதிகளில் களத் தரவு சேகரிப்பு நடாத்தப்பட்டன. நோய் பீடைகளுக்கு எதிர்ப்பு / சகிப்புத் தன்மை காட்டுகின்ற வர்க்ங்களை மதிப்பீடு செய்வதற்கான கற்கைகள் நடாத்தப்பட்டன. இலைச் சுரங்கமறுப்பானின் தாக்கத்திற்கு குறைந்த தொற்றும் தன்மை யுடையவனவாக இரு வர்க்கங்களும் (றகன்கல மற்றும் HORDI – 29) சிற்றுண்ணிகளின் தாக்கத்திற்கு குறைந்த தொற்றும் தன்மை யுடையனவாக மூன்று வர்க்கங்களும் (ஆரோக்கியா மற்றும் வெளிநாட்டுக்கரிய இருவர்க்கங்கள்) சோதனைக்குட்படுத்திய வர்க்கங்களுள் அடையாளப்படுத்தப்பட்டன.

தாவரப் பிரித்தெடுப்புக்களின் பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்றிறன் மதிப்பீடு

சேதன விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் பீடைக் கட்டுப்பாட்டு நுட்பங்களை விருத்தி செய்வதற்கென பல தாவரப் பிரித்தெடுப்புக்களின் பீடைக் கட்டுப்பாட்டு செயற்றிறனைக் கண்டறிவதற்கான கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேம்பு விதை, ஜபலா (*Croton tiglium*) விதைப்பருப்பு, வேம்பு இலை, *Acorus calamus,* வேர்த்தண்டு கிழங்கு, *Anona muricata, A. Senegalensis* மற்றும் A. *veticulate* விதை (அன்னாமுன்னா வகைகள்) மற்றும் வெள்ளைப்பூடு, இனிப்பு அத்தி (*Sweet Fig*) ஆகியவற்றிலிருந்து தயார் செய்யப்பட்ட 25 வரையிலான திரவப் பிரித்தெடுப்புக்கள் முன்னிலையான பெறுபேறுகளைக் காட்டின. பூச்சிகளின் இறப்பு, உணவூட்டல் மற்றும்

வளர்ச்சி என்பவற்றில் டீபோல் (*Teapol*) மற்றும் கனிப்பொருள் எண்ணெய் கலந்த தயாரிப்பு குறிப்பிடத்தக்களவு விளைவுகளை காட்டின.

இஞ்சிச் செய்கையில் ஒரு புதிய பீடையின் அடையாளம் காணல்

இஞ்சிச் செய்கையில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தும் பீடையாக வேர்த்தண்டுக் கிழங்கு ஈ (*Mimegralla Coeruleifrons*) அடையாளம் காணப்பட்டது. நிறையுடலி ஈக்களானது வெளிக்காட்டப்பட்ட வேர்த்தண்டு கிழங்கிலும் மண் மேற்பரப்புக்கு அண்மையான தண்டிலும் முட்டையிடுவது கண்டறியப்பட்டது. இஞ்சியில் அழுகலை ஏற்படுத்துகின்ற மண்வாழ் நுண்ணங்கிகள் மற்றும் மண்வாழ் பீடைகளினது சிக்கலான தொகுதி வேர்தண்டுக்கிழங்கு ஈயினது கீடங்கள் ஏற்படுத்துகின்ற காயங்களினூடு இலகுவாக உள்நுழைகின்றன. சோதனை செய்யப்பட்ட எந்தவொரு பூச்சிநாசினியும் இப்பீடையை கட்டுப்படுத்தவில்லை. மேலதிக கற்கைகள் ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சி நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

ஈர வலய இடை நாட்டில் பூசணி வைரசு நோய்க்கான மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டுப் பொதியின் இசைவுத் தன்மை

ஈர வலய இடை நாட்டில் அமைந்துள்ள கன்னொறுவை பிரதேசத்தில் மேற்சொன்ன கற்கை மேற்கொள்ளப்பட்டது.

இக்கற்கையிலிருந்து கன்னொறுவை பகுதியில் பூசணியை தாக்கும் வைரசானது PRSV (பப்பாசி வளையப்புள்ளி வைரசு) எனவும் இது அழுக்கணவன் மூலம் பரப்பப்படுகின்றது எனவும் கண்டறியப்பட்டது. PRSV யானது வாரியப்பொலவில் பூசணியைத் தாக்குகின்ற வைரசிலிருந்தும் வேறுபட்டது. இது தொடர்பில் அங்கு மீண்டும் திகழ்கின்ற சோதனைகள் செயற்படுத்தப்பட்ட வண்ணமுள்ளன. இச் சோதனையானது இவற்றின் இசைவுத் தன்மையைக் கண்டறியவென தொடரப்படும்.

பூசணியில் நோய் பீடை கட்டுப்பாட்டில் மூடுபடையாக பயன்படுத்தப்படும் ஒளித்தெறிப்பு பொலித்தீனின் பருமனின் விளைவு

பூசணியின் நோய் பீடை முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதியை விருத்தி செய்யவென ஒளித்தெறிப்பு பொலித்தீன் மூடுபடையின் பருமனின் விளைவு பற்றி சோதித்தறியப்பட்டது. 4 அடி அகலமான, சாம்பல் நிற ஒளித்தெறிப்பு பொலித்தீன் மூடுபடையின் பிரயோகத்தின் மூலம் பீடைக் கட்டுப்பாட்டுடன் உயர்ந்தளவு விளைச்சல் அதிகரிப்பு பெறப்பட முடியும் என இக்கற்கை காணப்பித்தது.

பூசணி ஈ மற்றும் பழஈ கட்டுப்பாட்டில் AW-IPM தொழில்நுட்பம்

HORDI கன்னொறுவையில் நடைபெற்ற விவசாயத் திணைக்கள நூற்றாண்டு விழா கண்காட்சியின் போது பழஈ, பூசணி ஈ கட்டுப்பாட்டுக்கான பிரதேச வாரியான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் (AW-IPM) ஆனது செயன்முறை ரீதியில் காண்பிக்கப்பட்டது. HORDI பிரதான கட்டடத்திற்கு முன்பாக அமைந்திருந்த 4 கெக்ரயர் பரப்பளவான பிரதான கண்காட்சித் திடல் பகுதியில் பயிரிடப்பட்டிருந்த பீர்க்கு, பாகல், புடோல், கெக்கரி மற்றும் பூசணி ஆகிய பயிர்களுக்கு இப்பொதி நடைமுறைப்படுத்தப் பட்டது. இப்பொதி மிகவும் வெற்றிகரமாக அமைந்திருந்தது. அத்துடன் இதனை விவசாயிகளுக்கு ஒரு வினைத்திறனான, மலிவான, பொருளாதார மற்றும் சூழலியல் நேயமான ஒரு தொழிநுட்பமாக பரப்பப்பட சிபாரிசு செய்யப்பட முடியும். இப்பொதியானது உரிய நேரத்தில் பழங்களுக்கு பொலித்தீன் பையிடல், பெரோமோன் பொறிப் பிரயோகம், உரிய நேரத்தில் புரதப் பொறி பாவனை, வயற்சுகாதாரம் என்பவற்றை உள்ளடக்கி யிருந்தது.

விளைச்சல் திறன் மற்றும் நோய் பீடை எதிர்ப்புக்காக வெளிநாட்டுக்குரிய பீர்க்கு வர்க்கங்களின் மதிப்பீடு

AARTI, LFCT- 672, NS474, NS-475, NRGH-22 மற்றும் LA33 x TD ஆகிய வெளிநாட்டுக்குரிய பீர்க்கு வர்க்கங்கள் விளைச்சல் திறன் மற்றும் நோய் பீடை எதிர்ப்பு என்பவற்றினை கண்டறிய HORDI கன்னொறுவவில் மதிப்பீடு செய்யப்பட்டன. உள்ளூர் வர்கக்ங்களான LA33, NAGA என்பவற்றுடன் ஒப்பிடுகையில் LA33x TD, AARTI மற்றும் NRGH-22 ஆகிய வெளிநாட்டுக்குரிய வர்க்கங்கள் முக்கியத்துவ முடைய வகையில் நோய் பீடை சகிப்புத் தன்மையை வெளிக்காட்டின.

விதையற்ற தொம்சன் திராட்சை வர்க்கத்தில் நோய் பீடை முகாமைத்துவம் (பழப் பருமனை அதிகரித்தல்)

பீடை முகாமைத்துவத்தில் ஒரு திராட்சைப் பீடை அவதானிக்கப்பட்டது. கல்பிட்டியில் விவசாயிகளின் களத்தில் அரும்புகளுக்கு அதிக சேதம் விளைவிக்கும் கொலியொப்ரிரா வண்டு, அரும்புண்ணும் வண்டென அடையாளம் காணப்பட்டு இவ்வண்டினது சாதி அடையாளம் காணல், உயிரியல், சேதம் மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகள் மேலும் கற்றறியப்படும்.

தாவர நோயியல், நுண்ணுயிரினவியல் மற்றும் காளான் பிரிவு

இப்பிரிவினது பிரதான செயற்பாடுகளாக தாவர நோய்களை அடையாளம்காணல் ஒருங்கிணை ந்த நோய் முகாமைத்துவ பொதிகளின் விருத்தி, பங்கசுநாசினி பிரித்தறிதல், விதை மற்றும் தாவர சுகாதார சோதனை, நோய்க் கட்டுப்பாட்டுக்கான ஆலோசனை சேவைகள், மற்றும் சிப்பி, வைக்கோல் மற்றும் பால் காளான்களுக்கான மேம்படுத்திய தொழிநுட்ப விருத்தி ஆகியனவாகும். பயிற்சி வகுப்புக்கள், பயிர்ச் சிகிச்சை, துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் புதிய தொழிநுட்பங்கள் பரப்பப்பட்டன.

பக்ரீரிய வாடலுக்கு எதிர்ப்புடைய வெளிநாட்டுக்குரிய கலப்பின வர்க்கங்களது தெரிவு

Ralstomia Solanacearum (ரல்ஸ்டோனியா சொலனேசியாரம்) மூலம் ஏற்படுத்தப் படுகின்ற பக்ரீரிய வாடலுக்கு எதிர்ப்புடையனவென வெவ்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பதினொரு தக்காளி கலப்பினங்களும் ஐந்து கறிமிளகாய் கலப்பினங்களும் தெரிவு செய்யப்பட்டன.

எல்லா வர்க்கங்களும் பக்ரீரிய வாடலுக்கு நடுத்தரமான எதிர்ப்பினை காட்டின இவை மேலதிக இசைவுத் தன்மை, விளைச்சல் செயலாற்றுகைச் சோதனைகளுக்கென முன்மொழியப்பட முடியும்.

இறக்குமதியான விதை உருளைக்கிழங்கு தொகுதிக்கான கண்காணிப்பு மற்றும் ஆய்வுகூட பரிசோதனைகள்

வெவ்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 74 விதை உருளைக்கிழங்குத் தொகுதிகள் தடுப்புக் காப்பு செய்யப்பட வேண்டிய நோயாக்கிகளிலிருந்து தூய்மையான வையா என கண்காணித்து சோதிக்கப்பட்டன. சோதிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்குத் தொகுதிகளில் பொதுப் பொருக்கு (*Streptomyces spp*), வலைப் பொருக்கு (*Streptomyees reticulisscabies*), வெள்ளிப் பொருக்கு (*Helminthosporium solani*), கறுப்புப் பொருக்கு (*Rhizoctonia solani)* என்பன அவதானிக்கப் பட்டன. *Geotrichum candidum* மூலம் ஏற்படுத்தப்படும் இறப்பர் அழுகல் மிக அரிதாக விதை உருளைக்கிழங்குத் தொகுதிகளில் அவதானிக்கப்பட்டன. எவ்வாறாயினும் இவ்விதை உருளைக்கிழங்குத் தொகுதிகள் யாவும் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ள நோயாக்கி களினது அனுமதிக்கப்பட்ட அளவிலும் மிக குறைவாக நிலையில் காணப்பட்டமையினால் விவசாயிகளின் களங்களில் பயிர்ச் செய்கைக்கென அனுமதிக்கப்பட்டன.

பயிர்களின் நோய் முகாமைத்துவத்துவத்தில் நோய் அடையாளம் காணல் மற்றும் ஆலோசனை சேவை

விவசாயிகளிடமிருந்தும் தனியார் பண்ணைகளிலு மிருந்தும் கிடைக்கப் பெற்ற 280 க்கும் மேலான பழப்பயிர், மரக்கறிப் பயிர், கிழங்குப் பயிர், சுவைச் சரக்குப் பயிர், அலங்காரத் தாவரங்கள், மறுவயற் பயிர்கள் மற்றும் நெல் ஆகியன பக்ரீயா, பங்கசு மற்றும் வைரசு நோய்களுக்கென உரிய ஆய்வுகூட முறையில் சோதிக்கப்பட்டன.

பல பகுதிகளிலும் பங்கசு நோய்களாக வேர் அழுகல், இலைப்புள்ளிகள், பூஞ்சணம், அந்திரக்னோசு போன்றன பழப்பயிர்களிலும் மரக்கறிகளிலும் பொதுவாக அவதானிக்கப் பட்டிருந்தன. கோவா பயிரிடப்படும் பெரும்பாலான பகுதிகளில் *Xanthomonas compestris* இனால் ஏற்படுத்தப்படும் கரும் அழுகல் எல்லா கோவா வர்க்கங்களையும் கடுமையாக பாதிக்கின்ற பக்ரீரிய நோயாக அடையாளம் காணப்பட்டது. வாழையில் கடுந்தாக்கம் ஏற்படுத்தும் நோயாக பனாமா நோய் அறிக்கையிடப்பட்டது. ஹம்பாந்தோட்டை யில் *Fusarium solani* யால் கொடித்தோடையில் கழுத்தழுகல் / புற்றுநோய் ஏற்படுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. இதுவே இலங்கையில் இந்நோய் தொடர்பான முதலாவது அறிக்கையிடலாகும்.

ELISA சோதனை மூலம் வைரசு கண்டுபிடித்தல்

இறக்குமதி செய்யப்பட்ட விதை மற்றும் நடுகைப் பொருட்களில் மிகச் சரியான முறையில் வைரசுக்களை அடையாளம் காண ELISA பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிர்ச் செய்கையில் உரிய நேர, நிலைத்திருக்கக் கூடிய, ELISA முறையில் மைந்த வைரசு அடையாளம் காணலானது வைரசுக் கட்டுபாட்டு நுட்பங்களுக்கும், தூய விதைச் சுகாதார சோதனைகளுக்கும் ஒரு முன்தேவைப்பாடாக உள்ளது. CGMMV வைரசுக்கென சோதிக்கப்பட்ட 68 மாதிரிகளில் மூன்று மாதிரிகள் இவ்வைரசுக்கான நேர் விளைவை காட்டின. அவை தொடர்ந்தும் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமற்றன. எட்டு தக்காளி மாதிரிகள் TSWV வைரசுக்கென பரிசோதிக்கப் பட்டன. அனைத்துமே இவ்வைரசிலிருந்தும் தூய்மையானவையாக காணப்பட்டன.

கறிமிளகாயில் அந்திரக்னோசு மற்றும் பூசணியில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிரான புதிய பங்கசு நாசினிகளின் உயிரியல் செயற்றிறன்

கறிமிளகாயில் அந்திரக்னொசுக்கெதிராக புதிய நான்கு பங்கசு நாசினிகளும் பூசணியில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிரான புதிய இரண்டு பங்கசு நாசினிகளும் இயற்கையான தொற்றல் நிலமைகளின் கீழ் மாத்தளை விவசாய களங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. மதிப்பிடப்பட்ட 4 புதிய பங்கசு நாசினிகளும் அமிஸ்டார் 25% எஸ்.சீ (10 மிலீ / 10லிட்டர் எனும் அளவில்) நேடிவோ 75 டப்ளியூ.ஜீ (6 கிராம் / 10லிட்டர் எனும் அளவில்) கப்ரியோ டொப் ஈ.சீ (20 கிராம் / 10லிட்டர்) மற்றும் புளுசினம் 500 கிராம் / 10லிட்டர் எஸ்.சீ (10மி.லி / 10லிட்டர்) கறிமிளகாயில் அந்திரக்னோசினைக் கட்டுபடுத்த மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தப்பட முடியும்.

பூசணியில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிராக புதிய பங்கசு நாசினிகளின் உயிரியல் செயற்றிறன்

இரண்டு புதிய பங்கசு நாசினிகளான கப்ரியோடொப் ஈ.சீ (மெடிரம் 55% + பிறக்குளோஸ்ரொபின் 5%) மற்றும் அமிஸ்ட்டார் 25% ஈ.சீ ஆகியன பூசணியில் கீழ்ப்பூஞ்சண நோய்க்கெதிராக வினைத்திறனான கட்டுப் பாட்டைக் காட்டின.

பூசணியில் மஞ்சளாதல் நோய் நிலையுடன் தொடர்பான வைரசினை பாய்பொருள் மற்றும் மூலக்கூற்று ரீதியிலான கண்டறிகை

வெவ்வேறு பூசணி வகைகளுடன் தொடர்புடைய ஏழு வகை வைரசுக்கள் பாய்பொருள் மற்றும் மூலக்கூற்று முறைமைகளை பயன்படுத்தி கண்டறியப்பட்டன. கெக்கரி சித்திரவடிவ வைரசு (CMV) பப்பாசி வளைய புள்ளி வைரசு (PRSV) புகையிலை வளையப்புள்ளி வைரசு (TRSV) தக்காளி வளையப்புள்ளி வைரசு (ToRSV) கெக்கரி பச்சைப் பன்னிற சித்திர வைரசு (GMMV) சுக்கினி மஞ்சள் சித்திர வைரசு (ZYMV) மற்றும் பிகோமோ வைரசு என்பன இவற்றுள் உள்ளடங்குகின்றன. பூசணி வைரசு நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஓர் ஒருங்கிணைந்த முகாமைத்துவப் பொதியும் விருத்தி செய்யப்பட்டது.

கழுத்தழுகல் (*Vigna anguiculata*), வேர் நோய்களுக்கான பயற்றை வர்க்கங்கள் மற்றும் இனவிருத்தி வம்சாவழிகளின் மதிப்பீடு

கழுத்தழுகல் ஏற்படும் தாவரங்களில் பலகையான பங்கசு நோயாக்கிகள் அடையாளம் காணப்பட்டன. அவை பியுசாரியம் இனங்கள், றைசோக்டோனியா சொலனி, ஸ்கிலிரோசியம் ரொல்ப்சி மற்றும் பித்தியம் என்பனவாகும்.

இக்கழுத்தழுகல் நோய்க்கான கள எதிர்ப்புக்கென பிரபலமான பேதங்கள் மற்றும் குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. கடுமையான தொற்றலேற்பட்ட களத்தில் வளர்க்கப்படும் போது எல்லா வர்க்கங்களும் நோய்த் தொற்றலுக்குட்பட்டமை கண்டறியப் பட்டது. எனினும் இனவிருத்திக் குலவகைகளான 39 - 11 மற்றும் 39 - 9 ஆகியன கூடிய எதிர்ப் பினை/ சகிப்பினை வெளிக்காட்டின.

திராட்சைச் செய்கையில் பிரதான உயிரின தடைகளை இனங்காணல்

பிரதானமான திராட்சை செய்கை நடைபெறு மிடங்களில் (கல்பிட்டிய) பொருளாதார ரீதியில் முக்கியத்துவமுடைய நோய்களை இனங்காண வென ஒரு கள ரீதியான தரவுச் சேகரிப்பு நடாத்தப்பட்டது. இத்தரவுச் சேகரிப்பில் பல நோய்கள் அடையாளங் காணப்பட்டிருப்பினும் கீழ்ப் பூஞ்சணம் (*Plasmopora viticola*), தூள் பூஞ்சணம் (*Uncinula necator*), துரு (*Physopalla ampelopsidis*), முதிர் அழுகல் (*Glomerella spp*), பெஸ்டலோசியா இலைப்புள்ளி மற்றும் போமொப்சிஸ் வெளிறல் என்பன முன்னிலையில் காணப்பட்டன. அத்துடன் திராட்சைச் செய்கையில் பியுசாரியம் வேர் அழுகலானது பொதுவாக காணப்பட்ட வேர் நோயாகும். இந்நோய்களின் கட்டுப்பாட்டுக்குப் பொருத்தமான பங்கசு நாசினிகளும் அடையாளம் காணப்பட்டன.

சேதன மரக்கறி உற்பத்திக்கான நோய் முகாமைத்துவ உத்திகள்

இதற்கென விருத்தி செய்யப்பட்ட பொதியானது 20 தொன் / ஹெக்டயர் எனும் அளவில் நன்கு உக்கிய கூட்டெருவை நடுகைக்கு இரு வாரங்கள் முன்னரும் நடுகை செய்து ஒரு மாதத்திலும் பிரயோகித்தல், ஒவ்வொரு நடுகைக் குழியிலும் மரத்தூள் ஊடகத்தில் வளர்க்கப்பட்ட ரைகோடோமா விரிடே (*Trichoderma viride)* (50 கிராம் / நடுகை குழி) ஆனது நடுகை செய்யும் நேரத்தில் பிரயோகித்தல், மண்புழு உர வடிப்பானது ஒவ்வொரு வாரமும் விசிறல், ஏதாவது பீடைத் தாக்கங்கள் அவதானிக்கப்படின் வேம்பு பிரித்தெடுப்பு விசிறல், தேவையான போது வயல் சுகாதாரம் நோய்க் கட்டுப்பாட்டுக் கான கலாசார பயிராக்க நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இம்முன்மொழியப்படுகின்ற பொதியின் செயற்பாடு கள் மூலம் தக்காளி, வெண்டி மற்றும் கோவாவில் பிரதான நோய்கள் யாவும் பொருளாதார தாங்குதிறன் மட்டத்தின் கீழ் முகாமைத்துவம் செய்யப்பட்டன.

விளைச்சல் மேம்பாட்டுக்கும் நோய் முகாமைத்துவத்துக்குமான சூழல் நேயமான இயற்கைப் பல்பகுதியச் சேர்வைகளின் மதிப்பீடு

தக்காளி, வெண்டி மற்றும் றம்புட்டான் ஆகிய பயிர்களில் விளைச்சல் மேம்பாட்டுக்கும் நோய் முகாமைத்துவத்துக்குமான கைற்றோசன் பங்கசு நாசினி மற்றும் கைற்றோசன் ஒலிகோ பகுதிகளின் பாவனையின் சாத்திய வளத்தினை கண்டறியவென பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. வெண்டியில் கைற்றோசன் பங்கசு நாசினி மற்றம் கைற்றோசன் ஒலிகோ பகுதியங்களின் விசிறலானது மஞ்சள் இலைச்சித்திர வடிவ வைரசு நோயின் தாக்கத்தில் குறிப்பிட்டு கூறக்கூடிய குறைவு ஏற்பட்டமையை காட்டின. எனினும் தூள்ப்பூஞ்சணம், சேர்கஸ்போரா இலைப்புள்ளி என்பவற்றில் எதுவிதமான விளைவையும் காட்டவில்லை. தக்காளியில் வெளிறல் மற்றும் சேர்கஸ்போரா இலைப்புள்ளி என்பவற்றில் குறித்துக் கூறக் கூடியளவில் கட்டுப்பாடு காணப்பட்டது. இவற்றுடன் 16 – 25 வீதமான விளைச்சல் அதிகரிப்பும் கைற்றோசன் பிரயோகத்தினால் பெற்றுக் கொள்ளப்பட முடியும். றம்புட்டானில் தூள்ப்பூஞ்சண நோய் கைற்றோசன் பிரயோகத்தினால் குறிப்பிடக் கூடியளவில் கட்டுப்படுத்தப்பட்டது.

வாழையில் BBTV மற்றும் BSV அடையாளம் காணலுக்கென மூலக்கூற்று முறைமை விருத்தி

BBTV – DNA1 பிரத்தியேக கூறினை பயன்படுத்தி BBTV இனை இனங்காண PCR ஒரு மூலக்கூற்று கருவியாக விருத்தி செய்யப்பட்டது.

BBTV தொற்றலேற்றப்பட்ட வாழையில் இருந்து 110bp பருமனுடைய துகள் தொடர்ச்சியாக வெளிக்காட்டப்பட்டது.

இதைப்போன்றே BSV யும் இனங்காணப்பட்டது. 731 bp பகுதிகள் தொடராய் வெளிக்காட்டப் பட்டது. BSV தொற்றலேற்பட்ட தாவரங்களி லிருந்து பின்முகறான்ஸ்கிரிப்டேசு மற்றும் RNA ஏசு, ஐதரசன் பரம்பரை அலகு பகுதிகள் உள்வாங்கப்பட்டன.

தக்காளி

வெளிநாட்டுக்கரிய 18 தக்காளி வர்க்கங்கள் அவற்றின் விளைச்சல் திறனுக்காக சோதிக்கப் பட்டன. 14 வர்க்கங்கள் மேலதிக சோதனைகளு க்கான தெரியப்பட்டன.

போஞ்சி மஞ்சளாதல் வைரசு நோயினது மூலக்கூற்றியல் இனங்காணல் மற்றும் பண்புகளை காணலும்

1 : 25 என ஐதாக்கப்பட்ட முழு DNA தயாரிப்புக்களை DNA மூலமாக கொண்டு PCR இன் ஊடாக ஒரு தொகுதி தனித்துவ பெகோமோ வைரசு தொகுதி முதன்மைகள் பெகோமோ வைரசு இனங்காணலுக்கு பயன்படுத்தப்பட்டன. இக்கற்கையிலிருந்து போஞ்சி மஞ்சளாதல் வைரசு நோயை ஏற்படுத்துகின்ற பெகோமோ வைரசினை இனங்காண தெரிவு செய்யப்பட்ட முதன்மைத் தொகுதியை PCR இல் பாவிப்பது தனித்துவமானதும் உணர்ச்சி பூர்வமானதுமாகும் என தெரிய வந்தது.

TYLCV இனை மூலக்கூற்றியல் இனங்காணலும் பண்புகளை காணலும்

பெகோமோ வைரசு தனித்துவமான முதன்மைகளைப் பயன்படுத்தி TYLCV தொற்றலேற்பட்ட மாதிரிகள் பெகோமோ வைரசு இனங்காணலுக்கு பயன்படுத்தப்பட்டன. TYLCV அறிகுறிகளை காட்டிய எல்லா மாதிரிகளும் பெகோமோ வைரசுவின் அடிப்படை வெளியுறை புரத (CP) பரம்பரை அலகுத் துண்ட 520 உப்பு மூலகங்களை முன்னதாகவே நோய்களை இனங்காணல், பூச்சிகள் மூலம் பரப்பப்படுகின்ற கற்கைகள், நோய்களுக்கு வர்க்கங்கள் காட்டுகின்ற எதிர்ப்புக்களை மதிப்பிடல் போன்றவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம்.

றைகோடேர்மா விரிடே இனது துகள் அடிப்படை தயாரிப்புக்களின் விருத்தி

றைகோடேர்மா இனங்களது துகள் அடிப்படையிலான தயாரிப்புக்கள் விருத்தி செய்யப்பட்டன. 12 மாதங்களுக்கு தொடர்ச்சி யாக றைகோடேர்மா இனங்களது துகள் அடிப்படைத் தயாரிப்புகளினது ஆயுட்காலமும் தப்பிபிழைத்தல் திறனும் மதிப்பீடு செய்யப்பட்டன. இதன் பெறுபேறு றைகோடேர்மா இனங்களானது காற்றிறுக்கமான மும்மைப்படை அலுமினியம் பைகளில் சேமிக்கும் போது 12 மாத காலம் வரை தப்பிபிழைக்கும் ஆற்றலுடையது என காட்டியது.

சித்திரசு நோய் பீடைகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பொதி விருத்தி

சித்திரசு பயிரிடப்படும் இடங்களில் நோயேற்படலை தீர்மானிக்க களத் தரவுச் சேகரிப்பு 2012ம் ஆண்டில் நடாத்தப்பட்டது. பிபிலை, மதுருகெட்டிய, பண்டாரவளை, மடுல்சீம மற்றும் கன்னொறுவை பகுதிகளில் தூள் பூஞ்சணம், செந்நிற தண்டு மற்றும் பொருக்கு என்பன மிகவும் முதன்மையான நோய்களாக காணப்பட்டன. முறையற்ற பயிராக்க நடவடிக்கை கள் மற்றும் நிலவிய வறட்சி நிலமைகள் என்பவற்றினால் சித்திரசு தாவரம் உலர்தல் (20%) பைடொப்தெரா வேர் அழுகல் என்பன தெல்தெனிய பகுதியில் முதன்மையான நோய்களாகக் காணப்பட்டன.

இயற்கையான தொற்றல் நிலைமைகளின் கீழ் 12 வர்க்கங்கள் (08 வெளிநாட்டுக்குரிய + 04 உள்ளூர்) தூள்ப்பூஞ்சண நோய்க்கெதிராக HORDI கன்னொறுவையில் பிரித்தெடுக்கப்பட்டன. ஐந்து வர்க்கங்கள் (03 வெளிநாட்டு + 02 உள்ளூர்) தூள்ப் பூஞ்சண நோயிலிருந்தும் தூய்மையானவையாக காணப்பட்டன.

பூசணியில் வைரசு நோய்களை கட்டுபடுத்த ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதியின் விருத்தி

வாரியப்பொல மற்றும் மாகாந்துறை பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட இலைச் சுருளலுடன் மஞ்சளாதல் அறிகுறிகளை கொண்டிருந்த பூசணி இலை மாதிரிகள் ஆறு வைரசுகளுக்கு எதிர் விளைவை காட்டின. (CGMMV, TORS, CMV, PRSV, TRSV, WMV, மற்றும் ZYMV என்பன) ஆனால் பெகோமோ வைரசுக்கு நேர் விளைவு காட்டின.

பூசணிச் செய்கையில் தாவர வாடலைத் தொடர்ந்து இலைகள் உலர்ந்து போகும் ஒரு மோசமான நோய் நிலமை கன்னொறுவை மற்றும் வாரியப்பொல ஆராய்ச்சி நிலையக் களங்களிலும் மொறகொல்லாகம பகுதியில் விவசாயிகளின் களங்களிலும் அவதானிக்கப் பட்டது. இந்நோய் *Erwinia trachypilca* எனும் பக்ரீரியாவினால் ஏற்படுத்தபடுகிறது என அடையாளம் காணப்பட்டது.

உள்ளூர் காளான் வர்க்கங்களின் செய்கைக்கான தொழில்நுட்ப விருத்தி

கன்னொறுவையில் உள்ள பாடசாலை மாமரம் ஒன்றில் வளர்கின்ற உள்ளூர் காளான் வர்க்கமொன்றின் கனியுடலங்கள் உண்ணக் கூடிய சிப்பிக் காளான் என அடையாளம் காணப்பட்டது. 14 நாட்களில் வெற்றிகரமாக தூய வளர்ச்சி குடித்தொகை பெறப்பட்டது. நெல் வித்துக்களை அடிப்பொருளாக கொண்டு தாய் மற்றும் வியாபார காளான் வித்திகள் வெற்றிகரமாக பெறப்பட்டன. ஒரு பொதிக்கு 145 கிராம்கள் முழு வளர்ச்சியடைந்த உள்ளூர்க் காளான் வெற்றிகரமாக பெறப்பட்டது. இவ்வர்க்கமானது வெவ்வேறு விவசாய சூழலியல் வலயங்களில் NCVT சோதனைகள் மூலம் மேலும் மதிப்பீடு செய்யப்படும்.

கிழங்குப் பயிர், மலரியல் மற்றும் வீட்டுத் தோட்டப் பிரிவு

கிழங்குப்பயிர்

வற்றாளை

- கவர்ச்சிகரமான சிவந்த தோல், வெண்ணிற சதைப்பகுதி மற்றும் குறுகிய காலத்தில் விளைச்சல் என்பவற்றுடன் மலேசிய வர்க்கமானது தரமான, உயர் விளைச்சலைத் (35 மெ.தொ அதிகம் / ஹெக்ராயருக்கு) தந்தது.
- இவ்வர்க்கமானது 5 இடங்களில் NCVT சோதனை நிகழ்ச்சிகளில் உள்வாங்கப் பட்டது.
- VAT நிகழ்ச்சிகள் நான்கு மாவட்டங்களில் நடாத்தப்பட்டது.
- உயர் உலர் பொருள் உள்ளடக்கமுடைய CIP வர்க்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. CIP-441086 உயர்தரமான உயர் விளைச்சலை தந்தது.
- உப்புச் சகிப்புடைய 14 CIP வம்சாவழிகளில் 199076-1, 199062-1, 440224, 4402621-1 மற்றும் 440183 ஆகியனவை உயர் விளைச்சலை தந்தன. உவர் பகுதிகளுக்கு மிகவும் பொருத்தமான வம்சாவழியை தெரிந்தெடுக்கவென இவ் வம்சாவழிகள் மேலும் உவர் நிலமைகளில் மதிப்பீடு செய்யப்படும்.

மரவள்ளி

- கவர்ச்சிகரமான தோல் நிறம் (கபில வெளித்தோல், மென்சிவப்பு உட்தோல்) மிகவும் விருத்தியடைந்த கிழங்குடன் நீண்ட கிழங்கு காம்பு போன்ற சந்தைப் பெறுமானங்களையும் உயர் விளைச்சலை யும் தந்த ஒரு புதிய வர்க்கமான HORDI-6 ஆனது உத்தியோக பூர்வமாக HORDI MU-1 எனும் பெயருடன் வர்க்க விடுதலை செய்யப்பட்டது.
- பல்வேறுபட்ட பங்குதாரர்களுக்கு சிபாரிசுக்க மைவான கிழங்குப் பயிர்களின் 500,000 இற்கும் மேற்பட்ட நடுகைப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. எதிர்கால பாவனைகளுக்கென எல்லா கிழங்குப் பயிர்களினதும் மூலவுயிருரு பேணப்பட்டன.

மலரியல் மற்றும் வீட்டுத் தோட்டம்

அலங்காரத் தாவர பெறுமானமுடைய உள்ளூர் மற்றும் சுதேச தாவரங்களினது சேகரிப்பு, பேணுகை மற்றும் மேம்படுத்தல்.

- இவ்வகை சேகரிப்புக்குள் இரு புதிய காட்டு மலர்த் தாவரங்களும் 04 வெளிநாட்டுக்குரிய ஜேர்பரா கலப்பினவர்க்கங்களும் சேர்க்கப் பட்டன.

வீட்டுத் தோட்டத்தினுள் உள்வாங்கக் கூடிய குறை நுகர்ச்சியுடைய பயிர் வர்க்கங்களினது சேகரிப்பு, பேணுகை மற்றும் மதிப்பீடு

- வீட்டுத் தோட்ட நிலமைகளுக்கு உயர் பொருத்தப்பாடுடைய குறை நுகர்ச்சி மரக்கறி வர்க்கங்கள் வீட்டுத் தோட்டத்தில் பேணப்பட்டதுடன் சோதிக்கப்பட்டன.
- இரு அவரை வகைகள், இரு லிமா அவரை ஒரு கனவாலியா இனம் உட்பட ஐந்து புதிய பயிர்கள் வீட்டுத் தோட்ட சேகரிப்புக்குள் உள்வாங்கப்பட்டன.

விவசாய இரசாயனப் பிரிவு

இப்பிரிவினது பிரதான செயற்பாடுகள் மண்வளம், தாவரப் போசணை முகாமைத்துவம், சேதன விவசாயம் ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சிகளை நடாத்துவதாகும். அத்துடன் இப்பிரிவானது விவசாயிகளை மண் பரிசோதனைகளின் அடிப்படையில் பூங்கனியியல் பயிர்களுக்கு பசளைப் பிரயோகம் மேற்கொள்ளவும்

ஊக்குவிக்கிறது. மேலும் இப்பிரிவு மண், நீர், தாவரம், இரசாயன பசளைகளின் மீதான ஆய்வுச் சேவைகளை வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து வழங்கு வதுடன் இவற்றின் பிரயோகம் தொடர்பான ஆய்வுச் சேவைகளையும் வழங்குகிறது. இப்பிரிவு மண், பசளைகள், சேதன விவசாயம், மற்றும் மண் போசணைகள் தொடர்பான தலைப்புக்களில் விவசாயிகள், விரிவாக்க உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை, பல்கலைக்கழக, தேசிய டிப்ளோமா பயிற்சி மாணவர்கள் போன்றோருக்கு பயிற்சிகளை வழங்குகின்றது. மேலும் பசளைப் பாவனை, முகாமைத்துவம், போசணைக் குறைபாட்டு நிலமைகளை கையாளுதல் போன்றவற்றுக்கு உரியவர்களுக்கு ஆலோசனைச் சேவையும் வழங்கப்படுகின்றது.

சேதன மரக்கறிப் பயிர்களின் போசணை முகாமைத்துவம்

போஞ்சி மற்றும் கறிமிளகாய் என்பவற்றை சோதனைப் பயிர்களாக கொண்டு சேதன முறை மரக்கறிப் பயிர்களின் விளைச்சலில் வித்தியாச மான போசணை முகாமைத்து நடவடிக்கைகளின் விளைவுகள் சோதிக்கப்பட்டது.

பெரும்போகத்தில் வித்தியாசமான சேதன போசணை முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கறிமிளகாயில் விளைச்சலில் எதுவிதமான மாற்றங்களும் அவதானிக்கப்பட வில்லை இவ்வாறே சிறுபோகத்தில் போஞ்சியிலும் பெறுபேறு பெறப்பட்டது. எனினும் பசுந்தாட் பசளை + கூட்டெரு + தேயிலை கூட்டெரு விசிறப்பட்ட கறிமிளகாயில் உயர் விளைச்சல் அறிக்கையிடப்பட்டது. சிறு போகத்தில் பசுந்தாட் பசளையும் கூட்டெருவும் பிரயோகிக்கப்பட்ட (10.7 தொன் / ஹெக்டயர்) சோதனையில் உயர் போஞ்சி விளைச்சலும், அடுத்ததாக கூட்டெரு, பசுந்தாட் பசளை, தேயிலைக் கூட்டெரு (10.5 தொன்/ ஹெக்டயர்) பிரயோகிக்கப்பட்ட சோதனையிலும் உயர் விளைவு பெறப்பட்டது. பசுந்தாட் பசளையுடன் கூட்டெருவை சேர்த்து பயன்படுத்தலானது மரக்கறி விளைச்சலில் சிறிதளவு நேரான விளைவை தரும்.

பசளைகளின் நீண்ட கால பிரயோகம்

பசளைகளினது நீண்ட கால பிரயோகம் தொடர்பில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட கற்கைகளிலிருந்து கூட்டெரு வை இரசாயனப் பசளைகளுடன் கலந்து பிரயோகிக்கும் போது தனியே கூட்டெருவையோ அல்லது தனியே இரசாயனப் பசளையையோ பிரயோகிக்கும் போது கிடைக்கின்ற விளைவை காட்டிலும் உயர் விளைவு பெறப்படுவது கண்டறியப்பட்டது. நீண்ட காலப் பகுதியில் தொடராய் தனியே இரசாயனப் பசளைப் பிரயோகம் அல்லது பசளைப் பிரயோகம் எதுவுமே செய்யாதிருப்பது விளைச்சலில் குறைவை ஏற்படுத்தும். இவ்விளைவுகளிலிருந்து சேதனப் பசளைகளுடன் சேர்த்து இரசாயனப் பசளைகளை பிரயோகிப்பதன் பெறுமதி உணரப்படுகின்றது.

ஒருங்கிணைந்த முறையில் சேதன, அசேதன பசளைகளின் பிரயோகம் தனியே தாவரப் போசணைகளை வழங்குவது மாத்திரமின்றி மண்-தாவர தொகுதியில் பல நன்மையான விளைவுகளை சேதனப் பசளை கொடுப்பதும் இதற்கு காரணமாக அமைகின்றன.

சேதன மரக்கறி விளைச்சலில் வேறுபட்ட போசணை மூலங்கள்

பெரும்போகத்தில் கோவா, கறிமிளகாய், நோகோல் ஆகிய பயிர்களிலும் சிறு போகத்தில் கோவா, கரட், பீட்றூட் ஆகிய பயிர்களிலும் பல்வேறு வகையான சேதன போசணை மூலங்களான மாட்டெரு (20 தொன்/ ஹெக்டாயர்) கோழியெரு (10 தொன் / ஹெக்டயர்) மண்புழு கூட்டெரு (40 தொன் / ஹெக்டயர்) மற்றும் கூட்டெரு (40தொன் / ஹெக்டயர்) என்பவற்றின் வினைத்திறன் சோதித்தறியப்பட்டதுடன் விவசாயத் திணைக்கள சிபாரிசுக்கமையவான NPK பிரயோகத்துடன் ஒப்பீடும் செய்யப்பட்டது.

பெரும்போகத்தில் வேறுபட்ட சேதனப் பசளை மூலங்களினது பிரயோகத்தினால் கறிமிளகாய் மற்றும் கோவா விளைச்சலில் சிறிதளவு பாதிப்பு அவதானிக்கப்பட்டதுடன் நோகோல் விளைச்சலில் குறிப்பிடதக்க எதுவித மாற்றமும் அவதானிக்கப்படவில்லை. இம்மூன்று மரக்கறிகளினதும் சராசரியான விளைச்சலைக் கருத்தில் எடுக்கும் போது பெரும் போகத்தில் கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட (25.2 தொன் / ஹெக்டயர்) போது உயர் விளைச்சலும் அதற்கடுத்ததாக கோழியெரு பிரயோகிக்கப்பட்ட (24.4 தொன் / ஹெக்டயர்) களத்தில் உயர் விளைச்சலும் பெறப்பட்டதுடன் மண்புழு கூட்டெரு (16.2 தொன்/ ஹெக்டயர்) பிரயோகிக்கப்பட்ட களத்தில் மிகக் குறைவான விளைச்சலும் காணப்பட்டது.

சிறுபோகத்தில் இம்மூன்று மரக்கறிகளினதும் (கோவா, பீட்றூட், கரட்) சராசரி உயர் விளைச்சலானது அசேதன பசளை (18.7 தொன்/ ஹெக்டயர்) பிரயோகிக்கப்பட்ட களத்தில் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கடுத்தபடியாக கோழியெரு (16.6 தொன் / ஹெக்டாயர்) பிரயோகிக்கப்பட்ட களத்திலும் பெறப்பட்டது.

வாழையில் வருடாந்த பயிரிடும் முறையின் கீழ் பயிர் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்கான பொட்டாசியத்தின் முகாமைத்துவம்

ஈரவலய இடைநாட்டுப் பகுதியில் பொட்டாசிய த்திற்கான வெளிப்பாட்டைக் கண்டறியவும் சிறந்தவொரு தொடரான பொட்டாசிய பிரயோகத் திற்கான அளவினைக் கண்டறியவும் இக்கற்கை யானது மேற்கொள்ளப் பட்டது. இச் செயற்றிட்ட மானது இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் அனுசரனை அளிக்கப்படுகிறது.

நீரியல் தாவரங்களின் உண்ணும் பகுதிகளில் உள்ள பார உலோக உள்ளடக்கம் தொடர்பான கற்கை

நீரியல் தாவரங்களில் உண்ணும் பகுதிகளில் (கொகில, கங்குன், றம்பை, கிக்கிரிய, வெலன கொன) பார உலோகங்களான இரும்பு, செம்பு, மங்கனீசு, நாகம் ஆகியவற்றின் உள்ளடக்கம் சோதித்தறியப்பட்டது. இடத்திற்குப் பிரத்தியேக மான மற்றும் இனங்களுக்குப் பிரத்தியேகமான பார உலோக உள்ளடக்க மாறுபாடு நீரியல் தாவரங்களில் காணப்படுவது பெறுபேறுகளில் அவதானிக்கப்படுகிறது. அனைத்து மாதிரிகளிலும் மங்கனீசு மற்றும் இரும்பு உள்ளடக்கமானது செம்பு மற்றும் நாக உள்ளடக்கத்தை விட அதிகமாக காணப்பட்டது. அனைத்து மாதிரிகளிலும் அதிகபட்ச செப்பு மட்டமானது அபாய எல்லையிலும் அதிகரித்துக் காணப்பட வில்லை (1-64 மி.கி/ கி.கி) எவ்வாறாயிருப்பினும் பெரும்பான்மையான மாதிரிகளில் மங்கனீசு (3.5 மி.கி / கி.கி) இரும்பு (200 மி.கி / கி.கி) உள்ளடக்கமானது அனுமதிக்கப்பட்ட அளவிலும் அதிகமாக காணப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் குடிநீரின் தரம்

தெரிவு செய்யப்பட்ட இரசாயன அளவீடுகளை சோதித்தறிய அநுராதபுர மாவட்டத்தில் 11 கிராமரங்களில் குடிநீரின் தரம் கண்காணிக்கப் பட்டது. கற்கைப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட குடிநீர் மாதிரிகளின் அமிலத்தன்மையானது 6.7 – 7.5 வரையில் காணப்பட்டதுடன் அது ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வீச்சான 6.5 – 7.5 இற்கிடையில் காணப்பட்டது. குடிநீரின் மின் கடத்துதிறனானது உவர்த்தன்மை அல்லது நீரில் உள்ள உப்புக்களின் அளவை பிரதிபலிப்ப தனால் ஒரு முக்கிய அளவீடாக கருத்தில் எடுக்கப்பட்டது. இது சோதனை செய்யப்பட்ட இடங்களில் ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்பட்டது. 58 வீதத்திற்கும் மேற்பட்ட குடிநீர் மாதிரிகள் மத்திய தர உவர்த்தன்மையைக் காட்டியதுடன் 36.8வீதமான மாதிரிகள் உயர் உவர்த்தன்மையைக் கொண்டிருந்தன. 5.4 வீதமான மாதிரிகளே குறைந்த உவர்த் தன்மையைக் காட்டின. சோதிக்கப்பட்ட மாதிரிகளில் குளோரைட்டு உள்ளடக்கமானது 19

– 121 மி.கி / லிட்டர் எனும் வீச்சினுள் காணப்பட்டது.

தற்போதைய கற்கையில் 22 வீதமான நீர் மாதிரிகள் அனுமதிக்கப்பட்ட அளவினை விட கூடுதலாகக் கொண்டிருந்தன. உயர் உவர்த் தன்மை, உயர் மின் கடத்துதிறன் என்பன இக்கற்கை நடைபெற்ற பிரதேசதங்களில் பிரதான குடிநீர்ப் பிரச்சினைகளாகக் காணப்பட்டதென முடிவு செய்யப்பட்டது. கற்கை மேற்கொள்ளப் பட்ட பெரும்பாலன குடிநீர்க் கிணறுகளில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய அளவு புளோரைட்டு, கல்சியம், சோடியம் மற்றும் குளோரைட்டு உள்ளடக்கம் அதிகமாகக் காணப்பட்டது. சோதிக்கப்பட்ட குடிநீர் மூலங்களின் பார உலோக உள்ளடக்கமானது மிகக் குறைவாகக் காணப்பட்டது.

இலங்கையில் பாவனையில் உள்ள பொசுபரசு வளமாக்கிகளின் பார உலோக நிலமை தொடர்பான கற்கை

வெவ்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொசுபரசு வளமாக்கியின் இரும்பு, செம்பு, மங்கனீசு, நாகம், கட்மியம், குரோமியம் மற்றும் ஈயம் ஆகிய பார உலோக உள்ளடக்க மானது சோதிக்கப்பட்டது. இப்பொசுபரசு வளமாக்கிகள் குறிப்பிடத்தக்களவு பார உலோகங்களை (இரும்பு, செம்பு, மங்கனீசு, கட்மியம், ஈயம், குரோமியம்) மாசுக்களாக தம்மகத்தே கொண்டுள்ளன. அத்துடன் இரும்பு செம்பு, மங்கனீசு, நாகம் ஆகியன நுண்போசணை மூலங்களாகவும் காணப்படு கின்றன. ஆகவே TSP மண்ணுக்குப் பிரயோகிப்பதன் மூலம் நுண்போசனை மூலங்களையும் வழங்கக் கூடியதாக இருக்கும் இக்கற்கையானது தொடர்ந்த வண்ணம் உள்ளது.

வெவ்வேறு பயிர்ச் செய்கைக் கோலங்களில் நுண்போசணை மூலகங்களின் நிலை பற்றிய கற்கை

இக்கற்கையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாரஸ்சன பிரதேச மண்ணில் உயர்ந்தளவு கிடைக்கக்கூடிய இரும்பு (21.9 – 205.7 மி.கி / கி.கி) செம்பு (0.16 – 3.76 மி.கி / கி.கி) மற்றும் மங்கனீசு (12.5 – 122.1 மி.கி / கி.கி) என்பனவும், அநுராதபுரப் பகுதியில் (நெல் பயிராக்கத் தொகுதி) உயர்ந்தளவு நாகம் (0.42 - 28.4 மி.கி / கி.கி) காணப்பட்டது. ஆகக் குறைந்த கிடைக்ககூடிய இரும்பு (2.4 – 26.4 மி.கி / கி.கி) மற்றும் செம்பு (0.15 – 1.2 மி.கி / கி.கி) நுவரெலியப் பகுதியிலும் மங்கனீசு (0.38 – 6. 0 மி.கி / கி.கி) அநுராதபுரப் பகுதியிலும் காணப்பட்டது. எவ்வாறு இருப்பினும் ஒரு சில பகுதிகளில் உள்ள மண்ணைத் தவிர பெரும்பாலான பகுதிகளில் உள்ள மண்ணில் மேற்சொன்ன நுண் மூலங்களுக்கான பற்றாக்குறை எதுவும் அவதானிக்கப்படவில்லை. இக்கற்கையானது மேலும் தொடரப்படும்.

விலங்குக் கழிவுகளில் பார உலோகங்களின் நிலை பற்றிய கற்கை

இலங்கையில் அமைந்துள்ள பண்ணைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட உடன் விலங்குக் கழிவுகளில் (ஆடு, மாடு, கோழி, பன்றி) உள்ள பார உலோகங்களின் உள்ளடக்கம் (இரும்பு, செம்பு, மங்கனீசு, நாகம், கட்மியம், குரோமியம், ஈயம்) சோதித்தறியப்பட்டது. பெறுபேறுகளின்படி எல்லா வகையான விலங்குக் கழிவுகளிலும் இரும்பு உயர்ந்தளவில் காணப்பட்டது. அவற்றுள் ஆட்டு மலம் உயர் இரும்பு உள்ளடக்கத்தை (6.8.கி / கி.கி) காட்டியது. உயர் செம்பு (0.11.கி / கி.கி) மற்றும் மங்கனீசு (0.39.கி / கி.கி) உள்ளடக்கம் கோழி எருவிலும் உயர் நாக (0.63.கி / கி.கி) மற்றும் கட்மியம் (0.5கி / கி.கி) பன்றிக் கழிவிலும் உயர் ஈய (1.39 மி.கி / கி.கி) உள்ளடக்கம் மாட்டு சாணத்திலும் உயர்

குரோமியம் உள்ளடக்கம் (0.51 மி.கி / கி.கி) ஆட்டுப் புழுக்கையிலும் காணப்பட்டது.

இலங்கையில் வெவ்வேறு பயிர்ச் செய்கைக் கோலங்களில் மண் வள மதிப்பீட்டு நிகழ்ச்சி

இலங்கையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு வெவ்வேறு பயிர்ச் செய்கை கோலங்களுடைய தெரிவு செய்யப்பட்ட கமநல கேந்திரப் பிரிவுகளில் உள்ள மண் வள அளவு கோல்கள் தொடர்பான கணிப்பீட்டை மேற்கொள்ளவென இக்கற்கை நடாத்தப்பட்டது. பெரும்பாலான அளவு கோல்களுக்கான மாதிரித் தெரிவு, பகுப்பாய்வு என்பன நிறைவு பெற்றுள்ளன. நுண்போசணை மூலகப் பகுப்பாய்வு தொடராய் நடைமுறைப்படுத்தப்படும்

பகுப்பாய்வுச் சேவை

2012ம் ஆண்டு காலப்பகுதியில் ஏறத்தாழ 250 மண், 19 நீர், 35 தாவர மாதிரிகள் மற்றும் 120 கூட்டெரு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு சிபாரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. நுண் போசணை மூலகப் பிரச்சினைகளுடன் பெறபட்ட மாதிரிகளின் எண்ணிக்கையானது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் 2012ம் ஆண்டில் உயர்வாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க தாகும். இவ்வருடத்தில் இப்பகுப்பாய்வு சேவை மூலம் பெறபட்ட வருமானம் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்து நாநூற்றி தொண்ணூறு ஆகும்.

மாணவர் செயற்றிட்டங்கள்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் தமது இறுதியாண்டு செயற்றிட்டங்களை நிறைவு செய்தனர். அம்பாறை ஹார்டி விவசாய உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒருவரும் தேசிய தொழில் பயிலுனர் பயிற்சி அதிகார சபையின் மாணவர் ஒருவரும் தமது கட்டுறுப் பயிற்சியினை இப்பிரிவில் பூர்த்தி செய்தனர்.

விரிவாக்கம், பொருளியல் மற்றும் தரவு முகாமைத்துவ பிரிவு

தரவு முகாமைத்துவம், பொருளியல் என்பவற்றை உள்ளடக்கிய தகவல் தொழிநுட்பத்துடன் தொடர்பான தொழிநுட்பப் பரம்பல் நடவடிக்கைகள், ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை நடாத்தல், ஒருங்கிணைத்தல் என்பன இப்பிரிவினது பொறுப்புக்களாகும்.

இவ்வருட காலப்பகுதியில் இப்பிரிவினால் பின்வரும் நிறுவனங்கள் / பாடசாலை மற்றும் விவசாய சம்மேளனங்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

25 பூங்கனியியல் தொழிநுட்ப துண்டுப் பிரசுர பதிப்பில் உதவி வழங்கப்பட்டது. பதாதைகள், தொழில்நுட்ப தகவல்கள் என்பவற்றை வழங்கி நாடு பூராகவும் நடைபெற்ற கண்காட்சிகளுக்கும் உதவி மேற்கொள்ளப்பட்டது. 8499 எண்ணிக்கை யான துண்டுப் பிரசுரங்கள் ஆர்வமுடையவர் களின் மத்தியில் விற்பனை செய்யப்பட்டது. தொலைபேசிப் பதிலளிப்பு மூலம் தொழிநுட்ப பரம்பல் மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவன விஞ்ஞானிகள் மூலம் நடாத்தப்பட்ட 58 பூங்கனியியல் பயிற்சி நிகழ்ச்சிகளை இப்பிரிவு ஒழுங்கமைத்தது.

அட்டவணை 1.2.3 – 2012ம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்

வகை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
பாடசாலைப் பிள்ளைகள்	15,990
பாடசாலை ஆசிரியர்கள்	503
பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள்	445
விவசாயிகள் / முயற்சியாண்மையாளர்	241
பல்கலைக்கழக மாணவர்கள்	134
தனியார் தொழில்நுட்ப கல்லூரி	35
தொழிநுட்ப நிறுவனம்	172

விவசாய அருட்காட்சியகம்

இவ் விவசாய அருட்காட்சியகமானது எல்லா அலுவலக நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 4.15 மணி வரை திறந்திருப்பதோடு வேண்டுகோள் விடுக்கப்படின் அரச விடுமுறை நாட்களிலும் திறக்கப்படும்.

கண்காட்சிப் பொருட்களாக பாரம்பரிய விவசாய உபகரணங்கள், கருவிகள், பாரம்பரிய களஞ்சிய கட்டமைப்பு மாதிரிகள் என்பன அமைகின்றன. கண்காட்சிப் பொருட்களுக்கு மேலதிகமாக அருட்காட்சியகம் பாரம்பரிய விவசாயம் தொடர்பான தகவல்களை வழங்குகிறது. 2011ம் ஆண்டில் 2113 துண்டுப் பிரசுரங்கள் 'கமத் பசவ' மற்றும் இலங்கையின் பாரம்பரிய விவசாய வாசகங்கள் எனும் தலைப்புக்களில் பகிர்ந்தளி க்கப்பட்டன. பல்வேறு வகைப்பட்ட ஆர்வமுடைய வர்களும் அருட்காட்சியகத்துக்கு தினமும் வருகை தந்தவண்ணமுள்ளனர்.

மத்திய வாசிகசாலை

இலங்கையின் பிரதான விவசாய நூலகமான இது தன்னகத்தே விவசாயத்துடன் தொடர்பான புதிய, பழைய வெளியீடுகள், வெளிநாட்டு சஞ்சிகைகள் என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் இறுவெட்டுக்கள் மூலம் அவசியமான சார்பிலக்கியங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் கொண்டது.

- 251 இற்கும் அதிகமான வெளிநாட்டுக் குரியதும் குறித்தவொரு கால இடை வெளியில் வெளியிடப்படுவதுமான நூல்கள் ஆண்டு பூராகவும் பரிமாற்ற அடிப்படையில் பூரணத்துவமான பிரதிகளாகப் பெறப்பட்டன. இவற்றுடன் வருடாந்த சேவைப்பெறும் கட்டணமாக 5750 ஸ்ட்ரேலிங் பவுண்களை பொதுநலவாய விவசாய சர்வதேச நிறுவனத்துக்கு (CABI) இந்நூலகத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை பெறவென 1000இற்கும் மேற்பட்ட பயனாளர்கள் நூலகத்துக்கு வருகை தந்துள்ளனர். வழமையான வாசகர் சேவை மற்றும் நூலகங்களுக்கிடையிலான கடன் திட்டங்கள் என்பவற்றுகூடாக ஏறத்தாழ 580 புத்தகங்கள் வாசிகசாலை உறுப்பினர்கள் மத்தியில் சுழற்சி முறையில் பரிமாற்றப்பட்டுள்ளன.

- ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் வேண்டு கோளுக்கு இணங்க ஏறத்தாழ 60 பெறுமதி வாய்ந்த தேடல்களும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஏறத்தாழ 42 தேடல்கள் CARP இன் உதவியினூடாக நடாத்தப்பட்டன. திணைக்கள ஆராய்ச்சி உத்தியோகத்தர்களு க்கென பாவனையாளர் கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டுள்ளது.

- இணைய வசதிகளை பயன்படுத்தி 200 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நவீன தகவல்களை பெற்றுள்ளனர். இவர்களுக்கு AGRIS – CD Rom உம் உதவியாக அமைந்தது.

- இலங்கையின் நவீன விவசாயத் தகவல்களான இலங்கை விவசாயத் திணைக்கள வருடாந்த தொடர் சஞ்சிகை மற்றும் அயண மண்டல விவசாயவியலாளர் சஞ்சிகையின் கட்டுரைகளை WEB AGRIS - வலைத்தளத்திற்கு தரவேற்றுவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். அதனுடன் விவசாய தரவுகளை தேசிய விவசாய நூல் விபரணம் - 2012 க்கு ஏற்றுமதி செய்யவும் இயலுமாயிருந்தோம்.

- AGRI NET இன் பக்க உள்ளடக்கச் சேவை (SDCP) ஆனது தொடரப்பட்டதுடன் 150 இற்கும் மேற்பட்ட பக்க உள்ளடக்கச் சேவையானது திணைக்களப் பாவனையாளர் களுக்கு வழங்கப்பட்டது. மத்திய நூலகமானது 2012ம் ஆண்டில் அயன மண்டல விவசாயவியலாளர் பிரசுரத்தினை (இதழ் 160) உள்நாட்டவர்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் பகிர்ந்தளித்த துடன் PURNA தகவல் தளத்துக்கு உள்ளீடாக 1000க்கும் மேற்பட்ட

கட்டுரைகளையும் 3200 புத்தகங்களையும் வழங்கியது.

தொழிநுட்ப பரவலாக்கல் நடவடிக்கைகளும் அபிவிருத்தியும்

மரக்கறி

இலை மரக்கறிப் பயிர்களின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் விநியோகம்

மொத்தமாக 1.72 கிலோ கிராம் அளவான முளைக்கீரை, பசளி, சாரணை, பக்சோய் மற்றும் ஓமம் என்பவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டது. அவற்றுடன் வல்லாரை, பொன்னாங்காணி, கங்குன், மின்சி மற்றும் கொரிய வல்லாரை என்பவற்றின் 1132.8 கிலோ கிராம் அளவான நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அவை விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

பயிற்சி நிகழ்ச்சிகள்

பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள்

பட்டப்பின் திசைப்படுத்திய கற்கை – 01

பட்டதாரி மாணவர்கள் - 04

NDT மாணவர்கள் - 02

விவசாயிகள் - 87

விரிவாக்க உத்தியோகத்தர்கள் - 11

உற்பத்தியாளர் விதையுற்பத்தி

விதைப் பிரிவுக்கு 31.5 கிலோ கிராம் கொத்து போலன் பயற்றை உற்பத்தியாளர் விதையும் 8 கிலோ கிராம் சேனப் பயற்றை உற்பத்தியாளர் விதையும் கையளிக்கப்பட்டுள்ளன.

கெக்கரிப் பயிராக்கவியல்

(N.K பசளைப் பிரயோகத்திற்கு கெக்கரி முதலாம் சந்ததி (F1) கலப்பின வர்க்கத்தினது பிரதிபலிப்பு) ஆரம்ப நிலைக் கற்கைகளிலிருந்து விவசாயத் திணைக்கள சிபாரிசுகளுக்கமைவான பசளைப் பிரயோகத்தின் மூலம் H18 வர்க்கத்திலிருந்து சாத்தியமான உயர் விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியும் என தெளிவாகியது.

பழங்கள் மற்றும் இழையவளர்ப்பு

- அலுவலர்களுக்கு 04 பயிற்சி நிகழ்ச்சிகளும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு 07 பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.
- 105 விவசாயிகளுக்கென 04 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- அலுவலகத்திற்கு வருகை தந்த விவசாயிகளினது பிரச்சினைகள் தீர்த்துவைக் கப்பட்டதுடன் தேவையான ஆலோசனைக் சேவைகளும் வழங்கப்பட்டன. பழப்பயிர்ச் செய்கை தொடர்பில் தொலைபேசி மூலம் வினவப்பட்ட 360 வரையிலான பிரச்சினை களுக்கு பதிலளிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. விவசாயிகள், மாணவர்கள் கடித மூலம் வினவப்பட்ட 100 இற்கும் மேற்ப்பட்ட பழப்பயிர்ச் செய்கை தொடர்பிலான பிரச்சினைகளுக்கு பதிலளிக்கப்பட்டன.

அநுராதபுரத்தில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது தாபிக்கப்பட்ட 18 மாதிரிக் கிராமங்களிலும் 1 நாள் பயிற்சி நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் பழப்பயிர்ச் செய்கை தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டது. (சுமார் 800 விவசாயிகளுக்கு)

- ஏனைய அலுவலர்களுடன் இணைந்து கூட்டாக ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

01. சிவப்பு நிற சதையம் கொண்ட டிராகன் பழப்பயிரில் (Hyloceras spp) உயர் பழமுண்டாதலை ஏற்படுத்த பகல் நேரங்களில் பூ வரும்பில் மகரந்தச் சேர்க்கை செய்தல் - இலங்கை விவசாயத் திணைக்கள வருடாந்த வெளியீடு 2012, KGS சேனவிரத்ன மற்றும் KTMS பெரேரா

02. இலங்கையில் குறை நுகர்ச்சியுடைய பழ மரங்கள் அத்தியாயம் - 8, இதழ் - 02 ISBN – 978-955-9224-34-1, 2011ம் ஆண்டு பக்கங்கள் - 148-157, KGS செனவிரத்ன, DKNG - புஸ்பகுமார

- பத்திரிகைக் கட்டுரைகள் எட்டு பிரசுரிக்கபட்டன.
- 2012ம் ஆண்டில் பழப்பயிர்ச் செய்கை மற்றும் இழையவளர்ப்பு தொடர்பிலான பயிற்சிக் கற்கைகளுக்கென ஒரு பல்கலைக்கழக மாணவரும் 04 NAITA (தேசிய பயிலுனர் தொழிற் பயிற்சி அதிகார சபை) டிப்ளோமா மாணவர்களும் மேற்பார்வை செய்யப்பட்டனர்.
- 2012 ஓயாமடுவ, அனுராதபுரத்தில் நிகழ்ந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் காட்சிக்கூட அமைப்பு மற்றும் காட்சிக் கூடங்களில் பணியாற்றியமை மூலம் அக்கண்காட்சியில் பங்களிப்புச் செய்யப் பட்டது.
- பழத் தோட்டங்களை ஒழுங்கமைத்தல், HORDI இல் பழங்கள் தொடர்பான கண்காட்சி கூடம் அமைத்தல் முதலான செயற்பாடுகள் மூலம் விவசாயத் திணைக்களத்தினது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டக் கண்காட்சியில் பங்களிப்புச் செய்யப்பட்டது.

ஆராயச்சி பண்ணைகள்

பழப்பயிர்ப் பரிவினால் பஸ்யால, வல்பிட்ட, உல்பொதகம மற்றும் அம்பத்தென்ன ஆகிய நான்கு ஆராய்ச்சிப் பண்ணைகளும், வாகொல்ல பொருத்தபாட்டு ஆராய்ச்சி நிலையமும் மேற்பார்வை செய்யப்பட்டன. எல்லாப் பண்ணை களிலும் உட்கட்டுமான வசதிகள் விருத்தி செய்யப்பட்டதுடன் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பஸ்யால, வல்பிட்ட பண்ணைகளில் 4 ஹெக்ரெயர் பரப்பில் அன்னாசி செய்கையும் வல்பிட்ட, உல்பொத்தகம பண்ணைகளில் மாமரங்கள் புனருத்தாபனம் (சுமார் 1000 மரங்கள்) செய்யப்பட்டன. எல்லாப் பண்ணைகளிலும் நடுகைப் பொருட்களின் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டது.

கருத்திட்டங்கள்

விவசாயத் திணைக்களத்தில் விசேட செயற்றிட்டங்கள் பகுதியினால் நிதியீட்டம் செய்யப்பட்ட "இழைய வளர்ப்பு மூலம் நடுகைப் பொருட்கள் உற்பத்தி" எனும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 4000 வரையிலான வளர்ப்பூடக கொள்கலன்களை முகாமை செய்யுமளவுக்கு ஆய்வுகூட வசதிகள் விரிவுபடுத்தப்பட்டன. அடுத்த ஆண்டு முதல் 50,000 வாழை குட்டிகளும், 10,000 அன்னாசி உறிஞ்சிகளும் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும்.

அன்னாசி மற்றும் வாழையினது அடிப்படை நடுகைப் பொருட்கள் உற்பத்தி

அட்டவணை 1.2.4 இழைய வளர்ப்பிலுள்ள தாவரங்களின் தற்போதைய நிலை

பயிர்	வர்க்கம்	தாவரங்கள் உள் வளர்ப்பில்	தாவர இல்லம்
வாழை	எம்பொன்	15,000	12000
	கோழிக்கூடு	10,000	800
அன்னாசி	மொறிசியஸ்	25,000	150

கிழங்குப் பயிர்கள் மற்றும் மலரியல்

பிரதேச விவசாயிகளுக்கு நடுகைப் பொருட்களை விநியோகிக்கவென 2013ம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் கீழ் அம்பாறை, மல்வத்தை பண்ணையில் 1.5 ஏக்கர் பரப்பளவில் கிழங்குப் பயிர்கள் தாபிக்கப்பட்டன.

தாவர கருமூலவளங்கள் திட்டத்திற்கான ஒன்றிணைந்த முகாமைத்துவ தொகுதி

இச் செயற்றிட்டங்களின் கீழ் 25 வகை இராசவள்ளி வர்க்கங்களின் (*Dioscorea alata, Dioscorea esculanta, Dioscorea bulbifera* என்பவற்றைச் சேர்ந்த) தாவரக் கரு மூலவளங்கள் சேகரிக்கப்பட்டன. இச் சேகரிப்புக்கள் யாவும் பெருக்கம் மற்றும் பாதுகாத்தல் தேவைகளுக்காக HORDI களங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இச்சேகரிப்புக்க ளினது பண்புப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 17 வகையான வர்க்கங்களின் தாவரக் கருமூலவளங்கள் சேகரிக்கப்பட்டன. இச்சேகரிப்புகள் யாவும் பெருக்கம் மற்றும் பாதுகாத்தல் தேவைகளுக்காக வீட்டுத் தோட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இச் சேகரிப்புக்களினது பண்புப்படுத்தல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

காபனீரொட்சைட்டு செறிவூட்டல் செயற்றிட்டம்

இச்செயற்றிட்டத்தின் கீழ் ஒரு தக்காளி வர்க்கம் சோதனையிடப்பட்டது. காபனீரொட்சைட்டு செறிவூட்டப்பட்ட தாவரங்கள் உயர் விளைச்சலை தந்தது.

இரண்டு கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

- தேசத்துக்கு மகுடம் - ஓயாமடுவ
- நூற்றாண்டு விழா கண்காட்சி – கன்னொறுவை

வானொலி நிகழ்ச்சிகளும் பயிற்சி நிகழ்ச்சிகளும்

2012.11.09ம் திகதியன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை (தமிழ்) யில் கிழங்குப் பயிர் தொடர்பான ஒரு வானொலி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. 31.05.2013 மற்றும் 06.12.2012 ஆகிய தினங்களில் கிழங்குப் பயிர்ச் செய்கை மற்றும் வீட்டுத் தோட்டச் செய்கை தொடர்பான இரண்டு பயிற்சி நிகழ்ச்சிகள் (தமிழ்) HORDI கன்னொறுவையில் நடாத்தப்பட்டன. சுமார் 60 பேர் பங்கு பற்றினர். (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தான செவியேற்பாளர்கள் மற்றும் ஆயிஷாசித்திக்கா கல்வி நிறுவன மாணவர்கள்)

வீட்டுத் தோட்ட வடிவமைப்பும் விருத்தியும் தொடர்பான ஒன்பது பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. பல்வேறு நிறுவனங்களையும் சேர்ந்த 375 பங்குபற்றுனர்களும், தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பித்தோரும் பயிற்றுவிக்கப்பட்ட துடன் வீட்டுத் தோட்டம் தொடர்பான தொழிநுட்ப கையேடுகளும் வழங்கப்பட்டன. ஏழு வர்க்கங்களுக்கான 1215 விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

விவசாயிகளின் களங்களுக்கு விஜயம் செய்து கண்காணித்தல், சிறந்த பயிராக்கல் கலாசார செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசனை, கடித மற்றும் தொலைபேசி மூலமான விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கல் போன்ற ஏனைய தொடர்பாடல் தொடர்பான செயற்பாடுகளும் நடாத்தப்பட்டன. (200 பயனாளிகள்)

பூச்சியியல்

- 06 பயிர்ச் சிகிச்சை முகாம்களில் வளவாளர்களான பங்கேற்றமை.
- சேதன விவசாயம் / பயிற்சி நிகழ்ச்சிகளில் வளவாளர்களாக பங்களிப்பு செய்தமை – 20 நிகழ்ச்சிகள்.
- பூச்சிப் பீடைகள் தொடர்பிலான விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு ஆலோசனைச் சேவை வழங்கியமை – 75.
- விவசாய திணைக்கள நூற்றாண்டு விழா கண்காட்சி உள்ளடங்கலாக இரு கண்காட்சிகளில் பங்கேற்பு – 1500 வரையான விவசாயிகளின் பிரச்சினைகளு க்கு ஆலோசனைச் சேவை வழங்கியமை.
- வெளிநாட்டுக்குரிய விதைச் செய்கைகளின் மதிப்பீடு – 07.

- விவசாய தொழில்நுட்பப் பூங்காவில் பூச்சிக் காட்சிச்சாலையைப் பேணியதுடன், பூச்சிக் காட்சிசாலைக்கு வருகை தந்த சுமார் 40,000 மக்களுக்கு தொடர்புடைய தகவல்கள் வழங்கப்பட்டது.

- பிரயோகச் செய்து காட்டல்களுக்காக தேனீப் பூங்காவை பேணி முகாமைத்துவம் செய்ததுடன், பல்வேறு பூக்கும் தாவரங்களை உரிய முறையில் பேணி வருடம் முழுவதும் மகரந்தம் மற்றும் தேன் கிடைப்பதனை அதிகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சுமார் 500 பேருக்கு பிரயோகச் செய்து காட்டல்கள் நிகழ்த்தப்பட்டது. தேனீக் குடித்தொகையி லிருந்து 11 கிலோ தேன் பிரித்தெடுக்கப் பட்டது.

நோயியல் மற்றும் காளான்

- சிப்பிக் காளான் வளர்ப்பு தொடர்பாக 1082 பேர் பயிற்றுவிக்கபட்டனர். சிறியளவிலான காளான் உற்பத்தியாளர்களாகப் பதிவு செய்யும் பொருட்டு 113 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

- வைக்கோலை அடிப்பதார்த்தமாக கொண்டு காளான் வளர்ப்புச் செய்வதற்கு 70 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதோடு, காளான் விதையுற்பத்தி தொடர்பில் 88 பேருக்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

- HORDI க்கு விஜயம் செய்த 507 விவசாயிகளுக்கும், தொலைபேசியூடாக 730 பேருக்கும், கடிதமூலமாக 09 பேருக்கும் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட் டுள்ளன.

- 26 க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு அவர்களுடைய "கெவல திட்டம்" மூலமாக காளான் வளர்ப்புத் தொழிநுட்பம் பரப்பப்பட்டுள்ளது.

- காளான் வளர்ப்பு, காளான் விதையுற்பத்தி தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் 40 பேருக்கு பயிற்சியளிக்கப் பட்டது.

- இரண்டு கண்காட்சிகள் நடாத்தப்பட்டன தேசத்திற்கு மகுடம் அநுராதபுரத்திலும், விவசாயத் திணைக்கள நூற்றாண்டு விழா கண்காட்சி கன்னொறுவையிலும், இவற்றுக்கு மேலதிகமாக மன்னார், மற்றும் கம்பஹா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகங்களினாலும், குளியாப்பிட்டிய உயர் கல்வி நிறுவனத்தினாலும் நடாத்தப் பட்ட கண் காட்சிகளுக்கு கண்காட்சிப் பொருட்களும் விழிகாட்டல்களும் வழங்கப் பட்டன.

- காளான் செய்கை மற்றும் காளான் விதையுற்பத்தி தொடர்பான பல பயிற்சிப் பட்டறைகளை அரச, மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. (விவசாய தொழில் வாண்மை விருத்தி மற்றும் தகவல் சேவை, விவசாய திணைக்களம், - 23 பேர், IDT மகாஇலுப்பள்ளம - 30 பேர், உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகம் கேகாலை - 31 விவசாயப் போதனாசிரியர் கள், IFAD திட்டம் (கம்பொல, அம்பலாந்தோட்டை) 142 பேர், வெடத்த நிலையம் - கொரன, இரத்தினபுரி முறையே 56 மற்றும் 58 பேர், மொறகாகந்த – மகாவலி அதிகார சபை – 246 மத்திய சுற்றாடல் அதிகார சபை – 54 பேர்)

- இலத்திரனியல் ஊடகங்களினூடான பங்கேற்புடனான தொழில்நுட்ப பரம்பல் நடவடிக்கைகள் - நான்கு வானொலி நிகழ்ச்சிகள் - வைக்கோலில் சிப்பிக் காளான் வளர்ப்பு, உலர்த்திய காளானிலிருந்து பெறுமதி சேர் பொருட்கள் (றங்கிரி தம்புளு வானொலி) காளான் விதையுற்பத்தி (கந்துரட்ட வானொலி) - இரு தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் (ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக் காட்சி வலையமைப்பு - ITN) என்பன

நடாத்தப்பட்டன. (புதிய உண்ணக்கூடிய சுதேச காளான் வர்க்கம் மற்றும் குறைந்த செலவில் காளான் விதையுற்பத்தி – கொவி பிமட அருனலு நிகழ்ச்சி) ஒரு பத்திரிகை கட்டுரை (வைக்கோலில் சிப்பிக் காளான் வளர்ப்பு) ரிவெர பத்திரிகையில் பிரசுரிக்கப் பட்டது.

- இரு காளான் விதையுற்பத்தி பிரிவுகள் முறையே லஹிரு காளான் - மாபனமடுள்ளவிலும், சதுனி காளான் - கினிகத்தேனவிலும் தாபிக்கப்பட்டன.
- விவசாயிகள் மத்தியில் வைக்கோல் காளான் - மற்றும் சிப்பிக் காளான் செய்கையை வலுவூட்டவென முறையே 217 பொதிகள் வைக்கோல் காளான்களும் 07 பொதிகள் சிப்பிக் காளான்களும் விநியோகிக்கப்பட்டன.
- கொடித் தோடைச் செய்கையை மேம்படுத்தவென 45 விவசாயிகளுடன் 30 ஏக்கர் பரப்பில் கொடித் தோடை செய்கை

இரசாயனவியல்

இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட பயிர்ச் செய்கைத் தொகுதிகளில் மண்வள மதிப்பீட்டு நிகழ்ச்சிகள்

இலங்கையின் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கியதாகத் தெரிவு செய்யப்பட்ட கமநல கேந்திர நிலையப் பிரிவுகளில் காணப்படுகின்ற மண் வளத்திற்கான அளவுகோல்களை மதிப்பீடு செய்யவென இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. மாதிரித் தெரிவு நிறைவு பெற்றுள்ளதோடு பகுப்பாய்வு தொடர்ப்படும். இக்கற்கையானது HORDI இன் மண் இரசாயனப் பரிவினால் ஒழுங்கமைக்கப்படுவதுடன் மண் மாதிரியெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு அனைத்து விவசாயத் திணைக்கள நிறுவனங்களிலும் நடைபெற்றன.

பகுப்பாய்வுச் சேவைகள்

2011ம் ஆண்டுக் காலப்பகுதியில் சுமார் 2000 மண் மாதிரிகள், 200 நீர் மாதிரிகள், 27 தாவர மாதிரிகள் மற்றும் 100 கூட்டெரு மாதிரிகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டதுடன் இவை தொடர்புடைய அறிக்கைகளும் கையளிக்கப் பட்டுள்ளன. 2011ம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மண் மாதிரிகளின் எண்ணிக்கை அதற்கு முன்னைய ஆண்டுகளைப் போலல்லாது அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுப்பாய்வுச் சேவைகளினால் இவ்வாண்டில் பெறபட்ட வருமானம் ரூபா (ஒரு இலட்சத்து அறுபத்தென்னாயிரத்து எண்ணூற்றி முப்பது (1681 830.00) ஆகும்.

ஏனைய செயற்பாடுகள்

நோயியல் ~ காளான்

விருதுகள்

- W.A.R.T விக்கிரமஆராய்ச்சி – சிறந்த பதாதை தயாரிப்பு "இழையவளர்ப்புத் தாவரங்களது BBTV இனை பெருந்திணிவில் சுட்டுவதற்கான மூலக்கூற்று தொழிநுட்பம்" 2012ம் ஆண்டுக்கான விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த முன்வைப்பு (20-21 செப்டெம்பர் 2012ல் தாவர கருமூலவள நிலையம் கன்னொறுவை, பேராதெனிய, இலங்கையில் நடைபெற்றது)
- W.A.R.T விக்கிரமஆராய்ச்சி – (தாவர நோயியல்) கலாநிதி கற்கையில் உயர் முழுமைத் தர புள்ளிச் சராசரி (OGPA) பெற்றமைக்கான விவசாய விஞ்ஞானப் பல்கலைக்கழக பட்டமளிப்பின் போது இந்தியாவின் பெங்களூரில் 13ம் திகதி சித்திரை மாதம் 2012ம் ஆண்டு இடம்பெற்ற 46வது வருடாந்தப் பட்டமளிப்பு விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

2012ம் ஆண்டில் பங்கேற்ற பயிற்சிகள் / பயிற்சிப் பட்டறைகள்

- R.G.A.S ராஜபக்ச, கொள்கை வகுப்பாளர்களுக்கான பிராந்திய நிறை

வேற்று முகாமைத்துவ கூட்டம் RCA / IAEA விவசாய சூழலியல் மற்றும் தொழில் துறைப் பிரயோக பச்சைக் கதிர்ப்பு முடிவுப் பொருள் பாவனையாளர் - வியட்னாமில் நடைபெற்றது 27 – 31 ஆவணி 2012

- W.A.R.T விக்கிரமஆராய்ச்சி சர்வதேச வாழை முன்வைப்பு மற்றும் பயிற்சிப் பட்டறை – தாய்வானில் 19 -24 கார்த்திகை 2012ம் ஆண்டு)

- W.A.R.T விக்கிரமஆராய்ச்சி மற்றும் K. இராமகிருஸ்ணன் (முன்னாள் பீடாதிபதி) தத்துவமானி (தாவர நோயியல்) இல் மிகச் சிறந்த பெறுபேறுக்கான விவசாய விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் நினைவுத் தங்கப் பதக்கம் 46வது வருடாந்த பட்டமளிப்பு விழாவின் போது இந்தியாவின் பெங்களூரில் 13ம் திகதி சித்திரை மாதம் 2012ம் ஆண்டு வழங்கப்பட்டது.

மாணவர் செயற்றிட்டம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரு மாணவர்களும் சப்பிரகமுவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும் தமது இறுதியாண்டு செயற்றிட்டத்தினை பூர்த்தி செய்தனர். இவற்றுடன் ஹாடி உயர் விவசாயத் தொழிநுட்ப நிறுவனத்தை சேர்ந்த மூன்று மாணவர்களும், தேசிய தொழில் பயிற்சிப் பயிலுனர் அதிகார சபையின் நான்கு மாணவர்களும் தமது கட்டுறுப் பயிற்சியை பூர்த்தி செய்தனர்

2013ம் ஆண்டுக்கான திட்டம்

மரக்கறிப் பிரிவு

- கத்தரி, தக்காளி, கறிமிளகாய், பாகல் மற்றும் பீர்க்கு என்பவபற்றின் கலப்பின வர்க்கங்களின் விருத்தி.

- சிறகவரை, கொடிப் பயற்றை, போஞ்சி என்பவற்றின் திறந்த மகரந்தச் சேர்க்கையுடையும் வர்க்கங்களினது விருத்தி.

- பாரம்பரியமான மரக்கறிகளின் விதையுற்பத்தி

- தக்காளி, கத்தரி, கொடிப் பயற்றை, பீர்க்கு, பாகல், சிறகவரை என்பவற்றின் உற்பத்தியாளர் விதையுற்பத்தி, இம்முறை யே பயற்றையின் உற்பத்தியாளர் விதையுற்பத்தி உள்வாங்கப்பட்டது.

- ஏற்கனவே வர்க்கவிடுவிப்புச் செய்யப்பட்ட முதலாம் சந்ததி கலப்பின வர்க்கங்களினது பெற்றோர் குலவகையின் விதையுற்பத்தி.

- கலப்பின விதையுற்பத்தியின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான தந்திரோபாய மற்றும் அடிப்படை ஆராய்ச்சிகள் மற்றும் பொருத்தமான முகாமைத்துவ பொதிகளின் விருத்தி.

பழம் மற்றும் இழைய வளர்ப்பு

- இலங்கையில் உகுரஸ்ஸவினது ஆய்ந்தறிகை, பாதுகாப்பு மற்றும் பெருக்கமுறைகள் பற்றிய கற்கை

- உயர் தரம் மற்றும் உயர் விளைச்சல் கொண்ட பெற்றோரினை அடையாளம் காண்பதற்கென தூரியன் வர்க்கங்களின் இனவிருத்தி, இனக்கலப்பு நடவடிக்கைகளும் தூரியன் கலப்பின வர்க்க விருத்திக்குரிய பெற்றோரை இனங்காண்பதற்குரிய இன விருத்தி நடவடிக்கைகளும்.

- உயர் தரம் உயர் விளைச்சலுக்குரிய பலா மரங்களின் ஆய்ந்தறிகை, பாதுகாப்பு மற்றும் மதிப்பிடும் நடவடிக்கைகள்.

- தரமான உயர் விளைச்சல் வர்க்கங்களை விருத்தி செய்யவென டிராகன் பழ தாவரங்களில் தெரிவும் இனவிருத்தியும்.

- மா மரங்களை குட்டையாக உற்பத்தி செய்வதில் ஒட்டுக்கட்டை இடைக் கட்டைகளினது பாதிப்பு பற்றிய கற்கைகள்.

- உயர்தர, உயர் விளைச்சலுக்குரிய எம்பொன் வாழை வர்க்கங்களை

அடையாளம் காண்பதற்கான ஆய்ந்தறிகை, பாதுகாத்தல் மற்றும் மதிப்பீடு.

- கிடைக்கக் கூடியதாகவுள்ள உள்ளக இன விருத்திக் குலவகைகளினை பாவித்து பப்பாசி கலப்பின விருத்தியும் விளைச்சல் மற்றும் ஏனைய பண்புகளுக்காக கலப்பினங்களை மதிப்பீடு செய்தலும்.
- தூண்டப்பட்ட விகாரத்தின் மூலமான உயர் விளைச்சலுடைய, உயர் தரமான நோய் எதிர்ப்புடைய வாழை வர்க்கங்களினது விருத்தி.
- உயர் விளைச்சலுடைய, உயர் தரமான, நோய் சகிப்புத் தன்மையுடைய வாழை மூலவுயிருருத் தெரிவு.
- தூண்டப்பட்ட விகாரத்தினூடாக உயர் விளைச்சலுடைய, உயர் தரமான றம்புட்டான் வர்க்கங்களின் விருத்தி.
- உயர் விளைச்சலுடைய, உயர் தரமான பப்பாசி வர்க்கங்கள் / கலப்பின விருத்தி.
- றம்புட்டானில் விளைச்சல் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள் கொண்ட பொதியினது விருத்தி.
- பலாவின் பாதர்லோங் வர்க்கத்தினது விதைப் பருமன், ஒட்டுக் கட்டை, ஒட்டப்பட்ட தாவரங்களினது வளர்ப்பூடகங்கள் பற்றிய கற்கை.
- நான்கு மாதிரிக் கிராமங்களை தாபித்தல்.
- நான்கு ஆராய்ச்சிப் பண்ணைகளை விருத்தி செய்தலும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும்.

கிழங்குப் பயிர் மற்றும் மலரியல்

- வற்றாளை, மரவள்ளியில் வர்க்க விருத்தி நிகழ்ச்சிகள்.
- தெரிவு செய்யப்பட்ட மரவள்ளி வர்க்கங்களின் மதிப்பீடு.
- தெரிவு செய்யப்பட்ட வற்றாளை வர்க்கங்களினது NCVT சோதனை நிகழ்ச்சிகள் (ஐந்து இடங்களில்.)
- தெரிவு செய்யப்பட்ட வற்றாளை வர்க்கங்களினது VAT சோதனை நிகழ்ச்சிகள் (நான்கு இடங்களில்.)
- வற்றாளையின் CIP குலவகையின் உயர் உப்புச் சகிப்பு மற்றும் உயர் உலர் பொருள் உள்ளடக்கம் என்பவற்றுக்கான வர்க்க மதிப்பீடு.
- தெரிவு செய்யப்பட்ட வர்க்கங்களினது அறுவடைக் காலம்.
- சிபாரிசு செய்யப்பட்ட அடிப்படை நடுகைப் பொருள் உற்பத்தி.
- எல்லா கிழங்குப் பயிர்களினதும் மூலவுயிருருப் பேணுகை.
- கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனையவை தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்.
- HORDI இல் மாதிரி வீட்டுத் தோட்டத்தை பேணல்.
- வீட்டுத் தோட்டச் செய்கைக்குப் பொருத்தமானதும் குறை நுகர்ச்சியுடையன வுமான பயிர் வர்க்கங்களினது சேகரிப்பு, பேணுகை மற்றும் மதிப்பீடு.
- வீட்டுத் தோட்ட வடிவமைப்பு மற்றும் விருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறைகள்.
- அலங்காரத் தாவரங்களுக்கான சாத்தியவள முடைய சுதேச மற்றும் உள்நாட்டு தாவரங்களை ஒரு முதலான உற்பத்திகளாக விருத்தி செய்தல்.
- தக்காளி கலப்பின வர்கக்ங்கள் மீது காபனீரொட்சைட்டு செறிவூட்டல் செயற் றிட்டம்.
- "தாவரக் கருமூலவளங்களுக்கான ஒருங்கிணைந்த முகாமைத்துவ தொகுதி கள்" எனும் திட்டத்தின் கீழ் குறை

நுகர்ச்சியுடையனவும் வீட்டுத் தோட்டங்களுக்குப் பொருத்தமானவையுமான பயிர் வர்க்கங்களின் சேகரிப்பு, பாதுகாப்பு, பண்புப்படுத்தல் மற்றும் மதிப்பீடு.

- மரவள்ளி பயிருற்பத்திக்கும் பின்னறுவடை பதப்படுத்தலுக்குமான விவசாய இயந்திரமய மாக்கல் தொழில்நுட்பங்களினை மேம்படுத் தல்.

நோயியல்

- வாடல் மற்றும் கழுத்தழுகல் நோய்களுக் கெதிராக கத்தரி, தக்காளி மற்றும் கறிமிளகாய் மூலவுயிருருக்களின் தெரிவு
- நோய் அடையாளம் காணவென இறக்குமதி செய்யப்படுகின்ற விதை மற்றும் நடுகைப் பொருட்களுக்கான ஆய்வு கூட மற்றும் பச்சை இல்ல பரிசோதனைகள்.
- பக்ரீரியா நோய்க் கட்டுப்பாட்டில் (உள்வளர்ப்பு) இயற்கைப் பொலிமர் சேர்வைகளின் (கைற்றோசன்) வினைத்திறன்.
- றம்புட்டான், பாகல், மிளகாய் மற்றும் இலை மரக்கறிகளில் கைற்றோசன் இனது பீடைக் கட்டுப்பாட்டு ஆற்றலை பரீட்சார்த்த அளவில் சோதித்தல்.
- பழப்பயிர், நாற்று மேடைத் தாவரங்கள், இலை மரக்கறிகள் என்பவற்றில் (பச்சை இல்ல நிபந்தனையில்) இயற்கை பொலிமர் சேர்வைகளினது பீடைக் கட்டுப்பாட்டு மற்றும் வளர்ச்சி மேம்பாட்டு செயற்பாடு களை சோதித்தறிதல்.
- வர்த்தக ரீதியலான றைக்கோடேமா தொற்றுக் காரணித் தயாரிப்புக்களின் செயற்றிறனைச் சோதித்தறிதல்.
- தொம்சன் விதையற்ற திராட்சை வர்க்கத்தில் நோய்பீடை முகாமைத்துவமும் பழங்களி னது பருமனை அதிகரித்தலும்.
- கொடித் தோடையில் தண்டு வீக்க நோய் பற்றிய கற்கை.
- பயற்றை கழுத்தழுகல் நோய்க்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்.
- பூசணியில் வைரசு நோய்களுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்.
- சித்திரசு நோய்களுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்.
- கறிமிளகாய் மற்றும் அவரைப் பயிர்களில் அந்திரக்னோசுவின் விதை மூலமான பரவுகை பற்றிய கற்கை.
- தக்காளி, பூசணி, கறிமிளகாயைத் தாக்கும் பிரதான வைரசு நோய்களின் மூலக் கூற்றியல் கண்டுபிடிப்பும் பண்புப்படுத்தலும்.
- பூசணியில் தூள்பூஞ்சண, கீழ்பூஞ்சண நோய்களுக்கெதிராக புதிய பங்கசு நாசினிச் செயற்பாடுகளின் மதிப்பீடு.
- முன் மற்றும் பின்கூற்று வெளிறல் நோய்க்கெதிராக பங்கசு நாசினி திடநிலைகளின் மதிப்பீடு.
- வெண்டி தூள்பூஞ்சண நோய்க்கெதிராக பங்கசு நாசினித் திடநிலைகளின் மதிப்பீடு.
- நோய் அடையாளம் காணலும் ஆலோசனைச் சேவைகளும்.
- சிப்பிக் காளானை போத்தலில் வளர்க்கும் முறைமைகளை சோதித்தல்.
- பால் காளான் வளர்ப்புக்கான நெறிக் கோவை விருத்தி.
- *Pleurotus sajor – caju* மற்றும் *Pleurotus flabllatus* ஆகிய பயிர்களுக்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்க மதிப்பீடு சோதனை.
- உள்ளூர் காளான் வர்க்த்தினது செய்கை முறையை அடையாளம் காணல்.
- DNA தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி காளான் வர்க்கங்களை அடையாளம் காணல்.

- வெளிநாட்டுக்குரிய காளான் வர்க்கங்களுக்கான செய்கை முறையை அடையாளம் காணல்.

பூச்சியியல்

- ஆராய்ச்சிக் களங்களிலும் விவசாயிகளின் களங்களிலும் பூசணிக்கான மேம்படுத்திய ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதியினை சோதித்தல் (NARP திட்டம்).
- பூசணியில் வைரசு நோய்களை முகாமைத்துவம் செய்யவென சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனங்களினது மீளாய்வு.
- சித்திரசு பயிரில் இலைச் சுரங்கமறுப்பான், கறுப்புஈ, அழுக்கணவன் என்பவற்றுக்கு எதிரான பூச்சி நாசினிகளை தெரிதல் (NARP திட்டம்).
- சித்திரசுவில் சிற்றுண்ணிகளுக்கெதிரான நாசினிகளை தெரிவுச் செய்தல்.
- சேதன விவசாயச் செய்கையில் கோவா பீடைகளுக்கு எதிராக தாவர பீடை நாசினிகளின் செயற்றிறன் தொடர்பான கள மதிப்பீடு.
- வாழை நீள்மூஞ்சு வண்டுகளுக்கெதிரான பூச்சி நாசினிகளின் தெரிவு.
- பப்பாசியில் வெண்மூட்டுப் பூச்சியினைக் கட்டுப்படுத்த *Acerophagous papayae* எனும் வெளிநாட்டுக்குரிய ஒட்டுண்ணியின் கள வினைத்திறனை மதிப்பீடு செய்வதற்காக விடுவித்தலுக்குப் பின்னான களத்தரவு சேகரிப்பு.
- நோய்க் காரணி அறியப்படாத நாட்பட்ட கிட்னி நோய்க்கும் பயன்படுத்தப்படும பீடை நாசினிகள், வளமாக்கிகள், குடிநீரின் தரம் என்பவற்றிற்கிடையான தொடர்புடையமையை கண்டறிதல்.
- கொடித் தோடை தண்டு வீக்க காரணியை அடையாளம் காணலும் தண்டு வீக்க நிலையை முகாமைத்துவம் செய்தலும்.
- திராட்சையில் விதையற்ற தொம்சன் வர்க்கத்தில் நோய் பீடை முகாமைத்துவமும் பழப்பருமனை அதிகரித்தலும்.
- கத்தரியில் தேனீக்களால் நடைபெறும் மகரந்தச் சேர்க்கையும் அதன் மீது பூச்சி நாசினிகளின் விளைவும்.
- நோய்களுக்கென சிபாரிசு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதியினை பூச்சி நாசினிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மீளாய்வு செய்தல்.
- வற்றாளை நீள்மூஞ்சு வண்டு *(Cylas fornicariuos)* கட்டுப்பாட்டுக்கான முகாமைத்துவ பொதியொன்றினை அடையாளம் காணல்.

இரசாயனவியல்

- சேதனச் செய்கைகளின் கீழ் மரக்கறி விளைச்சலில் வெவ்வேறு வகை சேதன வளமாக்கி மூலங்களினது பாதிப்பு.
- சேதன மரக்கறிச் செய்கையில் போசணை முகாமைத்துவம்.
- மண், மரக்கறி விளைச்சல், மண் தரம் என்பவற்றின் மீது நீண்ட கால கூட்டெருப் பாவனையால் ஏற்படும் விளைவு.
- வாழையில் பொற்றாசியத்தின் முகாமைத்துவம்.
- அன்னாசியில் வளமாக்கிகளின் முகாமைத்துவம்.
- இலங்கையின் வெவ்வேறு விவசாய சூழலியல் வலயங்களின் மண் போசணை நிலை மதிப்பீட்டு கற்கைகள்.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர் (பதில்)	01
மேலதிக பணிப்பாளர் (பதில்)	02
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	18
நிருவாக உத்தியோகத்தர்	02
நிகழ்ச்சி திட்ட உதவியாளர் (விவசாயம்)	09
பொது முகாமைத்துவ உதவியாளர்	15
பண்ணை எழுதுவினைஞர்	04
விவசாய போதனாசிரியர்	19
காரியாலய கடமைச் சிற்றூழியர் (KKS)	01
சாரதி	08
களஞ்சியவாளர்	02
இயந்திர வல்லுனர்	02
இயந்திர இயக்குனர்	01
தச்சன்	02
உருக்கி ஒட்டுபவர்	01
மின்னியலாளர்	01
மின் வேலையாளர்	01
சமதரை புல் வெட்டி இயக்குனர் / புல் வெட்டுபவர்	02
சமதரை புல் வெட்டி இயக்குனர் உழவியந்திரம்	02
நீர்ப்பம்பி இயக்குபவர்	01
தேனீ செயல்முறை செய்து காட்டுபவர்	01
சுற்றுலா விடுதி பேணுபவர்	02
துப்பரவு தொழிலாளி	01
திறனற்ற வேலையாட்கள்	81
காவலாளி	08
மொத்தம்	**214**

1.2.1 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கன்னொறுவை

உணவு ஆராய்ச்சிப் பிரிவு, பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் (பூஆஅநி) கீழ் தொழிற்படுகின்றது. இப் பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட பிரதான இலக்குகளாக அறுவடைக்கு பின்னான தொழில்நுட்பம் மீதான ஆராய்ச்சிகள், பயிர் முன்னேற்ற நிகழ்ச்சிகளிலி ருந்து பெறப்பட்ட மாதிரிகளிலிருந்து உற்பத்தி பொருள் அபிவிருத்தியும், தரமதிப்பீடும் தொழில்நுட்பக் பரிமாற்றத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் ஆகியவை காணப்படுகின்றன

உணவு ஆராய்ச்சிப் பிரிவானது, மாகாண விவசாயத் தொகுதி ஏனைய அரச, அரச சார்பற்ற அமைப்புகள், தனியார் பிரிவு என்பவற்றுடன் தொழில்நுட்ப அபிவிருத்தியும் மாற்றிடும், உணவு சம்பந்தமான இயந்திரங்களின் பயன்பாடு என்பவை பற்றிய கூட்டு நிகழ்ச்சிகளின் ஈடுபட்டுள்ளது.

மேலும் இப்பிரிவானது பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மாணவர்களிற்கு பல்வேறுபட்ட நோக்கில் அறுவடைக்குப் பின்னான, பதப்படுத்தல் தொழில்நுட்பங்களில் அவர்களின் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குகின்றது.

பாதீடு

வேறுபட்ட தலைப்புகளின் கீழுள்ள வருடாந்த ஒதுக்கீடுகளும், செலவுகளும் அட்டவணை 1.2.1.1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 1.2.1.1 வருடாந்தப் பாதீடு –2012 (ரூ)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவீனம்	செலவீன வீதம்
மூலதனம்	1,900,000	446,558	24
மீண்டுவரும் செலவினம்	1,970,500	1,632,990	83
செயற்திட்டங்கள்	1,552,505	1,353,198	87
பெறுமதி சேர்த்தல் - பழங்கள், மரக்கறிகள், தானியங்கள் (NARP)	2,000,000	1,079,552	54
விவசாயிகளின் வருமானத்தை உணவு பதப்படுத்தல் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் மேம்படுத்துதல்	11,219,560	1,759,744	16
மொத்தம்	**17,090,060**	**4,918,844**	**29**

முன்னேற்றம்

கண்டுபிடிப்புகளும், உற்பத்திப் பொருள் அபிவிருத்தியும்.

- பூசணிச் சதையைப் பயன்படுத்தி பூசணியாலான கொறிப்புணவு (Snack) அறிமுகப்படுத்தப்பட்டது.
- கரம்பொல (Averrhoa carambola L.Cv 'FWANG TUNG') பச்சை கலந்த மஞ்சள் நிலையில் அறுவடை செய்யப்பட்டு பொருத்தமான சூழல் நிபந்தனைகள் வழங்கப்படும் போது வெற்றிகரமாகவும், இழிவுப்பதப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது.
- வற்றாளைக் கிழங்கு வர்க்கங்களிற்கு அவற்றின் சேமிப்புக் காலத்தை நீடிப்பதற்கு மிகவும் சிறந்த முறையாக மணலினுள் சேமித்தல் இனங்காணப்பட்டது.
- கிரிஅல, இராசவள்ளி, கட்டுஅல, குக்குள்அல, புத்சரண ஆகிய கிழங்குகளைப் பயன்படுத்தி பதப்படுத்தப் பட்ட உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அபிவிருத்தி செய்யப்பட்ட பொருட்களாவன புத்சரண மெதுமையான கேக், கிரிஅல பொரியல், கிரிஅல ஊறுகாய், கிரிஅல உடனடி ஊறுகாய், கிரிஅல கொறிப்புணவு, குக்குள்அல பொரியல், ஊறுகாய், இராசவள்ளி பொரியல் மற்றும் ஊறுகாய்
- பழங்களுடன் சேர்த்து ஜெலி தயாரிப்பில் கெசிபிசான் (Kesipissan) வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது.
- டிராகன் (Dragon) பழத்தைப் பயன்படுத்தி ஜாம், ஜெலி, யோகட், உடனடிப் பானம், அரிசி கலந்த டிராகன் பழப் புடிங் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன.
- அரிசி மாவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களாவன கீரை விதைகள் சேர்க்கப்பட்ட 100% அரிசிமாவினாலான பிஸ்கட், 100% அரிசிமா விலான சொக்கலேட் கேக், 100%, அரிசிமாவிலான மிருதுவான கேக் 100%, அரிசிமாவினையும் பழங்களையும் கொண்ட 'Wandu' (வண்டு)
- பூசணியாலான உடனடிப் பழப்பானம், பூசணி மாவினால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் என்பன உருவாக்கப்பட்டன.

அபிவிருத்தி தொழிற்பாடுகள்

- கொரியா அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்பட்ட பதப்படுத்தல் தொழிற்சாலை யை அமைத்தல் மூலம் 'விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தல்' எனும் நிகழ்ச்சித் திட்டம் தொடரப்பட்டது. சிறியளவில் பதப்படுத்துபவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு சிறியளவில் பதப்படுத்தும் இயந்திரம் அமைக்கப்பட்டது. சிறியளவில் பதப்படுத்துபவர்களை பயிற்சியளிப்பதற்கு சில பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

  தக்காளியின் அறுவடைக்குப் பின்னான கையாளுகை சம்பந்தமான அறுவடைக்குப் பின்னான பிரசுரம் ஒன்றை உருவாக்கு வதற்கு கொரிய குடியரினால் நிதியுதவி வழங்கப்பட்ட US$ 10,000 பெறுமதியான புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று அங்கிகரிக்கப்பட்டது.
- உணவு பதப்படுத்தல், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் போன்ற பிரிவு பற்றி அறிமுகப்படுத்துவதற்கு பல்ஊடக வெளிப்படுத்துகைகளைக் கொண்ட விழிப்பு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு, செயன்முறை அமர்வுகளும் நடாத்தப்பட்டன. இவ்விடயம் சம்பந்தமான சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரம் என்பன தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டன.
- உணவு ஆராய்ச்சிப் பிரிவிற்கான கட்டடங்கள் வெற்றிகரமாக புதுப்பிக்கப் பட்டன.

- பல்கலைக்கழக மாணவர்களை பயிற்று வித்தல்; ஊவாவெலஸ்ஸ, பேராதனை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, றுகுன ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஐந்து பட்டப்படிப்பு மாணவர்கள் தமது 3-4 மாத கால ஒப்படையை உணவு ஆராய்ச்சிப் பிரிவில் வெற்றிகரமாக நிறைவு செய்தனர்

- டிப்ளோமா மாணவர்களை பயிற்றவித்தல் - HARDI தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் உணவு ஆராய்ச்சிப் பிரிவில் நான்கு மாதங்கள் பயின்று, தொழில்நுட்பக் கல்லூரிக்கான ஒப்படையைத் தயாரித்தனர்

- விவசாய திணைக்களத்தின் நூற்றாண்டுக் கண்காட்சி ''தேசத்திற்கு மகுடம்'' என்பவற்றில் ஊக்கமாகப் பங்குபற்றினர். துண்டுப் பிரசுரங்களை வழங்குவதன் மூலம் உணவு பதப்படுத்தல், அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் பற்றி மக்களிற்கு விழிப்பை ஏற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் கண்காட்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டது (புதிய துண்டுப் பிரசுரங்கள்; பழங்கள், மரக்கறிகள், கிழங்கு பயிர்கள், நெல் சோயா ஆகியவற்றின் உணவு பதப்படுத்தல், அறுவடைக்கு பின்னான தொழில்நுட்பம் பற்றி தயாரிக்கப்பட்டன)

தொழில்நுட்பப் பரிமாற்றம்

- உணவு ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகூட பரிசோதனை வசதிகளை தொடர்ந்து வழங்கியது. இவ்வருடத்தில் தனியார் பிரிவு, சிறிய இடைத்தர பதப்படுத்துபவர் களிடமிருந்து உடனடிப் பரிமாற்றபானங்கள், சட்னி, கோடியல், ஜாம், நீரகற்றிய பழங்கள், மரக்கறிகள், களி (பேஸ்ட்) கொறிப்புணவு, பிரெஞ்ச் - பொரியல் (French– fries) ஆகியவற்றின் பல மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளூரில் சந்தைப்படுத்துவதற்கான தரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பரிசோதிக்கப்பட்டன.

- விவசாயத் திணைக்கள இனவிருத்தி யாளர்களிற்கு மரக்கறிகள் சம்பந்தமான நூற்றுப்பதினைந்து அறிக்கைகள், பழங்கள் சம்பந்தமான 34 அறிக்கைகள், கிழங்குகள் சம்பந்தமான 26 அறிக்கைகள், காளான் சம்பந்தமாள 5 அறிக்கைகள் விநியோகிக்கப் பட்டன.

- விவசாய வர்த்தக அபிவிருத்தியும், தகவல் சேவையும் (AGEDIS) நிதியுதவி வழங்கிய பயிற்சி – பழங்கள், மரக்கறிகளின் பதப்படுத்தல், அரிசி அடிப்படையான உற்பத்திப் பொருட்கள் பற்றி தனியார் பிரிவின் பங்குபற்றலுடன் இரண்டு பயிற்சி நிகழ்சிகள் நடாத்தப்பட்டன.

- தனியார் பிரிவு அமைப்புகள், மாவட்டப் பயிற்சி நிலையங்கள், விவசாய விதாதா (Vidatha) நிலையங்கள், விவசாய அமைச்சு, வர்த்தக அமைப்பு, கைத்தொழில் திணைக்களம், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், டிப்ளோமா மாணவர்கள், பல்கலைகழக மாணவர்கள் ஆகியோரிற்கு பழங்கள், மரக்கறிகளின் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம் பதப்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- உணவு ஆராய்ச்சி பிரிவு எல்லைக்குள் அரிசி சம்பந்தமான உற்பத்திகள் பற்றிய நான்கு பயிற்சி நிகழ்சிகள் (225 பேர்) பழங்கள், மரக்கறிகளின் பதப்புடுத்தல் சம்பந்தமான 45 நிகழ்சிகள் (1250 பேர்) பால் அடிப்படையிலான உற்பத்திகள் பற்றிய 11 நிகழ்ச்சிகள் இனிப்புகள் சம்பந்தமான 15 நிகழ்சிகள், சோயா அவரை அடிப்படை யிலான உணவுப் பொருட்கள், கிழங்குகள், சோளம், காளான் உற்பத்திகளும் பொதியாக்கலும் சம்பந்தமான 49 நிகழ்ச்சி கள் நடாத்தப்பட்டன.

- 350 மாணவர்களைக் கொண்ட ஒன்பது விவசாயிக் கல்லூரிகள் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தல் பற்றி பயிற்றுவிக்கப்பட்டன.

மூன்று பல்கலைக்கழக மாணவர் குழுக்கள் (110) அறுவடைக்குப் பின்னான தொழில் நுட்பம், உணவு பதப்படுத்தல் முறைகள் பற்றி பயிற்றுவிக்கப்பட்டன.

- தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சேர்ந்த ஏழு குழுக்களுக்கு (250 மாணவர்கள்) உணவுப் பதப்படுத்தல் சம்பந்தமான 15 விதாதா நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய போதனாசிரியர்கள் (விவசாயம் மற்றும் மனையியல்) ஆகியோர் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தல் பிரிவுகள் பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர்

வெளியீடுகள்

- உஆபி பாடவிடய அங்கத்தவராக திணைக்கள வெளியீடுகளின் இரண்டாம் பதிப்பில் (2012) அன்னாசிச் செய்கை, மா செய்கை என்பவற்றின் பதிப்பாசிரியர் சபையில் பங்குபற்றியது

2013 இற்கான திட்டம்

- பாதுகாக்கப்பட்ட பூசணி உற்பத்திகளின் அபிவிருத்தி
- அதிகரிக்கப்பட்ட எதிர்ப்புப் பொறிமுறையின் மூலம் மா, வாழை பப்பாசியில் அறுவடைக்குப் பின்னான நோய்களைக் குறைத்தல்
- அதிகரிக்கப்பட்ட பொட்டாசியப் பிரயோகத்தின் மூலம் அன்னாசியில் உட்புறமான கபில நிறமாதலை குறைத்தல்
- அதிகரிக்கப்பட்ட பொட்டாசியப் பிரயோகத்தின் மூலம் கொடித் தோடையில் பழச்சாற்றின் தரத்தினை உயர்த்தல்
- டொம் EJC வர்க்கத்தினைப் பயன்படுத்தி பாதுகாக்கப்பட்ட மா உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்
- டிராகன் பழ உற்பத்திப் பொருட்களைத் தயாரித்தல்
- பச்சை மிளகாய் உற்பத்திகளைத் தயாரித்தல்
- உள்ளூர் மிளகாய் வர்க்கங்களைப் பயன்படுத்தி மிளகாய்த்தூள் உற்பத்தி செய்தல்
- உள்ளூர் உணவுத் தயாரிப்புகளிற்கு சோளம், குரக்கன், சோயா மாக்கலவையை அபிவிருத்தி செய்தல்
- போஷணைமிக்க உடனடி ரொட்டி, பிட்டு கலவை தயாரித்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	03
விவசாயப் போதனாசியர்கள்	03
ஆராய்ச்சி உதவியாளர்	02
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்கள்	01
நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்	01
முகாமைத்துவ உதவியாளர்	02
ஆய்வுகூட உப உதவியாளர்	02
சாரதி	02
மின்சார வேலைகள் செய்பவர்	02
தொழிலாளி	05
தொழிலாளி (ஒப்பந்தம்)	07
காவலாளி	02
மொத்தம்	**31**

1.2.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), பண்டாரவளை

பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் பண்டாரவளை மற்றும் அதனுடன் தொடர்புடைய றகான்கல, மதுருகட்டிய, ஆராய்ச்சிப் பண்ணைகள் பிபிலை, முத்துக்கண்டிய ஆகிய நிலையங்களினால் ஊவாப் பிராந்திய, பலாங்கொடைப் பகுதி, சப்பிரகமுவ மாகாணம் ஆகிய பகுதிகளுக்கு தேவையான விவசாய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படுகின்றன. மேற்குறிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்நிலையங்களினால் முக்கியமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவ துடன், தரமான தாவர நடுகைப் பொருட்கள் (உருளைக்கிழங்கு, பழவகைகள், பூ வர்க்கங்கள்) உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன.

பாதீடு

அட்டவணை 1.2.2.1 வருடாந்தப் பாதீடு -2012 (ரூ)

செலவுத் தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவிடப்பட்ட தொகை	செலவு வீதம்
நடைமுறைக் கணக்கு	14,044,500	13,131,124	94
மூலதனக் கணக்கு	4,966,686	1,434,520	29
கருத்திட்டங்கள்			
KOPIA (மரக்கறிகள்)	200,000	61,484	31
KOPIA (மண்)	254,000	100,220	39
இலங்கையில் தோடைக் கைத்தொழில் அபிவிருத்தி	592,000	537,985	91
ANSOFT	75,000	71,421	95
இழைய வளர்ப்பு	2,800,000	2,261,066	81
தக்காளி கலப்பின வர்க்க உற்பத்தி	200,000	189,809	95
பண்ணை அபிவிருத்தி	1,400,000	1,285,505	92
விதை உருளைக் கிழங்கு உற்பத்தி	10,500,000	8,587,600	82
NARP			
தோடை வர்க்க / மூலவுயிருரு மதிப்பீடு	150,000	144,506	96
விதை உருளைக்கிழங்கு உற்பத்தி தொழில்நுட்ப			

அபிவிருத்தி / வர்க்க மேம்பாடு	600,000	588,844	98
போஞ்சி	500,000	405,936	82
வாழையில் விளைச்சல் / தர மேம்பாடு	50,000	49,963	99
மொத்தம்	**36,332,186**	**28,849,983**	**79**

முன்னேற்றம்

இக்காலப்பகுதியில் மரக்கறிகள், உருளைக் கிழங்கு, உப அயணமண்டல, வெப்ப மண்டல பழவகைகள், பூ வர்க்கங்கள் என்பவற்றில் ஆராய்ச்சி, அபிவிருத்தி செயற்பாடுகள் நடைபெற்றன.

ஆராய்ச்சி

- கொடிப் போஞ்சியில் 7 வர்க்கங்கள் அதன் விளைச்சல் மற்றும் இயல்புகட்காக மதிப்பிடப்பட்டன. BN – 16, ACC 6116 என்பன ஒப்பீட்டு வர்க்கம் KWG யை விட அதிக விளைச்சலைக் கொடுத்தது.
- ஆறு மரபோஞ்சி வர்க்கங்கள் அதன் விளைச்சல் மற்றும் இயல்புகளுக்காக மதிப்பிடப்பட்டது. BB 2904 ஒப்பீட்டு வர்க்கம் வேட்டை (Wade) விட அதிக விளைச்சலைக் கொடுத்தது.
- 143 போஞ்சி மூலவுயிருருக்கள் சேகரிப்பட்டு, அதில் 28 முன்னேற்றகரமான வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டன. அதில் இருந்து 15 வம்சாவழிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக தெரிவு செய்யப் பட்டன.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட 123 உருளைக்கிழங்கு வம்சாவழிகள் மதிப்பீட்டுக்காக பெருக்கப்பட்டன.
- தக்காளி வர்க்கம் பகத்தியா (Bhathiya) வின் பெற்றோர்களின் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆண் பெற்றோர் (P_3) – 1236g, பெண் பெற்றோர் (P_4) – 1346g,

பயிராக்கவியல்

உருளைக் கிழங்கு

- பொலித்தீன் கூடாரத்தில் உயர்தரமான விதை உருளைக் கிழங்கு உற்பத்திப் பரிசோதனையில், அடிப்படை ஊடாகமாக உமிக்கரியும், கீழ் மண்ணும் 1:1 வீதக்கலவையும், நிரப்பு ஊடகமாக உமிக்கரியும், கீழ் மண்ணும் 2:1 வீதக்கலவையும் சிறந்த வளர்ப்பு ஊடகமாக அறியப்பட்டது.

பயிர்ப் பாதுகாப்பு

- சுற்றாடலுக்கு நேசமுள்ள பங்கசு நாசினி கலிகிறீன் (Kaligreen®) (பொட்டாசியம் பைகார்பொனேற்) தக்காளி தூள் பூஞ்சண நோயை (*Leveillula trurica*) கட்டுப்படுத்து வதற்காக பொலித்தீன் கூடாரங்களில் பரிசோதிக்கப்பட்டது. இரண்டாவது கால தரவுகள் முதல் கால முடிவை (கல்கிறீன் பங்கசு நாசினி தூள் பூஞ்சண நோயை சிறந்த முறையில் கட்டுப்படுத்தியது) உறுதிப்படுத்துவதாக இருந்தது. எனவே இப்பங்கசு நாசினி கலிகிறீன் (Kaligreen) தக்காளி தூள் பூஞ்சண நோய்க்கு சிபார்சு செய்யப்பட முடியும்.
- ஒன்பது தாவரப் பொருட்கள் மற்றும் செயற்கை இரசாயனமான பைராகுளோஸ் ரோமின் (Pyraclostrobin) என்பன ரோசா செடியில் கரும்புள்ளி நோயை (*Diplocarpon rosae*) கட்டுப்படுத்துவதற்கு சோதனைக் குழாய் முறையில் (*in-vitro*)

பரிசோதிக்கப்பட்டன. கறுவா இலை (*Cinnomomun verum*), பிலிப்பீன் ரெட்லைம் தோடையின் தோல் (*Citrus auranfilolia*), ஆடாதோடை இலை (*Adathoda vasica*), தேசி இலை (*Citrus limonia*), வெள்ளைப் பூண்டு (*Allium sativum*) என்பன சிறப்பாக இந்நோயை கட்டுப்படுத்தின.

- போஞ்சி காய் துளைப்பான் (*Maruca vitrata*) பீடையை கட்டுப்படுத்துவதற்காக புதிய பீடை நாசினிகள் மதிப்பிடப்பட்டன. புளுமென்டி யாமைட் (Flubendiamide) 20WG @ 1.25g / 10L இப்பீடையைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தியது. இது இப்பீடைக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள நொவலூரோனின் (Novaluron) 100g / L EC கட்டுப்பாட்டை ஒத்திருந்தது.

- இலங்கையில் தோடைச் செய்கையில் துருச்சிற்றுண்ணி (*Phyllocoptruta oleivora*) அதிகளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே பீடை நாசினிகள் பல மதிப்பிடப்பட்டு, அதில் சல்பர் (sulfur) 80%WP @ 80g / 10L மற்றும் அபமெக்ரின் (Abamectin) 18g / L EC @ 6ml / 10L ஆகிய இரண்டு பீடை நாசினிகளும் இப்பீடையை சிறப்பாக கட்டுப்படுத்தியது.

- கோவாப் பயிரைத் தாக்கும் பீடைகளை குறைப்பதற்காக வெவ்வேறு பயிர்கள் கோவாப் பயிருடன் ஊடுபயிர் செய்யப்பட்டன. ஊடுப்பயிராக லீக்ஸ் (*Allium ampeloprasum var-porrum*) வர்க்கம் போறம் அல்லது மின்ற் (*Mentha spicata*) பயன்படுத்தப்படும் போது மயிர் கொட்டிகளின் (Caterpillars) தாக்கம் குறைந்து காணப்பட்டது. இப்பரிசோதனை தொடர்கின்றது. இதன் முடிவுகள் சேதனப் பசளை விவசாயிகளுக்கு மிக உதவியாக இருக்கும்

- பொலித்தீன் கூடாரங்களில் தக்காளி பயிர் செய்கை பண்ணப்படும் போது தென்னந் தும்பிற்கு பதிலாக விலை குறைந்த பைனஸ் (*Pinus caribaea*) துகள்கள் பரிசோதிக்கப்பட்டது. சிறிதாக வெட்டிய பைனஸ் துகள்கள் 1:1 வீதத்தில் தென்னந்தும்புடன் கலந்த ஊடகத்தில் வளர்க்கப்பட்ட தக்காளி, தனித் தென்னந்தும்பில் வளர்க்கப்பட்ட தக்காளித் தாவரத்துடன் ஒத்திருந்தது. அத்துடன் கூடிய விளைச்சலையும் கொடுத்தது. எனவே பொலித்தீன் கூடாரங்களில் தக்காளி தாவரம் வளர்க்கும் போது பைனஸ் துகள்கள் தென்னந்தும்பிற்கு பதிலாக ஒரு குறிக்கப்பட்ட அளவு வரை மாற்றீடு செய்யப்பட முடியும்.

- பிரபல்யமான ரோசா (*Rosa hybrida*) வர்க்கங்கள் நரை நிற பங்கசு (Gray mold-*Botrytis cinerea*) நோய்க்கு காட்டும் எதிர்ப்புதன்மை / தாங்கும் தன்மையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது. வர்க்கம் கிரான்காலா (Grandgala) இந்நோய்க்கு அதிக எதிர்ப்புத் தன்மையை காட்டியது.

- ஊவா மாகாண PTWG கூட்டத்தின் வேண்டுகோளுக்கிணங்க நெற் தாவரத்தில் வேர் முடிச்சு வட்டப் புழுவின் (*Meloydogyne graminicola*) தாக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. லுணுகலவில் உள்ள வயல்களில் வேர்முடிச்சு வட்டப்புழுவின் தொற்று பரிசோதிக்கப்பட்டது. உடகிருவே யில் உள்ள கண்ணிலாயாய (Gannilayaya), லிவ்கல (Lewgala) ஆகிய இடங்களில் உள்ள இரு வயல்களில் வேர்முடிச்சி வட்டப்புழுவின் தொற்று இருப்பது அவதானிக்கப்பட்டது. எனினும் விளைச்சலை பாதிக்கும் அளவுக்கு செறிவை கொண்டிருக்கவில்லை

- ஆராய்ச்சியை விட, பயிர் பாதுகாப்பு பகுதியால் விவசாயிகளின் நோய், பீடைப்

பிரச்சினைகட்கு தீர்வுகள் வழங்கும் சேவை மேற்கொள்ளப்படுகின்றன. கிட்டத்தட்ட 120 மாதிரிகள் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டது. அதற்கான தீர்வும் கொடுக்கப் பட்டது. போஞ்சி மற்றும் மலர் தாவரங்களில் ஏற்படும் நோய்களின் மாதிரிகளே அதிகளவில் பெறப்பட்டன.

பூங்கனியியல்

- பேரிக்காயில் பகுதி வன்வைரத் துண்டங்கள் வேர் விடுவதற்கு, கீழ் மண்ணே சிறந்தது. இதில் 47% வெற்றி பெறப்பட்டது.
- தோடையில் பழங்களின் தரத்தில் ஒட்டுக்கட்டையின் தாக்கத்தை அறிய ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டன. இப்பரிசோத னைக்கு தேவையான ஒட்டுக்கட்டைகள் இக்காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டன.

இழைய வளர்ப்பு

- இழைய வளர்ப்பு உருளைக்கிழங்கு தாவர உற்பத்தியில் கித்துள்மாவை (0.7%) ஏகாருக்கு பதிலாக, திண்மமாக்கும் பதார்த்தமாக பாவிப்பதன் மூலம், இழைய வளர்ப்பு உருளைக்கிழங்கு தாவர உற்பத்திக்கான செலவை குறைக்க முடியும்.
- ஸ்ரோபரியில் இலை "எக்ஸ்பிலான்ற்" (Explant) பாவித்து இழையவளர்ப்பு மூலம் உருவாக்கப்படும் தாவரங்கள் அந்தரக் நோஸ் (Anthracnose - Colletotrichum gloeosporiodae) நோய்க்கு அதிக எதிர்ப்பை காட்டியது. ஓடிகளில் இருந்து உருவாக்கப் பட்ட தாவரங்களுடன் ஒப்பிடும் போது இதில் நோயின் தாக்கம் குறைவு
- தோட்டத்தில் வளர்க்கப்படும் ஜேர்பெரா தாவரத்திற்கு 6-10 ppm பென்சைல் அமின்பியூரின் (benzyleaminpurine) பாவிக்கும் போது தாவரத்தில் உறிஞ்சிகளின் உற்பத்தி அதிகரித்தது.

மலரியல்

- ரோஸில் (*Rosa hybrida*) அதிகூடிய விளைச்லை பெறுவதற்கு தாவர அடர்த்தி 22plant / m^2 ஆக இருத்தல் வேண்டும். இத்தாவர அடர்தியை 30x15cm தாவர இடைவெளியில் நடுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.
- ஜேர்பெராவில் (*Gerbera jamesonii*) இலைகளை அகற்றும் போது மலர் உற்பத்தியில் ஏற்படும் தாக்கத்தை அறிய பச்சை இல்லத்தில் பரிசோதனை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மண் விஞ்ஞானம்

- விதைப் பருமனையுடைய உருளைக்கிழங்கு உற்பத்தியில் 50Kg/ha பொஸ்பரஸ் (50Kg/ha p), 75Kg/ha பொட்டாசியம் (75Kg/ha K) என்பன பயன்படுத்தப்படும் போது விளைச்சல் அதிகரித்தது.
- தக்காளி, போஞ்சி ஆகிய பயிர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட இரசாயன பசளையுடன் சேர்த்து சேதனப் பசளையையும் பாவிப்பதன் மூலம் தேவையான இரசாயன பசளையின் அளவை 75% ம் வரை குறைக்க முடியும். தக்காளியில் மூன்று போகத்திற்கும், போஞ்சியில் நான்கு போகத்திற்கும் விளைச்சல் குறைவு ஏற்படவில்லை.

விஷேட கருத்திட்டங்கள்

இக்காலப்பகுதியில் ஆராய்ச்சிச் செயற்பாடு களைத் தவிர, விஷேட திட்டங்கள் இந்நிலையத்தில் உள்ள உத்தியோகத்தர் களினால் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டங்களுக் கான நிதி விவசாய அமைச்சினால் வழங்கப்பட்டது. ஊவா மாகாணத்தில் உள்ள விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டங்களின் நோக்கமாகும்.

சேவைகள்:-

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- விதை அத்தாட்சிப்படுத்தும் நிலையத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உற்பத்தியாளர் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. கொடிப் போஞ்சி வர்க்கம் கெப்பெற்றிப்பொல நில் 208kg (Keppetipola nil – 208kg), பலாங்கொட நில் 261kg (Balangoda nil – 26kg), பண்டாரவளை கிறீன் 43kg (Bandarawela Green – 43kg), மர போஞ்சி வர்க்கம் வேட் 3kg (Wade 3kg)
- சேதனப் பசளை உற்பத்தி, தர உயர்வுத் திட்டத்தின் கீழ் 1500kg சேதனப் பசளை உட்புகுத்தி உற்பத்தி செய்யப்பட்டு, அவை 5kg பக்கற்றுகளாக பொதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு சேதனப்பசளை உற்பத்திக்காக பகிர்ந்தளிக்கப்பட்டது.

மண் பரிசோதனை அடிப்படையில் உரச் சிபார்சு நிகழ்ச்சி

- முன்னூற்றி முற்பத்தி மூன்று (333) மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சிபார்சு வழங்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரம்பல் நடவடிக்கை

- ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாண PTWG கூட்டங்கள் நான்கில் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அவர்களால் விரிவாக்க உத்தியோகத்தர் களுக்கு போகத்திற்கு முன்னான பயிற்சி வழங்கப்பட்டது.
- மலர்த் தாவரங்கள், உருளைக்கிழங்கு, பேரிக்காய், ஆனைக்கொய்யா போன்ற பயிர்களின் பயிர்ச் செய்கை சம்பந்தப்பட்ட பயிற்சிகள் பல வழங்கப்பட்டன. சில பயிற்சிகள் விவசாயிகளின் வயல்களில் நடைபெற்றது.
- மரக்கறிகள், பழ வகைகள், மலர்த் தாவரங்கள், உருளைக்கிழங்கு என்பன பயிரிடும் விவசாயிகளுக்கு அவற்றுடன் தொடர்புடைய நோய், பீடை பராமரிப்பு சம்பந்தமான அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.
- 1500 பாடசாலை மாணவர்கள், 175 விவசாயிகள் ஆகியோருக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2013 ம் ஆண்டிற்கான திட்டம்

மரக்கறிகள்:~

- மர மற்றும் கொடி போஞ்சிக்கான NCVT திட்டம்
- கொடி போஞ்சிக்கான AYT திட்டம்
- கத்தரி மூலவுயிருருக்கள் சேகரிப்பும், மதிப்பிடலும்
- உருளைக்கிழங்கு மூலவுயிருருக்களை மதிப்பிடல்
- கொடி போஞ்சி வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- பாத்திய (Bathiya) தக்காளி வர்க்கத்தின் பெற்றோர் விதை உற்பத்தி
- கொறிய வர்க்கங்கள் (சயீனீஸ் கோவா Chinese cabbage, லற்றீயூஸ் - Lattuce, முள்ளங்கி - Radish குடை மிளகாய் - Red pepper, வெள்ளரி - Cucumber, இனிப்பான பூசணி - Sweet pumpkin) மற்றும் தொழில் நுட்பங்கள் மதிப்பிடல்
- பொலித்தீன் கூடாரங்களில் வளர்க்கப்படும் பயிர்களின் உற்பத்தி, தரம் என்பவற்றை உயர்த்துவதற்கான தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்

உருளைக்கிழங்கு

- வேருடனான தண்டுத் துண்டங்கள் மூலம் உயர் தரமான விதை உற்பத்தி
- ARS சீதா எலியவுடன் சேர்ந்து NCVT, VAT பரிசோதனைகள் மேற்கொள்ளல்
- மண் அற்ற ஊடகம், காற்றூடகம் என்பவற்றைப் பாவித்து, விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கான தொழில்நுட்ப அபிவிருத்தி
- சிறு கிழங்கு, வேருடனான தண்டு துண்டங்கள் ஆகியவற்றை பாவித்து உருளைக்கிழங்கில் அதிக விளைச்சலை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி

பூங்கனியியல்

- உள்ளூர் மற்றும் யப்பான் தோடை வர்க்கங்கள் ARS மொணராகலை, ARS றகன்கல, RARDC பண்டாரவெல ஆகிய நிலையங்களில் மதிப்பிடல்
- வெப்ப மண்டல பழவகைகளின் தாய்த் தாவரங்கள் பராமரிப்பு - அப்பிள், பேரிக்காய், பீச், சயீனீஸ்கொய்யா, ஆனைக்கொய்யா, கரம்போலா
- தோடையில் அடிக்கட்டை வர்க்கத்திற்கான மதிப்பிடல்
- பேரிக்காய், பீச் என்பவற்றில் அறுவடைக்குப் பிந்தியதான வாழ்வுக் காலத்தை அதிகரித்தல்
- தோடையில் பூ உற்பத்தி ஊக்குவிப்பு ஆராய்ச்சி

பயிர்ப் பாதுகாப்பு

- மரக்கறிகள், பழங்கள், உருளைக்கிழங்கு, மலர்த் தாவரங்கள் என்பவற்றின் நோய் பீடைகளுக்கு பங்கசு நாசினி, பீடை நாசினி என்பன தெரிவு செய்தல்
- றோசா கருப்புள்ளி நோயை குறைப்பதற்காக தாவர பிரித்தெடுப்புக்கள் மதிப்பிடல்
- தோடைக்கு IPM அபிவிருத்தி
- தாவர பிரித்தெடுப்பக்களை பாவித்து கோவாவில் இலை நோயை குறைத்தல்
- கொடி போஞ்சியில் வெண்ஈயின் (Whitefly) தொகை மாறுபடும் விதத்தை அறிதல்
- ரிதோனியா டைவேர்சிபோலியா (*Tithonia diversifolia*) மூலிகை பிரித்தெடுப்பை பாவித்து கோவாவில் டைமன்ட முதுகு அந்தை (Diamonaback moth) கட்டுப்படுத்துவதற்கான சாத்தியகளை அறிதல்
- தோடை துருசிற்றுண்ணிக்காக வர்க்கங்கள், இரசாயனங்கள் தெரிவு
- சிற்றுண்ணி கட்டுப்பாட்டிற்காக சிற்றுண்ணி நாசினிகளை (acaricides) மதிப்பிடல்
- பனிப்பூச்சியின் தொகை, மற்றும் தக்காளி புள்ளி வாடல் நோய் (tomato spotted wilt virus – TSWV) என்பவற்றில் பத்திரக்கலவைகளின் தாக்கம்

மலரியல்

- ஜேபெராவில் நடுகைப் பொருட்களின் மதிப்பீடு.
- கிரிசாந்தமம் (Chrysanthemum) மலர்களின் தரத்தை உயர்த்துதல்
- ஜேர்பெராவில் இலைகள் அகற்றப்படும் போது மலர்களின் உற்பத்தி, தரம் என்பவற்றில் ஏற்படும் தாக்கம்.
- கிரிசாந்தமம் (Chrysanthemum) மலர்களின் உற்பத்தி, தரம் என்பவற்றில் வளர்ச்சிச் சீராக்கிகளின் தாக்கம்

- கிரிசாந்தமம் (Chrysanthemum) வளர்ச்சி, மற்றும் மலர் உற்பத்தியில் நடுகைப் பொருட்களின் வயதின் தாக்கம்

இழைய வளர்ப்பு

- tsu;g;G XNkhd; (hormones) பாவிப்பதன் மூலம் ஜேர்பெராவில் உறிஞ்சிகளின் உற்பத்தியை அதிகரித்தல்
- வெவ்வேறு "எக்ஸ்பிலான்ற்" (Explant) பாவித்து இழையவளர்ப்பு மூலம் ஜேர்பெரா இனப்பெருக்கம் செய்யப்படுவதற்கு மிகப் பொருத்தமான இழையவளர்ப்பு நடைமுறை அறிமுகம் செய்தல்
- உருளைக்கிழங்கில் நுண் முகிழ்களின் உற்பத்தியை அதிகரித்தல்
- சோதனைக் குழாய் முறையில் பேரிக்காயில் வேர் உருவாக்கல்

மண் விஞ்ஞானம்

- விதை உருளைக்கிழங்கு உற்பத்தியில் N,P,K அளவை தீர்மானித்தல்
- பொலித்தீன் கூடாரங்களில் Go உற்பத்தியில் உரப்பராமரிப்பு
- மண் அற்ற ஊடகம் மற்றும் காற்றூடகம் என்பவற்றிற்கு, நிறைவான போசணை கரைசல் தயாரித்தல்
- கோவாவிற்கு வெவ்வேறு உர முகாமைத்துவங்களைப் பரிசோதித்தல்
- தக்காளியில் சுவட்டு மூலகத்தின் (micronutrient) தாக்கம்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	12
கண்காணிப்பு அலுவலகர்	01
பொருளியல் உதவியாளர்	01
நிகழ்ச்சித் உதவியாளர்	05
ஆராய்ச்சி உதவியாளர்	07
விவசாயப் போதனாசிரியர்	05
ஆய்வுகூட உப உதவியாளர்	01
பரிபாலன அலுவலகர்	01
பொதுச் சேவை முகாமைத்துவ உதவியாளர்	09
K.K.S	02
சாரதி	02
உழவு இயந்திர இயக்குனர்	01
தாவர ஒட்டுனர் (Budder)	01
மேசன்	01
தச்சன்	01
காவலாளி	07
சுற்றுலா விடுதிக் பொறுப்பாளர்	01
தொழிலாளி (நிரந்தரம்)	41
தொழிலாளி (ஒப்பந்தம்)	49
மொத்தம்	**149**

1.2.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை

பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RARDC) – மாக்காந்துறை ஆனது கம்பகா, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங் களின் விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்கின்றது. இரண்டு விவசாய ஆராய்ச்சி நிலையங்கள்- கல்பிட்டிய, வண்ணாத்தவில்லு மற்றும் மூன்று இசைவாக்க ஆராய்சி அலகுகள்- தப்போவ, இங்கினிமிற்றிய, வாரியபொல என்பன இதன் கீழ் அடங்கும். இந்த நிலையங்கள், அலகுகள் குறிப்பிட்ட பகுதிக்கே உரிய ஆராய்ச்சி, அபிவிருத்தி வேலைகளை கையாள்வதன் மூலம் ஆராய்ச்சி, அபிவிருத்தி வலைப்பின்னலை உறுதியாக்கு கின்றன. விவசாயத் திணைக்களத் தின் நாடளாவிய ஆராய்ச்சி, அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் மாகாண சபைகளின் தேவையுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளையும் மேற்கொள்கின்றது. இந்த நிலையம் விவசாயத் திணைக்களத்தில் உள்ள மற்ற நிறுவனங்கள், நிலையங்களுடன் இணைப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், வெளி நிறுவனங்களான விவசாயபீடம், பண்ணைகள் பராமரிப்பாளர், சர்வகலாசாலை-வயம்ப, லங்கா பொஸ்பேற், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடனும் தொடர்பு கொண்டு ள்ளதுடன் வெவ்வேறு வகையான ஆராய்ச்சி, விரிவாக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

இந்த நிலையத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்திச் செயற்பாடுகள் தென்னைப் பயிரை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான தொழில்நுட்பங்கள் உருவாக்கத் தின் மூலம் தென்னந்தோப்புகளில் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதாகும். இந்நிலையம் பழமரங்கள், மரக்கறிகள், கிழங்கு வகைகள், காளான், மலர் தாவரங்கள் போன்றவற்றிற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்கின்றது. இதைத்தவிர கூட்டெரு உற்பத்தி, மண்புழுஉரம், சேதனைப் பண்ணை, மரக்கறி உற்பத்தியாளர் விதை உற்பத்தி, பழமரங்கள் நடுகைப்பொருள் உற்பத்தி, விவசாயிகளின் வயல்களில் பயிர் உற்பத்தி, விவசாய நிலங்களில் பரிசோதனை, மண் பரிசோதனை அடிப்படையில் உரச்சிபார்சு செய்தல் என்பவற்றுடன் தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் PTWG கூட்டத்தின் வேண்டுகோளுக் கிணங்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

பாதீடு

வெவ்வேறு செலவுத் தலைப்புகளில் ஒதுக்கபட்ட தொகையும், செலவும் அட்டவணை 1.2.3.1ல் தரப்பட்டுள்ளது

அட்டவணை 1.2.3.1 வருடாந்தப் பாதீடு – 2012(ரூ)

செலவுத்தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவு செய்யப்பட்ட தொகை	செலவு %
மூலதன கணக்கு	7,184,989	2.274,260	32
நடைமுறை கணக்கு	6.997,220	6,497.217	93
கூட்டெரு உற்பத்தியும், பாவனை மேம்பாடும்	4,588,000	3,755,000	82
NARP- பூசணி	10,000,000	992,000	10
NARP- அந்தூரியம்	1,275,000	1,221.350	96
இழையவளர்ப்பு செயற்திட்டம்	2,800.000	2,670,000	95
மாதுளை	900,000	890,000	99
மொத்தம்	**33,745,209**	**18,299,827**	**54**

முன்னேற்றம்

பழமர இனவிருத்தியும் இழையவளர்ப்பும்

அன்னாசியில் கலப்பினப் பிறபாக்கத் திட்டம்

- தண்டு வெட்டுத்துண்ட தொழில்நுட்பத்தை பாவித்து H1, H2, H3,H4 ஆகியவற்றின் நடுகைப்பொருட்கள் உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டது.
- கலப்பின வர்க்கத்துடன் மொரிசஸ் (Mauritius) பின்முகக் கலப்பு திட்டம்.

அன்னாசி முலவுயிருரு சேகரிப்பும், மதிப்பிடலும்

- மூலவுயிருருக்கள் வயலில் மீள ஸ்தாபிக்கப் பட்டது (11 வளர்ப்புகள்)

இழையவளர்ப்பு முலம் அன்னாசி, வாழை ஆகியவற்றின் நடுகைப்பொருள் உற்பத்தி

- அன்னாசி வளர்ப்புகள் (cultures) பெருக்கல் அவத்தையில் உள்ளன.
- வாழை வளர்ப்புகள் (cultures) ஆரம்பிக்கப் பட்டன.

பழப் பயிரரக்கவியல்

மாதுளை கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி

- F1 பரம்பரையின் விளைச்சலும், பழங்களின் தரமும் பெறப்பட்டது.
- வாழை மூலவுயிருருக்களின் சேகரித்தல், மதிப்பிடல், இயல்புகள் அறிதல்.
- மாதுளையில் கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி
- வாழை வர்க்கங்களின் (கதலி) மதிப்பிடல்.

- தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை-வாழை.
- மாதுளை வன்வயிரத்துண்டங்களில் தாவர வளர்ச்சி சீராக்கிகளின் தாக்கம்.

மலரியல்

- அந்தூரியம் அன்ரேனம் (*Anthrium andraenum*) பயிர்செய்கைக்கு செலவு குறைந்த நிழல் வீடு உருவாக்கப்பட்டது.
- அந்தூரியம் அன்ரேனத்திற்கு (*Anthrium andraenum*) நைதரசனை பிரித்து வழங்கும் போது விளைச்சலில் ஏற்படும் தாக்கம்.
- ISTI, கன்னொறுவையில் நடைபெற்ற வர்க்க சிபார்சு கூட்டத்தில் நான்கு உயர்தர சிவப்பு நிற அந்தூரியம் அன்ரேனம் (*Anthrium andraenum*) சமர்ப்பிக்கப்பட்டன.

மண் விஞ்ஞானமும், கூட்டெருவும்

- கூட்டெரு மாதிரிகள் 66 பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் தரம் மதிப்பிடப்பட்டது.
- மண்மாதிரிகள் 44 பெறப்பட்டு, பரிசோதிக்கப் பட்டு சிபாரிசுகள் வழங்கப்பட்டன.
- மாகாண விவசாய திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட 384 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு நெற்பயிருக்கு உர சிபார்சு வழங்கப்பட்டது.
- 34 தாவர மாதிரிகள் பரிசோதனை தேவை களுக்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- தப்போவ மற்றும் அராச்சிகற்றுவ (Thabbowa and Arachchikattuwa) ASC பிரதேசத்தில் இருந்து 79 மண் மாதிரிகள் பெறப்பட்டன.

பூச்சியியல்

- சம்பிரதாய (conventional), சேதன பயிர் செய்கை முறைகள் வாழையில் ஒப்பிடப் பட்டன
- சம்பிரதாய (conventional), சேதன பயிர் செய்கை முறைகள் அன்னாசியில் ஒப்பிடப் பட்டன.

நோயியல்

- ஐந்து காளான் வர்க்கங்கள் NCVT யில் பரிசோதிக்கப்பட்டன.
- சம்பிரதாய மற்றும் சேதன பயிர் செய்கை முறையில் வளர்க்கப்படும் வாழை வர்க்கங்கள் அம்பன், சீனிக்கதலி, கப்பல், கதலி என்பவற்றில் சிகாற்றோகா (sigatoka) நோய் பரவும் வீதத்தை மதிப்பிடல்.

மரக்கறிகள்

- உற்பத்தியாளர் விதை – புடோல் TA2 – 5.420 Kg.
- உற்பத்தியாளர் விதை – பாகற்காய் தின்னவேலி – 1.650 Kg
- உள்ஹூர் பூசணி வர்க்கம் இரண்டு NCVT திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டது.

கிழங்குப் பயிர்கள்

- LCIZ பிரதேசத்தில் வற்றாளைக்கிழங்கின் விளைச்சலில் வெவ்வேறு N-P-K மட்டங்களின் தாக்கப் பரிசோதனை. இந்தப்பரிசோதனை செப்ரெம்பர் 2012ல் ஸ்தாபிக்கப்பட்டது, விளைச்சல் தற்சமயம் பெறப்படுகின்றன. இதன் முன்னேற்றம் நிலைய அறிக்கையில் சேர்க்கப்படவுள்ளன.
- புதிய தாவர விதான பரிபாலன தொழில் நுட்பத்தின் மூலம் மரவள்ளியின் விளைச்சல் திறனை அதிகரித்தல்.
- தரமான மரவள்ளி கிழங்கின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் (ஓமோன் பரிசோதனை).

தொழில்நுட்பப் பரம்பல்

அட்டவணை 1.2.3.2 தொழில்நுட்பங்கள் பரவலாக்கம் -2012

நிகழ்ச்சியின் தலைப்பு	துண்டுப் பிரசுரம்	வயல் விழாக்கள்	மண் பரிசோதனை	கண் காட்சி
கூட்டெரு	364,650	-	66	03
மண்	-	-	441	-
காளான்	400	-	-	-
நோயியல்		01	-	-
மாதுளை	5000	-	-	-
மலரியல்	3800	02	-	-

தாவர நடுகைப்பொருள் உற்பத்தி -2012

அட்டவணை 1.2.3.3 தாவர நடுகைப்பொருள் உற்பத்தி -2012

நிறுவனம்	பயிரின் பெயர்	விற்கப்பட்ட தாவரங்கள்
RARDC-MK	டிறகன் பழம்	365
	அந்தூரியம்	500
	அன்னாசி	-
	வாழை	500
ARS-கல்பிட்டிய	மாதுளை	5278
	முந்திரிகை	614
	கொய்யா	1781
	டிறகன் பழம்	5

பயிற்சி நிகழ்ச்சிகள்

அட்டவணை 1.2.3.4 ஆண்டு 2012ல் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சிகள்

நிக்ழ்ச்சித் தலைப்பு	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை
கூட்டெரு	50	3600
காளான்	07	200
அன்னாசி	06	300
மலரியல்	07	508
வீட்டுத்தோட்டம்	40	1800
கிழங்குப் பயிர்	06	175
வாழை	20	400
டீறகன் பழம்	10	300
மரக்கறி	08	185
ARS- கல்பிட்டிய மாதுளை, கொய்யா, முந்திரிகை, டிறகன் பழம்	10	284

ஆலோசனை சேவைகள்

அட்டவணை 1.2.3.5 ஆலோசனை சேவைகள் - (2012)

வயல்	சேவையின் எண்ணிக்கை
கூட்டெரு	500
காளான்	210
அன்னாசி	150
மலரியல்	18
வீட்டுத்தேட்டம்	10
கிழங்குப் பயிர்	150
டீறகன் பழம்	250
வாழை	350
நோயியல்	200
பூச்சியியல்	05
மரக்கறி	35

திட்டம் – 2013

பழஇனவிருத்தியும், இழையவளர்ப்பும்

- அன்னாசி கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி.
- அன்னாசியின் மூலவுயிருருச் சேகரிப்பும், மதிப்பிடலும்.
- இழையவளர்ப்பு மூலம் அன்னாசி, வாழை நடுகைப் பொருள் உற்பத்தி
- புதிய அந்தூரிய வர்க்கங்கள்(MK30, MK36) நுண்-இனப்பெருக்கம் செய்வதற்கான ஊடக நடைமுறை அபிவிருத்தி செய்தல்.
- அன்னாசி கலப்பின வர்க்கங்கள் நுண் இனப்பெருக்கம் செய்வதற்கான ஊடக நடைமுறை அபிவிருத்தி செய்தல்.
- அன்னாசியின் விளைச்சலை காட்டும் வயல் பராமரிப்பு.

பயிராக்கவியல் - பழம்

- வாழை மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பிடல், இயல்புகள் அறிதல்.
- மாதுளையில் கலப்பினப் பிறப்பாக்க நிகழ்ச்சி
- வாழை வர்க்க (சீனி கதலி) மதிப்பீடு.
- வாழை ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை.
- மாதுளை பகுதி வன்வைரத்துண்டத்தில் வளர்ச்சி சீராக்கியின் தாக்கம்.

பூச்சியியல்

- கொய்யா, மாதுளை, அன்னமுன்னா என்பவற்றில் பீடை பரிபாலனம்.
- மாமரத்தில் செதில் பீடையின் பரவலை மதிப்பிடல்.
- மா - செதில் பீடையைப் பாதுகாப்பான இரசாயனம் கொண்டு கட்டுப்படுத்தல்.

மண் விஞ்ஞானம், கூட்டெரு

- வெவ்வேறு அளவு ERP பாவிப்பதனூடாக கூட்டெருவில் பொஸ்பரஸ் கிடைக்கும் அளவு அதிகரிப்பு.
- காளான் பயிர்ச்செய்கை பரிசோதனையும், காளான் வித்தி உற்பத்தியும்.
- சோளம் (*Zea maize*) பரிசோதனை (சேதன, இரசாயன பசளை பாவனை).

மரக்கறி

- பத்திரக்கலவைப் பாவனைக் (தெறிக்கும் தன்மை கொண்ட), களை கட்டுப்பாடு என்பவற்றினூடாக பூசணியில் பீடைக் (வைரஸ் காவி) கட்டுப்பாடு.
- NCVT திட்டமும், உற்பத்தியாளர் விதை உற்பத்தியும். பாகல்-தின்னவேலி. புடோல்-TA2.

நீர் முகாமைத்துவம்

- நுண் - நீர்ப்பாசனமுறை அன்னாசிப்பயிருக்கு மதிப்பிடல்.

நோயியல்

- தக்காளி பக்றீரியல் வாடலை வெவ்வேறு விதமான மண் திருத்திகள் மூலம் கட்டுப்படுத்துதல்.
- உள்ஞரில் கிடைக்கும் காளான் வர்க்கங்களை எதிர்கால ஆராய்ச்சிகளுக் காக சேகரிப்பதும், பாதுகாப்பதும்.

மலரியல்

அந்தூரிய மூலவுயிருருக்களைப் பாதுகாப்பதும், பயன்படுத்துவதும்.

- இனவிருத்தி
- மதிப்பிடல்
- தாவர நடுகைப்பொருள் உற்பத்தி

- விபரப்பட்டியல் (catalogue) தயாரிப்பு

கிழங்குப் பயிர்கள்

- LWIZ பிராந்தியத்தில் வெவ்வேறு N-P-K அளவுகள் வற்றாளை விளைச்சலில் உள்ள தாக்கம்.
- புதிய தாவரவிதான பரிபாலன தொழில்நுட்பத்தின் ஊடாக மரவள்ளி விளைச்சல் திறன் அதிகரிப்பு.
- தரமான மரவள்ளி கிழங்கின் உற்பத்திறனை அதிகரித்தல் (ஓமோன் பரிசோதனை)

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பிரதிப்பணிப்பாளர்(ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	11
விவசாய கண்காணிப்பு அலுவலகர்	02
நிகழ்ச்சி உதவியாளர்	04
விவசாய ஆலோசகர்	22
ஆராய்ச்சி உதவியாளர்	08
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பண்ணை முகாமையாளர்	01
பண்ணை எழுதுவினைஞர்	01
சாரதி	03
பணியாள்	01
மேசன்	01
காவலாளி	06
இயந்திர வல்லுநர்	01
நாற்றுமேடை தொழிலாளி	01
மின் உதவியாளர்	01
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	02
உழவு இயந்திர இயக்குனர்	04
சுத்தம் செய்யும் தொழிலாளி	01
நீர் இறைக்கும் இயந்திர இயக்குனர்	01
புல் வெட்டும் இயந்திர இயக்குனர்	01
தொழிலாளி	56
தொழிலாளி (ஒப்பந்தம்)	60
மொத்தம்	**190**

1.2.4 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), சீதாஎலிய

இந்த நிலையத்தின் முதன்மையான பயிர் உருளைக்கிழங்காகும். அதற்கு அடுத்ததாக மரக்கறிகள், பழங்கள், சில பூ வர்க்கங்கள் காணப்படுகின்றன. பயிர் அபிவிருத்தி திட்ட மானது பொருத்தமான, அதிக விளைச்சலை கொடுக்கும் வர்க்க உருவாக்கம், வர்க்க அறிமுகம், வர்க்க தெரிவு என்பவற்றை உள்ளடக்கும். நோய், பீடை, போசணை பராமரிப்பிற்கான சிறந்த விவசாய தொழில் நுட்பங்களை பாவிப்பதனூடாக பயிர் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய திட்டங்கள் தொடர்ந்து நடைமுறை படுத்தப்படுவதால் விதை உருளைக்கிழங்கு, ஸ்றோபெரி நடுகைப்பொருள், சில அலங்காரத் தாவரங்களின் உற்பத்திகள் தரத்திலும், அளவிலும் உயர்த்தப்பட்டுள்ளன. உருவாக்கப் பட்ட தொழில்நுட்பங்களை மேலும் விருத்தி செய்வதற்காக விதைக்கிழங்கு உற்பத்தி மற்றும் சில வெளியூர் மரக்கறிகள் தொடர்பாக ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

பாதீடு

அட்டவணை 1.2.4.1 வருடாந்தப் பாதீடு -2012 (ரூ)

செலவுத் தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவிடப்பட்ட தொகை	செலவு வீதம்
மூலதன கணக்கு	1,860,000	740,275	40
நடைமுறை கணக்கு	4,332,914	4,448,243	103
விதை உருளைக்கிழங்கு உற்பத்தி விரிவாக்கம்	5,000,000	4,489,265	90
விதை உருளைக்கிழங்கு உற்பத்தி தொழில்நுட்பத்தின் முன்னெற்றம்	1,063,000	847,304	80
உள்ளூருக்குப் பொருத்தமான புதிய உருளைக்கிழங்கு வர்க்க உற்பத்தி	800,000	793,304	99
தோடை வர்க்கங்களின் மதிப்பீடு	100,000	67,773	68
இழையவளர்ப்பு மூலம் முக்கியமான பயிர்களின் உயர்தர நடுகைப்பொருள் உற்பத்தி	2,710,000	2,440,010	90
IFAD	500,000	331,280	66
மொத்தம்	16,365,914	14,157,991	87

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிரரக்கவியல்

- வர்க்க இசைவாக்க பரிசோதனையில் 15 வர்த்தக உருளைக்கிழங்கு வர்க்கங்கள் பரிசோதிக்கப்பட்டன. மோண்டியோ(Mondeo), சிவ்ரா (Sifra), YP 04-108 என்பன அதிக விளைவை (30-35 t/ha) கொடுத்ததுடன் அவை UCWZ பிரதேசத்திற்கு உகந்ததாக அறியப்பட்டது.
- உருளைக்கிழங்கு ஆரம்ப அடிப்படை விதை உற்பத்தியில் நுண்-கிழங்கு(micro tubers) மற்றும் Go- கிழங்கு என்பன Go முன் அடிப்படை மிகச்சிறிய கிழங்கு(mini tubers) உற்பத்தியில் மண் அற்ற ஊடகத்தில் ஒரே விதமாக செயல்பட்டன.
- UCWZ பிரதேசத்தில் மேம்படுத்தப்பட்ட வெட்டுக் கிழங்கு தொழில்நுட்பம், முழுக்கிழங்கு நடுகை பொருளாக பாவிப்பது போன்று விளைச்சலை கொடுத்தது. இதன்மூலம் விதை உருளைக்கிழங்கு தேவையின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

பயிர் இனவிருத்தி

- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வம்சாவழிகள் நான்கு (M-18, 19, 01-12-10, 01-09-05) NCVT திட்டத்தில் மதிப்பிடப்பட்டது.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வம்சாவழிகள் ஐந்து (01-11-01, 99-25, 01-10-01, 01-08-15, A-17) தெரிவு செய்யப்பட்டு NCVT திட்டத்தில் 2013இல் மதிப்பிடப்படவுள்ளன.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வம்சாவழிகள் 2814 இல் இருந்து 107 தெரிவு செய்யப்பட்டு இவை வெப்பத்தை தாங்கிவளரும் வர்க்க உருவாக்கத்திற்கு உபயோகிக்கப்பட்டன.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைகிழங்கு வம்சாவழிகள் 107 இல் இருந்து 24 தெரிவு செய்யப்பட்டு இவை அதிகவிளைச்சலை கொடுக்கும் வர்க்க உருவாக்கத்திற்கு உபயோகிக்கப்கட்டன.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வம்சாவழிகள் ஐந்து உயர்தர பெரும் விளைவுச் பரிசோதனை யில் பரிசோதிக்கப்பட்டன.
- உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட 12 உருளைக்கிழங்கு வம்சாவழிகளின் விதைகள் (X-2, 01-05 -03, 01-05 -04, 01-07-06, 01-12-03, 01-12-11, 01-12-18, 01-13-01, 01-13-08, 01-16-07, 99-99, 01-04-06) உற்பத்தி செய்யப்பட்டன.
- வெப்பத்தை தாங்கி வளரும் வர்க்கங்களை கண்டறிய எமது நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு வம்சாவழி கள் 107 பண்டாரவளை, கல்பிற்றிய, தின்னவேலி ஆகிய இடங்களில் பரிசோதிக்க ப்பட்டன.

இழையவளர்ப்பு

- நுண்-கிழங்குகளின் எண்ணிக்கையையும், பருமனையும் அதிகரிப்பதற்கான இழைய வளர்ப்பு நடைமுறை (protocol) உருவாக்கப் பட்டது.
- புதிய வர்க்கங்கள் உருவாக்குவதற்கு சோதனைக்குழாயில் வியத்தமடையாத கலங்களை உற்பத்தி செய்வதற்கான இழையவளர்ப்பு ஊடக நடைமுறை (protocol) உருவாக்கப்பட்டது.

பூச்சியியல்

- பசிலஸ் துரிஞ்சினெஸிஸ் *(Bacillus thuringiensis)* உயிரியல் கட்டுப்பாட்டு முறையில் ஆராய்ச்சிகளுக்காக கரிய வெட்டுப்புழு (*Agrotis ipsilon)* அதிக அளவில், வினைத்திறனான முறையில் உற்பத்தி செய்யும் முறை உருவாக்கப் பட்டது.

- பயிற்சிப்பொதி உருவாக்கப்பட்டு விதை உருளைக்கிழங்கை பாதிக்கும் பீடைகளான வெட்டுப்புழு, அந்து, அழுக்கணவன், சிற்றுண்ணி என்பவற்றை கட்டுபடுத்துவதற் காக தற்போதுள்ள முறையுடன் ஒப்பிடப் பட்டது. Virtako 40% WG (Thiomethoxam 20% + Chloranthraniprole 20% w/w – நியோநிக்கோற்றிநோயிட், டயமயிட் என்ப வற்றின் ஊட்டு) மண்பரிகரணத்தின் போது வெட்டுப்புழுவையும், விசுறும்போது அழுக்கணவன், அந்து என்பவற்றையும் கட்டுப்படுத்துவதை அறிய முடிந்தது.

- வயலிலும், சேமிப்பிலும் உருளைக்கிழங்கு அந்துக்களை கட்டுப்படத்துவதற்கு (ஆண் அந்துக்களை சிறைபிடிப்பதன் மூலம்) பெரோமோன் (pheromone) ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

நோயியல்

- விவசாயிகளின் வயல்களில் உருளைக் கிழங்கு பின்கூற்று வெளிறல் நோய் கட்டுப் பாட்டுக்கு பின்வரும் பங்கசு நாசினிகள் சிறந்தன, அமிஸ்றார் (Amistar) @1.0 ml/l, மங்கோசெப் (Mancozeb) (new source) -80% WP @2.5g/l , புரோப்பினெப் (Propineb) 70% WP @ 2.5g/l.

- சுச்சினியில் (Zucchini) தூள்பூஞ்சணநோய் கட்டுப்பாட்டில் புளூரிபோல் (Flutrifol) @ 1ml/ 5let, 1.5ml/5let ஆகிய இரண்டு அளவுகளும் சிறந்ததாகவுள்ளன.

- பத்தொன்பது உருளைக்கிழங்கு வம்சாவழி கள் பரிசோதிக்கப்பட்டதில் வம்சாவழி 01-16-15 பின்கூற்று வெளிறல் நோயை தாங்கிவளர்வதோடு அதிக விளைச்சலையும் கொடுத்தது. இந்த வம்சாவழி மேலும் மதிப்பிடப்படவுள்ளது.

- 1) பின்கூற்றுவெளிறலுக்கு எதிராக 34 புதிய வம்சாவழிகளும். 2) பூஞ்சண பொருக்கு நோய்க்கு எதிராக 14 புதிய வம்சாவழிக ளும், 4 வர்க்கங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மண் விஞ்ஞானம்

- மண்அற்ற ஊடகத்தில் விதை உருளைக் கிழங்கு உற்பத்திக்காக உரப்பாவனையில் ஓர் புதிய உரச்சூத்திரம் உருவாக்கப்பட்டது. இது மேலும் திருத்தப்படவுள்ளது.

- KOPIA திட்டத்தின் கீழ் உருளைக்கிழங்கு உற்பத்தியில் நுண்போசணை மூலகங்களின் தாக்கம் பற்றிய பரிசோதனை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

மரக்கறிகள்

- டிற்றோயிற் டார்க் ரெட் 2 கிறிஸ்றல் (Detroit Dark Red 2 Cristal), ரெட் ஸ்றார் (Red star), AXRB462F1 ஆகிய பீற்றூட் வர்க்கங்கள் UCWZ பிராந்தியத்தில் அதிகவிளைச்சலை தந்ததோடு நோய் பீடைகளுக்கு எதிர்ப்பை கொண்டிருப்பதை யும் அறியமுடிந்தது.

- கோவா வர்க்கங்களான CBS 153,சுப்பர் கிறீன் (Supper green), வெள்ளை கோவா-பாலாசி (White Cabbage- Balashi), வெள்ளை கோவா-பண்டங் (White Cabbage- Bandung) என்பன விளைச்சல், கோவாத் தலையின் இயல்புகள், நோய்களுக்கு எதிர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் UCWZ பிராந்தியத்திற்கு சிறந்ததாக அறியப்பட்டது.

- பூக்கோவா வர்க்கங்களான ரொக்கி (Rocky), பள்வானி (Balvany), வைற் பிலாஸ் (White Flash), மில்கிவே (Milky Way), கண்டிட் சார்ம் (Candid Charm) என்பன அதிக விளைச்சலை தந்ததோடு நல்ல இயல்புகளை கொண்ட பூத்தலையையும் கொண்டிருப்பது அறியப்பட்டது.

அபிவிருத்திச் செயற்பாடுகள்

பயிரரக்கவியல்

- மண்அற்ற ஊடகம், காற்று ஊடகம், ஜியோ போனிக் (Geoponic) ஆகிய தொழில் நுட்பங்களின் மூலம் ஒரு மில்லியன் முன் அடிப்படை விதை உற்பத்தி செய்யப்பட்டது.
- வயல்களில் பெருக்கம் செய்வதற்காக விவசாயிகட்கு 664,210 எண்ணிக்கையான முன் அடிப்படை விதை கொடுக்கப்பட்டது.
- சீதா எலிய பண்ணையில் மண்அற்ற ஊடக அலகு ஒன்று அமைக்கப்பட்டது.
- கிக்கிலியாமான கிராமத்தில் 26 விவசாயிகளுக்கு Go விதை உற்பத்தி தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. கல்பாலம உருளைக்கிழங்கு விதைப் பண்ணையில் மண்அற்ற ஊடகம், மற்றும் ஜியோபோனிக்(Geoponic) தொழல்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- IFAD திட்டத்தின் கீழ் மேலும் ஒரு விவசாயி மண்அற்ற ஊடக தொழில்நுட்பத்தின் மூலம் Go விதை உருளைக்கிழங்கு உற்பத்தி திட்டத்தில் இணைந்துள்ளார்.
- விவசாய சமூகம் ஒன்று ஸ்தாபிக்கபட்டு (IFAD விவசாயிகள்) அவர்கள் G1, G2, G3 என்பவற்றை Go விதையை பாவித்து உற்பத்தி செய்கின்றனர்.

தாவர இனவிருத்தி

- புதிதாக சிபார்சுசெய்யப்பட்ட கோல்டன் ஸ்றார் (Golden Star) வர்க்கத்தின் G1விதை 100Kg உற்பத்தி செய்யப்பட்டது.

இழையவளர்ப்பு

உருளைக்கிழங்கு

- கிறணோலா வர்க்கத்தின் 12,253 சோதனைக்குழாய் சிறுதாவரங்கள் விதை கிழங்கு உற்பத்திக்காக கொடுக்கப்பட்டன. மேலும் கிறணோலா-2,283,கோல்டன் ஸ்றார்-123 , டிசயரி- 45 என்பன முறைசார் விதை கிழங்கு உற்பத்திக்காக கொடுக்கப்பட்டன.
- வர்க்கங்கள் றாஜா-135, டிசயறி- 36, அனோவா- 50, CIP- 100 ஆகியன சோதனைக் குழாய் சிறுதாவரங்கள் பரிசோதனைகட்காக கொடுக்கப்பட்டன.

ஸ்றோபரி

- 1079 சோதனைக்குழாய் தாவரங்கள் மற்றும் 3639 சோதனைக்குழாய் தாவரங்களில் இருந்து உருவாக்கப்பட்ட நடுகைப் பொருட்கள் என்பன வினியோகிக்கப்பட்டன.
- 200 சோதனைக்குழாய் தாவரங்கள் ஓடிகள் உற்பத்திக்காக உபயோகிக்கப்பட்டன.

மலர் தாவரங்கள்

- பேபிஸ்பிரத்- 3036, மடோனாலில்லி- 1021, ஜேர்பெரா- 396, லிமோனியம்- 506 ஆகிய எண்ணிக்கையில் தாவரங்கள் தனியார் களிடத்தில் (வளர்ப்போர்) பகிர்ந்தளிக்கப் பட்டன.

பூச்சியியல்

- 893 மண் மாதிரிகள் அரசாங்க பண்ணை யில் இருந்து பெறப்பட்டு PCN இற்கு பரிசோதிக்கப்பட்டன.

- வயல்களிலும், கண்ணாடி அறைகளிலும் *Lirimysa huidrobrensis* எனும் இயற்கையான உயிரியல் கட்டுப்பாட்டு கர்த்தா(agent) 8250 இக்காலப்பகுதியில் வெளியிடப்பட்டது.

நோயியல்

- பக்றீரியல் வாடலை அறிய 1091 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன.
- நோய்களை கண்டறிவதற்காக 25 மண் மாதிரிகள் பெறப்பட்டன.
- 10.5Kg சிப்பி மற்றும் 14Kg பொத்தான் காளான் வித்திகள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- வெவ்வேறு அவத்தைகளில் பெறப்பட்ட (ஆரம்ப அடிப்படை விதை, அடிப்படை விதை, விவசாயிகளின் வயல்) 73 தாவர மாதிரிகளுக்கு வைரஸ்சுட்டி பெறப்பட்டது.

மண் விஞ்ஞானம்

- 1052 மண் மாதிரிகள் உரச்சிபார்சுக்காக பரிசோதிக்கப்பட்டது.

pH	- 514
EC	- 514
பொஸ்பரஸ் (P)	- 237
பொட்டாசியம் (K)	- 237

பயிற்சிப்பட்டறை / வெளிப்படுத்தல்கள்

- விதை உருளைக்கிழங்கு உற்பத்தி, சான்றிதழ் பெறல் என்பவற்றில் ஒரு உத்தியோகத்தர் நெதர்லாந்தில் பயிற்சி பெற்றார்.
- ISTI கன்னொறுவையில் நடைபெற்ற கணினி பயிற்சியில் மூன்று உத்தியோகத்தர்கள் பயிற்சி பெற்றனர்.
- ஒரு உத்தியோகத்தர் நோயியலில் பயிற்சி பெற்றார்.
- புதிய ஆராய்ச்சி உதவியாளர்கள் ஆரம்ப பயிற்சி பெற்றனர்.
- அரசாங்க விதை உருளைக்கிழங்கு பண்ணை உத்தியோகத்தர்களுக்கு நோய், பீடை பராமரிப்பு பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டது.
- ASDA வில் பேபிஸ்பிறத் பற்றிய கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

பயிற்சிகள்

- 2012ம் ஆண்டு ஐந்து மாணவர்கள் தமது B.Sc. கடைசி வருட விஷேட திட்டத்தை இந்நிலையத்தில் முடித்தனர்.
- உருளைக்கிழங்கு உற்பத்தி மற்றும் முகாமைத்துவம் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி, பூத்தாவரங்கள் வளர்ப்பு, ஸ்றோபரி வளர்ப்பு, கட்டுப்பாட்டு விவசாயம் என்பவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. பின்வரும் தரப்பினர் பயன்பெற்றனர்.

சர்வகலாசாலை மாணவர்கள்	- 154
விவசாய டிப்ளோமா மாணவர்கள	- 312
பாடசாலை மாணவர்கள்	- 190
விவசாய உத்தியோகத்தர்கள்	- 49
பாடசாலை ஆசிரியர்கள்	- 30
விவசாயிகள்	- 347

2013ஆம் ஆண்டுக்கான திட்டம்

பயிரரக்கவியல்

- வர்த்தக உருளைக்கிழங்கு வர்க்கங்கள் விளைச்சல், இசைவாக்கத்திற்கான மதிப்பீடு.
- முன் அடிப்படை மற்றும் அடிப்படை விதைக் கிழங்கு உற்பத்தியில் புதிய தொழில்நுட்ப விருத்தி.
- விதைக்கிழங்கு, சிறிய கிழங்கு ஆகிய வற்றின் களஞ்சியப்படுத்தல் பற்றிய படிப்பு.

- பயிர்களுக்கிடையிலான இடைவெளி உருளைக்கிழங்கு உற்பத்தியில் உள்ள தாக்கம் அறிதல்.

தாவர இனவிருத்தி

- நான்கு உள்ளூர் வம்சாவழிகள் பதுளை, நுவரேலியா மாவட்டங்களில் NCVT, VAT ஆகிய திட்டங்களில் மதிப்பிடல்.
- ஐந்து உள்ளூர் வம்சாவழிகள் NCVT திட்டத்தில் சீதா எலிய, பண்டாரவளை ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் மதிப்பிடல்
- வெப்ப எதிர்ப்பு வர்க்கங்களை கண்டறிய உள்ளூர் வம்சாவளிகள் 107 பண்டாரவளை, கல்பிட்டிய, தின்னவேலி ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் மதிப்பிடல்.
- உள்ளூர் வம்சாவழிகள் பன்னிரண்டு AMYT திட்டத்தில் மதிப்பிடல்.
- ஏழு உள்ளூர் வம்சாவளிகள் MYT திட்டத்தில் மதிப்பிடல்.
- CIP மூலவுயிருருக்கள் சிறந்த இயல்புகளுக் காக மதிப்பிடல்
- 24 உள்ளூர் வம்சாவளிகள் OYT திட்டத்தில் மதிப்பிடல்.
- சீதா எலிய ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மூலவுயிருருக்களின் இயல்புகளை அறிதல்.
- வெளிநாட்டு வர்க்கங்கள் பதினைத்து உள்ளூர் இசைவாக்கத்திற்கு மதிப்பிடல்

இழையவளர்ப்பு

- பேரிக்காய், அப்பிள், தோடை ஆகியவற்றில் நோயற்ற நடுகை பொருட்கள் உருவாகத்தி ற்கான ஆராய்ச்சி.
- கிறணோலா வர்க்கத்தின் இயல்புகளை அறிதலும், மூலக்கூறு பகுப்பும்.
- கிரிசாந்தமம், ஸ்ரற்றிஸ் என்பவற்றிற்கு இழையவளர்ப்பு ஊடக நடைமுறை உருவாக்கம்.
- ஸ்றோபரி வர்க்கங்களை மதிப்பிடல்.

பூச்சியியல்

- நுவரெலியாவில் உள்ள விதை உருளைக்கிழங்கு அரசாங்க பண்ணைகளில் சிஸ்ற் வட்டப்புழு (PCN) கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். விதைக்கிழங்கு நடுகைக்கு முன்பு PCN தொற்று அறியப்படும்
- நுவரேலியா பகுதியில் முக்கியமான பீடையான வெட்டுப்புழுவை உயிரியல் முறையில் கட்டுப்பாடுத்தும் முறையான Bt தொடர்பான படிப்பை மேற்கொள்ளல்.
- இலை சுருங்க மறுப்பி (*Liriomyza huidobrensis*) பீடை கட்டுப்பாட்டுடன் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளல்.
- கரிய வெட்டுப்புழு (*Agrotis ipsilon*) கட்டுப்படுத்துவதற்காக புதிய பாதுகாப்பான பீடைநாசினிகள் மதிப்பிடல்.
- உருளைக்கிழங்கு விதை உற்பத்தியில் அந்து (moth) மற்றும் பீடைகளுக்கு சிபார்சு செய்யப்பட்ட நச்சுத்தமை கூடிய பங்கசு நாசினிகளை மாற்றீடு செய்வதற்காக சுற்றாடலுடன் நேசமுள்ள புதிய முறை உருவாக்கல்.
- உருளைக்கிழங்கு அந்தின் (potato tuber moth) தாக்கத்தை கிழங்கு களஞ்சியப்படுத்த லின்போது இராசயன மற்றும் இராசயனமற்ற முறைகளை கொண்டு கட்டுப்படுத்துதல்.
- மரக்கறி, ஸ்றோபரி என்பவற்றில் வெள்ளைக் குறவன் (white grup) நோயை உயிரியல் முறையில் கட்டுப்படுத்துதல். Bt வகைகள் (strains) வெள்ளைக்குறவனுக்கு எதிராக செய்படும் வினைத்திறனை தீர்மானித்தல்.

நோயியல்

- உருளைக்கிழங்கில் பிற்கூற்று வெளிறல் நோய்க்கு பங்கசுநாசினிகள் தெரிவு.
- வர்த்தக வர்க்கங்கள், புதிய இனவிருத்தி வம்சாவளிகள் என்பவற்றில் பின்கூற்று வெளிறல் நோய்க்கான தெரிவு.
- கோவாவில் விதை மூலம் பரவும் கறுப்பு அழுகல் (*Xanhomonas campestris pv. Campestris*/XCC) நோயில் சுடுநீர் பரிகரணத்தின் தாக்கம்.
- உருளைக்கிழங்கில் தூள்பூஞ்சண பொருக்கு (*Spongospora subterranea*) நோயின் தொற்றும்தன்மையை அறிதல்.
- தூள்பூஞ்சண பொருக்கு நோய்க்கு எதிராக உருளைக்கிழங்கு வர்க்கங்கள் தெரிவு.
- வெவ்வேறு உருளைக்கிழங்கு வளர்ப்பு இடங்களில் இருந்து *Phytophthora infestans* பிரிதிதெடுப்புக்கள் பெறப்பட்டு பராமரித்தல்.
- சிப்பிக் காளான் வித்தி உற்பதத்திக்கான புதிய தொழில்நுட்பம் அபிவிருத்தி செய்தல்.

மண் விஞ்ஞானம்

- மண் அற்ற ஊடகம், காற்றூடகம் என்பவற்றிற்கு வித்தியாசமான போசணை சூத்திரங்கள் பரிசோதித்தல்.
- விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கான புதிய உரச்சூத்திர பரிசோதனை.
- KOPIA திட்டத்தின் கீழ் உருளைக்கிழங்கு உற்பத்தியிலும் அதன் தரத்திலும் இரண்டாம் மற்றும் நுண் மூலகங்களின் செல்வாக்கை அறிதல்.
- RARDC, பண்டாரவளையுடன் இனைந்து விதைக்கிழங்கு உற்பத்தியில் நைதரசன், பொட்டாசியம், பொஸ்பரஸ் என்பவறை பராமரித்தல்
- நில அபிவிருத்தி, மண் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான முறைகள் உருவாக்கல்.

மரக்கறிகள்

- கரட், பீற் விதை உற்பத்திக்கான வினைத்திறனான தொழில்நுட்ப அபிவிருத்தி.
- கரட், கோவா, லீக்ஸ், பூக்கோவா என்பவற்றின் வெளிநாட்டு வர்க்கங்கள் இசைவாக்கத்திற்காக மதிப்பிடல்.
- மரக்கறி உற்பத்தி அதிகரிப்பில் புதிய தொழில்நுட்பங்கள் மதிப்பிடல்.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	05
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சி உதவியாளர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	07
விவசாய போதனாசிரியர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பரிபாலன உத்தியோகத்தர்	05
பரிபாலன உதவியாளர்	01
சாரதி	02
களஞ்சிய பொறுப்பாளர்	01
உழவு இயந்திர சாரதி	01
நாற்றுமேடைத் தொழிலாளி	01
காவலாளி	01
தொழிலாளி	16
தொழிலாளி (ஒப்பந்தம்)	43
மொத்தம்	**86**

1.2.5 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS) – தெலிஜவில

விவசாய ஆராய்ச்சி நிலையம், தெலிஜவில ஆனது பூங்கனியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI) கன்னொறுவை இன் கீழ் இயங்குகின்றது. ஆராய்ச்சி நிலையம், தெலிஜவிலவில் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் பழப்பயிர், மரக்கறிப்பயிர், கிழங்குப் பயிர் மற்றும் காளான்கள் என்பவற்றின் உற்பத்தித்திறனை விருத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களைக் கண்டு பிடித்தலிலும் அவற்றைப் பரப்புவதிலும் முன்னிலைப்படுத்தப்படுகிறது. மேலும் இலங்கையின் தென்பிராந்தியத்தின் பயிர் உற்பத்தியின் நிலைபேறினை உறுதிப்படுத்து வதற்காக நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் விநியோகம், விவசாயிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் ஆகியோருக்கான பயிற்சி மற்றும் கல்வி என்பவற்றை வழங்குதல் போன்றவற்றிலும் கவனம் செலுத்துப்படுகிறது.

பாதீடு

ஆண்டு 2012 இற்கு பெறப்பட்ட நிதி ஒதுக்கீடும் ஏற்பட்ட செலவினங்களும் அட்டவணை 1.2.5.1 இல் தரப்படுகிறது.

அட்டவணை 1.2.5.1 வருடாந்தப் பாதீடு –2012 (ரூ)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
நடைமுறை / மீண்டுவரும் செலவு	4,746,020	4,666,665	98
மூலதனச் செலவு	2,250,000	1,385,222	62
கருத்திட்டங்கள்			
NARP - வாழையின் பியூசாரியம் வாடலிற்கான விகாரிகளின் உள்ளக வளர்ப்பு	519,000	501,057	97
NARP காளான் நிகழ்ச்சி	1,119,000	1,097,091	98
வாழையின் உற்பத்தி அதிகரிப்பு	1,200,000	1,190,866	99
இழையவளர்ப்புத் தொழில்நுட்பம் மூலம் பெறப்பட்ட முக்கிய பயிர்களின் நடுகைப் பொருட்களின் தரவிருத்தி	1,190,000	1,187,206	99
மொத்தம்	**11,024,020**	**10,028,106**	**91**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பிறப்புரிமையியல் மற்றும் தாவர இனவிருத்தி

பயற்றை

- பயற்றையின் (*Vigna sesquipedalis*) ஐந்து வம்சாவழிகள் சிபார்சு செய்யப்பட்ட இரண்டு வர்க்கங்களுடன் NCVT இன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டது.
- அறிமுகப்படுத்தப்பட்ட பயற்றை குலங்களின் ஆரம்ப விளைவு பரீட்சிக்கப்பட்டது.
- பயற்றையின் பொருத்தமான குலவகைகள் அடையாளம் காண்பதற்கான மூலவுயிருருத் தெரிவு மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக மதிப்பீட்டிற்காக 6 பயிர்க் குலங்கள் தெரிவு செய்யப்பட்டன.

கத்தரி

NCVT இன் கீழ் ஓர் திறந்த மகரந்தச் சேர்க்கை வர்க்க்தையும் ஓர் கலப்பின வர்க்கத்தை யும் கொண்ட மூன்று கத்தரிக் வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

பூங்கனியியல்

வாழை

ஆண்டுப் பயிர்ச் செய்கை முறைமையின் கீழான வாழைப் பயிர்களின் உற்பத்தித் திறணை அதிகரிப்பதற்காக பொட்டாசியத்தின் கிடைக்கும் தன்மை மற்றும் அவற்றின் முகாமைத்துவம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

அன்னாசி

அன்னாசியின் உற்பத்தித் திறணை அதிகரிப்பதற்காக வினைத்திறனான போசணை முகாமைத்துவ முறையை விருத்தி செய்தலும், இலைகளைக் கத்தரித்தல் செயற்பாட்டுப் பிரயோகமும்

மா

"மா" வின் பசளைப் பிரயோகத்திற்கான முன்னேற்றகரமான பயிர்ச் செய்கை முறைகளை யும், முகாமைத்துவ முறைகளையும் விருத்தி செய்தல்

நோயியில் மற்றும் நுண்ணுயிரியல் உயிர்த் தொழில்நுட்பவியல்

காளான்

- பிளறோடஸ் (pleurotus) காளானின் விரயமான அடிப்பதார்த்தம் (Spent mushroom substrate) மானது இலை மரக்கறிப் பயிர்களில் உயிரியல் பீடை நாசினியாகவும், மற்றும் தொடர் காளான் வளர்ப்புக்கான வளர்ப்பு ஊடகமாகவும் பயன்படுத்தப்படுவதற்கான பொருத்தப்பாடு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.
- விரயமாக்கப்படுகின்ற பிளறோடஸ்(pleurotus) காளானின் அடிப்பதார்த்தமானது செலவீட்டு ரீதியாக வளர்ப்பு ஊடகத்தில் பருப்பு மாவிற்குப் பதிலீடாகப் பயன்படுத்தப்பட முடியும் என்பது பற்றி கற்றறியப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது.
- பிளறோடஸ் காளானின் விளைவினை அதிகரிப்பதற்கான உத்தம pH மட்டம் பரீட்சிக்கப்பட்டது.
- சுதேச காளான்களின் செய்கை முறையான பயிர்ச் செய்கைக்கான சாத்தியப்பாடுகளை வெளிக்கொண்டுவருவதற்கான ஆரம்பக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்டங்கள்

தேசிய விவசாய ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் (NARP)

சில தெரிவு செய்யப்பட்ட காளான்களின் போசணைக் கூறுகள் மற்றும் ஒட்சியேற்ற நிரோதிகள் மற்றும் நுண்ணுயிர் எதிரிகளின் இயல்புகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் ஆய்வுகூட வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.

வாழையின் பியூசாரியம் (Fusarium) வாடல் எதிர்ப்பு / சகிப்பதற்கான உள்ளக வளர்ப்பு விகாரிகள்

பேதவளர்ப்பு அக்ரா (Agra) பெருக்கப்பட்டது. ஆய்வுகூட வசதிகள் ஆய்விற்காக விருத்தி செய்யப்பட்டது.

இழையவளர்ப்பு

இழையவளர்ப்புத் தொழில்நுட்பத்தினூடாக முக்கியமான பயிர்களின் தரமான நடுகைப் பொருட்களை விருத்தி செய்தல்

சிறிய அளவிலான இழையவளர்ப்பு ஆய்வு கூடத்திற்கென ஓர் கட்டடம் (115 சதுர அடி) அமைக்கப்பட்டதுடன் அவசியமான உபகரணங் கள் மற்றும் உள்ளீடுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன.

வாழையின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு

- மகாவலி மற்றும் உடவளவைப் பிரதேசங்களில் 300 ஹெக்டயரில் 06 துண்டங்கள் பூரணப்படுத்தப்பட்டன.
- 18 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.
- விவசாய ஆராய்ச்சி நிலையம், தெலிஜவிலவில் ஓர் வயல் நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது.
- மாத்தறை மாவட்டத்தில் ஓர் வர்த்தக முதலீட்டாளருடன் உற்பத்திப் பொருள் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டதுடன் மாத்தறை மற்றும் கம்பகா மாவட்டங்களில் 50,000 வாழைக் குட்டிகளை இலக்காகக் கொண்டு 7800 தாய்த்தாவரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

ஏனையவை

30 அம்பியர் மூன்று நிலை (3 phase) மின் இணைப்பு பிரதான கட்டடத்திற்காகப் பெறப் பட்டது.

நடுகைப் பொருள் மற்றும் கூட்டெரு உற்பத்தி

அன்னாசி – 50,000

தானியா (கிரிஅல) – 75

வாழை – 6885

மரவள்ளி – 495 m

கீரைவகை – 220 கி.கி

கூட்டெரு - 26 தொன்கள்

- வாகனத் தரிப்பிட நீர்மாணம் நிறைவு செய்யப்பட்டது
- புதிய வீட்டுத் தோட்டம் விருத்தி செய்யப் பட்டது
- காளான் உற்பத்தி அலகிற்கான ஓர் சேமிப்புக் களஞ்சியம் கட்டப்பட்டது.
- இழையவளர்ப்பு ஆய்வுகூட நிர்மாண வேலை நிறைவு செய்யப்பட்டது.

பங்குபற்றிய மகாநாடுகள் / கருத்தரங்குகள்

ABSD – 2012: நிலைபேறான அபிவிருத்திக் கான உயிர்த் தொழில்நுட்பம் பற்றிய இலங்கை-இந்திய மகாநாடு

ISAE – 2012: றுகுனுப் பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட விவசாயமும் சூழலும் எனும் சர்வதேச ஆய்வுக்களம்

2013 ம் ஆண்டிற்கான திட்டம்

பயிர் இனவிருத்தி

- தெரிவு செய்யப்பட்ட மரக்கறிக் கௌபி பயிர் பேதங்களில் விதை உற்பத்தியுடன் விளைவு மற்றும் ஏனைய பயிர் இயல்புகளிற்கான மதிப்பீடு
- வருடம் முழுவதற்குமான உற்பத்திக்காக கிடைக்கப்பெறுகின்ற மரக்கறிக் கௌபி மற்றும் பயற்றை என்பவற்றின் மூலவுயிருருக் களைத் தெரிவு செய்தல்
- தூண்டப்பட்ட விகாரத்தினூடாக உயர்தரத் துடன் கூடிய உயர் விளைவைத் தரும் நோய் மற்றும் பூச்சி என்பவற்றை தாங்கும் அன்னாசி வர்க்கங்களை விருத்தி செய்தல்
- வாழையின் மூலவுயிருருச் சேகரிப்பு, இயல்பறிதல், பராமரித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவு செய்தல்
- உள்ளூர்ப் பாரம்பரிய தாழ்நாட்டு மரக்கறிகளின் மூலவுயிருருச் சேகரிப்பு, இயல்பறிதல், பராமரித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவு செய்தல்
- மாத்தறை மாவட்டத்தில் பொருளாதார முக்கியத்துவமுடைய பழப்பயிர்களின் பிரதான பிரச்சினைகளைக் கண்டறிதலும் பல்முக முகாமைத்துவத்தினூடாக அவற்றை முகாமைத்துவம் செய்தலும்.

பூங்கனியியல்

- குறைந்த பயன்பாடுடைய தாழ்நாட்டுப் பழப்பயிர்களைச் சேகரித்தலும் புதிய இனப்பெருக்க முறையை விருத்தி செய்தலும்
- மாத்தறை மாவட்டத்தில் உள்ள பொருளாதார முக்கியத்துவமுடைய பழப் பயிர்களின் பிரதான பீடைகள் மற்றும் பயிரியல் பிரச்சினைகள் என்பவற்றை அடையாளம் காணலும் முகாமைத்துவம் செய்தலும்
- அன்னாசியின் வெண்மூட்டுப் பூச்சியினை ஒருங்கிணைந்த முகாமைத்துவம் செய்தல்
- தாழ்நாட்டு மரக்கறி மற்றும் பழப்பயிர்களின் இயைபாக்கச் சோதனை

நோயியல் / நுண்ணங்கி உயிர்த் தொழில்நுட்பம்

- சிப்பிக் காளானிற்கான பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நேயமுள்ள பீடை முகாமைத்துவ தந்திரோபாயங்களைத் திட்டமிடல்
- சிப்பிக் காளான் உற்பத்திக்கான நெறிமுறை யை உன்னதமாக்குதல்
- சுதேச காளான்களை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தல்
- மருத்துவப் பண்புடைய காளான்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியப்பாடுகளை வெளிக் கொண்டு வருதல்

உயிர்த் தொழில்நுட்பம்

கருத்திட்டங்கள்

வாழையின் பீயூசாரிய வாடலிற்கான உள்ளக வளர்ப்பு விகாரிகள்

- அங்குரநுனிகளின் மேலதிக பெருக்கம்
- CLM களின் ஸ்தாபிதம்
- அங்குரநுனிக்கான கதிர் உணர்திறன் / EMS அளவு பற்றிய சோதனை
- மேலுரிவளர்ப்புத் ஸ்தாபிதம்
- முளையக் கல வளர்ப்பு கரைசல் (ECS) ஸ்தாபிதம்
- அங்குரதுளி வளர்ப்புக்கான கதிர்வீச்சு
- கதிர் வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட அங்குரநுனி களின் உள்ளகப் பெருக்கம்

இழையவளர்ப்புத் தொழில்நுட்பத்தினூடாக முக்கியமான பயிர்களின் நடுகைப் பொருள் தரமேம்பாடு

வாழை, அன்னாசி மற்றும் தெரிவு செய்யப்பட்ட சில மலர்ப் பயிர்களிற்கான குறைந்த செலவிலான நுண் இனப்பெருக்கத்திற்கான நெறிமுறைகளை கண்டறிதல்.

ஏனைய நடவடிக்கைகள்

- நுண் இனப்பெருக்கத்தில் பயிற்சி (குறைந்த செலவு முறையில்)
- இழையவளர்ப்புத் தாவரங்களின் சீதோஸ்னத் திற் கேற்ற குறைந்த செலவிலான இனப்பெருக்க வீடுகளை நிர்மாணித்தல்
- இழையவளர்ப்புத் தாவரங்களை பராமரிப்பத ற்கான பொதித்தீன் கூடாரங்களை நிர்மாணித்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	02
விவசாயப் போதனாசிரியர்	05
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
அரச முகாமைத்துவ உதவியாளர்	02
அலுவலக உதவியாளர்	01
களஞ்சிய உதவியாளர்	01
சாரதிகள்	02
காவலாளிகள்	05
தொழிலாளர்கள்	04
சுகாதாரத் தொழிலாளர்கள்	01
ஒப்பந்தத் தொழிலாளார்கள்	30
மொத்தம்	**60**

1.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), கிராந்துருகோட்டை

இந்நிலையமானது இலங்கை மகாவலி அதிகார சபையினால் 1980ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிலையமானது விவசாய ஆராய்ச்சிக்குப் பொறுப்பாக இருப்பதுடன் குறிப்பாக மகாவலி C வலையத்தில் உள்ள விவசாய சமூகம் பயிர்ச் செய்கையில் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகளிற்கு தீர்வு வழங்குவதற்குப் பொறுப்பாக உள்ளது. இந்நிலையமானது 1984 இல் விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டதுடன் 2000ம் ஆண்டு வரை FCRDI இன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் இது HORDI கன்னொறுவையுடன் இணைக்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலையமானது மரக்கறிப்பயிர், பழப்பயிர் மற்றும் வேர், கிழங்குப் பயிர் என்பவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது.

ஆராய்ச்சி மற்றும் உற்பத்தித் திட்டம் என்பவற்றிற்கு மேலதிகமாக இந்நிலையமானது மகாவலி "C" வலயத்தில் உள்ள விவசாய சமூகத்தினராகிய உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனைய நிறுவன அங்கத்தவர்களிற்கு ஒழுங்கு முறையிலான பயிற்சித் திட்டங்களை நடாத்தி வருகிறது.

பாதீடு

ஆண்டு 2012 இல் வேறுபட்ட செலவுத்தலைப்புகள் மற்றும் கருத் திட்டங்களிற்காக பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் என்பன அட்டவணை 1.2.6.1 இல் தரப்படுகிறது.

அட்டவணை 1.2.6.1 வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மூலதனச் செலவு	1,278,143	415,325	32
மீண்டு வரும் செலவு	3,714,750	3,384,862	91
சோளத்தின் (சம்பத்) கலப்பின விதை உற்பத்தி	125,000	124,849	100
வாழையின் NCVT	50,000	50,000	100
NARP தேசி கருத்திட்டம்	100,000	98,165	98
BG366 வர்க்க விதை நெல் உற்பத்தி	77,810	75,260	97
பப்பாசி விதை உற்பத்தித் திட்டம் (ரத்னா)	1,300,000	1,094,722	84

கத்தரி கலப்பின விதை உற்பத்தி திட்டம்	280,000	279,097	100
பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டம் (நீர்ப்பாசன கால்வாய்த் திருத்தம், விதை நெல் உற்பத்தி, மாமரங்களின் புத்துயிர்ப்பூட்டல்)	3,400,000	3,252,611	96
பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழான சோயா விதை உற்பத்தி	700,000	673,217	96
பண்ணை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழான நெல் உற்பத்தி	400,000	347,855	87
மொத்தம்	**11,425,703**	**8,701,240**	**76**

முன்னேற்றம்

விதை உற்பத்தி நிகழ்ச்சி

கலப்பினக் கத்தரி (அமந்தா) விதை உற்பத்தி

உயர் கலப்பினக் கத்தரி விதை உற்பத்தித் திட்டமானது 2012ம் ஆண்டில் 0.1 ஹெக்டயர் பரப்பில் ஸ்தாபிக்கப்பட்டு 14 கி.கி F1 விதைகள் பெறப்பட்டது.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

வெண்டியில் MI.5 உற்பத்தியாளர் விதை உற்பத்தித் திட்டமானது 2012ம் ஆண்டில் 0.1 ஹெக்டயரில் ஸ்தாபிக்கப்பட்டு 29.கி.கி விதை உற்பத்தி செய்யபட்டது.

விதைநெல் உற்பத்தி நிகழ்ச்சி

2011/2012 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் ஆகிய பருவகாலத்தில் விதை நெல்லாக 41.2 மெ.தொன். BG366 வர்க்க நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

அத்துடன் AT 308 இல் 26.8 மெ.தொன் BG 379/ 2 இன் 8.8 மெ.தொன் மற்றும் BG 366 இன் 10.4 மெ.தொன் சேமிப்பாக உற்பத்தி செய்யப்பட்டன.

உழுந்தின் பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி திட்டம் (MI – 1)

2012ம் ஆண்டில் உழுந்தில் பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி திட்டம் 1.5 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு 250 கி.கி உழுந்து விதை (MI – 1) உற்பத்தி செய்யப்பட்டது.

திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் சோளவர்க்கங்களின் விதை உற்பத்தி திட்டம்

2012 இல் திறந்த மகரந்தச் சேர்க்கை மூலமான சோளவிதை உற்பத்தித் திட்டம் $100m^2$ பரப்பளவில் ஸ்தாபிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட விதை அளவுகள் பின்வருமாறு

வர்க்கங்கள்	விளைவு (பொத்திக்களின் நிறை கி.கி. இல்)
லமுறு (Lamuru)	47
குமரகா (Gumaraga)	14

பப்பாசியில் விதை உற்பத்தி நிகழ்ச்சி (ரத்னா)

5.3 கிலோகிராம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை பிரித்தெடுக்கப்பட்டது.

நடுகைப் பொருள் உற்பத்தி

அட்டவணை 1.2.5: நடுகைப் பொருள் உற்பத்தி – 2012

பயிர்	வர்க்கம்	உற்பத்தி – 2012
வாழை	சீனி வாழை, கதலி வாழை கப்பல் வாழை, சாம்பல் மொந்தன், கந்துல மற்றும் ஏனைய வர்க்கங்கள்	180 குட்டிகள்
பப்பாசி	ரத்னா	63 சாடித் தாவரங்கள்
தானியா (கிரிஅல)	இசுறு	220 தாவரங்கள்
மரவள்ளி	கிரிகாவடி மற்றும் யாழ்ப்பாண தெரிவு	858மீற்றர் துண்டங்கள்
வற்றாளை	கன்னொறுவை வெள்ளை ரணபீம, அமா மற்றும் தவள	31 கி.கி வெட்டுத் துண்டங்கள்
கொடித் தோடை	-	73 சாடித் தாவரங்கள்

ஆராய்ச்சி

பழங்கள்

அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் உள்ளூர்த் தேசி வர்க்கங்களின் தொடர் வர்க்க மதிப்பீடு

வர்க்கங்கள்

உள்ளூர் - 07 வர்க்கங்கள் (Arogya, Bibila sweet, MKD, Rahangala தெரிவு HOCR 23, HOCR 25 மற்றும் HOCR 29)

அறிமுக்கப்படுத்தப்பட்டவை - ஜப்பானில் இருந்து 08 வர்க்கங்கள் (NCN, MYG, OTA, NAN, OUT, YSD, SRD, KYM)

வாழையில் NCVT

வர்க்கங்களின் எண்ணிக்கை – 07

(Hose 21, PGRC 2, PGRC 1, Parakum (C) Hose 13, HCK 143 MKS)

மரக்கறி

பின்வரும் மரக்கறிகளிற்கான NCVT யானது மேற்கொள்ளப்பட்டது.

பயிர்	2011 / 2012 பெரும் போகம்	2012 சிறுபோகம்
கத்தரி	06 வர்க்கங்கள்	05 வர்க்கங்கள்
பயற்றை	07 வர்க்கங்கள்	07 வர்க்கங்கள்
கறிமிளகாய்	05 வர்க்கங்கள்	05 வர்க்கங்கள்

நெல் (NCRVT)

2011/2012 பெரும் போகம் மற்றும் 2012 சிறுபோகம் என்பவற்றில் 2 1/2, 3 மாத, 3 1/2, 4 மாத மற்றும் 4 1/2 மாத வயது நெற்களிற்கு NCRVT மேற்கொள்ளப்பட்டது.

மறுவயற்பயிர்கள் / கிழங்குப் பயிர்கள்

பின்வரும் மறுவயற்பயிர் கிழங்குப் பயிர் என்பவற்றிற்கான NCVT மேற்கொள்ளப் பட்டது.

பயிர்	2011 / 2012 பெரும் போகம்	2012 சிறுபோகம்
வற்றாளை	06 வர்க்கங்கள்	06 வர்க்கங்கள்
கடுகு	06 வர்க்கங்கள்	05 வர்க்கங்கள்
கௌபி	-	08 வர்க்கங்கள்

வர்க்க இசைவாக்கச் சோதனை (VAT) பின்வரும் பயிர்களிற்கு விவசாயிகளின் வயல் மட்டத்திலும், ஆராய்ச்சி நிலைய மட்டத்திலும் 2011/2012 பெரும்போகத்தில் மேற்கொள்ளப் பட்டது.

பயிர்	விவசாயிகள் வயல்	ஆராய்ச்சி நிலையம்
கடுகு	04 வர்க்கங்கள்	-
நிலக்கடலை	05 வர்க்கங்கள்	05 வர்க்கங்கள்

தொழில்நுட்ப பரம்பல்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் விவசாய ஆராய்ச்சி நிலையம் - கிராந்துருக் கோட்டையில் பல விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், மற்றும் அரச அலுவலர்கள் உள்ளடங்கலாக 328 இற்கும் மேற்பட்டவர்கள் தகவல் சேகரிப்பு மற்றும் ஏனைய சேவைகளிற்குக் குறித்த ஆண்டு காலப் பகுதியில் ஆராய்ச்சி நிலையத்திற்கு விஜயம் செய்துள்ளனர்

பயிற்சி

திரு P.G.S சாந்த (R.O) மற்றும் திரு. H.M.L நிறன் (R.O) ஆகியோர் இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தினால் (NRMC) மே மாதம் 14 தொடக்கம் 18ம் திகதி வரையும் செப்டம்பர் மாதம் 3 தொடக்கம் 7ம் திகதிவரையும் ஒழுங்கு செய்யப்பட்ட மண் பாதுகாப்பும் தரை அபிவிருத்தியும் என்ற பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2013ம் ஆண்டுக்கான திட்டம்

- தெரிவு செய்யப்பட்ட மரக்கறிப் பயிர்களிற் கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை (NCVT)
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை (NCRVT)
- தெரிவு செய்யப்பட்ட கிழங்குப் பயிர் மற்றும் மறுவயற்பயிர்களிற்கான தேசிய ஒருங்கிணை க்கப்பட்ட வர்க்கச் சோதனை
- "ரத்னா" பப்பாசி வர்க்கத்தின் தரமான அடிப்படை விதை (Basic seed) உற்பத்தி
- கிழங்குப் பயிர், பழப்பயிர், மரகக்றிப் பயிர் மற்றும் மறுவயற்பயிர் என்பவற்றின் விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி
- வாழையில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை
- மகாவலி வலயம் C யில் நீர்ப்பாசனத்தின் கீழான உயர் பெறுமதியுடைய பயிர்களிற் கான (மரக்கறி மற்றும் மறுவயற் பயிர்கள்) வருடம் முழுவதற்கும் பொருத்தப்பாடான பயிர்ச் செய்கைக் கோலத்தை அடையாளம் காணல்
- மகாவலி C வலயத்திற்கான பொருத்தப்பாடு ள்ள பீற்றூட் வர்க்கங்களிற்கான இசைவாக்கச் சோதனை
- பூகோள அமைவிட முறைமை (GPS) தகவலுடன் இணைத்து பாரம்பரிய மரக்கறி வர்க்கங்களை சேகரித்தல்

- மூன்று விருப்பத்திற்குரிய இயல்புகளிற்காக தருவிக்கப்பட்ட மற்றும் உள்ளூர் சித்திரஸ் தாவரங்களை மதிப்பீடு செய்தல்
- பழப்பயிர்களிற்கு புத்துயிர் அளித்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்
- பாடாசலை சிறுவர்கள் மற்றும் விவசாயிகளி ற்கான விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி அலுவலர்	02
விவசாயப் போதனாசிரியர்	05
ஆராய்ச்சி உதவியாளர்	03
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
முகாமைத்துவ உதவியாளர் Gr III	01
உழவு இயந்திர இயக்குனர்	01
களஞ்சியக் காப்பாளர்	01
தச்சன்	01
காவலாளி	04
தொழிலாளர் Gr III	24
தொழிலாளர் (ஒப்பந்தம்)	36
மொத்தம்	**81**

1.3. பழப்பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (FCRDC), ஹொரண

பழப்பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலைய த்திற்காக (FCRDC) ஒதுக்கப்பட்ட செயற்பாடு கள், பொருத்தமான தொழில்நுட்பங்களை அபிவிரு த்தி செய்வதனூடாக நாட்டில் பழப்பயிர்களின் உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் அதிகரிப்பதாகும். பள்ள நாட்டு இடைவலய த்திற்கு (LCWZ) இசைவாக்கமுள்ள பயிர்களின் உருவாக்கத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்ப ட்டுள்ளது. தற்போது உள்ள ஆராய்ச்சித் திட்ட ங்கள், விளைச்சல், தரம் கூடிய பழவர்க்கங்கள் உருவாக்கம், உயர்வான பயிர் பராமரிப்பு முறைகள், பயிர் பாதுகாப்பு, பயிர்போசணை, சேதன பழச்செய்கை, தாவர நடுகைப்பொருள் உற்பத்தி என்பவற்றை உள்ளடக்கும். அத்துடன் பள்ளநாட்டு இடைவலயத்திற்கு (LCWZ) இசைவாக்கமுள்ள மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள் என்பவற்றின் ஆராய்ச்சி, அபிவிருத்தியிலும் இந்நிலையம் ஈடுபடுகின்றது. இதன் மூலம் இப்பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

பாதீடு

அட்டவணை 1.3.1.: வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவிடப்பட்ட தொகை	செலவு வீதம்
மூலதனக் கணக்கு	2,105,000	1,364,086	65
நடைமுறைக் கணக்கு	3,895,803	3,379,397	87
கிடைக்கக் கூடிய மூலவளங்களில் இருந்து சிறந்த தரமான, விளைச்சல் கூடிய மா வர்க்கம் அபிவிருத்தி செய்தல்	1,000,000	780,930	78
தரமான சேதனப் பயிர்ச்செய்கை தொழில்நுட்பம் ஆசிய வலைப்பின்னல் (ANSOFT)	75,000	70,267	94
ஹொரணயில் அயனமண்டல பழங்களுக்கான உயிரியல் பல்லினத்தன்மை தோட்டம் அமைத்தல்	7,000,000	5,973,044	85
உயர் விளைச்சல், உயர்தரமான F_1 தூரியன் மற்றும் நாரத்தை கலப்பினங்களை அபிவிருத்தி செய்தல்	200,000	190,769	95
வெண்டி கலப்பின விதை அபிவிருத்தி - 2012	340,000	315,551	93
கலப்பின விதை உற்பத்தி – பப்பாசி, கொடி தோடை, மா	200,000	190,047	95
உயர்தரமான, விளைச்சல் கூடிய சிற்றஸ் (தோடை, நாரத்தை) வர்க்கங்கள் அபிவிருத்தி (NARP)	1,675,000	1,404,438	84
உயர்தரமான விளைச்சல் கூடிய பப்பாசி வர்க்கங்கள் அபிவிருத்தி (NARP)	388,000	243,238	88

வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக உயர்தரமான தூரியன் வர்க்கம் உற்பத்தி (NARP)	300,000	202,832	68
இழையவளர்ப்பு மூலம் முக்கியமான பழப்பயிர்களின் உயர்தரமான தாவர இனப்பெருக்கப்பொருள் உற்பத்தி	3,650,000	2,407,083	66
பண்ணை அபிவிருத்தி	1,520,000	1,311,910	86
தேசிய மட்டத்திலான மா அபிவிருத்தித் திட்டம்	3,000,000	2,642,805	88
மொத்தம்	**29,856,800**	**20,636,230**	**69**

முன்னேற்றம்

பயிர் மேம்பாடு

***சீத்தாபழம்* (*SourSop – A. muricata*) இன் நம்பிக்கை தரக்கூடிய சேகரிப்புகளை விளைச்சல் மற்றும் தர இயல்புகட்காக மதிப்பிடல்**

சீதாப்பழம் நன்கு அறியப்பட்டதும், அதிக போசணை உடையதுமாகும். இருந்த போதிலும் இது வீட்டுத் தோட்டத்திற்கு மட்டுப் மட்டுப்படுத்த ப்பட்டுள்ளது. இதன் உற்பத்தித் திறன், தரம் என்பன உயர்த்தப்படல் வேண்டும். உற்பத்தித் திறனிலும், இனிப்புத் தன்மையிலும் குறிப்பிடத் தக்க வித்தியாசம் கொண்ட வர்க்கங்கள் உள்ளன. இவற்றுள் விரும்பத்தக்க இயல்புகளை உடைய வர்க்கம் அடையாளம் காணப்பட முடியும். எனவே சிறந்த வர்க்கத் தெரிவுக்கான பரிசோதனைகள் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

பத்து சேகரிப்புக்கள் 2007-2012 இல் மதிப்பிடப்பட்டு நான்கு நம்பிக்கை தரக் கூடிய வர்க்கங்கள் அடையாளம் காணப்பட்டது. அவற்றுள் உயர்தரம், நல்ல சுவை, நீர்ப்பிடிப்பான சதையின் பிரிக்ஸ் பெறுமானம் கூடியது என்பவற்றைக் கொண்ட ஒரு வர்க்கம் தெரியப்பட்டது. இத்தெரிவு செய்யப்பட்ட வர்க்கம் நட்டு 5 வருடத்தின் பின்பு சராசரி விளைச்சலாக 29 பழம்/தாவரம் (35.7 kg) யை உற்பத்தி செய்தது. இது பிரபல்யப்படுத்தலுக்காக இதன் தாவர நடுகைப்பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

சீதாப்பழத்தின் நிறை, விதையின் நிறை, விதைகளின் எண்ணிக்கை என்பவற்றிற்கிடையில் உள்ள தொடர்பு

பழத்தின் நிறைக்கும், விதையின் எண்ணிக்கைக்கும் இடையில் நேரான தொடர்பு உள்ளது. இதேபோல், பழத்தின் நிறைக்கும் விதையின் நிறைக்கும் இடையில் நேர் தொடர்பு உள்ளது. பழத்தின நிறை கூடும் போது விதையின் எண்ணிக்கையும், நிறையும் கூடும். எனவே இடைப்பட்ட நிறையுடைய பழங்கள் பெரிய அளவு பழங்களை விட விரும்பத்தக்கது.

பப்பாசி கலப்பினங்களின் மதிப்பீடு

அதிக விளைச்சல், குறுகியகால முதிர்ச்சி என்பவற்றினால் விரைவில் முதலிடப்பட்ட மூலதனம் கிடைப்பதால் பப்பாசி வர்த்தகப் பயிராக வளர்க்கப்படுகின்றது. கூடுதலான வர்த்தக பப்பாசிச் செய்கைகள் குறிப்பிட்ட வெளிநாட்டு வர்க்கங்களை மாத்திரம் கொண்டுள்ளது. அதன் விதைகள் இறக்குமதிக்கு குறிப்பிடத்தக்க அந்நிய செலாவணி செலவிடப்படுகின்றது. பப்பாசி வர்க்கம் கலப்பின அபிவிருத்திக்கு அதிக காலம் எடுக்கின்ற போதிலும் (அதிக வருடங்கள்) எமது வர்க்கம் விருத்தி செய்யப்படல் அவசியமாதலால், இனவிருத்தித் திட்டம் FCRDCயில் மேற்குறிக்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்காக

ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு தூய வம்சாவழிகள் 6 வருடங்களின் பின் விருத்தி செய்யப்பட்டு, அவை இரண்டையும் பயன்படுத்தி கலப்பினங்கள் உருவாக்கப்பட்டது. இவற்றில் இரண்டு கலப்பினங்கள் விரும்பத்தக்க பெறுபேறுகளை நிலையத்தில் கொடுத்தது. எனவே இவை இரண்டும் வெவ்வேறு விவசாய சூழலியல் வலயங்களில் பரீட்சிப்பதற்காக தற்போது இவற்றின் விதைகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

பப்பாசி வர்க்கங்கள் அபிவிருத்தி (NARP) நிதியுதவிச் செயற்திட்டம்

தொடர்ச்சியான வர்க்க அபிவிருத்தி பழைய வர்க்கங்களை மாற்றீடு செய்வதற்கு அவசியமா கும். எனவே இரண்டாவது பரம்பரையில் உள்ள குடித்தொகையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தனியன்கள் அடுத்த பரம்பரைக்கு செல்வதற்காக மதிப்பிடப்பட்டது.

கொடித்தோடை வர்க்க அபிவிருத்தி (கலப்பின விதை உற்பத்தித் திட்டம் - HORDI, கன்னொறுவை)

செயற்கையான / வர்க்க சேர்க்கை (Composit), கொடிதோடை வர்க்க அபிவிருத்தியானது, கொடி தோடை வர்க்கம் விதை மூலம் பகிர்ந்த ளிப்பதற்கான ஒரு முறையாகும். பல விரும்பத் தக்க இயல்புகள் ஒரு வர்த்தக வர்க்கத்தில் சேர்க்கப்படுதல் மற்றும் வெட்டுத்துண்டங்களூடாக பரவும் வைரஸ் நோயின் வட்டத்தில் இடையூறு செய்தல் என்பவை மதிப்பிடப்பட்டது. எனவே செயற்கையான வர்க்க அபிவிருத்திக்கு FCRDC கொடிதோடை அபிவிருத்தித் திட்டத்தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது செயற்கை பரம்பரை விதை 2012 இல் உற்பத்தி செய்யப்பட்டு, மூன்றாவது பரம்பரை மேலதிக அபிவிருத்திக்கும், பெருக்குதலுக்குமாக ஸ்தா பிக்கப்பட்டது.

மா கலப்பின வர்க்க மதிப்பீடு (கலப்பின விதை உற்பத்தி திட்டம் HORDI கன்னொறுவை)

தற்போதுள்ள வர்க்கங்களுக்கு விரும்பத்தக்க தாவர இயல்புகளை சேர்ப்பதை நோக்கமாகக் கொண்ட மா கலப்பின வர்க்க அபிவிருத்தித் திட்டம் 2007இல் ஆரம்பிக்கப்பட்டது. வர்க்கங்கள் கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விலாட், நும்டோக்மாய் (Numdocmai) ஆகியவற்றைப் பாவித்து ஏழு கலப்பின வர்க்கங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வயலில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. கலப்பினத் தன்மையை (Hybridity) நாற்றுக்களில் உறுதிப்படுத்தல் வேண்டும், இல்லாவிட்டால் அவை வயலில் பல வருடங்கள் பராமரிக்க வேண்டியேற்படும். ஆகையால் PGRC யுடன் இணைந்து கலப்பினத்தன்மையை உறுதி செய்வதற்காக DNA பிரித்தெடுப்பு நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தாவர வட்டப்புழு ஒட்டுண்ணிக்கு எதிர்ப்புடைய/ தாங்கக் கூடிய கொய்யா வர்க்க விருத்தி

நானூற்றுப் பத்தொன்பது கொய்யா தாவரங்கள் (இவை பரம்பரை முன்னேற்றத்திலிருந்து பெறப் பட்டது) ஆறு வயல் துண்டங்களில் மதிப்பிடப் பட்டது. பார்வை தரவுகளின்படி, பத்து தாவரங்கள் தெரியப்பட்டு அவை காற்று பதிவைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, பூச்சியியல் பகுதிக்கு உறுதிப்படுத்துவதற்காக கையளிக்கப்பட்டுள்ளது.

உன்னதமான தூரியன் வர்க்கங்களின் தெரிவு

மொத்தமாக 68 தூரியன் சேகரிப்புகள். (சேர்க்கப்பட்ட சேகரிப்பு – 24, அறிமுகம் செய்யப்பட்டவை - 3 HORDI உன்னத வம்சாவழிகள் - 3, விதையில் இருந்து உருவாக்கப்பட்ட மரங்கள் - 36) சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்களுடன் சேர்த்து மதிப்பிடப்பட்டது. இதில் 12 உன்னத வர்க்கங்கள்

தெரியப்பட்டு, இவற்றுள் 4 வர்க்கங்கள் VRC இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் இரண்டு வர்க்கங்கள் வெளியிடப்பட்டது, மற்றைய இரண்டும் நிபந்தனையுடன் வெளியிடப்பட்டது.

தூரியன் F_1 கலப்பின வர்க்கம் அபிவிருத்தி

தூரியன் கலப்பினத் தாவரங்கள் 700 வயல் நிலையில் மதிப்பிடப்பட்டன. மேலும் 100 F_1 தாவரங்கள் மதிப்பீட்டுக்காக ஸ்தாபிக்கப்பட்டன. உன்னத வம்சாவழிக்கிடையிலான கலப்புத் திட்டம் தொடர்கின்றது.

சிற்றஸ் வர்க்கம் அபிவிருத்தி

சேகரித்தல், தெரிதல் திட்டத்தின் கீழ் நாரத்தை (*Citrus reticulata*) – 32, தோடை (*Citrus cinensis*) -8, பேமிலோ (Pumello) – 16 தேசி (*Citrus auranti folia*)என்பன மதிப்பிடப்படுகின்றன. மூன்று உன்னத நாரத்தை வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, 8 வித்தியாசமான விவசாய சூழலியல் வலயங்களில் பரிசோதிக்கப்பட்டது. இதில் ஒரு உன்னத சேகரிப்பு தெரிவு செய்யப் பட்டது.

ஜப்பானில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட எட்டு வெளிநாட்டு தோடை மற்றும் நாரத்தை வர்க்கங்கள், எட்டு வித்தியாசமான விவசாய சூழலியல் வலயங்களில் மதிப்பிடப்பட்டு, மூன்று உன்னத வர்க்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

விகாரமாக்கல் இனவிருத்தித் திட்டம் 2007 ல் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பழங்களின் தரத்திற்குரிய தரவுகள், மற்றும் வளர்ச்சி தரவுகள் விகாரிகளில் (நஸ்நாரான், HOCR 24) இருந்து சேகரிக்கப்படுகின்றன. கலப்புப் பிறப்பாக்கம் தொடர்கின்றது. விருத்தி செய்யப்பட்ட 50 F_1 ஒட்டுதல் செய்யப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

உயர்தரமுள்ள, அதிக விளைச்சல் தரும் மா வர்க்கங்களை கிடைக்கின்ற மூலவுயிருருக்களில் இருந்து விருத்தி செய்தல் (NARP – மா செயற்திட்டம்)

சேகரிக்கப்பட்ட உன்னத சேகரிப்புகளில் தெரிவு செய்வது 2011 ல் FCRDC ஹொரணயில் ஆரம்பிக்கப்பட்டது. 2012ல் 51 புதிய சேகரிப்புகள் விவசாயிகள், வேறு அரச பண்ணைகளில் இருந்து சேகரிக்கப்பட்டு வயல் மரபணு வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டது. முதல் சேகரிப்புகளில் இருந்து ஒரு உன்னத சேகரிப்பு அடையாளம் காணப்பட்டது. இது 325 கிராம் நிறையுடைய பழங்களையும், சதை தோல் வீதம் 4.7 யும் கொடுத்தது. வட்டவடிவான இப்பழங்கள் மொத்த கரையக் கூடிய திண்மம் 14^0 ஆகவும் கொண்டிருந்தது. தாவர நடுகைப்பொருள் உற்பத்தி நடைபெறுகின்றது.

வாழையில் மூலவுயிருருக்களை மதிப்பிடல்

தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் சீனிக்கதலி (1ம் குழு), பூ வாலு, சுவன்டல், கப்பல் (2ம் குழு), எம்பன், பின்கிசல் (3ம் குழு) பரிசோதிக்கப்படுகின்றன. முதல் பயிரில் 38% வாழைகள் குலைகளை உற்பத்தி செய்தன இவை மதிப்பிடப்படுகின்றன.

ஆனைக்கொய்யா சேகரிப்புகளை விளைச்சல், தரம் என்பவற்றிற்கு மதிப்பிடல்

இருபத்தி நான்கு ஆனைக்கொய்யா சேகரிப்புகள் FCRDC, கொரணயில் ஸ்தாபிக்கப்பட்டது. நான்கு உன்னத சேகரிப்புகள் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் ஒரு சேகரிப்பு 9 வயதில் உயர்தர தன்மையை காட்டியது. (9%, கொழுப்பு, பசைத்தன்மை, நார்கள் அற்றது) விளைச்சல் 190 பழங்கள் / மரம் ஆகியவற்றை கொடுத்தது. மதிப்பீடு தொடர்கின்றது.

குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் பழப்பயிர்களின் மூலவுயிருருக்களை சேகரித்தல், பாதுகாத்தல், இயல்பு கள் அறிதல், மதிப்பிடல்

இத்திட்டம் 2002இன் பிற்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டது. 2008 ம் ஆண்டு கடைசியில் 203 வித்தியாசமான பழப்பயிர் சேகரிப்புகள் வயல் மரபணு வங்கியில் 3.7 ha நிலத்தில் ஸ்தாபிக்கப் பட்டது. இந்த மரபணு வங்கி கீழ்வரும் சேகரிப்புகளை கொண்டுள்ளது.

அட்டவணை 1.3.2 வயல் மரபணு வங்கியில் உள்ள மூலவுயிருருக்கள்

பழப்பயிர்	சேகரிப்புகளின் எண்ணிக்கை
வில்வம் பழம்	24
சிற்ரசு	47
லாவுலு	05
லொவி	04
பலா	32
வெரலு	17
உகுரஸ	22
கொறுக்கா	33
கடுகுடா	13
தூரியன்	35
சீத்தாப்பழம்	17
அனோனா	14
மெழுகு அப்பிள்	26
ஸ்ரோபரி கொய்யா	07
காட்டுக் கொய்யா	07

இயல்புகள் அறிதல், மதிப்பிடல் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. சிபாரிசு செய்யப்படுவ தற்காக உன்னத வர்க்கங்கள் அடையாளம் காணப்படுகின்றன. மேலும் 2012ம் ஆண்டு 13 பலா சேகரிப்புகளும், 8 கடுகுடா சேகரிப்புகளும், வயல் மரபணு வங்கியில் இணைக்கப்பட்டன.

சப்போட்டிலா ***(Manilkara zapota)***

சேகரிக்கப்பட்ட 17 சேகரிப்புகளில் 2007ல் RCRDC பண்ணையில், பரிசோதனை ஆரம்பிக்கப் பட்டது. வளர்ச்சி, விளைச்சல், பழங்களின் தரம், பழங்களின் அளவு, அமைப்பு என்பன மதிப்பிடப் பட்டது. மிகவும் உன்னத சேகரிப்புக்களான HOS2, HOS12, HOS13 என்பன வெளியிட்டுக்காக நியமிக்கப்பட்டு இதில் HOS 13 பயிரிடுவதற்காக வெளியிடப்பட்டது.

வெரலு ***(Elaeocarpus serratus)***

பதின்நான்கு சேகரிப்புகள் விவசாய வயல்களில் இருந்து சேகரிக்கப்பட்டு வயல் மரபணு வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டன. இவை ‘‘வெட்ச்’’ ஒட்டுதல் தொழில்நுட்பத்தின் மூலம் இனப்பெருக்கம் செய்யப்பட்டன. 2003ல் இருந்து 2010 வரை வளர்ச்சி, விளைச்சல், பழங்களின் தரம், பழங்களின் அளவு என்பன மதிப்பிடப பட்டது. மிகவும் உன்னத சேகரிப்புகள் HOW 5, 7, 9, 13 என்பன வெளியீட்டுக்காக நியமிக்கப்பட்டு, எல்லா சேகரிப்புகளும் வெளியிடப்பட்டன.

கொறுக்கா (Goraka)

முற்பத்தி மூன்று கொறுக்கா சேகரிப்புகள் வயல் மரபணு வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டன. மூன்று உன்னத சேகரிப்புகள் HOG-3, HOG – 8, HOG - 11 என்பன வர்க்க சிபார்சு குழுவினால் பயிரிடுவதற்காக வெளியிடப்பட்டன.

உக்குரஸ்ஸ (Uguressa)

வயல் மரபணு வங்கி FCRDC யில் 22 உக்குரஸ்ஸ சேகரிப்புகள் ஸ்தாபிக்கப்பட்டன. உயர் விளைச்சல், நல்ல தரமான சேகரிப்புகள் சிபார்சு செய்வதற்காக, இயல்புகள் அறியப்பட்டு, மதிப்பிடப்படுகின்றன.

லாவுலு (Lavulu)

ஐந்து லாவுலு சேகரிப்புகள் சேகரிக்கப்பட்டு FCRDC யில் ஸ்தாபிக்கப்பட்டன. மூன்று உன்னத சேகரிப்புகள் அடையாளம் காணப்பட்டன. அடையாளங் காணப்பட்ட சேகரிப்புகளான HOLOV 3, HOLOV 4, HOLOV 5 என்பன முறையே 75 பழங்கள் / மரம் (18Kg), 100 பழங்கள் / மரம் (25Kg), 90 பழங்கள் / மரம் (18.5Kg) என்பவற்றை அதன் 7ம் வயதில் கொடுத்தது. மதிப்பீடு தொடர்கின்றது.

லொவி (Lovi)

நான்கு லோவி (Lovi) சேகரிப்புகள் FCRDC, கொரணயில் ஸ்தாபிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட சேகரிப்புக்களுகிடையில் குறிப்பிடதக்க வித்தியாசம் அவதானிக்கப்படவில்லை

பல்வநாட்டு ஈரவலயத்திற்கு (LCWC) பொருத்தமான கலப்பின வெண்டி வர்க்கங்கள் விருத்தி (கலப்பின விதை அபிவிருத்தி திட்டம்- வெண்டி)

பதின்நான்கு உள்ளகக்கலப்பின வம்சாவழிகள், 91 கலப்பினச் சேர்க்கைகள் (Cross combination) என்பன பரிசோதிக்கப்பட்டு நான்கு கலப்பின வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. இவை தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டன. மூன்று கலப்பின வர்க்கங்கள் HB 100, HB 95, HB 93 அவற்றின் இசைவாக்கத்திற்காக ஈர, மற்றும் இடை வலயங்களில் பரிசோதிக்கப்பட்டன. விளைச்சல், தரம், நரம்பு சித்திரவடிவ வைரசு நோயை தாங்கி வளரும் தன்மை என்பவற்றின் அடிப்படையில் HB 100 தெரிவு செய்யப்பட்டு வெளியீட்டுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இவ் வர்க்கம் பயிரிடுவதற்காக வெளியிடப்பட்டது.

பச்சை மிளகாய் வர்க்கம் - அதன் தூய்மை பராமரிப்பு, அபிவிருத்தி

பத்து ''வரணிய'' பச்சை மிளகாய் வகைகள் (விவசாயிகளின் தெரிவுகள்) பரிசோதிக்கப்பட்டு நான்கு வகைகள், அதன் காரத் தன்மை, மற்றும் வெளி இயல்புகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. இந்த நான்கு வகைகளும் தூய்மைபடுத்தப்பட்டு, விளைச்சலுக்கு மதிப்பிடப்பட்டது. ''வரனிய'' பச்சை வகைகள் தெரியப்பட்டு தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனையில் 2011/2012 காலபோகத்தில் இணைக்கப்பட்டன. விதை உற்பத்தித் திட்டம் தொடர்கிறது.

பயிர்ப் பாதுகாப்பு

பலா, சித்திரசு, அனோனா ஆகியவற்றில் சடுதியான பின்னோக்கி இறத்தல் நோய்க்கு காரணமான நோய்க் காரணியை அடையாளம் காணல்

பின்னோக்கி இறத்தல் நோய் தண்டு, கிளை, வேர் என்பவற்றின் நுனியில் இருந்து ஆரம்பிக்கும். இந்நோயின் முன்னேற்றம் சடுதியானது, நோய் 4 தொடக்கம் 6 கிழமைகளில் தாவரத்தை இறக்கச் செய்து விடும்.

களுத்துறை, கம்பஹா, காலி மாவட்டங்களில் இருந்து நோய் மாதிரிகள் (பலா - *Artocarpus heterophyllus*; சித்திரசு - *Citrus reticulate*; அனோனா - *Annona muricata*) சேகரிக்கப்பட்டு (இறந்த தண்டு / வேர்) ஆய்வுகூடத்தில் நோய்க்காரணியை அறிந்து கொள்வதற்காக பரிசோதிக்கப்பட்டது.

பின்னோக்கி இறத்தல் நோய்க்கான நோய் காரணியாக லாஸியோடிபிலோடியா தியோபுரோமாயி (*Lasiodiplodia theobromae*) அடையாளம் காணப்பட்டது. இது இறந்த பகுதிகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு உட்புகுத்தி பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டது.

பலா, சித்தரகு, அனோனா பின்னோக்கி இறத்தல் நோய்க்குரிய நோய்க் காரணிகளின் பங்கசு நாசினிக்கு எதிரான பிரதிபலிப்பு

தொடுகை மற்றும், ஊடுருவித் தாக்கும் பங்கசு நாசினிகள், பின்னோக்கி இறத்தல் நோய் கட்டுப்பாட்டிற்காக அவற்றின் திறன்கள் பரிசோதிக்கப்பட்டது. இது வயல் நிலையிலும், சோதனைக்குழாய் முறையிலும் பரிசோதிக்கப் பட்டன. மொத்தமாக எட்டு பங்கசு நாசினிகள் கட்டுப்பாட்டு பரிகரணத்துடன் சேர்த்துப் பரிசோதிக்கப்பட்டன. பங்கசு நாசினிகள் கொப்பர் (Copper) (கியுபிரிக் கைரொக்சைட் - (Cupric hydroxide); குலோராதலோனில் (Chlorathalonil); மாங்கோசெப் (Moncozeb); சல்பர் (Sulphur); கார்பென்டாசிம் 500g/L SC (Carbendazim 500g/L SE); கார்பென்டாசிம் 50% WP (Carbendazim 50% WP) ரிபியுகோனாசோல் 250g/L (Tebuconazole 250g/L EW); கெக்சாகோனாசோல் 50g/L EC (Hexaconazole 50g/L EC) பரிசோதிக்கப்பட்டன.

காபென்டாசிம் 500g/L SE மற்றும் ரிபியூகோனாசோல் 250g / L EW ஆகிய பங்கசு நாசினிகள் குறைந்த செறிவிலும் ரிபியூகோனாசோல் 250g / L EW 2ml/L, காபென்டாசிம் 50% WP 2g/L சிறப்பாக லசியோடிகிலோடியா பங்கசு வளர்ச்சியை கட்டுப்படுத்தியது ஆனால் கெக்சாகோனாசோல் பரீட்சிக்கப்பட்ட இனம் லசியோடிகிலோடியா தியோபுரோமாயியை குறைந்த அளவிலேயே கட்டுப்படுத்தியது.

தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுத் தாக்கத்தை தாங்கி வளரக்கூடிய கொய்யா ஒட்டுக்கட்டை தெரிவு

வேர்முடிச்சு வட்டப்புழு கொய்யா பயிர்ச் செய்கையில் முக்கியமான பிரச்சினையாகும். இந்த வட்டப்புழு (*Meloidogyne spp*) மிக விரைவாக, தொற்றப்பட்ட மண்ணின் ஊடாகவும், தாவர நடுகை பொருள் ஊடாகவும் பரவுகின்றது. எனவே, இரண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன. வேர்முடிச்சு வட்டப் புழுவுக்கு எதிர்ப்பை / தாங்கும் தன்மையைக் காட்டும் கொய்யா அடிக்கட்டைகளைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும்.

மொத்தமாக 530 விதை நாற்றுக்களுக்கு மெலோய்டோஜின் இனம் (*Meloidogyne spp*) உட்புகுத்தப்பட்டு, 8 -12 கிழமைகளின் பின்பு 460 தாவரங்களில் வேர்முடிச்சு பரிசோதிக்கப்பட்டது. ஸ்ரோபெரி கொய்யா தாவரம் தவிர்ந்த மற்ற எல்லாவற்றிலும் வேர்முடிச்சு காணப்பட்டது. ஆனால் ஸ்ரோபெரி கொய்யா ஒட்டுக் கிளையுடன் ஒத்துபோகவில்லை.

வயலில் வேர்முடிச்சி வட்டப்புழுவுக்கு மொத்தமாக 115 கொய்யா தாவரங்கள் மதிப்பிடப்பட்டதில், பதினொரு தாவரங்கள் வெளி அறிகுறிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட தாவரங்களில் இருந்து, காற்று பதியமூலம் உருவாக்கப்பட்ட தாவரங்கள் மெலோய்டோஜின் இனம் உட்புகுத்தப்பட்டு, வட்டப்புழுவுக்கு தாங்கும் தன்மையை உறுதி செய்வதற்கு பரிசோதிக்கப்படுகின்றது. இப்பரிசோதனை தொடர்கிறது.

தாவர ஒட்டுண்ணி வட்டப்புழுவுக்கு எதிராக வெவ்வேறு மண் சேர்க்கைகள் மதிப்பிடல்

வெவ்வேறு அளவிலான கோழி உரம் சாடியில் மண்ணுடன் கலக்கப்பட்டு மதிப்பிடப்பட்டது. எதிர்ப்பற்ற கொய்யா வர்க்கம் இதற்கு பாவிக்கப்பட்டது. கோழியுரம் 1%, 2%, 3%, 4%, சேர்க்கப்பட்டது. தாவரத்திற்கு மெலோய்டோஜின் இனம் புகுத்தப்பட்டது. பரிசோதனை தொடர்கின்றது.

மண் போசணைப் பராமரிப்பு

மங்குஸ்தானில் பிசின்படிவு, நீர்த்தன்மை யான அடையாளம் (Gamboge & Translucent) போன்ற குறைபாடு

பள்ள நாட்டு ஈரவலயத்தில் உள்ள அநேகமான பகுதிகளில் மங்குஸ்தானில் இக்குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது. சுளைகளில் மஞ்சள், கசப்பான பிசின் படிவு (Gamboge), நீர்த்தன்மை யான அடையாளம் (tranlslucent) குறைப்பாடுகளி னால் பழங்களின் தரம் அதிகளவில் பாதிக்கப் படுகின்றது.

போரோன், கல்சியம் என்பன மண்ணிற்கு இடல். இலைகளுக்கு விசிறல் ஆகிய இரு முறைகளில் இம்மூலகங்கள் பாவிக்கப்பட்டன. இலைகளுக்கு விசுரும் போது இரண்டு குறைபாடுகளும் குறைந்து காணப்பட்டது. கல்சியம் மண்ணிற்கு சேர்க்கும் போதும் (PH 5.5 – 6.5 இற்கு சரி செய்தல்) அத்துடன் பழங்கள் உருவாகும் போது கல்சியம் நைற்ரேற் இலைகளுக்கு விசிறல் இரண்டு குறைபாடுகளையும் அதிகளவில் குறைந்தன. தாவர மாதிரிகள் பகுப்பாய்வுகுட்படுத்தப்படுகின்றன.

மண்புழு உரத் தயாரிப்பில் வெவ்வேறு வகையான சேதனப் பொருட்களின் தாக்கம்

வெவ்வேறு சேதனப் பொருட்கள் மாட்டெருவுடன் சேர்த்து மண்புழு உரத்தயாரிப்பில் பரிசோதிக்கப் பட்டது. மண்புழு உரத்தின் நிறை, மண்புழுவின் தொகை என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது, வைக்கோல், மாட்டெரு 1:1 வீதம் கலந்த கலவையே சிறந்ததாகும்.

டிறகன் பழுத்தில் சேதனப் பசளை பாவிப்பதின் தாக்கம்

டிறகன் பழப்பயிருக்கு உகந்த சேதனப் பசளைக் சேர்க்கையைக் கண்டுபடிப்பதற்காக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கோழிஉரம் 20 t / ha/ year, அதேயளவு மாட்டெரு அல்லது மண்புழு உரம் பாவிக்கும் போதுள்ளதை விட குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அத்துடன் மண்புழு உரத் திரவமும் மேலும் பரிசோதிக்கப்பட்டது.

பயிர் முகாமைத்துவம்

இரண்டு ஒட்டுக்கட்டைகள் பாவித்து உருவாக்கப்பட்ட மங்குஸ்தானில் வளர்ச்சி, விளைச்சல் மதிப்பீடல்

மங்குஸ்தீன் (*Garcinia mangostana* L) மிகவும் பிரபல்யமானது, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக கேள்வி உள்ள பழமாகும். இதன் குறைந்த வளர்ச்சி வீதம் (8 - 10 வருடங்கள் உற்பத்தியற்ற பதியக் காலம்) காரணமாகவே இப் பயிர்ச் செய்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது பாரம்பரிய ‘‘வெட்ச்’’ ஒட்டு (Wedge grafting) முறையானது இக்காலத்தை 3-4 வருடங்களால் குறைந்துள்ளது. அத்துடன் இது ஏற்றுக் கொள்ளக்கூடிய வளர்ச்சி வீதத்தையும், பழ உற்பத்தியையும் கொடுத்தது.

இப்பரிசோதனையின் நோக்கமானது மேலதிக அடிக்கட்டையை ஒட்டும் போது அதன் உற்பத்திதிறன் அதிகரிப்பை உண்டாக்குவதாகும். இப்பரிசோதனை 2004 இல் பழப்பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்தில் (FCRDC) கொரணையில் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு அடிக்கட்டைகள் பாவித்த தாவரம் ஒரு அடிக்கட்டை தாவரத்தைவிட நன்றாக வளர்ந்து, வியாபித்த தாவர விதானத்தை உருவாக்கியது. நட்டு 8ஆவது வருடத்தில் விளைச்சலாக 106 பழம் / தாவரம் கொடுத்தது. தாவர விதானத்தை அதிகரிப்பதன் மூலம் உற்பத்திதிறன் அதிகரிக்கப் படலாம்.

விதையில் இருந்து உருவாக்கப்படும் மங்குஸ்தீன் தாவரத்திற்கு மேலதிக வேர்த்தொகுதி கொடுப்பதன் மூலம் உற்பத்திதிறன் அதிகரிப்பு

விதைத் தாவரங்களுக்கு இரண்டு ஒட்டுக்கட்டை தொழில்நுட்பமுறை பொருந்தும் தன்மை

பரிசோதிக்கப்பட்டது. இது இடைப்பட்ட மற்றும் பெரிய அளவில் மங்குஸ்தீன் பயிர் ஸ்தாபிப்பதற்கு உதவியாக இருக்கும். எனவே பழ உற்பத்திக்கான காலத்தை குறைப்பது, விதைத் தாவரத்தின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது ஆகிய நோக்கங்களுடன் செப்ரெம்பர் 2006 – மே 2012 வரை FCRDC கொரணயில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் மேலதிக வேர்த் தொகுதியொன்று, விதைத் தாவரத்திற்கு "இனாச்" பதிவைத்தல் (*inarching*) முறையில் சேர்க்கப்படுகின்றது. "இனாச்" தாவரம் 100% நிழலில் 45 நாட்கள் வைக்கும் போது 98% வெற்றியை கொடுத்தது.

இரட்டை அடிக்கட்டைகள் கொண்ட தாவரம் வயலில் நடப்பட்டு 4-5 வருடங்களில் பழ உற்பத்தியை ஆரம்பித்தது. சராசரியாக 12 பழங்கள் / தாவரம் என்ற அளவில் இரட்டை அடிக்கட்டை தாவரங்கள் உற்பத்தி செய்தன. ஆனால் விதைத் தாவரம் பழ உற்பத்தி ஆரம்பிப்பதற்கு 7 -20 வருடங்கள் எடுத்தன. ஆரம்ப விளைச்சல் 4 பழங்கள் / தாவரம். எனவே இரட்டை அடிக்கட்டை தொழில்நுட்பம் முன்னேற்றமானது, இதன் மூலம் பழ உற்பத்திக்கான காலம் குறைக்கப்படுவதுடன், உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது.

டிறகன் பழப் பயிரின் உற்பத்தித் திறன்

3ம், 4ம், 5ம், 6ம், 7ம் வருடங்களில் பழைய தாவரங்கள் முறையே 2269, 9195, 11895, 2517, 7338Kg / ha விளைச்சலை கொடுத்தது.

வெவ்வேறு வெட்டுத் துண்டத்தின் அளவு, எண்ணிக்கை ஒரு கம்பத்திற்கு பயன்படுத்தும் போது, அது டிறகன் பழத்தின் வளர்ச்சி, தரம், விளைச்சலில் உள்ள தாக்கம்

ஒரு கம்பத்தில் நடப்படும் வெட்டுத் துண்டங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் போது கிளைகளின் எண்ணிக்கை அதிகரித்தன. எல்லா பரிகரணங்களும் கடைசி போகத்தில் சில பழங்களையே கொடுத்தன. பரிசோதனை தொடர்கிறது.

ரம்புட்டான் வளர்ச்சி, விளைச்சல் என்பவற்றில் பயிர் அடர்த்தி, கத்தரித்தல் உயரம் ஆகியவற்றின் தாக்கம்

இப்பரிசோதனையின் நோக்கமானது பள்ள நாட்டு ஈரவலயத்தில் அதிக வருமானம் தரக்கூடிய வகையில் தாவர பரிபாலன முறை ஒன்று ரம்புட்டான் பயிருக்கு சிபார்சு செய்வதாகும். மல்வானை விசேடம் (Malwana special) வர்க்க தாவரங்கள் 36 இற்கு மூன்று தாவர அடர்த்திகள் (10m x 10m சிபாரிசு செய்யப்பட்ட அடர்த்தி); 10m x 7.5m, 10m x 5m) இரண்டு வெவ்வேறு கிளை உயரம் (90cm சிபாரிசு செய்யப்பட்டது; 30cm). என்பன பரிசோதிக்கப் பட்டன. வளர்ச்சி, இலை பூ இயல்புகளும், சில பழ இயல்புகளும் பதியப்பட்டன. இது வரையில் தாவர உயரம், தாவர விதான விஸ்தீரணம், விளைச்சல் என்பவற்றில் வேறுபாட்டை காட்டவில்லை. மேலும் ஆய்வுக்காக தொடர்புடைய தரவுகள் சேமிக்கப்படுகின்றன.

பழப்பயிர் அபிவிருத்திச் செயற்பாருகள்

தாவர நடுகைப் பொருள் உற்பத்தி, மற்றும் வேறு செயற்பாடுகள் மூலம் பெறப்பட்ட வருமானம்

2012ம் ஆண்டு 25,560 அரும்பு ஒட்டுத் தாவரங்களும், 180 கிளை ஒட்டுத் தாவரங்களும், 318 விதைத் தாவரங்களும், விற்கப்பட்டன. இவை கீழ்வரும் பழப்பயிர்களை சேர்த்தவை: ரம்புட்டான், மா, தூரியன், தேசி, மங்குஸ்தின், பலா, ஆனைக்கொய்யா, ஸ்ரார் பழம், சப்போடில்லா, கார்சீனியா, ஜம்பு, லோவி, அனோனா, கொய்யா, தோடை, பெலி, வெரலு, சப்போட்டா. இதன் மூலம் 4,270,020 ரூபாவும், மற்றைய செயற்பாடுகள் மூலம் 2,507,180.90 ரூபாவும் வருமானமாக பெறப்பட்டது.

இழைய வளர்ப்பு மூலம் முக்கியமான தாவரங்களில் உயர்தரநடுகைப் பொருள் உற்பத்தித் திட்டத்தினால் நிதியுதவி செய்யப்பட்ட திட்டங்கள்

வாழையில் நுண் இனப்பெருக்கம்

தாவரங்களில் (வாழை, அன்னாசி) உயர்தரமான நடுகைப் பொருள் உற்பத்திக்கு தாவர இழைய வளர்ப்பு தொழில்நுட்பம் உகந்ததென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். எனவே, இந்த நிலையத்தில் பழப் பயிர்களில் நுண் இனப்பெருக்கம் சம்பந்தமான பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு இழைய வளர்ப்பு ஆய்வுகூடம் அமைக்கப்பட்டது. இழைய வளர்ப்பு மூலம் உயர்தர நடுகைப் பொருள் உற்பத்தித் திட்டத்தின் கீழ் வளர்ப்பு அறையின் கொள்ளளவு 1500 இலிருந்து 4500 வளர்ப்புகள் ஆக அதிகரிக்கப்பட்டது. அத்துடன் ஆய்வுகூட வசதிகள் அதிகரிக்கப்பட்டன. 1500 இற்கு மேற்பட்ட இழையவளர்ப்பு வாழைகள் (வெவ்வேறு வர்க்கங்களை சேர்ந்தவை) ஆராய்ச்சி நிலைய வயலிலும், விவசாயிகளின் வயலிலும் நடப்பட்டது. இவற்றில் வேறுபாடுகள் (Somoclonal) அவதானிக்கப்படவில்லை. எனவே அந்த இழையவளர்ப்பு நெறிமுறை (Protocol) வாழை வர்க்கங்கள் கதலி, சீனிக் கதலி, நேத்திராபழம் என்பவற்றின் இனப்பெருக்கத்தில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட முடியும்.

மாவில் முளையப் பாதுகாப்பு

பழம் உதிர்தல் மாம்பழச் செய்கையில் பல பிரச்சினைகளையும், மா இனவிருத்தியில் பல தடைகளையும் ஏற்படுத்துகின்றது. முளையப் பாதுகாப்பு (Embryo rescue) தொழில் நுட்பத்தில், முதிராத முளையம் கட்டுப்படுத்தப்பட்ட தொற்றற்ற சூழலில் போசணை ஊடகத்தில் பரிசோதனைக் குழாய் முறையில் பாதுகாக்கப்ப டுவதாகும். கலப்பின முளைய தொழில்நுட்பம் சிறந்த முறையில் இதில் பாவிக்கப்பட முடியும். எனவே உள்ளூர் மா வர்க்கங்களில் முளையம் பாதுகாப்பிற்கான நடைமுறையை அபிவிருத்தி செய்வதற்காக பரிசோதணை ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் தொற்று நீக்கல் நடைமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்கிறது.

அயனமண்டல பழப்பயிர்களுக்காக உயிரியல் பல்லினத்தன்மையுள்ள தோட்டம் ஸ்தாபித்தல்

ஒட்டுத் தாவரங்கள்: ரம்புட்டான் (26), மா (127), கொய்யா (100), ஸ்ரார் பழம் (38), வெரலு (5), கடுகுடா(20) என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. விதை மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தாவரங்கள் நாமினம் (26) விளாம்பழம் (8), பிறட் பழம் (36), டம்பா (5), கரம்பா (5), டான் (9), புளி (21), ரோஸ் அப்பிள் (22), கொய்யா (14), அனோனா (46), லோவி (12), லாவுலு (16), கடுகுடா (17), மா (70), என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தாய்த்தாவர பயிர்கள் ரம்புட்டான், பலா, ஸ்ரார் பழம், வக்ஸ் அப்பிள், மா, வெரலு என்பன கத்தரிக்கப்பட்டன.

மண் பாதுகாப்பு முறையாக லெமன் புற்கள் கரைகளில் நடப்பட்டன. மேலதிக நீர் வடிவதற்காக குளம் ஒன்று தோண்டப்பட்டது. களை கட்டுப்படுத்தப்பட்டன. எல்லா பயிர்கட்கும் உரப் பாவனை மேற்கொள்ளப்பட்டது.

வீட்டுத் தோட்டம் ஸ்தாபித்தல், பராமரித்தல், விவசாயிகளைப் பயிற்று வித்தல், பாடசாலை மாணவர்களுக்கு அறிவூட்டல்

FCRDC, கொரணயில் 2005 இல் வீட்டுத் தோட்டம் அமைக்கப்பட்டது. மாணவர்கள் இது சம்பந்தமான அறிவை பெற்றனர். 2790 பாடசாலை மாணவர்கள், 234 ஆசிரியர்கள், 206 ஏனையோர் 2012 இல் வீட்டுத் தோட்டம் சம்பந்தமாக அறிவை பெற்றுக் சென்றனர்.

பயிற்சி நிகழ்ச்சிகள்

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் 2012 இல் மேற்கொள்ளப்பட்டன.

- 2460 பாடசாலை மாணவர்கள், 172 ஆசிரியர்கள் ஆகியோர் 21 பாடசாலை களில் இருந்து இந்நிலையத்திற்கு வருகை தந்தனர்.
- எட்டு பயிற்சி திட்டங்கள் 288 சர்வகலாசா லை மாணவர்கட்கு மேற்கொள்ளப்பட்டது.
- ஒன்பது பயிற்சி திட்டங்களில் (பழப்பயிர் பயிராக்கம், வீட்டுத் தோட்டம், இழைய வளர்ப்பு, நாற்று மேடை பராமரிப்பு) 213 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்றனர்.
- உயிரியல் பல்லினத்தன்மைக்கான பழமரத் தோட்டத் திட்டத்தின் கீழ் 31 பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கூட்டெரு தயாரிப்பு சம்பந்தமாக பயிற்சிகளும் அளிக்கப்பட்டது. 1443 பேருக்கு (கொரண பகுதி) நுண்ணுயிர் நிரம்பிய கூட்டெரு பொதிகள் ஒவ்வொன்று வழங்கப்பட்டன.

விவசாய ஆலோசனை நிகழ்ச்சிகள்

விவசாயிகள், விரிவாக்க அலுவலகர்கள் ஆகியோரிடம் இருந்து 73 நோய் மாதிரிகள் கிடைக்கப்பெற்றன. இவை ஆராயப்பட்டு ஆய்வு கூடத்தில் வளர்க்கப்பட்டு, நோய்க் கிருமி அடையாளம் காணப்பட்டு அதற்காக சிபார்சு வழங்கப்பட்டது.

விவசாயிகளினால் 97 வயல் பிரச்சினைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவை டிறகன் பழம், ரம்புட்டான், மரக்கறி, அரசமரம் ஆகியவற்றின் நோய் பீடை சம்பந்தப்பட்டது. இவற்றிற்கான பாதுகாப்பு முறைகள் அறிவிக்கப்பட்டது.

கூடகம் பாவித்தல்

FCRDC அலுவலகர்கள் 4 தொலைகாட்சி நிகழ்ச்சிகள், 5 வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றில் பழப்பயிர் பயிராக்கம், நோய் பீடை கட்டுப்பாடு, வீட்டுத் தோட்டம் சம்பந்தமாக பங்குப்பற்றினர்.

2013 இற்கான திட்டம்

பயிர் மேம்பாடு

- தெரிவின் மூலம் உயர்தரமான, அதிக விளைச்சல் தரும் தூரியன், தோடை, நாரத்தை, பியூமெலோ, தேசி, வில்வம் பழ வர்க்கங்கள் அபிவிருத்தி
- கலப்புப் பிறப்பாக்கம் மூலம் தரமான, விளைச்சல் கூடிய தூரியன், தோடை, நாரத்தை வர்க்கங்கள் அபிவிருத்தி செய்தல்
- அறிமுகம், விகாரம் என்பவற்றினூடாக தரமான அதிக விளைச்சல் தரும் தோடை, நாரத்தை வர்க்கங்கள் அபிவிருத்தி
- வில்வம் பழத்தின் பூவியல் அறிதல்
- தற்போதுள்ள விதைத் தாவர குடித்தொகை யில் இருந்து வயலில் ரம்புட்டான் வர்க்கம் தெரிவு
- ரம்புட்டான் குடித்தொகையில் இருந்து உயர்வான வர்க்கம் தெரிவு
- புதிதாக சிபார்சு செய்யப்பட்ட கொறுக்கா வர்க்கத்திற்கான இசைவாக்க பரிசோதனை
- உக்கிரசவில் உயர்வான சேகரிப்புகளின் தெரிவு
- சீத்தாப்பழ சேகரிப்புகள் தரம், விளைச்சலுக்கான மதிப்பீடு
- ஆனைக்கொய்யா சேகரிப்புகள் தரம், விளைச்சலுக்கான மதிப்பீடு
- விளைச்சல் கூடிய, தரமான, வளையப்புள்ளி வைரசு நோய்க்கு தாங்கும் தன்மை கொண்ட தூய, கலப்பு வர்க்கங்கள் பப்பாசியில் அபிவிருத்தி
- பப்பாசியில் விளைச்சல் கூடிய தரமான தூய, கலப்பு வர்க்க அபிவிருத்தி

- மா கலப்பின வர்க்க அபிவிருத்தி
- லொவி, லாவுலு, கடுகுடா ஆகியவற்றின் மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு, தெரிவு
- ஈர வலயத்திற்காக மா சேகரிப்புகள் மதிப்பீடு
- நிலையத்தில் வெரலு சேகரிப்புகள் மதிப்பீடு
- உயிரியல் பல்லினத்தன்மை பழத் தோட்டம் FCRDC யில் அமைப்பதற்காக குறைவாக பயன்படுத்தப்டும் பழப் பயிரின் மூலவுயிருருச் சேகரித்தல்
- தரமான, விளைச்சல் கூடிய கொடித் தோடை வர்க்கம் அபிவிருத்தி
- எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்கட்காக அன்னாசி மூலவுயிருருச் சேகரித்தலும், சேமித்தலும்.
- உயர்வான ''வரணிய'' பச்சை மிளகாய் வர்க்கத்தின் தூய்மை பராமரிப்பும், விதை உற்பத்தியும்
- மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு - கிழங்குப் பயிர்கள்
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை – வற்றாளை
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்க பரிசோதனை – பூசணி
- வெண்டி கலப்பின வர்க்கத்தின் பெற்றோர் வம்சாவளிகள் பராமரிப்பு

பயிர் முகாமைத்துவம்

- தூரியன் (ஒட்டுத் தாவரம்) இற்கான பயிர் பராமரிப்பு முறை அபிவிருத்தி
- தூரியனில் காலந்தப்பிய பயிரில் செயற்கையாக பூத்தலை தூண்டுதல்
- ரம்புட்டானில் இலாபகரமான பயிர் பராமரிப்பு முறை அபிவிருத்தி
- கொறக்கா, உக்குரஸ்ஸ சேகரிப்புகள் எதிர்கால தேவைகளுக்காக பராமரிப்பு
- புதிதாக சிபார்சு செய்யப்பட்ட கொறக்கா, வர்க்கத்தின் இசைவாக்கப் பரிசோதனை
- இரட்டை அடிக்கட்டை பாவிப்பின் போது வளர்ச்சி, விளைச்சல் மதிப்பீடு – மங்குஸ்தான்
- சீத்தாபழம் விதைத் தாவரத்தில், மரத்தைப் பயிற்றுவித்தல் விளைச்சலில் ஏற்படுத்தும் தாக்கம்
- கொடித் தோடையில் பல்வேறுபட்ட பந்தல் முறை மதிப்பீடு
- சிபார்சு செய்யப்பட்ட மா வர்க்கங்களில் பூத்தலை தூண்டல் பக்லோபியூற்றாசோல் (*Paclobutazole*) பாவனை
- வெரலுவில் விதை முளைத்தல் ஆராய்ச்சி

மண் விஞ்ஞானமும், தாவரப் போசணையும்

- அன்னாசியில் உற்பத்தித் திறன் அதிகரிப்பிற்கு போசணை பராமரிப்பு கூட்டு அபிவிருத்தி செய்தல்
- வாழைச் செய்கை மண்ணில் பொட்டாசியம் கிடைக்கும் தன்மை மதிப்பீடு வருட நடுகை முறையில் பொட்டாசியம் பராமரிப்பு
- வாழையில் பழம் வெடித்தல் பராமரிப்பு
- கொடித் தோடை தண்டு வீக்கம் - பராமரிப்பு
- டிறகன் பழத்திற்கான சேதனப் பசளை கூட்டு அபிவிருத்தி
- ஆராய்ச்சி – பெக்கற் ரம்புட்டான், பகுதியாக நிரம்பிய ரம்புட்டான்

தாவர நோயியில்

- பாதுகாப்பான கூட்டுப் பொருள் பாவித்து கொய்யாவில் பழ அழுகல் நோய்கட்டுப்பாடு (4 நோய்கள்)
- பாதுகாப்பான கூட்டுப் பொருள் பாவித்து மாவில் அந்தரக்னோசு தண்டு நுனி அழுகல் நோய்க் கட்டுப்பாடு
- தாவர வடிகள் பாவித்து வாழையில் சிற்றாக்கோ (Sigatata) நோயை கட்டுப்படுத்தல்
- பாதுகாப்பான கூட்டுப் பொருள் பாவித்து பப்பாசியில் பழ அழுகல் (6 நோய்கள்) கட்டுபாடு
- டிறகன் பழ பின்னோக்கி இறத்தல் நோய்க் கட்டுபாடு

பூச்சியியல்

- வட்டப்புழுவுக்கு எதிர்ப்பையுடைய கொய்யா அடிக்கட்டை அபிவிருத்தி
- அன்னாசி, கிரிஅல, வாழையில் தேங்கி நிற்கும் நீர், டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கும் இடையில் உள்ள தாக்கம்
- கொய்யாவில் வேர்முடிச்சு வட்டப்புழுவின் பராமரிப்பு
- வாழை நீள்மூஞ்சி வண்டு பீடை நாசினி துகள் கொண்டு கட்டுப்படுத்தல்

இழைய வளர்ப்பு

- முளைய பாதுகாப்பு – மா
- இழையவளர்ப்பு வாழை – வயல் மதிப்பீடு
- இழையவளர்ப்பு அன்னாசி – வயல் மதிப்பீடு
- வர்த்தக முக்கியத்துவமுள்ள முந்திரிகை வர்க்கங்கள் நுன் இனப்பெருக்கம்
- மிகவும் தரமான வாழை விகாரிகள் அபிவிருத்தி

சமூக பொருளியல்

- INFORM அறிக்கை – 2013 தயாரித்தல்
- சமூக பொருளியல் தரவுகளுக்கு (பழப்பயிர்) தரவுத் தளம் உருவாக்கல்

அபிவிருத்தி திட்டங்கள்

- மாதிரி வீட்டுத் தோட்டம் அபிவிருத்தி செய்தல், பராமரித்தல்
- அயண மண்டல பழப் பயிருக்கான உயிரியல் பல்லினத் தன்மை தோட்டம் கொரணயில் ஸ்தாபித்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	11
பொருளாதார உதவியாளர்	01
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்கள்	06
உதவிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்கள்	10
விவசாயப் போதனாசிரியர்கள்	11
முகாமைத்துவ உதவியாளர்	05
சாரதி	03
களஞ்சியக் பொறுப்பாளர்	01
உழவு இயந்திர இயக்குனர்	02
காவலாளி	01
தாவர ஒட்டுனர்	03
தொழிலாளி (நிரந்தரம்)	30
தொழிலாளி (ஒப்பந்தம்)	109
மொத்தம்	**196**

1.3.1 பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDS), கன்னொறுவை

பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் கன்னொருவை (FCRDS) வானது பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் (FCRDC) கொரணையின் நிர்வாகத்தின் கீழ் பிரதான மற்றும் குறைத்த பயன்பாடுடைய பழப்பயிர்கள் என்பவற்றில் ஆய்வினை மேற்கொண்டு வருகிறது. இது பேராதனை நகரத்தில் இருந்து 2 கி.மீ தூரத்தில் கன்னொருவ - கடுகஸ்தோட்டை வீதியில் பூங்கனியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI) அமைந்துள்ள சந்தியில் அமைந்துள்ளது.

இந்நிலையமானது வரலாற்றுப்புகழ் கொண்ட கண்டிய மன்னர்களின் பொழுது போக்கு இடமாவும் பூக்கனியியல் பூங்காவாகவும் காணப்படுகின்ற ஒர் இடத்தில் அமையப் பெற்றுள்ளது. இலங்கை ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் வந்ததன் பின்னர் அன்றைய (1824-1831) இலங்கையின் ஆளுநராக இருந்த சேர் எட்வேர்ட் பேன்ஸ் என்பவர் இப்பகுதியினை விருத்தி செய்ததுடன் தனது தனிப்பட்ட தோட்டத்தினையும் குதிரை வளர்ப்பிற்கான லயத்தினையும் நிறுவினார். அவருடைய பயிர்ச் செய்கைப் பயிர்களான தேயிலை இறப்பர் வாசனைப்பயிர்கள் பழப்பயிர்கள் மற்றும் புற்கள் என்பன 1916ம் ஆண்டு வரையில் தொடர்ந்ததும் காணப்பட்டன.

திரு. லைன் முதலாவது விவசாயப்பணிப்பாளர் அவர்கள் இப்பண்ணையை கையேற்று இதனை பயிர் ஆராய்ச்சிப்பண்ணை என பெயர் மாற்றி 1912 ம் ஆண்டளவில் புதிதாக உருவாக்கப்பட்ட விவசாயத் திணைக்கனத்தின் கீழ் செயற் படுத்தினார். தொடர்த்துவந்த 100 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட சில மீள்கட்டமைப்புகளின் பின்னர் இது பூக்கனியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (HORDI) ஓர் ஆராய்ச்சி அலகாக மாற்றப்பட்டதுடன் 2012ம் ஆண்டில் பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமாக மீள்பெயரிடப்பட்டு பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம், கொரணையின் நிர்வாகத்தின் கீழ் 2012 இல் இருந்து செயற்பட்டு வருகிறது

அட்டவணை 1.3.1.1: FCRDS இன் தரைப்பயன்பாட்டுக் கோலம்

பயிர்	மொத்த விஸ்தீரணம் (ஹெக்டயர்)	நிலை
1. ஆனைக்கொய்யா மூலவுயிருரு (புத்துயிர் அளிக்கப்பட்டது)	1.0	தொன்று தொட்டுப் பாவனையிலுள்ள வர்க்கங்களைப் பாதுகாப்பதற்காகவும் ஒட்டு மரவுரிகளைப் பெறவும் பயன்படுகிறது.
2. வாழைப் பயிர்ச் செய்கை	1.0	உள்ளூர் பேதங்களின் சேகரிப்புகள் மூலவுயிருருக்களாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.
3. தூரியன் பயிர்ச் செய்கை	1.0	வர்க்க மதிப்பீடும் பாதுகாப்பும்

4. மா மூலவுயிருரு (புத்துயிர் அளிக்கப்பட்டது)	1.5	மூலவுயிருருப் பாதுகாப்பு
5. நாற்று மேடை	1.0	ரம்புட்டான், தூரியன், ஆனைக்கொய்யா, மா போன்றவற்றின் ஒட்டு மற்றும் தண்டுத்துண்ட நாற்றுகள் உற்பத்தி
6. குறைந்த பாவனையுடைய பழப் பயிர்த் தோட்டம் / கள பரம்பரை அலகு	2.5	35 பழ இனங்கள் மற்றும் 190 பயிர்க் குலங்கள் என்பன ஸ்தாபிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
7. கலப்புப் பயிர் பழத் தோட்டம் (ரம்புட்டான், மா, மங்குஸ்தான், அன்னாசி, ஸ்ரோபெரி)	4.0	தாய் தாவரங்களிற்கான பயிர் மதிப்பீடு மற்றும் பாதுகாப்பு என்பன மேற்கொள்ளப்படுகிறது.

ஆராய்ச்சி நிலையமானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை பிரதான பழப் பயிர்களான ரம்புட்டான், தூரியன் ஆனைக் கொய்யா மா மற்றும் ஏனைய பல குறைந்த பயன்பாடுடைய பழப்பயிர்களான வில்வம் பழம் (beli) மசான் (Masam) ஜம்பு, வெரலு போன்ற பயிர்களிலும் மேற்கொள்கிறது. வர்க்க விருத்தி, உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பயிர் வர்க்கங்களை சேகரித்தலும் மதிப்பீடு செய்தலும், இனப்பெருக்கத் தொழில்நுட்பம், நாற்று மேடை முகாமைத்துவம், பழத் தோட்டம் ஸ்தாபித்தல், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பவை இந்நிலையத்திற்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதான ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகும்.

நாட்டின் விவசாய அபிவிருத்தியில் பங்கெடுத்தலின் பொருட்டு இந்நிலையத்திற்கான ஆணையாக பழப்பயிர்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றுடன் விரிவாக்கல் மற்றும் பயிற்சி அளித்தல் என்பவும் உள்ளடங்குகிறது.

பாதீடு

அட்டவணை 1.3.1.2: வருடாந்தப் பாதீடு –2012 (ரூ)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மீண்டுவரும் நிதி	2,896,814	2,701,092	93
மூலதன நிதி	5,471,000	4,413,778	80
கருத்திட்டம்:-			
மா, தூரியன் என்பவற்றில் பூத்தலைத் தூண்டும் செயற்திட்டம்	1,116,000	1,106,372	99
ஆனைக் கொய்யா அபிவிருத்தி செயற்திட்டம்	1,000,000	981,195	98
பழப்பயிர் உற்பத்தி செயற்திட்டம்	922,500	732,874	79
பண்ணை அபிவிருத்தி செயற்திட்டம்	1,050,000	869,818	82
இழைய வளர்ப்பு செயற்திட்டம்	250,000	249,900	83

முன்னேற்றம்

ஆராய்ச்சி

வில்வம் பழம் (*Aegle marmelos*) (L)

ஆறு உயர்வான குலத் தாவரங்கள் எதிர்கால விருத்திக்காக அடையாளம் காணப்பட்டன. சில குலத் தாவரங்கள் (accession) பதப்படுத்தல் அல்லது பெறுமதி சேர் செயற்பாடுகளிற்குப் பொருத்தமானதாகவும் ஏனையவை உடன் பழங்களிற்குப் பொருத்தமானதாகவும் இருக்கின்றன.

இலந்தைப் பழம் (*Ziziphus jujba*)

நான்கு குலத் தாவரங்கள் தரையில் நடுகை செய்வதற்காகவும் கொள்கலன்களில் நடுகை செய்வதற்காகவும் அடையாளம் காணப்பட்டன.

குறைந்த பயன்பாடுடைய பழப்பயிர்களின் உயர் பண்புகளையுடைய மூலவுயிருருக்களை இனங்காணல்

எதிர்பார்ப்புக்குரிய ஓர் குல வகையானது பச்சை அப்பிளிற்கு மிகவும் ஒப்பிடக்கூடியதாக இருந்தது. மற்றைய மூன்று குலங்களும் கொள்கலன் பயிர்ச் செய்கைக்கு எதிர்ப்பார்புடையதாகக் காணப்பட்டது.

ஜம்பு (*Syzygium cumini* (L) skeels)

ஊதா நிறமான இரண்டு குலங்கள் அடையாளம் காணப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட ஓர் தெரிவும் ஓர் உள்ளூர்ப் பேதமும் தரையில் நடுகை செய்வதற்காகவும் அதே போல் கொள்கலன்களில் நடுகை செய்வதற்காகவும் அடையாளம் காணப்பட்டன.

ஜம்பு (*Syzygium cumini* (L) skeels)

இளம் பச்சை நிறமுடைய ஓர் குலம் இனங்காணப்பட்டதுடன் அதன் நடத்தைகளிற்காக கற்றல் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளது.

கவர்ணர் பிளம் (*Flacourtia inermis*)

ஓர் குலமானது மேலதிக மதிப்பீட்டிற்காகவும் புதிய வர்க்கமாக வெளியீடு செய்வதற்காகவும் அடையாளம் காணப்பட்டது.

லொங்கன் (*Euphoria longana lam*)

குருநாகல் மற்றும் கண்டி ஆகிய இடங்களில் இருந்து உன்னத பழத் தரத்தைக் கொண்ட இரண்டு குலங்கள் அடையாளம் காணப்பட்டன.

நாரத்தை (*Citrus reticulate Blanco*)

நாட்டின் வேறுபட்ட பகுதிகளில் இருந்து ஏற்புடைய பழத் தரங்களை கொண்ட ஐந்து நாரத்தை குலங்கள் சேகரிக்கப்பட்டதுடன் அவற்றின் நடத்தைகளை அறிவதற்கான கற்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மெழுகுஅப்பிள் (*Syzygium samarangense mere perry*)

ஈரப்புக்குரிய பழத் தரத்தை கொண்ட இரண்டு குலங்கள் பொருத்தப்பாடான ஜம்பு வர்க்கமாக அடையாளங் காணப்பட்டது.

பட்டுப்புளி (*Dialium ovoideum*)

பண்டுகஸ்நுவரவில் இருந்து ஓர் பட்டுப்புளி குலம் அடையாளம் காணப்பட்டது.

அம்லா (*Phyllanthus emblica*)

கண்டிப் பிரதேசத்தில் இருந்து உள்ளூர் பேதங்களுடன் ஒப்பிடக் கூடிய சுவையையும் பெரிய பழப்பருமனையும் கொண்ட ஓர் குலம் பொருத்தப்படான ஓர் பேதமாக அடையாளம் காணப்பட்டது.

பிக்னே (*Antidesm bunius (L) spreny*)

தரையில் நடுகை செய்வதற்கும் அதேபோல் கொள்கலனில் நடுகை செய்வதற்குமாக உயர் தரமான சுவையுடைய ஓர் குலம் இனங்காணப்பட்டது.

லான்சன் (*Baccaurea motleyana*)

தரையில் நடுகை செய்வதற்காக இனிப்புச் சுவையுடைய ஓர் குலமானது பயிர் நடத்தைகளைக் கற்பதற்காக கிரிந்திவெல பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்டது.

- விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி நிகழ்த்தப்பட்ட பழப்பயிர் கண்காட்சியில் பின்வரும் பொருத்தப்பாடான உள்ளூர்ப் பழப்பயிர்களின் இயல்பாக வளரும் பிரதேசங்கள் அடையாளங் காணப்பட்ட துடன் அவை சேகரிக்கப்பட்டன.

பட்ட பம்பர (Pata Bambara)

கிம்புட்டு (Himbutu)

கிரிகூன் (Kiri koon)

விதையற்ற மா (Seedless mango)

பலா (Sweeti jack fruit)

- மட்டுப்பாடான இடத்தைக் கொண்ட வீட்டுத் தோட்டம் மற்றும் நகர்புற விவசாய நோக்கங்கள் என்பவற்றிற்காக பல உள்ளூர் பழப்பயிர்கள் கொள்கலன் நடுகைக்கான சாத்தியப்பாட்டிற்காக அடையாளங் காணப்பட்டன.

தொழில்நுட்பச் சிபார்சுகள்

பாதுகாத்து வைத்தல், பயிர்ச் செய்தல் மற்றும் நில அலங்காரம் போன்ற நோக்கங்களிற்காக முதிர்ச்சியடைந்த பழப்பயிர்களை இடம் மாற்றவதற்கு அல்லது அமைவிடத்தை மாற்றுவதற்கு ஏதுவாக உள்ளூர் பழச் செய்கையில் பந்துவேர்த் தொழில்நுட்பம் (root ball techni) கண்டறியப்பட்டதுடன் அறிமுகப்படுத்த ப்பட்டது.

பெரிய கொள்கலன்களில் உள்ளூர் பழப்பயிர் செய்கையானது அதி சிறப்பானதாகக் காணப் பட்டது. இது அரசியல் அதிகார மையங்கள், அரச அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் போன்றவர்களிடமிருந்து கூடுதல் அங்கீகாரத் தைப் பெறக்கூடியதாக இருந்தது.

அபிவிருத்தி

குறைந்த பயன்பாடுடைய பழத்தோட்டம் / களநிலைப் பரம்பரையலகு வங்கியின் (Gene bank) நிர்மாணம்

அட்டவணை 1.3.1.3: குறைந்த பயன்பாடுடைய பழத் தோட்டம் / களநிலைப் பரம்பரையலகு வங்கியின் (Gene bank) நிர்மாணம் ~ 2012

பழப்பயிர்த் தோட்டம் / கள பரம்பரையலகு வங்கி	பழமர எண்ணிக்கை	குலவகைகளின் எண்ணிக்கை
1. விவசாய திணைக்களம், தலைமைக் காரியாலயம்	12	12
5. இல 36, மகாவலி தோட்டம், பள்ளேகல, குண்டசாலை	10	10
3. கிராம அலுவலர் காரியாலயம், உடுநுவர	14	14
4. வாரியபொல சிறி சுமங்கலா கல்லூரி, கண்டி	08	23
5. ஜட்டிகலகல (Yatihalagala) கண்டி	18	18

6. மகாதென்ன விகாரை, ஜட்டிகலகல	10	12
7. பிரதிப் பணிப்பாளர் (விவசாயம்) பொலநறுவை	24	89
8. பிரதிப் பணிப்பாளர் (விவசாயம்) காலி	19	108
9. பணிப்பாளர் FCRDC ஹொரனை	26	55
10. பிரதிப் பணிப்பாளர் (விவசாயம்) கேகாலை	13	123
11. பிரதிப் பணிப்பாளர் (விவசாயம்) வவுனியா	10	28
12. றினிற்றிக் கல்லூரி, கண்டி	16	16
13. பேராதனைப் பல்கலைக்கழகம்	20	400
14. கடுல் ஓயா தோட்டம் (Katool oya Garden)	09	09

நடுகைப் பொருள் உற்பத்தி

அட்டவணை 1.3.1.4: நடுகைப் பொருள் உற்பத்தி

பயிர்	உற்பத்தி செய்த தாவர எண்ணிக்கை	விற்பனை செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை	விநியோகிக்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை
அரும்பு ஒட்டுத் தாவரங்கள்			
ஆனைக்கொய்யா	2196	1047	110
வில்வம் பழம் (Bele furit)	600	-	300
தூரியன்	278	-	-
கொய்யா	03	3	-
பலா	1244	168	58
ஜம்பு	50	-	25
மா (Gira)	21	03	-
நாரத்தை	99	25	17
இனிப்புத் தோடை	96	20	22
ரம்புட்டான்	1223	122	307
சபோடா (Sapota)	36	10	12
ஸ்ரார்புருட் (Star Fruit)	400	140	35
கவர்ணர் பிளம் (Governor's plum)	30	-	15
காசீனியா (Carcinia)	47	07	10
மா (Tom EJC)	242	162	50
பியூமிலோ(Pumello)	350	11	30
செரிப்பழம்	100	14	30
கலமன்சி (Calomancy)	32	16	-
மா (உயர்தரம்)	02	02	-

இலந்தை (Ber)	50	-	20
ஜமுன் (Jamun)	80	-	35
பிக்னே (Bignay)	175	-	40
லொங்கன் (Longan)	30	-	10
சீத்தாபழம்	30	-	15
லன்சோன் (Lonsone)	100	-	25
வெரலிப்பழம் (Ceylone olive)	30	-	15
தண்டுத் துண்டங்கள்			
எலுமிச்சை	11	05	-
திராட்சை	02	02	-
ஜம்பு	1500	42	375
கொடி எலுமிச்சை	19	14	04
கொய்யா	01	01	-
வெரலி	20	-	10
நாற்றுக்கள்			
ஆனைக்கொய்யா	1284	20	-
புளித்தோடை	125	-	-
எலுமிச்சை	15	05	-
ரம்புட்டான்	3025	-	-
மங்குஸ்தான்	107	04	25
பியூமிலோ	618	-	–
சீனக் கொய்யா	02	02	-
மாதுளை	06	06	-
கொடித் தோடை	01	01	-
மலேசியன் ஜம்பு	42	11	-
தூரியன்	169	-	–
ஸ்ரார் புருட் (Star furit)	1600	-	-
ஜமுன் (Jamun)	23	-	-
மா	30	30	-
பலா	66	20	-
பட்டுப்புளி	50	-	10
சீத்தாப் பழம்	100	-	20
கிம்புட்டு (Himbutu)	40	-	15
நமிநம்	50	-	20
உறிஞ்சிகள்			
இஞ்சி			

கவர்னர் பிளம் இன் உற்பத்திச் செலவு ரூபாய் 732,873.57 ஆக இருந்ததுடன் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் ரூபாய் 383,880.00 ஆக இருந்து

கருத்திட்டங்கள்

பூப்பித்தல் மற்றும் தாவரத்தின் முகாமைத்துவம் என்பவற்றின் மூலம் மா மற்றும் தூரியான் என்பவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

2600 தாவரங்கள் இனங்காணப்பட்டதுடன் 10 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இரண்டு கையேடுகள் மீள் அச்சுப் பதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது (தலா 5000 பிரதிகள்) மூன்று தொலைகாட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. நான்கு பத்திரிகைச் செய்திகள் வெளியிடப்பட்டதுடன் ஐந்து வானொலிச் செய்திகளும் ஒலிப்பரப்பப்பட்டன. 2600 மா மற்றும் தூரியன் மரங்கள் பரிகரிக்கப்பட்டன. அண்ணளவாக 1100 மரங்கள் எதிர்பார்க்கப்பட்டது போல் பூக்க ஆரம்பித்தன.

பரிகரிப்பிற்கான தாயரிப்பினை மேற்கொள்வதற் கும். அமுல்படுத்துவதற்குமென கண்டி மற்றும் மாத்தளை மாவட்ட விவசாய போதனாசிரியர்கள் அறிவூட்டப்பட்டனர். இதற்கான நடவடிக்கைகள் மற்றும் அவர்களுடைய பொறுப்புகள் என்பன பற்றி பயனாளிகளும் அறிவூட்டப்பட்டனர். பரிகரணமானது 2400 மரங்களிற்கும் அதிகம் வரை தொடரப்பட்டது.

ஆனைக்கொய்யா அபிவிருத்தித் திட்டம்

5000 கையேட்டுப் பிரதிகள் மீள் அச்சுப் பதிக்கப்பட்டது. எட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காஸ் (Hass) மற்றும் பியூற் (Fuerte) போன்ற வர்க்கங்களை உள்ளடக்கிய 800 மரங்கள் உச்சி அகற்றிலிற்கு (Top work) கம்பொலை, தெல்தெனியா போன்ற இடங்களில் உட்படுத்தப்பட்டன. உடநுவர, குண்டசாலை, அலவத்தகொடை மற்றும் ஜட்டிவலவ போன்ற இடங்களில் மொத்தம் 1542 மரங்கள் உச்சியகற்றலை நோக்காகக் கொண்டு கிளைகள் அகற்றப்பட்டதுடன் கிளைஒட்டு தொடரப்படுகிறது.

ஓர் பழஈக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி விருத்தி செய்யப்பட்டதுடன் பயனாளிகளிற்கான பழஈப் பொறியின் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளது.

ஐந்து மற்றும் இரண்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முறையே கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் தரமான ஆனைக் கொய்யா வின் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாடு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது.

விரிவாக்கம் மற்றும் பயிற்சி

- பழப்பயிர் நாற்று மேடை எனும் தலைப்பில் தனியார்துறை நாற்றுமேடை உற்பத்தியாளர் கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரிற்கு பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- தொழில்பயிற்சி அதிகாரச் சபையுடன் இணைந்து கடற்படை வீரர்களிற்காக நாற்று மேடை மற்றும் பழப்பயிர்ச் செய்கை என்பதில் ஆறு மாத கால பயிற்சி நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

- பந்துவேர்த் தொழில்நுட்பம் (Root ball) மற்றும் கொள்கலன் பழப்பயிர்த் தொழில்நுட்பம் என்பவற்றினை நாற்று மேடை உற்பத்தியாளர்களிற்காக அறிமுகம் செய்தல்

- நூற்றாண்டு விழாவையொட்டி 2012ம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தால் பழப்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் நடாத்தப்பட்ட கண்காட்சியில் குறைந்த பயன்பாடுடைய பழப்பயிர் மற்றும் சிறந்த பண்புகளையுடைய பேதங்கள் மற்றும் அவற்றின் நடத்தைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

- கத்தரித்தலின் பார்வையில் பயிர் முகாமைத்துவம், நாரத்தை, இனிப்புத் தோடை மற்றும் வில்வம் (Bale fruit) என்பவற்றின் பயிர்பாதுகாப்பு என்பவற்றில் பயிற்சி நிகழ்ச்சி மொனராகலையில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின்

மகாவலிக் காட்சிப் பண்ணையில் மேற்கொள்ளப்பட்டது.

- நூற்றாண்டு விழாக் கண்காட்சியையொட்டி குறைபயன்பாட்டுப் பழப்பயிர்கள் பற்றிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒலி ஒளி பரப்பப்பட்டன.

2013ம் ஆண்டுக்கான திட்டம்

குறைபயன்பாட்டு பழப்பயிர் இனங்களின் கனநிலை (Ex situ) மதிப்பீடு

பயிர்ச் செய்கை நிலைமையின் கீழ் பல்வகைத் தன்மை மற்றும் பயிர் நடத்தைகள் என்பவற்றின் கற்கை

மிகச் சிறந்த வில்வம் பழ இனங்களின் மதிப்பீடு

சிறிய மற்றும் பெரியளவிலான பயிர்ச் செய்கை மற்றும் பயிர் அபிவிருத்தி என்பவற்றிற்காக இனங்கள் மற்றும் வர்க்க நடத்தைகள் என்பன பற்றிய கற்கை

மிகச் சிறந்த இலந்தை (Ber) இனங்களின் மதிப்பீடு

சிறிய மற்றும் பெரிய அளவிலான பயிர்ச் செய்கை மற்றும் பயிர் விருத்தி என்பவற்றிற்காக இனங்கள் மற்றும் வர்க்க நடத்தைகள் என்பன பற்றிய கற்கை

மிகச் சிறந்த லொங்கன் (Longan) இனங்களின் மதிப்பீடு

சிறிய மற்றும் பெரிய அளவிலான பயிர்ச் செய்கை மற்றும் பயிர் விருத்தி என்பவற்றிற்காக இனங்கள் மற்றும் வர்க்க நடத்தைகள் என்பன பற்றிய கற்கை

மிகச் சிறந்த ஜமுன் (Jamun)இனங்களின் மதிப்பீடு

சிறிய மற்றும் பெரிய அளவிலான பயிர்ச் செய்கை மற்றும் பயிர் விருத்தி என்பவற்றிற்காக இனங்கள் மற்றும் வர்க்க நடத்தைகள் என்பன பற்றிய கற்கை

ஜம்புவிற்கான பதியமுறை இனப் பெருக்கத்தின் மதிப்பீடு

நடுகைப் பொருள் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமான பதியமுறை இனப்பெருக்க முறையை கண்டறிதல்

கடுகுடாவிற்கான (Lansone) பதிய முறை இனப்பெருக்கத்தின் மதிப்பீடு

நடுகைப் பொருள் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமான பதிய முறை இனப்பெருக்க முறையை கண்டறிதல்

வெரலி (Ceylon olive) கான பதிய முறை இனப்பெருக்கத்தின் மதிப்பீடு

நடுகைப் பொருள் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமான பதிய முறை இனப்பெருக்க முறையை கண்டறிதல்

வெரலியின் வித்து முளைத்தலுக்கான வித்துப்படுக்கை ஊடகத்தின் மதிப்பீடு

வெரலி வித்தின் முளைதிறனை அதிகரிப்பதற்கு மிகவும் பொருத்தமான விதைப்படுக்கை ஊடகத்தைக் கண்டறிதல்

பெரிய கொன்கலன்களில் உள்ளூர்ப் பழப்பயிர்ச் செய்கையின் மதிப்பீடு

பெரிய கொள்கலன்களில் உள்ளூர்ப் பழப்பயிர்களின் செய்கையின் சாத்தியப்பாடுகள் பற்றிக் கண்டறிதல்

இனங்காணப்படாத உள்ளூரில் காணப்படக்கூடிய பழப்பயிர்களின் சேகரிப்பும் மதிப்பீடும்

உள்ளூரில் காணப்படக்கூடிய புதிய பழப்பயிர்ப் பேதங்களை நகர்ப்புற பயிர்ச் செய்கைக்காகக் கண்டறிதல்

குறைபயன்பாட்டுப் பழப்பயிர் இனங்களில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சி பற்றிய கற்கை

காணப்படக்கூடிய பயிர்ப் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாட்டு செயல் முறைகள் பற்றிக் கண்டறிதல்

உள்ளூர்ப் பழப்பயிர்களில் பந்துவேர்த் தொழில்நுட்பத்தின் தாக்கம் பற்றிய கற்கை

உள்ளூர்ப் பழப்பயிர்களின் பந்துவேர்த் தொழில்நுட்பத்தின் பிரயோகத்திற்கான சாத்தியப் பாடுகளை நிர்மாணம் மற்றும் தரை அலங்காரம் என்பவற்றில் கண்டறிதல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோகத்தர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	01
பண்ணை முகாமையாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	05
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	01
பட்டதாரிப் பயிலுனர்	01
பிரதம பொது முகாமைத்துவ உதவியாளர்	01
பண்ணை எழுது வினைஞர்	02
காவலாளி	05
ஒட்டுத் தொழிலாளி (Welder)	01
உழவுயந்திர இயக்குனர்	01
தாவர ஒட்டுத் தொழிலாளி (Budder)	02
தொழிலாளி (நிரந்தரம்)	16
தொழிலாளி (ஒப்பந்தம்)	25
மொத்தம்	**63**

1.3.2 தாவர வைரசுக்கள் சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம

ஹோமகமவிலுள்ள தாவர வைரசுக்கள் சுட்டியிடல் நிலையமானது பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுகிறது. தாவர வைரசுக்களை சுட்டியிடும் நிலைய வளாகத்தினுள் 2012 ம் ஆண்டு பங்குனி - ஐப்பசி காலப்பகுதியில் பணிப்பாளரின் காரியாலயம் நிறுவப்பட்டது. தாவர வைரசுக்களையும் வைரசு போன்ற அங்கிகளையும் கண்டு பிடிப்பதற்காக நடைமுறையிலுள்ள முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தல், ஆய்வு கூடத்திலும் வெளிக்களத்திலும் வைரசுக்களையும் பிற அங்கிகளையும் கண்டுபிடித்து அடையாளப்படுத்துவதற்காக சோதனைப் பொருட் தொகுதிகளை (test kits) உருவாக்குதல், தடுப்புக்காப்பு நோக்கங்கள், தொற்று நோய்களைக் கண்டுபிடித்தல், சாத்தியமான நோய் முகாமைத்துவ முறைகளை மதிப்பீடு செய்தல், இழைய வளர்ப்பு மூலமாக வைரசு அற்ற அடிப்படை நடுகைப் பொருட்களை விருத்தி செய்தல், வைரசுக் கவச புரத மூலமான எதிர்ப்புத் தன்மையைக் கண்டுபிடித்தல், ஏனைய நோயாக்கி அங்கிகளைக் கண்டுபிடித்தல் (பங்கசு, பற்றீரியா, விலாங்குப் புழுக்கள், வைரசுப் போலிகள் மற்றும் பைற்றோபிளாஸ்மா) போன்றவற்றைத் தனது செயற்பாடுகளாக இந்த நிலையம் கொண்டுள்ளது.

பாதீடு

அட்டவணை 2.1.1.1 வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டுவரும் செலவினம்	3,244,055	2,704,624	83
மூலதனம்	2,208,405	2,153,063	98
நிகழ்ச்சித் திட்டங்கள்			
NARPP – பப்பாசி வேலைத்திட்டம்	1,400,000	1,439,652	103
இழைய வளர்ப்பு வேலைத்திட்டம்	4,500,000	3,672,091.81	81.6
மஹிந்த ராஜபக்ச விளையாட்டு தொகுதி	25,000,000	15,288,001	61
மொத்தம்	**36,352,460**	**24,212,483**	**67**

முன்னேற்றம்

பாரம்பரிய தாவர வைரசுவியல்

- உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்ட எதிர்ப்புத் தன்மை வாய்ந்த பாய்பொருளினால் வைரசுக்களையும் வைரசு போன்ற நோய்களையும் இனங்காண்பதை

உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது, உரிய களஞ்சிய நிலைமையின் கீழ் பதப்படுத்தப்பட்ட எதிர்ப்புடைய பாயி 5 வருடங்களுக்கு அடையாளப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட முடியுமென வெளிப்படுத்தியது.

- பப்பாசி பைற்றோபிளாஸ்மாவிற்கான பல்முளைவகை எதிர்ப்புடைய பாயி உற்பத்தி. உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்ட சோதனைப் பொருட் தொகுதியானது பைற்றோபிளாஸ்மா தொற்றலை சிறந்த முறையில் இனங்காண்கிறது.
- வாழைக் குருமன் வைரசுக்கான (BBTV) எதிர்ப்புத்தன்மையுடைய பாயி உற்பத்தி. சிறந்த முறையில் நெறி முறைப்படுத்தப் படுதல் வேண்டும்.
- உள்ளூரில் உற்பத்தியாக்கப்பட்ட தென்னை வெலிகம வாடல் (WCLW) எதிர்ப்புடைய பாயியைப் பயன்படுத்தி விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் பைற்றோபிளாஸ்மா நோய்களைக் கண்டு பிடித்தல் பூர்த்தியாக்கப்பட்டது.
- இறக்குமதி செய்யப்படுகின்ற கலப்பின பூசணிக் குடும்ப விதைகளில் விதை மூலமாகப் பரவுகின்ற வைரசு நோய்களை எலிசா (ELISA) சோதனை மூலம் கண்டுபிடித்தல்
- சோதனைக்குட்படுத்தப்பட்ட விதை மாதிரிகள் பிக் கோட் (Big god) 329, பி கே 451 (PK 451) ஆகிய பூசணி வர்க்கங்களிலிருந்தும் பாழி (Pali), திஸ்ஸ (Tissa), ஆகிய பாகல் வர்க்கங்களிலிருந்தும் பெறப்பட்டன. இவ்விதை மாதிரிகள் யாவும் கெக்கரி பச்சைப் பூசணி சித்திரவடிவ வைரசு (Cucumber green mosaic virus & cucumber mosaic virus) அற்றுக் காணப்பட்டன. இவ் ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.
- பாயியியல் முறை மூலம் கிரமமாக அடையாளப்படுத்தும் திட்டம்.

  மொத்தம் 1000 மாதிரிகள் சுட்டியிடப்பட்டன.

  பிரயோகம்:- நோயற்ற நடுகைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தலும் வைரசு நோய்கள் மேலும் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்குரிய நோயாக்கிகளை சரியாக இனங்காண்தலும்.

மூலக்கூற்று வைரசுவியல்

- பின்முக பிரதியெடுப்பு பொலிமரேசு சங்கிலி தாக்கத்தின் மூலம் (RT-PCR) உருளைக் கிழங்கு வைரசு x (PVX) ஐயும் உருளைக் கிழங்கு இலைச்சுருட்டி வைரசுவையும் (PLRV) கண்டு பிடிக்கும் முறை.

  பிரயோகம்:- கிரமமான முறையில் வைரசுக்களை அடையாளப்படுத்துவதற்கும் வைரசுக்களற்ற நடுகைப் பொருட்களை விசேடமாக தனியார் நிறுவனங்களிடையே ஊக்குவிப்பதற்கும் தடுப்புக்காப்பு நோக்கங்களுக்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.
- தோடை வர்க்கங்களில் காணப்படும் வைரசுக்களையும் வைரசு நோய்களையும் பின்முக பிரதியெடுப்பு பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தின் (RT-PCR) மூலம் கண்டுபிடித்தலும் பின்முக பிரதியொடுப்பு பொலிமரேசு சங்கித் தாக்கத்தின் இருமடங்காதலையும் மும்மடங்காதலையும் விருத்தி செய்தலும். இரு வைரசுப் போலிகள் கண்டுபிடிக்கப்பட்டு இரட்டிப்பு நிகழ்த்தப் பட்டது. மேலும் ஆய்வுகள் தேவை.
- பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தை (PCR) அடிப்படையாகக் கொண்ட செயன்முறை மூலம் தென்னை இலைவாடல் பைற்றோ பிளாஸ்மா நோய்க்கான விருந்து வழங்கி வீச்சுக்கான ஆய்வு.

வெலிகம தென்னை வாடல் பைற்றோபிளா-ஸ்மாவுக்கான குறிப்பிட்ட முன்னோடிகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும் மேலதிக உறுதிப்படுத்தலுக்காக பரம்பரையலகுத் தொடரமைப்பு மேற்கொள்ளப்படும்.

பிரயோகம்:- இந்நோய் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கு நோய்த் தொற்றுள்ள தென்னை தவிர்ந்த மாற்று விருந்து வழங்கிகள் தொற்றற்ற பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்படுவது மட்டுப்படுத்தப் படுகிறது.

- பரம்பரையலகுத் தொடர் மூலம் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட (PCR மூலம்) வைரசுக் களை உறுதிப்படுத்துதல்

  தென்னை வாடல் பைற்றோபிளாஸ்மாவை உறுதிப்படுத்துதல். ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- DNA அடிப்படைத் தொழில்நுட்பத்தின் மூலம் கிரமமான வைரசு சுட்டியிடல் திட்டம்.

  மொத்தமாக 500 எண்ணிக்கையான மாதிரிகள் இம்முறை மூலம் சுட்டியிடப்பட் டுள்ளன.

  பிரயோகம்:- கிரமமான முறையில் வைரசுக்களை சுட்டியிடுவதற்கும் வைரசுக் களற்ற நடுகைப் பொருட்களை விசேடமாக தனியார் நிறுவனங்களிடையே ஊக்குவிப்பத ற்கும் தடுப்புக்காப்பு நோக்கங்க ளுக்கும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகின்றது.

- விவசாய அமைச்சினால் (NARPP) நிதியுதவி வழங்கப்பட்ட விசேட வேலைத் திட்டம்.

  பப்பாசி நோய்களை இனங்காண்தலும் உணர்திறன் மிக்க கண்டுபிடித்தல் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தலும்

வைரசு தொற்று நோயியல் பிரிவு

- இரசாயனமற்ற முறைகள் மூலம் பூசணிக் குடும்பத் தாவர (வெள்ளரி) வைரசு நோய்களை முகாமைத்துவம் செய்தல். பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட தாவரங்கள் வைரசு நோயினால் (CMV) பீடிக்கப்பட வில்லை; எனவே இப்பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- மண்ணைப் பத்திரக்கலவையிடுதல் மூலமும் தாவர பிரித்தெடுப்புகளை விசிறுவதன் மூலமும் வெண்டி இலைச் சித்திரவடிவ நோய்க்கான வைரசுவைத் தடுத்தல்

  மஞ்சள் பொலித்தீனினால் மண் பத்திரக்கலவையிடப்பட்ட சோதனையில் ஆரம்ப வைரசுத் தொற்று குறைவாகக் காணப்பட்டது. ஆனால் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு காணப்படவில்லை.

- பூசணிக் குடும்பத் தாவரங்களில் (வத்தகை) ஏற்படும் வைரசு நோய்களைக் தாவர பிரித்தெடுப்புகளை விசுறுவதன் மூலமும் செயற்கைத் தடைகளை ஏற்படுத்துவதன் மூலமும் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வு. உள்ளிக் கரைசலை விசிறும் சோதனை உயர்ந்ததாகக் காணப்பட்டதுடன் ஆரம்ப வைரசு தொற்றும் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் சோதனைகள் யாவற்றிலும் விளைச்சலில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு காணப்படவில்லை.

- சிறிய, நடுத்தர அளவில் செய்கை மேற்கொள்பவர்களுக்கு அவர்களின் தோட்டங்களில் வைரசுத் தொற்றலைத் தாமதப்படுத்துவதற்கு அல்லது முகாமைத் துவம் செய்வதற்கான ஆலோசனைச் சேவை

  விவசாயிகளுக்கு வைரசு நோயை முகாமைத்துவம் செய்வதற்காக 10 வெளிக்கள பார்வையிடல்களும் 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப் பட்டன.

பிற நோயாக்கி அங்கிகள்

- தாவர பிரித்தெடுப்புக்களைப் (வேம்பு, உள்ளி, இஞ்சி, மஞ்சள்) பயன்படுத்துவதன் மூலம் கறிமிளகாயில் ஏற்படும் அந்திரக்நோசு (Anthracnose) நோயைக் கட்டுப்படுத்தல்

  5% செறிவுடைய உள்ளிப் (*Zingiber officinae*) பிரித்தெடுப்பானது மிகவும் பயனளிக்கும் வகையில் காணப்பட்டது. இது ஏனைய சோதனைகளுடன் ஒப்பிடும் போது கொலிற்றோற்றிக்கம் (*Colletotrichum*) பங்கசு இழைகளின் வளர்ச்சியை வெகுவாக நிரோதிக்கின்றது.

  பிரயோகம்: விவசாயிகள் செப்பு கலந்த பங்கசு நாசினிகளைக் குறைவாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது.

- பயிர்களில் ஏற்படும் பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்காக மர உட்பாய்ச்சி சோதனையை மேற்கொள்தல்.

  பூஞ்சணவிழைகளின் வளர்ச்சி மீதான உள்ளக சோதனையின் தாக்கமானது, நியம செறிவுடைய தையோபனேற் மீதையிலும் (Thiophanate methyl) புரப்பிகொணசோலும் (Propiconazole) முறையே *Fomes lignosus* ஐயும் *Fusarium* ஐயும் சிறந்த முறையில் கட்டுப்படுத்தியதை வெளிப்படுத்தியது.

  பிரயோகம்:- சுற்றாடலுக்குத் தோழமையான முறை மூலம் பீடைகளையும் நோய்களை யும் கட்டுப்படுத்துதலை பிரபல்யப்படுத்துதல்

- கிரமமான நோய் கண்டுபிடிப்புத் திட்டம். 2012ம் ஆண்டில் 200க்கும் மேற்பட்ட நோய் மாதிரிகள் கண்டுபிடிக்கப்பட்டு பயனுள்ள ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை (IPM) அடிப்படையாகக் கொண்ட தீர்வுகள் கொடுக்கப்பட்டன.

  பிரயோகம்: நோய்களைக் கண்டுபிடித்து கட்டுப்பாட்டு முறைகளை வழங்குதல்.

இழைய வளர்ப்புப் பிரிவு

- நுண் பெருக்கம் மூலம் மேம்பட்ட அந்தூரியம் வர்க்கங்களை விருத்தி செய்வதற்கான ஆரம்ப நெறிமுறை.

  லேடி ஜேன், கிரிமட்டிய தெரிவு, ஸ்பிரிற் ஆகியன 246 உள்ளக வளர்ப்பு (in-vitro) போத்தல்களில் வெற்றிகரமாக வளர்க்கப் பட்டன. இப்பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- நுண் பெருக்கம் மூலம் பப்பாசிக்கு பொருத்தமான ஆரம்ப நெறிமுறையை விருத்தி செய்தல். பப்பாசிக் கலத் திணிவுகளைக் கொண்டு 10 உள்ளக வளர்ப்பு போத்தல்கள் வெற்றிகரமாக வளர்க்கப்பட்டன. இப்பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- இந்து என்ற மன்டரின் இனத்தின் பகுதி நுண் ஒட்டுதலும் வைரசுக்களையும் வைரசுக்களை ஒத்த நோய்களையும் சுட்டியிடலும் வைரசுக்களற்ற 194 பகுதி நுண் ஒட்டு மண்டரின் தாவரங்கள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டன. வைரசுக்களற்ற தாவரங்களைப் பெறுவதற்கு 1மி.மீ வெட்டுத் துண்டங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஒட்டுதல் வெற்றி யளித்தது. இப்பரிசோதனை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

- வளர்ச்சி மற்றும் விளைச்சல் நடத்தைகளுக் காக வெவ்வேறு இழையங்களிலிருந்து (இலைகள், துண்டங்கள்) பெறப்பட்ட இழைய வளர்ப்பு MG3 அன்னாசியின் வெளிக்கள மதிப்பீடு. பதிய வளர்ச்சி திருப்திகரமாக இருந்ததுடன் பரிகரிப்பு ஏதுமின்றி பூக்கள் உருவாகின. அசாதாரணங்கள் அல்லது மாறுபாடுகள் எதுவும் அவதானிக்கப்படவில்லை. இந்த பரிசோதனை தொடரப்படும்.

- இழைய வளர்ப்பு மூலம் விருத்தி செய்யப்பட்ட வாழை மற்றும் அன்னாசியின் வெளிக்கள மதிப்பீடு. சிறந்த தாவர

வளர்ச்சி, நல்ல தரமான பழங்கள், உயர் விளைச்சல் மற்றும் வைரசுத் தாக்கமின்மை ஆகியன அவதானிக்கப்பட்டன. இப் பரிசோதனை தொடரப்படும்.

- வைரசுக்களற்ற 22, 378 இழைய வளர்ப்பு வாழைக்குட்டிகள் (Amban, Kolikuttu, Seeni, Nethrampalam, Angaviyaru, Ambul) உற்பத்தி செய்யப்பட்டன. அத்துடன் 68,760 அன்னாசித் தாவரங்கள் (MG3, Mauritius) பெறப்பட்டன. இவ்வேலைத்திட்டம் தொடரப் படும்.

தொழில்நுட்பப் பரிமாற்றப் பிரிவு

- புதிய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற் காக விவசாயிகள், கமக்காரர் அமைப்புக் கள், ஆசிரியர்கள், இளைஞர் கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களுக்காக 16 பயிற்சி வகுப்புகள் நடாத்தப் பட்டன.
- இந்த வருடத்தில் ஒரு ஒலிபரப்பு நிகழ்ச்சி, 02 செய்தித்தாள் கட்டுரைகள், 01 துண்டுப் பிரசுரம், 05 இழையவளர்ப்பு வெளிக்கள அவதானிப்புகள், 01 பயிற்சிப் பட்டறை, 44 வெளிக்கள பார்வையிடல்கள், 14 பயிர்ச் சிகிச்சைகள் ஆகியன மேற்கொள்ளப்பட்டன.
- மேலும் தமது பயிர்ச் செய்கைகளில் ஏற்பட்ட வெவ்வேறு நோய் சம்பந்தமான பிரச்சினைகளுடன் இந்த நிலையத்திற்கு வருகை தந்த 86 விவசாயிகள்/ செய்கையா ளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.
- பட்டப் பின்படிப்பு செயற்திட்டம் 01 உம் பட்டப்படிப்பு செயற்திட்டங்கள் 04 உம் கையாளப்பட்டன.
- 10 பயிலுனர்களுக்கு கட்டுறுப் பயிற்சி (Implant Training) வழங்கப்பட்டது.
- இந்த நிலையத்தில் ஒரு நகர விவசாய மாதிரியும் ஒரு வீட்டுத் தோட்ட மாதிரியும் பராமரிக்கப்பட்டன.
- கண்ணொறுவையில் விவசாயத் திணைக்கள த்தினால் நிகழ்த்தப்பட்ட நூற்றாண்டு கண்காட்சியில் ஒரு கண்காட்சிப் பகுதி வைக்கப்பட்டது.
- டயகம மகிந்த ராஜபக்ச விளையாட்டுத் தொகுதியில் சுற்றாடலுக்குத் தோழமையான விவசாய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பல விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.
- இந்திய நிறுவனத்தின் பூங்கனியியல் ஆராய்ச்சிப் பிரிவிலிருந்து (Indian Institute of Horticulture Research) வருகை தந்த முன்னனி வைரசுவியல் நிபுணர் கலாநிதி கிருஷ்ணா ரெட்டி அவர்களால் விவசாயத் திணைக்கள நோயியலாளர்களுக்கு முன்மா திரியான நோய் கண்டுபிடிக்கும் தொழில் நுட்பம் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று NARP நிதியுதவியின் மூலம் நிகழ்த்தப பட்டது.

2013 ஆம் ஆண்டிற்கான திட்டம்

பராம்பரிய தாவர வைரசுவியல் பிரிவு

- தூண்டப்பட்ட தொகுதி எதிர்ப்புதன்மை ஊடாக பப்பாசி வளையப் புள்ளி வைரசு நோயை அடக்குவது தொடர்பான ஆய்வுகள்.
- விரைவு நிர்ப்பீடன வடிதாள் பகுப்பாய்வு (Rapid Immuno filter paper Assay (RIPA)) ஊடாக பப்பாசி வளையப் புள்ளி வைரசுவை உள்வளர்ப்பு மூலம் கண்டுபிடித்தல்
- பப்பாசி வளையப் புள்ளி வைரசுவுக்கும் பப்பாசி வாடல் வைரசுக்குமான பல்முளை வகை எதிர்ப்புப் பாயி உற்பத்தி.
- வைரசு தொற்றுக்குள்ளான மற்றும் தொற்றுக்குள்ளாகாத இலை இழையங் களைப் பாதுகாப்பதற்காக உறைதலால் உலர்த்தும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு.

- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக் குருமன் எதிர்ப்புப் பாயியிலுள்ள தேவையற்ற பிறபொருளெதிரிகளை அகத்து-றிஞ்சுவதற்கு பொருத்தமான செயன்முறை தொடர்பான ஆய்வுகள்.

- உள்நாட்டில் உற்பத்தியாக்கப்பட்ட WCLW எதிர்ப்புடைய பாயியைப் பயன்படுத்தி தென்னை தவிர்ந்த விவசாயப் பயிர்களில் ஏற்படும் பைற்றோபிளாஸ்மா நோய்களை உறுதிப்படுத்துதல்

- பாயியியல் கண்டுபிடித்தல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பகுதி நுண்-ஒட்டு மன்டரின் தாவரங்களை *Citrus Tristeza* வைரசுக்காகவும் சித்திரசு பச்சையாதல் பற்றீரியாவுக்காகவும் (Citrus Greening Bacteria) பரிசோதித்தல்.

- பப்பாசி பைற்றோபிளாஸ்மா மற்றும் வாழை உச்சி கனத்தல் வைரசுக்காக (BBTV) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பல்முளை வகை எதிர்ப்புப் பாயிக்கான ஆரம்ப நெறிமுறையை சிறந்த முறையாக்கம் செய்தல்.

- கிரமமான வைரசு அடையாளப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.

மூலக்கூற்று வைரசுவியல் பிரிவு

- உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படும் பிரதேசங்களில் உருளைக்கிழங்கு வைரசு PVY க்கான ஆய்வை மேற்கொள்வதன் மூலமாக விருத்தி செய்யப்பட்ட RT-PCR தொழில் நுட்பப் பிரயோகம்

- உருளைக்கிழங்குச் செய்கையில் குறிப்பிட்ட முன்னோடிகளுடன் கூடிய RT-PCR மூலம் உருளைக்கிழங்கு இலைச் சுருட்டி வைரசுவையும் (PVRC), PVX ஐயும் கண்டு பிடித்தல்

- பப்பாசி நோய்களை இனங்காண்தலும் கண்டுபிடிப்பு தொழில்நுட்பத்தை விருத்தி செய்தலும்.

- ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட வைரசுக்களை PCR மூலம் பரிசோதித்து பரம்பரையலகு தொடரமைப்பு மூலம் உறுதிப்படுத்துதல்

- இரட்டிப்பு முறை மூலம் வாழை வைரசுவைக் கண்டுபிடித்தல்

- இரட்டிப்பு முறை மூலம் உருளைக்கிழங்கு வைரசுவைக் கண்டுபிடித்தல்

- PCR செயன்முறை மூலம் கிரமமாக வைரசை சுட்டியிடலும் பரிசோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

வைரசு தொற்று நோயியல் பிரிவு

- வேறுபட்ட நுண் போசணை மூலகங்களை அங்குரத் தொகுதிக்கு விசிறுவதன் மூலம் பப்பாசி வளையப் புள்ளி வைரசின் நோய் அறிகுறிகளை அடக்குவதற்கு ஒரு செயன் முறையை விருத்தி செய்தல்.

- MS100 பப்பாசி பேதங்களில் வைரசு சகிப்பத்தன்மை / எதிர்ப்புத் தன்மையை மதிப்பீடு செய்தல்

- பாசிப்பயறு வைரசுக்களுக்கான விருந்து வழங்கி வீச்சை இனங்காண்தல்

- வைரசு நோய்களுக்காக மரவள்ளியை சோதனை செய்தலும் வைரசுக்களற்ற அத்திவார நடுகைப் பொருட்களைப் பராமரித்தலும்

- சிறிய மற்றும் நடுத்தர செய்கையாளர் களுக்கு தமது வயல்களில் அல்லது தோட்டங்களில் வைரசுத் தொற்றலை தாமதப்படுத்துவதற்கான / முகாமைத்துவம் செய்வதற்கான ஆலோசனைச் சேவை

- வெளிக்கள மட்டத்தில் தண்டுத்தெரிவு மூலம் மரவள்ளி இலைச் சித்திர வடிவ வைரசுவை

(CMV) முகாமைத் துவம் செய்வதற்கான பொதியை விருத்தி செய்தல்

- நோய் விருத்தியில் வைரசுக்களைக் காவும் அழுக்கணவன்கள், வெண்ஈக்களின் எண்ணிக்கையையும் அவற்றின் ஆதிக்கத் தையும் மதிப்பீடு செய்தல்.
- வைரசு காவிகளின் குடித்தொகைப் பரம்பல் பற்றிய ஆய்வு.
- வைரசு காவிகளின் விருந்து வழங்கித் தாவரங்களைச் சேகரித்து பரீட்சித்தல்.
- கெம் ஜெற் உட்பாய்ச்சிகளைப் (Chemjet injeetors) பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்தல்.
- அன்னாசி செய்கைகளில் நுளம்புக் குடம்பி பற்றிய ஆய்வுகள்.

பிற நோயாக்கி அங்கிகள் பிரிவு

- பொருத்தமான இரசாயனங்களைப் பயன் படுத்தி பல்லாண்டுப் பயிர்களில் நோய் களைக் கட்டுப்படுத்துவதற்கு மர உட் பாய்ச்சிகளைப் பரிசோதித்தல்
- வாழையில் அங்குரப் பகுதி மூலமாகவும் மண் மூலமாகவும் உருவாகும் பங்கசு நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கு பொதியொன்றை விருத்தி செய்தல்
- பிற நோயாக்கி அங்கிகளை இனங் காணலும் சோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

இழைய வளர்ப்புப் பிரிவு

- இழைய வளர்ப்பினூடாக பப்பாசியை உற்பத்தி செய்வதற்கு ஆரம்ப நெறிமுறை யைப் பூரணப்படுத்தல்.
- இலை வளர்ப்பு மூலமாக MG3 அன்னாசிக் கான விரைவான பெருக்க முறை.
- திருத்திய பகுதி நுண் ஒட்டுதல் மூலம் தோடை மற்றும் மண்டரினது சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்களை பெருக்குவதற் காக முன்மாதிரி செயன்முறை.
- இலை வளர்ப்பு மற்றும் நுண் பெருக்கம் மூலமாக தெரிவு செய்யப்பட்ட அந்தூரியம் பேதங்களை பெருக்குதல்.
- நோயற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் வெளிக்கள மதிப்பீடு செய்தலும். (உற்பத்தி இலக்கு – 60,000 வாழையும் 110,000 அன்னாசியும்)

தாவர இனவிருத்தி

- மிளகாயிலும் (Capsium annum) ஏனைய கப்சிக்கம் இனங்களிலும் (Capscum spp) வெளிக்கள மற்றும் ஆய்வுகூட நிலைமை களின் கீழ் கிடைக்கக்கூடிய வைரசு, வைரசு போன்ற நோய்கைள இனங்காணுதல்
- கிடைக்கும் மூலவுயிருருக்களையும் (Capscum spp) பேதங்களையும் வர்க்கங்க ளையும் வைரசுக்களுக்காக பிரித்தெடுத்த லும் எதிர்ப்புத் தன்மை வாய்ந்த அல்லது சகிப்புத் தன்மை வாய்ந்த வம்சாவழிகளைத் தெரிவு செய்தலும்.
- பயிரிடப்படும் அல்லது பாரம்பரிய வர்க்கங்களுக்கு எதிர்ப்புத்தன்மை அல்லது சகிப்புத் தன்மையான பயிராக்கவியல் இயல்புகளை உட்சேர்ப்பதற்கு மிளகாய் இனங்களுக்குள்ளே (Capscum species) இனத்துக்கிடையிலான திட்டமான கலப்புப் பிறப்பாக்கம் பற்றிய ஆய்வுகள்
- மிளகாயில் உருவாகும் ஒடுங்கிய இலை நோயைக் கண்டுபிடிக்கும் ஆய்வுகள். மகா இலுப்பள்ளமையிலுள்ள வயற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்த நிகழ்ச்சித் திட்டம்

தொழில்நுட்பப் பரிமாற்றப் பிரிவு

- உத்தியோகத்தர்கள், விவசாயிகள், கமக்காரர் அமைப்புகள், பட்டதாரி மாணவர்கள், ஏனைய மாணவர்களுக்கான 36 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்படும்.
- 10 பயிர்ச் சிகிச்சைகள்.
- 150 வெளிக்கள பார்வையிடல்களும் வீட்டுத் தோட்ட சோதனைகளும்.
- இந்நிலையத்திற்கு வருகை தந்த விவசாயிகளின் 250 பீடை நோய்ப் பிரச்சினைகளைக் கையாள்தல்.
- 05 இழைய வளர்ப்பு வாழைத் தோட்டங்களைப் பார்வையிடுதல்.
- 12 செய்தித்தாள் கட்டுரைகளைப் பிரசுரித்தல்.
- நகர விவசாய மற்றும் வீட்டுத் தோட்ட மாதிரிகள் ஒன்று.
- பாடசாலை மாணவர்களுக்காக ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டம் (மாதிரி பாதுகாப்பு வீட்டு செயன்முறை).
- தாவர வைரசு சுட்டியிடல் நிலைய (PVIC) நிலப்பரப்பில் (1.5 ஏக்) மரக்கறி செய்கை ஊக்குவிப்பு.
- இரண்டு வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- கண்காட்சி அலகைப் பராமரித்தல்.
- டயகம மகிந்த ராஜபக்ச விளையாட்டுத் தொகுதியில் விவசாய நிகழ்ச்சித் திட்டம்.
- மேலும் விவசாயிகள் / செய்கையாளர்களுக்காக அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக தொலைபேசி மூலமாக ஆலோசனைகள் வழங்கப்படும்.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோகத்தர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	05
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்	07
ஆராய்ச்சி உதவியாளர்	04
விவசாயப் போதனாசிரியர்	09
பொது முகாமைத்துவ உதவியாளர்	04
களஞ்சியலாளர்	01
சாரதி	02
தொழிலாளி (நிரந்தரம்)	03
தொழிலாளி (ஒப்பந்த அடிப்படை)	12
தொழிலாளி (திட்டம்)	02
காவலாளி	02
மொத்தம்	**53**

1.4 நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RRDI), பத்தலகொட

நெல் உற்பத்தியானது தற்போது தன்னிறைவு நிலையை அடைந்துள்ளது. எனவே நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் வருடாந்த உற்பத்தியை மாறாமல் பேணுவது மிகவும் இன்றியமையாததாகும். தற்போது நிலவுகின்ற சாதகமற்ற காலநிலை நிலமைகள் மற்றும் புவி வெப்பமடைதலின் விளைவாக அடிக்கடி மாற்றமடைகின்ற மழை வீழ்ச்சிக் கோலம் என்பன நெல் உற்பத்தியை மாறாது பேணுவதில் முக்கிய இடையூறாகக் காணப்படுகின்றன. எனவேதான் நெல் இனவிருத்தி நிகழ்ச்சியானது உயர் விளைச்சலை மட்டுமன்றி சூழல் தொகுதிகளுக்குப் பொருத்த மானதாகவும் அமைவதைக் குறிக்கோளாகக் கொண்டு மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பாதீடு

அட்டவணை 1.4.1 வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனச் செலவு	10,505,691	7,452,583	71
மீண்டு வரும் செலவு	32,604,152	29,348,028	90
விசேட செயற்றிடடங்கள்	22,181,558	5,043,606	23
வெளிநாட்டு கருத்திட்டங்கள்			
களை விஞ்ஞானம் (IRRI)	3,943,513	705,247.31	18
பசுமை உயர்தர நெல் (GSR)	1,983,671	1,817,956	92
MET நிகழ்ச்சிகள்	1,023,670	436,027	43
உள்ளூர் கருத்திட்டங்கள்			
LCWZ செயற்றிட்டங்கள்	5,000,000	1,948,376	39
பண்ணை அபிவிருத்தி	9,640,000	8,498,469	88
கலப்பின விதை உற்பத்தி	2,000,000	1,555,039	78
NARP (உயிர்ப்பற்ற தகைப்பு)	2,475,000	1,668,061	67
NARP (பசளைப் பயன்பாடு)	2,675,000	2,201,146	82
NARP (களைநெல்)	1,874,650	1,672,454	89
NARP (நீர்ப் பயன்பாடு)	1,975,000	878,454	44
மொத்தம்	**97,881,905**	**63,225,445**	**65**

முன்னேற்றம்

நெல் வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

நெல் வர்க்க அபிவிருத்தி நிகழ்ச்சியின் மிக முக்கிய இலக்காகக் காணப்படுவது நெற் செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரிக் கும் அதேவேளை நுகர்வோருக்கு உகந்த விலையை உறுதிப்படுத்துதலும் ஆகும். நடுகைப் பண்ணப்படுகின்ற நெல் வர்க்கங்களின் பிறப்புரிமையியல் விளைச்சல் திறனை அதிகரிப்பதன் மூலம் சராசரித் தேசிய விளைச்சலை அதிகரிப்பதும் ஒரு வழியாகும். மேலும் விவசாயிகளின் விளைச்சலுக்கும் கைவிடப்பட்ட நெல் வயல் நிலங்களின் நம்பகமான விளைச்சலுக்குமிடையே காணப்படும் இடைவெளியானது தகைப்பினைச் சகிக்கும் திறனுடைய வர்க்கங்களை விருத்தி செய்வதன் மூலம் இணைக்கப்படுதல் அவசியமாகும். இந்நிகழ்ச்சியின் மற்றொரு நோக்கமாகக் காணப்படுவது வளங்களின் பாவனை வினைத்திறனை அதிகரிக்கும் அதேவேளை சுற்றாடல் மாசுபடுவதைக் குறைப்பதாகும்.

நோய் பீடைத் தாக்கங்களிற்கு எதிர்புடைய வர்க்கங்களின் விருத்தியின் மூலம் உற்பத்திக்கான உள்ளீடுகள் மற்றும் சுற்றாடல் மாசுபடலைக் குறைத்தல் போன்றவற்றில் RRDI இன் இனவிருத்தி நிகழ்ச்சிகள் கவனம் செலுத்துகின்றது. இரும்பு நஞ்சாதல், உவர்த் தன்மை மற்றும் வெள்ளநிலமை ஆகியவற்றைச் சகிக்கும் இயல்புகளை அபிவிருத்தி செய்தல் ஆகியன அனைத்து நெல் இனவிருத்தி நிகழ்ச்சிகளிலும் கவனத்திற் கொள்ளப்படு கின்றது. அனேக உயிரியல் காரணிகளுக்கு எதிர்ப்புடையதும் பாரிய அளவிலான பிறப்புரிமையியல் அடித்தளத்தை யுடையதுமான தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் மற்றும் நெல் வர்க்கங்களை அபிவிருத்தி செய்ததன் மூலம் 2012ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு வெற்றி கிடைக்கப் பெற்றது. இக்குறிக்கோள்களை அடைவதற்காக RRDI மற்றும் அதன் இணை நிலையங்கள் தங்களது நெல் வர்க்க விருத்தி மேம்பாட்டுச் செயற்பாடுகளை பாரம்பரிய முறையிலான மற்றும் கலப்பின விருத்தி நிகழ்ச்சிகளினூடாகத் தொடர்ந்திருந்தன.

புதிதாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள நெல் வர்க்கங்கள்

வர்க்க விடுவிப்புக் குழுவினால் மூன்று புதிய நெல் வர்க்கங்கள் (Bw 367, Ld 368 மற்றும் Bg 369) 2012 ஆம் ஆண்டு சிபாரிசு செய்யப்பட்டு ள்ளது. Bg 3R எனும் தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள இனவிருத்தி வம்சாவழித் தெரிவானது எதிர்காலத்தில் ஓர் முழுமையான வர்க்மாகச் சிபாரிசு செய்யப்படுவதற்காக அதன் பொருத்தத் தன்மையைக் கண்டறிவதற்குச் சில நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளது.

மூன்றரை மாத வயதுத் தொகுதியைச் சேர்ந்ததும், வெள்ளை நிற அரிசியை உடையதுமான **Bg 367** எனும் சம்பா நெல் வர்க்கம் 7.9தொன்/ஹெக் எனும் விளைச்சலைப் பதிவு செய்தது. இது ஈரவலயப் பிரதேசங்களில் 107 நாட்களில் முதிர்ச்சியடைவதுடன் குறுகிய உருளை வடிவ அரிசியையும் உடையது ஆகும். அத்துடன் நாடளாவிய ரீதியிலான செய்கைக்கும் பொருத்தமுடையதாகும். இது இரும்பு நஞ்சாதலு க்கும் ஓரளவு சகிப்புத் தன்மையுடையது. தற்போது பிரபல்யமான Bg 358 லும் பார்க்க இது கழுத்து எரிபந்தம் மற்றும் சரிந்து விழுதல் போன்றவற்றிற்கும் தாக்குப் பிடிக்கக் கூடியது.

ஈரவலயப் பிரதேசங்களில் 105 நாட்களில் முதிர்ச்சியடைகின்றதும், சிவப்பு நிற குறுகிய உருளை வடிவ அரிசியைக் கொண்டதுமான **Ld 368** எனும் நெல் வர்க்கம் நாடுமுழுவதும் பாரிய அளவிலான செய்கைக்காக விடுவிக்கப் பட்டுள்ளது. இவ்வர்க்கமானது 7 தொன்/ஹெக் எனும் விளைச்சலைத் தருவதுடன் கழுத்து எரிபந்தம், இலை எரிபந்த நோய்களுக்கு எதிர்ப்புடையதாகவும், கொப்புளஈ, கபில நிறத் தத்தி, மற்றும் பக்ரீரியா இலை வெளிறல் ஆகியவற்றுக்கு ஓரளவான எதிர்ப்புள்ளதாகவும் காணப்படுகின்றது. இவ்வர்க்கம் சரிந்து விழும்

தன்மை குறைவானது. அத்துடன் தானியம் நிறமாற்றத்திற்கு உள்ளாகும் தன்மையும் அற்றதாகும்.

Bg 369 என்பது 3½ மாத வயது தொகுதிக் குரியது அத்துடன் வெள்ளை நிற அரிசியை உடைய வர்க்கம் ஆகும். இவ்வர்க்கம் உலர் வலயங்களில் 104 நாட்களில் முதிர்ச்சியடைவ துடன் நீளமான அரிசியையும் கொண்டது. உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இது உவர் நிலமையுடைய வயல்களில் 7 தொன்/ஹெக் எனும் விளைச்சலையும் பதிவாக்கியுள்ளது.

Bg 3R என்பது 3 ½ மாத வயதுடையதும், குறுகிய உருளை வடிவ வெள்ளை நிற தானியத்தையும் உடைய ஓர் வர்க்கமாகும். இது கலப்பினப் பிறப்பாக்கம் மற்றும் தெரிவு ஆகிய நடவடிக்கைகளின் மூலம் RRDI ஆல் உள்ளூர் பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும். மேலும் இது 95 நாட்களில் முதிர்ச்சி யடைவதுடன் 7 தொன்/ஹெக் எனும் நம்பக மான விளைச்சலையும் தருகின்றது. Bg 3R ஆனது முக்கியமான நோய் பீடைகளுக்கு எதிர்ப்பினைக் கொண்டுள்ளது. (RGM, R/MR, BPH, BLB, MR/MS, எரிபந்தம் MR) அத்துடன் சரிந்து விழும் தன்மையும் குறைந்ததாகும்.

நெல் இனவிருத்தி நிகழ்ச்சி 4~ 4½ மாத வயது வகுப்பு

மேற்படி வயதுடைய நெல் வர்க்கங்கள் ஆண்டு தோறும் இலங்கையில் நெற் செய்கைப் பண்ணப்படும் மொத்த நிலப்பரப்பில் 8% ஆன நிலப்பரப்பில் நடுகை பண்ணப்படுகின்றது. இந்த இனவிருத்தி நிகழ்ச்சியானது நோய்ப் பீடைத் தாக்கங்களுக்கு எதிரான இயல்புகளை ஒன்று சேர்த்த அதேவேளை தரமான தானிய இயல்புகளை (நுகர்ச்சி மற்றும் சமைத்தல்) விருத்தி செய்து விளைச்சலை உயர்த்துவதிலும் அதிக கவனம் செலுத்தியது.

தானியத்தின் தரத்தை அதிகரிக்கும் நோக்குடன் 2011/2012 பெரும்போகத்திலும் 2012 சிறு போகத்திலும் 16 கலப்புகள் மேற்கொள்ளப் பட்டன. அவற்றுள் 8 கலப்புகள் வறட்சியை தாங்கும் இயல்புக்காகவும், 15 கலப்புகள் விளைச்சலை அதிகரிக்கவும், இரண்டு கலப்புகள் கொப்புளஈ எதிர்ப்புக்காகவும், ஒரு கலப்பு BLB எதிர்ப்புக்காகவும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு பருவங்களிலும் 42 F_1 குடித்தொகைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுள் 23 குடித் தொகைகள் தெரிவு செய்யப்பட்டன. முக்கிய குறிக்கோளில் இருந்து விலகியதால் மிகுதிக் குடித்தொகைகள் அகற்றப்பட்டன. F_2 விலிருந்து F_4 வரையிலான சந்ததிகளில் 51 தொகைக் குடித்தொகைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றுள் 31 குடித்தொகைகள் தெரிவு செய்யப்பட்டன. F_5 சந்ததியில் இருந்து 44 உயர் தர குடித்தொகைகள் வயல்களில் நிர்மாணிக்கப் பட்டன. இது 2 பருவங்களிலும் நடைபெற்றது. அத்துடன் 40 கலப்புகளும் தெரிவு செய்யப்பட்டன. இரண்டு பருவங்களிலுமாக 18 தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் தெரிவுகள் தானிய விளைவு, முக்கிய நோய்ப் பீடைகள் மற்றும் தரமான தானிய இயல்புகள் ஆகியவற்றுக்காக விளைச்சல் சோதனைகளில் மதிப்பிடப்பட்டன. இது நியம வர்க்கங்களுடன் மேற்கொள்ளப் பட்டதுடன் Bg 379-2, வம்சாவழி இலக்கங்களான Bg 09-606, மற்றும் Bg 08-301 ஆகியவை 2012 இல் நடாத்தப்பட்ட பாரிய விளைச்சல் சோதனை (MYT) களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு அடுத்த NCRVT நிகழ்ச்சிக்காக பரிந்துரைக்கப் பட்டுள்ளன.

- வம்சாவழி இலக்கங்களான Bg 08-1909 மற்றும் Bg 10-551 என்பன NCRVT நிகழ்ச்சியில் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன் 2013இல் இரண்டாவது பருவச் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

VAT நிகழ்ச்சிகளில் இருந்து 2 உயர்தரத் வம்சாவழிகளான Bg 06-1350, மற்றும் 06-977

என்பன உயர் விளைச்சலுக்காக பரிசோதிக்கப் பட்டு LSVAT நிகழ்ச்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நெல் இனவிருத்தி நிகழ்ச்சி (3½ மாத வயது வகுப்பு)

இலங்கையின் மொத்த நெற் செய்கையில் 63% அளவிலான நெற் செய்கைப் பிரதேசங்களில் 3½ மாத வயது வகுப்பு நெல்லினங்களே பயிரிடப் படுகின்றன. இங்கு செய்கைப் பண்ணப்படுகின்ற மேற்படி 3½ மாத வர்க்கங் களின் விளைச்ச லானது நான்கு மாத வயதுடைய நெல் வர்க்கங்களின் விளைச்சலுக்கு சமனாக அல்லது அதிகமாகக் காணப்படுவது ஓர் சிறப்பம்சம் ஆகும். இவ்வயது வகுப்பு நெல்லினங்கள் விவசாயிகளிடையே மிகவும் பிரபல்யமாகக் காணப்படுவதற்குரிய காரணம் இலங்கையின் பெரும்பாலான நெற் செய்கைச் சூழல் தொகுதிகளுக்கு அவை இசைவாக்க மடைந்து காணப்படுவதாகும். நெல் வர்க்க விருத்தி நிகழ்ச்சிகளின் முக்கிய நோக்கம் உயர் விளைச்சலுடைய 3½ மாத நெல்லினங்களை அபிவிருத்தி செய்வதாகும். அத்துடன் ஏற்றுக் கொள்ளக்கூடிய தரமுடைய தானியம் அல்லது எதிர்ப்பினைக் காட்டும் 3 ½ மாத இனங்களை விருத்தி செய்தலும் ஆகம்.

2012 ஆம் ஆண்டில் 25 கலப்புகள் மேற் கொள்ளப்பட்டதுடன் F_1 சந்ததியில் இருந்து 17 கலப்புகள் நிர்மாணிக்கப்பட்டன. இங்கு IR 07 A 127; Bw 04-992, Bw 09-983, At 08-593, சீரக சம்பா, ஜஸ்மின் நெல், Bg 360, மற்றும் H_4 என்பன பெற்றோர்களாகப் பயன்படுத்தப்பட்டன. 18 F_2 குடித்தொகைகளும், 11 F_3 குடித்தொகை களும், 8 F_4 குடித்தொகைகளும், மதிப்பிடப் பட்டன. 21 கலப்புக்களில் இருந்து 382 எச்சங்கள் உயர்தர சந்ததிக்காகத் தெரிவு செய்யப்பட்டன. தற்போது காணப்படுகின்ற நெல் வர்க்கங்களில் இருந்து நோய் பீடைகளுக்கான எதிர்ப்புத் தன்மையை உடைய புதிய தாவரக் கட்டமைப்புகளை இலக்காகக் கொண்டே பெரும் பாலான கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

நோய்ப் பீடை எதிர்ப்புத் தன்மை, தரமான தானியம், மற்றும் உயர் விளைச்சல் ஆகியவற்றை அடையும் நோக்குடன் Bg 357 மற்றும் Bg 358 ஆகிய நியம சோதனை வர்க்கங்களுடன் 16 தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகள் ஆரம்ப விளைச்சல் பரிசோதனை (PYT) மற்றும் பாரிய விளைச்சல் சோதனைகளில் தெரிவு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டன. Bg 10-1399 (Ld12-38-1/Bg358), Bg 08-1258 (At 307 IR 64) மற்றும் Bg 10-1407 (Bg 1420/ IR 64) ஆகியவை தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை நிகழ்ச்சிக்காகத் (NCRVT) தெரிவு செய்யப்பட்டன. Bg08-2398(Ld12-38-1/Bg 360), எனும் உன்னதமான வர்க்கமொன்று LSVAT நிகழ்ச்சிக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது VAT இசைவாக்கத் தரப்படுத்தலில் உயர் நிலையில் உள்ள வர்க்கம் ஆகும். பரிசோதனை நோக்கங்களுடன் பரம்பரை ரீதியில் தூய்மையான தரமான விதைகளை உறுதிப்படுத்தும் நோக்கில் Bg-2398, Bg-3171, Bg10-1407, Bg 10-1399, Bg 10-1258 மற்றும் Bg2236 ஆகிய வர்க்கங்களில் விதைப் பெருக்கம் தொடர்ப்பட்டது.

2012 சிறுபோகத்தில் RRDI இல் INGER - தாழ் நில நெல் அவதானிப்பு நாற்று மேடைத் தொகுதி II (நடுத்தர வயது வகுப்பு) நிர்மாணிக்கப்பட்டது. Bg90-2 இனை நியம வர்க்கமாகப் பாவித்து 64 பதிவுகள் மதிப்பிடப்பட்டன. உன்னத தெரிவுகள் அடையாளங்காணப்பட்டு பெற்றோர்களாகப் பயன்படுத்தக் கூடியவாறு 4 மாத இனவிருத்தி நிகழ்ச்சிக்கு பரிமாற்றப்பட்டுள்ளது. Bg 3R (IR 555178 / 9-3r / IR 65515-47-2-1-98 / Ir 6551-47-2-1-91) எனும் உன்னத தெரிவு ஒன்று LSVAT நிகழ்ச்சியில் பரிசோதிக்கப்பட்டது. பின்பு இது

வர்க்க விடுவிப்புக் குழுவிடம் (VRC) சிபாரிசுக்காகப் பிரேரிக்கப்பட்டுள்ளது.

நெல் இனவிருத்தி நிகழ்ச்சி (3 மாத வயது வகுப்பு)

சிறிய நீர்ப்பாசன நீர்த் தேக்கங்கள் மற்றும் மழையை நம்பிய நெற் செய்கையானது நீர் பற்றாக்குறையின் காரணமாக குறிப்பிடத்தக் களவில் பாதிப்படைந்துள்ளது. எனவே நீர்ப்பற்றாக் குறையைத் தாங்குகின்றதும் குறுகிய காலத்தில் முதிர்ச்சியடையக் கூடியதுமான (3 மாதம்) நெல் வர்க்கங்களின் அபிவிருத்தி மிகவும் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. தற்போது இலங்கையில் வருடாந்த மொத்த நெற் செய்கை நிலப்பிரப்பில் 25% இல் 3 மாத நெல் வர்க்கங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. சராசரி விளைச்சலை (6.5-7 தொன்/ஹெக்) அதிகரித்தல், முக்கிய பீடைகளுக்கெதிரான எதிர்ப்புதன்மை (BPH மற்றும் RGM), எரிபந்தம் மற்றும் BLB நோய்களுக்கான எதிர்ப்புத்தன்மை, பாதகமான சூழல் நிலமைகளுக்கான (வறட்சி, மற்றும் உவர்த் தன்மை) பரந்தளவிலான இசைவாக்கம், மேம்பட்ட தானியத் தரம் ஆகிய நோக்கங்களை மையமாகக் கொண்டு 2011/12 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகக் காலங்களில் 44 இனங்கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. கலப்பினப் பிறப்பாக்கப் பெற்றோர்களாக பின்வருவன பாவிக்கப்பட்டன: IR 07A 266, IR 07A 262, IR 07A 252, OM 2717, Bg04-2236, Bg 94-1, Bg300, Bg 304 மற்றும் Bg 305 ஆகியன உயர் விளைச்சலுக்காகவும், Ptb 33 BPH எதிர்ப்புக்காகவும், MR 1523 மற்றும் ob 2552 GM எதிர்ப்புக்கும், IRBB 60, IRBB 59 மற்றும் IRBB 56 BLB எதிர்ப்புக்காகவும் மற்றும் ஜெஸ்மின் நெல், சீரக சம்பா, சுவடல் என்பன சிறந்த தரமுடைய தானியத்தைப் பெறவும் பாவிக்கப் பட்டன.

2011/2012 பெரும்போகம், 2012 சிறுபோகம் ஆகிய இரு பருவங்களிலும் 26 F_1 குடித்தொகைகள் நிர்மாணிக்கப்பட்டு மேலதிக முன்னேற்றத்திற்காக 15 குடித்தொகைகள் தெரிவு செய்யப்பட்டன. குறைந்த விளைச்சல் மற்றும் 90 நாள் வயது வகுப்பில் இருந்து வேறுபட்டமை ஆகிய காரணங்களுக்காக ஒன்பது F_1 குடித்தொகைகள் அகற்றப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் F_2 தொடக்கம் F_4 வரையும் 33 தொகைக் குடித்தொகைகள் நிர்மாணிக்கப் பட்டு 24 குடித்தொகைகள் முன்னேற்றப்பட்டன. வயது வகுப்பு மற்றும் முக்கிய நோக்கங்கள் ஆகியவற்றில் இருந்து பாரிய வேறுபாட்டைக் கொண்டிருந்தமையால் ஏனைய குடித்தொகைகள் அகற்றப்பட்டன. F_5 சந்ததி தொடக்கம் 22 உயர் தர குடித்தொகைகளில் இருந்து 663 எச்சங்கள் நிர்மாணிக்கப்பட்டு 2012ல் மதிப்பிடப்பட்டது.

தொன்று தொட்டுப் பயன்பாட்டில் உள்ள வம்சாவழிகளின் விளைச்சல் திறனை மதிப்பிடுவதற்காக ஆரம்ப விளைவுச் சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு [இதில் நியம சோதனை வர்க்கமாக Bg 300, 4 தொன்றுதொட்டு பாவனையில் உள்ள வம்சாவழிகள் (Bg11-1051, Bg 11-1034, Bg 11-1043 மற்றும் Bg 11-1119) என்பன பயன்படுத்தப்பட்டன. இவை இரு வேறுப்பட்ட கலப்புகளில் இருந்து பெறப்பட்டன. (Bg300 / IR 841 // At 307 மற்றும் டகனல (03924)/ Bg 360 BC^{+})] பாரிய விளைச்சல் சோதனையில் பரீட்சிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நான்கு வேறு கலப்புகளில் (IR 74052 – 72-1-3 / Bg 352 // IR 74052 -72-1-3/ Bg 2780, Bg 300/D முஜா, IR 74052-72-1-3/ Bg 3993//Ld 12-38-1/Bw 262/// Bw 262/ Bg 357, IR 54751-2-34-10-6-2/ Bg 357 // IR 65482 -4-136-2-2/ Bg 357) இருந்து நான்கு தெரிவுகள் (Bg 10 – 1166, Bg 10 – 1088, Bg 10 – 3375) மற்றும் Bg 09-1871) 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பாரிய விளைச்சல் சோதனைகளில் இருந்து உன்னதமானவையாக இனங்காணப்பட்டு Bg300 எனும் நியம சோதனை வர்க்கத்துடன் ஒப்பிடப்பட்டது. பின் அது தேசிய

ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை நிகழ்ச்சி (NCRVT) ஆய்வுக்கான பெருக்கத்திற் காகக் தெரிவு செய்யப்பட்டது. NCRVT நிகழ்ச்சியில் பரிசோதிக்கப்பட்ட 3 உன்னதமான தெரிவுகள் (Bg 06-2270, bg 07-2828, மற்றும் Bg 06-2112) VAT நிகழ்ச்சிக்குத் தரமுயர்த்தப்பட வில்லை ஏனெனில் இவை குறைவான இசைவாக்கத் தர நிலைமைக் கொண்டிருந்தமை யால் ஆகும்.

நெல் இனவிருத்தி நிகழ்ச்சி (2½ மாத வயது வகுப்பு)

கடந்த 10 ஆண்டுகளில் மழைவீழ்ச்சிக் கோலம் மாற்றமடைந்துள்ளதுடன் தொடர்ச்சியான வறட்சி நிலமையும் அனுபவ ரீதியாக அறியப்பட்டுள்ளது. இவற்றின் காரணமாக பல எண்ணிக்கையான பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளது. 80 நாட்களில் முதிர்ச்சியடையும் மிகக் குறுகிய வயதுடைய நெல் வர்க்கங்கள் மழையை நம்பிய பயிர்ச் செய்கையுடன் அதிகளவில் பொருந்துவ தால் அவை முக்கியத்துவம் அடைந்து வருகின்றன. விசேடமாக மூன்று மாத வர்க்கங்கள் சிறுபோகங்களில் நீர்ப் பற்றாக்குறை காரணமாக செய்கை பண்ண முடியாத சந்தர்ப்பங்களில் இவற்றின் முக்கியத்துவம் அதிகமாகக் காணப்படுகின்றன.

வறட்சியைத் தாங்கும் தன்மை முக்கிய பீடைகள் (BPH, GM, பனிப்பூச்சி) மற்றும் நோய்களுக்கான (BLB, எரிபந்தம்) எதிர்ப்பு அதிகரித்த விளைச்சல் ஆகியவற்றை அடையும் நோக்குடன் 2½ மாத நெல் வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதற்கான இனவிருத்தி நிகழ்ச்சி தொடரப்பட்டது. விரும்பத்தக்க தானியத் தரம், குறுகிய கால வயது, மற்றும் வறட்சியைச் சகிக்கும் தன்மை ஆகிய இயல்புகளைக் கொண்ட ஐந்து பாரம்பரிய வர்க்கங்கள் (சுதுறு சம்பா, ஹெற்றட நெல், கோடா கீனட்டி, கோடா நெல் மற்றும் நியான் நெல்) அடங்கலாக 25 வம்சாவழிகள் பெற்றோர் தாவரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. 2012 ஆம் ஆண்டில் 30 கலப்புகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் இருந்து 17 F_1 குடித்தொகைகள் ஸ்தாபிக்கப்பட்டன. F_2 குடித்தொகையில் 9 மற்றும் F_3 இல் 3 உம் ஆக 12 தொகைக் குடித்தொகைகள் அவற்றில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டன. நோய் பீடைகளுக்கான எதிர்ப்பு, பயிராக்கவியல் இயல்புகள் மற்றும் விளைச்சல் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் 70 எச்சங்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் 215 எச்சங்கள் முன்னேற்றப்பட்டன.

Bg 250 ஐ நியம வர்க்கங்மாகக் கொண்டு, குறுகிய உருளை வடிவ அரிசியை (வெள்ளை அரிசி 3 மற்றம் சிவப்பு அரிசி 2) உடைய 5 உயர்தர வம்சாவழிகளின் (Bg 11-2531, Bg 11-2537, Bg 11-2519, Bg 11-2556 மற்றும் Bg 11-2508) விளைச்சல் திறனை மதிப்பிடுவதற்கான ஆரம்ப விளைச்சல் பரிசோதனைகள் (PYT) மேற்கொள்ளப்பட்டன. 2011 இல் இடம் பெற்ற ஆரம்ப விளைச்சல் சோதனைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 5 உயர் தர வம்சாவழிகளைப் பயன்படுத்தி (Bg 10-2891, Bg 10-2902, Bg 10-2881, Bg 10-2884, Bg 10-2913) பாரிய விளைச்சல் சோதனைகள் (MYT) நடாத்தப்பட்டன. NCRVT , VAT மற்றும் LSVAT ஆகியவற்றை மேற்கொள்ளத் தேவையான தூய்மைப்படுத்தப்பட்ட வித்துக்களை வழங்கு வதற்காக Bg 10-2907 (குறுகிய, உருளை வடிவ சிவப்பு நிற அரிசி) எனும் தொன்று தொட்டுச் செய்கை பண்ணப்படும் வம்சாவழியில் விதைப் பெருக்கம் மேற்கொள்ளப்பட்டது.

பாரம்பரிய நெல் மேம்பாட்டுத் திட்டம்

2012 ஆம் ஆண்டில் 950 நெல் தெரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. RRDI இன் குறுகிய கால மூலவுயிருரு பாதுகாப்புப் பிரிவில் பேணப்பட்ட உலர் மாதிரிகள், மேம்படுத்தப்பட்ட வம்சாவழிகள், அறிமுக பேதங்கள், மற்றும் பாரம்பரிய வர்க்கங்கள் என்பன இவற்றுள் அடங்குகின்றன. விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் வேறு

ஈடுபாடுடையோர் ஆகியோரிடையே அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விதை மாதிரிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

பாரம்பரிய வர்க்கங்கள்:- சுதுறு சம்பா, சுவந்த சம்பா ஆகியவை அவற்றின் சரிந்து விழும் தன்மையை எதிர்க்கவும், நல்ல தரமுடைய தானியத்தைப் பெறுவதற்குமான காமா கதிர் வீசலைப் பயன்படுத்தி விகாரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. பின்பு மேம்படுத்தப்பட்ட தொகை முறையைப் பயன்படுத்தி தெரிவு மேற்கொள்ளப்பட்டு மூன்று வம்சாவழிகள் (Sw 25 சுவந்த சம்பா, SSR8 சுதுறு சம்பா சிவப்பு, SSR26 சுதுறு சம்பா சிவப்பு) என்பன தெரிவு செய்யப்பட்டன.

காட்டு நெல் வர்க்கத்தில் இருந்து (Oryza nivara) Oryza sativa வுக்கு (Bg 380) BPH எதிர்ப்பு பரம்பரை அலகை இடமாற்றம் செய்யும் நோக்குடன் பாரிய கலப்பின விருத்தித் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இவற்றில் இருந்து BPH எதிர்ப்புடையதும் உயர் விளைச்சல் திறனைக் கொண்டதுமான இரு வம்சாவழிகள் (WH 20, WH 48) தெரிவு செய்யப்பட்டு விதைப் பெருக்கத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய நெல் வர்க்கங்களின் பெருக்கம் மற்றும் தூய்மையாக்கல்

சுவை, போசணைப் பெறுமானம் மற்றும் தரம் ஆகிய காரணங்களுக்காகப் பாரம்பரிய நெல் வர்க்கங்களின் கேள்வியானது அதிகரித்த வண்ணமுள்ளது. இவ் வர்க்கங்களின் கிடைக்கும் தன்மையானது அவற்றை நடுகை பண்ணுதற் குரிய தரமான நடுகைப் பொருள் இன்மை யினால் குறைவாக உள்ளது. எனவே அதிக கேள்வியைக் கொண்டுள்ள மேற்படி வர்க்கங்களின் விதைப் பெருக்கம் மற்றும் தூய்மையாக்கம் என்பன கட்டாய தேவையாக இருந்து. ஆதலால் வெள்ளை கீனட்டி, கறுப்பு கீனட்டி, வைத்தியர் கீனட்டி, ஹேரத் பண்டா மற்றும் சுவந்தல் அடங்கலாக 11 பாரம்பரிய வர்க்கங்கள் 2012ல் விதைப் பெருக்கம் மற்றும் தூய்மையாக்கலுக்குட்படுத்தப்பட்டன.

வறட்சியைத் தாங்குகின்ற பல்வேறு நெல் வர்க்கங்களின் தேர்வு

சில பாரம்பரிய நெல் வர்க்கங்களில் வறட்சியைத் தாங்கும் தன்மையானது பிறப்புரிமை ரீதியாகக் காணப்படுகின்றது. காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற பாதகமான சூழல் நிலமைகளை எதிர் கொள்வதற்கு மேற்படி தன்மை உதவி புரிகின்றது. எனவே இக்கற்கையானது வறட்சியைச் சகிக்கக் கூடிய திறனைக் கொண்ட பல்வேறு நெல் வர்க்கங்களின் தெரிவுக்காக மேற்கொள்ளப்பட்டது. இலை மடித்துப் புள்ளியிடலைப் (leaf folding score) பயன்படுத்தி நியான் நெல், எல் நெல், றதல், சுவடல், கோடாஅல் நெல், கோல நதி நெல், சிறு நியான் நெல், மாட எல், மா கொடஎல், மற்றும் பச்சைப் பெருமான் ஆகியன அடங்கலாக 31 தெரிவுகள் தேர்வு செய்யப்பட்டன. இவற்றுள் நியான் நெல், சிறு நியான் நெல், கோல நதி நெல், எல் நெல், மாட எல் மற்றும் மாகோட எல் என்பன வறட்சியைத் தாங்கும் திறனைக் காட்டின.

வாசனைத் தன்மையுடைய நெல்லில் ஓர் அவதானப் பரிசோதனை (INGER)

வாசனை மற்றும் அதிக விருப்புடைய அரிசியைக் கொண்ட இனவிருத்தி வம்சாவழி நெல்லினம் ஒன்றை அடையாளம் காண்பதற்கான ஓர் அவதானிப்புப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. இதன் போது 43 பதிவுகள் At 306 வர்க்கத்துடன் சோதனையிடப்பட்டு, வாசைன யுடைய 13 இனவிருத்தி வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவானது KOH ஐ பாவித்து நடாத்தப்பட்டது. ஐந்து பேர் அடங்கிய தெரிவுக்குழு இதை மேற்கொண்டது.

உயிர்த் தொழில்நுட்பம்

இனவிருத்தி குடித்தொகை ஒன்றைப் பெறும் நோக்குடன் பிரபல்யமான நெல் வர்க்கங்களில் வெள்ள நிலமை மற்றம் உவர்த்தன்மை ஆகியவற்றைச் சகித்து வளரும் இயல்புகளை ஒருங்கிணைப்பதற்காக பின்முகக் கலப்பின விருத்தி நிகழ்ச்சி தொடரப்பட்டது. மேற்படி இரு இயல்புகளுக்கும் உருபவியல் மற்றும் மூலக்கூற்றியல் ரீதியாக சகிப்புத் தன்மையுடைய தாவரங்கள் அடையாளங் காணப்பட்டு, பின்முகக் கலப்பு மற்றும் தன்வயத்தலுக்காக முன்னேற்றப் பட்டுள்ளன. நெல்லில் பொசுபரசு பற்றாக்குறை யின் சகிப்புத் தன்மைக்கான கற்கையின் முதற் படியாக, பல கலப்புச் சேர்க்கைகளில் F_2 குடித்தொகைகள் உருவாக்கப் பட்டுள்ளன. குறியீட்டு உதவித் தெரிவு மூலம் Bg 359 மற்றும் Bg 352 ஆகியவற்றில் பக்ரீறியல் இலை வெளிறல் சேர்த்தலுக்குரிய கலப்புகள் பாதிக்கப்பட்டது. மேலும் இது தொடர்புடைய பின்முகக் கலப்புகள் தொடர்கின்றன. பாரம்பரிய வர்க்கங்களான சுவன்தல், இங்கினிமிட்டிய, டுலர் மற்றும் சுதுறு சம்பா ஆகியவற்றில் குட்டை யாதலைத் தூண்டுவதற்காக விகாரத் தூண்டல் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் Bg 90-2, Bg 94-1, H_4, Bg 357 மற்றும் Bg 358 ஆகிய பிரபல்யமான வர்க்கங்களில் விதை வளர்ப்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உவர்த் தன்மை மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மைகளுக்காகவும் மேற்கொள்ளப்பட்டது. விகாரமாக்கப்பட்ட தாவரங்கள் மீளபிறப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. சிறந்த தாவரக் கட்டமைப்பைக் கொண்டுள்ள Bg 250 விதை வளர்ப்புத் தாவரங்களின் சாதகமான விகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

பாரம்பரிய இனவிருத்தி நிகழ்ச்சியை விரைவு படுத்தும் நோக்கில் உள்ளூர் நெல் வர்க்கங்களில் மகரந்தமணி வளர்ப்பு நெறி முறை ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. பரந்த கலப்பினப் பிறப்பாக்கமானது காட்டு இனங்களில் இருந்து பிரபல்யமான வர்க்கங்களுக்கு சிறந்த இயல்புகளை இடமாற்றம் செய்வதற்காகத் தொடரப்பட்டது.

கலப்பின நெல் உற்பத்தி நிகழ்ச்சி

பாரம்பரிய இனவிருத்தி நிகழ்ச்சிகளுக்கு மேலதிகமாக நெல்லில் கலப்பின வீரியத்தின் (Heterosis) பயன்பாடானது விளைச்சல் இடை வெளியையும் விளைச்சல் திறன் அதிகரிப்பையும் இணைக்கும் ஓர் பாலமாகக் காணப்படுகின்ற ஓர் முக்கிய தொழில் நுட்பமாக அறியப்பட்டுள்ளது. குறிப்பிட்ட கலப்பினப் பெற்றோர் மற்றும் கலப்பினச் சேர்க்கைகளில் உற்பத்திச் செயற்பாடுகளின் உருவாக்கம், நெல்லின் பொதுவான முகாமைத்துவம், பிறப்புரிமையியல் மற்றும் இனவிருத்தி ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக நெல்லில் கலப்பின ஆராய்ச்சிகள் அமைகின்றன. கலப்பின நெல் வர்க்கங்களை அபிவிருத்தி செய்தல் போன்றவற் றுக்காக கலப்பின வீரியம் தொடர்பிலான பல்வேறு ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை RRDI ஆனது பராமரித்து வருகின்றது.

இந்நிகழ்ச்சியுடன் இணைந்ததாக, 353 புதிய F_1 சேர்க்கைகள் சோதனைக் கலப்பு நாற்று மேடையில் 2012ல் பரிசோதிக்கப்பட்டன. புதிய CMS மற்றும் பராமரிப்பாளர் வம்சாவழிகளை அபிவிருத்தி செய்வதற்கான பின்முகக் கலப்பு நிகழ்ச்சிகாக அவற்றில் இருந்து 139 தெரிவு செய்யப்பட்டன. சோதனைக் கலப்பு நாற்று மேடைகளில் மேலதிக சோதனைக்காக மேலும் 40 சேர்க்கைகள் புதிய பெற்றோர் வம்சாவழிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. PYT இல் பரிசோதிக்கப்படுவதற்கு சிறிய அளவில் F_1 விதை உற்பத்தி மேற்கொள்வதற்காக அதிக வளமுடைய சேர்க்கைகள் பயன்படுத்தப்பட்டன.

ஆண் மலட்டுத் தன்மை (CMS 50 வம்சாவழி) மீள் நிரப்பு (186 வம்சாவழி) மற்றும் பராமரிப்பாளர் ஆகியவற்றுக்கான மூலவுயிருரு பராமரிப்பு தொடர்புபட்டது. அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பெற்றோர் வம்சாவழிகளில் புதிய கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. உயர் விளைச்சலைத் தருகின்ற கலப்பின

வர்க்கங்களைத் தெரிவு செய்வதற்காக PYT இல் 27 கலப்பினச் சேர்க்கைகள் பரிசோதிக்கப்பட்டன. Bg 407H, IR68897A / R 160, மற்றும் IR78354A / RI 47 ஆகியன உயர் விளைச்சல் செயற்றிறனைக் காட்டின. அவை முறையே 2011/ 2012 பெரும் போகத்தில் 6.3 தொன்/ ஹெக், 5.7 தொன்/ ஹெக், 5.9 தொன்/ ஹெக் ஆகவும் 2012 சிறுபோகத்தில் 5-49 தொன்/ ஹெக், 6.78 தொன்/ஹெக் ஆகவும் காணப் பட்டது. மேலதிகமாக Bg CMS 4A / R/47 ஆனது இரண்டு போகங்களிலும் முறையே 5.5 தொன்/ ஹெக், 6.6 தொன்/ ஹெக் எனும் விளைச்சலைக் கொடுத்தது. மேற்படி உன்னதமான வம்சாவழி கள் தரவுகளை உறுதிப்புடுத்துவதற் காக தொடர்ந்தும் பரிசோதிக்கப்படவுள்ளன.

2012 ஆம் ஆண்டில் உன்னதமான கலப்பினங்களில் கரு விதை உற்பத்தி நிகழ்ச்சி தொடரப்பட்டது. அதன் படி CMS A/B, Bg CMS 4A A/B மற்றும் Bg CMS 4A / SA/50 ஆகிய சேர்க்கைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

Bg 407 H எனும் வர்க்கத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விதையுற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இவ்வர்க்கத்தை விவசாயிகளிடையே பிரபல்யப் படுத்தி பின்பு சிறந்த விவசாயிகளிடையே விதை உற்பத்தி தொழில் நுட்பத்தை பரவலாக்கும் நோக்கத்துடனேயே இது மேற்கொள்ளப்பட்டது. (Bg 407 H F_1 விதைகள் 120Kg, பெற்றோர் வம்சாவழிகள் - HRSP 668- 168 Kg, மற்றும் CMSIA - 175Kg). இத்திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு (20Kg), மன்னார் (20Kg), வவுனியா (12Kg), மற்றும் யாழ்ப்பாணம் (2Kg), ஆகிய இடங்களுக்கு F_1 விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. சிறந்த மீள்நிரப்பு வம்சாவழியாகப் பயன்படுத்தக்கூடிய சாதகமான உருவவியல் இயல்புகளைத் தன்னகத்தே கொண்டவற்றை இனங்காண்பதற்காக மீள்நிரப்பு வம்சாவழிகளில் இயல்பாக்கம் மேற்கொள்ளப் பட்டது.

கலப்பின நெல் வர்க்கங்களில் உயர் விளைச்சலைப் பெறுவதற்கான வேறுபட்ட நடுகை முறைகள் பரீட்சிக்கப்பட்ட போது நாற்றுக்களை வீசி விதைத்தல் முறை சிறந்ததொரு முறையாக நிரூபிக்கப்பட்டது. கலப்பின நெல் வர்க்கங்களில் கூலியாட் செலவைக் குறைத்தல் மற்றும் சிறந்த முறையை இனங்காணல் ஆகிய நோக்குடன் வெவ்வேறு மகரந்தச் சேர்க்கை முறைகள் பரிசோதிக்கப்பட்டது. ஏனைய முறைகளுடன் ஒப்பிடும் போது மூன்று நாட்கள் மகரந்தச் சேர்க்கை முறையானது உயிர் விதை உருவாக்கத்தை CMS இல் காட்டியது.

விதை நெல் தேவையைக் குறைக்கும் நோக்குடன் புதிய வீசி விதைக்கும் முறை (பரசூட்) ஒன்று கலப்பின நெல் வர்க்கங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது (8Kg/ஹெக்). உள்ளகக் கலப்பினங்களின் நேரடி விதைப்பின் கீழான விதைத் தேவையிலும் பார்க்க (100Kg/ஹெக்) கலப்பின நெல் வர்க்கங்களின் நேரடி விதைப்பிற்கான விதைத் தேவை குறைவாகக் காணப்பட்டது (50-75Kg/ஹெக்). அத்துடன் பல CMS பராமரிப்பாளர் வம்சாவழிகள் மற்றும் மீள்நிரப்பு வம்சாவழிகளைப் பயன்படுத்தி 3 – 3 ½ மாத வயது வகுப்பிற்கும் கீழான Bg 407H, Bg HRS, Bg HR 10 மற்றும் புதிய கலப்பினச் சேர்க்கைகள் என்பன அபிவிருத்தி செய்யப் பட்டன.

தானியத் தரம்

NCRVT பதிவுகள் மற்றும் உயர்தர கலப்பினப் பதார்த்தங்களின் மதிப்பீடு, பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட நெல் வர்க்கங்களில் போசணைத் தர மதிப்பீடு, நெல்லில் அறுவடைக்குப் பின்னான கையாழுகை மற்றும் சேமிப்பு, அரிசியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர் உணவு உற்பத்திகள் ஆகியவற்றை முதன்மைப்படுத்திய ஆராய்ச்சி நடவடிக்கைக்கள் தானியத் தரப் பிரிவினால் நடாத்தப்பட்டது.

PYT, MYT மற்றும் NCRVT ஆகியவற்றில் கீழ் அனைத்து வம்சாவழிகளும் பச்சை அரிசி மற்றும் புழுங்கல் அரிசி நிலமைகளில் அவற்றின் தானியத் தரத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டன. அத்துடன் விடுவித்தலுக்கு முன்பான விரும்பதக்க தானியத் தரத்திற்கான தெரிவும் இடம் பெற்றது. VAT ற்கான சிபாரிசுக்கு முன்பதாக 2011/2012 பெரும் போகத்தில் PYT இன் 36 இனவிருத்தி வம்சாவழிகள் MYT இன் 36 இனவிருத்தி வம்சாவழிகள் மற்றும் CRVT பதிவுகளின் 39 இனவிருத்தி வம்சாவழிகள் என்பன பரீட்சிக்கப் பட்டன.

அரிசித் தவிட்டைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய உயர் போசணை உடன் உணவுச் சூத்திரம் ஒன்றையும், அதிகரித்து வருகின்ற துரித உணவுக்கான (Fast food) கேள்வியைச் சந்திப்பதற்கு ஏலவே ஜெலட்டினாக்கத்திற்கு உட்படுத்தபட்ட அரிசியில் இருந்து உணவு உற்பத்தியை மேற்கொள்வதற்குமான அபிவிருத்தி தொடர்பான கற்கைகள் முன்னேற்ற கரமானதாக அமைந்தன.

சந்தைத் தரமுயர்த்தலில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள போசணைத் தரங்களைச் சரிபார்ப்பதற்காகப் பாரம்பரிய நெல் வர்க்கங் களின் சந்தை மாதிரிகளில் புரதம், கொழுப்பு, மற்றும் கனிப்பொருள் உள்ளடக்கங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப் பட்டன. பெறப்பட்ட தரவுகள் ஏற்கனவே மதிப்பிடப்பட்ட போசணைப் பெறுமானங்களுடன் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வேறுபாட்டிற்கான முக்கிய காரணமாக செறிவான தவிடு அகற்றல் மற்றும் சந்தை மாதிரிகளில் காணப்பட்ட அதிகளவிலான வர்க்கத் தூய்மை இன்மை என்பன அமைந்திருந்தன.

இலங்கை – பாக்கிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் (PSFTA) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்மதி அரிசியின் தூய்மையைக் கண்டறியும் நோக்குடன் பாஸ்மதி அரிசி மாதிரிகளின் தர இயல்புகள் பகுப்பாய்வுக்குப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் கீழ் 24 தொகுதிகளில் இருந்து 82 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. உண்மையான பாஸ்மதி அரிசியுடன் நீண்ட மெல்லிய தானிய அமைப்புடைய அரிசியும் வேறுபட்ட அளவுகளில் கலந்திருப்பது முடிவுகளில் இருந்து தெரிய வந்தது. அத்துடன் எந்த மாதிரியும் தூய்மையான பாஸ்மதி அரிசியைக் கொண்டதாக நிரூபிக்கப்படவில்லை.

நோய் முகாமைத்துவம்

பக்ரீரியல் இலை வாடலுக்கெதிரான தேர்வு

இலங்கையில் நெற் செய்கையில் பக்ரீரியல் இலை வாடல் (BLB) நோயானது மிகவும் பொதுவாக நோய் ஒன்றாகும். அனைத்து விளைச்சல் பரிசோதனைகள் மற்றும் NCRVT என்பவற்றில் BLB ற்கு எதிரான வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. BLB ற்கு எதிராக 2011/ 2012 பெரும் போகத்தில் 152 மற்றும் 2012 சிறுபோகத்தில் 181 வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றுள் 2011/2012 சிறுபோகத்தில் இருந்து 25 வம்சாவழிகளும், 2012 சிறுபோகத்தின் போது 7 (BgH -2380, At 07-695, Bg 10-9028, Bg 08-1258, Bg 08-1909, Bg 7RBS 15-1-2) வம்சாவழிகளும் எதிர்புடை யனவாக அல்லது ஓரளவு எதிர்புடையனவாகக் காணப்பட்டன. அடிப்படையில் பெரும்பாலான கலப்புகள் அதிகரித்த தானிய விளைச்சலுடன் BLB எதிர்ப்புக்கு குறைந்த முக்கியத்துவமும் வழங்கப்பட்டிருந்தன. எனவே ஒப்பீட்டளவில் BLB எதிர்ப்பு வம்சாவழிகள் குறைவாகவே காணப்பட்டன.

எரிபந்த நோய்க் கெதிரான தேர்வு

நெற் செய்கையில் Magnarporthe grisea எனும் பங்கசுவால் ஏற்படுகின்ற எரிபந்தமானது ஓர் பொதுவான நோயாகும். இது நெற்பயிரின் சகல பருவங்களிலும் அனைத்து அங்குரப் பகுதிகளிலும் தாக்கத்தை உண்டு பண்ணி விளைச்சலில் குறிப்பிடத்தக்க இழப்பை

ஏற்படுத்துகின்றது. 2011 / 2012 பெரும்போகம், 2012 சிறுபோகம் ஆகிய பருவங்களில் அனைத்து NCRVT, மற்றும் VAT பரிசோதனைகளில் எரிபந்த நோய்க்கு எதிரான உயர் தர எச்சங்கள் முறையே 1997 பதிவுகள், 2187 பதிவுகள் என்ற எண்ணிக்கையில் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மேற்படி வம்சாவழிகளில் 2011 / 2012 பெரும் போகத்தில் 1549 பதிவுகளும், 2012 சிறுபோகத்தில் 1622 பதிவுகளும் எரிபந்த நோய்க்கு எதிர்ப்புத் தன்மையை அல்லது ஓரளவு எதிர்ப்புத் தன்மையைக் கொண்டவையாக அடையாளம் காணப்பட்டன. கலப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான பெற்றோர்கள் பிறப்புரிமை ரீதியாக எதிர்ப்புத் தன்மைக்குரிய இயல்புகளைக் கொண்டிருந்தமையால் குறிப்பிடத் தக்களவிலான வம்சாவழிகள் எதிர்ப்புத் தன்மையுடையனவாகப் பதிவு செய்யப்பட்டன.

இலங்கையில் உள்ள சந்தைகளில் பச்சை அரிசியில் Aspergillus flavus இன் இருக்கையைக் கண்டறிதல்

அரிசியின் தரத்தை பாதிப்பதில் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற அப்ளாரொக்சின் எனப்படும் நச்சுத் தன்மையான இரசாயனச் சேர்வையானது Aspergillus flavus மற்றும் Aspergillus parasiticus எனப்படுகின்ற இரு பங்கசுக்களால் சுரக்கப்படுகின்றது. இந் நஞ்சுப் பதார்த்தமானது நெல்லானது பங்கசுத் தொற்றுக்குட்படும் காரணத்தால் ஏற்படுகின்றது. அரிசியில் இவ்வாறான நஞ்சுப் பதார்த்தம் காணப்படும் போது ஏற்றுமதிச் சந்தையில் அரிசியின் ஏற்றுமதித்தர நியமமானது குறைவடைகின்றது. எனவே உணவுப் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக Aspergillus flavus ன் வளர்ச்சி, அவற்றின் பெருக்கம் மற்றும் அப்ளாரொக்சின் உற்பத்தி ஆகியவற்றின் கட்டுப்பாடு கட்டாய தேவையாக உள்ளது. வேறுபட்ட இடங்களில் உள்ள உள்ளூர் சந்தைகளில் இருந்து சேகரிக்கப்பட்ட 20 அரிசி மாதிரிகள் Aspergillus இனங்களுக் காகப் பரிசோதிக்கப்பட்டபோது அவற்றுள் 17 மாதிரிகளில் Aspergillus இனங்களின் தொற்றுகை காணப்பட்டது எனினும் அவற்றில் எவற்றிலும் நச்சுப் பதார்த்தம் இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை. எனவே குறிப்பிட்ட நச்சுப் பதார்த்தின் அளவைக் கண்டறிவதற்கான மேலதிக கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பீடை முகாமைத்துவம்

பீடை எதிர்ப்பினங்களின் தெரிவு

கொப்புளாஈ மற்றும் கபில நிற தாவரத் தத்தி ஆகியவற்றிக்கெதிரான வர்க்கங்களை விருத்தி செய்வதற்கு 2011 / 2012 பெரும் போகத்தில் பசுமை இல்லம் மற்றும் வயல் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதிக்கப்பட்ட 1988 வம்சாவழிகளின் 1808 மற்றும் 940 பதிவுகள் முறை கொப்புளாஈ மற்றும் BPH ற்கு எதிர்புடையனவாக அல்லது ஓரளவு எதிர்ப்பு டையனவாக இனங்காணப்பட்டன. மேற்படி அதே பீடைகளுக்கெதிராக 2011 சிறுபோகத்தில் 1861 பதிவுகள் பரிசோதிக்கப்பட்டன. இவற்றுள் 806 மற்றும் 1540 பதிவுகள் முறையே GM மற்றும் BPHற்கு எதிர்புடையனவாக ஓரளவு எதிர்ப்புடை யனவாக அடையாளங் காணப்பட்டன.

உயிரியல் உற்பத்திகளைப் பயன்படுத்தி பனிப்பூச்சிக்கெதிரான தெரிவு

வயல் நிலமைகளில் நெற் பனிப்பூச்சியைக் கட்டும்படுத்துவதற்கு ஓர் உயிரியல் கட்டுப் படுத்தியான ஒலிக்கோ சிற்றோசனின் வினைத் திறன் பரீட்சிக்கப்பட்டது. இங்கு ஒலிக்கோ சிற்றோசன் ஆனது பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்து வதற்காக வேறுபட்ட செயற்பாட்டு அளவுகளில் பயன்படுத்தப்பட்டு கற்கை மேற்கொள்ளப்பட்டது. 300ppm என்ற வீதத்தில் ஒலிக்கோ சிற்றோசனும் சிபாரிசு செய்யப்பட்ட அளவுகளில் இமிடாகுளோபிட் 70% WS உம் விதைப் பரிகரணங்களாக மேற்கொள்ளப்பட்டது.

ஒலிக்கோ சிற்றோசன் ஆனது நெற் பனிப் பூச்சியைக் கட்டுப்படுத்துவதில் இமிடாகுளோபிட் இலும் பார்க்க வினைத்திறன் அற்றாதகப் பரிசோதனை முடிவுகள் தெளிவு படுத்தின.

விவசாயச் சூழலியல் வலயமான 1L1a இல் உள்ள நெல் வயல்களில் ஒட்டுண்ணிகளின் பல்வகைமை

நெற் பீடைகளுக்கான ஒட்டுண்ணிகளை இனங்காணப்பதற்காக 1L1a விவசாயச் சூழலியல் வயலப் பிரதேசங்களின் 6 இடங்களில் வயல் ஆய்வு ஒன்று 2012 சிறு போகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஹைமசினாப்ரெரா மற்றும் டிப்ரெரா ஆகிய வருணங்களுக்குரிய 9 ஒட்டுண்ணி இனங்கள் அடையாளங் காணப்பட்டன. அவற்றுள் Steno bracon nicevillei, Amauromurpha accepta schoenobii மற்றும் Charops bicolour ஆகிய 3 இனங்கள் மஞ்சள் தண்டு துளைப்பானுக்கெதிரான (Schirpophaga incerluties) குடம்பி ஒட்டுண்ணிகளாகப் பதிவு செய்யப்பட்டன. ஒட்டுண்ணிகளைக் கண்டறிவதற்கான மேலதிக பரிசோதனைகள் அடுத்த பருவத்திலும் தொடர்ப்படவுள்ளது.

ஒளிப் பொறியினால் கவரப்பட்ட நெற் பீடைகளின் குடித்தொகை

ஒளிப் பொறிச் சேகரிப்புகளைப் பயன்படுத்திப் பத்தலகொடையில் நெற் பூச்சிப் பீடைகளின் வேறுபாடு தொடர்பிலான கற்கை ஒன்று இடம் பெற்றது. ஒளிப் பொறியினால் கவரப்பட்ட பூச்சிகள் நாளாந்தம் அவதானிக்கப்பட்டதுடன் காலநிலைக் காரணிகளுடன் (வெப்பநிலை, சாரீரப்பதன் மற்றும் மழைவீழ்ச்சி) அவற்றின் குடித்தொகை மாற்றமும் பதியப்பட்டது. வெப்பநிலை மற்றும் RH அதிகரிப்புடன் BPH மற்றும் பச்சைத் தத்தி ஆகியவற்றின் குடித்தொகை மட்டங்கள் அதிகரிப்புடன் பீடைக் குடித்தொகை மட்டம் குறைவடைந்திருந்தது. மேலும் தண்டு துளைப்பான், கறுப்பு மூட்டுப் பூச்சி மற்றும் நெல் மூட்டுப் பூச்சி ஆகியவற்றின் குடித்தொகைகள் வெப்பநிலை அதிகரிப்புடன் குறைவடைந்து காணப்பட்டது.

நெல் விவசாயச் சூழலியல் தொகுதியில் ஆத்திரப்போடாக்களின் பல்வகைமை

பாரம்பரிய மற்றும் சேதன நெற் சூழலியல் தொகுதிகளில் பூச்சிகளின் குடித்தொகையை ஒப்பிடுவதற்காக 2011 / 2012 பெரும்போகத்தில் RRDI ஆராய்ச்சி வயல்களில் ஓர் கற்கை மேற்கொள்ளப்பட்டது. 19 வருணங்கள் மற்றும் 60 குடும்பங்களுக்குச் சொந்தமான 78 பூச்சி இனங்கள் இனங்காணப்பட்டன. பாரம்பரிய செய்கைக்குரிய வயல்களிலும் பார்க்க சேதனச் செய்கைக்குரிய நெல் வயல்களில் பூச்சி இனங்களின் பல்வகைமை அதிகமாகக் காணப்பட்டது. ஆத்திரப் போடாக்களின் வாழிடத்தின் அடிப்படையிலான நிலவுகையில் நீர் நிலைக்குரியவை (81%) சேதன வயல்களில் அதிகமாகவும் தரை வாழ்க்கைக்கு உரியவை (54%) பாரம்பரிய வயல்களில் அதிகமாகவும் காணப்பட்டன.

களை முகாமைத்துவம்

நடுகை நெல்லுக்கும் (Oryza sative L) களைநெல்லுக்கும் இடையிலான போட்டியின் விளைவு

வெவ்வேறு அளவிலான K பசளைப் பிரயோகத்தின் போது செய்கை பண்ணப்படுகின்ற நெல் வர்க்கங்களில் களைநெல்லினுடைய போட்டியின் தாக்கத்தை அறிவதற்கான கற்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. செய்கை பண்ணப்பட்ட நெல் வர்க்கத்திற்கும் (Bg – 352) குருநாகல் களைநெல் (KWP) எனப்படும் உயிர் வகைக்கும் இடையிலான போட்டித் தன்மையில் வளர்ச்சி மற்றும் விளைச்சலுக்குரிய கூறுகள் பரிசோதிக்கப்பட்டன. இதன்போது செய்கை பண்ணப்பட்ட நெல்லில் மட்டங்களின் எண்ணிக்கை, இலையில் உள்ள பச்சையத்தின் அளவு, கொடி இலைப் பரப்பு மற்றும் மொத்த உயிர்த் திணிவு ஆகியவற்றில் களைநெல்லின்

போட்டி காரணமாக குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி காணப்பட்டது. இது K பிரயோகத்துடன் தொடர்பற்றுக் காணப்பட்டது. களைநெல்லின் போட்டி காரணமாக தாவரம் ஒன்றில் உள்ள கதிர்களின் எண்ணிக்கை, நிரம்பிய தானியங்களின் நூற்று வீதம் மற்றும் 1000 நெல் மணிகளின் நிறை என்பன குறிப்பிடக்கூடிய அளவில் வீழ்ச்சி அடைந்திருந்தன. மேற்படி வீழ்ச்சிக்கும் வேறுபட்ட K பிரயோக அளவுக்கும் குறிப்பிடத்தக்களவில் தொடர்பு காணப்பட வில்லை. தனியான பயிர்ச் செய்கை நிலமைகளில் Bg – 352 இன் பொட்டாசியப் பயன்பாட்டு வினைத்திறன் அதிகமாகக் காணப்பட்ட அதேவேளை களைநெல் கலப்பின் போது குறைவாகக் காணப்பட்டது.

வேறுபட்ட N அளவுகளின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நெல்லிற்கும் முக்கிய புல்லினங்களுக்கும் இடையிலான இடைத்தாக்கம்

புற்கள் N பசளைக்கு மிகவும் அதிக துலங்கல் உடையவை ஆகும். மூன்று பொதுவான களைப் புற்கள்: Echinuchola crusgalli, Ischeamum rugusum மற்றும் Leptochola chinensis அத்துடன் களைநெல்லாகிய Oryzae sative ஆகியவை 3 வேறுபட்ட N பசளை அளவுகளுடன் அவதானிக்கப்பட்டது. அதிகளவிலான விளைச்சல் குறைவானது E. Crusgalli ன் போட்டி காரணமாக அவதானிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து O.Sative (களை நெல்) I. rugosum மற்றும் L.Chinensis என்றவாறு அமைந்திருந்தது. உலர் தினிவுக் குறைவானது 3 N பசளை அளவுகளிலும் E. Crusgalli ன் போட்டி காரணமாகக் குறைவடைந்தது.

மண் வள முகாமைத்துவம்

இலங்கையில் நெல் வலயங்களில் உற்பத்தித் திறன் குறைவடைவதற்கும் நெல் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பு அதிகரிப்பானது மட்டுப்படுத்தப்படுவதற்கும் முக்கிய காரணம் உவர்த்தன்மை ஆகும். உவர் நிலமானது தீவு முழுவதும் காணப்படுகின்ற கரையோரப் பிரதேசங்களிலும், உலர் வலயத்தின் பிரதான நீர்ப்பாசனத்தின் கீழான நெல் வயல்களிலுமே அதிகளவில் காணப்படுகின்றது. உலர் வலயங்களில் உவர்த்தன்மை ஏற்படக் காரணம் திருப்தியற்ற நீர்வடிப்பு வசதிகள் ஆகும். இப்பிரதேசங்களில் உவர்த் தன்மைக்குரிய மூலகங்களாக பாறைகள் சிதைவடைதல் மற்றும் நீர்ப்பாசன நீர் என்பன அமைகின்றன.

பருவ வெள்ளப் பெருக்குக் காலங்களின் போது 45 – 60cm உயரமான கடல் அலைகளின் காரணமாக கரையோர நெல் வயல்கள் உவர்த்தன்மையிடைகின்றன. குறைந்தளவில் கடல் பொங்கும் காலங்களில் 10 - 25cm உயரமான அலை காரணமாகவும் உவர்த்தன்மை அடைகின்றன. உலர் கால நிலையின் போது கடல் மட்டத்தில் இருந்து 50 cm உயரம் வரை கடல் நீர் கரைக்குள் புகுவதனால் உவர்த்தன்மை உருவாகின்றது. இதன் காரணமாக ஆண்டு தோறும் கரையோரப் பிரதேச நெல் வயல்கள் உவர்த் தன்மை அடைகின்றன. இதனால் நெற் செய்கை பாதிப்படையும் அளவுக்கு இந்நிலங்கள் மாற்றமடைகின்றன. கரையோர உவர்தன்மை யாதலால் சுமார் 0.112 மில்லியன் ஹெக் நிலப்பரப்பு பாதிப்படைகின்றது. இப் பிரதேச வயல் நிலங்களின் மின்கடத்து திறனானது வழக்கத்திற்கு மாறாக $4dsm^{-1}$ ஆக உயர்கின்றது. அத்துடன் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை (சுனாமி) காரணமாக சுமார் 4000 ஹெக் கரையோர நெற் செய்கை நிலங்கள் உவர்த் தன்மையடைந்துள்ளது. இதன் போது இந்நிலங்கள் உவர் நீரால் வெள்ளமாக்கப்பட்டதே காரணமாகும். இதனால் இந்நிலங்கள் தற்போது நெற் செய்கைக்கு உதவாதவையாகவே உள்ளது. வழமைக்கு மாறான சூழலியல் நிலமைகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் கடலில் நீர் மட்டம் உயர்வடைதல் போன்ற காரணங்களால் எதிர்காலங்களில் மென் மேலும் நெல் வயல்கள்

உவர் நிலமாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

- உவர் நிலங்கள் அவற்றின் இரசாயன, பௌதீக மற்றும் நீரியல் இயல்புகளில் பரந்த அளவிலான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. இவ் வேறுபாட்டினுள் உப்புக்களின் அளவு மற்றும் தன்மை, மண்ணின் மேற்பரப்பு திகந்தங்களில் உப்புக்களின் பரம்பல், மண் pH, களியின் அளவு மற்றும் தன்மை, சேதனப் பதார்த்தங்களின் அளவு, மண் போசணை களின் அளவு, மண்ணீர் உள்ளடக்கம் மற்றும் வெப்பநிலை ஆகிய இயல்புகள் அடங்குகின்றன. இவற்றின் காரணமாக குறிப்பிட்ட ஒரு உவர் நிலத்தைப் புனருத்தாபனம் செய்வதற்கு இனங்காணப்பட் டுள்ள நடவடிக்கைகளை வேறு ஒரு இடத்தில் நடைமுறைப்படுத்துவது கடினமாக உள்ளது.

- உவர்த்தன்மையைச் சகித்து வளரக்கூடிய வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதே உவர்த்தன்மையான நெல் வயல்களின் உற்பத்தியை அதிகரிக்க உதவும் சிறந்த மாற்றுவழியாகும். இது தொடர்பான கற்கைகள் 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் உவர்த் தன்மையைச் சகித்து வளரக்கூடிய 17 வம்சாவழிகள் இனங்காணப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் கீழ் உவர் நிலமைகளின் கீழ் உயர் விளைச்சலைத் தருகின்ற (7 தொன்/ ஹெக்) இனங்களாக Bg 11 - 139 மற்றும் Bg 5 - 110 என்பன விருத்தி செய்யப்பட்டன. உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வர்த்தக விதை உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் Bg 369 ஐப் போல் Bg 11 - 139 உம் விடுவிக்கப்படுவதற்காகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- நெற் செய்கையின் போது குறைவான P நிலமையை தாக்குப் பிடித்து வளரும் நெல் வர்க்கங்களின் விருத்தியானது P பசளைப் பாவனையைக் குறைப்பதற்குரிய ஒரு சிறந்த வழியாகும். 2012ஆம் ஆண்டில் பாரம்பரிய, மேம்படுத்தப்பட்ட, புதிதாக மேம்படுத்தப்பட்ட நெல் வர்க்கங்களில் இருந்து 20 வர்க்கங்களைத் தெரிவு செய்வதற்கான பரிசோதனை ஒன்று குறைவான P நிலமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. முருங்கைக் காயன், சுதுகீனட்டி, மற்றும் மாஸ் ஆகிய பாரம்பரிய வர்க்கங்களும், H_4, H_7 மற்றும் H_{10} ஆகிய மேம்படுத்தப்பட்ட வர்க்கங்களும், Bg 358 எனும் புதிய மேம்படுத்தப்பட்ட வர்க்கமும் குறைவான P நிலமைக்குப் பொருத்தமானவை என இனங்காணப்பட்டன. உயர் விளைவினைத் தருகின்ற Bg 352, Bg 357 மற்றும் Bg300 ஆகிய வர்க்கங்களுடன் ஏற்கனவே கூறப்பட்ட வர்க்கங்கள் ஆண் பெற்றோராகப் பயன்படுத்தப்பட்டு 60 கலப்புகள் மேற்கொள் ளப்பட்டன. இது P குறைபாட்டைச் சகித்து வளரக் கூடியதும் உயர் விளைச்சலைத் தருகின்றதுமான நெல் வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதாக அமைந்திருந்தது. 2012 / 2013 பெரும் போகத்தில் நடுகை செய்வதற்கான F_2 விதைகளைப் பெற்றுக் கொள்வதற்காக F_1 விதைகள் செய்கை பண்ணப்பட்டன.

- விவசாயிகளின் நெல் வயல்களில் பொட்டாசியம் பசளைப் பிரயோகத்திற்கான துலங்கல்கள் நெற் பயிரில் கண்டறியப்பட வில்லை. RRDI இல் மேற்கொள்ளப்பட்ட நீண்ட காலப் பரிசோதனைகளில் 2012ஆம் ஆண்டில் மூன்றாவது மற்றும் நான்காவ தாகப் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு: DOA இன் சிபாரிசின் படி கதிர்ப் பருவ K அளவுடன் ஒப்பிடும் போது DOA இன் சிபாரிசின் அரைவாசியை வழங்கிக் கொண்டு அறுவடையின் போது பெறப்படும் வைக்கோல் முழுவதையும் வயலில் மீண்டும் இடும் போது குறிப்பிடத்தக்க விளைச்சல் அதிகரிப்புக் காணப்பட்டது. மண்ணில்

பரிமாற்றம் செய்ய முடியாத K இன் அளவைப் பேணுவதற்கு நடுகை பண்ணப்பட்டு 5 - 6 வாரங்களுக்கு பரிமாற்றம் செய்ய முடியாத K இன் அளவைப் பராமரிப்பது அவசியம் ஆகும். நீண்ட கால விளைவை உறுதிப்படுத்துவத ற்காக கற்கையானது முன்னேற்றத்தில் உள்ளது.

- பல்வேறு முறைகளில் P பசளைப் பிரயோகத்தின் நீண்டகால விளைவைக் கண்டறிவதற்கான நீண்டகால வயற் பரிசோதனை ஒன்று RRDI இல் மேற் கொள்ளப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட ஐந்தாவது மற்றும் ஆறாவது மாதிரிகளின் முடிவின் படி; P பிரயோகிக்கப் பட்ட துண்டத்திற்கும் P பாவிக்காத துண்டத்திற்குமிடையே விளைச்சலில் வேறுபாடு காணப்பட்டது. ஆறாவது பருவத்தின் பின்பும் பருவங்களில் P பிரயோகிக்கப்பட்ட துண்டங்களுகளிலும் ஒன்றுவிட்ட ஒழுங்கில் P பிரயோகக்கப்பட்ட துண்டங்களிலும் குறிப்பிடத்தக்க விளைச்சல் வேறுபாடு காணப்படவில்லை. நெற் செய்கையின் போது P வீணாவதைக் குறைப்பதற்கு மெதுவாக விடுவிக்கப்படு கின்ற P பசளையின் அறிமுகம் ஓர் சிறந்த மாற்று வழியாகும். N மற்றும் K பசளைகளின் வேறுபட்ட நனோ சேர்க்கை கள் 2012 ஆம் ஆண்டு RRDI இல் வயல் நிலமைகளில் பரிசோதிக்கப்பட்டது. K மற்றும் N பசளைகளின் நனோ சேர்க்கை கள் பாவிக்கப்பட்ட போது N மற்றும் K பசளைகளின் அளவைக் குறைக்கக் கூடிய சாத்தியம் காணப்பட்டது. எனவே நெல் உற்பத்தியில் N மற்றும் K பசளைகளின் நனோ சேர்க்கைகளின் பொருத்தத் தன்மையைக் கண்டறிவதற்கான கற்கைகள் முன்னேற்றப் பாதையில் உள்ளன.

ஒருங்கிணைந்த தாவரப் போசணைத் தொகுதி (IPNS) நிகழ்ச்சி

நெற் செய்கையில் மண் வளத்தை அதிகரித்தல், பசளைப் பாவனை வினைத்திறனை அதிகரித்தல், அசேதனப் பசளைப் பாவனையைக் குறைத்தல் மற்றும் சூழல் மாசடைதலைக் குறைத்தல் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கு சேதன, மற்றும் அசேதனப் பசளைகளின் இணைந்த பாவனையானது ஓர் சிறந்த மாற்று வழியாகும். 2010 / 2011 ஆம் ஆண்டு பெரும்போகத் தொடக்கத்திலிருந்து நான்கு பருவங்கள் தற்போது சிபாரிசில் உள்ள NPK பசளைப் பாவனைகளின் 75% மற்றும் 100% சிபாரிசிகளுடன் சேதனப் பசளைப் பாவனை மற்றும் பாவனை அற்ற நிலமை, 4 தொன்/ ஹெக் வைக்கோல் மற்றும் 1 மற்றும் 2 தொன்/ ஹெக் கூட்டெருப் பாவனை ஆகியவை அடங்கலாக ஓர் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. விளைச்சலில் எதுவித பாதிப்புமின்றி NPK அசேதன வளமாக்கிப் பாவனையை 25% ஆல் குறைக்கும் நோக்குடனேயே இது இடம் பெற்றது. மேற்படி நான்கு பருவங்களிற்குமான பரிசோதனை முடிவுகளின் படி தற்போது சிபாரிசில் உள்ள இரசாயன வளமாக்கிப் பிரயோகத்தின் (265Kg யூரியா, 87.5Kg TSP மற்றும் 75Kg MOP / ஹெக்) 25% குறைவுடன் எவ்வித சேதன வளமாக்கியும் பயன்படுத்தாத பரிசோதனையில் குறிப்பிடத்தக்களவில் விளைச்சல் குறைவு அவதானிக்கப்பட்டது. மூன்று பருவங்களின் முடிவுகளின் படி 4 தொன்/ ஹெக் அளவில் தனித்து வைக்கோல் பிரயோகிக்கப்பட்ட பரிசோதனையானது 25% அசேதன வளமாக்கிக் குறைப்பை ஈடு செய்யவில்லை. எனினும் 4 தொன்/ ஹெக் என்ற வீத வைக்கோல் மற்றும் 1.0 தொன்/ ஹெக் என்ற அளவிலான கூட்டெருப் பாவனையானது தற்போது சிபாரில் உள்ள பசளைப் பாவனையில் 25% குறைப்பை நெல் விளைச்சலில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது ஈடு செய்தது. 2 தொன்/ ஹெக் கூட்டெருவுடன் 4 தொன்/ ஹெக்

வைக்கோல் பரிகரணத்துடன் 75% அசேதன வளமாக்கிப் பாவனையின் போது நெல் விளைச்சலானது மேலும் அதிகரித்திருந்தது. ஆனால் 1.0 தொன்/ ஹெக் ஆல் தரப்பட்ட தானிய விளைச்சலுடன் குறிப்பிடத்தக்களவில் வேறுப்பட்டிருந்தது. 100% அசேதன வளமாக்கிப் பாவனை மற்றும் 4 தொன்/ ஹெக் வைக்கோலுடன் சேர்ந்த 2 தொன்/ ஹெக் என்ற அளவிலான கூட்டெருப் பாவனையின் போது உயர் விளைச்சல் பதிவாகியது (6.1 தொன்/ ஹெக்). ஆனால் மேற்படி சேதனப் பசளைப் பாவனை மற்றும் 75% அசேதன பசளைப் பாவனையில் கிடைத்த நெல் விளைச்சலுடன் குறிப்பிடத்தக்க வேறுபாட்டைக் கொடுக்க வில்லை. ஆகவே மேற்படி நெல் விளைச்சலைப் பெற 4 தொன்/ ஹெக் வைக்கோல் மற்றும் 1-2 தொன்/ ஹெக் கூட்டெருப் பாவனையுடன் அசேதனப் பசளைப் பாவனையை ஒருங்கிணைக்கும் போது இரசாயன வளமாக்கியை 25% ஆல் குறைக்க முடியும். மேற்படி பரிசோதனையானது அசேதன வளமாக்கிப் பாவனையை 5% இருந்து 25% வரை படிப்படையாகக் குறைத்துக் கொண்டு சேதன வளமாக்கிப் பாவனையுடன் ஒருங்கிணைத்து மேலும் 5 பருவங்களுக்கு முடிவுகளை உறுதிப்படுத்துவதற்காக பெரிய அளிவில் மேற்கொள்ளப்பட்டது.

- பசளைப் பாவனை வினைத்திறனை அதிகரித்தல், அதனைத் தொடர்ந்து நெற் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் அசேதன வளமாக்கிப் பாவனையைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் சாதாரண நுண்ணுயிர் சூழலில் தயாரிக்கப் பட்ட உயிர் வளமாக்கி பாவனையின் சாத்தியம் பற்றி அறியும் பசுமை இல்லப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தற்போது சிபாரிசில் NPK பசளைப் பாவனை அளவுகளுக்கெதிராக உயிர் வளமாக்கி, 4 தொன்/ ஹெக் வைக்கோல் மற்றும் தற்போதைய NPK சிபாரிசில் 2/3 அல்லது ¾ என்ற அளவிலான பாவனை பரிசோதிக்கப்பட்ட போது இங்கு விளைச்சல், விளைச்சல் கூறுகள், மற்றும் ஏனைய வளர்ச்சி அளவுகோல் ஆகியவற்றில் ஒப்பிடக்கூடிய அளவில் முன்னேற்றம் பெறப்பட்டது. நெற் செய்கையின் போது அசேதன வளமாக்கிப் பாவனையுடன் உயிர் வளமாக்கி மற்றும் சேதன வளமாக்கிகளை ஒன்றிணைக்கும் போது அசேதன வளமாக்கியின் அளவைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பது இதில் இருந்து தெளிவாகின்றது. நெல்லின் வளர்ச்சி மற்றும் விளைச்சலில் உயிர் வளமாக்கியின் தாக்கம் பற்றி அறிவதற்கு உயிர் வளமாக்கிப் பாவனையுடன் கூடிய நீண்ட காலப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- நீண்ட காலத் தேவைக்காக ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் சேதன நெல் வயல் ஒன்று பராமரிக்கப்படுகின்றது. அத்துடன் மண்வளத் தன்மையை அறிவதற்காக மண் மாதிரிகள் பாகுப்பாய்வு செய்யப்பட்டன. இதன் போது மண்ணின் pH, மின் கடத்து திறன், சேதனப் பதார்த்தத்தின் அளவு, P மற்றும் பரிமாற்றம் செய்யக் கூடிய K ன் அளவு என்பன அறியப்பட்டன. அவை முறையே 5.0, 0.27 ds/m, 2.56%, 16mg/Kg, 70mg/ kg எனக் காணப்பட்டதுடன் வயலின் மண் வளமானது முன்னேற்ற கரமாக உள்ளது என்பதையும் அவை சுட்டிக் காட்டின. இம்முன்னேற்றத் திற்கு முக்கிய காரணங்களாக வைக்கோல், கூட்டெரு, சீமைக்கிழுவை, செஸ்பானியா மற்றும் காட்டுச் சூரிய காந்தி ஆகிய சேதன வளமாக்கிகள் சேதன நெல் வயல்களில் நெற் செய்கையின் போது நடப்பட்டமை மற்றும் பாரம்பரிய நெல் வர்க்கங்களின் குறைவான போசணை உள்ளெடுத்தல் என்பவை அமைந்திருந்தன.

- எதிர்கால சேதன நெற் செய்கைக்குப் பயன்படுத்துவதற்காகப் 11 பாரம்பரிய நெல் வர்க்கங்கள் (சுது கீனட்டி, கழு கீனட்டி, பச்சைப் பெருமாள், சுவடெல், ரத்டெல்,

ஹேரத் பண்டா, சுதுறு சம்பா, டொஸ்த்தர கீனட்டி சுலை, மற்றும் கறுளுதுட) பிறப்புரிமை ரீதியாகத் தூய்மைப்படுத்தப் பட்டன.

- சேதன நெற் செய்கை நிலமைகளில் மேம்படுத்தப்பட்ட (At 362, Bg300) மற்றும் பாரம்பரிய (பாஸ்மதி, சுது கீனட்டி, சுவடெல்) ஆகிய வர்க்கங்கள் அவற்றின் இசைவாக்கத்தன்மையை அறிவதற்காகப் பரிசோதிக்கப்பட்டன. விளைச்சல் 2.9 – 4.5 தொன்/ ஹெக் ஆகக் காணப்பட்டதுடன் பாரம்பரிய மற்றும் மேம்படுத்துப்பட்ட வர்க்கங்களிடையேயான விளைச்சல் வித்தியாசம் 1.0 - 1.5 தொன்/ ஹெக் ஆகக் காணப்பட்டது. விருப்பமுடைய விவசாயிகளி டையே பாரம்பரிய நெல் வர்க்கத்தின் விதை நெல்லில் 2Kg மாதிரிகள் சேதன நெற் செய்கைக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- சேதன நெற் செய்கை நிலமையில் At 362 நெல் வர்க்கத்தின் விளைச்சலில் வெவ்வேறு அளவிலான (0, 2.0, 4.0, 6.0, 8.0 மற்றும் 10.0 தொன்/ ஹெக்) கூட்டெருப் பாவனையின் தாக்கம் பற்றிய பரிசோதனை ஒன்று 2 பருவங்களுக்கு மேற்கொள்ளப் பட்டது. கூட்டெருவின் அதிகரிப்புடன் விளைச்சலும் அதிகரித்தது. அடிக்கட்டு மற்றும் விதைத்து நான்கு வாரங்களின் பின்பு என்ற அடிப்படையிலான இருதடவை பிரித்துப் பாவித்த கூட்டெருப் பாவனை யானது அனைத்து அளவிலான கூட்டெருப் பாவனையிலும் வினைத்திறனான விளைச்ச லைக் காட்டியது. 10 தொன்/ ஹெக் என்ற கூட்டெருப் பிரயோகத்தில் இரண்டு தடவை சம அளவிலான பிரித்துப் பாவித்தப் பாவனையானது உயர் விளைவைத் (4.4 தொன்/ ஹெக்) தந்தது. பிரித்த (Split) மற்றும் பிரிக்காத நிலயிலான 8 தொன்/ ஹெக் என்ற கூட்டெருப் பாவனையை விட .மேற்படி பரிசோதனையில் குறிப்பிடத்தக்க உயர் விளைச்சல் கிடைத்தது.

- 2011 / 2012 பெரும் போகம் மற்றும் 2012 சிறுபோகம் ஆகிய பருவங்களில் 3 தொன் கூட்டெரு மற்றும் 2.5 தொன் கூட்டெரு உட்புகுத்திகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. பசுந்தாட் பசளைத் தாவர விதைகள் (செஸ்பானியா 20Kg, சணல் 10Kg) விதைப் பெருக்க நோக்கத்துடன் உற்பத்தி செய்யப்பட்டன. சொஸ்பானியா விதை மாதிரியில் 50gr ஆனது விவசாயிகளுக்கான ஆரம்ப அறிமுக பசுந்தாட் பசளை உற்பத்திக்காக விவசாயிகளிடையே பகிர்ந்த ளிக்கப்பட்டது.

- நெற் செய்கையில் கூட்டெரு உற்பத்தி, பசுந்தாட் பசளை மற்றும் ஏனைய சேதனப் பதார்தங்களின் பாவனை தொடர்பில் 2011/ 2012 பெரும் போகம், 2012 சிறுபோகம் ஆகிய பருவங்களில் விவசாயிகள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் அடங்கலாக 520 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

GIS மற்றும் நீர் முகாமைத்துவம்

ஒன்று விட்ட ஒழுங்கிலான ஈரமாக்கல் மற்றும் உலரவிடல் நிலமைகளில் (AWD) நீர்ப்பாசன இடை வெளியைத் தீர்மானித்தல்

வெள்ளப்படுத்தல் நிலமை பராமரிப்பின் போது நீர் வீணாதல் உயர்வு ஆகும். எனவே நீரை அதிக வினைத்திறனுடன் பயன்படுத்தும் நோக்குடன் ஒன்றவிட்ட ஒழுங்கிலான ஈரமாக்கல் மற்றம் உலரவிடல் (AWD) நுட்பம் பரிசோதிக்கப் பட்டது. இந்த (AWD) நுட்பத்தின் வெற்றியானது உலர விடல் மற்றும் ஈரமாக்கல் ஆகியவற்றுக் கிடையிலான சிறந்த கால இடைவெளியை கண்டறிவதிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் நீர்ப்பாசன இடைவெளியானது மண்ணுக்கு மண் வேறுபடும். இக்கற்கையானது குருநாகல் மண் தொடர் பிரதேசங்களில் உள்ள நெல் வயல்களில் பொருத்தமான கால இடை வெளியைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்

பட்டது. RRDI இல் வயற் பரிசோதனைகள் 2012 சிறுபோக காலப் பகுதியில் Bg359 எனும் நெல் வர்க்கத்தில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு ஆறு பரீகரணங்கள் T_1 (நிரம்பிய நிலை) T_2 (3 நாள் இடைவெளி), T_3 (7 நாள் இடைவெளி), T_4 (10 நாள் இடைவெளி), T_5 (14 நாள் இடைவெளி), மற்றும் T_6 (நண்பகலில் ஈரமாக்குதல்), மதிப்பிடப்பட்டன. இவற்றுள் குருநாகல் மண் தொடருக்கு 10 நாள் இடைவெளி பொருத்தமாகக் காணப்பட்டதுடன் 5 தொன் / ஹெக் எனும் விளைவும் பெறப்பட்டது.

மழையை நம்பிய மற்றும் மிகவும் குறைந்த நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் நெல் வர்க்கங்களை மதிப்பிடல்

இலங்கையின் இடைவலயப் பிரதேசங்களுக்குரிய மழையை நம்பிய பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான நெல் வர்க்கங்களை இனங்காண் பதற்காக இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 27 நெல் வர்க்கங்கள் மதிப்பிடப்பட்டன. அவை வருமாறு, Bg 94 -1 , Bg352, Bg357, Bg358, Bg359, Bg360, Bg366, Bg369, Bg5-110, Bw 351, Bw361, Bw363, Bw364, Ld 365, At 353, At354, At 362. (3 ½ மாதம்) Bg 300, Bg 304, Bg 305, Bg 306, At 303, At 307, At 308 (3 மாதம்) Bg 250, CNR 24 (2 ½ மாதம்). 2012 சிறுபோகத்தில் கடுமையான வறட்சியின் காரணமாக மழையை நம்பிய பயிர்ச் செய்கை நிலமையின் கீழ் தாவரங்கள் பெருமளவில் உலர்ந்து போய் விட்டன. ஆனால் Bg 250, Bg 300, Bg 94 – 1, Bg 369 மற்றும் At 307 ஆகிய வர்க்கங்கள் மேற்படி வறட்சியை ஓரளவு தாங்கிக் கொண்டு 1.0 தொன்/ ஹெக் விளைச்சலையும் தந்தன. ஆகக் குறைந்த நீர்ப்பாசன நிலமைகளில் (3 ½ மாத வர்க்கங்களுக்கு 4 தடவையும், 2 ½ - 3 மாத வர்க்கங்களுக்கு 3 தடவையுமாக வளர்ச்சிப் பருவம் பூராகவும் வழங்கப்பட்டது.) Bg 369 உயர் விளைவைத் (4.4 தொன்/ ஹெக்) தந்தது. மேலும் Bg 94 – 1, Bg 359 ஆகிய வர்க்கங்கள் முறையே 3.7, 3.6 தொன்/ ஹெக் விளைவையும் காட்டின. ஆனால் Bg 306, Bg 306, Bg 30, At 307 ஆகிய 3 மாத வர்க்கங்கள் 2.0 - 2.5 தொன்/ ஹெக் என்ற அளவில் விளைச்சலையும், Bg 250 ஆனது 1.8 தொன்/ ஹெக் விளைச்சலையும் கொடுத்தது.

பயிராக்கவியல்

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை (NCRVT)

- இரண்டரை முன்றரை, மற்றும் நான்கரை மாத முதிர்ச்சி வகுப்பு வர்க்கங்களில் 2011/ 2012 பெரும்போக காலப் பகுதியில் NCRVT நிகழ்ச்சிகள் தொடர்ப்பட்டன. முற்றுமுழுதாக ஆய்வாளர்களின் முகாமைத் தவத்தின் கீழ் 12 இடங்களில் 26 புதிய நெல் வம்சாவழிகள் நியம சோதனை வர்க்கத்துடன் பரீட்சிக்கப்பட்டன.
- பின்வரும் வம்சாவழிகள் அவற்றிற்கே உரித்தான விசேட இயல்புகளின் அடிப்படை யில் VAT நிகழ்ச்சியின் கீழ் விவசாயிகளின் வயல்களில் மேலதிக சோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.
- At 08 – 593 : மூன்று மாத சிவப்பு நிற அரிசியையுடைய பாஸ்மதி வகை வம்சாவழி, At 306 லும் பார்க்க கூடிய விளைச்சலுடையது.
- At 09 - 861 : 3 மாத வயதுடைய வெள்ளைச் சம்பா
- At 08 - 617 : உயர் விளைச்சலுடைய 3 ½ மாத வெள்ளை நாடு
- At 08 – 1078 : At 362 இலும் பார்க்க உயர் விளைச்சலுடைய 3 ½ மாத வயதுடைய சிவப்பு நாடு

- Ld 08 – 6 – 7 : Bg 358 இலும் பார்க்க உயர் விளைவுடைய 3 ½ மாத சிவப்பு நிறச் சம்பா
- 2012 சிறுபோகத்தில் 2 ½ , 3 ½ மற்றும் 4 ½ மாத வகுப்புக்களைச் சேர்ந்த 13 புதிய வம்சாவழிகள் பரிசோதனை செய்யப்பட்டன. பரிசோதிக்கப்பட்ட எந்தவொரு 2 ½ மாத வயதுடைய புதிய வம்சாவழியும் நியம 2 ½ மாத வர்க்கத்திலும் பார்க்க (Bg 250) உயர் விளைவைத் தரவில்லை. Bg 358 மற்றும் Bg 366 ஆகிய 3 ½ மாத வர்க்கங்களிலும் பார்க்க Bg 08 - 1258 ஆனது உயர் விளை வைத் தந்தது. Bg 403 மற்றும் Bg 379 – 2 ஆகிய 4 ½ மாத வர்க்கங்களிலும் பார்க்க Bg 10 - 551 ஆனது உயர் விளைவைத் தந்தது.

வர்க்க இசைவாக்கச் சோதனை (VAT)

At 7 – 800, At 6 – 631, At 07 – 695, Bg 08 – 2398, Bg 05 – 110, Bg 11-139, Bw 5 – 1621, Bg 7 -997 மற்றும் Bg 6 -1350 ஆகிய 9 தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள புதிய வம்சாவழிகள் 2011 / 2012 பெரும் போகத்தில் அவற்றின் இசைவாக்கத் தன்மையை அறிவதற்காகப் பரீட்சிக்கப்பட்டன. At 7 – 800 (3 மாத வம்சாவழி), Bg 07 – 997 (4 ½ மாத வம்சாவழி), மற்றும் Bg 07 – 1350 (4 ½ மாத வம்சாவழி) ஆகியன நியம சோதனை வர்க்கத்திலும் பார்க்க உயர் விளைவு மற்றும் சிறந்த இசைவாக்கத் தன்மையைக் காட்டின. அத்துடன் இவை LSVAT நிகழ்ச்சிக்கும் பிரேரிக்கப்பட்டுள்ளன. At 06 - 631 (3 ½ மாத வம்சாவழி) ஆனது Bg - 360 இலும் பார்க்க குறைந்த விளைச்சலைக் காட்டிய போதிலும் இதனுடைய தானியமானது சிறந்த தரமுடையதாகக் காணப்பட்டதால் அதுவும் LSVAT நிகழ்ச்சிக்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது ஈரவலயப் பிரதேசங்களில் பிரபல்யமற்றுக் காணப்படுகின்ற Bg - 364 வர்க்கத்திற்குப் பதிலாகப் பரிசோதிப்பதற்காக Bg 05 - 1621 (3 ½ மாத வம்சாவழி) எனும் வர்க்கம் LSVAT நிகழ்ச்சிக்கு வழிமொழியப் பட்டுள்ளது.

பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கச் சோதனை (LSVAT)

தொன்று தொட்டுப் பாவனையில் இருக்கும் 5 புதிய வம்சாவழிகள், விவசாயிகளின் வயல்களில் அவற்றின் இசைவாக்கத் தன்மையை அறிவதற்காகப் 2011 / 2012 பெரும் போகத்தில் பரிசோதிக்கப்பட்டன. அவையாவன: At 4 – 486 (3 மாத வெள்ளை நாடு) At 5 - 1382 (3 மாத வெள்ளை பாஸ்மதி வகை) At 6 - 650 (3 ½ மாத சிவப்பு சம்பா) Bg 3R (3 ½ மாத வெள்ளை சம்பா), மற்றும் Ld 3 – 6- 12 (3 ½ மாத வெள்ளை சம்பா) என்பனவாகும். ஒவ்வொரு வம்சாவழியும் வெவ்வேறு இயல்புகளிற்காக விவசாயிகளின் வயல்களில் காண்பித்த துலங்கல்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து வம்சாவழிகளும் சிறந்த இசைவாக்கத் தன்மையுடையனவாக உறுதிப் படுத்தப்பட்டன.

தாழ் நீர்ப்பாசன சூழல் தொகுதியில் நெல் வம்சாவழிகளின் மதிப்பீடு

CAAS மற்றும் IRRI ஆகியவற்றால் அபிவிருத்தி செய்யப்பட்ட 32 சோதனைப் பதிவுகளைக் கொண்ட 32 வம்சாவழிகள் (GSR தாழ்நில நீர்ப்பாசன விளைச்சல் சோதனை: GSR – IRLL 2012) 2012 ஆம் ஆண்டு பெறப்பட்டு, 4 உள்ளூர் சோதனை வர்க்கங்களுடன் (Bg 300, Bg 352, Bg 366, மற்றும் Bg 94 – 1) நீர்ப்பாசன நிலமைகளில் தாழ் நிலப் பிரதேச வயல்களில் பரிசோதிக்கப்பட்டன. PSB RC 18, ZHONGHUA

1 மற்றும் IR 84678 – 25 – 5 –B ஆகிய வம்சாவழிகள் உயர் விளைவைத் தருகின்ற உள்ளூர் வர்க்கமான Bg 94 – 1 இலும் பார்க்க அதிக விளைவைக் கொடுத்தது.

நெல்லின் வளர்ச்சி , விளைச்சல் மற்றும் நோய் பீடைக்கான எதிர்ப்புத் தன்மை ஆகியவற்றில் ஒலிக்கோ சிற்றோசானின் மதிப்பீடு

சிறுபோகம் 2012 மற்றும், பெரும்போகம் 2011/ 2012 ஆகிய பருவங்களில் பக்மீவெவ குருநாகல், (IL_3) எனுமிடத்தில் உள்ள விவசாயிகளின் வயல்களில் ஒலிக்கோ சிற்றோசானின் (3%) நெற் செய்கைக்குரிய பொருத்தமான வினியோக அளவையும், அதன் வினைத்திறனையும் கண்டறிவதற்காக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பெரும்போகம் 2011 / 2012 இல் பெறப்பட்ட முடிவுகளின் படி விவசாயிகளின் முகாமைத்து வத்தின் கீழான நெல் வயல்களில் விதைப் பரிகரண முறை (150ppm) மற்றும் அங்குரப் பகுதியில் (50 மற்றும் 600 ppm) ஆகிய அளவுகளில் ஒலிக்கோ சிற்றோசனின் பிரயோகமானது நெல்லின் வளர்ச்சியிலோ, விளைச்சலிலோ எதுவித குறிப்பிடத்தக்க மாற்றத்தையும் காணப்பிக்கவில்லை இதன் காரணமாக 2012 சிறுபோகத்தில் ஒலிக்கோ சிற்றோசானின் பிரயோக செறிவானது விதைப் பரிகரணத்தில் (600 ppm) ஆகவும் அங்குரப் பகுதி விசிறலில் (600 ppm) ஆகவும் அதிகரிக்கப்பட்டது. இவ்அதிகரிக்கப்பட்ட ஒலிக்கோ சிற்றோனின் அளவும் கூட நெற் பயிரின் வளர்ச்சி மற்றும் விளைச்சலிலோ அல்லது பனிப்பூச்சியைக் கட்டுப்படுத்துவதிலோ எவ்விதமான குறிப்பிட்டுக்கூறத்தக்க தாக்கத்தையும் காண்பிக்கவில்லை.

மேற்படி பரிசோதனைகள் கடந்த பருவங்களில் மேற்கொள்ளப்பட்ட போது கூட நெற் பயிரின் வளர்ச்சி, மற்றும் விளைச்சல் ஆகியவற்றில ஒலிக்கோ சிற்றோசான் எதுவித சாதகமான முடிவுகளையும் காணப்பித்திருக்கவில்லை. ஆனால் இதன்போது ஒரு பருவத்தில் ஓரிரு அதிக செறிவுகளில் ஓரலகுப் பரப்பில் மட்டம் வெடித்தல் மற்றும் கதிர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. எனவே ஒலிக்கோ சிற்றோசானின் எந்தவிதமான சேர்க்கையும் நெற் பயிரின் வளர்ச்சி விருத்தி, மற்றும் நோய் பீடைகளின் கட்டுப்பாடு ஆகியவற்றில் எதிலுமே குறிப்பிடத்தக்க மாற்றத்தை உண்டுபண்ண வில்லை என்பது அனைத்துப் பரிசோதனை முடிவுகளிலுருந்தும் தெளிவாகியது.

பரசூட் முறைக்குரிய நாற்றுமேடையில் நெல் நாற்றுக்களின் வளர்ச்சி மற்றும் நெல் விளைச்சல் என்பவற்றின் மீது ஒலிக்கோ சிற்றோசானின் தாக்கம்

பரசூட் விதைப்பிற்குரிய நாற்று மேடையில் உள்ள நெல் நாற்றுக்களின் வீரியம் மற்றும் நெல்லின் விளைச்சல் என்பவற்றில் ஒலிக்கோ சிற்றோசானின் தாக்கம் பற்றி அறிவதற்கான வயற் பரிசோதனை ஒன்று RRDI பத்தல கொடையில் இடம் பெற்றது. பரசூட் நாற்றுமேடைகளில் ஒலிக்கோ சிற்றோசான் ஆனது விதைப் பரிகரணம் ஆகவும் (300ppm) நாற்றுச் சாடி கலவையாகவும் (600ppm) பிரயோகிக்கப்பட்டது. இலைகளின் எண்ணிக்கை, மட்டங்களின் (tillers) எண்ணிக்கை, மற்றும் நாற்றுக்களின் உயரம் ஆகிய இயல்புகள் நாற்றுக்களை விதைத்த பின்பு இரண்டாவது வாரத்தில் இருந்து 8வது வாரம் வரையும் வாரம் ஒரு தடவை அளவிடப்பட்டன. உடற் றொழிலியல் முதிர்ச்சியின் போது விளைச்சல் கூறுகள் மற்றும் விளைச்சல் என்பன பதிவு செய்யப்பட்டன. கட்டுப்பாட்டுப் பரிகரணத்துடன் ஒப்பிடும் போது (சாதாரண பரசூட் நாற்று மேடை நாற்றுக்கள்) மேற்படி பரிசோதனை நாற்றுமேடை நாற்றுக்கள், பதிய வளர்ச்சியின் போதான இலைகளின் எண்ணிக்கை, மட்டங்களின் எண்ணிக்கை, மற்றும் நாற்றுக்களின் உயரம் ஆகிய எதிலுமே குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் ($P = 0.05$)

காணப்பிக்கவில்லை அத்துடன் விளைச்சல் கூறுகள் மற்றும் விளைச்சல் போன்றவற்றிலும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை பரசூட் நாற்றுமேடை ஒலிக்கோ சிற்றோசான் பரிகரணத்தின் போது நெற் பயிரின் விளைச்சல் மற்றும் வளர்ச்சி என்பவற்றில் எதுவித தாக்கமும் ஏற்படவில்லை என்பது இதிலிருந்து முடிவாகின்றது.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

அட்டவணை 1.4.2 2012ல் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதை அளவு

உற்பத்தியாளர் விதை அளவு (Kg)			
	பெரும் போகம் 2011/ 12	சிறு போகம் 2011/ 12	மொத்தம்
150 – 180 நாட்கள்			
Bg 3 – 5	41		41
Bg 745	41		41
Bg 38	41		41
Bg 407	41		41
4 மாதங்கள்			
Bg 379-2	164	184.5	348.5
Bg 450	82	102.5	184.5
Bg 403	41	123	164
Bg 454	41	20.5	61.5
Bg 406	164	102.5	266.5
3.5 மாதங்கள்			
Bg 94-1	164	164	328
Bg 352	143.5	184.5	328
Bg 357	61.5	82	143.5
Bg 358	184.5	225.5	410
Bg 359	164	225.5	389.5
Bg 360	184.5	123	307.5
Bg 366	246	328	574
Bg 369		100	100
3 மாதங்கள்			
Bg 300	143.5	164	307.5
80 நாட்கள்			
Bg 250	61.5	61.5	123
மொத்தம்	**2009**	**2191**	**4200**

விசேட செயற்திட்டங்கள்

பல்சூழல் பரிசோதனைச் (MET) செயற்திட்டம்

பல்சூழல் பரிசோதனைச் செயற்திட்டம் (MET) என்பது GRISP இன் கீழ் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதியுதவிடன் (IRRI) மேற்கொள்ளப்படுவதொன்றாகும். இக்கற்கையின் முக்கிய நோக்கம் பங்கு கொள்ளும் நாடுகளிடையே மூலவுயிருருக்களைப் பரிமாற்றம் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் மேற்கொள்ளுதல் மற்றும் இனவிருத்தி வம்சாவழிகளைப் பிரேரித்தல், உயர்த்துதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றிற்குரிய ஓர் சீரிய படிமுறையை அபிவிருத்தி செய்தலும் ஆகும். முதலாவது பல்சூழல் பரிசோதனையானது உள்ளூர் நிலமைகளுக்கேற்ற சிறந்த இசைவாக்கமுடைய உள்ளூர் மற்றும் தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வர்க்கங்களை இனங்காணும் நோக்குடன் பிலிப்பைன்ஸ் IRRI உடன் இணைந்து தாழ்நில நீர்ப்பாசன நிலமைகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் கீழ் 180 புதிய நெல் வம்சாவழிகள் உள்ளூர் நிலமைகளுக்கேற்ப மதிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் பிலிப்பைன்ஸில்

இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள வம்சாவழிகளை யும் இப்பரிசோதனை உள்ளடக்குகின்றது. சிறந்த இசைவாக்கமுடைய அல்லது பல விசேட நெல் வளரும் சூழல்களுக்குரிய உயர்த்தர இனவிருத்திப் பதார்த்தங்களை இனங்காண்பதற்கு இந்த பல்சூழல் பரிசோதனைத் திட்டம் உதவியாக உள்ளது. அத்துடன் மேலதிக மதிப்பீட்டுக்காக இப்பரிசோதனை 2014 ஆம் ஆண்டு வரை தொடரப்படவுள்ளது.

உலர் விதை நெற் செய்கைக்குரிய தொழில்நுட்பப் பொதி ஒன்றை சிறந்த நிலையில் பூர்த்தியாக்குதல் (DOA-IRRI களை விஞ்ஞான செயற்திட்டம்)

இந்த செயற்திட்டமானது சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் (IRRI) பிலிப்பைன்ஸ் உடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. இக்கற்கைத் தொடரின் முக்கிய நோக்கம் உலர் விதை நெல்லை உலர் நிலையில் உள்ள வயல்களில் விதைத்தல் மேற்கொள்ளப்படும் உயர் நில வயல் நிலமைகளில் நீர்ப்பாசனத்தின் கீழ் நேரடி உலர் நெல் விதைப்பிற்கான (IDDS) பொருத்தமான தொழில்நுட்பப் பொதி ஒன்றை அபிவிருத்தி செய்வதாகும். வித்து முளைத்தலுக்கு ஏதுவாக விதைகள் விதைக்கப் பட்டவுடனையே நீர்ப்பாசனம் மேற்கொள்ளப் பட்டது.

a. உலர் நெல் விதைப்பு வயல்களில் களை நாசினிகளின் தாக்கம்

Bg 357 எனும் வர்க்கமானது 100Kg ஹெக் எனும் விதை அளவில் வரிசை விதைப்பாக மேற்கொள்ளப்பட்ட போது IDDS இல் களை வளர்ச்சியில் வெவ்வேறு களை நாசினிகளின் செயற்றிறன் மதிப்பிடப்பட்டது. இப்பரிசோதனை யின் போது DOA இன் நோய் பீடை முகாமைத்துவத்துக்குரிய பாரம்பரிய முறைகளும் பசளைப் பிரயோகச் சிபாரிசுகளும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இங்கு 5 விதமான களை நாசினிப் பரிகரணங்கள் மேற்கொள்ளப்பட்டன. I I I. MCPA 400g/L (20 DAS), இதைத் தொடர்ந்து பிறிற்றிலேக்கினர் 300g/L + பிறிபெரினாக்சிம் 20 g/L (8 DAS) II. MCPA 400g/L (20 DAS), இதைத் தொடர்ந்து சிகலோபொப் பியூற்றி 1100g/L (8DAS) III. MCPA 400g/L (20 DAS), இதைத் தொடர்ந்து தயோபென்கப் 400g/L + புறப்பனில் 200 g/L (8 DAS) IV. MCPA 400g/L (20 DAS), இதைத் தொடர்ந்து பிஸ்பிறிவக் சோடியம் + மெற்றாகிபொப் (8 DAS) V. கட்டுப்பாட்டுப் பரிசோதனையாக களை அகற்றாத நிலை. இதில் பிற்றிலேக்கினர் 300g/L + பிறிபெரினாக்சிம் 20 g/L (8 DAS) இதைத் தொடர்ந்து MCPA 400g/L (20 DAS), பாவிக்கப்பட்ட பரிகரணமானது உயர் நெல் விளைச்சலைக் (7-04தொன்/ ஹெக்) கொடுத்தது. ஆனாலும் அனைத்து களை நாசினிகளும் களைகளைக் கட்டுப்படுத்துவதில் 80% லும் பார்க்க அதிக வினைத்திறனுடன் செயற்பட்டன. எனவே மேற்படி அனைத்து களை நாசிகளும் நெல் வயல்களில் IDDS நிர்மாண முறைகளுக் கானவையாகச் சிபாரிசு செய்யப்பட கூடியவை.

b. உலர் விதைப்பின் கீழ் நெல் வர்க்கங்களின் பொருத்தத் தன்மை மற்றும் களைகளின் போட்டித்திறன்

IDDSஇல் களை வளர்ச்சியில் நெல் வர்க்கங் களில் வளர்ச்சி, விருத்தி மற்றும் விளைச்சல் என்பவற்றை மதிப்பிடுவதற்காக இப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. At 362, Bg352, Ld365, Bg357, Bg 358 மற்றும் Bg366 ஆகிய வர்க்கங்கள் 100Kg/ ஹெக் எனும் விதை அளவில் வரிசையில் விதைக்கப்பட்டன. விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசுகளான பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகள், நோய் பீடை முகாமைத்தும் மற்றும் பசளைப் பிரயோகம் என்பன களையுள்ள மற்றும் களையற்ற நிலைகளின் பராமரிப்புடன் இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 2011 சிறுபோகத்தில் களை அற்ற வயற்

துண்டங்களில் At 362 ஆனது 6.38தொன்/ ஹெக் எனும் உயர் விளைச்சலையும் களைகள் உள்ள வயற்துண்டங்களில் Bg357 ஆனது 1.77 தொன்/ ஹெக் எனும் உயர் விளைச்சலையும் தந்தது.

c. உலர் நெல் விதைப்பு வயல்களில் உத்தம N பசளை அளவு மட்டங்கள் மற்றும் பகுதியான பிரயோக அளவு

உத்தம N வீதம், பிரயோக நேரங்கள் ஆகியவை நெற் பயிரின் வளர்ச்சி, விருத்தி மற்றும் விளைச்சல் ஆகியவற்றில் கொண்டுள்ள தாக்கத்தை IDDS முறையில் மதிப்பிடுவதற்காக ஒரு கற்கை மேற்கொள்ளப்பட்டது. Bg357 நெல் வர்க்கமானது 5 வேறுபட்ட N பிரயோக அளவுகளில் (0Kg / ஹெக், 120Kg / ஹெக், மற்றும் 150Kg / ஹெக்) 100Kg/ ஹெக் எனும் விதை வீததத்தில் வரிசை விதைப்பாக மேற்கொள்ளப்பட்டது. பசளைப் பிரயோகம் தவிர்ந்த விவசாயத் திணைக்களத்தின் ஏனைய சிபாரிசுகளான பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகள், நோய் பீடை முகாமைத்துவம் ஆகியன பிரயோகிக்கப்பட்டன. மூன்று தடவை பகுதியான N பிரயோகமானது (10DASன் போது 33%, துடிப்பான மட்டம் வெடிக்கும் பருவத்தின் 28DAS போது 33%, மற்றும் கதிர் உருவாக்கப் பருவத்தின் போது 50DAS 33%) 4 தடவை பகுதியான N பிரயோகத்திலும் பார்க்க (10DASன் போது 25%, துடிப்பான மட்டம் வெடித்தலின் போது 25%, 28DAS கதிர் உருவாக்கப் பருவத்தின் போது 50DAS 25%, மகரந்த மணியாக்கத்தின் போது 25%, 85-95 DAS) சிறந்து விளங்கியது. N பிரயோக வீத அதிகரிப்புடன் விளைச்சலிலும் அதிகரிப்பு காணப்பட்டது. N பிரயோகிக்கப்படாத போது விளைச்சல் குறைவடைந்து காணப்பட்டது. 150Kg / ஹெக் என்ற N பிரயோக அளவுடன் மூன்று தடவை பகுதியான N பிரயோகமானது உயர் விளைச்சலைக் காட்டியது. அதேவேளை 120, 90, 60, 0Kg /ஹெக் என்ற N பிரயோக அளவுகள் முறையே 6.27, 5.81, 5.7 தொன்/ ஹெக் எனும் விளைச்சலைத் தந்தது. மேற்படி பரிசோதனை முடிவுகளின்படி 120Kg / ஹெக், மற்றும் 150Kg / ஹெக் ஆகிய N பிரயோகமானது IDDS நிர்மாண முறைக்கு பொருத்தமானவை யாகச் சிபாரிசு செய்யப்பட முடியும்.

d. உலர் விதைப்பின் கீழ் வேறுபட்ட விதை அளவுகளின் தாக்கம்

IDDS இல் பயிர் மற்றும் களைகளின் வளர்ச்சியின் மீது விதை அளவின் தாக்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. Bg357 ஆனது 5 வேறுபட்ட விதை அளவுகளில் (20Kg / ஹெக், 40 Kg / ஹெக், 60 Kg / ஹெக், 80 Kg /ஹெக் மற்றும் 100 Kg /ஹெக்) வேலையாட்களைக் கொண்டு வரிசையில் விதைக்கப்பட்டது. பகுதியான துண்ட வடிவமைப்பு 4m x 3.06m எனும் துண்டப் பரப்பளவில் பயன்படுத்தப்பட்டது. இப் பரிசோதனையின் போது களையுள்ள மற்றும் களைகள் அற்ற நிலமைகளுடன்; பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகள், நோய் பீடை முகாமைத்துவம் மற்றும் பசளைப் பிரயோகம் போன்றவற்றில் DOA இன் சிபாரிசுகளும் மேற் கொள்ளப்பட்டன. 80 Kg /ஹெக் எனும் விதை அளவுடைய பரிகரணத்தின் போது உயர் விளைச்சல் (7.06தொன்/ ஹெக்) பெறப்பட்டது. அதேவேளை 100, 60, 40 மற்றும் 20 Kg /ஹெக் எனும் விதை அளவுப் பரிகரணங்களில் முறையே 6.84, 6.84, 6.55 மற்றும் 5.88 தொன்/ ஹெக் எனும் விளைச்சல் பெறப்பட்டது. களைகளின் போட்டித்தன்மை விதை அளவு அதிகரிப்புடன் அதிகரித்துக் காணப்பட்டது. எனவே மேட்டு நிலங்களில் உலர் விதை நெற் செய்கையின் போது 40 - 60 Kg /ஹெக் எனும் விதை அளவானது சிபாரிசு செய்யப்பட முடியும்.

e. உலர் விதை நெற் செய்கைக்கான களை நாசினித் தேர்வு

களை வளர்ச்சியியைக் கட்டுப்படுத்துவதற்காக DOAஇனால் ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்ட களை நாசினிகளின் களைக் கட்டுப்பாட்டு வினைத் திறன், மற்றும் நெற் பயிரின் வளர்ச்சி, விளைச்சலின் மீதான தாவர நஞ்சாக்கத் தன்மை ஆகியவை களைகள் அகற்றப்படாத மற்றும் கையால் களைகள் அகற்றும் நிலமைகளுடன் மீளமதிப்பிடப்பட்டன. இங்கு பாவிக்கப்பட்ட களை நாசிகளாவன: MCPA ஐத் தொடர்ந்து பாவிக்கப்பட்ட புறொப்பனில், பென்டிமெதலின் 3 லீற் / ஹெக் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), ஒக்சிடியாசோன் 1-8 லீற் / ஹெக் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), ஒக்சிபுளபென் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெரிகான்ஸ்புறம் + எதொக்ஸிசப்பறோன் 2 DAS ஐத் தொடர்ந்த பென்டிமெதலின் 3 லீற் / ஹெக் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெனொக்ஸ்புறப் + எதொக்ஸிசல்பறோன் (20 DAS) ஐத் தொடர்ந்த ஒக்சிடியசோன் 1.8லீற் / ஹெக் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெரினொக்ஸபுறப் + எதொக்ஸிசல்பறொன் (20 DAS) ஐத் தொடர்ந்த ஒக்சிபுளபென் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெனொக்சலம் (20 DAS) ஐத் தொடர்ந்த பென்டிமெதலின் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெனொக்சலம் (20 DAS) ஐத் தொடர்ந்த ஒக்சிடியசோன் 1.8லீற் / ஹெக் (1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை), பெனொக்சலம் (20 DAS) ஐத் தொடர்ந்த ஒக்சிடியசோன் 1-2 DAS வெள்ளப்படுத்தாத நிலமை என்பன ஆகும். இதன் போது Bg300 நெல் வர்க்கமானது 100 Kg /ஹெக் எனும் விதை அளவில் வீசி விதைக்கப்பட்டது. இப் பரிசோதனையின் போது நோய் பீடை முகாமைத்துவம், பசளைப் பிரயோகம் மற்றும் கலாச்சார முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றில் DOA இன் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. உயர் விளைச்சல் மற்றும் உயர்ந்த வினைத்திறனுடைய களைக் கட்டுப்பாடு (80%) என்பன பெனொக்சலம் (20 DAS) ஐத் தொடர்ந்த ஒக்சிடிசோன் 1.8 லீற் / ஹெக் எனும் பரிகரணத்தில் பெறப்பட்டது. எனினும் இது கையால் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருந்து குறிப்பிடதக்க வேறுடாகக் காணப்படவில்லை. ஒக்ஸ்புளோரோபென் தவிர்ந்த ஏனைய களை நாசினிகள் எதுவும் நெற் பயிரில் தாவர நஞ்சுத் தன்மையைக் காண்பிக்கவில்லை.

நீர்ப்பாசனத்தின் கீழ் தாழ்நில சூழல் தொகுதிக்கேற்ற நெல் வம்சாவழிகளின் மதிப்பீடு (பசுமை உயர்தர நெல் செயற்திட்டம்)

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IRRI) நிதி உதவியுடன் பசுமை உயர்தர நெல் (GSR) செயற்றிட்டத்தின் கீழ் 32 வம்சாவழிகள் பரீட்சிக்கப்பட்டன. உயர் போசணை வினைத்திறன், மற்றும் தகைப்புக்கான எதிர்ப்புத் தன்மை போன்ற இயல்புகளைக் கொண்ட நடுகை நெல் வர்க்கங்களின் விருத்தி மற்றும் செய்கை ஆகியவற்றை செயற்படுத்தும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்பட்டது. IRRI மற்றும் CAAS (சீன விவசாய விஞ்ஞானக் கல்லூரி) ஆகியவற்றினால் விருத்தி செய்யப்பட்ட 32 சோதனைப் பதிவுகளைக் கொண்ட வம்சாவழிகள் (GSR - நீர்ப்பாசனத்தின் கீழான தாழ்நில விளைச்சல் பரிசோதனை: GSR – IRLL 2012) 2012ல் பெறப்பட்டு 4 உள்ளூர் சோதனை வர்க்கங்களுடன் (Bg-300, Bg352, Bg366, Bg 94-1), தாழ் நிலங்களில் நீர்ப்பாசன நிலமைகளின் கீழ் பரிசோதிக்கப்பட்டன. PSB RC 18, ZHONCHUA 1 மற்றும் IK 84678-25-5-B ஆகிய வம்சாவழிகள் உள்ளூர் வர்க்கமான Bg 94-1 உடன் ஒப்பீடு செய்யக்கூடிய அளவில் உயர் விளைச்சலைத் தந்தன. எனவே இது தொடர்பில் மேலதிக பரிசோதனைகள் தேவையாக உள்ளன.

APSIM ORYZA உடன் சேர்ந்து பயிர்த் தூண்டல் மற்றும் மாதிரியாக்கல் அணுகுமுறை (SAARC - அவுஸ்திரேலியா செயற்றிட்டம்)

இத்திட்டமானது அவுஸ்திரேலிய SAARC இன் நிதியுதவிடன் தெற்காசியப் பிராந்தியங்களில் நீர் மூலங்களின் பேண்தகு பயன்பாடு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்து வதற்காக பயிர்த் தொகுதிகளின் மாதிரி யாக்கல்களின் கொள்ளளவை விருத்தி செய்யும் நோக்குடன் இடம் பெற்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இச் செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கம் ILla விவசாயச் சூழலியல் பிராந்தியங்களில் மழையை நம்பிய நெற் செய்கைக்குப் பொருத்தமான விதைப்புத் திகதியைத் தீர்மானிப்பதாகும். நீர்ப்பாசனப் பிரதேச நெல் விளைச்சலுடன் ஒப்பிடும் போது (5 தொன் / ஹெக்) மழையை நம்பிய பிரதேசங்களில் விளைச்சலானது (3 தொன் / ஹெக்) அதிக வேறுபாட்டைக் காட்டியது. இதற்குக் காரணம் மழையை நம்பிய சூழல் தொகுதிகளில் நெற் செய்கைகைக்கான நீரானது அவதிக் காரணியாக மாறி வருகின்றமை ஆகும். பசளைப் பிரயோகம், களை முகாமைத்துவம் மற்றும் ஏனைய பயிராக்கவியல் நடவடிக்கைகள் மழை வீழ்ச்சியின் அளவு மற்றும் பரம்பல் ஆகியவற்றில் தங்கிக் காணப்பட்டு நெல் விளைச்சலைத் தீர்மானிப்பதால் விதைப்பிற்குரிய நேரமானது இவற்றுடன் இணைந்து காணப்படுகின்றது. எனவே. இப் பரிசோதனை யானது APSIM ORYZA மாதிரியால் மதிப்பிடப் படுவதற்காக பெரும்போகத்தில் மழைவீழ்ச்சியின் கீழ் 3 நெல் வர்க்கங்களுடன் (Bg366- 3 ½ மாதம், Bg 300- 3 மாதம், மற்றும் Bg 250 – 2 ½ மாதம் ஆகிய வர்க்கங்களில்) மிகவும் பொருத்தமான விதைப்புத் திகதியைத் தீர்மானிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டது. வயல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட RRDI (ILla பிராந்தியம்) இன் பயிர்த் தகவல்கள் (2 பருவம்) மண் தரவுகள் மற்றும் காலநிலைத் தரவுகள் (30 வருடங்கள்) என்பன பெறப்பட்டன. இம் மாதிரியானது படிவகுக்கப்பட்டு சேகரிக்கப் பட்ட தரவுகளுடன் மதிப்பிடப்பட்டது. பின்பு செப்ரம்பர் முதலாம் திகதி தொடக்கம் ஜனவரி 15ஆம் திகதி வரையும் உள்ள 7 நாள் இடைவெளியில் வருகின்ற 18 விதைப்புத் திகதிகளுடன் ஒப்பிட்டுப் பொருத்தமான விளைச்சல் முடிவுகளின் படி ILla பிராந்தியங்களில் பெரும்போகக் காலங்களில் நெல் விதைப்பிற்கான சிறந்த காலமாக பின்வருவன பெறப்பட்டன. Bg 366 (சராசரி விளைச்சல் 2.8 தொன் / ஹெக் மற்றும் உச்ச விளைச்சல் 4.5 தொன் / ஹெக்) – ஒக்டோபர் முதலாம் வாரம்: Bg 300 (சராசரி விளைச்சல் 1.6 தொன் / ஹெக் மற்றும் உச்ச விளைச்சல் 2.4 தொன் / ஹெக்) – ஒக்ரோபர் இரண்டாவது வாரம்: Bg 250 (சராசரி விளைச்சல் 0.8 தொன் / ஹெக் மற்றும் உச்ச விளைச்சல் 1.3 தொன் / ஹெக்) ஒக்ரோபர் மூன்றாவது வாரம் என்பன ஆகும்.

இலங்கையின் பிரதான உணவின் தன்னிறைவை அதிகரிப்பதற்கான நெல் உற்பத்தித் தொழில்நுட்ப விருத்தி (AFACI கொரியன் செயற்றிட்டம்)

இத்திட்டத்தின்கீழ் உவர்த் தன்மையுள்ள பிரதேசங்களில் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற் கான நெல் உற்பத்தித் தொழில்நுட்பம் ஒன்றை அடையாளம் காணும் நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது. கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் நிதியுதவியுடன் இச் செயற்திட்டம் இடம் பெற்றது. முக்கிய ஆய்வாளர்களின் சந்திப்பு 2012 செப்ரெம்ரில் இடம் பெற்றதுடன் தொழில்நுட்பத் திட்டமானது வெளிப்படுத்தப் பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப் பட்டது. கள வேலைகள் நடாத்துவதற்குரிய இடமாக புத்தளம் மாவட்டம் இனங்காணப்பட்டது. அத்துடன் முதற்கட்ட சந்திப்பு ஒக்டோபரில் நடாத்தப்பட்டு, களச் செயற்பாடுகள் தொடர்பில் கள அலுவலர்களுக்குத் தகவல்கள்

வழங்கப்பட்டது. உவர் பிரதேசங்களில் மண் மாதிரிகளின் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களில் நெல் உற்பத்தி ஊக்குவிப்பு (LCWZ - செயற்றிட்டம்)

இலங்கையின் தாழ்நில ஈரவலயப் பிரதேசங் களில் நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் விவசாய அமைச்சின் நிதியுதவியுடன் இச் செயற்றிட்டம் இடம் பெறுகின்றது. தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களில் (LCWZ) கடந்த பல தசாப்தங்களாக நெல் உற்பத்தியானது குறைவான (2 - 2.5 தொன் / ஹெக்) நிலைமை யிலேயே மாறாதுள்ளது. இதற்கு உயிர்ப்புள்ள மற்றும் உயிர்பற்ற காரணிகளான உவர்த் தன்மை, இரும்பு நஞ்சாக்கம், வெள்ள நிலமை, பொக் மண், களைத் தாக்கம் etc... என்பன முக்கிய காரணிகளாக உள்ளன. மேலும் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் விதை கிடைக்கும் தன்மையானது இப்பிரதேசங் களில் மிகவும் குறைவு ஆகும். இதனால் விவசாயிகள் மிகவும் குறைந்த விளைவுடைய வர்க்கங்களையே பயிரிடுகின்றனர். எனவே இப்பிரதேசங்களில் நெற் செய்கையானது பிரதியுபகாரங்கள் எதையும் எதிர்பார்க்காத நிலையிலேயே இடம் பெறுகின்றது. இதன் காரணமாக இப்பிரதேச விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக LCWZ இல் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இச் செயற்திட்டமானது LCWZ பிராந்தியங்களில் உள்ள 7 மாவட்டங்களில் (மாத்தறை, காலி, களுத்துறை, கம்பகா, கொழும்பு, இரத்தினபுரி, மற்றும் கேகாலை) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓர் ஆரம்ப நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பிரச்சினையுள்ள நில அமைப்புத் தொகுதிகளை இனங் காண்பதற்காக நில இயல்பாக்கம் மற்றும் பாகுபாடு தொடர்பான கற்கை மேற்கொள்ளப் பட்டது. இப்பிரதேச விவசாயிகளின் நெல் உற்பத்தியானது எதுவித எதிர்பார்ப்புகளும் இன்றி இடம் பெறுவதுடன் 50% விவசாயிகள் இதை ஒரு பகுதி நேரத் தொழிலாக மேற்கொள்கின்றமையையும் ஆய்வு முடிவுகள் தெளிவுபடுத்தின. இங்கு நெல் உற்பத்தியானது 2.5 – 3.0 தொன் / ஹெக் ஆக வேறுபட்டுக் காணப்படுகின்றது. குறைவான நெல் உற்பத்திக்கு பின்வரும் பிரச்சினைகள் காரணமாகும். அவை: அதிகளவிலான நீர், இரும்பு நஞ்சாக்கம், உவர்த்தன்மை, பொக் மண், மணல் மண், மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் தரமான விதைகள் குறைவாக கிடைக்கின்ற தன்மை என்பவை யாகும். இவ் விவசாயிகளின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் வினைத்திறன் மற்றும் இணைந்த தொழில்நுட்பங்களுடன் கூடிய பொதியானது இச் செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த தொழில்நுட்பப் பொதியானது 15 வேறுபட்ட வர்க்கங்கள், 10500 பரசூட் தட்டுக்கள், 700 இலை வர்ண அட்டவணைகள், 35 சிறிய நுணுக்குக் காட்டிகள் (மடல் சிற்றுண்ணிகளை அவதானிப்பதற்கு) மற்றும் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி இருந்தது. செய்து காட்டல்கள் இடம் பெற்ற வயல்களில் நெல் உற்பத்தி மட்டமானது சராசரியாக 3 தொன் / ஹெக் ஆகக் காணப்பட்டது. உற்பத்திச் செலவைக் குறைத்தல் மற்றும் உற்பத்தி மேம்பாட்டை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் இவ் வயல் நிகழ்ச்சியானது 2012 / 2013 பெரும் போகத்திலும் தொடரப்படவுள்ளது. இச்செயற் திட்டமானது மாகாண விவசாயத் திணைக்களம் மற்றும் ஏனைய விவசாயத் திணைக்கள நிறுவனங்களுடன் இணைந்து நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஆராய்ச்சிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சிகள் (RFD செயற்திட்டம்)

ஆராய்ச்சிப் பண்ணைகளில் உற்பத்தி மற்றும் வருமானம் என்பன மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், மட்டுப்படுத்தப்பட்ட

மனிதவளம், மற்றும் குறைவான பண்ணை இயந்திரங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. இதனால் ஆராய்ச்சிப் பண்ணைகளில் தரமான விதை உற்பத்தியானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே RRDI தொகுதியில் உள்ள ஆராய்ச்சிப் பண்ணைகளின் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாயத் திணைக்களத்தின் ஊடாக விவசாய அமைச்சுக்கு ஓர் செயற்திட்ட முன்மொழிவு கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக ரூபாய் 9.46 Mn, RRDI தொகுதியின் அபிவிருத்தி வேலைகள் மற்றும் விதை உற்பத்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி யானது RRDI பத்தலகொட, RRRDC போம்புவெல, RRS பெந்தோட்டை, RRS லபுதுவை, RRS அம்பலந்தொட்ட, RRS சம்மாந்துறை, RRS பரந்தன், மற்றும் RRS முருங்கன் ஆகியவற்றுக்கு முறையே Rs 246, 2.0, 0.25, 0.31, 0.25, 1.37, 2.0, 1.0, Mn என்ற அளிவில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சி என்பவற்றுக்காக வழங்கப்பட்டது.

முன் மொழியப்பட்ட 5 செயற்திட்டங்கள் பின்வருமாறு: விதை நெல் உற்பத்திக்கான நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துதல் (Rs 2.67Mn) நில அபிவிருத்தி (Rs 0.65 Mn) உட்கட்டமைப்பு அபிவிருத்தி (Rs 1.4 Mn) விதையுற்பத்தி (Rs 4.34Mn) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் கொள்வனவு (Rs 0.43 Mn) மற்றும் நிருவாகம் (Rs 0.25 Mn) என்பன ஆகும். முதற் கட்ட நிகழ்ச்சியின் கீழ் 325m நீளமான நீர்ப்பாசனக் கால்வாய்களின் நிர்மாணம், நீர் இறைக்கும் இயந்திரங்களின் நிர்மாணத்திற்குரிய இரு அறைகள் (Pump hunses) 3 டீசல் நீர் இறைக்கும் இயந்திரங்களின் கொள்வனவு மற்றும் அதற்குரிய இரண்டு அறைகள் என்பன அடக்கப்பட்டு உள்ளன. நில அபிவிருத்தியின் கீழ், 17 ஏக்கர் நிலத்தை மட்டப்படுத்துதல், 60m நீளமுடைய மற்றும் 350m நீளமுடைய வேலி அமைத்தல் என்பன முன்மொழியப்பட்டன. எனினும் சில செயற்பாடுகள் தொழில்நுட்பப் பிரச்சினைகளால் தாமதமடைந்துள்ளன.

அடிப்படை விதை உற்பத்தி நிகழ்ச்சியின் கீழ் 29.5 நிலப்பரப்பு நெற் செய்கைக்காக முன்மொழியப்பட்டது. ஆனால் பயிர்ச் செய்கைப் பருவத்தின் போது ஏற்பட்ட உலர் காலநிலை மற்றும் நீர் பற்றாக்குறையின் காரணமாக செய்கை பண்ணப்பட்ட ஒரு பகுதி பாதிக்கப் பட்டதனால் 21.5 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே அறுவடை மேற்கொள்ளப்பட்டது. 2012 சிறுபோகத்தின் போது 33.6 தொன் அத்திவார மற்றும் வர்த்தக விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல்லில் ஒரு குறிப்பிட்ட வீதம் விதை நெல் உற்பத்திக்காக விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளிடையே வினியோகிப்பதற்காக பண்ணை பிரிவுக்கு வழங்கப்பட்டது. மிகுதி ஆராய்ச்சி நிலையங்களின் விற்பனைக் கூடங்களின் ஊடாக விதை நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது.

உயிர்ப்பற்ற தகைப்பு, வெள்ளை நிலமை, உவர்த்தன்மை இரும்பு நஞ்சாக்கம், வறட்சியைத் தாங்கும் தன்மை ஆகியவற்றுக்கான நெல் வர்க்கங்களின் விருத்தி (NARP- உயிர்ப்பற்ற தகைப்பு)

இச்செயற்திட்டத்தின் முக்கிய நோக்கம் நமது நாட்டில் செய்கை பண்ணப்படும் பிரபல்யமான நெல் வர்க்கங்களில் உயிர்ப்பற்ற தகைப்பிற்கான சகிப்புத் தன்மையை கலத்தல் ஆகும். RRDI வெள்ள நிலமை, உவர்த்தன்மை மற்றும் வறட்சியைத் தாங்கும் தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதேவேளை RRRDC போம்புவெல ஆனது இரும்பு நஞ்சாக்கத்திற் கெதிராகவும், RRS அம்பலாந்தொட்டை யானது உவர்த்தன்மை சகிப்புத் தன்மைக்கு எதிராகவும் தமது செயற்பாடுகளை முன்னிலைப்படுத்து கின்றன. 2012ஆம் ஆண்டில் நிறுவனக் கொள்ளளவானது பத்தலகொடையில்

தெரிவுக்கான (வெள்ள நிலமை) வசதிகளை அபிவிருத்தி செய்து தரமுயர்த்தப்பட்டது. அத்துடன் இரும்பு நஞ்சாக்கத்திற்கு எதிரான வர்க்க விருத்தியில் போம்புவெல செயற்பட்டது. மேலும் அத்தியவசியமான உபகரணங்களின் கொள்வனவும் இடம் பெற்றது. இவை அனைத்தும் NARP இல் இருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் இடம் பெற்றது. இவற்றுக்கு மேலதிகமாக வெள்ள நிலமைக்கான நெறி முறைத் தெரிவு, உவர் நிலை வறட்சி, இரும்பு நஞ்சாக்கம் மற்றும் உவர் நிலை என்பனவும் தரநிர்ணயப்படுத்தப்பட்டன. வெள்ள நிலமை, உவர்த் தன்மை, வறட்சி, மற்றும் இரும்பு நஞ்சாக்கம் போன்றவற்றுக்கான பெற்றோர் அன்பளிப்பு வம்சாவழிகள் இனங்காணப்பட்டு F_1 சந்ததிகள் மற்றும் பின்முகக் கலப்புக் குடித்தொகைகள் ஆகியவற்றைப் பெறுவதற்காக Bg358, Bg360, Bg379/2, Bg96-741, Bg250 மற்றும் Bg 363 ஆகிய பிரபல்யமான வர்க்கங்களுடன் வினைத்திறனுடைய பல கலப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை DNA பிரித்தெடுப்பு, உயர் PCR மற்றும் பின்முகக் கலப்பின விருத்தி நிகழ்ச்சிகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத் தன்மையை அதிகரிப்பதற்குரிய ஜெல்மின்போறசிஸ் (Electrophoresis) என்பன வற்றை மேற்கொள்வதற்காக மூலக்கூற்று உயிரியல் ஆய்வுகூடம் தரம் உயர்த்தப்பட்டது. SSR குறியீட்டாளர் மற்றும் வெள்ளப்படுத்தல் தொட்டி என்பவற்றைப் பயன்படுத்தி வெள்ள நிலமை சகிப்புள்ள தாவரங்கள் உருபவியல் ரீதியாக இனங்காணப்பட்டன. இங்கு மூலக்கூற்று குறியீட்டாளர் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்ட துடன் RRDI இன் வரலாற்றில் முதல் தடவை யாக இது இடம் பெற்றுள்ளது. இலங்கையில் உயிர்பற்ற தகைப்பிற்குள்ளாகும் பிரதேசங்களுக்கான உயிர்பற்ற தகைப்பினைச் சகித்து வளரும் நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக இந்நிகழ்ச்சியானது மேலும் தொடரப்படவுள்ளது.

விவசாயிகளின் வயல்களில் பசளைப் பாவனை வினைத்திறன் தொழில் நுட்பத்தின் இசைவாக்கப் பரிசோதனை (NARP - செயற்திட்டம்)

இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் N, P மற்றும் K பசளைகளின் பாவனை வினைத்திறன் தொடர்பாக RRDI இல் விருத்தி செய்யப்பட்ட இசைவாக்கத் தொழில்நுட்பங்களை விவசாயி களின் வயல் நிலமைகளில் பரிசோதிப்பது ஆகும். நான்கு மாவட்டங்களில் உள்ள (களுத்துறை, பொலன்நறுவை, குருநாகல், மற்றும் அம்பாந்தோட்டை) 21 இடங்களில், 2011 சிறுபோகத்தில் ஆரம்பிக்கப்பட்ட செய்து காட்டல்கள் தொடர்ச்சியாக மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான நிதியுதவி NARP செயற்திட்டத்தின் கீழ் பெறப்பட்டது. நைதரசன் பசளை தொடர்பிலான செய்து காட்டல் முடிவுகளின் படி இலை வர்ண (LCC) அட்டவணை அடிப்படையிலான N பசளை பிரயோகமானது பசளையின் பயன்பாட்டு வினைத்திறனை அதிகரித்திருந்தது. அத்துடன் தற்போது பெறப்படுகின்ற விளைச்சல் ஆனது 30% குறைவான பசளைப் பிரயோகத்தில் பெறக் கூடியதாகவுள்ளதை முடிவுகள் வெளிப்படுத்தின. அத்துடன் பொலநறுவை மாவட்டத்தில் LCC அடிப்படையிலான பசளைப் பிரயோகத்தின் போது தற்போது காணப்படுகின்ற DOA சிபாரிசிலும் பார்க்க 5% விளைச்சல் அதிகரிப்பு கிடைக்கப்பெற்றது. எனவே ஈர மற்றும் உலர் வலயங்களுக்குப் பொருத்தமான புதிய LCC அட்டவணைகள் உருவாக்கப்பட்டு விரிவாக்க உத்தியோகத்தர்களின் கருத்தை அறிவதற்காக அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விவசாயிக ளால் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்ற நெல் வர்க்கங்களில் 21 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட செய்து காட்டல் பரிசோதனை முடிவுகளின் படி பொலநறுவை, மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இரு மாவட்டங்களிலும் ஒன்று விட்ட ஒரு பருவத்திற்குரிய P பசளைப் பிரயோகமானது

தற்போது கிடைக்கின்ற விளைச்சலில் (5 - 6 தொன் / ஹெக்) எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எனினும் களுத்துறை மாவட்டத்தில் 3- 4 தொன் / ஹெக் விலைச்சலே பெறப்பட்டது.

இதன் மூலம் ஒன்றுவிட்ட பருவத்திற்குரிய P பசளைப் பிரயோகமானது விவசாயிகளின் வயல்களில் P பசளையின் அளவை மீதப்படுத்த முடியும். மேற்படி 4 மாவட்டங்களிலும் உள்ள 21 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட K பசளை தொடர்பிலான செய்து காட்டல் முடிவுகளின் படி, அறுவடையின் போது கிடைக்கின்ற வைக்கோலை மீண்டும் வயலுக்கு இடும் போது K பசளைப் பிரயோகத்தை அரைவாசியாகக் குறைத்துப் பிரயோகித்தல் போதுமானது என அறியப்பட்டது. அதாவது விவசாயத் திணைக்களத்தின் தற்போதுள்ள அடிக்கட்டு மற்றும் கதிர்ப் பருவ ஆரம்ப நிலை ஆகிய இரண்டு தடவைப் பசளை பிரயோகத்தை ஒரு தடவை மாத்திரம் (கதிர்ப் பருவ ஆரம்ப நிலை) பிரயோகித்த போது தற்போது பெறப்படுகின்ற விளைச்சலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இம்முறையானது விவசாயிகளின் வயல்களில் K பயன்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கும் K இன் அளவை 50% ஆகக் குறைப்பதற்கும் உதவுகின்றது.

மேற்படி அனைத்துக் கற்கைகளும் அவற்றின் நீண்டகால தாக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக 2012 / 2013 பெரும்போகத்தில் மேற்கூறிய அனைத்து இடங்களிலும் தொடரப்படவுள்ளது.

இலங்கையில் ஈர நெல் விதைப்பின் போது களை நெல்லின் முகாமைத்துவம் (NARP- களை நெல்)

இக்கற்கையின் பிரதான நோக்கம் இலங்கையில் உள்ள விவசாயிகளின் நெல் வயல்களில் களை நெல்லைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஒருங்கிணைந்த தொழில் நுட்பப் பொதியை விருத்தி செய்தலாகும். நெற் பயிருக்கு வினைத்திறனுடைய விதை நடுகை முறை ஒன்றைத் தெரிவு செய்வதை இது உள்ளடக்குகின்றது. இதில்: முளைகட்டிய வித்துக்களை வீசி விதைத்தல், வரிசையில் நடுதல், நேரடியான ஈரவிதைத்தல், மற்றும் நாற்று நடுகை ஆகிய முறைகள் குறிப்பிட்ட நெற் சூழலுக்குப் பொருத்தமான நிலத் தயார் படுத்தல், முறையான பராமரிப்பு முகாமைத்துவ நடவடிக்கைகள், தூய நெல் வித்துக்களின் பயன்படுத்துகை மற்றும் கையால் / இயந்திரத்தால் களை நெல்லை அகற்றுதல் போன்றவற்றுடன் சேர்த்து பரீட்சிக்கப்பட்டது.

களைநெல்லினால் அதிகளவில் தொற்றுக்குட் பட்ட 21 வயல்களில் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டது. அவை அளுத்வெவ, கிறிதல, மாத்தறை, அம்பலாந்தோட்டை, மாவத்தகம, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய இடங்களி லாகும். இங்கு 2011 / 2012 பெரும் போகத்திலும் 2012 சிறுபோகத்திலும் மேற்படி சோதனை இடம் பெற்றது. 12 வயல்களில் பரிசோதனைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன் ஏனைய வயல்களில் வறட்சியின் காரணமாக அவை வெற்றியளிக்கவில்லை. விவசாயிகளின் பயிராக்க வியல் நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது தூய விதை நெல்லின் வரிசை விதைப்பு முறையானது களை நெல்லின் எழுச்சி மற்றும் வளர்ச்சியைக் குறைத்ததுடன் களை நெல்லின் காரணமாக ஏற்படுகின்ற விளைச்சல் இழப்பையும் குறைத்ததை பரிசோதனை முடிவுகள் தெளிவுபடுத்தின. விரிவாக்கல் அலுவலர்கள் மற்றும் முன்னேகரமான விவசாயிகள் போன்றவர்களுக்காக 40 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் நிறைவேற்றப்பட்டன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இலங்கையின் வடமாகாணப் பிரதேசங்களுக்கும் (குறிப்பாக பரந்தன் மற்றும் வவுனியா) விஸ்த்தரிக்கப்பட்டது. நெல் வயல்களில் களை நெல்லின் தொற்றுதலைக் குறைப்பதில் ஒருங்கிணைக்கப்பட்ட தொழில் நுட்ப பொதியானது வெற்றிகரமாகச் செயற்பட்ட தை அனைத்து விவசாயிகளின் வயல் பரிசோதனைகளும் தெளிவுப்படுத்தின.

குருநாகல் மாவட்டத்தில் மழை வீழ்ச்சியின் கீழான நெற் செய்கை வயல்களில் நெல் உற்பத்திக்கான உச்ச நீர்ப் பயன்பாட்டிற்குரிய நீர் கிடைக்கும் தன்மை தொடர்பிலான ஓர் ஆய்வு (NARP மழைவீழ்ச்சி நீர் கிடைக்கும் தன்மை)

மழையை நம்பிய நெற் செய்கைக்குரிய நெல் வயல்களில் நெல் விளைச்சல் இழப்பைக் குறைத்து உச்ச உற்பத்தியைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பயிர்ச் செய்கை நாட்காட்டியுடன் ஒத்துப்போகக் கூடிய பொருத்தமான நெல் வர்க்கத்தைப் பயன்படுத்துவதற்கு நீரின் கிடைப்புத் தன்மையானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதற்காக குருநாகல் மாவட்டத்தில் மழையை நம்பிய நெற் செய்கைக்குரிய வயல்களில் நீரின் கிடைப்புத்தன்மையை அறிதலுடன் நீர்ப்பாசன மற்றும் மழையை நம்பிய நெற் செய்கைக்கான வயல்களைக் கண்டறிதல் ஆகியவை தொடர்பிலான கற்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாதாந்த மழைவீழ்ச்சி மற்றும் அழுத்த ஆவி – ஆவியுயிர்ப்புத் தரவுகளைப் பயன்படுத்தி மழைநீரின் கிடைப்புத்தன்மை கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கூடிய திருத்தத் தன்மைக்காக வருடாந்தத் தரவுகளைப் பெற்றுக் கொள்ளவே திட்ட மிடப்பட்டிருந்தது. உலர், இடை மற்றும் ஈர வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 3 கமநல சேவை நிலையப் பிரிவுகளில் இருந்து (ASC) (மகாநாகேரிய, இப்பாகமுவ, மற்றும் அளவ்வ) மண்ணின் நீர் கிடைக்கும் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. மேற்படி மண் மாதிரிகளின் இழையமைப்பினை அறிவதற்குரிய மண் பகுப்பாய்வு தொடர்கின்றது. நெல் வர்க்கங்களின் பயன்பாடு, விளைச்சல், மற்றும் பயிர் முகாமைத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கான வயல் ஆய்வுகள் 2012 / 13 பெரும்போகம் மற்றும் 2013 சிறுபோகம் ஆகிய பருவங்களில் நிறைவேற்றப்படவுள்ளன.

தொழில்நுட்பப் பரம்பல்

விரிவாக்க அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், விவசாயக் கல்லூரிகள், மற்றும் பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்பத் தேர்ச்சியை வளர்க்கும் நோக்குடன் நெல் உற்பத்தி தொழில் நுட்பப் பிரிவு நிர்மாணிக்கப்பட்டது. RRDI ஆல் உருவாக்கப்படுகின்ற புதிய தொழில்நுட்பங்களை விரைவாக்கப் பரம்பலடையச் செய்வதற்கு இது உதவி புரிகின்றது. இதன் மூலம் நெல் உற்பத்தி அதிகரிக்கப்படுவதன் ஊடாக நாட்டின் உற்பத்தி அதிகரிக்கப்படுதல் நோக்கமாக அமைந்துள்ளது. வதிவிடப் பயிற்சிக்குரிய வசதிகளை வலுப்படுத்துவதற்காக நிலையத்திற்கு அருகிலேயே பூரண இருப்பிட வசதிகளுடன் கூடிய ஓர் புதிய விடுதித் தொகுதி நிறுவப்பட்டுள்ளது. நெல் உற்பத்தித் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு துறை சார் நிகழ்ச்சிகளை RRDI நடத்துவதற்குரிய வசதிகளை இந்நிலையம் வழங்கியது. அட்டவணைப்படுத்தப்பட்ட பயிற்சிகளுக்கு மேலதிகமாக 3 நாள் தகுதி மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை ஒன்று RRDI ற்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்டது.

அட்டவணை 1.4.3 2012ல் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பு

நிகழ்ச்சி வகை	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்குபற்றியோர்களின் எண்ணிக்கை
• விவசாயிகளுக்கான ஒரு நாள் பயிற்சி	27	1494
• விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சிகள் (2 அல்லது 3 நாட்கள்)	02	54
• அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சிகள்	11	376
• அலுவலர்களுக்கான வதிவிடப் பயிற்சிகள் (2 அல்லது 3 நாட்கள்)	10	324
• தனியார் நிறுவனங்களுக்குரிய பயிற்சி	03	92
• பருவகாலம் முழுவதுமான பயிற்சி	02	60
• பாடசாலை மாணவர்கள் டிப்ளோமா பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி	13	567
• மாணவர்களின் வருகைகள்		
• உள்ளீர்ப்புப் பயிற்சிகள் (1-4 மாதம்)	05	14
• ஏனைய பயிற்சிப் பட்டறைகள்	08	210

வெளியீடுகளின் (2148) விற்பனை மூலமாக பெறப்பட்ட வருமானம் ரூபாய் 1,22,030.00 ஆக இருந்தது.

நெல் ஆராய்ச்சி நிலையம் - அம்பலாந்தொட்டை

அம்பலாந்தொட்டை நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை நோக்கமாகக் காணப்படுவது உவர்த் தன்மைக்கான சகிப்பு, உயர் விளைச்சல், தரமான தானியம் மற்றும் குறுகிய வயதுடைய சிவப்பு நிற அரிசியைக் கொண்ட மேம்படுத்தப்பட்ட நெல் வர்க்கங்களை அபிவிருத்தி செய்தலாகும். சிபாரிசு செய்யப்பட்ட "At" நெல் வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதையை உற்பத்தி செய்வதுடன் தரமான தானியப் பண்புகள், நோய் பீடைகளுக்கு எதிர்ப்பினத் தேர்வு, மண் வள முகாமைத்துவம் மற்றும் நெற் செய்கைக்கான பயிராக்கவியல் நடவடிக்கைகள் ஆகியன தொடர்பிலான ஆராய்ச்சிகளையும் மேற்கொள்கின்றது.

வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

கலப்பினப் பிறப்பாக்கம் மற்றும் தெரிவு நிகழ்ச்சிகள்

இந்நிலையத்தின் இளவிருத்தி நிகழ்ச்சிகள் 2012 சிறுபோக காலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலமைகளின் காரணமாக சிறந்த பெறு பேறுகளைக் காண்பிக்கவில்லை. எனினும்

விவசாயிகளின் வயல்களிலும் "பட்டா அத்த" விவசாயப் பூங்காவிலும் VAT நிகழ்ச்சிகள் மற்றும் விதை உற்பத்தி நிகழ்ச்சிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. எட்டுக் கலப்புகள் இடம் பெற்றன. 62 தொகைக் குடித்தொகைகள் மதிப்பிடப்பட்டு அவற்றில் இருந்து 46 மேலதிக மதிப்பீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்டன. விளைச்சல் பரிசோதனைளில் உயர்தர எச்சங்களாக மதிப்பிடப்படுவதற்காக 1510 எச்சங்களில் இருந்து 275 எச்சங்கள் தெரிவு செய்யப்பட்டன.

விளைச்சல் மதிப்பீடு

ஆரம்ப விளைச்சல் பரிசோதனை (PTY) மற்றும் பாரிய விளைச்சல் பரிசோதனை (MYT) ஆகியவற்றில் விளைச்சல் திறனை மதிப்பீடு செய்வதற்காக 26 வம்சாவழிகள் தெரிவு செய்யப்பட்டன.

இசைவாக்கப் பரிசோதனைகள்

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகளில் (NCVRT) புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட 6 வம்சாவழிகள் (At 08-593, At 08-617, At 09-648, At 09-854, At 09-861, At 09-1078) மேலதிகமாகப் பரீட்சிக்கப் பட்டன. அத்துடன் வர்க்க இசைவாக்க பரிசோதனைகள் (VAT) மாத்தளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள 13 வெவ்வேறு இடங்களில் இரண்டு பருவங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. VAT நிகழ்ச்சியில் At 07-800, At 07-695 மற்றும் At 06-631 ஆகிய வர்க்கங்கள் அவற்றின் இசைவாக்கத் தன்மையை அறிவதற்காக மேலதிக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன. மூன்று வம்சாவழிகள் VAT நிகழ்ச்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, At 05-1382, At 06-650 மற்றும் At 06-486 ஆகியவை பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கச் சோதனை களில் (LSVAT) மேலதிக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன.

தானியத் தரத்தின் நிலைமைகள்

சமைக்கும் தரம் பற்றிய கற்கை ஒன்றில் உயர் (At 307, At 303 மற்றும் At 593) இடைத்தர (Bg 403, At 362 மற்றும் At 396) மற்றும் குறைந்த (Bg 403, At 362 மற்றும் At 405) ஆகிய மூன்று வித ஜெலற்றினாக்க வெப்பநிலை தொகுதிக் குரிய ஒன்பது நெல் வர்க்கங்கள் பயன்படுத்தப் பட்டன. ஒவ்வொரு தொகுதியிலும் பழைய, நடுத்தர மற்றும் தற்கால வர்க்கங்கள் முறையே இடைத்தர உருளை (IB) நீண்ட நடுத்தர (LM) மற்றும் நீண்ட மெல்லிய (LS) ஆகிய தானிய வகைகளைக் கொண்டிருந்தன. ஆயிரம் தானியங்களின் திணிவு, அரிசியின் சமைத்த பின்பு உள்ள திணிவிலோ அல்லது கனவள விலோ எதுவித மாற்றத்தையும் காண்பிக்க வில்லை. ஆனால் ஜெலற்றினாக்க வெப்பநிலை யானது (GT) அரிசியுடன் சேர்க்கப்படுகின்ற நீருடன் சமைத்த பின்புள்ள நிறை, களவனவு, மற்றும் சமைக்கும் நேரம் என்பவற்றில் தாக்கத்தை உண்டு பண்ணியது.

சிறந்த பொதியாக்கல் திறனுடைய தானிய வகையானது அதிக பச்சை அரிசி நிறையைக் கொடுத்ததுடன் அதற்குரிய GT தொகுதியில் அதிக சமைத்த பின்பான நிறையையும் கொடுத்தது. தானியத்தின் பரிமாணங்களில் அவதானிக்கப்பட்ட தானிய நீட்சியானது அதற்குரிய GT தொகுதியில் எதுவித ஒழுங்கமைப்பையும் பின்பற்றவில்லை. ஒவ்வொரு தானிய வகை மற்றும் GT தொகுதி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனேக வர்க்கங்கள் தொடர்பிலான மேலதிக கற்கைக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தவிடு நீக்கப்படாத அல்லது கபில நிற அரிசியில் காணப்படுகின்ற வெளித் தவிட்டுப் படையின் காரணமாக அதில் உள்ள நார், இரும்பு, உயிர்ச்த்துக்கள் மற்றும் கனிப்பொருட்களின் அளவுகள் அதிகமாகும். ஆனால் தீட்டிய அரிசியுடன் ஒப்பிடும் போது இவற்றின் விரும்பியுண்ணும் தன்மை குறைவு ஆகும். முளைக்கவிடப்பட்ட கபில அரிசியானது அதிக விரும்பியுண்ணும் தன்மையை அதிகரிக்கின்றது. இரண்டு நெல் வர்க்கங்களின் தீட்டிய சிவப்பரிசி (At 362, At 353), இரண்டு வெள்ளை அரிசி நெல் வர்க்கங்கள் (At 354, At 307), ஆகியவை கபில அரிசியுடன் சேர்த்து முளைக்க விடப்பட்ட அரிசியில் புலன் உணர்வுத் தரத்தை மதிப்பீடு செய்வதற்கான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள ப்பட்டது. முளைக்கவிடப்பட்ட தவிடு நீக்கிய அரிசியிலும் பார்க்க சிவப்பு நெல் வர்க்கங்களின் கபில நிற அரிசியானது தோற்றத்தில் உயர் தரத்தைக் கொண்டிருந்தது. எனினும் முளைக்க விடப்பட்ட அனைத்து நான்கு வர்க்கங்களினதும்

கபில நிற அரிசியானது சுவைக்குரிய பண்பில் கபில அரிசியிலும் பார்க்கச் சிறந்ததாகக் காணப்பட்டன.

தொழில்நுட்பப் பரம்பல்

- பல்கலைக்கழகப் பட்டப் படிப்பு மாணவர்களில் இறுதி ஆண்டு ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் மேற்பார்வை (2 பேர்)
- இலங்கை விவசாயக் கல்லூரி மாணவர்களின் டிப்ளோமாக் கற்கை நெறியின் ஒரு பகுதிக்குரிய பயிற்சி
- DOA விரிவாக்கல் உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்த பயிர்ச் சிகிச்சை முகாமில் கலந்து கொள்வதற்காக இந்நிறுவனத்திற்கு வருகை தந்த பல்கலைக்கழக மாணவர்கள், DOA இன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் விவசாயிகளுக்கு தகவல்களை வழங்குவதற்கான வளவாளர்களாகக் கலந்து கொண்டமை.
- மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை பிஸ்கட் நிறுவனத்தினால் (CBL) பிஸ்கட் உற்பத்தி செய்வதற்கு At 05-1382 எனும் வர்க்கம் ஓர் சிறந்த வர்க்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் CBL இன் வேண்டுகோளுக்கு இணங்க அவ்வர்க்கத்தின் விதை நெல் வழங்கப்பட்டது.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி நிகழ்ச்சி

சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் வேண்டுகள் பெறப்பட்ட அளவில் உற்பத்தியாளர் விதை, தேசிய விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சிக்காக உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 1.4.4 2012 இல் உற்பத்தியாளர் விதை உற்பத்தி

வர்க்கம்	உற்பத்தியாளர் விதை அளவு (Kg)		மொத்தம்
	பெரும் போகம் 2011 / 12	சிறு போகம் 2012	
3 மாதம்			
At 307	100	160	260
At 308	40	100	140
3 ½ மாதம்			
At 353	20	40	60
At 362	180	320	500
மொத்தம்	**340**	**620**	**960**

நெல் ஆராய்ச்சி நிலையம் - சம்மாந்துறை –

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்படுவது கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நெல் உற்பத்தியுடன் தொடர்புடைய அறிவுசார் இடைவெளியை அடையாளங்காணுதல் மற்றும் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் என்பனவாகும். சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைகள், இப்பிரதேச விவசாயிகளின் நெல் வயல்களில் உள்ள பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கண்டறிதல் ஆகியவையும் இந்நிறுவனத்தின் பொறுப்புக்கள் ஆகும்.

நெல் வர்க்க மேம்பாடு

முன்றரை மாத வயது நெல் இனவிருத்தி நிகழ்ச்சி

முக்கியமாக குறுகிய கால முதிர்ச்சியுடையதும் மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடியதுமான நெல் வர்க்கங்களில் விருத்தி மற்றும் மேம்பாடு தொடர்பிலான ஆராய்ச்சி முயற்சிகள் தொடரப் பட்டன. இதன் போது தானிய விளைச்சல், தானியத்தின் தரம், மற்றும் நோய் எதிர்ப்பு ஆகிய இயல்புகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. பதின்நான்கு பெற்றோர் வம்சாவழிகள் இந்நிகழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டதுடன் அவற்றின் எச்சங்கள் அவை வெளிப்படுத்திய அடைவுகளின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டன.

கலப்பின நெல் உற்பத்தி நிகழ்ச்சி

புதிதாக விருத்தி செய்யப்பட்ட கலப்பின நெல் வர்க்கம் (Bg 407 H) இரு இடங்களில் பரிசோதிக்கப்பட்டன. இதன் போது சாதாரண உயர்விளைச்சலைத் தருகின்ற நெல் வர்க்கங்களிலும் பார்க்க 28% இலும் கூடிய விளைச்சலாக 8.5 தொன் / ஹெக் ஐ சராசரியாகத் தந்தது.

களை முகாமைத்துவம்

பல்வேறு வகையான களை நாசினிகள் நான்கு இடங்களில் உள்ள விவசாயிகளின் வயல்களில் அவற்றின் வினைத்திறனைக் கண்டறிவதற்காக பரிசோதிக்கப்பட்டன. அவையாவன 08 பரிகரணங்கள் (T_1 பிஸ்பைறிபக் - சோடியம் 100g/L SC, T_2 - 3, 4 –DP A (புறோப்போனில் 360 g/L EC) மற்றும் - MCPA 60 3000 ML/ ac + 800 ml ac, T_3 - பிறிரிலக்குனர் 300g/L EC, T_4 பெரினாக்கிப்றேப் P எதைல் 69g/L OD, T_5 சைக்கலபொப் - பியுற்றைல் 100g/L OD, T_6 கையால் களை அகற்றுதல் T_7 கட்டுபாடு) ஆகியவை ஆகும். கையால் களை கட்டல் பரிகரணத்தில் (T_6) உயர் விளைச்சல் (5.8 தொன் / ஹெக்) கிடைத்தது. பிறிரிலக்குனர் 300 g/L EC எனும் பரிகரணத்திலும் (T_3) மேற்படி உயர்விளைவு கிடைத்தது.

பயிராக்கவியல்

விவசாயிகளின் வயல் மற்றும் ஆராய்ச்சி நிலைய வயல் ஆகிய இரு இடங்களிலும் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகள் (NCRVT) வர்க்க இசைவாக்க பரிசோதனைகள் (VAT) மற்றும் பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கப் பரிசோதனை கள் (VAT) ஆகியவை நடாத்தப்பட்டன. பெரிய அளவிலான கலப்பின நெல்லின் இசைவாக்கம் தொடர்பான கற்கைகள் 10 இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனைகள் (NCRVT)

(NCRVT) நிகழ்ச்சிகள் 2 ½ , 3 ½ மற்றும் 4 ½ மாத முதிர்ச்சியுடைய நெல் வர்க்கங்களில் 2012 சிறுபோக காலப் பகுதியில் நடாத்தப் பட்டன. ஏழு 2 ½ மாத வயதுடைய புதிய வம்சாவழிகள், 3 ½ மாத வயதுடைய 4 புதிய வம்சாவழிகள் மற்றும் 4 – 4 ½ மாத வயதுடைய 3 புதிய வம்சாவழிகள் நியம சோதனை வர்க்கங்களுடன் ஆராய்ச்சியாளர் களின் பூரண முகாமைத்துவ நிலமைகளின் கீழ் பரிசோதிக்கப்பட்டன.

வர்க்க இசைவாக்கச் சோதனை நிகழ்ச்சிகள் (VAT)

அம்பாறை மாவட்டத்தின் 8 இடங்களில் 2012 சிறுபோகப் பருவத்தில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகள் (3 ½ மாத வயது வகுப்பு) நடாத்தப்பட்டன. மேலும் அம்பாறை மாவட்டத்தின் 6 இடங்களில் 3 மாத மற்றும் 3 ½ மாத வயது வகுப்பு நெல்லினங்களில் மேற்படி பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கப் பரிசோதனை நிகழ்ச்சிகள் (LSVAT)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள இரு இடங்களில் 2011 / 2012 பெரும் போகக் காலப் பகுதியில் Bg - 300 எனும் சோதனை வர்க்கத் துடன் தொன்று தொட்டுப் பாவனையில் உள்ள ஓர் உன்னதமான வம்சாவழி (At 07-800) பரிசோதிக்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரம்பல்

நெற் செய்கையில் விதை நெல் பயன்பாட்டு வீதம், மடல் மற்றும் இலை உண்ணியின் கட்டுப்பாடு, மண் வள முகாமைத்துவம், மற்றும் அறுவடைக்குப் பின்னான கையாளுகை போன்றவற்றுடன் தொடர்புடைய மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கும் நோக்குடன் நான்கு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அடிப்படை விதை உற்பத்தி

குறைந்த வழங்கலுடைய சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களில் வர்த்தக விதை உற்பத்தி நிகழ்ச்சி தொடரப்பட்டது. மிகவும் குறைந்த வயதுடைய நெல் வர்க்கம் (Bg 250) மற்றும் ஏற்றுமதித் தரங்களை அதிகளவில் கொண்டுள்ள (Bg 357) நெல் வர்க்கம் ஆகியவற்றில் விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சி ஆகிய புதிய நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. (Bg 357) நெல் வர்க்கத்தில் ஏறக்குறைய 500 புசல் தரமான விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. ஆராய்ச்சிப் பண்ணை அபிவிருத்திச் செயற்திட்டத்தில் 2012 சிறு போகப் பருவத்தில் ஒன்பது ஏக்கர் நிலப்பரப்பில் அடிப்படை விதை உற்பத்தி நிகழ்ச்சி ஒன்று இடம் பெற்றது.

அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச நெல் வயல்களில் களைநெல்லின் முகாமைத்துவம் (NARP செயற்திட்டம்)

அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச விவசாயிகளிடையே களைநெல் தொடர்பான அறிவு ஒரு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடன் அம்பாரை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் உள்ள ஆறு இடங்களில் இலாபகரமான மற்றும் பேண்தகு நெற்செய்கை ஆகிய இணைந்த குறிக்கோள்களுடன் கூடிய களைநெல் முகாமைத்துவம் தொடர்பிலான செய்து காட்டல்கள் இடம் பெற்றன. இதன் போது 140 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அலுவலர் பட்டியல்

RRDI பத்தலகொடை

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
மேலதிக பணிப்பாளர்	01
உதவிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	20
விவசாயப் பொருளியலாளர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	07
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	19
ஆராய்ச்சி உதவியாளர்	09
ஆராய்ச்சி உப உதவியாளர்	06
முகாமைத்துவ சேவை உதவியாளர்	13
அலுவலக உதவியாளர்	01
இயந்திர இயக்குனர்	03
தச்சன்	01
பார ஊர்தி சுத்திகரிப்பாளர்	01
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
சாரதி	08
காவலாளி	07
தொழிலாளி (நிரந்தரம்)	47
தொழிலாளி (அமையம்)	90
மொத்தம்	**248**

RRDI அம்பலாந்தொட்டை

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	04
விவசாயப் போதனாசிரியர்	02
ஆராய்ச்சி உதவியாளர்	05
உப ஆய்வு கூட உதவியாளர்	02
முகாமைத்துவ சேவை உதவியாளர்	01
சாரதி	02
காவலாளி	01
உழவு இயந்திர இயக்குனர்	01
தொழிலாளி (நிரந்தரம்)	16
தொழிலாளி (அமையம்)	21
மொத்தம்	**54**

RRS சம்மாந்துறை

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி அலுவலர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி அலுவலர்	01
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாயப் போதனாசிரியர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	01
உப ஆய்வு கூட உதவியாளர்	02
பொது முகாமைத்துவ சேவை உதவியாளர்	02
காவலாளி	02
தொழிலாளி (நிரந்தரம்)	03
தொழிலாளி (அமையம்)	22
மொத்தம்	**33**

1.4.1 பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRRDC), போம்புவளை

போம்புவெல பிராந்திய நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது (RRRDC) அதன் இணை ஆராய்ச்சி நிலையங்களான லபுதுவ மற்றும் பெந்தோட்டை ஆகியவற்றுடன் இணைந்து தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களின் தேவையை நிறைவேற்றுகின்றது. போம்புவெல RRRDC ஆனது மண் பிரச்சினை நிலமைகளை குறிப்பாக இரும்பு நஞ்சாக்கத்தைத் தாங்கி வளரக்கூடியதும் உயர் விளைச்சல் தருக்கின்றதுமான சிவப்பு மற்றும் வெள்ளை நிற அரிசி வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதனை தலையாய பொறுப்பாகக் கொண்டுள்ளது.

பாதீடு

அட்டவணை 1.4.1.1: வருடாந்தப் பாதீடு - 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மூலதனம்	1,175,816	1,175,816	100
மீண்டுவரும் செலவு	11,569,228	10,528,288	91
வெளிநாட்டுச் செயற்றிட்டங்கள்			
ANSOFT	75,000	75,000	100
மொத்தம்	**17,374,492**	**16,329,116**	**94**

முன்னேற்றம்

நெல் வர்க்கம் விருத்தி நிகழ்ச்சி

புதிதாகச் சபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள்

- இலங்கையில் பொதுவான நெற் செய்கைக்காக 2012 ஆம் ஆண்டு வெள்ளை நிற அரியை உடைய 3 ½ மாத முதிர்ச்சித் தொகுதிக்குரிய சம்பா வர்க்கம் ஒன்று BW367 என்னும் பெயரில் விடுவிக்கப்பட்டது. மேற்படி BW367 வர்க்கத்தின் சராசரி விளைச்சல் 5 தொன் / ஹெக் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்க பரிசோதனை நிகழ்ச்சிக்காக (NCRVT) BW 03-1198 எனும் பெயருடைய, வெள்ளை நிற அரிசியுடைய புதிய உன்னதமான சம்பாத் தெரிவு ஒன்று 2012 / 2013 பெரும்போகத்தில் பிரேரிக்கப்பட்டுள்ளது. இது 3 ½ மாத கால முதிர்ச்சியுடையதும், நடுத்தர உருளை வடிவ அரிசியை உடையதுமான நெல் வர்க்கம் ஆகும்.

- BW 05-1621 உட்பட ஏனைய உன்னதமான தெரிவுகள் 2012 / 2013 பெரும்போகத்தில் விவசாயிகளின் ஏற்றுக் கொள்ளும் தன்மையை மதிப்பிடும் நோக்கில் பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கச் சோதனைக்குப் (LSVAT) பரிந்துரைக்கப்

பட்டுள்ளது. இது சிவப்பு நிற நடுத்தர பருமனுடைய, உருளை வடிவ அரிசியைக் கொண்ட ஒரு வம்சாவழி ஆகும்.

இனவிருத்தி நிகழ்ச்சி

- நாலு தொடக்கம் நாலரை மாத Kரிர்ச்சித் தொகுதியில் இருந்து, பாரிய விளைச்சல் சோதனைக்காக (MYT) மூன்று வம்சாவழிகள் தேர்வு செய்யப்பட்டன. ஆரம்ப விளைச்சல் பரிNrhjidf;காகவும் (PYT) MYT காகவும் 3 ½ மாத முதிர்ச்சித் தொகுதியில் இருந்து 18 வம்சாவழிகள் தேர்வு செய்யப்பட்டன. மூன்று மாத மற்றும் 85 நாட்கள் முதிர்ச்சித் தொகுதிகளில் இருந்து முறையே 3 வம்சாவழிகள் மற்றும் 5 வம்சாவழிகள் MYT காக தேர்வு செய்யப்பட்டன.
- வர்க்க இசைவாக்க பரிசோதனை (VAT) மற்றும் NCRVT நிகழ்ச்சிகள் ஈரவலயப் பிரதேசங்களில் தொடரப்பட்டதுடன் NCRVT நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து 30 வம்சாவழிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. BW -05-1621 அடங்கலாக 5 உன்னதமான வம்சாவழிகள் களுத்துறை, கொழும்பு, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் VAT நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன.

நோய் முகாமைத்துவம்

- போம்புவெல, லபுதுவ மற்றும் அம்பாந்தொட்டை ஆகிய இடங்களில் இருந்து நெல்விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக அபிவிருத்தி செய்யப்பட்ட 160 வம்சாவழிகள் போம்புவெலயில் நெல் எரிபந்த நோய்க்கெதிரான தெரிவுக்குட்படுத்த பட்ட போது அவற்றில் 28 வம்சாவழிகள் எரிபந்த நோய்க்கு எதிர்ப்புடையனவாகக் இனங்காணப்பட்டன.

ரீடை முகாமைத்துவம்

- கபில நிற தாவரத் தத்தி (BPH/ Nilaparvata lugens) மற்றும் கொப்புள ஈ (GM / Oreseolia oryzae) ஆகிய பீடைகளுக்கு எதிராக 69 வம்சாவழிகள் NCRV நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பிரேரிக்கப்பட்டு போம்புவெலவில் தேர்வுக்குட் படுத்தப்பட்டன. அவற்றில் 2 வம்சாவழிகள் ஓரளவு எதிர்ப்புத் தன்மையைக் கொண்டிருந்தன.
- கபில நிற தாவரத் தத்தியின் ஒரு புதிய உயிர் வகைக்கான (Bio type) ஆராய்ச்சி ஒன்று RRRDC போம்புவெலயில் மேற்கொள்ளப்பட்டு உறுதிப் பாட்டுக்காக அக்கற்கை மேலும் தொடரப்படவுள்ளது.
- போம்புவெலயில் இருந்து பெறபட்ட 30 இனவிருத்தித் வம்சாவழிகள் பசுமை வீட்டு நிலமைகளின் கீழ் BPH மற்றும் GM ஆகியவற்றிக்கெதிராகத் தெரிவுக்குட்படுத்தப் பட்டன. அவற்றுள் 8 வம்சாவழிகள் ஓரளவு எதிர்புடையனவாகக் காணப்பட்டன. கடந்த இரண்டு பருவங்களிலும் போம்புவெல வயல்களில் GM தாக்கம் மிகவும் குறைந்தளவில் காணப்பட்டது. இதன் காரணமாக GMற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தேர்வு பரிசோதனை களில் இருந்து எவ்வித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.
- நெல் மடல் சிற்றுண்ணி (RSM / Steneotarsonemus Spinkii) எனப்படும் அண்மையில் இனங்காணப்பட்ட நெற் பீடையானது 90% அளவிலான விளைச்சல் இழப்பினை ஏற்படுத்துகின்றது. இதுவரை பல்வேறு நாசினிகள் RSM ற்கு எதிராகப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. எனினும் புரோபெனோபொஸ் (Profenophos) 50EC மட்டுமே RSM ஐக் கட்டுப்படுத்துவதில் சிறந்ததாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் சூழல் மற்றும் இலக்கு அல்லாத உயிரினங்கள் மீதான பாதமான

விளைவுகளைக் கவனத்தில் கொண்டு புரோபெனோபொஸ் 50ECயானது தற்காலிக மாக RSM ஐக் கட்டுப்படுத்துவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஆகவே சூழலுடன் சினேகிதமான வேறுபட்ட நாசினிகளின் வெவ்வேறு அளவுகள் RSM ற்கு எதிராக வயல் நிலமைகளில் மதிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் பங்கசு நாசினி ஒன்று சிறந்ததாக கண்டறியப் பட்டுள்ளது. முடிவை உறுதிப் படுத்துவதற்கான மேலதிக மதிப்பீடுகள் தேவையாக உள்ளது.

களை முகாமைத்துவம்

வரிசையில் விதைக்கப்பட்ட நெல் வயல்களில் களைக் கட்டுப்பாட்டுத் திறனைத் தீர்மானிக்கும் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன் போது கையால் களை அகற்றுதல், இரசாயனக் களை கட்டுப்பாடு, களைக் கட்டுப்பாடு இல்லாமை, ஆகிய முறைகளுடன் மூன்று பத்திரக் கலவையிடல் பதார்த்தங்கள் பரிசோதிக்கப்பட்டன. வைக்கோல் மற்றும் மரச்சீவல் ஆகியன விதை நெல்லோடு கலந்துள்ள சகல விதமான களைகளையும் நெற் பயிரின் ஆரம்ப வளர்ச்சிப் பருவத்தில் (2WAS) கட்டுபடுத்தும் பத்திரக் கலவைப் பதார்த்தங்க ளாக அடையாளங் காணப்பட்டன.

சிபாரிசு செய்யப்பட்ட களை நாசினிகள் மீளவும் மதிப்பீடு செய்யப்பட்டன. இதன் மூலம் பென்சல்புறோன் (Bensulfuron) மிதைல் + மெற்சல்புறோன் - மிதைல், காபன்றாசோன் - (Carfentrazon) எதைல், மற்றும் MCPA ஆகியன இப்போதும் அகன்ற இலைக் களைகளையும் மற்றும் பூண்டுகளையும் சிறப்பாகக் கட்டுப்படுத்துகின்றன. Lepticholа chinensis மற்றும் Cyperus difformis எனும் பெயருடைய இரு களைகளையும் அசிமெசல்புறோன் (Azimesulfurom) மற்றும் பிஸ்பைறிபக் - சோடியம் WP என்பன சிறப்பாகக் கட்டுப்படுத்தும் தன்மையைக் காட்டின.

மண் வள முகாமைத்துவம்

எப்பாவெல பாறைப் பொசுபேற்றினதும் (ERP) சீமைக்கிழுவையினதும் வேறுபட்ட சேர்க்கைகள் LCWZ நெல் வயல் நிலங்களில் பொசுபரசின் கரை திறன் அதிகரிப்பில் காட்டும் தாக்கத்தை அறிவதற்காகப் பரிசோதிக்கப்பட்டது. RRRDC போம்புவெலையில் மேற்கொள்ளப்பட்ட இப்பரிசோதனை மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக தொடரப்படுகின்றது.

சூழலின் இயற்கைச் சமநிலையைப் பாதுகாக்கும் அதேவேளை நெற் செய்கையில் அளவுக்கு அதிகமான பசளைப் பிரயோகத்தைக் குறைத்து பசளைக்கான செலவைக் குறைக்கும் நோக்குடன் RRRDC போம்புவெலயில் ஓர் மண் பரிசோதனை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. மொத்தமாக 774 மண் மாதிரிகள் பகுப்பாய்வுக்காகப் பெறப்பட்டன. அவை வருமாறு:- காலி, மாத்திறை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் இருந்து LCWZ செயற்திட்டத்தின் கீழ் பெறபட்ட 140 மண் மாதிரிகள், மண் வரைபட செயற்திட்டத்தின் கீழ் பல்வேறு கமநல சேவை நிலையங்களில் இருந்து பெறபட்ட 240 மண் மாதிரிகள், நிலையத்தின் வெவ்வேறு பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட 392 மண் மாதிரிகள், மண் பரிசோதனை அடிப்படையிலான பசளைச் சிபாரிசுக்காகக் பெறப்பட்ட மாதிரிகள் 28 என்பனவாகும். மேற்படி மாதிரிகளில் 557 PH, EC, P, K சேதனப் பதார்த்தம் மற்றும் இழையமைப்பு ஆகியவற்றை அறிவதற்காகப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. பல்வேறு கமநல சேவை நிலையங்களில் இருந்து பெறப்பட்ட மண் மாதிரிகளின் பகுப்பாய்வானது மண்வள இடவிளக்க வேறுபாடு தொடர்பான தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

பயிராக்கவியல்

நெற் பயிர்ச் செய்கையில் ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதியின் முகாமைத்து வம் தொடர்பான கற்கை ஒன்று உறுதிப்படுத்தப்

பட்டுள்ளது. இதன் போது 2 தொன் / ஹெக் கூட்டெரு மற்றும் 4 தொன் / ஹெக் வைக்கோல் பிரயோகமானது இரசாயனப் பசளைகளின் பாவனையை 25% ஆல் குறைத்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

நெற் செய்கையில் இலை வர்ண அட்டவணையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் பட்ட தேவை அடிப்படையிலான நைதரசன் முகாமைத்துவத்தில் 2 தொன் / ஹெக் கூட்டெரு மற்றும் LCC ஐ ஆதாரமாகக் கொண்ட நைதரசன் பிரயோகமானது இரசாயன N பசளைகளின் பாவனையை 25% ஆகக் குறைக்க உதவியது. சேதனப் பசளை உற்பத்தி மற்றும் தரமுயர்த்தல் நிகழ்ச்சியின் கீழ் மொத்தமாக 6000Kg கூட்டெருவும், 840Kg கூட்டெரு உட்புகுத்தியும் உற்பத்தி செய்யப்பட்டது.

தொழில் நுட்பப் பரம்பல்

- மூன்றாம் நிலை மாணவர்கள் அடங்கலாக மொத்தமாக 565 பங்கேற்பாளர்களுக்கு நெற் செய்கை தொடர்பிலான பல்வேறு பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன.
- விவசாயிகளின் வயல்களில் இருந்து மொத்தமாக சேகரிக்கப்பட்ட 600 மண் மாதிரிகள் மண்வள முகாமைத்துவப் பிரிவினால் பகுப்பாய்வுக்குட்பட்டு பரிந்துரை கள் வழங்கப்பட்டன.
- நெற் செய்கை தொடர்பான பல்வேறு துறைகளில் இரண்டு வயல் விழாக்கள், ஐந்து வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- இந்நிலையத்தின் உத்தியோகத்தர்களினால் கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பல்வேறு விடயப் பரப்புகளில் 52 வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

அட்டவணை 4.2.1 உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதையின் அளவு – 2012

வர்க்கம்	உற்பத்தியாளர் விதை அளவு (Kg)		
	பெரும் போகம் 2011 / 12	சிறு போகம் 2011 / 12	மொத்தம்
3.5 மாதங்கள்			
Bw 364	41	41	82
Bw 361	21	21	42
Bw 367	62	82	144
Bw 363		21	21
Bw 267/3		21	21
3 மாதங்கள்			
Bw 272-6b		21	21
மொத்தம்	**124**	**207**	**331**

விசேட கருத்திட்டங்களின் விபரங்கள்

இரும்பு நஞ்சாதல் மற்றும் வெள்ள நிலைமைகளைத் தாங்கி வளரக்கூடிய நெல் வர்க்கங்களின் அபிவிருத்தி (NARP கருத்திட்டம்)

இரும்பு நஞ்சாதல் மற்றும் வெள்ள நிலைமைகளைத் தாங்கி வளரக்கூடிய நெல் வர்க்கங்களைப் பெற்றுக் கொள்ள 6 கலப்புகள் மேற்கொள்ளப்பட்டது. எச்சங்கள் மேலும் தெரிவுக்குட்படுத்தப்படவுள்ளன.

பாரம் பரிய நெல் வர்க்கங்களை ANSOFT கருத்திட்டத்தின் கீழ் இயல்பாக்கம் மற்றும் தூய்மையாக்கம் செய்தல்.

முப்பத்திரண்டு உள்ளூர் வர்க்கங்கள் இயல்பாக்கம் மற்றும் தூய்மையாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், மேற்படி வர்க்கங்களின்

அடுத்த பருவதத்திற்கான பெருக்கமும் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆராய்ச்சிப் பண்ணைகளின் அபிவிருத்திச் கருத்திட்டம்

இரண்டு வயல் விழாக்கள் 248 பேரின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்டன.

தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களில் உற்பத்தி மேம்பாடு (Pf)

விதை நெல் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் மொத்தமாக 4520Kg விதை (அத்திவாரம், பதிவு செய்யப்பட்டவை, அத்தாட்சிப்படுத்தப்பட்டவை மற்றும் வர்த்தக அளவிலானவை) உற்பத்தி செய்யப்பட்டு அரச விதைப் பண்ணைகளுக்கும் தாழ்நில ஈரவலய விவசாயிகளுக்கும் பெருக்கத்திற்காக வழங்கப்பட்டது.

விவசாயிகளின் வயல்களில் பசளைப் பாவனை வினைத்திறன் நுட்பங்களின் இசைவாக்கப் பரிசோதனை (NARP செயற்திட்டம்) களுத்துறை மாவட்டத்தின் 9 இடங்களில் N, P, K மட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இரசாயனங்களின் தேவை அடிப்படையிலான முகாமைத்துவம்: N, P, K ஆகிய இரசாயனப் பசளைகளின் பயன்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கு மேற்படி பசளைகளின் பிரயோக அளவினைக் குறைத்துக் கொள்ள முடியும். இச் செயற்திட்டத்தின் கீழ் தாழ்நில ஈரவலய நிலமைகளுக்கு பொருத்தமான இலை வர்ண அட்டவணை ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

2013 ற்கான திட்டம்

நெல் இனவிருத்தி

வர்க்கத் தாக்கம் மற்றும் உற்பத்தியாளர் விதை உற்பத்தி நிகழ்ச்சிகள் தொடரப்படுகின்றன. அத்துடன் பாரம்பரிய நெல் வர்க்கங்களில் ஆய்வு ஒன்றும் தொடரப்படுகின்றது. இரட்டிக்கப்பட்ட ஒரு மடிய தாவரங்களின் உற்பத்திக்காக உள்ஞர் நெல் வர்க்கங்களின் மூலவுயிருருக்களில் (Oryza sativa) உப இனம் இன்டிகா) மகரந்த மணி வளர்ப்பு தொடர்பான கற்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இரும்பு நஞ்சாதலைத் தாங்கி வளரக் கூடிய நெல் வர்க்க வம்சாவழிகளின் அபிவிருத்திக்காகவும் மகரந்த மணி வளர்ப்புக் கற்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இரும்பு நஞ்சாதல் மற்றும் வெள்ள நிலமை ஆகியவற்றைச் சகித்து வளரக்கூடிய நெல் வர்க்கங்களின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய NARP செயற்திட்டத்தின் கீழான கற்கைகள் அடுத்த பருவத்திற்கும் தொடர்படவுள்ளது.

பயிரக்கவியல்

நெற் செய்கையில் ஒருங்கிணைந்த தாவரப் போசணைத் தொகுதி தொடர்பான செயன் முறைகள் VAT மற்றும் NCRVT ஆகியவற்றில் தொடர்ப்படவுள்ளது.

மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக பூச்சியப் பண்படுத்தல் மற்றும் LCC ஆகிய கற்கைகளும் தொடர்வுள்ளன. தாழ், ஈரவலய நிலமைகளின் கீழ் கலப்பின நெல் சேர்க்கைகளின் மதிப்பீடு நடைபெறவுள்ளது.

நோயியல்

இலை எரிபந்த நோய்க்கெதிராகச் சிபாரிசு செய்யப்பட்டுள்ள பங்கசு நாசினிகள் மதிப்பிடப்படவுள்ளன. இலை எரிபந்தம் மற்றும் பக்ரீயா இலை வெளிறல் நோய்களுக்கு எதிர்புடைய வர்க்கங்களின் தெரிவும் தொடரப்படவுள்ளது.

பூச்சியியல்

நெல் மடல் சிற்றுண்ணி (Steneotarsonemus Spinki), கொப்புளஈ (Orseolia orzae), மற்றும் BPH (Nilaparvata lugens) ஆகிய பீடைகளுக்கெதிரான வேறுபட்ட பூச்சி நாசினிகளின் மதிப்பீடு தொடரப்படவுள்ளது.

தாழ்நில ஈரவலயப் பிரதேசங்களில் நெல் மடல் சிற்றுண்ணியை எதிர்வுகூறக்கூடிய தொகுதி ஒன்றின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

களை விஞ்ஞானம்

நெற் செய்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள களைநாசினிகள் மீள மதிப்பீடு செய்யப் படவுள்ளன.

மண் வள முகாமைத்துவம்

தாழ்நில ஈர வலயங்களின் நெற் செய்கையில் பகுதியான மற்றும் பிந்திய பசளைப் பிரயோகங்களின் தாக்கம் பற்றிய கற்கை இடம்பெறவுள்ளது. வேறுபட்ட நெல் வர்க்கங்களில் பார உலோகங்களை அடையாளம் காணுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. MOP, யூரியா மற்றும் TSP ஆகியவற்றுக்குப் பதிலீடாக வைக்கோலைப் பயன்படுத்துவதுடன் தொடர்புடைய கற்கையும் ஆரம்பிக்கப் படவுள்ளது. நெற் செய்கையில் N, மற்றும் P ஆகியவற்றுக்கான நுண்ணங்கி உட்புகுத்தி களுடன் கூடிய நுண்ணிங்கியல் கற்கையொன்று நடாத்தப்படவுள்ளது. இரும்பு நஞ்சாக்கத்துக்கான இரசாயனக் கட்டுப்பாடு, நெற் செய்கையில் சீமைக்கிழுவையுடன் எப்பாவல பாறைப் பொசுபேற்றின் உத்தம அளவு, தானிய விளைச்சல் மற்றும் மண் வளம் ஆகியவற்றில் N.P.K ஆகியவற்றை நீண்டகாலம் பிரயோகிக்காவிட்டால் ஏற்படும் விளைவு ஆகியன தொடர்பிலான கற்கைகளும் தொடரப்படவுள்ளன.

நெல் ஆராய்ச்சி நிலையம் – லபுதுவ

சிவப்பு நிற அரிசியை கொண்ட நெல்லினங்களின் அபிவிருத்தி மற்றும் இலங்கையின் தாழ்நில ஈரவலயங்களில் உள்ள உயர் தரமுடைய கனிப்பொருள் மண்ணைக் கொண்ட நெல்வயல்களில் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்பங்கள் தொடர்பிலான அபிவிருத்தி என்பவற்றுக்குப் பொறுப்பாக ARS- லபுதுவ காணப்படுகின்றது.

வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

புதிதாகச் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள்

விவசாயத் திணைக்களமானது Ld – 368 எனும் சிவப்பு நிற கட்டையான உருளை வடிவ அரியை உடைய நெல் வர்க்கம் ஒன்றை 2012ல் நாடு முழுவதுமான செய்கை பண்ணலுக்காக வெளியிட்டுள்ளது. இப்புதிய வர்க்கமானது நம்பகத் தன்மையான உயர் தர விளைச்சலுடையது ஆகும். (7தொன் / ஹெக்டயரிலும் அதிகம்) அத்துடன் இவ்வர்க்கமானது இலை எரிபந்தம், கழுந்து எரிபந்தம் ஆகியவற்றிற்கு எதிர்புடையது. அதேவேளை BPH, கொப்புளஈ மற்றம் பக்ரீரியா இலை வெளிறல் ஆகியவற்றிற்கு ஓரளவு எதிர்ப்புடையது. மேலும் நிலத்தில் சரிந்து விழும் தன்மை மற்றும் தானியங்கள் நிறமாற்றத்திற்குள்ளாகும் தன்மையும் அற்றதாகும்.

வர்க்கச் சோதனை நிகழ்ச்சிகள்

கடந்த 6 வருடங்களில் உயர் விளைச்சலுடைய உயர்தர புதிய வம்சாவழிகள் 5 அபிவிருத்தி செய்யப்பட்டன. இரண்டரை மாத வயதுடைய Ld 8-15-6, Ld 8-15-15 மற்றும் Ld 8-15-20 ஆகிய வம்சாவழிகள் NCVRT நிகழ்ச்சியின் கீழ் சோதிக்கப்பட்டுள்ளன. மூன்றரை மாத வயதுடைய சிவப்பு சம்பா வம்சாவழியானது (Ld8-6-7) VAT நிகழ்ச்சிக்குப் பிரேரிக்கப் பட்டுள்ளது. மூன்றரை மாத வயதுடைய வெள்ளைச் சம்பா வம்சாவழியானது (Ld 3-6-12) LSVAT இல் பரிசோதிக்கப்பட்டது. மூன்றரை மாத வயதுடைய 7 புதிய வம்சாவழிகள் மற்றம் 4 ½ மாத வயதுடைய 5 புதிய வம்சாவழிகள் ஆகியன 2012 சிறுபோகத்தில் நியம சோதனை வர்க்கங்களுடன் ஆராய்ச்சியாளர்களின் முகாமைத்துவத்தின் கீழ் ARS லபுதுவ வில் பரிசோதிக்கப்பட்டன.

களை முகாமைத்துவம்

களை நெல் முகாமைத்துவம்

இலங்கையின் ஈரவலயத்தில் உள்ள நெல் வயல்களில் களை நெல்லானது ஓர் பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. எனவே நெல் வயல்களில் இருந்து மேற்படி களைகளை முற்றாக அழிப்பதற்கான சிறந்த முகாமைத்துவ முறை ஒன்றை இனங்காண்பதற்கான கற்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கற்கையானது NARP இன் நிதியுதவியுடன் இடம் பெற்றது.

காலி மாவட்டத்தின் இருவேறு இடங்களில் விவசாயிகள் மற்றும் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் பல்வேறு தொழில்நுட்பப் பொதிகள் பரீட்சிக்கப்பட்டன. காலி மாவட்ட இரு விவசாயிகளின் வயல்களில் 2011/ 2012 பெரும் போகம் மற்றும் 2012 சிறுபோகக் காலங்களில் இரண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தாழ்நில ஈரவலய விவசாயிகளால் கடைப்பிடிக்கப்படுகின்ற முறைகளிலும் (கட்டுபாடு) பார்க்க பின்வரும் பொதிகள் களை நெல்லைக் கட்டுப்படுத்துவதில் வினைத்திறன் உடையனவாகக் காணப்பட்டன.

- நாற்று நடுகை + சுத்தமானவிதைகள் + முளைத்தலுக்கு முன்னரான களை நாசினி
- முளைகட்டிய நெல்லை வீசி விதைத்தல் + சுத்தமான விதைகள் + முளைத்தலுக்கு முன்னரான களை நாசினி
- வரிசையில் நெல் விதைப்பு + சுத்தமான விதைகள் + முளைத்தலுக்கு முன்னரான களை நாசினி
- வீசி விதைத்தல் + சுத்தப்படுத்திய விதை + முளைத்தலுக்கு முன்னரான களை நாசினி

வயல்களில் களைநெல் உள்ள போது ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் விவசாயிகள் மற்றும் விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் 200 பேரின் பங்குபற்றலுடன் இவ்வருடம் 2 வயல் விழாக்கள் நடாத்தப்பட்டன.

நோய் முகாமைத்துவம்

BLB ற்கு எதிர்புடைய வம்சாவழிகளின் தெரிவு

INGER நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் IRRI இலிருந்து 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட புதிய நெல்லின வம்சாவழிகள் லபுதுவ RRS இல் தேர்வுக்கு உட்படுத்தப்பட்ட போது அவற்றில் 10 வம்சாவழிகள் BLB ற்கு உயர்ந்நத எதிர்ப்புத் தன்மையைக் காட்டின.

IRBB நாற்று மேடையில் இருந்து 2011ல் பெறப்பட்ட புதிய நெல்லினத் தெரிவுகள் பெருக்கத்திற்குட்படுத்தப்பட்டு, இனவிருத்தியாளர் களிடம் இனவிருத்தி நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டது. மற்றும் PGRC யிடம் பாதுகாத்துப் பேணுவதற்காகவும் வழங்கப்பட்டது.

பீடை முகாமைத்துவம்

காலி மாவட்ட நெல் வயல்களில் நெற் பயிரைத் தாக்கி நெல் மணியின் நிறமாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் புதிய குடலை அந்து ஒன்று இனங்காணப்பட்டது. இது அங்கோமோயிஸ் தானிய அந்தை (Sitotruga cerealella oliver) ஒத்துக் காணப்பட்டது. கூட்டும்புழுவின் கவசத்திற்கு அண்மையில் இருந்த தானியங்களும் நிறமாற்றமடைந்திருந்தன. மேற்படி அந்துப் பூச்சி பதிக்கப்பட்டு மேலதிக இனங்காணலுக்காக ஐக்கிய இராச்சியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

லபுதுவ RRS இல் 2012 ஆம் ஆண்டு பகுதியில் பனிப்பூச்சித் தாக்கத்திற்கு எதிர்புடைய 39 NCRVT பதிவுகள் தேர்வு செய்யப்பட்டன. அவற்றுள் 20 கூடிய சகிப்புத்தன்மையையும், மேலும் 14 சகிப்புத் தன்மையையும், எஞ்சிய 5 ஓரளவான சகிப்புத் தன்மையையும் காட்டியது.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி நிகழ்ச்சி

தேசிய விதை உற்பத்தி நிகழ்ச்சிக்காக 2012ல் அரச பண்ணைகளுக்கு Ld 365 மற்றும் Ld 408 ஆகிய பேதங்களின் 200Kg உற்பத்தியாளர் விதை அத்திவார விதை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்பட்டது. (அட்டவணை 1.4.1.3) அத்துடன் பிராந்திய விதையுற்பத்தி நிகழ்ச்சியை வலுவூட்டும் நோக்குடன் காலிப் பிரதேச DD (விரிவாக்கம்) யிடம் பதிவுசெய்யப் பட்ட மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளும் வழங்கப்பட்டன.

அட்டவணை 1.4.1.3 2012 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதையின் அளவு

வர்க்கம்	உற்பத்தியாளர் விதை அளவு (Kg)		
	பெரும் போகம் 2011/12	சிறு போகம் 2012	மொத்தம்
3 ½ மாதங்கள்			
Ld 365	60	60	120
4 மாதங்கள்			
Ld 408	40	40	80
மொத்தம்	**100**	**100**	**200**

நெல் ஆராய்ச்சி நிலையம்~ பெந்தோட்டை

பெந்தோட்டையில் உள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தின் (RRS) முக்கிய குறிக்கோள் உவர் நில மற்றும் வெள்ள அபாயப் பிரதேசங்களுக் குரிய நெல் வர்க்கங்களைப் அபிவிருத்தி செய்வதாகும்.

வர்க்க மேம்பாட்டு நிகழ்ச்சி

வெள்ள நிலமையைச் சகித்து வளரும் நெல் வர்க்கத் தெரிவு 2012ல் தொடரப்பட்டு, Bg 96-741 எனும் வர்க்கம் வெள்ள நிலமையைச் சகித்து வளரும் வம்சாவழியாக அடையாளம் காணப்பட்டது. இத் தெரிவின் பெருக்கமானது ஆராய்ச்சிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பயிராக்கவியல்

வெள்ளப்படுத்தல் நிலமைகளின் கீழ் நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்குரிய சிறந்த முறை ஒன்றை கண்டறிவதற்கான ஆராய்ச்சி ஒன்று தொடரப்பட்டது.

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை நிகழ்ச்சி (NVRVT)

மூன்றரை மற்றும் நான்கரை மாத வயது நெல் வகுப்புகளில் NVRVT நிகழ்ச்சிகள் தொடரப்பட்டன. 3½ மாத வயதுடைய நெல்லில் 10 புதிய வம்சாவழிகளும், 4½ மாத நெல்லில் 5 புதிய வம்சாவழிகளும் இவ்வருடம் பரிசோதிக்கப்பட்டன.

வர்க்க இசைவாக்கச் சோதனை (VAT) நிகழ்ச்சி

வர்க்க இசைவாக்க சோதனையானது (VAT) 2011/ 2012 பெரும் போக காலப் பகுதியில் மூன்று மாத மற்றும் மூன்றரை மாத வகுப்பு நெற் பயிர்களில் தொடரப்பட்டது. 2012 சிறுபோகத்தில் விவசாயிகளின் முகாமைத்துவ நிலமைகளின் கீழ் 3 ½ மாத நெல்வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன.

2013 ற்கான திட்டம்

- வெள்ள நிலமைக்குரிய நெல் வம்சாவழிகளின் தெரிவு
- வெள்ள நிலமைப் பொருத்தமான நெற் செய்கை முறை ஒன்றை இனங்காணுதல்
- அரைபொக் (Half bog) மண்ணில் பூச்சியப் பண்ப்படுத்தலின் போது நெற் பயிரின் போசணை உள்ளெடுத்தலின் தாக்கம் பற்றிய ஆய்வு
- அரை பொக் (Half bog) மண்ணிற்கு பொருத்தமான பாரம்பரிய நெல் வர்க்கங்களின் மதிப்பீடு
- NVRVT மற்றும் VAT நிகழ்ச்சிகளைத் தொடர்தல்

அலுவலர் பட்டியல்

RRRDC - போம்புவெல

பதவி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	08
பண்ணை முகாமையாளர் (பதில்)	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	06
அபிவிருத்தி உதவியாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	12
விவசாயப் போதனாசிரியர்	07
நிருவாக உத்தியோகத்தர்	01
முகாமைத்துவ உதவியாளர்	06
களஞ்சிய காப்பாளர்	01
சாரதி	02
காவலாளி	01
சுற்றுலா விடுதி காப்பாளர்	01
தொழிலாளி	16
சுத்தரிகரிக்கும் தொழிலாளி	01
தொழிலாளி (ஒப்பந்தம்)	33
தொழிலாளி (செயற்திட்டம்)	11
மொத்தம்	**111**

RRS லபுதுவ

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி அலுவலர்	02
விவசாயப் போதனாசிரியர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	05
முகாமைத்துவ உதவியாளர்	01
சாரதி	01
காவலாளி	02
உழவு இயந்திர இயக்குனர்	01
சுற்றுலா விடுதி காப்பாளர்	01
தொழிலாளி	10
தொழிலாளி (அமையம்)	12
மொத்தம்	**39**

ARS வெந்தோட்டை

பதவி	எண்ணிக்கை
ஆராய்ச்சி பொறுப்பதிகாரி	01
விவசாயப் போதனாசிரியர்	03
காவலாளி	01
களஞ்சிய காப்பாளர்	01
தொழிலாளி	08
தொழிலாளி (அமையம்)	06
தொழிலாளி (செயற்திட்டம்)	02
மொத்தம்	**22**

1.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC), பேராதனை

தேசிய விவசாய உற்பத்தித்திறனை நிலைபேறான முறையில் மேம்படுத்த நில, நீர் வளங்களை விஞ்ஞான அடிப்படையில் உச்ச அளவிற் பயன்படுத்த இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையம் முயற்சித்து வருகின்றது. மட்காப்பு, நீரேந்துப் பிரதேச முகாமைத்துவம், நிலப் பொருத்தம் தொடர்பான மதிப்பீடுகள், பயிர் கண்காணிப்பும், எதிர்வு கூறல், விவசாய வானிலையும், காலநிலை மாற்றங்களும், மண், நீர் தரம், பண்ணையில் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசனம் என்பன தொடர்பான ஆராய்ச்சிகளை இந்நிலையத்தின் கடமைகள் உள்ளடக்கியுள்ளன. இந்நிலையத்தின் ஏனைய நடவடிக்கைகளாவன நாட்டின் விவசாய வானிலை அவதான வலையமைப்பைப் பராமரித்தல், மட் காப்புச் சட்டத்தை அமுல் செய்தல், தொழில்நுட்பப் பிரச்சாரமும், நிலையத்துடன் தொடர்பான விடயங்களில் வாடிக்கையாளர்களிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல், பல்வேறு திட்டங்களின் சுற்றாடற் தாக்கங்களை மதிப்பிடல் என்பனவாகும்.

பாதீடு

அட்டவணை 1.5.1: வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	% செலவு
மூலதனம்	1,772,148	167,071	94
மீண்டு வரும் செலவீனம்	2,959,000	2,628,005	89
திட்டம்			
தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்(NARP)	10,000,000	6,642,657	66
மட்காப்புச் சட்டத்தை அமுல் செய்தல்	2,500,000	1,770,556	71
தாழ்நாட்டு ஈரவலயத்திலுள்ள நெல் வயல் நிலங்களின் உற்பத்திதிறனை மேம்படுத்தற் திட்டம்	300,000	139,872	47
பிராந்திய மட்டத்திலான பொருத்தமான பயிர்கள் தொடர்பான மதிப்பீடும், நிலவரைபடத்தில் அடையாளமிடலும் - ஊவா மாகாணம்	1,700,000	475,000	28
மொத்தம்	**19,231,148**	**13,326,802**	**69**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

காலநிலை மாற்றங்களினால் இலங்கை பாதிக்கப்படல்

காலநிலை மாற்றங்களினாலும், காலநிலை வேறுபாடுகளினாலும் பாதிக்கப்படல் தொடர்பாக இலங்கையின் 25 மாவட்டங்களிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்காக பாதிக்கப்படும் தன்மையின் மூன்று கூறுகளான வெளிக்காட்டப்படும் தன்மை, தூண்டற்பேறு, இசைவாக்கக் கொள்ளளவு ஆகியவற்றை வரைவிலக்கணஞ் செய்வதற்காக 22 சுற்றாடல், சமூகப் - பொருளாதார சுட்டிகளைப் பயன்படுத்தி பாதிக்கப்படும் தன்மைக்கான ஒரு சுட்டெண் விருத்தி செய்யப்பட்டது.

சமூகப் பொருளாதார நிலைமைகள், சுற்றாடற் காரணிகள், நிறுவன அபிவிருத்தி என்பனவற்றிற் கமைய பாதிக்கப்படுந்தன்மை வேறுபட்டதோடு, நேரடியாக வெளிக்காட்டப்படுவதிலோ அல்லது புவியியலிலோ தொடர்புபட்டிருக்கவில்லை என்பதை பகுப்பாய்வுகள் வெளிப்படுத்தின. தாழ் நாட்டு ஈரவலயத்தில் (இரத்தினபுரி தவிர்ந்த) நகரமயமான, ஓரளவான நகரமயமான மாவட்டங்களின் செல்வ வளம், மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், வளங்களை இலகுவாகப் பெறக் கூடியதாயிருத்தல் என்பனவற்றின் காரணமாக அவை காலநிலை மாற்றங்களினால் குறைந்தளவிற் பாதிக்கப்படு வதை இதன் முடிவுகள் காட்டின. இது காலநிலையாற் தூண்டப்பட்ட வெள்ளம், எப்போதாவது ஏற்படும் வறட்சி, மண்சரிவு போன்ற காரணிகள் அங்கு காணப்பட்டாலும் கூட இந்நிலைமையே அங்கு காணப்பட்டது. இலங்கையின் மத்திய மலைநாட்டின் மேற்கு, கிழக்கு விளிம்பு மாவட்டங்களான கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகியவற்றோடு, கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களும் காலநிலை மாற்றங்களினால் மத்தியளவிற் பாதிக்கப்படு வதைக் காட்டியது. அம்பாறை, திருகோணமலை ஆகியவற்றைத் தவிர்ந்த தீவில் அதிகளவான நெல்லை உற்பத்தி செய்யும் மாவட்டங்களான அநுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகலை என்பன காலநிலை மாற்றங்களினால் அதிகளவிற் பாதிக்கப்படக் கூடியனவாகும். வடமாகாணம் (யாழ்ப்பாண தீவகற்பம் தவிர்ந்த), புத்தளம், இரத்தினபுரி மாவட்டங்களிலுள்ள சமூகம் அதில் வெளிக்காட் டப்படல், வாழ்வாதாரத்திற்கு, குறைந்தளவான சமூகப் பொருளாதார அபிவிருத்தி போன்ற காரணிகளினால் அதிகளவிற் பாதிக்கப்படு கின்றன.

ஒரே விவசாயச் சுற்றாடலில் அத்துடன்/அல்லது அமைவிட இடவிளக்க வலயத்தினுட் கூட காலநிலை ஆபத்துகளை முகாமைத்துவம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்டப் பிரதேசத்திற்கு மாத்திரமே உரிய கொள்கைகளையும், திட்டங்களையும் கொள்ளை வகுப்பாளர்களும், திட்டமிடுவோரும் வகுக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டங்களிலும் காலநிலை மாற்றங்களை அபிவிருத்தி அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலாக உள்ளுர், உப மாவட்ட மட்டங்களில் மாற்ற வேண்டும் எனச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தினுள்ளும் "மிக அதிகளவிற்" பாதிக்கப்படும் பிரிவுகளையும், கிராமங்களையும் இலக்காகக் கொண்டு காலநிலை ஆபத்துக் குறைப்பு தலையீடுகளை மிகவும் அர்த்தமுள்ள வகையில் மேற்கொள்ள மேற்குறிப்பிட்ட பாதிக்கப்படும் தன்மை, வல்லமைக்கான மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் வறட்சி ஆபத்து தொடர்பான வீபரங்களை உருவாக்கல்

மழை வீழ்ச்சி, அழுத்த ஆவியுயிர்ப்பு தரவுகள் தொடர்பான நாளாந்த, மாதாந்த காலத் தொடர் வரிசைகளிலிருந்து பெறப்பட்ட 14 சுட்டிகளைப் பயன்படுத்தி இலங்கையிலுள்ள வறட்சி ஆபத்துகளிற்கான ஒரு சுட்டியை உருவாக்கி,

அளிப்பதற்கு இந்த ஆய்வு முயற்சித்தது. உலர் வலயத்திலுள்ள 11 விவசாயச் சுற்றாடல் வலயங்கள் மிக அதிகளவான வறட்சி ஆபத்தகளைக் கொண்டுள்ள அதேவேளை இடை வலயத்திலுள்ள 20 விவசாயச் சுற்றாடல் வலயங்களும் மத்திய அளவான அல்லது உயர்ந்த மட்டத்திலான வறட்சி ஆபத்துகளைக் கொண்டுள்ளதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியது. இலங்கையின் ஈரவலயத்தி லுள்ள 15 விவசாயச் சுற்றாடல் வலயங்களும் ஒன்றில் மிகக் குறைந்தளவான அல்லது குறைந்தளவான ஆபத்துக்களைக் கொண்டு ள்ளது.

சனத்தொகை வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றின் விளைவாக நீரிற்கான கேள்வி அதிகரிப்பதால் எதிர்காலத்தில் ஏற்படும் வறட்சி அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த ஆய்விலிருந்து பெறக் கூடிய பொதுவான கொள்கைச் சிபாரிசுகள் பின்வருமாறு.

- இலங்கையின் பிரதான மூன்று காலநிலை வலயங்களில் நிலவும் முறையான இடஞ் சார்ந்த வேறுபாடுகள் கொள்கை வகுப்பாளர் கள் காலநிலை வலய அடிப்படையில் பரந்த வறட்சி முகாமைத்துவ உபாயங்களை உருவாக்க உதவும். இதேவேளை நிலை பேறான அடிப்படையில் நில, நீர் வளங்க ளை பயன்படுத்துவதை உறுதி செய்வ தற்குக் கிராம மட்டத்திலான உப நடவடிக் கைகளையும் இணைத்தல் வேண்டும்.

- இரண்டாவதாக முழு உலர் வலயமும் மிக அதிகளவு தொடக்கம் அதிகளவான வறட்சியாற் பாதிக்கப்படுவதால், அதனை பரந்த அபிவிருத்தியின் பின்னணியில் வறட்சியை தணிக்கும் திட்டங்களில் அதற்கு அதிகளவான முன்னுரிமை அளித்தல் வேண்டும் அல்லது அதனை இன்னொரு முறையில் குறிப்பிடுவதாயின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரதான நீரோட்டத்திற் காணப்படல் வேண்டும். பயனுறுதியான முறையில் இதனை மேற்கொள்வதற்கான ஒரு வழி இணக்கமான நடவடிக்கைகளை நிலைபேறான அபிவிருத்தி உபாயங்களுடன் ஒருங்கிணைப்பது ஆகும். இதன் மூலம் இயற்கை வளங்களிற்கான நெருக்கடிகளைக் குறைத்து, சுற்றாடல் ஆபத்து முகாமைத்தவத்தை மேம்படுத்தி, ஏழைகளின் சமூக நலனை மேம்படுத்த முடியும்.

- இறுதியாக மிகவும் துல்லியமாக வறட்சிக்கான எச்சரிக்கைகளை நேர காலத்துடன் விடுப்பதற்கான முறைகளை விருத்தி செய்யவும், பொருத்தமான நிவாரணங்களை வழங்கவும், விவசாயக் காப்புறுத்திக்கும் கொள்கை வகுப்பாளர்களும், விஞ்ஞானிகளும ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும்.

இலங்கையின் தாழ் நாட்டு ஈரவலயத்தில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக குறிப்பிட்டக் காணிக்கான சிபாரிசுகளை அபிவிருத்தி செய்தல்

விசேடமாக இலங்கையின் உலர் பருவ காலத்தில் தேசிய நெல் உற்பத்தியை தாங்கிக் கொள்வதற்கு ஈர வலய காணிகள் முக்கியமான வை ஆகும். இப்பயிரின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முக்கியமானதொரு நியமம் ஆகும். தாழ்நாட்டு ஈரவலயம் குறிப்பிடத்தக்கள வான பிரச்சினைக்குறிய மண்களைக் கொண்டுள்ளதால், இவ்வலயத்தில் மண் வளத்தை மேம்படுத்துவது முக்கியமான பங்கினை வகிக்கின்றது. நில வகைகள் தொடர்பில் மண் வளத்தை வருணனை செய்வதற்கு ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதலாவது ஒழுங்கு பள்ளத்தாக்குகள், உயர் ஒழுங்கு பள்ளத்தாக்குகள், வெள்ளச் சமவெளிகள், கடனீரேரி ஆகிய நான்கு நில வடிவங்களிலிருந்து மேற்பரப்பு (0 – 20 ச.மீ) ஆழத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இம்மண்கள் பீ.எச்., மின் கடத்துந்திறன், கிடைக்கும் பொசுபரசு (P), மாற்றீடு செய்யக் கூடிய பொட்டாசியம் (K), சேதனப் பொருட்கள் என்பனவற்றிற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அனைத்து வகையான நிலவடிவங்களிலும் மண்ணின் பீ.எச் 3.9 முதல் 4.3 வரையான வீச்சிற் காணப்பட்டதை முடிவு காட்டியது. இது தாழ்நாட்டு ஈரவலயத்தில் அமில மண்கள் இருப்பதைக் காட்டுகின்றது. சுண்ணாம்புப் பொருட்களை இடுவது இவ்வலயத்தில் சாத்தியமானதல்ல. எனவே இந்நலைமைக்கு ஏற்ப நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதன் அவசியத்தை இது காட்டுகின்றது. முதலாவது ஒழுங்கு பள்ளத்தாக்குகள், உயர் ஒழுங்கு பள்ளத்தாக்குகள், வெள்ளச் சமவெளிகள், கடனீரேரி ஆகியவற்றில் மின்கடத்துந்திறன் முறையே 0.07, 0.06, 0.06, 0.1 டெசிசீமன் / மீற்றர் ஆகும். இது வெள்ளச் சமவெளிகளில் ஓரளவான உவர்த்தன்மையும், கடனீரேரிகளில் அதிகளவான உவர்த்தன்மை உள்ளதையும் எடுத்துக் காட்டுகின்றது. அனைத்து நில வடிவங்களிலும் உள்ள மண்களில் கிடைக்கும் பொசுபரசு 7.8 முதல் 9.7 பீபீஎம் வரையான வீச்சிற் காணப்பட்டது. இது அனைத்து மண்களிலும் குறைந்த மட்டத்திற் கிடைக்கும் பொசுபரசு உள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. முதலாவது ஒழுங்கு பள்ளத்தாக்குகள், உயர் ஒழுங்கு பள்ளத்தாக்குகள், வெள்ளச் சமவெளிகள், கடனீரேரி ஆகியவற்றில் மாற்றீடு செய்யக் கூடிய பொட்டாசியம் முறையே 69, 80, 94, 119 பீபீஎம் (ppm) ஆகும். இது முதலாவது ஒழுங்கு பள்ளத் தாக்குகளில் குறைந்த மட்டத்தில் பொட்டாசியம் உள்ளதைக் காட்டுகின்றதோடு, இவ்வகையான மண்களிற்கு பொட்டாசியத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதன் சேதனப் பொருள் உள்ளடக்கம் 5 முதல் 11.1 வீதம் வரையான வீச்சில் உள்ளது. இது இப்பிராந்தியத்தில் போதிய மட்டத்தை விட அதிகளவான சேதனப் பொருட்கள் உள்ளதைக் காட்டுகின்றது. எனவே இவ்வலயத்தில் சேதனப் பொருட்களைப் பேணுவதற்காக சேதனப் பொருட்களை இட வேண்டிய அவசியமில்லை.

இலங்கையின் மத்திய நாட்டு ஈரவலயத்தின் நெல் மண்களின் மண் வள நியமங்களின் இடஞ்சார்ந்த பண்புகள்

விசேடமாக இலங்கையின் உலர் பருவ காலத்தில் தேசிய நெல் உற்பத்தியை தாங்கிக் கொள்வதற்கு ஈர வலய மண்கள் முக்கியமானவை ஆகும். இப்பயிரின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மண் வளம் முக்கியமானதொரு நியமம் ஆகும். இவ்வகையில் மத்திய நாட்டு ஈர வலயம் முக்கியமானதொரு பங்களிப்பை வழங்குகின்றது. நாட்டின் ஈரவலயத்தில் மண் வளத்தையும் அதன் இடஞ்சார்ந்த வேறுபாடுகளையும் இனங் காண்பதற்கு ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந் நோக்கத்திற்காக கண்டி மாவட்டத்தில், வட்டப்பொரு கிராமத்தில் நெல் வயலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 3.5 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ள காணியில் மண் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காணியில் குறைந்தள வான களியைக் கொண்ட மண்கள் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன. 50 மீற்றர் இடைவெளியில் விட்டப் பின்னல் வடிவில் மேற்பரப்பிலிருந்து (0 – 20 ச.மீ) மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பீ.எச், மினகடத்துந் திறன், சேதனப் பொருட்கள், சல்பேற் - கந்தகம், மாற்றீடு செய்யக் கூடிய பொட்டாசியம், மக்னீசியம், கல்சியம் பாகங்கள், கிடைக்கக் கூடிய பொசுபரசு நாகம், செப்பு, பாகங்கள், இரும்பு ஆகியவற்றிற்காக அநுராதபுரம், ரஜரட்டைப் பல்கலைக்கழக விவசாயப் பீடத்தின், நீர் வளங்கள் முகாமைத்துவ ஆய்வு கூடத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. பீ.எச் 5.0 முதல் 6.6 வரையான வீச்சிற் காணப்படுவதோடு, இது மண்ணின் அமிலத்தன்மையைக் காட்டுகின்றது. மின்கடத்துந் திறன் மிகக் குறைவாக உள்ளது (0.01 – 0.04 டெசி சீமன்கள் / மீற்றர்). ஆனால் இரும்பு உள்ளடக்கம் மிக அதிகமானதோடு, இது நச்சுத் தன்மையான மட்டத்தையும் காட்டுகின்றது. பெரும்பாலான இடங்கள் உகந்த அளவிலான பொட்டாசிய மட்டம் (81%), போதியளவிலான மக்னீசிய மட்டம் (69%), அதிகளவான செப்பைக் (88%) கொண்டுள்ளன.

முழு மண்ணும் குறைந்த மட்டத்தில் சல்பேற் - கந்தகத்தையும், கிடைக்கும் நாகம், கிடைக்கும் கல்சியத்தையும் கொண்டுள்ளது. ஆனால் உகந்த மட்டத்திலான சேதனப் பொருட்களையும், உயர்ந்த அளவிலான பொட்டாசியத்தையும் கொண்டுள்ளன. ஆய்வு செய்யப்பட்டப் பிரதேசத்தின் மண்கள் குறிப்பிடத்தக்க இடஞ்சார்ந்த மண் வள வேறுபாடுகளைக் கொண்டுள்ளதை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளதோடு, சல்பேற் - கந்தகம், நாகம், கல்சியம், இரும்பு நச்சுத்தன்மை என்பனவற்றில் மட்டுப்பாடுகளையும் காட்டுகின் றது. மேற்குறிப்பிட்ட மட்டுப்பாடுகளை திருத்துவ தற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது அதிகரித்த நெல் உற்பத்தியை உறுதி செய்யும்.

உயர் நுணுக்கமான செய்மதிப் படங்களை அடிப்படையாகக் கொண்டு நெல் பயிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தையும், விளைச்சலையும் எதிர்வு கூறல்

விஸ்தீரணம், உற்பத்தி, ஒரு போகத்தில் நெல்லின் இடஞ்சார்ந்த பரவல் என்பன தொடர்பான நம்பிக்கையான புள்ளிவிபரங்களை அறுவடைக்கு முன்னரே பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் சரியான காலத்தில் களஞ்சிய வசதிகளை வழங்கல், பொருத்தமான சந்தர்ப்பத்தில் இறக்குமதியுடன் உற்பத்தியை ஒத்திசைவாக்கல் போன்ற தலையீடுகள் மூலம் நெல்லின் தொடர்ச்சியான வழங்கலை உறுதி செய்யும். தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தினால் நிதியுதவியளிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சித் திட்டம் இலங்கையில் நெல் பயிரிடப்படும் விஸ்தீரணம், உற்பத்தி என்பனவற்றிற்கான நிகழ்நேர தேசிய எதிர்வுகூறலை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக அம்பாறை மாவட்டத்தை முன்மாதிரி ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு உயர்ந்தளவு, மத்தியளவு பிரிதிறன் செய்மதிப் படிமங்கள் (படங்கள்) புவியியல் தகவற் தொகுதியில் பரிசோதிக்கப்பட்டன. நில அளவைத் திணைக்களத்தின் நிலப்பாவனை நிலவரைபடத்தி லிருந்து பிரித்தெடுக்கப்பட்ட (சாராம்சமாகப் பெற்ற) நெல் பயிரிடப்படும் நிலங்களின் பரவலை இன்றைய நிலைக்கேற்ப (இற்றைப்படுத்தல்) மாற்றுவதற்கு பார்வைக்குறிய பொருள் விளக்கத்தைப் பயன்படுத்தி திரையில் இலக்கமாக்க இக்கொனொஸ் (IKONOS), ஜியோஐ (GEOEYE) (1 – 2 மீ துல்லியம்) செய்மதிப் படிமங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலதிகமான 15 சதுர கிலோ மீற்றருடன் பதியத்தலாவை பிரதேசச் செயலகப் பிரிவின் நெல் பயிரிடப்பட்டுள்ள காணிகளின் நிலவரைபடம் இற்றைப்படுத்தப்பட்டது. அம்பாறை மாவட்டத்திற்கான ஏனைய பிரதேசச் செயலகப் பிரிவின் நெல் நிலங்களை இறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

நெல் பயிரிடப்பட்டுள்ள காணிகளை விரைவாக இனங் காண்பதற்கான ஒரு முறையாக தானியங்கி மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட பாகுபாட்டு அணுகுமுறைகள் பச்சை – சிவப்பு – கீழ்ச்சிவப்பு (1 – 2 – 3) பட்டைகளானது அவற்றின் மத்தியளவான பிரிதிறன் IRS LISS III (23.5 மீற்றர்) மற்றும் உயர் பிரிதிறன் GEO EYE (4 மீ) உடன் மதிப்பீடு செய்யப்பட்டன. இங்கு மதிப்பீடு செய்யப்பட்ட பாகுபாட்டு அணுகு முறைகளாவன; (1). இயல்புநிலை எய்திய வேற்றுமைப்படுத்தப்பட்ட தாவரச் சுட்டியைப் பகுதி அலைச் செலுத்துகை ஆக்கல் (Slicing of NDVI (Normalized Differenced Vegetation Index); (2). உயர் வாழ்வாதார படிமுறையின் கீழ் மேற்பார்வை செய்யப்பட்ட நெறிமுறை (Supervised classification under Maximum Livelihood algorithm); (3).குறைந்த தூர நெறிமுறை (Minimum Distance algorithm) என்பனவாகும். பதியத்தலாவை பிரதேசச் செயலகப் பிரிவில் மேற்குறிப்பிட்ட முறைகளினால் மதிப்பிடப்பட்ட நெல் பயிரிடப்பட்டுள்ள விஸ்தீரணங்கள் முறையே 30.7

சதுர கி.மீ, 17.9 சதுர கி.மீ, 24.5 சதுர கி.மீ ஆகும். இதேவேளை திரையில் இலக்கமாக்கல் மூலம் மதிப்பிடப்பட்ட நெல் பயிரிடப்படும் விஸ்தீரணம் 19.8 சதுர கி.மீ ஆகும். ஏனைய பிரதேசச் செயலகப் பிரிவுகளிற்கும் இதேமுறையைப் பயன்படுத்தி பாகுபடுத்தல் அணுகுமுறை மேலும் மதிப்பிடப்படும்.

நீரேந்துப் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடலிற்கு புவியியற் தகவல் முறையும், தொலை உணர்வும்

இலங்கையில் அடிக்கடி ஏற்படும் மீக்கடுமையான அடை மழையின் காரணமாக மட்காப்பிற்கு பயனுறுதியான பாதுகாப்பு உபாயங்களை ஸ்தாபித்தல் இன்றியமையாத ஒன்றாகும். எனினும் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள மையால் பாதுகாப்பிற்காக பெரிய நீர்த் தேக்கங்களின் முழு நீரேந்துப் பிரதேசத்தையும் ஒரு தனி அலகாகப் பராமரிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது ஆகும். மண்ணரிப்பினால் பாதிக்கப்படும் நிலைகளை (மட்டங்களை) அடிப்படையாகக் கொண்டு உப நீரேந்துப் பிரதேசங்களை முன்னுரிமைப்படுத்தும் போது மிக அத்தியாவசியமாகக் கருதப்படும் பிரதேசங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நியாயமான முறையில் ஒதுக்கீடு செய்யக் கூடியதாயிருக்கும். இந்நோக்கத்திற்காக விக்ரோரியா நீரேந்துப் பிரதேசத்திற்கான லேன்ட்சட் (30 மீ பிரிதிறன்) செய்மதிப் படிமங்களையும், கிடைக்கக் கூடிய ஏனைய ஆய்வுப் பொருள்சார் தகவல்களையும் பயன்படுத்தி புவியியற் தகவல் முறை, தொலை உணர்வு அணுகுமுறைகள் என்பனவற்றின் வல்லமைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. செய்மதித் தரவுகளின் மேற்பார்வை செய்யப்பட்ட பாகுபாட்டிலிருந்து பெறப்பட்ட நில மூடுபடை நிலவரை படத்தைப் பயன்படுத்தி மண்ணரிப்பில் நில மூடுபடையின் தாக்கம் மதிப்பீடு செய்யப்பட்டது. உயரங்களின் சமவுயரங்களி லிருந்து (1:50,000 இடவிளக்கவியல் நிலவரைபடத் தாள்) பெறப்பட்ட இலக்க உயர மாதிரியுடன் (Digital Elevation Model (DEM)) இடஞ்சார்ந்த மாதிரி உருவத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சாய்வு, வடிகான் வழிகள், உப நீரேந்துப் பிரதேசங்கள், நீரேந்தப் பிரதேசத்தின் எல்லைகள் ஆகியன உள்ளடங்கலாக சாய்வு நியமங்கள் பெறப்பட்டன. மண்ணரிப்பைத் தூண்டும் நான்கு காரணிகளைப் (நில மூடுபடை, மண் அரிக்கப்படும் தன்மை, மழையினால் அரிக்கப்படும் தன்மை, சாய்வு) பயன்படுத்தி மண்ணரிப்பு மதிப்பீடு செய்யப்பட்டது. மொத்த மண்ணரிப்புச் சுட்டியைப் பயன்படுத்தி மண்ணரிப்பினால் பாதிக்கப்படும் பிரதேசங்கள் இனங் காணப்பட்டன. மண்ணரிப்பிற்கான நான்கு காரணிகளிற்கும் வழங்கப்பட்ட நிலைகளைக் கூட்டி மொத்த மண்ணரிப்புச் சுட்டி கணக்கிடப்பட்டது. மிக உயர்ந்த, உயர்ந்த மண்ணரிப்பு நிலைமைகளைக் கருத்திற் கொண்டு முன்னுரிமை உப நீரேந்துப் பிரதேச நிலவரைபடம் பெறப்பட்டது. வாய்ப்பான மண்ணரிப்பை அடிப்படையாகக் கொண்டு மண்ணரிப்பு ஆபத்து தொடர்பான தகவல்களை உருவாக்கவும், உப நீரேந்துப் பிரதேசங்களை முன்னுரிமைப் படுத்தவும் விரைவானதொரு முறையை இந்த ஆய்வு காட்டியது.

நிலைபேறான காணி முகாமைத்தவத்திற்கான காணியின் தரம் தாழ்ந்து போவதை மதிப்பிடல்

உலர் நிலச்சுற்றாடற் தொகுதி, நீரேந்துப் பரப்புகள், ஆற்று வடிநிலங்கள், காபன் சேமிப்பு, உயிரியங் பல்லினத் தன்மை என்பனவற்றில் இடஞ்சார், காலஞ்சார் மட்டங்களில் காணியின் தரம் தாழ்ந்து போகும் முறை, பரிமாணம், தீவிரத்தன்மை, அதன் தாக்கம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து அளவிடுவதற்கான உபகரணங்களையும், முறைகளையும் உருவாக்குவதற்காக "தென்னாசியாவில் நிலைபேறான காணி முகாமைத்துவத்திற்கும், காலநிலை மாற்றங்களின் இசைவாக்கத்திற்கும் காணி

தரமிழத்தல் மதிப்பீடும், கண்காணிப்பும்" தொடர்பான பிராந்தியத் திட்டம் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது காணி தரமிழப்பதைத் தணித்து, நிலைபேறான நிலப்பாவனை, முகாமைத்துவ முறைகளை ஸ்தாபிப்பதற்கான தலையீடுகளைப் பகுப்பாய்வு செய்தல், வடிவமைத்தல், திட்டமிடல், அமுல் செய்தல ஆகியவற்றில் தேசிய, பிராந்திய சர்வதேச வல்லமைகளை கட்டியெழுப்பும். இத்திட்டத்திற்கு உணவு, விவசாய ஸ்தாபனம் நிதியுதவி வழங்கியதோடு, பங்குபற்றும் நான்கு நாடுகளான பங்களாதேஷ். பூட்டான், நேபாளம், இலங்கை ஆகியவற்றின் தொழில் நுட்பக் குழுவையும் கொண்டிருந்தது. திட்டக் காலம் 3 வருடங்கள் ஆகும். தரவுக் கணக்கெடுப்புக் கிடைக்கும் தன்மையும், காணி தரமிழத்தல் மதிப்பீட்டு, காலநிலை மாற்றங்களில் அவற்றின் தொடர்புகளும் பரிசோதிக்கப்பட்டதோடு, தரவுகளிலுள்ள இடைவெளிகளும் இனங் காணப்பட்டன. இத்திட்டம் 2013 இலும் தொடரப்படும்.

பிராந்திய மட்டத்திலான பயிரின் பொருத்தமான தன்மை தொடர்பான மதிப்பீடும், நிலவரைபடத்தை உருவாக்கலும், ஊவா மாகாணம்

அளவிற்கதிகமாகத் தன்னலப் பயன்படுத்தல், துஷ்பிரயோகம் செய்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படும் பொருளாதார, சமூக, சூழற் தாக்கங்கள் நாட்டில் நில வளங்களின் மீதான நெருக்கடிகளை அதிகரித்துள்ளன. பொருத்தமற்ற நிலங்களில் பயிர் செய்வதும், குடியேறுவதும் பிரதான மேல் நீரேந்துப் பிரதேசங்களில் மிகத் தீவிரமான பிரச்சினைகளாக மாறியுள்ளன. இது நிலத்தின் உற்பத்தித்திறனிற்கும், ஆற்றின் கீழ் பக்கத்தில் நீர் மின் உற்பத்திக்கும், நீர்ப்பாசனத்திற்கும் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கங்களிற்கும் பெரும் ஆபத்தாக மாறியுள்ளது. நாட்டின் பெரிய மாகாணமான ஊவா மகாணத்திலும் நிலைமை திருப்திகரமான தாக இல்லை. இம்மாகாணம் மத்திய பீட பூமியின் குறிப்பிடத்தக்களவான நிலத் திணிவைக் கொண்டுள்ளதோடு, இங்கு பெருமளவான நீர் வளங்கள் ஊற்றெடுத்து, தாழ் நிலங்களை நோக்கிப் பாய்கின்றன. எனவே மத்திய பீட பூமியிலுள்ள நிலம், நீர் வளங்களிற்கு மாத்திரமல்லாது, தாழ் நிலங்களில் நீரைப் பயன்படுத்துவோரிற்கு நீர் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் நிலத்தையும், நீர் வளங்களையும் நிலைபேறான முறையில் முகாமைத்துவம் செய்வது முக்கியமானதாகும்.

ஆகவே நீண்ட கால நிலைபேறான தன்மையை உறுதி செய்ய குறிப்பிட்டப் பிரதேசத்திற்குப் பொருத்தமான நில, நீர் வள முகாமைத்துவ அணுகுமுறைக்கு மாகாணத்தின் தற்போதைய நிலையை இனங் கண்டு, அவற்றை பிராந்திய உள்ளூர் மட்டங்களில் அமுல் செய்ய வேண்டும். எனவே நில தரமிழத்தலின் நிலையைக் காட்டும் மாவட்ட மட்டத்திலான நிலவரைபடங்கள், மாவட்டத்தினுள் முன்னுரிமையும், மண், நீர் வள பாதுகாப்பும், முகாமைத்துவமும், மாவட்ட மட்டத்திலான பொருத்தமான பயிர்களிற்கான நிலவரைபடம், நிலப் பாவனையில் மாற்றங்கள் தேவைப்படும் பிரதேசங்கள் என்பனவே இந்த ஆராய்ச்சியின் மூலம் எதிர்பார்க்கப்படும் பலாபலன்கள் ஆகும். இந்த கற்கை இடர் முகாமைத்துவ நிலையத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது.

பயிர் சிபாரிசை அடிப்படையாகக் கொண்டு கிராம அலுவலர் பிரிவுகளை எண்மான முறையில் தொகுத்தல்

விவசாயச் சூழலியல் வலயங்களுடன் தொடர்புடைய பயிர் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களிற்கும் உகந்த பயிர்கள் தெரிவு செய்யப்படுகின்றன. விவசாயச் சூழலியலில் காணப்படும் வித்தியாசமான நிலைமைகளினால் பயிர் விளைச்சல் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது. பயிர்களின் சிறந்த வளர்ச்சிக்கும், உயர்ந்தளவான விளைச்சலைப் பெறவும் உகந்த நிலைமைகள் அவசியமாகும். இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தினால் கிராம

அலுவலர் மட்டத்திலான பயிர் சிபாரிசுகளிற்கான ஒரு பாவனையாளர் வழிகாட்டி 1990 இல் விருத்தி செய்யப்பட்டது. இவ்வழிகாட்டி அடிப்ப டையில் வாணிப மட்டத்திலான விவசாயிகள், ஆராய்ச்சியாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், கொள்கை வகுப்பாளர்களிற்குப் பயனளிக்கக் கூடிய பணப் பயிர்களிற்கே பெரும்பாலும் விருத்தி செய்யப்பட்டது. நீண்ட காலத்திற்கு இவ்வழிகாட்டியானது புதுப்பிக்கப்படாமலே உள்ள தோடு, விரைவாகப் பார்க்கக் கூடிய விதத்தில் பாவனையாளர் தோழமையுள்ளதாகவும் இல்லை. எனவே இத்திட்டம் பிரதானமாக பாவனையாளர் தோழமையுள்ள எண்முறையிலான முகாமைத் துவ தகவல் முறையையும், எண்முறையில் தொகுக்கப்பட்ட பயிர் சிபாரிசுகளின் புதுப்பிக்கப் பட்ட தகவல்கள், பயிர்ச்செய்கை கால அட்டவணை, மேற்குறிப்பிட்ட விடயங்களிற்கான விவசாயச் சூழலியல் தகவல்கள் என்பனவற்றை யும் கொண்டுள்ளது. அனைத்து பாவனையாளர் களும் இலகுவாகவும், காலத்திற்கு ஏற்ற நம்பிக்கையான தகவல்களை பெறவும் முகாமைத்துவ தகவல் முறை உதவுவதோடு, மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை வினைத்திறனாக வும், பயனுறுதியாகவும் அணுகவும் உதவும்.

உலர் வலயத்தில் மானாவாரி மேட்டு நிலத்திற்கு பல்பணி மட்காப்பு அணையை அபிவிருத்தி செய்தல்

உலர் வலயத்தில் மானாவாரி மேட்டு நிலங்களில் மண்ணரிப்பு பிரதான ஒரு பிரச்சினையாக உள்ளது. மண் அணைகள், மர வேலிப் பயிர்கள், வெற்றி வேர் புல் வரிசைகள் போன்ற சில மட்காப்பு நடவடிக்கைகள் இப் பிரச்சியையைத் தணிப்பதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. ஆனால் பல்வேறு காரணங்களினால் பெரும்பாலான விவசாயிகள் இம்முறைகளைப் பின்பற்றுவதில்லை. இவ்வா றான நடவடிக்கைகளிலிருந்து எவ்விதமான இலாபமும் கிடைக்காமையே பிரதான காரணமாகும். இதனால் விவசாயிகள் தமது பண்ணை நிலங்களில் பொருளாதார பயனற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள தயங்குகின்றனர். மிக நெருக்கமாக மண் அணைகளை ஸ்தாபிக்கும் போது நிலத்தைப் பண்படுத்துவதற்கு இயந்திரங்களைப் பயன்படுத் துவதிலுள்ள பிரச்சினைகளும் இம்முறையை விவசாயிகள் பின்பற்றாமல் விடுவதற்கான இன்னொரு முக்கியமான காரணியாகும். எனவே இந்த ஆராய்ச்சியின் நோக்கம் பாரம்பரிய பாதுகாப்பு முறைகளிற்குப் பதிலாக பல்பணி மட்காப்பு அணைகளை விருத்தி செய்வதாகும். முன்மொழியப்பட்ட மட் காப்பு அணைகள் மட்காப்பு, மேற்பரப்போட்ட அருவி முகாமைத்து வம், மழை நீர் அறுவடை, பருவகால, பல்லாண்டு பயிர்களிலிருந்து பெறப்படும் பொருளாதார நன்மைகள் போன்ற பல பணிகளை முன்மொழியப்பட்ட மட் காப்பு அணைகள் வழங்கும். முன்மொழியப்பட்டப் பாதுகாப்பு அணை 90 ச.மீ அகலத்தையும், 60 ச.மீ உயரத்தையும் கொண்டிருக்கும். அணை களில் பயிரிட பரிசோதிக்கப்பட்ட பயிர்களாவன; அகத்தி, குட்டை முருங்கை, சுண்டங் கத்தரி, மாதுளை, சேரை, கறுவா என்பனவாகும். இந்த ஆராய்ச்சி 2012/13 காலபோகத்தில் மஹாஇலுள்ளமையில் ஆரம்பிக்கப்பட்டு, இப்பரிசோதனையின் நீண்ட கால பலாபலன் களை அறிந்து கொள்வதற்காக அடுத்து வரும் ஐந்து போகங்களிற்கு தொடர்ந்தும் மேற்கொள்ள ப்படவுள்ளது.

தொழில்நுட்பப் பரம்பல்

மண், நீர் பாதுகாப்பு, காணி அபிவிருத்தி, அதனோடு தொடர்புடைய பாடப் பரப்புகள்

- இலங்கை விவசாயச் சேவைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களிற்காக (ஆராய்ச்சி அலுவலர்கள், விவசாய அலுவ லர்கள், விரிவுரையாளர்கள்) மட்காப்பு, காணி அபிவிருத்தி ஆகியவற்றில் இரண்டு 5 நாள் பயிற்சிகள் நடாத்தப்பட்டன. அறுபத்தி யெட்டு அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- வாணிப மட்டத்திலான விவசாயிகளிற்கு காணி அபிவிருத்தி தொடர்பிலான ஒரு மூன்று நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.

பத்தொன்பது வாணிப மட்டத்திலான விவசாயிகள் இதில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- ஹதபிம அதிகார சபையின் 35 தொழில்நுட்ப அலுவலர்களிற்கு மட்காப்பும், நீரேந்துப் பிரதேச முகாமைத்துவம் தொடர்பிலான ஒரு 02 நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.

- பல்கலைக் கழக மாணவர்கள், (ஜயவர்த்தனபுர, ரஜரட்டை, களனி பல்கலைக்கழகங்கள்) கரபிஞ்ச விவசாயக் கல்லூரியின் டிப்ளோமா மாணவர்கள், நவலாயந்தென்ன மாவட்ட பயிற்சி நிலைய மாணவர்கள், பல பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகியோரிற்காக மண், நீர் பாதுகாப்பு தொடர்பான 12 ஒரு நாள் பயிற்சிகள் நடாத்தப்பட்டன. மொத்தமாக இருநூற்றி நாற்பது பேர் இவற்றில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மண், நீர் பாதுகாப்பு செய்துகாட்டல்கள்

- நில்லம்பை சமுர்த்தி பயிற்சி நிலையத்தில் தேவையான மண், நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளுடன் ஐந்து (05) ஏக்கரில் ஒரு செய்து காட்டற் துண்டம் ஆயத்தம் செய்யப்பட்டது. பண்ணையிலும், பண்ணைக்கு வெளியேயும் மண், நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளிற்கான தொழில்நுட்ப வழிகாட்டிகளில் கவனஞ் செலுத்தப்பட்டது.

- பிந்துனுவெவை, சேவைக் காலப் பயிற்சி நிறுவனத்தில் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள செய்து காட்டலிற்கு அருகே ஏனைய மண், நீர் பாதுகாப்பு முறைகளிற்காக ஒரு ஏக்கர் நிலத் துண்டம் அடையாளம் இடப்பட்டுள்ளது. இதிர் தனி மேடை, சாய்வு நில விவசாயத் தொழில் நுட்பம், சமவுயர வடிகான்கள் போன்றன செய்து காட்டப்பட வுள்ளன.

- சீத்தா எலிய ஆராய்ச்சி நிலையத்தின், செய்து காட்டற் துண்டத்தில் பாதுகாப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தலும், பராமரித்தலும்.

- பேராதனை, பூங்கனியியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் உள்ள செய்து காட்டற் துண்டத்தில் பாதுகாப்புக் கட்டமைப்புகளை மேம்படுத்தலும், பராமரித்தலும்.

வானொலி நிகழ்ச்சிகள்

- மண், நீர் பாதுகாப்பு, நீரேந்துப் பிரதேச முகாமைத்துவம், விவசாயக் காலநிலையும், காலநிலை மாற்றமும், நீர் முகாமைத்துவம், மட்காப்புச் சட்டம் என்பன தொடர்பாக ஏழு வானொலி நிகழ்ச்சிகள் (மலையக, வயம்ப சேவைகள்) ஒலிபரப்பப்பட்டன.

தொலைகாட்சி நிகழ்ச்சிகள்

- மண், நீர் பாதுகாப்பு, விவசாயக் காலநிலையும், காலநிலை மாற்றமும், மட்காப்புச் சட்டம் என்பன தொடர்பான ஆறு தொலைகாட்சி நிகழ்ச்சிகளில் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் அலுவலர்கள் பங்குபற்றினர்.

பயிற்சிப் பட்டறைகள்

உலக நீர் தினத்தை முன்னிட்டு ஒரு பிராந்திய பயிற்சிப் பட்டறை “நீரும், உணவுப் பாதுகாப்பும்” என்னும் தலைப்பின் கீழ் நடாத்தப்பட்டது. விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், மத்திய மாகாண ஆசிரியர்கள் உள்ளடங்கலாக சுமார் என்பத்தியிரண்டு அலுவலர்கள் இதில் பங்கு பற்றினர்.

கண்காட்சிகள்

விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் போது இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் அலுவலர்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- இலங்கையின் உண்மையான மண் வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிரந்தரமான மாதிரி மண் நிலவரைபடம்

கன்னொறுவை விவசாயப் பூங்காவில் ஸ்தாபிக்கப்பட்டது.

- இலங்கையின் 14 மண் மாதிரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 21,000 மண் பொதிகள் கல்வி நோக்கங்களிற்குப் பயன்படுத்துவதற்காக பாடசாலைக ளிற்கிடையேயும், விவசாய நிலையங் களிற்கிடையேயும் விநியோகிக்கப்பட்டன

- கன்னொறுவை கண்காட்சிப் பூங்காவில் மட்காப்பு செய்துகாட்டல் களில் மழை நீரை அறுவடை செய்யும் தாங்கியொன்று நிர்மாணிக்கப்பட்டது.

- நீரரிப்பள்ள பாதுகாப்புக் கட்டமைப்பு உட்பட பொருத்தமான பொறியியல், பயிராக்கவியல் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பொருத்தமான தொழில்நுட்பங்களை ஸ்தாபித்து, புதுப்பிபதுடன் மட்காப்புச் செய்து காட்டல் இடத்தில் தற்போதுள்ள மட்காப்பு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டன.

தொழில்நுட்ப உதவிகள்

இந் நிலையத்தின் பிரதான நடவடிக்கைகளில் ஒன்று தொழில்நுட்ப ஆலோசனைகளையும், நிபுணத்துவ ஆலோசனைகளையும் வழங்கு வதாகும். 2012 ஆம் ஆண்டின் போது பின்வரும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- பி.எஸ்சி பட்ட மாணவரிற்கான ஆராய்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டல் *"அம்பாறை மாவட்ட பதியத்தலாவை பிரதேசச் செயலகப் பிரிவில் நெல் பயிரிடப்படும் பிரதேசத்திற்கான தொலையுணர்வு வகைப்படுத்தல் அணுகுமுறையை மதிப்பிடல்"* விவசாயப் பீடம், ருஹுனு பல்கலைக்கழகம்.

- பி.எஸ்சி பட்ட மாணவரிற்கான ஆராய்ச்சித் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டல் "*விகடோரிய நீரேந்துப் பிரதேசத்தில் புவியியற் தகவல் முறை, தொலையுணர்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி மட்காப்பிற்காக உப நீரேந்துப் பிரதேசங்களை முன்னுரிமைப்படுத்தல்"* விவசாயப் பீடம், இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகம்.

- ஹொரனை விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்கான பொருத்தமான பயிர் களிற்கான நிலவரைபடத்தைப் பூர்த்தி செய்தல்.

- தியகமையிலுள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு பல்கூட்டுத் தொகுதிக்கான மட்காப்பையும், மேற்பரப்போட்ட அருவி நீர் முகாமைத்துவத்தையும் ஆயத்தம் செய்தல்.

- மஹாஇலுப்பள்ளமை, வளற் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் வெளிக்கள மரபணு வங்கியை அபிவிருத்தி செய்வதற்காக அடிப்படை நிலவரைபடம், சமவுயரக் கோட்டு நிலவரைபடம், மேற்பரப்போட்ட அருவி நீர் முகாமைத்துவம் ஆகியவற்றை ஆயத்தம் செய்தல்.

- அம்பேபுஸ்ஸ பண்ணையில் (தலகொல்ல பிரிவு) 10 ஹெக்டயர் காணிக்கான வடிகான் வடிவமைப்புத் திட்டத்தினை ஆயத்தம் செய்தல்.

- அம்பேபுஸ்ஸ பண்ணையில் சிறிய குளமொன்றை ஸ்தாபிப்பதற்கான அடிப்படை நிலவரைபடமொன்றை ஆயத்தம் செய்தல்.

- பின்வரும் மாகாணங்களிற்கிடைப்பட்ட பிரதேசத்திற்கான மாகாணங்களிற்கு இடைப்பட்ட பிரதேச வரைபடத்தை ஆயத்தம் செய்தல்.
    - அநுராதபுரம்
    - மொணராகலை
    - கண்டி
    - பொலன்னறுவை

- முறையான நீர்ப்பாசனத் தொகுதியை ஸ்தாபிப்பதற்காக பள்ளேகல, பலகொல்லவிலுள்ள திறந்த சிறைச் சாலையில் சமவுயரக் கோட்டு நிலவரைபடத்தை ஆயத்தம் செய்தல்.

- மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு மட்காப்பு, மேற்பரப்பு அருவி நீரோட்டத் திட்டத்தை ஆயத்தம் செய்தல்.

- விவசாயத் திணைக்களத்தின் பிரதான விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களையும், நிலையங்களையும் காட்டும் நிலவரை படத்தை ஆயத்தம் செய்தல்.

- மண், நீர் பாதகாப்பு நியமங்களும், மட் காப்புக் கட்டமைப்புகளிற்கான கொடுப்பணவு களும் என்னும் பிரசுரம் புதுப்பிக்கப்பட்டு மீள ஆயத்தம் செய்யப்பட்டது.

- மஹாஇலுப்பள்ளம பண்ணைக்கான மட்காப்பு, நில அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்தல்.

- "தெயட்ட கிருல" கண்காட்சித் திடலிற்கான மட்காப்பு, காணி அபிவிருத்தித் திட்டத்தினை ஆயத்தம் செய்தல்.

- விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழா கண்காட்சிக்கான தொழில்நுட்ப உதவிகள்.

- பண்டாரவளை பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சிப் பண்ணையில் 5 ஏக்கர் நிலத்தில் மண், நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை அடையாளமிடல்.

- பதுளை, றிதிபானை முதியோர் இல்லத்தில் 4.4 ஹெக்டயர் காணியில் மட்காப்பு, காணி அபிவிருத்தி நடவடிக்கைகள்.

- உல்பொத்த, மடவளையில் 12 ஏக்கர் காணியிலும், தெல்தொட்டை இல் 2 ஏக்கர் காணியிலும், கித்துள் எல்லவில் 3 ஏக்கர் காணியிலும் மட்காப்பு, காணி அபிவிருத்தி நடவடிக்கைகள்.

- கம்பஹா, கச்சேரி பல் கூட்டுத் தொகுதிக்கான காணி அபிவிருத்தித் திட்டத்தை ஆயத்தம் செய்தல்.

- பேராதனையில் மண் சரிவு ஏற்பட்ட இடத்தில் மட்காப்பு நடவடிக்கைகளிற் கான தொழில்நுட்ப உதவி.

தொழில்நுட்பக் குழுக்களில் பிரதிநிதித்துவம்

- பல்வேறு தேசிய, பிராந்திய அபிவிருத்தித் திட்டங்களிற்கான சுற்றாடல் தடைநீக்கங் களை வழங்கும் குழுக்கள். பின்வரும் திட்டங்கள் காணிகளைத் துண்டங் களாக்கலும், விடுதித் திட்டங்களும் (20), கற்களை தோண்டும் திட்டங்கள் (50), சிறிய நீர் மின்வலு உற்பத்தித் திட்டங்கள் (42), மரங்களைத் தறிக்கும் திட்டங்கள் (40).

- முன்மொழியப்பட்ட "உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம்" தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு.

- பதுளை மாவட்டத்தில் முன் மொழியப்பட்ட "மொரன நீர்த்தேக்கத் திட்டம்" தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

பிரசுரங்கள்

- இலங்கையில் பின்பற்றப்படும் மண், நீர் பாதுகாப்பினைக் காட்டும் அறிவூட்டல் சுவரொட்டிகளை அச்சிடல். 12,000 சுவரொட்டிகள் அச்சிடப்பட்டதோடு, அவற்றில் சுமார் 8850 சுவரொட்டிகள் பாடசாலைகள், கமநல சேவை நிலையங்கள், விவசாயப் பாடசாலை ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்பட்டன.

- மட்காப்புச் சட்டம் தொடர்பான அறிவூட்டல் துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. 10,000 துண்டுப் பிரசுரங்கள் வரை அச்சிடப்பட்டு, அவை பயிற்சிகளில் பங்குபற்றியோ ரிற்கு விநியோகிக்கப்பட்டன.

- மண், நீர் பாதுகாப்பு தொழில்நுட்பப் புத்தகத்தை அச்சிடல். இப்புத்தகம் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் தொழில் நுட்ப அலுவலர்களின் கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

மண்காப்புச் சட்டம்

- அலுவலர்களிற்கும், பெருந்தோட்டத் துறையிலுள்ளோரிற்கும் (தேயிலையும் இறப்பரும்), மாகாண விவசாய அலுவலர்க ளிற்கும், பாடசாலை ஆசிரியர்களிற்கும் முப்பத்தி நான்கு (34) அறிவூட்டல் நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- பொதுமக்கள் மட்காப்புச் சட்டம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக நான்கு (04) பெரிய விளம்பரப் பலகைகள் இறம்பொடை, கந்த சந்தி, கீர்த்திபண்டாரபுர, வெலிமடை ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

- ஏற்கனவே வைக்கப்பட்டுள்ள மட் காப்பு அறிவூட்டல் விளம்பரப் பலகைகள் பேணிப் பராமரிக்கப்பட்டன (ஆறு விளம்பரப் பலகைகள்)

- இரயில் நிலையங்களில் காட்சிக்கு வைப்பதற்காக (6 அடி x 4 அடி) மட்காப்பு அறிவூட்டல் விளம்பரப் பலகைகள் அச்சிடப்பட்டன.

அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்

தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்

- இலங்கையில் காலநிலை மாற்றங்களிற்கு ஏற்ப சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட இசைவாக்கமடைதல் தொடர்பான திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசகராப் பணியாற்றல். ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், இலங்கை.

- காலநிலை மாற்றங்களிற்கான இசைவாக்கமடைதல் தொடர்பாக தேசிய நிபுணத்துவக் குழுவில் ஒரு அங்கத்தவராகப் பணியாற்றல்.

- இலங்கையின் அதி மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலிற்கு அமைய மலைநாட்டில் நிலப்பாவனை வடிவங்களின் தாக்கம் தொடர்பாக ஆராயும் நிபுணர்களின் குழுவில் ஒரு அங்கத்தவராகப் பணியாற்றல்.

- மொன்றியல் நெறிமுறைகளின் கீழ் HCFC உற்பத்திகளின் இறக்குமதி, ஏற்றுமதி, உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவைக்கான சிபாரிசுகளை வழங்கும் குழுவின் ஒரு அங்கத்தவராகப் பணியாற்றியமை.

- பசிய வீட்டு வாயுக்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை. செப்ரெம்பர் 5 – 6 டலஸ், வியட்நாம். உணவு விவசாய ஸ்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

- "ஹிந்து – குஷ் – இமாலாயப் பிராந்தியத்தில் நீரியல் - வானிலை நிகழ்வியக்கங்களின் இடர்களிற்கு பயனுறுதியான இடர் முகாமைத்துவம் தொடர்பாக அறிவைப் பகிர்ந்து கொள்ளல்", காத்மன்டு, நேபாளம். மார்ச் 21 – 23, 2012.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், உலக வங்கி ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டது.

- காலநிலை மாற்றங்களும், விவசாயத்தில் அதன் தாக்கங்களும் தொடர்பான பட்டறை, டிசம்பர் 13 – 16, 2011. சியோல், கொரிய குடியரசு, ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒழுங்கு செய்யப்பட்டது.

- காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம் தொடர்பான தெற்கு – தெற்கு ஒத்துழைப்பு தொடர்பான பட்டறை, பீஜிங், சீனா, ஒக்ரோபர் 18 – 20, 2011 மக்கள் சீனக் குடியரசின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

விவசாய – வானிலை அவதான வலையமைப்பைப் பராமரித்தல்

WHO வின் நியமங்களிற்கு அமைவாக 70 மழைமானிகளுடன், 28 விவசாய - வானிலை அவதான நிலையங்களுடன் விவசாய வானிலை வலையமைப்பு பராமரிக்கப்பட்டது.

தரவுத்தளத்தைப் பராமரித்தல்

விவசாயக் காலநிலை, காணி, நீர் வளங்கள் தொடர்பான தரவுகள் சேகரிக்கப்பட்டு, கணணிமயப்படுத்தப்பட்டு பல்வேறு வாடிக்கையாளர்களிற்கு வழங்குவதற்காக பராமரிக்கப்பட்டன.

2013 இற்கானத் திட்டங்கள்

ஆராய்ச்சி

- இலங்கையின் காலநிலையையும், காலநிலை மாற்றங்களின் தற்போதைய நிலையையும் கண்காணித்தல்.

- காலநிலை மாற்றத்திற்கும், மாறுதன்மைக்கும் இசைவாக்கமடைய ஒரு வழியாக பருவகால காலநிலை எதிர்வு கூறல்.

- பயிர் வளர்ச்சி ஒப்புருவாக்கல் (ஆழனநடபை) மூலம் காலநிலை மாற்றங்களினால் இலங்கை நெல் உற்பத்தியில் எற்படும் தாக்கங்களை ஆராய்தல்.

- காலநிலை முன்மாதிரிகளைப் பயன்படுத்தி இலங்கையின் எதிர்கால காலநிலையை ஒப்புருவாக்கல்.

- அதிகளவு பிரிதிறன் கொண்ட செய்மதிப் படிமங்களை அடிப்படையாகக் கொண்டு அம்பாறை, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் நெல் பயிரிடப்பட்டுள்ள விஸ்தீரணத்தையும், விளைச்சலையும் எதிர்வு கூறல் (தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டத் திட்டம்).

- நிலைபேறான காணி முகாமைத்துவத்திற்கான காணி தரமிழத்தல் மதிப்பீடு (உணவு விவசாய ஸ்தாபனத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டது).

- பிராந்திய பயிர் விளைச்சல் எதிர்வு கூறலிற்கும், காலநிலை மாற்றத் தாக்க மதிப்பீட்டிற்கும் கருவித் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்து, மதிப்பிட்டு, பிரயோகித்தல் (இது ஊபுஐயுசு காலநிலை மாற்ற விவசாயமும், உணவுப் பாதுகாப்புத் (ஊஊயுகுளு) திட்டமும்).

- பயிர் பல்லினமாக்கல், நீர் முகாமைத்து வமும் ஊடாக உலர் வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறு நீர்ப்பாசனக் குளத்தின் கீழ் பயிரின் அடர்த்தியை அதிகரித்தல் (நீண்ட காலத் திட்டம்).

- இலங்கையில் கிராம அலுவலர் பிரிவுகளில் பின்பற்றுவதற்காக பயிர் சிபாரிசுகளை எண் முறையிற் தொகுத்தல்

- உவர் வலயத்தில் மானாவாரி மேட்டு நிலங்களில் பல் தொழிற்பாட்டு மட் காப்பு அகைளை அபிவிருத்தி செய்தல்.

- வவுனியா மாவட்டத்தில் ஆழங் குறைந்த நிலத்தடி நீரின் தரத்தை ஆய்வு செய்தல். வவுனியா மாவட்டத்தில் சிறிய குளங்களில் உவர்த்தன்மையின் இடஞ்சார்ந்த பரவல்.

தொழில்நுட்ப உதவி

- அபிவிருத்தித் திட்டங்களிற்கான மட்காப்பு, மேற்பரப்போட்ட அருவி நீர் முகாமைத்துவத் திட்டங்களை தயாரித்தல்.
- பல்வேறு நிறுவனங்களிற்கு மண், நீர் பாதுகாப்பு தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை வழங்கல்.

ஏனையவை

மட்காப்புச் சட்டத்தை அமுல் செய்தல்.

விவசாயக் காலநிலை, காணி, நீர் வளங்கள் தொடர்பான தரவுத் தளத்தினைப் பராமரித்தல்

விவசாய வானிலை அவதானிப்பு வலையமைப்பைப் பராமரித்தல்.

அபிவிருத்தித் திட்டங்களிற்கான சூழற் தடைநீக்க அனுமதிகளை வழங்கல், சுற்றாடற் கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றிற்காண தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் போன்ற தொழில்நுட்பக் குழுக்களில் பிரதிநிதித்தும் செய்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	07
விவசாயப் பணிப்பாளர்கள்	02
பாட விதான விசேடத்துனர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	07
மண் அளவீட்டாளர்கள்	04
நிகழ்ச்சி உதவியாளர்	02
பட்டதாரி உதவியாளர்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
நிர்வாக அலுவலர்கள்	02
அரச முகாமைத்துவ உதவியாளர்கள்	05
விவசாய விரிவாக்க சேவையாளர்	01
சாரதி	05
காவலாளி	02
தொழிலாளிகள்	02
தொழிலாளிகள் (ஒப்பந்தம்)	02
மொத்தம்	**48**

2.1 விதை அத்தாட்சிப்படுத்தல், தாவர பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை

விதை அத்தாட்சிப்படுத்தல், தாவர பாதுகாப்பு நிலையத்தின் தூரநோக்காக விதைக் கைத் தொழில் அபிவிருத்தி, விதைகளின் தரத்திற்கு உத்தரவாதமளித்தல், தரமான பீடை நாசினியை மட்டும் பயன்படுத்துவதை எல்லைப்படுத்தல், அவற்றின் பாதுகாப்பான பாவனையை உறுதிப் படுத்தல், மூலவுயிருருத் தாவரச் சுகாதாரம் சூழல் என்பவற்றைப் பாதுகாத்தல் ஆகியனவும் இதன் பணிக்கூற்றாக தேசிய வளமைக்காக பாதுகாப்பானதும், வினைத்திறனானதுமான பீடை நாசினிகளின் பாவனையை உள்ளடக்கிய உகந்த பீடை முகாமைத்துவம், விதைகள், நடுகைப் பொருட்களின் தர உத்தரவாதம் என்பவற்றினூடாக விவசாயத்தில் அதி உன்னத நிலையை அடைதலும் காணப்படுகின்றது.

வி.அ.தா.பா.நி பேண்தகு விவசாயத்திற்காக விதை நடுகைப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு, மூலவுயிருருப் பாதுகாப்பு, ஒழுங்காக்கல் சட்டவாக்கங்களை அமுல்படுத்தல், என்பவற்றி னூடாக தேசதத்தின் உணவுத் தற்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான சேவையை வழங்கு கின்றது. இது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் (விஅசே), தாவர பாதுகாப்புச் சேவைகள் (தாபாசே), பீடை நாசினிகளின் பதிவாளர் (பீப) தாவர கருமூலவள நிலையம் (தாகமூநி) ஆகியவற்றின் மூலாதார முகாமைத்துவ நிலையமாக விளங்குவதுடன் தர உத்தரவாதமளிக்கப்பட்ட விதைகள், நடுகைப் பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தல், தாவர பாதுகாப்பு, விவசாயப் பீடை நாசினிகளின் கட்டுப்பாடு என்பவற்றினூடாக விவசாயிகளிற்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

வி.அ.தா.பா.நி பின்வரும் சட்டங்கள் சம்பந்தமான ஒழுங்காக்கல் தொழிற்பாடுகளைக் கொண்டு ள்ளது.

1. தாவர பாதுகாப்புச் சட்டம் இல 35, 1999ம் ஆண்டு
2. பீடை நாசினி கட்டுப்பாட்டுச் சட்டம் இல 33, 1980ம் ஆண்டு
3. விதை சட்டம் இல 22, 2003ம் ஆண்டு

இது தேசிய தாவரப் பாதுகாப்பு அமைப்பாகவும் (தேதாபாஅ) தாவர சுகாதாரத் தகவல்கள், தாவரப் பீடை அல்லது நோய் வெளிப்பாடு என்பவற்றிற்கான தேசிய விசாரணை நிலையமாகவும் சேவை புரிகின்றது.

இங்கு 2012 ஐப்பசியிலிருந்து ஓர் நிர்வாக மாற்றம் ஏற்பட்டது. முதலில் வி.அ.தா.பா.நி இன் நிர்வாகத்தின் கீழ் காணப்பட்ட தேசிய தாவர தடுப்புக் காப்பு சேவைகளும் துறைமுகத்திலும், விமான நிலையத்திலும் உள்ள இரு தாவர தடுப்புக் காப்புச் சேவைகளும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி அதிகார எல்லைக்குள் கொண்டு வரப்பட்டது.

பாதீடு

2012 காலப்பகுதியில் பெறபட்ட ஒதுக்கீடுகளும், ஏற்பட்ட செலவுகளும் அட்டவணை 2.1.1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1 வருடாந்தப் பாதீடு 2012 (ரூ)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	30,861,629	18,284,427	59.2
மீண்டு வரும் செலவினம்	44,576,000	43,165,997	96.8
மொத்தம்	**75,437,629**	**61,450,424**	**81.5**

நிறுவனக் கட்டமைப்பு



முன்னேற்றம்

இறக்குமதி அனுமதிகள்

இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் நுழைவு நிபந்தனைகளுடன் 2012ம் ஆண்டு தை 1 இலிருந்து புரட்டாசி 24 வரை பின்வரும் பிரிவுகளிற்கு வழங்கப்பட்டன. புரட்டாதியின் பின்னிருந்து இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் தேசிய தாவர தடுப்புக்காப்புச் சேவைகளினால் வழங்கப்பட்டன.

அட்டவணை 2.1.2 2012இல் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிகள்

அனுமதிப் பத்திர வகை	இலக்கம்
மரக்கறி வித்துக்கள்	695
உடன் பழங்கள்	596
தாவரங்கள், நடுகைப் பொருட்கள்	660
தாவர உற்பத்திகள்	187
விதை உருளைக் கிழங்கு	13
விலங்குணவு	99
சமய நோக்கத்திற்கான வெட்டுப் பூக்கள்	19
மனித நுகர்விற்கான உற்பத்திகள்	32
உயிரியல் காரணிகள்	02
ஏனைய ஒழுங்கமைக்கப்பட்ட பொருட்கள்	01
மொத்தம்	**2304**

விதை உருளைக் கிழங்கு இறக்குமதி (தை இலிருந்து ஆவணி, 2012)

அட்டவணை 2.1.3 விநியோகிக்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரம்

நாடு	இறக்குமதி செய்யப்பட்ட தொகை (mt)	விடுவிக்கப்பட்ட தொகை (mt)	நிராகரிக்கப்பட்ட தொகை (mt)	நிராகரிப்பிற்கான காரணங்கள்
நெதர்லாந்து	400	400	இல்லை	-
ஐக்கிய அமெரிக்கா	100	100	இல்லை	-
பிரான்ஸ்	-	-	இல்லை	-
ஜேர்மனி	75	75	இல்லை	-
மொத்தம்	575	575	இல்லை	-

மரக்கறி, பழ விதை இறக்குமதிகள்

பின்வரும் அட்டவணை 2012 இல் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி, பழ வித்துக்களின் தொகையைக் குறிப்பிடுகின்றது. மரக்கறி வித்துக்களின் இறக்குமதிக்கான அத்தியவசிய தகவல்களை இலகுவாக மீளப்பெற்றுக் கொள்வதற்காக ஒரு தேசிய தகவல் மையம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. 2004 இலிருந்து துறைமுகம், விமான நிலையத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் உண்மையான விபரங்கள், வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் தொடர்பான தகவல்கள் என்பவற்றை வழங்குவதற்கு இது வசதியளிக்க முடியும்.

அட்டவணை 2.1.4 துறைமுகம் விமான நிலையத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி, பழ வித்துக்கள் (2012 தையிலிருந்து மார்கழிவரை)

	தாவரம்	துறைமுகம் / விதைகள் (kg)	விமான நிலையம் விதைகள் (kg)	இறக்குமதி செய்யப்பட்ட மொத்த விதைகள் (kg)
1.	துளசி	0	2	2
2.	போஞ்சி	534,108	6	534,114
3.	பீற்	22,187	1,051	23,238
4.	குடமிளகாய்	0	9	9
5.	பாகல்	2,229	2,123	4,352
6.	சுரைக்காய்	0	25	25
7.	பச்சை கோவா (Broccoli)	3	0	3
8.	கோவா	5,033	769	5,803
9.	கறிமிளகாய்	0	130	130
10.	கரட்	75,912	100	76,012
11.	பூக்கோவா	149	65	214
12.	ஓமம் இலை (celery)	10	2	12
13.	மிளகாய்	0	98	98
14	சீன கோவா	10	0	10
15.	சீன பரட்டை கீரை (Chinese kate)	545	50	595
16.	சீன முள்ளங்கி	1,770	36	1,806
17.	வெள்ளரி	2,456	828	3,284
18.	கத்தரி	287	270	557
19.	கறிமிளகாய்	459	806	1,265
20.	கங்குன்	734	0	734
21.	நோர்க்கோல் (kohlrabi)	1,253	815	2,068
22.	லீக்ஸ்	11,560	252	11,813
23.	சலாது	212	370	582
24.	வெங்காய குமிழ்	11,300	0	11,300
25.	பயிற்றை	6,109	350	6,459
26.	பீர்க்கு	4,331	1,980	6,312
27.	சோளம்	1,687,108	25	1,687,133
28.	வெண்டி	649	6,493	7,142
29.	வெங்காயம்	23,112	0.5	23,113
30.	இலை மரக்கறி	378	0	378
31.	மிளகு	6,192	15	6,207
32.	உருளைக்கிழங்கு	525,000	0	525,000
33.	பூசணி	9,089	187	9,277
34.	முள்ளங்னி	11,271	348	11,619

35.	வரிப் பீர்க்கு	0	800	800
36.	புடோல்	5	0	5
37.	சீமைப் பூசணி	6,155	0.04	6,155
38.	இனிப்புச் சோளம்	500	202	702
39.	இனிப்பு மிளகு	0	3	3
40.	தக்காளி	1,114	2,322	3,437
41.	வத்தகை	426,751	335	427,086
42.	நீற்றுப் பூசணி	0.5	0	0.5

தாவர பாதுகாப்புச் சட்டம் இல 35, 1999 இன் புதிய ஒழுங்கு விதிகள்

தற்போது அமுலிலுள்ள தாவர பாதுகாப்புச் சட்டம் இல 10 1924 இன் கீழுள்ள (விஷேட வர்த்தமானிப் பத்திரிகை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு இல 165/2 கார்த்திகை 2 1981) ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்து வதில் விவசாயத் திணைக்களம் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தது. தற்போது ள்ள ஒழுங்குவிதிகளில் இனங்காணப் படாத விடயங்களை எதிர் கொள்வதே மேற்குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளை திருத்துவதன் நோக்குமாகும். எனவே விவசாயத் திணைக்களம் புதிய ஒழுங்கு விதிகளை வடிவமைத்து சட்ட வடிவமைப்பு திணைக்களத்திடம் ஒப்படைத்து ள்ளது.

நுழைவிற்குப் பின்னான கண்காணிப்புகள்

நிலையம்	பிரதேசங்களின் எண்ணிக்கை	வகை
புத்தளம்	2	இறக்குமதி செய்யப்பட்ட தேக்கின் நடுகை
மினுவாங்கொட	4	பெறுமதி சேர்ப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட மரமுந்திரிகை
நுவரெலியா	22	இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு வளர்க்கப்படும் உருளைக்கிழங்கு தோட்டங்கள்

ஏற்றுமதிக்கான அத்தாட்சிப்படுத்தல்

தங்கஸ்பிட்டிய (Dangaspitiya) பனால, (Pannala) ஆகிய பிரதேசங்களில் ஏற்றுமதி அத்தாட்சிப்படுத்தலை இலகுவாக்குவதற்காக Cocopeat இன் ஏற்றுமதிக்கான இரண்டு உற்பத்தி நிலையங்கள் கண்காணிக்கப்பட்டன.

வயற் கண்காணிப்பு

நுவரெலியப் பிரதேசத்தில் ஒழுங்காக்கப்பட்ட பீடைகளை கண்டறியவதற்காக வயற் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தரவுகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் கடுமையான பீடை மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டம் தொடக்கி வைக்கப்படும்.

இறக்குமதி செய்யப்பட்ட தேக்கு நாற்றுகளிற்கு (Ex vitro plant) வயல் நடுகைக்கு முன்னர் நாற்று மேடை கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏற்றுமதி இடை நிறுத்தல்கள்

2012இல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகளிடமிருந்து ஐந்து இடைநிறுத்தல்களிற்கு

மாத்திரம் அத்தியவசிய தாவர சுகாதாரக் கணிப்புகள் பூர்த்தி செய்யப்படாமை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பொதிகளை ஏற்றுமதி செய்யும் போது தடுப்புக்காப்பு ஒழுங்கு விதிகளை உறுதிப்படுத்தும் வகையில் தொழிற்படுமாறு ஏற்றுமதியாளர்களிற்கு ஒழுங்காக அறிவிக்கப் பட்டுள்ளது.

கருத்தரங்குகள் / விழிப்பு நிகழ்ச்சிகள் / பயிற்சிகள்

பல்கலைக்கழக மாணவர்கள் 358 உத்தியோகத்தர்கள், விவசாயப் பாடசாலை மாணவர்கள் ஆகியோரிற்கு, தாவர பாதுகாப்புச் சட்டம் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 2012 யூலை 20 தொடக்கம் 25 வரை விவசாயத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட நூற்றாண்டுக் கண்காட்சியில் பொது மக்களிற்கு, தாவர தடுப்புக் காப்பு பற்றி விழிப்பு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. எட்டு சுவரொட்டிகளும், ஒரு துண்டுப்பிரசுரமும் தயாரிக்கப்பட்டன. விவசாயத் திணைக்கள பணிப்பாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 130 உத்தியோகத்தர்கள் பங்கு பற்றிய விதைச் சட்டத்தினை ரத்துச் செய்வது பற்றிய பயிற்சிப் பட்டறை ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. பிரதான கட்டமைப்பு முழுமையாக்கப்பட்டு மேலும் மெருகூட்டும் நோக்குடன் மீள்பார்வைக்கு உட்படுத்தப்பட்டது.

2013 இற்கான திட்டம்

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) விவசாயத்தின் பங்கினை ஊக்குவிப்பதற்காக, விதைகள், தாவரங்கள், நடுகைப் பொருட்கள், விவசாய இரசாயனங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பான, வினைத்திறனான கையாளுகையை வசதிப்படுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்
- உயர் தரமான விதைகள், நடுகைப் பொருட்களின் உற்பத்தி தொடர்பான பொருத்தமான திட்டங்கள், கொள்கை விளக்கங்களை உருவாக்கல்
- விதை கைத்தொழிலை நாட்டில் அபிவிருத்தி செய்தல்
- சிறந்த தரமான நடுகைப் பொருள் உற்பத்தியை நாட்டில் அபிவிருத்தி செய்தல்
- தேசிய தாவரச் சுகாதாரத் திறன்களை வலுப்படுத்தல்
- ஒழுங்காக்கற் கணிப்புகளை ஒழுங்கிணைத்தல்
- விவசாயத்தில் மிகவும் வினைத்திறனான பாதுகாப்பான பீடை கட்டுப்பாட்டு வழிமுறைகளை மேம்படுத்தல்

அலுவலர் பட்டியல்

தொழில்	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	01
விவசாய உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் விவசாயம்	03
விவசாயப் போதனாசிரியர்	01
நிருவாக உத்தியோகத்தர்	01
முகாமைத்துவ உதவியாளர்	10
(KKS)	02
சாரதி	03
ஊழியர் (நாட்சம்பளம்)	02
ஊழியர் (ஒப்பந்தம்)	03
மொத்தம்	**29**

2.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (SCS), கன்னொறுவை

விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் (விஅசே) விவசாயிகளிற்கு கிடைக்கக்கூடிய விதைகள், நடுகைப்பொருட்களின் தரத்திற்கு உத்தரவார மளித்தல் சம்பந்தமான ஒழுங்காக்கல் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பொறுப்புக்கள்:

- விதை சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- பெருக்குவதற்கு முன்னர் அடிப்படை விதை, நடுகைப் பொருட்களின் தரத்தை அத்தாட்சிப்படுத்தல்
- நெல், மரக்கறிகள், மறுவயற்ப்பயிர்கள் (பவப), உருளைக்கிழங்கு ஆகியவற்றின் வர்த்தக ரீதியான விதைகள், நடுகைப் பொருட்களின் தரத்தை அத்தாட்சிப்படுத்தல்
- பழ மரங்களின் அத்தாட்சிப்படுத்தலும், பழ மர நாற்றுக்களின் பதிவும்
- நாடளாவிய ரீதியில் பொருத்தமான தாய்த் தாவரங்களைத் தெரிவு செய்தலும், பதிவு செய்தலும்
- உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வித்துக்களின் முளைதிறன், வாழ்தகவு, தூய்மைத்தன்மை, ஈரப்பதன் ஆகியவற்றை ஆய்வு கூடத்தில் பரிசோதித்தல்
- இறக்குமதி செய்யப்பட்ட, உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக பின்னான கட்டுப்பாட்டு வளர்ப்புப் பரிசோதனை மேற்கொள்ளல்
- புதிய தாவர வர்க்கங்களை வெளியிடு வதற்கு முன்னர் தனித்துவத் தன்மை, சீரானதன்மை, நிலையான தன்மை (DUS) என்பவற்றிற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளல்
- விதைச் சுகாதாரப் பரிசோதனையை மேற்கொள்ளல்
- விதைச் சட்டத்திற்கமைவாக தரமான விதைகள், நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் பற்றி விதை உற்பத்தியாளர்கள், நாற்றுமேடை பராமரிப்பாளர், விதை பராமரிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர் களிற்கு பயிற்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தல்
- பிரயோக விதை ஆராய்ச்சி நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் தரமான விதை நடுகைப் பொருட்களின் உற்பத்தி சம்பந்தமான வயற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளை கண்டறிதல்
- இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் தர உத்தரவாதம்
- விதை அபிவிருத்தியும், தர மேம்பாட்டு தொழிற்பாடுகளும்
- தரவுத்தளம் முகாமைத்துவமும், கண்காணிப்பும்
- பழ நாற்றுமேடை பராமரிப்பாளர் விபரக்கொத்தினை வருடாந்தமும் விதை உற்பத்தியாளர் விபரக்கொத்தை பருவகாலங்களிலும் வெளியிடுதல்

பாதீடு

வெவ்வேறு தலைப்புகளின் கீழும், நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் பெறப்பட்ட ஒதுக்கீடுகளும், ஏற்பட்ட செலவுகளும் அட்டவணை 2.1.1.1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1.1: வருடாந்தப் பாதீடு – 2012 (ரூ மில்)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவினம்	செலவு%
மீண்டு வரும் செலவினம்	24.62	21.10	86
மூலதனம்	18.22	8.25	45
நிகழ்ச்சித் திட்டங்கள்	5.58	0.19	3
பண்ணை அபிவிருத்தி	3.01	1.07	36
விதைக் கைத்தொழில் அபிவிருத்தி	100	19.79	20
விதை வலிமைப்படுத்தல்	100	11.7	12
விதை சட்டம்	17.0	3.75	22
மொத்தம்	**268.43**	**65.85**	**25**

முன்னேற்றம்

- விதை உற்பத்திக்காக பயிரிடப்பட்ட 6116ha நெல், 831ha மறுவயற்பயிர்கள், 136ha மரக்கறிகளும் பழங்களும் 83ha உருளைக்கிழங்கு ஆகிய வயல்களின் கண்காணிப்பு
- பதினொராயிரத்து முன்நூற்று முப்பத்தாறு MT விதைநெல், 330 MT மறுவயற்பயிர் விதைகள், 43.5MT மரக்கறி விதைகள், 636 MT விதை உருளைக்கிழங்கு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 14252 விதை மாதகெளின் பரிசோதனை
- 2011 உடன் ஒப்பிடும்போது 2012இல் மறுவயற்ப்பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட பரப்பளவு முறையே 41%, 7%, 14% இனால் அதிகரிக்கப்பட்டது
- நிலப்பரப்பின் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது மறுவயற்ப்பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்திகள் முறையே 51%, 50%, 10.5% ஆல் அதிகரித்தது. இருப்பினும் 2011 பதிவு செய்யப்பட்ட பரப்பளவுடன் ஒப்பிடும் போது நெற்செய்கைப் பரப்பளவு சிறிதளவு குறைவடைந்துள்ளது. ஆனால் உற்பத்தி 41% இனால் அதிகரித்துள்ளது. இது இலங்கையின் தேசிய நெல் விதையுற்பத்தியின் 13%, ஐ பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- அத்தாட்சிப்படுத்தப்பட்ட 291 பூங்கனியியல் நாற்றுமேடைகளின் பதிவு செய்தலும், கண்காணிப்பும், அத்துடன் 621861 ஒட்டப்பட்ட பழ மரங்களின் தரம் சுட்டியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டது. 2011 உடன் ஒப்பிடும் போது பழ மரங்களின் அத்தாட்சிப்படுத்தல் 139% இனால் அதிகரித்தது.

- தனித்துவத் தன்மை, சீரானதன்மை, நிலையான தன்மை (DUS) பரிசோதனை நிகழ்ச்சியின் கீழ் 11 நெல், 25 மறுவயற்பயிர்கள், 19 மரக்கறி வர்க்கங்களின் மதிப்பீடு.

- கன்னொறுவை, சீதாஎலிய, மகாஇலுப்பள்ளம ஆகிய இடங்களில் அமைந்துள்ள நெல், மறுவயற்ப்பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு PC - 1 - PC 4 ஆகியவற்றின் 785 பின்னான கட்டுப்பாட்டு மாதிரிகளின் பரிசோதனை

- 2012 பங்குனியில் விவசாயத் திணைக்களத்தின் முதலாவது விதை ஆரோக்கிய பரிசோதனை ஆய்வுகூடத்தின் உருவாக்கம்.

- விதை சட்டத்தின் கீழ் விதை கையாள்பவர்களின் 1926-554 புதுப்பித்தல்களின் பதிவு செய்தல்.

- விதை சட்டத்தின் கீழ் வேறுபட்ட விதை, நடுகைப் பொருட்கள் உற்பத்தியாளர்களினால் பயன்படுத்தப்பட்ட 46 சுட்டிகளிற்கு அங்கிகாரம் வழங்கல்

- விதை சட்ட நடவடிக்கைகள் பற்றி 1867 அரச,தனியார் பிரிவு உத்தியோகத்தர்கள், நாற்றுமேடை பராமரிப்பாளர்கள், விதை கையாளர்பவர்களிற்கான பயிற்சி

- இணையத்தள வசதிகளை வழங்குவதன் மூலம் பிராந்திய விஅசே, நான்கு விதை பரிசோதனை ஆய்வுகூடங்கள் தலைமைக் காரியாலயத்துடன் இணைப்புகளை ஏற்படுத்தியது

- SAARC நாடுகளினால் அனுசரணை வழங்கப்பட்ட விஅசே, SCPPC ஆகியவற்றால் ஒருங்கமைக்கப்பட்ட "தரமான விதையுற்பத்தி, பதப்படுத்தல், நெல், மரக்கறிகளின் பரிசோதனையும், அத்தாட்சிப்படுத்தலும்" பற்றிய வெற்றிகரமான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி 3 இலிருந்து 12 மார்கழி வரை நடாத்தப்பட்டமை. இதில் SAARC நாடுகளின் இருபது அங்கத்தவர்கள் பங்கு பற்றினர்.

- இரண்டாயிரத்து பன்னிரண்டு வைகாசியிலிருந்து "அத்தாட்சிப்படுத்திய மரக்கறி விதைகளின் உற்பத்தி முறையின் ஊக்குவிப்பு" பற்றி ஐந்து வருட JICA நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. நான்கு விஅசே இன் பிராந்திய உத்தியோகத்தர்களும் மூன்று விதை பரிசோதனை ஆய்வு கூடங்களும் பிரதான அணியினராக பங்காற்றினர்

- பின்னான கட்டுப்பாட்டிற்கான பரிசோதனை வர்க்கங்களைக் கொண்ட இடம், DUS பரிசோதனை, விதைக் காட்சியும் இலங்கையில் விதை பரிசோதனைக்காக அபிவிருத்தியும், பழ மரங்களின் நாற்றுமேடைக்கான மாதிரி, விதைச் சட்டத்திற்கான தகவல் நிலையம், நான்கு வகையான வீதி நாடகம் ஆகியவற்றை உள்ளடக்கிய கருத்தாழும் மிக்க கண்காட்சி மையத்தை ஒழுங்காக்குவதன் மூலம் விவசாயத் திணைக்களத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நூற்றாண்டு கண்காட்சியில் அளப்பெரும் பங்காற்றியமை.

- புதிதாக வேலைக்கமர்த்தப்பட்ட 22 விவாயப் போதனாசிரியர்களும், 29 விதை பராமரிப்பாளர்களும் 2012 இல் விஅசே உடன் இணைக்கப்பட்டனர்.

- கரடியனாறு, குண்டசாலை, லபுதுவ ஆகிய பிராந்திய அலுவலகங்கள், பத்தாத்த (Bataatha) விலுள்ள பின்னான கட்டுப்பாட்டு வயல், அலுத்தரம விபஆ (STL) இலுள்ள முளைக்கவைத்தல் அறை, கன்னொறுவை இலுள்ள இரட்டை விடுதி ஆகியவற்றின் கட்டட நிர்மாண வேலைகள், விஅசே களை வலிமைப்படுத்தல், விதை கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நடாத்தப்பட்டன.

- விஅசே இன் எல்லாப் பிரிவுகளிலுமுள்ள வாகனங்கள், கட்டடங்கள் ஆகியவற்றின் அத்தியாவசிய திருத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன.
- பெல்வெகர, பல்மடுவல, ஹிங்குராகொட, கன்னொறுவை ஆகிய இடங்களிலுள்ள தாய் தாவர பழத்தோட்டங்கள், பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சத்திட்டத்தின் கீழ் திறம்பட உபகரண வசதியளிக்கப்பட்டன.
- நெல் விதை உற்பத்திக்கான வழிகாட்டி நூல் பூர்த்தியாக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டது.

விதை நெல் அத்தாட்சிப்படுத்தல்

இரண்டாயிரத்து பன்னிரண்டில் தனி விவசாயிகளும், விவசாயத் திணைக்கள பண்ணைகள், கூட்டுறவு சங்கங்கள், மாகாண சபைகள், கொவி ஜன கென்றா, மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயிகள் அமைப்புக்கள், தனியார் கம்பனிகள், அரச சார்பற்ற அமைப்புகள் போன்ற பல அரச, தனியார் பிரிவு அமைப்புகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சிகளிற்கு பதிவு செய்தன.

விதை நெல் உற்பத்தி செய்வதற்கான பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 6116ha ஆகவும் இதில் 69% பங்கானது தனியார் பிரிவிற்கானதாகவும் காணப்பட்டது. அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தியின் வேறுபட்ட மூலகங்களுக்கான பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு அட்டவணை 2.1.1.2 இல் தரப்பட்டுள்ளது. எதிர்பாராத காலநிலை நிபந்தனைகளான வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012ம் ஆண்டில் விதை நெல் உற்பத்திக்கான பதிவுசெய்யப்பட்ட நிலப்பரப்பளவு சிறிதளவு குறைந்து காணப்பட்டது.

அட்டவணை 2.1.1.2: விதைநெல் உற்பத்திக்கான நிலப்பரப்பளவு – (2011, 2012)

2011				2012		
மூலம்	**விதை வகுப்பு**	**பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**ஏற்றுக் கொள்ள பட்ட வீதம்**
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர் விதைக்குரியது	4.5	4.5	2.5	2.5	100
அரச பண்ணைகள்	அடிப்படை	65	47	67	62	100
	பதிவு செய்யப்பட்டது I	618	369	770	653	99
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	299	212	145	63	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II	53	43	7	6	100
ஒப்பந்த செய்கையாளர்கள்	அடிப்படை	31	25	4.6	3.5	100
	பதிவு செய்யப்பட்டது I			81	52	90
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	759	543	736.6	548	97
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II	120	75	22	20	91
தனியார் செய்கையாளர்கள்	பதிவு செய்யப்பட்டது I	420	138	137	75	99
	பதிவு செய்யப்பட்டது II			13	8	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	3459	2131	3734	3156	98
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II	540	307	397	297	95
மொத்தம்		**6368.5**	**3894.5**	**6116.7**	**4946**	

இரண்டாயிரத்து பன்னிரண்டாம் மாதிரி எடுக்கப்பட்ட மொத்தமான 11336mt விதை நெல்லில் 9038mt விதைநெல் தர நியமங்கள் ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது (அட்டவணை 2.1.1.3)

ஒப்பந்த செய்கையாளர்களுடன் கூடிய விவசாயத் திணைக்களப் பண்ணைகள் நிகழ்ச்சி 3897mt (35%) இனையும் தனியார் செய்கையாளர்கள் 7433mt (65%) இனையும் உற்பத்தி செய்தன

அட்டவணை 2.1.1.3: பரிசோதிக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட விதை நெல்லின் அளவுகள் 2011,2012

	2011		2012	
மூலம்	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ளப்பட்டது (%)**	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ளப்பட்டது (%)**
ஆராய்ச்சி நிலையங்கள்	4.70	87	6.2	95
அரச பண்ணைகள்	2480	90	2792	90
ஒப்பந்த செய்கையாளர்கள்	661	85	1105	87
தனியார் செய்கையாளர்கள்	4858	23	7433	75
மொத்தம்	**8003.7**		**11336.2**	

மறுவயற்பயிர் (மவப) விதைகளின் அத்தாட்சிப்படுத்தல் மறுவயற்பயிர் விதை உற்பத்தியின் கீழ் பதிவு செய்யப்பட் மொத்த நிலப்பரப்பான 831ha இல் ஒப்பந்தச் செய்கையாளர்கள் 78% ஐக் கொண்டிருந்தனர்.

மவப விதை உற்பத்தி நிகழ்ச்சியில் சோளம், பயறு, நிலக்கடலை, எள்ளு, கௌபி, குரக்கன், உழுந்து, சோயாஅவரை, துவரை ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தன. வெவ்வேறு மூலகங்களிலிருந்து பெறப்பட்ட விதை உற்பத்திக்கான விதை வகுப்புக்களின் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவுகள் அட்டவணை 2.1.1.4 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1.4: மவ்ப விதை உற்பத்தியின் கீழான நிலப்பரப்பளவு 2011, 2012

2011				2012		
மூலம்	**விதை வகுப்பு**	**பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப்பரப்பளவு (ha)**	**ஏற்றுக் கொள்ள பட்ட வீதம்**
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர் விதைக்குரியது	4.89	4.89	3.9	3.9	94
அரச பண்ணைகள்	அடிப்படை	12	9.3	26	19	97
	பதிவு செய்யப்பட்டது I	32.5	16.3	58	24	96
	பதிவு செய்யப்பட்டது II			3	3	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	35.7	13.2	12	9.5	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II			1	0.8	75
	கலப்பினம்	0.75	0.75	3.03	0.2	100
ஒப்பந்த செய்கையாளர்கள்	அடிப்படை	1.0	1.0	5.3	3.5	100
	பதிவு செய்யப்பட்டது I	75.0	56.5	97.2	74.7	97
	பதிவு செய்யப்பட்டது I			6.2	6.2	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	355.9	178.8	463	358	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II	36.6	18.0	77.6	71.4	93
தனியார் செய்கையாளர்கள்	அடிப்படை	10.5	7.8	2.1	1.2	100
	பதிவு செய்யப்பட்டது I	12.7	3.8	33.2	8.7	98
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது I	8.7	4.9	38.2	24.8	100
	அத்தாட்சிப்படுத்தப்பட்டது II	0.4	0.4	2	1.4	100
மொத்தம்		**586.64**	**315.64**	**831.73**	**610.3**	

ஆண்டு 2012 இல் மொத்த மவப விதை உற்பத்தி 330ml ஆகவும் 94% உற்பத்தி அத்தாட்சிப்படுத்தப்பட்டும் இருந்தது. வெவ்வேறு மூலகளிலிருந்து பெறப்பட்ட பரிசோதிக்கப்பட்ட அளவுகளும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்றுவீதங்களும் அட்டவணை 2.1.1.5 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1.5: பரிசோதிக்கப்பட்ட மவப விதைகளின் அளவுகள் 2011, 2012

	2011		2012	
மூலம்	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ளப்பட்டது (%)**	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ளப்பட்டது (%)**
ஆராய்ச்சி நிலையங்கள்	1.60	91	0.2	100
அரச பண்ணைகள்	27.4	88	35.5	88
ஒப்பந்த செய்கையாளர்கள்	168.1	90	289.6	95
தனியார் செய்கையாளர்கள்	20.8	93	4.8	77
மொத்தம்	**217.9**		**330.1**	

மரக்கறி விதை உற்பத்திக்கான அத்தாட்சிப்படுத்தல் மரக்கறி விதை உற்பத்திக்கென பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு 136ha இல் தனியார், ஒப்பந்தச் செய்கையாளர்களின் பங்களிப்பு 65% ஆகக் காணப்பட்டது. வேறுபட்ட மூலங்களிலும் விதை வகுப்புகளிலும் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பளவு அட்டவணை 2.1.1.6 இல் தரப்பட்டுள்ளது. தக்காளி, வெண்டி, மிளகாய், புடோல், போஞ்சி, கெக்கரி, பூசணி, கீரை, மரக்கறி கௌபி, சிறகவரை, வெள்ளரி, பப்பாசி, ஆகியவை விதை உற்பத்தி நிகழ்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1.1.6: வகுப்பு மற்றும் மூலம் அடிப்படையிலான மரக்கறி விதை உற்பத்திக்கான பரப்பளவின் சுருக்கம் 2011, 2012

		2011		2012		
மூலம்	**விதை வகுப்பு**	**பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப் பரப்பளவு**	**பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha)**	**கண்காணிக்கப்பட்ட நிலப் பரப்பளவு**	**ஏற்றுக் கொள்ளப் பட்டது (%)**
ஆராய்ச்சி நிலையம்	உற்பத்தியாளர்	1.0	1.0	1.5	1.5	72
அரச பண்ணைகள்	அடிப்படை	6.7	5.1	17	12	98
	நியமம்	26.0	23.0	26.7	20.5	96
	கலப்பினம்	0.24	0.24	1.5	1.5	100

ஒப்பந்த	அடிப்படை	0.2	0.2	3.8	2.7	70
செய்கை	நியமம் I	21.5	14.0	43.7	35.4	100
யாளர்கள்	நியமம் II			1.6	0.9	100
தனியார் செய்கை யாளர்கள்	நியமம் I	71.4	51.5	40.3	33.8	99
மொத்தம்		**127.04**	**95.04**	**136.1**	**108.3**	

இவ்வருடத்தில் 43.5mt மொத்த மரக்கறி உற்பத்தியில் 41mt அத்தாட்சிப்படுத்தப்பட்டது. வேறுபட்ட மூலங்களில் பெறப்பட்ட பரிசோதிக்கப்பட்ட அளவுகளும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நூற்றுவீதமும் அட்டவணை 2.1.1.7 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1.7: மரக்கறி விதையுற்பத்தியின் அளவுகள் 2011,2012

	2011		2012	
மூலம்	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ள பட்டது (%)**	**பரிசோதிக்கப்பட்ட அளவு (mt)**	**ஏற்றுக்கொள்ள பட்டது (%)**
ஆராய்ச்சி நிலையங்கள்	0.4	100	0.02	99
அரச பண்ணைகள்	5.6	95	8.4	92
ஒப்பந்த செய்கையாளர்கள்	7.05	91	26.4	98
தனியார் செய்கையாளர்கள்	15.86	96	8.7	84
மொத்தம்	**28.91**		**43.52**	

விதை உருளைக்கிழங்கு அத்தாட்சிப் படுத்தல்

பயிரிடப்பட்ட வேறுபட்ட விதை உருளைக்கிழங்கு வகுப்புகளின் நிலப்பரப்பளவு அட்டவணை 2.1.1.8 இல் தரப்பட்டுள்ளது. விதை உருளைக்கிழங்கு பயிடப்பட்ட மொத்த நிலப்பரப்பரளவு 86ha ஆகக் காணப்பட்டதுடன் ஒரு பிரபல்யமான உருளைக்கிழங்கு வர்க்கத்தில் (கிறனோலா) மொத்த 640mt விதை உருளைக்கிழங்கு அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

அட்டவணை 2.1.1.8: விதை உருளைக்கிழங்கு உற்பத்திக்கான நிலப்பரப்பளவு 2011, 2012

		2011		2012	
மூலம்	**வகுப்பு**	**பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha)**	**ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பளவு**	**பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பளவு (ha)**	**ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலப் பரப்பளவு**
அரச	முன் - அடிப்படை	0.14	0.11	0.25	0.21
பண்ணைகள்	அடிப்படை	45.10	39.09	52.46	48.0
	அத்தாட்சிப் படுத்தப்பட்டது	11.22	6.16	11.51	11.42
தனியார் செய்கை யாளர்கள்	அத்தாட்சிப் படுத்தப்பட்டது	19.25	18.83	22.06	22.06
மொத்தம்		**75.71**	**64.19**	**86.28**	**81.69**

விதை பரிசோதித்தல்

பேராதனை, மஹாஇலுப்பள்ளம, அலுத்தறம, பத்தாத்த ஆகிய இடங்களிலுள்ள விவசாயத் திணைக்கள விதை பரிசோதித்தல் ஆய்வு கூடங்களில் 14252 விதை மாதிரிகள் தர அத்தாட்சிப்படுத்தலிற்காக பரிசோதிக்கப்பட்டன.

விதைச் சுகாதாரப் பரிசோதனை

இலங்கையில் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளின் முதலாவது விதை சுகாதாரப் பரிசோதனை ஆய்வுகூடம் பங்குனி 2012இல் கன்னொறுவையில் நிறுவப்பட்டது.

விதை சுகாதாரப் பரிசோதித்தல் ஆய்வு கூடத்தின் நோக்கமானது நோய் வாய்ப்புக்களை அடிப்படையாகக் கொண்டு விதைகளின் நடுகைப் பெறுமதியை மதிப்பீடு செய்தலாகும். பயிரிடப்பட்ட பயிர்களில் மிகவும் முக்கியமான நோய்களில் அனேகமானவை விதையில் பிறந்தவையாகும். பீடை நாசினிகளின் பாவனையை குறைப்பதற்கான அழுத்தத்தைக் கொண்ட இன்றைய சந்தை அவசியமாகும். தகுந்த நியமங்களை உறுதி செய்வதற்கு விதைகளைப் பரிசோதித்தல் அவசியமாகும். சில விதையிற் பிறந்த நோய்களிற்கு பரிசோதித்தலே ஒரேயொரு நோய் முகாமைத்துவ தெரிவாகும்.

விதை சுகாதாரப் பரிசோதித்தல் நோக்கத்திற்கு உள்ளூரில் பயிரிடப்பட்ட பயிர்களைத் தாக்கம் விதையிற் பிறந்த நோயாக்கிகள், பயிர் உற்பத்தி தொகுதியில் அவற்றின் நோயியல் முக்கியத்துவத்தை ஆராய்ந்தறிதல், நோயாக்கிகளுக்கு சாதகமான நிலமைகள், தொற்றலிற்குள்ளான விதைத் தொகுதிகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகித்தல் மட்டங்கள், விதைச் சுகாதார கண்டறிதல் தொழில்நுட்பங்கள் என்பவை பற்றிய தகவல்களை உருவாக்கல் அவசியமாகும். Alternaria padwickii, Drechslera oryzae, Pyricularia orzae ஆகியவை நெல் விதைகளில் பிரதானமான விதையிற் பிறந்த பங்கசு நோய்களாக அடையாளங் காணப்பட்டுள்ளது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளில் சோளத்தில் நாற்று வெளிறலை தோற்றுவிக்கும் Penicillium oxalicum முக்கியமான விதையிற் பிறந்த நோயாகும். மரக்கறி, அவரை விதைகள் என்பவற்றில் அந்ராக்னோஸ் நோய், நெல்லில் ஒல்டனேரியா இலைப் புள்ளி, ஹெல்மிந்தோஸ்போரிய விதை சுகாதார

கண்டறிதல் தொழில்நுட்பங்களும், குறிப்புகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

தற்போது அதிகரித்த விதை இறக்குமதியானது நாட்டினுள் நோய்கள் அறிமுகப்படுத்தப்படும் அதிகரித்த அபாயத்தை கணிசமானளவு ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே விஸ்தரிக்கப்பட்ட நாட்டிலுள்ள விதையில் பிறந்த நோய்கள் அழியாது காணப்பட்டு விளைச்சலில் தேய்மானத்தை ஏற்படுத்தும் அல்லது அவை நாசம் விளைவிக்கும் பெருநோயை ஆரம்பிக்கலாம். எனவே விதையிற் பிறந்த தொற்றல்கள் கூடிய வரைக்கும் தடுக்கப்படல் வேண்டும்.

இந்நோக்கங்களை நிறைவேற்றுமுகமாக 2013இல் இலங்கையில் வளர்க்கப்படும் பயிர்களைத் தாக்கும் நோயாக்கிகளை அடையாளம் காணப்பதற்காக பல்தரப்பட்ட மூலங்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட விதை மாதிரிகளில் விதை சுகாதார பரிசோதித்தல் மேற்கொள்ளப்படும்.

நடுகைப் பொருட்களின் அத்தாட்சிப்படுத்தல்

அரச நாற்றுமேடைகளிலும், தனியார் நாற்று மேடைகளிலும் உற்பத்தி செய்யப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டீ சுட்டியிடப்பட்ட அட்டவணை 2.1.1.9 மொத்தமாக 62186 பழத்தாவரங்கள் 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 139% அதிகமாகும்.

அட்டவணை 2.1.1.9: 2011,2012 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தண்டொட்டப்பட்ட பழத் தாவரங்களின் எண்ணிக்கை

இனங்கள்	அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை	
	2011	2012
மா – தண்டொட்டப்பட்டது	146,979	263,745
றம்புட்டான் - தண்டொட்டப்பட்டது	27,116	105,640
தோடை - தண்டொட்டப்பட்டது	82,162	236,014
ஆனைக்கொய்யா	918	7,233
டூரியான்	282	1,716
பலா	2,591	7,513
மொத்தம்	**260,048**	**621,861**

நாற்றுமேடைகளின் பதிவு செய்தல்

2012ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த நாற்றுமேடைகளின் எண்ணிக்கை 291

தாய்த் தாவர அத்தாட்சிப்படுத்தல்

2012ம் ஆண்டில் மொத்த எண்ணிக்கையாக 368 மா, றம்புட்டான், சித்திரஸ், பலா தாய்த் தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

அட்டவணை 2.1.1.10: 2010,2011 இல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாய்த் தாவரங்களின் எண்ணிக்கை

இனங்கள்	பதிவு செய்யப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை	
	2011	2012
மா – தண்டொட்டப்பட்டது	450	242
றம்புட்டான் - தண்டொட்டப்பட்டது	357	43
சித்திரஸ்	415	75
பேரை	77	
டூரியான்	1	
பலா	12	26
மொத்தம்	**1307**	**386**

பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனை

785 விதை மாதிரிகளை மதிப்பிடுவதற்காக பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை விவசாயத் திணைக்களம் அத்தாட்சிப்படுத்திய விதை மாதிரிகள், வெவ்வேறு பயிர் வர்க்கங்களின் இறக்குமதி செய்யப்பட்ட வித்துக்கள் விதை உருளைக்கிழங்கு என்பவற்றை உள்ளடக்கு கின்றது. வெவ்வேறு பயிர் வகைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பின்னான கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளின் எண்ணிக்கை அட்டவணை 2.1.1.11 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.1.11: பரிசோதிக்கப்பட்ட பின்னான கட்டுப்பாட்டு மாதிரிகளின் எண்ணிக்கை

பயிர் வகை	பரிசோதிக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை
நெல்	128
மவப (OFC)	340
மரக்கறிகள்	272
உருளைக்கிழங்கு	32
பழங்கள்	13
மொத்தம்	**785**

தனித்துவத்தன்மை, சீரானதன்மை, நிலையானதன்மை (DUS) பரிசோதித்தல்

பிஜி – 3ஆர், ஏரி – 06-631, பிஜி 465, பொக்குரு சம்பா, எல்டி 1-5-15, சீஜசீ 3-1, பிஜி 5-15-31, பிஜி 4-2236, பிஜி 11-139, பிஜி 5-110, ஏரி 4-186 ஆகிய பதினொரு நெல் வர்க்கங்கள் கன்னொறுவையில் பின்னான கட்டுப்பாட்டு வயலில் DUS இற்காகப் பரிசோதிக்கப்பட்டன. அத்துடன் 19 மரக்கறி வர்க்கங்களும், 24 மறுவயற்பயிர்களும் பரிசோதிக்கப்பட்டன. ஐந்து நெல் வர்க்கங்கள், 8 மரக்கறிகள் 7 மறுவயற்பயிர்களிற்கு DUS பரிசோதனை கருதப்பட்ட வருடத்தில் பூர்த்தியாக்கப்பட்டது.

அட்டவணை 2.1.1.12: மேற்கொள்ளப்பட்ட DUS பரிசோதனைகளின் எண்ணிக்கை

பயிர் வகை	மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை	பூர்த்தியாக்கப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை
நெல்	11	5
மறுவயற்பயிர்	24	7
மரக்கறிகள்	19	8
மொத்தம்	**54**	**20**

விதைச் சட்டத்தை அமுல்படுத்தல்

இந்நாட்டின் விவசாயத்தில் இன்றியமையாத பிரிவான நாட்டின் விதைக் கைத்தொழிற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பிழையான பயிற்சிகளிலிருந்து விவசாயியையும், விதை பராமரிப்பாளர்களையும் பாதுகாக்கும் நோக்குடன் 2008ம் ஆண்டிலிருந்து 2003ம் ஆண்டிற்கான விதைச் சட்டம் (இல 22) அமுல்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. இவ்ஆண்டில் விதைச் சட்டத்தின் கீழ் 1926 எண்ணிக்கையான விதை பராமரிப்பாளர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 554 புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. பதினாறு முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முப்பது எழுந்தமானமான கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு விதைகள், நடுகைப் பொருட்களின் தரத்தை ஒழுங்காக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

பின்வரும் விடயங்களில் ஆராய்ச்சிக் கல்விகள் மேற்கொள்ளப்பட்டன.

1. மரக்கறி விதை பொதியாக்கலிற்கான காலாவதியாகும் திகதியை அறிந்து கொள்ளல்
2. பழத் தாவரங்களின் அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சியில் நாளாந்த வயற்பிரச்சினை களிற்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகளைக் கண்டறிதல்
3. இறக்குமதி செய்யப்பட்ட விதைத் தொகுதிகளுடன் ஒன்றிணைந்துள்ள அபாயங்களைக் கற்றல்
4. வேறுப்பட்ட பொதியாக்கும் பதார்த்தங்களின் நீராவிகடத்தல் பற்றி கற்றல்

பயிற்சி நிகழ்ச்சிகள்

தரமான விதைகள். நடுகைப் பொருட்களின் உற்பத்திப ற்றி உத்தியோகத்தர்கள், விதை பாமரிப்பாளர்களது அறிவை மேம்படுத்த பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் விஅசே சேவைகளினால் தொடரப்பட்டது.

அட்டவணை 2.1.1.13: பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை

பயிற்சி நிகழ்ச்சிகள்	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை
விதை விவசாயிகள் / நாற்று மேடை பராமரிப்பாளர்கள்	27
அரச பிரிவு உத்தியோகத்தர்கள்	780
தனியார் பிரிவு உத்தியோகத்தர்கள்	20
விதை பராமரிப்பாளர்கள்	1040
மொத்தம்	**1867**

விஅசே தகவல் தொகுதி

நாடு முழுவதற்குமான இலகுவான வினைத்திறனான தகவல் மீளப் பெறுதல், தகவல் முகாமைத்துவ பகுப்பாய்வு ஆகியவற்றிற்காக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவைகளிற்கான பிராந்திய நிலையங்கள், 4 விதை பரிசோதிக்கும் ஆய்வு கூடங்கள், 4 பின்னான கட்டுப்பாட்டு நிலையங்கள் என்பவற்றை இணைப்பதன் மூலம் விதை அத்தாட்சிப்படுத்தல் தரவுத்தளத்திற்கான அபிவிருத்தி தொடர்ப்பட்டது. மேலும் தலைமைப்பீடங்கள், பிரதேச அலகுகள், ஆய்வுகூடங்கள் பின்னான கட்டுப்பாட்டு நிலையங்கள் ஆகிய எல்லாப் பிரிவிலும் கடமையாற்றும் எல்லா உத்தியோக அங்கத்தவர்களினதும் சுய விபரத்தை பெற்றுக் கொள்வதற்கான புதிய தரவுத்தளத் தொகுதியை வடிவமைத்தல் பூர்த்தியாக்கப்பட்டது.

வெளிநாட்டுப் பயிற்சி

JJCA வுடன் கூட்டாக மூன்று உத்தியோகத்தர்கள் விதை பரிசோதனைக்காக ஜப்பானில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

2013 இற்கான திட்டம்

- அத்தாட்சிப்படுத்திய விதைகள் மூலம் 30% தேசிய விதை நெல் தேவையை அடைவதற்காக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையை வலுப்படுத்தல்
- விதை பொதியாக்கல், சேமித்தல், காலாவதித் திகதி பற்றி விதை பராமரிப்பாளர்கள் எதிர்கொண்ட அறுவடைக்குப் பின்னான பிரச்சினைகள் சம்பந்தமான விதை ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு விதை ஆராய்ச்சி அலகை விருத்தி செய்தல்
- களைவிதை தொற்றல்களை கண்டறிவதற் காக விதைப் பரிசோதனை ஆய்வு கூடத்தில் களைகளை கண்டறியும் பிரிவொன்று தொடக்கி வைக்கப்பட்டமை புதிய தாவர உட்புகுதல்களின் அபாய மதிப்பீடு அத்துடன் விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட விதைகளினூடு உட்புகக்கூடிய களை இனங்களின் உட்புகுதலை தடுப்பதற்காக உட்புகக்கூடிய நச்சுத் தன்மையான களைகளைக் கற்றல்
- விதை அத்தாட்சிப்புடுத்தல் நிகழ்ச்சியின் தகவல் பரம்பலை மேம்படுத்துவதற்காகவும், எமது சேவையின் வினைத்திறனான இலகுவான தொடர்புகளிற்கும் பொது மக்களின் விழிப்புணர்விற்காக சிஅசே இணையத்தளத்தை வடிவடைத்தல்
- விதைக் கைத்தொழிலிலுள்ள தவறான பயிற்சிகளை தவிர்த்து நாட்டில் உயர் தரமான விதைகள், நடுகைப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதற்காக அரச, தனியார் பிரிவு விதை பராமரிப்பாளர்கள் மத்தியில் விதை உற்பத்திச் செயற்பாட்டை ஒழுங்காக்குவதற்கான விதை சட்டத்தை அமுல்படுத்தல்
- எல்லா விதை பராமரிப்பாளர்களின் மத்தியிலும் விநியோகிப்பதற்காக தரமான

விதைகள், நடுகைப் பொருட்களின் உற்பத்திப ற்றி வழிகாட்டிகளைத் தயாரித்தல்

- ஒவ்வொரு பயிர்ச் செய்கை பருவகாலத்திலும் விதை உற்பத்தியாளர்கள் வழிகாட்டி, நடுகைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் வழிகாட்டி என்பவற்றைத் தயாரித்தலும் விநியோகித்தலும்
- விதை பராமரிப்பாளர்களிற்கு பயிர் வழிகாட்டியை பிரசுரித்தல்
- புதிதாக திருத்தப்பட்ட விதை சட்டம், ஒழுங்கு விதிகளை முடிவாக்கி வெளிப்படுத்தல்
- குண்டசாலை, லபுதுவ, கரடியனாறு, பத்தாத்த ஆகிய இடங்களிலுள்ள விஅசே பிராந்திய அலுவலகம் கட்டட வேலைகளை பூர்த்தி செய்தல்
- பரந்தனில் புதிய விதை பரிசோதிக்கும் ஆய்வுகூடம், அலுவலகத் தொகுதியையும், மாத்தறை, யாழ்ப்பாணத்தில் விஅசே பிராந்திய அலுவலகத்தையும் திர்மானித்தல்
- எல்லா விஅசே அலகுகளையும் உத்தியோகத்தர்கள் உபகரணங்கள் என்பவற்றின் மூலம் வலிமைப்படுத்தல் அவசியமாகும்
- விதை ஆராய்ச்சிக்காக உயிர்தொழில்நுட்பவியல் அலகையும், விதை சுகாதாரப் பரிசோதனை அலகையும் ஸ்தாபித்தல்
- விஅசே, 23 பிராந்திய அலுவலகங்கள், நான்கு விதை பரிசோதித்தல் ஆய்வு கூடங்கள், நான்கு பின்னான கட்டுப்பாட்டு வயல்கள் போன்ற நாடளாவிய ரீதியில் பரவியுள்ள சிக்கலான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதுடன், விதை அத்தாட்சிப்படுத்தல், பழ மர அத்தாட்சிப்படுத்தல், விதைச் சட்டம் ஆகிய பெயர்களைக் கொண்ட மூன்று பிரதான தேசிய நிகழ்ச்சிகளை கொண்டுள்ளது. இது பணிப்பாளர் / மேலதிக பணிப்பாளரினால் நிர்வாகம் மேற்கொள்வதற்காக விவசாய பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் மீள்கட்டமைக்கப்படல் வேண்டும்.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்கள்	03
விவசாய அலுவலர்கள்	09
விவசாயக் கண்காணிப்பு அலுவலர்	04
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்	03
விவசாயப் போதனாசிரியர்கள்	120
ஆராய்ச்சி உதவியாளர்கள்	01
ஆராய்ச்சி உப உதவியாளர்கள்	04
பொது முகாமைத்துவ உதவியாளர்கள்	10
சாரதிகள்	16
மின்னியலாளர்கள்	01
காவலாளிகள்	17
ஊழியர்கள்	50
விதை தொழில்நுட்பவியலாளர்கள்	10
விதைத் தொழிலாளி	30
சுகாதார ஊழியர்	01
மொத்தம்	**280**

2.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை

விவசாயப் பீடைகளிலிருந்து தாவர நலத்தினை உறுதி செய்வதற்கென பொருளாதார ரீதியில் பொருத்தப்பாடுடையதும், பிரயோக ரீதியில் சாத்தியமானதும் சூழலியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுமான பீடை முகாமைத்துவ தொகுதிகளை மேம்படுத்துவதற் கென தாவரப் பாதுகாப்புச் சேவையானது முதன்மையாக வலுவளிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பீடை முகாமைத்துவ நுட்பங்களை மேம்படுத்தல், திடீரென உருவாகும் நோய் பீடைகளை கட்டுபடுத்தல், பெருமளவு விதைக் களஞ்சியங்களில் தூமமூட்டலினூடாக பீடை களை கட்டுப்படுத்தல் என்பனவற்றுடன் ஒருங்கி ணைந்த பீடைமுகதமைத்துவ (IPM) நிகழ்ச்சி களை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் கள மட்டத்தில் மதிப்பீடு செய்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் இப் பரந்துபட்ட நோக்கமானது அடையப்பட முடியும். விவசாய சுற்றாடலில் காணப்படுகின்ற நீரியல் களைகள், ஆக்கிரமிப்புக்குரிய வெளிநாட்டு தாவரங்கள் போன்ற விரும்பத்தகாத தாவரங்களினது பாதிப்புக்களை இழிவாக்குதல் போன்றனவும் தாவரப் பாதுகாப்புச் சேவைக்கென குறித்தொதுக்கப்பட்ட முக்கிய தலையாய பணிகளாகும்.

1999ம் ஆண்டு 33ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டம் மூலம் இந்நாட்டினுள் தாவரப் பாதுகாப்புடன் இணைந்த எல்லா ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளும் செயற்படுத்தப்படுவதனால் மேற்சொன்ன நோக்கங்கள் அடையப்பட முடியும். இவற்றோடிணைந்ததாக பரீட்சார்த்த அளவுகளில் தாவரப் பீடை நாசினிகள் உள்ளடங்கலாக புதிய பீடை நாசினிகளின் மதிப்பீடு, தாவர நலத்தினை உறுதி செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்ட பீடை நாசினிகளின் தொடர்ச்சியான வினைத்திறனை மதிப்பீடு செய்தல் என்பனவும் தாவரப் பாதுகாப்புச் சேவையின் அடிப்படையான செயற்பாடுகளில் அமைந்தனவாகும். விவசாயி களின் களத்தில் புதிய களை நாசினிகளை பரீட்சார்த்த அளவுகளில் மதிப்பீடு செய்வத னூடாக 1981ம் ஆண்டு பீடை நாசினிகள் சட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளவைகளை அமுல்படுத்து வதிலும் இந்நடவடிக்கைகள் உறுதுணையாக அமைகின்றன.

தூர நோக்கு

பாதுகாப்பானதும் வினைத்தினுடையதுமான தாவரப் பாதுகாப்பு உத்திகளினூடாக விவசாய த்தில் மேன்மை நிலையை அடைதல்

பணிக் கூற்று

உள்நாட்டு விவசாயப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கென சூழலுக்கு மிக குறைந்த பாதிப்புக்களை தரக்கூடிய பீடைக் கட்டுப்பாட்டு உத்திகளை மேம்படுத்திய வண்ணம் 1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வைகளை உள்வாங்குதல்

பாதீடு

அட்டவணை 2.1.2.1 இல் ஆண்டுக்கான வருடாந்தப் பாதீடு வழங்கப்படுகிறது

அட்டவணை 2.1.2.1 வருடாந்தப் பாதீடு 2012 ஆண்டு (ரூ)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டு வரும்	20,29,000	1,888,197	93
மூலதனம்	1,705,000	1,578,045	93
மொத்தம்	**3,734,000**	**3,466,242**	**93**

முன்னேற்றம்

1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கமைப்புக்களை நடைமுறைப்படுத்தல்.

தாவரப் பாதுகாப்புச் சேவைக்கு வழங்கப்பட் டுள்ள பிரதான பொறுப்புக்களில் அதிகாரமளிக்க ப்பட்ட அலுவலர்களை நியமிப்பதும் முக்கியமான ஒன்றாகும். தாவரப் பாதுகாப்புச் சேவையினை வினைத்திறனாக நடைமுறைப்படுத்தவென வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியவாறு 20 அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் இவ்வருடத்தில் நியமிக்கப்பட்டனர். கீழ்வரும் தலைப்புக்களினை கொண்டதாக ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சியொன்று புதிதாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கென நடாத்தப்பட்டது.

1. 1999ம் ஆண்டு 35ம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் சட்ட ரீதியான பின்னணி
2. கள மட்டத்தில் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்
3. இலங்கையில் தடுப்புக்காப்பு முக்கியத்துவ முடைய புதிய பீடைகள்

இதனுடன் சேர்ந்ததாக ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்த 36 அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் இப் பயிற்சி நிகழ்ச்சி மூலம் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நெல், மரக்கறிகள் மற்றும் இலை மரக்கறிகளில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சிகள்

செலவு குறைந்த, சூழலுக்கிசைவான பீடை முகாமைத்துவத் தொகுதிகளை உள்வாங்கிக் கொண்டு பீடை நாசினிகளில் இழிவளவில் தங்கியுள்ள ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தில் அறிவு வாய்ந்த விவசாயச் சமூகத்தை விருத்தி செய்வதே இந்நிகழ்ச்சியினது பரந்துபட்ட நோக்கமாகும். நெல், மரக்கறிகள் மற்றும் இலை மரக்கறிகள் எனும் மூன்று பிரதான வகைகளுள் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சிகளை தாவரப் பாதுகாப்புச் சேவை நடைமுறைப்படுத்தியது.

நெல்லில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

ஒரு போகத்தின் போது 14 பயிற்சி நாட்களைக் கொண்ட போகத்திற்கு தொடர் பயிற்சிகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சியாகும். விவசாயத் திணைக்களத்தின் மாகாண, மற்றும் இடை மாகாண பகுதிகளில் சேவையாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் விவசாய விரிவாக்க செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய தொடர்புடைய அலுவலர்கள் ஆகியோர் இலக்குக் குழுவினராக அமைந்திருந்தனர். இவ் வருடத்தில் அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் சேவையாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்கான போகத்திற்கு

தொடர்ச்சியான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நிகழ்ச்சிகள் தாவரப் பாதுகாப்புச் சேவையினால் நிறைவு செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளால் கள நிலமைகளில் பிரயோகிக்கப்படக்கூடிய பல்வேறுபட்ட பிரயோக நுட்பங்களை நடைமுறைப்படுத்தி பீடைக் குடித்தொகையை முகாமை செய்தல் மற்றும் நெற் பீடைகளினது ஒவ்வொரு வாழ்க்கை வட்டப் பருவங்களையும் அடையாளம் காணல் ஆகிய நோக்கங்களை இந்நிகழ்ச்சி கொண்டிருந்தது. இவற்றுடன் விவசாயச் சூழல் தொகுதியில் இயற்கை எதிரிகளை பாதுகாத்தல் மற்றும் பீடைக் குடித்தொகையை சேத மட்டத்தின் கீழ் முகாமை செய்தல் என்பவற்றினையும் இந்நிகழ்ச்சி கருத்தூன்றியது.

மரக்கறிப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

விவசாயிகள் மற்றும் விரிவாக்க உத்தியோகத்தர்கள் மத்தியில் மரக்கறிப் பீடைகளை முகாமைத்துவம் செய்ய ஒரு சிறந்த மாற்று நுட்பத்தை மேம்படுத்தல், மற்றும் செலவு குறைந்த, சூழல் நேயமான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதிகளின் விருத்தி என்பவற்றுக்காக இந்நிகழ்ச்சி நடைமுறைப்படுத்த ப்பட்டது. இந்நிகழ்ச்சி விவசாயிகளின் செயன்முறைப் பிரயோக செய்து காட்டல்கள், அலுவலர்களுக்கான பயிற்சிகள், விவசாயிகளுக் கான பயிற்சிகள், மாதிரி ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவப் பண்ணைகளை தாபித்தல், விவசாயிகளுக்கான வயல்விழா மற்றும் இலத்திரனியல் பல்லூடக நிகழ்ச்சிகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

சில முக்கிய நிகழ்வுகள் கீழே தரப்படுகின்றன

- கன்னொறுவை சேவைக்காலப் பயிற்சி நிலையம், அங்குணகொலபெலஸ்ஸ சேவைக் காலப் பயிற்சி நிலையம், திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் ஆகிய இடங்களில் அலுவலர்களுக்கான எட்டு பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன (390 மனித நாட்கள்)
- 211 விவசாயிகளின் களமட்டத்திலான பிரயோகச் செய்து காட்டல்கள் நடாத்தப்பட்டன.
- சிறிபுர, வில்கமுவ, அம்பன்பொல, கொக்கரெல்ல, கொலங்கொட மற்றும் வாரியப்பொல ஆகிய பகுதிகளில் பன்னிரென்டு விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன (475 மனித நாட்கள்)
- திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், மற்றும் கன்னொறுவை விவசாயத் தொழிநுட்பப் பூங்கா ஆகிய இடங்களில் இரண்டு ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்திற்குரிய மாதிரிப் பண்ணைகள் தாபிக்கப்பட்டன. இவற்றுக்குச் சமாந்தரமாக 40 விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கான போகத்துக்குத் தொடர்ச்சியான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்திற்கான பயிற்சிகள் திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றன.
- ஒரு தொகுதி விவசாயிகள் மற்றும் விவசாயத் திணைக்கள உயர் நிலை அலுவலர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் திருகோணமலை மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், கொக்கரல்ல மற்றும் கொலங்கொட விவசாயிகளின் களங்கள் என்பவற்றில் விவசாயிகளுக்கான மூன்று வயல் விழா நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.
- ரூபாவஹினி தொலைக்காட்சி அலைவரிசையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியும் ஒளிபரப்பபட்டது.

இலை மரக்கறிகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம்

தென் மாகாணத்தில் இலை மரக்கறிப் பயிர்களுக்குரிய ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நுட்பங்களின் மேம்பாடு மேலும் தொடரப்பட்டது. இவ்வருடத்தில் களுத்துறை மாவட்டத்தின் பலபிட்டிய, கெசல்கெனவ பட்ட

கொட, பட்டுவந்தர, அரவ்வல, மடபத, மெட்டேகொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இலை மரக்கறிச் செய்கையிலீடுப்படும் சுமார் 70 வரையிலான விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டனர். பொன்னாங்காணி (*Alternathere sessilis*) யில் நெமற்றோடு கட்டுப்பாடு, வல்லரை (*Centrella asiatica)* யில் சிற்றுண்ணிக் கட்டுப்பாடு மற்றும் சூழல் நேயமான பீடைக் கட்டுப்பாட்டு முறைகள் என்பன ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பீடை நாசினிகளின் பரீட்சார்ந்த அளவுகளினாலான சோதனைகள்

பின்வரும் புதிய களை நாசினிகள் அவற்றின் உயிரியல் செயற்திறனை மதிப்பிடவென விவசாயிகளின் கள நிலைமைகளில் மதிப்பீடு செய்யப்பட்டன. ஒப்பீட்டளவில் குறைந்தளவில் பிரயோகிக்கப்படுவதுடன் மிகுந்த இலக்குப் பிரத்தியேகத் தன்மையுடையனவுமான இக்களை நாசினிகள் ஏற்கனவே சிபாரிசிலுள்ள களை நாசினிகளிலும் அதிக அனுகூலத் தன்மை வாய்ந்தவை.

நெற்பயிருக்கான களை நாசினிகள்

- புதிய இரு மூலங்களிருந்தான பிஸ்பிரிபக் சோடியம் 10% எஸ்.சி களை நாசினியானது சோதிக்கப்பட்டதுடன் நெற்செய்கையில் காணப்படுகின்ற மூன்று வகையான ஆண்டுக் களைகளைக் கட்டுபடுத்த ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டிருந்த பிஸ்பிரிபக் சோடியம் (நொமினி) இற்கு மாற்றாக இவற்றைப் பயன்படுத்த முடியும் என சிபாரிசு செய்யப்பட்டது.
- ஒரு புதிய மூலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பிறிட்டிலாகுளொர் 30% ஈ.சி களை நாசினியானது சோதிக்கப்பட்டதுடன் இது நெற் செய்கையில் காணப்படுகின்ற மூன்று வகையான ஆண்டுக் களைகளையும் முளைத்தலுக்கு முன்னர் கட்டுப்படுத்தவென ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டிருந்த பிறிட்டிலாகுளோர் இற்கு மாற்றாகப் பயன்படுத்தப்பட முடியும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டது.
- புரோபியுரி சஸ்பியுரோன் 10% எஸ்.சீ களை நாசினியானது பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களில் ஆரம்பக் கட்டமாக சோதிக்கப்பட்ட பின்னர் மேலதிகமாக விவசாயிகளின் கள நிலமைகளில் சோதிக்கப்பட்டு நெற் செய்கையில் காணப்படுகின்ற மூன்று வகையான ஆண்டுகளைகளையம் அழிக்கவல்ல ஒரு பரந்த வீச்சு களைநாசினி என சிபாரிசு செய்யப்பட்டது.
- பிராந்திய ஆராய்ச்சி நிலையங்களில் முதற்கட்ட சோதனைகளின் போது செயற்பாடு உறுதி செய்யப்பட்ட பிஸ்பிரிபக் சோடியம் 40 கிராம் / லிட்டர் மெடாமிபொப் 100கிராம் / லிட்டர் எஸ்.ஈ களை நாசினியானது மேலதிக மதிப்பீகள் மேற்கொள்ளப்பட்டு நெற்செய்கையில் காணப்படுகின்ற மூன்று வகையான களைகளையும் வினைத்திறனாக கட்டுப்படுத்தவல்லது என சிபாரிசு செய்யப்பட்டது.

பெரிய வெங்காயச் செய்கைக்கான களை நாசினி

ஒரு புதிய மூலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ஒக்சிபுளோர்பென் 24% ஈ.சி களை நாசினியானது மதிப்பீடு செய்யப்பட்டதுடன் பெரிய வெங்காயச் செய்கையில் காணப்படுகின்ற ஆண்டுக்களை களை முளைத்தலுக்கு முன் கட்டுப்படுத்தவென ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்ற ஒக்சிபுளோர்பென் இற்கு ஒரு மாற்றாக இதனை பயன்படுத்த முடியும் என சிபாரிசு செய்யப்பட்டது.

அன்னாசி செய்கைக்கான களை நாசினி

- ஒரு புதிய மூலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற டையுரோன் 80 டப்ளயு. பீ ஆனது விவசாயி களின் கள நிலமைகளில் சோதிக்கப்பட்ட துடன் அன்னாசி செய்கையிலுள்ள களைகளை முளைத்தலுக்கு முன்னர்

கட்டுப்படுத்தவென ஏற்கனவே சிபாசிசு செய்யப்பட்டிருந்த டையுரோன் 80 டப்ளியு.பீ இற்கு ஒரு மாற்றாக இது பயன்படுத்தப்பட முடியுமென சிபாரிசு செய்யப்பட்டது.

- RARDC மாகாந்துறையில் சோதிக்கப்பட்ட ஒரு புதிய திடநிலை டையுரோன் 500 கிராம் லிட்டர் எஸ்.சி மேலதிகமாக விவசாயிகளின் கள நிலமையின் கீழ் சோதிக்கப்பட்டதுடன் அன்னாசிச் செய்கையிலுள்ள பிரதான களைகளை முளைத்தலுக்கு, முன்னர் மற்றும் ஆரம்ப நிலையில் முளைத்தலுக்குப் பின்னர் வினைத்திறனாக கட்டுப்படுத்த பயன் படுத்தப்பட முடியும் எனச் சிபாரிசு செய்யப்பட்டது

நீரியல் களைகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சி

சல்வீனியா (*Salvinia molesta*) வுக்கு (*Cyrtobagous salviniae* மற்றும் குள வாழை (*Eichornia crassipes*) இற்கு *Neochetina bruichi, Neochetina erichhronine* ஆகிய உயிரியல் கட்டுப்பாட்டு மூலங்களை தாவரப் பாதுகாப்புச் சேவை பேணிவருகின்றது. அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களினது வேண்டுகோளிற்கு இணங்க இவற்றினது அறிமுகம் மற்றும் மாதிரிகளை விடுவித்தல் என்பன நடாத்தப்பட்டன. இவ் ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் குறித்த பங்குதாரர்களுக்கு விடுவிக்கப்பட்ட உயிரியல் கட்டுபாட்டு மூலத்தினது வாழ்க்கை வட்டம் மற்றும் இலக்குக் களையுடன் காட்டுகின்ற இடைத்தாக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

தேசிய பூங்காக்கள், நீர்நிலைகள் என்பவற்றில் களைகளை கட்டுப்படுத்தம் விசேட எத்தனிப்புடன் நீர்ப்பாசன திணைக்களம் மற்றம் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றுடன் கூட்டிணைந்து பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்வரும் நீர்நிலைகள் மற்றும் தடாகங்களில் ஆக்கிரமிப்புக்குரிய களை இனங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் தாவரப் பாதுகாப்புச் சேவை ஈடு பட்டது (அட்டவணை 2.1.2.2

அட்டவணை 2.1.2.2 நீர்த்தேக்கங்களும் குளங்களும்

குளம் / நீர்த்தேக்கத்தின் பெயர்	மாவட்டம்	விடுவிக்கப்பட்ட உயிரியல் கட்டுபாட்டு முலம்	களை இனம்
• வெஹெரபெத்த கலவில் 3 குளங்கள்		*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
• மகமகஸ்ஸகமவெவ		*Neochetina spp*	குளவாழை
• கெலசியபலவவெவ		*Neochetina spp* மற்றும்	குளவாழை
• நாபடவெவ	அனுராதபுரம்	*Cyrtobagous Salviniae*	குளவாழை, சல்வீனியா
• கிரியங்குணகொலவெவ		*Neochetina spp*	
• கம்மியகஸ்வெவ		*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
• கொனகும்புகொலவ		*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
• மகவெவல்கடவெவ		*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
• கிரிகல்லவெவ		*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
• கொணகும்புகொல்லவ		*Neochetina spp*	குளவாழை
• லாகுகல தேசிய பூங்கா குளம் • கடகெட கமவெவ மற்றும் • யல் பொத வெவ	அம்பாறை	*Cyrtobagous Salviniae*	சல்வீனியா
மாவிலாறு மற்றும் நீலபுர – நீர்ப்பாசனத் திணைக்களக் குளங்கள்	திருகோணமலை	*Neochetina spp*	குளவாழை
வன ஜீவராசிகள் காப்புத் திணைக்கள குமன சரணாலய குளம்	மொனராகலை	*Neochetina spp*	குளவாழை
வன ஜீவராசிகள் காப்புத் திணைக்கள வஸ்கமுவ சரணாலய குளம்	மாத்தளை	*Neochetina spp*	குளவாழை

தேசத்துக்கு மகுடம் மற்றும் விவசாயத் திணைக்கள நூற்றாண்டு விழா கண்காட்சிகளில் போது மேற்சொன்ன களைகளினது உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளடங்கிய 10,000 துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

விதைத் தூமமாக்கல்

பின்வருமிடங்களில் களஞ்சியப் பீடைகளின் தாக்கத்தை கட்டுபடுத்தவென கீழே குறிக்கப்படும் அளவுடைய விதைத் தொகுதிகள் தூமமிடல் செய்யப்பட்டன. பெல்வெகெர, பொலன்னறுவை, கந்தளாய், முருங்கன், கரடியனாறு, கிளிநொச்சி, மகா இலுப்பள்ளம, நிகவரெடிய, அலுத்தரம, ரகங்கல, சீதா எலிய, பீதுருதலாகால

விதை நெல் - 2,599 மெ.தொன்

மறுவயற் பயிர்கள் - 409 மெ.தொன்

விதை உருளைக்கிழங்கு – 262 மெ.தொன்

தூமமாக்குதலின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, மகா இலுப்பள்ளமயிலுள்ள விதை மற்றும் நடுகைப் பொருட்கள் விருத்திப் பண்ணையில் "விதைக் களஞ்சியங்களை தூமமாக்கலுக்குத் தயார் படுத்தலும் தூமமாக்கல் நுட்பங்களும்" எனும் தலைப்பில மைந்த விசேட பயிற்சி நிகழ்ச்சியொன்று தொடர்புடைய அலுவலர்களுக்கு நடாத்தப்பட்டது.

ஆயுர் வேத மருந்துகள் கூட்டுத் தாபனத்தினுடைய வேண்டுகோளுக் கிணங்க 04 மெற்றித் தொன் "திப்பிலி" தூமமிடப்பட்டது. இதனுடன் ஆவணக் காப்புத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க நெடுங் காலமாக பாதுகாத்துப் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் தூமமிடப்பட்டன.

தென்மாகாண விவசாய திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட களஞ்சியப் பீடை கட்டுப்பாடு எனும் பயிற்சி நிகழ்ச்சிக்கு தாவரப் பாதுகாப்புச் சேவையிலிருந்து வளவாளர்கள் அனுப்பிவைக்கப் பட்டனர்.

கறையான் கட்டுப்பாடு

பல கட்டிடங்களிலும், கட்டிட நிருமாணம் நடைபெறுகின்ற இடங்களிலும் தாவரப் பாதுகாப்புச் சேவை கறையான் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது. பழப்பயிர் ஆராய்ச்சி நிறுவனம் - கொரன, விவசாயப் பீடம்- பேராதனை, கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் - கன்னொறுவை ஆகிய இடங்களில் இக் கட்டுபாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தென் மாகாண விவசாயத் திணைக்கள 35 விரிவாக்க உத்தியோகத்தர்கள் பங்கேற்ற கட்டிடங்களில் கறையான் கட்டுபாடு எனும் தலைப்பிலமைந்த பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

கொறிப்பான் கட்டுப்பாடு

கேகாலை, மாத்தளை, மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், விரிவாக்க உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 280 பேருக்கு நெற்பயிரில் பருவம் முழுவதும் அமைந்த கொறிப்பான்கள் கட்டுப்பாட்டு பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் கீழ் மூன்று பிரயோக ரீதியான செய்து காட்டல்களும் நடாத்தப்பட்டன.

களுத்துறை மாவட்ட இலிம்ப பகுதியில் ஈர நில நெற்பயிர்ச் செய்கையில் சேதங்களை இழிவாக்கும் சரியான நுட்பங்களை விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தும் ஒருங்கிணைந்த கொறிப்பான் முகாமைத்துவ நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது.

கமநல சேவைகள் திணைக்களத்தினுடைய வேண்டுகோளுக்கிணங்க, திவிநெகும நிகழ்ச்சியின் விதைப் பொதிகள் களஞ்சியத்தில் கொறிப்பான் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தாவரப் பீடைகளின் தீவிரமான மேற்பார்வை

நெற் செய்கையில் பீடைத் தாக்கங்களின் நிலையை தாவரப் பாதுகாப்புச் சேவை நாடு தழுவிய ரீதியில் சேகரித்து அவற்றை வரைபு ரீதியான விபரணங்களுடன் சாராம்சப் படுத்தி

எல்லா மாவட்டங்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் தபால் மூலம் விநியோகம் செய்தது. தற்போதைய பீடைப் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகளை உசார்ப்படுத்தவென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன விவசாய நிகழ்ச்சிகளினுடாக தற்போதைய பீடைகளின் நிலை தொடர்பிலான குறுந் தகவல்கள் அடிக்கடி ஒலிப்பரப்பட்டன. சில பிரதேசங்களில் நிலவிய கடுமையான நோய் நிலை காரணமாக (விசேடமாக வெங்காய குமிழ் அழுகல் நோய்) சிறிய மற்றும் பெரிய வெங்காயச் செய்கையில் நோய் பீடை நிலைமைகளை பரந்தளவில் அறிக்கையிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஏனைய நடவடிக்கைகள்

பாத்தீனியத்தின் (*Parthenium heterophorus*) கட்டுப்பாடு

வெளிநாட்டுக்குரிய ஆக்கிரமிப்புக் களையான பாத்தீனியத்தின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

வவுனியா மாவட்ட பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் ஒருங்கமைக்கப்பட்ட "பாத்தினியம் கட்டுப்பாட்டு நாள்" எனப் பெயரிடப்பட்ட நிகழ்ச்சியில் தாவரப் பாதுகாப்புச் சேவை அலுவலர்கள் பங்கேற்றனர் 10 கெக்ரயர் பரப்பில் இக்களையினை கட்டுப்படுத்துவதற்கான செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டன. 500 பதாதைகள் மற்றும் 2000 துண்டுப் பிரசுரங்கள் என்பன விநியோகிக்கப்பட்டன.

மஞ்சள் புள்ளி வெட்டுக்கிளியின் (*Aularches miliaris*) கட்டுப்பாடு

இவ்வருடம் இப்பீடைத் தாக்கமானது ரம்புக்கனையில் பரப்பே மலைப்பகுதியினை அண்மித்த பகுதிகளிலும், மொனராகலவில் உடவதிய பகுதிகளிலும் மிக அதிகமான தாக்கத்தை உள்ளடக்கியதாக நாட்டில் சில பகுதிகளிலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்தது. இப் பீடைத் தாக்கத்தை எதிர் கொள்வதற்கான விசேட பயிற்சி நிகழ்ச்சி பாதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் அலுவலர்களுக்கு நடாத்தப்பட்டது. மஞ்சட் புள்ளி வெட்டுக்கிளியின் கட்டுப்பாட்டுக்குரிய துண்டுப்பரசுரம் ஒன்று தயார் செய்யப்பட்டு இதன் பாதிப்பு காணப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் தாவரப் பாதுகாப்பு சேவையினால் அமுல் படுத்தப்படும் நேரடி இணையத்தினூடான பீடை அடையாளங் காணல் நிகழ்ச்சிக்கு தரவுத் தாள் (Fact sheets) கள் பரப்பப்பட்டன.

பயிர்ச் சிகிச்சை முகாம்கள்

தேவகுவ, கலின்பிந்துனுவெல, பதவிய, ரம்பாவ ஆகிய பகுதிகளில் அனுராதபுர மாகாணத்திடை விவசாயத் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப் பட்ட பயிர்ச் சிகிச்சை முகாம்களில் தாவரப் பாதுகாப்புச் சேவை அலுவலர்கள் பங்கேற்றனர். இதன் மூலம் 1500 விவசாயிகள் நன்மையடைந்தனர்

வீட்டுத் தோட்டங்களில் பீடைக் கட்டுப்பாட்டுக்கான இயற்கைப் பீடை நாசினிகள்

வீட்டுத் தோட்டங்களில் இயற்கைப் பீடை நாசினிப் பாவனையை மேம்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. பீடை நாசினித் தன்மை கொண்ட தாவரப் பிரித்தெடுப்புக்களை தமது களங்களில் பாவிக்க விவசாயிகளை ஆர்வமூட்டுதல், மற்றும் விரிவாக்க அலுவலர்களை இதற்கென பயிற்றுவித்தல் ஆகிய நோக்கங்களை இந்நிகழ்ச்சி கொண்டிருந்தது.

இப்பகுதியினூடாக 75 அலுவலர்களும் 117 விவசாயிகளும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

றம்புட்டானில் நோய் முகாமைத்துவம்

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, ககவ மற்றும் கடபங்கொட பகுதிகளில் 8 இடங்களில் "றம்புட்டானில் நோய் முகாமைத்துவத்துக்கான கட்டுப்பாட்டு முறைகள்" எனும் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

கொய்யாவில் வேர் முடிச்சு நெமற்றொடு கட்டுப்பாடு

2008ம் ஆண்டு அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து அறிக்கையிடப்பட்ட வேர் முடிச்சு நெமற்றொடுவின் தாக்கம் காணப்பட்ட கொய்யாத் தோட்டங்களின் கண்காணிப்பு மேலும் தொடரப்பட்டது. மேற்குறித்த தொற்றல் நிலைமையை கட்டுப்படுத்துவதில் தாவரப் பாதுகாப்புச் சேவையின் மகா இலுப்பள்ளமையிலுள்ள உப பிரிவு பிரதான பங்கு வகித்தது.

இதனுடன், அனுராதபுரம் மாவட்டத்தில் கொய்யாச் செய்கையிலீடுப்படும் விவசாயிகளுக்கு நெமற்றொடு தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சியுமளிக்கப்பட்டது.

புனித அரச மரங்களினது நோய் பீடைகள்

பல வரலாற்றுக் கோயில்களுக்கு சொந்தமான பல எண்ணிக்கையான அரச மரங்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

கண்காட்சிகள்

விவசாயிகள் வாரம் மற்றும் 2012ல் ஓயாமடுவ தேசத்துக்கு மகுடம் கண்காட்சிகளில் தாவரப் பாதுகாப்புச் சேவையின் நடவடிக்கைகளை பிரதிப்பலிக்கும் காட்சிக் கூடங்கள் நிறுவப்பட்டன.

2012ல் நடைபெற்ற விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழா கொண்டாட்ட கண்காட்சியின் ஒரு சமாந்தர நடவடிக்கையாக கன்னொறுவை விவசாய தொழிநுட்ப பூங்காவில் ஒரு நிரந்தர கண்காட்சிப் பகுதி தாபிக்கப்பட்டது.

மாணவர் பயிற்சிகள்

குண்டசாலை விவசாயப் பாடசாலையின் இரண்டு மாணவர்கள் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் மூன்று மாதங்கள் பயிற்றுவிக்கப் பட்டனர்.

அரச ஒருங்கிணைப்பு நிகழ்ச்சிகள்

களுத்துறை மாவட்டத்தின் இலிம்ப, பொருவகஸ்தன்ன மற்றும் மில்லவ பகுதிகளில் வீட்டுத் தோட்டங்களின் விருத்தியின் போது தாவரப் பாதுகாப்பு சேவையின் போம்புவல உப பிரிவு ஆலோசனைச் சேவை வழங்குவதில் பிரதான பங்காற்றியது.

புதிய நிகழ்ச்சி

வித்தியாசமான வகை பீடைத் தாக்கங்களை அடையாளம் காணவும் அவற்றுக்கான தீர்வுகளையும் வேண்டி நிற்கும் களமட்டத்தில் சேவையாற்றும் விரிவாக்க உத்தியோகத்தர்களினது நடவடிக்கைகளை வசதிப்படுத்தவென தாவரப் பாதுகாப்புச் சேவையானது ஒரு புதிய நிகழ்ச்சியான "நேரடி இணைய பீடை அடையாளம் காணல் சேவை" யினை ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்ச்சிக்கான மின்னஞ்சல் முகவரி ppsepest@gmail.com என்பதாகும். இந்நிகழ்ச்சி 100 அலுவலர்களை பதிவுசெய்து ஒரு நல்ல பிரதிப்பலிப்பைப் பெற்றுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலர்களினால் அனுப்பப்படுகின்ற நிழற்பட மற்றும் சலனப்படங்களினை அடையாளம் காணலும் பொருத்தமான ஆலோசனைகளை பரிமாறிக் கொள்ளலும் ஆகிய நோக்கதோடு 2012ம் அண்டு கார்த்திகை மாதம் இந்நிகழ்ச்சியானது ஆரம்பிக்கப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களினது இணைந்த செயற்பாட்டுடன் இந்நிகழ்ச்சியானது அமுல் படுத்தப்படுகிறது.

2013ம் ஆண்டுக்கான திட்டம்

- தாவரப் பாதுகாப்புச் சட்டத்தினை அமுல்ப்படுத்தல்
- நெல்லில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
- மரக்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை மேம்படுத்தல்

- இலை மரக்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை மேம்படுத்தல்
- திடீர் பீடைத் தாக்கத்தை கட்டுப்படுத்தல்
- நெற் செய்கையில் கொறிப்பான் கட்டுப்பாடு
- வெளிநாட்டுக்குரிய ஆக்கிரமிப்பு நீர்க்களைகளின் உயிரியல் ரீதியான கட்டுப்பாடு
- பயிர்ச் செய்கைச் சூழலிலுள்ள வெளிநாட்டுக்குரிய ஆக்கிரமிபபுக் களை களின் கட்டுப்பாடு

  களை நாசினிகளின் பரீட்சார்த்த அளவுச் சோதனைகள்

  விசேட செயற்பாடுகள்

  - நெற் பீடைத் தாக்கங்களுக்கான தரவு வங்கி தாபிப்பு

  - வர்ணப் படங்களுடன் மரக்கறிப் பயிர் நோய்களுக்கான தரவுத் தாள்களின் தயாரிப்பு

  - அரச கட்டிடங்களில் கறையான் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
    - கறையான் கட்டுப்பாட்டு தொடர்பில் விவசாயத் திணைக்கள அலுவலர்களுக்க பயிற்சியளித்தல்

- நிரந்தர பயிர்ச் சிகிச்சை முகாம் நிகழ்ச்சிகள்
- பயிற்சிக்கு தேவையான மூலப் பொருட்களின் உற்பத்தி

அலுவலர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	02
விவசாய உத்தியோகத்தர்	03
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	08
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	04
சாரதி	04
வேலையாட்கள்	05
களஞ்சிய வேலையாள்	01
பாரவூர்தி சுத்தப்படுத்துவபர்	01
மொத்தம்	**30**

2.1.3 தேசிய தாவரத் தடுப்புக்காப்பு சேவை (NPQS), கட்டுநாயக்க

நாட்டில் விவசாயம் தொடர்பான தொழிற்துறை களின் விருத்திக்காக பீடைகளற்ற தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி இறக்குமதியினை வசதிப்படுத்தலுக்கு இலங்கையில் தேசிய தாவர தடுப்புக் காப்பு சேவைக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. இதனை அடைந்து கொள்ள ஆராய்ச்சி மற்றும் சேவைகளுடன் தொடர்புபட்ட தடுப்புக் காப்பு நடவடிக்கைகள் இரண்டுக்கும் மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவையின் (NPQS) முக்கிய நடவடிக்கைகளாக தாவரச் சுகாதார சான்றிதழளித்தல், ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் தாவர மற்றும் தாவரப் பொருட்களின் கண்காணிப்பும் பரிகரிப்பும், தடுத்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளின் பரிசோதனைகள், ஆர்வமுடைய குழுக்களுக்கு பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளினூடாக தாவரத் தடுப்புக் காப்பினுடைய அனைத்துத் தோற்றப்பாடுகள் தொடர்பிலும் அறிவினைப் பரம்பலடையச் செய்தல் என்பன அமைகின்றன.

2012 ம் ஆண்டு பங்குனி முதலாம் திகதி முதல் தேசிய ஓசோன் பிரிவு NPQS உடன் இணைந்து மெதைல் புரோமைட்டு இனுடைய தூமமாக்கல் நடவடிக்கைகளை, தடுப்புக் காப்பினை ஒழுங்கமைப்பதற்கான செயற்பாடுகளை மேற் கொள்ளும். விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தாவரத் தடுப்புக் காப்பும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை ஒரே தடவையிலேயே அடையாளம் கண்டுள்ளார். இதனால் NPQS ஆனது 2012ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் திகதி முதல் ஒரு தனியான நிறுவனமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு தற்போது விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாக நிருவாகம் செய்யப்படுகின்றது. NPQS ஆனது தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவதை ஆரம்பித் துள்ளது. மேலும் NPQS தன் நடவடிக்கைகளை தேசிய ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், விவசாயத் திணைக்களத்தின் நிலையங்கள் மற்றும் நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுகிறது. இவ்வறிக்கையானது 2012ம் ஆண்டில் நிதி, தொழிநுட்ப மற்றும் சேவை தொடர்பான நடவடிக்கைகளின் அடைவினை காட்டி நிற்கிறது.

பாதீடு

மீண்டு வரும், மூலதன மற்றும் கருத்திட்டங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு, செய்யப்பட்ட செலவினங்கள் என்பன அட்டவணை 2.1.3.1 இல் தரப்படுகின்றது.

அட்டவணை 2.1.3.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	6,278,000	3,130,839	50
மீண்டு வரும்	7,502,000	6,846,096	91
NARP திட்டம்	2,868,700	1,59,089	55
மொத்தம்	**16,648,700**	**11,568,022**	**69**

முன்னேற்றம்

தாவரத் தடுப்புக்காப்புச் நடவடிக்கைகள் பிரிவின் 2012ம் ஆண்டில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அட்டவணை 2.1.3.2 இல் நிரற்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1.3.2 – 2012ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நடவடிக்கைகள்	அடைவுகள்
இடைமறிக்கப்பட்டவைகளின் பதிவுகள்	239
அனுப்பப்பட்ட இடைமறிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	1095
கண்காணிப்புக்களினது பதிவுகள்	1123
உள்நுழையும் சாவடிகளுக்கு அனுப்பப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை	1116
தென்னந்தும்பு பொருட்களின் சோதனைகளுக்கான பதிவுகள்	206
சோதிக்கப்பட்ட தென்னந்தும்பு பொருட்களின் அறிக்கைகள்	195
சோதனைக்கென சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பதிவு	53
தாவரச் சுகாதார சான்றிதழ்கள் வழங்கல்	05
அழிக்கப்பட்ட சந்தேகத்திற்கிடமான நாட்டுக்குள் வந்திறங்கிய பொருட்களின் எண்ணிக்கை	768
வழங்கப்பட்ட இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை	862
(புரட்டாதி 25ம் திகதி முதல் மார்கழி 31ம் திகதி வரை – 2012ல்)	

தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமன்றி இப்பிரிவு தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கை களும் செயல் முறைகளும் தொடர்பான 14 பயிற்சி நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைத்து நடாத்தியுள்ளது.

பூச்சியியல்

ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் பொருட் களின் மீதான நோயாக்கிகளின் சோதனை

ஏற்றுமதிகள்

- இலை அலங்காரத் தாவரங்களை ஏற்றுமதி செய்யும் 15 நாற்று மேடைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட 16924 ஏற்றுமதிக்குரிய இலை அலங்காரத் தாவர மாதிரிகள் தாவர ஒட்டுண்ணி, நெமற்றோடுகளுக்காக சோதிக்கப்பட்டன. இவற்றுள் 936 மாதிரிகள் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளினால் தொற்றலேற்பட்டுக் காணப்படுகின்றன.

- ஏற்றுமதிக்குரிய இலை அலங்காரத் தாவர மாதிரிகள் 6284 பூச்சி பீடைகள் மற்றும் சிற்றுண்ணிகளுக்காகவும் சோதித்தறியப் பட்டன. எந்தவொன்றிலும் தொற்றல் நிலை காணப்பட்டதாக பதியப்படவில்லை.

- 91 ஏற்றுமதிக்குரிய தென்னந்தும்பு பொருட்களின் மாதிரிகள் 13 தென்னந்தும்பு தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு பூச்சி பீடைகள், ஒட்டுண்ணிகள், மண் தொற்றுதல்கள் மற்றும் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகள் என்பனவற்றுக்காக சோதிக் கப்பட்டன. ஆறு தொற்றல்கள் பதியப் பட்டன.

- இலை அலங்காரத் தாவரங்களை ஏற்றுமதி செய்யும் நாற்று மேடைகளினால் சமர்ப்பிக் கப்பட்ட 112 விசேட மாதிரிகள் இந்நாற்று மேடையாளர்களினது பீடை கண்காணிப்பு நிகழ்ச்சிகளை வசதிப்படுத்து வதற்காக பூச்சி பீடைகளுக்காகவும், தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காகவும் சோதிக்கப்பட்டன.

இறக்குமதி

- 56 இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குத் தொகுதிகள் துறை முகத்தில் சோதனையிடப்பட்டன. இவற்றின் மாதிரிகள் பூச்சி பீடைகளுக்காகவும், தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காக வும் சோதனையிடப்பட்டன. எந்தவொன்றி லும் தொற்றுதல் இருப்பதாக பதியப்பட வில்லை.

- கலப்பின சோளம், நிலக்கடலை, முந்திரிகை, வெங்காயக் குமிழ்கள், பாக்கு, நொதிக்கப்பட்ட கொக்கோ விதைகள், ஸ்ப்பக்னம் பீட், பாசி உள்ளடங்கலாக 340 இறக்குமதி செய்யப்பட்ட தாவரப் பொருட் கள் பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணிகள், மற்றும் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடு என்பவற்றுக்காக சோதிக்கப் பட்டன. இவற்றுள் 08 மாதிரிகள் பொதுவான களஞ்சியப் பீடைகளினால் தொற்றலடைந்து காணப்பட்டன. இந்தோனேசியவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாக்கு மாதிரிகள் *Cryptolestess* இனங்களினால் தொற்ற லடைந்து காணப்பட்டன.

பயிற்சிகள்

பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரி கள், பாடசாலைகள் என்பவற்றின் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பூச்சியியல் பிரிவினால் பயிற்சியளிக்கப்பட்டனர். ஏற்றுமதி செய்யப்படுகின்ற இலை அலங்காரத் தாவர நாற்றுமேடை அலுவலர்களுக்கு பல விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

நோயியல்

ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட் தொகுதிகளின் மீது நோயக்கிகளுக்கான சோதனை.

ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட் தொகுதிகள்

இலை அலங்காரத் தாவர பகுதிகள்

ஏற்றுமதிக்கான இலை அலங்காரத் தாவர மாதிரிகள் 5645 சோதிக்கப்பட்டன. அவற்றுள் பின்வரும் நோயாக்கிகள் காணப்பட்டன. *Mucor* இனம், *Aspergillus* இனம், *Fusarium* இனம், *Colletrotricum* இனங்கள், *Macrophomina* இனம், *Penicillium* இனம், *Rhizopus* இனம், *Xanthomonas* இனம், மற்றும் *Erwinia* இனம்,

தென்னந்தும்பு

ஏற்றுமதிக்கான 30 தென்னந்தும்பு மாதிரிகள் தென்னந்தும்பு தொழிற்சாலைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நோயாக்கிகளுக்காக சோதிக்கப் பட்டன. இவற்றுள் *Mucor* இனம், *Aspergillus* இனம், *Rhizopus* இனம், மற்றும் *Thalaviopsis paradoxa* ஆகிய நோயாக்கிகள் இம்மாதிரிகளில் காணப்பட்டன.

Thalaviopsis paradoxa வானது இவற்றில் தடுப்புக் காப்பு செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியத்துவமான பீடையாக கருதப்படுகிறது.

இழைய வளர்ப்புத் தாவரங்கள்

115 பரீட்சிப்புகளின் போது 161,8904 தாவரங்கள் சோதனையிடப்பட்டன. தொற்றுக்களை கொண்டி ருந்த மாதிரிகள் பரீட்சிப்புக்களின் போது மறுக்க ப்பட்டதுடன் இவ்வுற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமான அறிவுறுத்தல் களும் வழங்கப்பட்டன.

இறக்குமதிப் பொருட்தொகுதிகள்

விதை உருளைக் கிழங்கு

விதை உருளைக் கிழங்கு மாதிரிகள் 80 சோதனையிடப்பட்டதுடன் அவற்றுள் பின்வரும் நோய்கள் காணப்பட்டன. வெள்ளிப்பொருக்கு, பொதுப் பொருக்கு, மென்னழுகல், வலைப் பொருக்கு மற்றும் உலர் அழுகல் என்பன வாகும். தடுப்புக் காப்புச் செய்ய வேண்டிய எந்தவொரு நோயாக்கியும் இருக்கவில்லை.

விதைகள் மற்றும் ஏனைய நடுப் பொருட்கள்

419 மாதிரிகள் சோதனையிடப்பட்டன. எந்த வொரு தடுப்புக் காப்புச் செய்யப்பட வேண்டிய நோயாக்கியும் காணப்படவில்லை.

ஒப்படைக்கப்பட்ட மாதிரிகளின் சோதனை

65 மாதிரிகள் சோதனையிடப்பட்டதோடு பொறுப்பு வாய்ந்த பகுதியினருக்கு ஆலோசனை கள் அல்லது கண்டறிதல்கள் வழங்கப்பட்டு ள்ளன.

பயிற்சிகள்

மூன்று பயிற்சி நிகழ்ச்சிகளும் ஐந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன. 23 கீழ் நிலைப் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா மாணவர்கள் மேற்பார்வை செய்யப்பட்டனர்.

ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

விதை உருளைகிழங்கில் *Ralstonia solanacearum* இன் மூலகூற்று நிலை அடையாளம் காணல் (*E.F smith*) மற்றும் Draceana sandreana வின் தொற்றலேற்றப்பட்ட இலையில் மூலக்கூற்றியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கக் காரணியை கண்டறிதலும் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைகளை அறிதல் ஆகிய ஆராய்ச்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

களை உயிரியல்

ஏற்றுமதி, இறக்குமதி பொருட்தொகுதிகளில் நோயாக்கிகளுக்கான சோதனைகள்

ஏற்றுமதிகள்

ஏற்றுமதிக்குரிய கொக்கோ உற்பத்திகள் 180 சோதனையிடப்பட்டன. அவற்றுள் 51 உற்பத்திகள் உயிருள்ள விதைகளின் கலப்பட முள்ளவையாக காணப்பட்டன.

இறக்குமதிகள்

இறக்குமதியான 77 பொருட்தொகுதிகள் சோதனையிடப்பட்டன அவற்றள் 16 பொருட்கள் களை விதைகளின் கலப்படமுள்ளவையாக காணப்பட்டன. வெங்காய விதைத் தொகுதிகளில் காணப்பட்ட *Cerastium glomeratum, Lactuca scariola, Euphorbia dentata* ஆகியன தடுப்புக் காப்பு முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருந்தன.

பயிற்சிகள்

பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரி கள், பாடசாலைகள் என்பவற்றின் பெருந் தொகுதி மாணவர்கள் களைஉயிரியல் பிரிவினால் பயிற்சியளிக்கப்பட்டனர்.

ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

கொக்கோ உற்பத்தியில் உயிருள்ள விதைகளின் இருக்கையை கண்டறிவதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் வளர்ப்புச் சோதனைகள் நிறைவு பெற சுமார் ஒரு மாத காலம் தேவையாய் இருந்தது. (சர்வதேச தரமுடைய சோதனைச் செயன்முறை). கொக்கோ உற்பத்தியிலுள்ள விதைகளின் உறங்கு நிலையை கலைக்க பல பரிகரிப்புக்கள் சோதனையிடப்பட்டன. இவ்வாரா ய்ச்சி தொடர்ந்த வண்ணம் உள்ளது.

உசாத்துணைச் சேகரிப்புகளை பேணுதல்

- 05 புதிய களை இனங்கள் சேகரிக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டன.
- புதிய 16 களை விதை வகைகள் சேகரிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டன.

பரிகரிப்பு தொழில்நுட்பம்

வர்த்தக ரீதியான தூமமாக்கல்

- வெவ்வேறு கம்பனிகளால் ஏற்றுமதி செய்யப்பட்ட 78 வகையான தாவர மற்றும் தாவரப் பொருட்களின் தொகுதிகள் மெதைல் புரோமைட் இனைப் பயன்படுத்தி NPQS இல் தூமமாக்கல் செய்யப்பட்டன.
- விமான நிலையத்தில் தாவரத் தடுப்புப் பரிவினால் தடுத்து வைக்கப்பட்ட 06 அலங்கரிக்கப்பட்ட மலர்ப் பொருட் தொகுதி மற்றும் ஒரு சந்தன மரப் பொருட்தொகுதி என்பன இறக்குமதியாளர்களுக்கு கையளிக் கப்பட முன்னர் தூமமாக்கல் மேற்கொள்ளப் பட்டது.

அட்டவணை 2.1..3.2 2012ம் ஆண்டில் கட்டுநாயக்க NPQS இல் வர்த்தக ரீதியான தூமமாக்கல் செயற்பாடுகள்.

பதார்த்த வகை	தூமாக்கல் எண்ணிக்கை
தென்னந்தும்பு உற்பத்திகள்	43
மரம் மற்றும் மரத்திலான பொருட்கள்	19
Cerbera	07
மலர்கள்	21
உலர்த்திய பூண்டுகள்	07
விதைகள்	02
சுவை சரக்குகள்	01
ஏனையவை	01
மொத்தம்	**78**

தடுப்புக் காப்பு பரிகரிப்புக்களின் மேற்பார்வை

ஏற்றுமதியாளர்களினது வேண்டுகோளுக்கிணங்க 169 தூமமாக்கல் மரத்தாலான பொதி செய் பொருட்கள் ஏனைய தாவர மற்றும் தாவர உற்பத்திகள் மீது தனியார் தூமமிடுபவர்க ளினால் மேற்கொள்ளப்பட்டன. இவற்றினது சான்றிதழ் வழங்கும் நோக்கங்களுக்காக பரிகரிப்பு தொழில்நுட்பப்பிரிவினது அலுவலர்களி னால் மேற்பார்வை செய்யப்பட்டது.

2013ம் ஆண்டுக்கான திட்டம்

தரமான தாவர மற்றும் தாவர உற்பத்திகளின் ஏற்றுமதியை மேம்படுத்தல்

- ஏற்றுமதியிலீடுபடும் நாற்றுமேடைகளின் பரீட்சிப்பு
- ஏற்றுமதிக்கான தாவர மற்றும் தாவர உற்பத்திகளின் தொழிற்சாலைப் பரீட்சிப்பு
- ஏனைய விவசாயம் தொடர்புடைய ஏற்றுமதிப் பொருட்களின் பரீட்சிப்பு (தனித்தனியான இழைய வளர்ப்புத் தாவர பரீட்சிப்பு)
- மாதிரியெடுத்தல்
- ஆவணங்களின் சோதனை
- தாவர நோயாக்கிகளின் ஆய்வுகூடப் பரிசோதனை
- தாவர பூச்சிகளின் ஆய்வுகூடப் பரிசோதனை
- நெமற்றோடுகளின் ஆய்வுகூடப் பரிசோதனை
- களைகளின் ஆய்வுகூடப் பரிசோதனை
- இறுதிப் பரிசோதனை அறிக்கைகளின் கையளிப்பு

இறக்குமதி செய்யப்படும் தாவர மற்றும் தாவர உற்பத்திகளின் தரத்தினை உறுதி செய்தல்

- நுழைவாயிலில் பரீட்சிப்பு
- மாதிரியெடுத்தல்
- ஆவணங்களினை சோதித்தல்
- நுழைவாயில்களில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி களின் பற்றுச் சீட்டை NPQS இற்கு வழங்கல்
- தாவர நோயாக்கிகளுக்கான ஆய்வு கூட சோதனை
- நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூட சோதனை
- தாவரப் பூச்சிப் பீடைக்கான ஆய்வு கூட சோதனை
- களைகளுக்கான ஆய்வு கூட சோதனை
- சோதனையறிக்கைகளினை சமர்ப்பித்தல்
- இறுதிச் சோதனை அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- விடுகை செய்தல்
- பரிகரிப்புச் சிபாரிசுகள்
- மீள்-ஏற்றுமதி அல்லது முற்றாக அழித்தல்

இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகள், பழங்கள் மற்றும் மரக்கறிகளின் தரத்தை உறுதி செய்தல்

- நுழைவாயில்களில் பரீட்சித்தல்
- மாதிரியெடுத்தல்
- ஆவணங்களினை சோதித்தல்
- நுழைவாயில்களில் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி களின் பற்றுச் சீட்டை NPQS இற்கு வழங்கல்
- தாவர நோயாக்கிகளுக்கான ஆய்வு கூட சோதனை
- நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூட சோதனை
- களைகளுக்கான ஆய்வு கூட சோதனை
- சோதனையறிக்கைகளை சமர்ப்பித்தல்
- இறுதிச் சோதனையறிக்கைகளை சமர்ப் பித்தல்
- விடுகை செய்தல்

- பரிகரிப்புச் சிபாரிசுகள்
- மீள்-ஏற்றுமதி அல்லது முற்றாக அழித்தல்

தாவரச் சுகாதார தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாமல் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளை தவிர்த்தல்

- ஆவணங்களினை சோதித்தல்
- மாதிரியெடுத்தல்
- இடைநிறுத்திவைக்கப்பட்ட தாவரங்களை நோயாக்கிக்காக சோதனையிடல்
- இடைநிறுத்திவைக்கப்பட்ட தாவரங்களை பூச்சி பீடைகளுக்காக சோதனையிடல்
- தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்கான சோதனை
- களைகளுக்கான சோதனை
- சோதனை அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- இறுதிச் சோதனை அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- பரிகரிப்புச் சிபாரிசுகள்
- பரிகரிப்பு மேற்பார்வை
- மீள்-ஏற்றுமதி
- அழித்தல்

உள்நுழைவின் பின்னரான தடுப்புக் காப்பு

- களப் பரிசோதனை
- விவசாயத் திணைக்கள வளாகத்தினுள் தாவரங்களை வைத்திருத்தல்
- அறிக்கைகள் / சிபாரிசுகள்
- இறுதியறிக்கைகளை சமர்ப்பித்தல்

ஏற்றுமதி, இக்குமதியாகும் தாவர மற்றும் தாவர உற்பத்திகளில் காணப்படுகின்ற பீடைகளை முற்றாக ஒழிப்பதற்கான பரிகரிப்புக்கள்

- NPQS இல் வைத்து தூமமிடல்
- NPQS இற்கு வெளியே நடைபெறும் தூமமாக்கல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
- தூமமாக்கல் அறிக்கைகளை வழங்குதல்

உசாத்துணைச் சேகரிப்புகளைப் பேணுதல்

- களை இனங்கள், மற்றும் களை விதை இனங்கள்
- பூச்சிகள்
- நோயேற்பட்ட மாதிரிகள்
- உயிருடனான நீரியல் தாவரங்கள்

பங்குதாரர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்பணர்வு நிகழ்ச்சிகள்

- பயிற்சிகள்
- கீழ்நிலைப் பட்டதாரி / டிப்ளோமா மாணவர்களின் மேற்பார்வை
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- பயிற்சிப் பட்டறைகள்
- மாநாடுகள்

தடுப்புக் காப்புடன் தொடர்புடையதான ஆராய்ச்சிகள்

- பீடை தொடர்பான களத்தரவுச் சேகரிப்பு
- பீடை அபாய பகுப்பாய்வுகள்
- களைக்கட்டுப்பாட்டு ஆராய்ச்சிகள்
- நோயியல் தொடர்பான ஆராய்ச்சிகள்

- பூச்சியியல் தொடர்பான ஆராய்ச்சிகள்
- தடுப்புக் காப்பு பரிகரிப்பு தொடர்பான ஆராய்ச்சிகள்

தாவர நாற்றுமேடைகளை பதிவு செய்தல்

- போய்ச் சேர வேண்டிய நாடுகளுக்கு தாவரங்களை ஏற்றுமதி செய்தல்
- களப் பரிசோதனைகள்
- கணக்காய்வு செய்தல்
- அறிக்கைகளை சமர்ப்பித்தல்

பரிகரிப்பு வழங்குவோரிடத்திலுள்ள வசதிகள் தொடர்பான மதிப்பீடு

- களங்களை பரீட்சித்தல்
- கணக்காய்வு செய்தல்
- தாவர சுகாதார சான்றிதழ்களை வழங்குதல்
- இறக்குமதிக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் (தாவர மற்றும் தாவர உற்பத்தி)

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
(NPQS) கட்டுநாயக்க	
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	07
நிர்வாக உத்தியோகத்தர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	04
ஆராய்ச்சி உதவியாளர்	05
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	01
விவசாயப் போதனாசிரியர்	12
விதை தொழிநுட்பவியளார்	01
முகாமைத்து உதவியாளர்	
சாரதி	04
வேலையாட்கள்	03
வேலையாள் - ஒப்பந்த அடிப்படை	07
காவலாளி	02
காரியாலய சிற்றூழிய உதவியாளர் (KKS)	
மொத்தம்	**60**

தாவர தடுப்புக் காப்பு நிலையம் (துறைமுகம்)

அலுவலர் நிரல்	எண்ணிக்கை
நிலையப் பொறுப்பதிகாரி (ஆராய்ச்சி உத்தியோகத்தர்)	01
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	06
விவசாயப் போதனாசிரியர்	11
முகாமைத்துவ உதவியாளர்	01
சாரதி	01
வேலையாட்கள் (நிரந்தரம்)	01
மொத்தம்	**25**

தாவர தடுப்புக் காப்பு நிலையம் (விமான நிலையம்)

அலுவலர் நிரல்	எண்ணிக்கை
நிலையப் பொறுப்பதிகாரி (விவசாய உத்தியோகத்தர்)	01
விவசாய உத்தியோகத்தர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	08
முகாமைத்துவ உதவியாளர்	01
வேலையாட்கள்	02
மொத்தம்	**14**

தாவர தடுப்புக் காப்பு நிலையம் (கன்னொறுவ)

அலுவலர் நிரல்	எண்ணிக்கை
நிலையப் பொறுப்பதாகாரி (விவசாய உத்தியோகத்தர்)	01
வேலையாள்	01
மொத்தம்	**22**

2.1.4 பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP), பேராதனை

பீடைநாசினிகள் தடுப்புச் சட்ட இலக்கம் 33(1980 இல் உருவாக்கப்பட்டது) நடைமுறை படுத்துவதே இப்பீடை நாசினிகள் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்ட சேவையாகும். இறக்குமதி செய்யப்படும், உள்ளூரில் தயாரிக்கப்படும் / சேர்க்கை செய்யப்படும், எல்லாப் பீடை நாசினிகளும், பீடை நாசினிகள் தடுப்புச் சட்ட இலக்கம் 33(1980) சேர்க்கை தடுப்புச் சட்டம் 06 (1994) இன் கீழ் பதிவு செய்யப்படும். இப்பதிவே இப்பீடை நாசினி நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதில் இருந்து இதனூடாகப் பரிகரணம் செய்யப்பட்ட பயிர்கள் சந்தைக்கு வரும்வரை உள்ள வாழ்க்கை வட்ட பரிபாலன உடன்படிக்கையாகும். பீடை நாசினிகளின் கீழ் விவசாயப் பீடை நாசினிகள் [(பூச்சிநாசினி, பங்கசு நாசினி, களை நாசினி, வட்டப்புழு நாசினி (Nemeticide)] வீட்டுத் தேவைக்கு பாவிக்கப்படும் பீடை நாசினி, மிருகப் பீடை நாசினி, மரப் பாதுகாப்பு பீடை நாசினி, பொது சுகாதாரம் சம்பந்தப்பட்ட பீடை நாசினி, என்பன அடங்கும். இது முழுமையான பட்டியல் அல்ல.

விண்ணப்பங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட தொழில் நுட்பத் தரவுகளின் நம்பகத் தன்மையை சரியான முறையில் பரிசோதிக்கப்படும் போது முக்கியமாக பாதுகாப்பு, பயன், உள்ளூர் சூழலுக்கு பொருந்தும் தன்மை என்பன இதில் கருத்திற் கொள்ளப்படும். பீடை நாசினிகளின் பொருத்தமான தன்மை மதிப்பிடப்படும் போது, இவை கைத்தொழில் உற்பத்தித் தொழில் நுட்பங்களுடன் சேர்த்து மதிப்பிடப்படும். இதனால் வெவ்வேறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வெவ்வேறு பதிவு இலக்கங்கள் வழங்கப்படும்.

இந்த வருடத்தில் 30 புதிய பதிவுகளும் 189 மீள் பதிவுகளும் கைத்தொழில் வழி காட்டல்களுக்க மையவும், பாதுகாப்பு, பயன், சூழல் அடிப்படையிலும் பரிசோதனை நடைமுறை களினூடாக ஏற்றுக் கொள்ளும் தன்மைக்கமை யவும் மேற்கொள்ளப்பட்டன. பதிதல் மற்றும் மீளப்பதிதல் என்பவற்றினூடாக இவ்வருடத்தில் ரூ 2.5 மில்லியன் கிடைக்கப் பெற்றது. சில குறிப்பிட்ட தரத்தை உறுதிப்படுத்தும் பீடை நாசினி இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப் பட்டது. மொத்தம் 1096 பீடை நாசினிகள் சேர்க்கைகளுக்கான பகுப்பாய்வு, இவை சந்தைப்படுத்தப்பட முன்பு மேற்கொள்ளப் பட்டது. இதில் 284 இறக்குமதி செய்யப்பட்டவையாகும். மொத்தமாக 397 பீடை நாசினிகளின் சீட்டுக்களின் அனுமதி, மற்றும் 122 விளம்பர பொருட்கள் என்பன வினைத்திறனான முறையில் பாவிக்கப்பட்டு, வயலில் பீடை நாசினிகளின் நல்ல பரிபாலனம் செய்வது உறுதி செய்யப் பட்டது. பீடை நாசினிகளின் பாதுகாப்பான பரிபாலனத்திற்காக பீடை நாசினி பதிவாளர் வினைத்திறனாக பல செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

பாதீடு

அட்டவணை 2.1.4.1 வருடாந்த ப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%	வரவு
மூலதனக் கணக்கு	4,794,629	4,544,539	58	-
நடைமுறைக் கணக்கு	2,673,000	2,521,460	94	-
பதிதல், மீளப்பதிதல் கட்டணம்				1,565,000
வினியோகஸ்த்தர் அத்தாட்சி கட்டணம்				651,200
பீடைக் கட்டுப்பாட்டு சேவை பதிவுக் கட்டணம்				320,000
பீடைக் கட்ப்பாட்டு சேவை புதுபித்தல் கட்டணம்				10,000
மொத்தம்	**7,467,629**	**7,065,999**		**2,546,200**

முன்னேற்றம்

பீடைநாசினிகள் பதிதல்

விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் தரவுகள் மற்றும் ஆவணங்கள் என்பன மதிப்பிடப்பட்டு, திருப்திகரக் கூடியதாக இருந்தால் அனுமதிக்கப்பட்ட விளக்கச் சீட்டு (label), கொள்கலன் (Containors) என்பவற்றோடு பதிவுக்கு அனுமதி கொடுக்கப்படும். பதிவுக்கட்டணம் பெறப்பட்ட பின்பு பதிவு மேற்கொள்ளப்படும். பதிவுக்குரிய இலக்கமும், அத்தாட்சிப்பத்திரமும் வழங்கப்படும். இந்த வருடத்தில் இந்த நடவடிக்கை மூலம் 1,565,000 ரூபா வருமானமாக பெறப்பட்டது. தீர்மானம் எடுப்பதில் அதிக நிபுனர்களை பங்கு பற்றச் செய்வதற்காக, பீடை நாசினியுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட அமைச்சு, நிறுவனம் என்பவற்றின் நிபுணர்களையும் உள்ளடக்கிய உபகுழுக்கள் (விவசாய உபகுழு, பொது சுகாதார உபகுழு) PeTAC இன் கீழ் அமைக்கப்பட்டது.

பீடை நாசினிகளை மீள பதிவு செய்தல்

ஒரு உற்பத்தியின் பதிவு மூன்று வருடங்களுக்கே செல்லுபடியாகும். அதன் பின் அதனுடைய தரம், புதிய திட்ட அளவு, பாதுகாப்பு. என்பவற்றிற் கேற்ப புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும். இந்த வருடத்தில் மொத்தமாக 189 விண்ணப்பங்கள் இவ்வகையின் கீழ் பதியப்பட்டன. இதன் மூலம் மொத்தமாக ரூ 945,000 வருமானமாக பெறப்பட்டது. புதிய மீளப் பதிதல் சட்டத்தின் படி 2000 ஆம் ஆண்டிற்கு முன்பு பதிவு செய்யப்பட்டிருந்தால் அவை புதிய பதிவிற்கான ஆவணங்களை (இவை பிந்திய பாதுகாப்பு தேவைகளுக்காக) சமர்பித்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் உற்பத்திப் பாதுகாப்பு, தரம், செயற்பாடு என்பன புதிதாக உருவாக்கப்பட்ட நச்சுத் தன்மை, உற்பத்திப் பொருள் தரம் ஆகியன பரிசோதனை மூலம் மதிக்கப்படும்.

உற்பத்தி மதிப்பீடும், மூலக்கூறுப் பதிவும்

பாதுகாப்பான, சூழலுக்கு நேசமுள்ள பீடை நாசினிகள் அடையாளம் காணப்பட்டு, அவ்வுற்பத்திகள் உள்ளூர் பரிசோதனையில்

முன்மதிப்பீடு செய்யப்படும் போது உயர்த்தப் படும் (Promote), இதனால் ஆபத்து விளைவிக்கும் உற்பத்திகள் சந்தையில் கிடைப்பது படிப்படியாக குறையும். பீடை நாசினிகள் பதிவுக்கான ஆவண மதிப்பீடு கலந்துரையாடல் முறையில் (Seminar) மேற் கொள்ளப்படும் போது ஆவணங்கள் மிக வினைத்திறனாக மதிப்பிடப்படும். வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவர்களுக்கிடையில் அறிவுப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுவதனால் பீடை நாசினிகள் வினைத்திறனாக மதிப்பிடப்படுவது இம்முறையில் உள்ள ஓர் நன்மையாகும். முப்பதற்கும் மேற்ப்பட்ட சேர்க்கைகள் (Formulation) இந்தவருடத்தில் மதிப்பிடப்பட்டு ஐந்து பதியப்பட்டன. இவை கீழ் வரும் பயிர் / பீடைகளுக்கானவையாகும்.

1. குளோரான்றநிலிபுரோல் 25%SC (Chlorantraniliprole 20% SC) கத்தரி தண்டு துளைப்பான் (Shoot borer), போஞ்சி காய் துளைப்பான் (Pod borer), தக்காளி பழ துளைப்பான் (Friut borer) ஆகியவற்றிக்கான பீடை நாசினி.

2. றொப்பிராமிசோன் 33.6% SC (Topromezone 33.6% SC) சோளப்பயிர்ச் செய்கையில் ஆண்டு களைகளை கட்டுப்படுத்தும் முளைத்தலுக்கு பின்னான களை நாசினி.

3. பொட்டாசியம் பைகார்போனேற் 82% SP (Potassium bicorbonare 82% SP) வாழை சிகாற்றோகா (Sigatako) இலைப்புள்ளி நோய்க்கான பங்கசு நாசினி.

4. தயாமிருதாசாம் 20% + குளோரானிலிபுரோல் 20% SC (Thianethoxone 20% + Chlorantranilipole 20% SC) நெல் கபில நிற தத்தியை (brown plant hoper) கட்டுப்படுத்தும் கிருமி நாசினி

5. அசோசைற்றோபின் 25% SC (Azoxytobin 25% SC) வாழையில் சிகாற்றோகா (Sigoto) இலைப்புள்ளி நோய், மற்றும் பூசணியில் கீழ் பூங்சண நோய் (downy mildow) என்பவற்றிற்கான பங்கசு நாசினி

இறக்குமதி அனுமதி

பீடை நாசினிகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுவது, பீடை நாசினி தடுப்புச் சட்ட இலக்கம் 33(1980) இனால் ஒழுங்குபடுத்தப் படுகின்றது. வியாபார ஸ்தாபனங்களின் வேண்டுகோளின்படி தொகுதி தொகுதியாக பீடை நாசினிகள் பதிவாளரினால் அனுமதி வழங்கப்படும். இந்த அனுமதி வழங்கப்பட்ட திகதியில் இருந்து 3 மாதத்திற்கே இது செல்லுபடியாகும். குறிப்பிடத்தக்க நேரமும், பிரயத்தனமும் இந்த இறக்குமதி வழங்கள் நடவடிக்கைக்குத் தேவைப்படுகின்றது. உற்பத்தி சரியான தோற்றுவாயில் இருந்து பெறப்படுகின்றதா (இதன் மூலம் தேவைப்படும் தரம் நிர்ணயிக்கப்படமுடியும்) மற்றும் கூடுதலான அளவு இறக்குமதி செய்தல் தடுக்கப்படுதல் என்பன இம்முறையினால் நிச்சயிக்கப்படும். இந்த வருடத்தில் 595 தரச் சான்றிதழ்கள் இறக்குமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டு அவை இறக்குமதி அனுமதி வழங்கப்பட முன்பு தேவையான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது.

விளக்கச்சீட்டு தெரிவும், விளம்பரப் பொருட்களும்

விளக்கச்சீட்டு அனுமதி முறை மூலம் கடைசி பாவனையாளருக்கு சரியான தரவுகள் சென்றடைகின்றன. இச் செயன்முறைக்கு உதவியாக, எல்லா வகையான விவசாய பீடைநாசினிகளுக்கும், கடினமான பொருளால் செய்யப்பட்ட விளக்கச்சிட்டை (lable templates) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 495 இற்கு மேற்பட்ட விளக்கச் சிட்டைகளும், 122 விளம்பர பொருட்களும் தெரிவு செய்யப்பட்டன. இலங்கையில் சந்தைபடுத்தப்படும் பீடை நாசினிகளின் வர்த்தக சின்னம் புதிய கொள்கையினூடாக இவ்வருடத்தில் பல சரி செய்யும் முயற்சியினூடாக விளக்கச்சீட்டு அனுமதி குறிப்பிடத்தக்க அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. பீடை நாசினி

தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் (Pesticide Technical and Advisary Committee – PeTAC) ஆலோசனையின் கீழ் பீடை நாசினிகளின் வர்த்தக / தொழில் சின்னப் பெயர்களின் நவீன கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய கொள்கையின்படி, உற்பத்திக்குரிய (சேரக்கை, செயற்பாட்டு மூலகம்) அதிகார உரிமை காலாவதியாகும் வரைதான் உற்பத்திக்குரிய வர்த்தக சின்னங்கள் அனுமதிக்கப்படும். எல்லா வகையான பீடை நாசினிகளும் (அதனுடைய நிலையை இழக்கும் போது) விபரமான வர்த்தக பெயர்கள், செயற்பாட்டு மூலகத்தின் பொதுப் பெயரையும் கொண்டிருத்தல் வேண்டும். வர்த்தக பெயர்களின் புதிய கொள்கையினால் விவசாயி, பாவனையாளர் சரியான, வினைத்திறனான பீடை நாசினிகள் பாவிக்கக் கூடியதாக இருக்கும். பீடை நாசினி நிறுவனங்கள் பீடை நாசினிகளை விளம்பரம் செய்வது சம்பந்தமாக PeATC இன் ஆலோசனையுடன் புதிய நிபந்தனைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி பீடை நாசினிகளின் எல்லா விளம்பரப் பொருட்களிலும் கட்டாயமாக விவரிக்கப்பட்ட வர்த்தக பெயர் தெளிவாகத் தெரியும் படி இருத்தல் வேண்டும். அத்துடன் பாதையோர விவசாய வயல், மரம், கம்பம், பேருந்து நிலையம் என்பவற்றில் விளம்பரப்படுத்தப்படல் தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட உற்பத்திகளின் வர்த்தகப் பெயர்கள் தெற்காசிய பகுதிகளில் உள்ள நாடுகளில் பாவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானமானது வெளிநாட்டு விளம்பரங்கள் எமது நாட்டு பீடை நாசினி விளம்பர கட்டுப்பாட்டுக்கமையாமல், செய்மதி தொலைக்காட்சி / வானொலி அலை வரிசைகளில் விளம்பரம் செய்யப்படுவதை தடுப்பதற்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

வயல் நிர்வாகம் (Field enforcement)

மாகாண, மாகாணங்களுக்கிடையிலான, மகாவலி சபை என்பவற்றில் உள்ள நிர்வாக உத்தியோகஸ்தர்களுடன் (Cnforcement staff) பீடை நாசினி பதிவாளர் அலுவலகம் இணைந்து, பீடை நாசினிகள் வினியோகஸ்த்தர் சான்றிதழ் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்கின்றது. ஏதாவது காரணத்திற்காக ரத்து செய்யாது விட்டால் பீடை நாசினிகள் வினியோகஸ்த்தர் சான்றிதழ் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். சான்றிதழ் வழங்கலுக்காக கட்டனம் அறவிடப்படும், இந்த வகையில் பெறபட்ட வருமானம் 651,200 ரூபாவாகும்.

பயிற்சியும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்

வானொலி, அச்சு ஊடகத்திட்டத்தினூடாக பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கியமாக இத்திட்டம் பீடை நாசினி வாணிபத்தில் புதிதாக சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஆய்வுகூட செயற்பாடுகள்

பீடை நாசினிகள் சேர்க்கை மதிப்பீடு

பீடை நாசினிகளின் தரம் மிக முக்கியமானதாகும். அதன் பயன், மனித ஆரோக்கியம் மற்றும் சூழலில் உள்ள செல்வாக்கு என்பன தரத்தில் அடங்கும்.

FAO மற்றும் WHO சர்வதேச நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட பௌதிக, இரசாயன (Physico-Chemical) திட்ட அளவை, எல்லா பதியப்பட்ட பீடை நாசினிகளும் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் படி ஒவ்வொரு பீடை நாசினியின் தொகுதிகளும் உள்ளூர் பரிசோதனையில் மேற்குறிக்கப்பட்ட திட்ட அளவை உறுதிப்படுத்தல் வேண்டும். 2012 ஆம் ஆண்டு மொத்தம் 1096 சேர்க்கை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது. இது 284 தொகுதிகளாக இறக்குமதி செய்யப்பட்டது. இதில் 699,242Kg திண்மமாகும் 4,667,110Kg திரவமாகும்.

பீடை நாசினி மீதிப்படிவு (Residue) பகுப்பாய்வு

கண்டி, நுவரெலியா சந்தைகளில் இருந்து பெறப்பட்ட மரக்கறி மாதிரிகள் (கோவா -06 பொன்னாங்காணி –06, புடோல் -06) குளோரிபைரிபொஸ் (Chlorpyriphas) மீதிப்படிவுக்காக

பகுப்பாய்வு செய்யப்பட்டது. மீதிப்படிவு மிகவும் நுண்ணிய அளவில் காணப்பட்டது. இரண்டு கோவா மாதிரிகள் மாத்திரம் கேடெக்ஸ் அலிமென்றேரியஸ் மட்டத்தை விட (0.05mg / Kg) கூடிக் காணப்பட்டது.

சட்ட ரீதியான குற்றச்சாட்டு

நேர்மையற்ற பீடை நாசினி வர்த்தகர்/ உற்பத்தியாளர்/ விநியோகஸ்தர்கட்கு எதிராக மூன்று வழக்குகள் பீடை நாசினித் தடுப்புச் சட்டம் 33(1980) கீழ் நீதிமன்றத்தில் உள்ளன. 2012 யூன் மாதம் எம்பிலியாகொட நீதிமன்றத்தினால் எம்பிலியாகொடையைச் சேர்ந்த பீடை நாசினி வர்த்தகர் ஒருவருக்கு தரம் குறைந்த பீடை நாசினிக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

விசேட செயற்பாருகள்

விவசாய இரசாயன விற்பனை தொழில்நுட்ப உதவியாளர் (ASTA) பயிற்சித் திட்டம்

"மஹிந்த சிந்தனை" யை எதிர்கால பார்வையாகக் கொண்டு, எல்லா பீடை நாசினிகள் விற்பனை நிலையங்களுக்கும் (Outlet) தொழில்நுட்பத் தகுதியுடையவர்கள், விவசாய இரசாயன விற்பனை தொழில்நுட்ப உதவியாளர் (ASTA) நியமிக்கப்படவுள்ளனர். இது பீடை நாசினிகள் பாவனை பற்றிய அறிவை விவசாய சமூகத்தில் அதிகரிக்க உதவும். அத்துடன் ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாவதையும் குறைக்கும், சூழல் பாதிப்பும் ஏற்படமாட்டது.

விவசாய அமைச்சு 5.3 மில்லியன் ரூபாக்களை இந்த பயிற்சிக்காக ஒதுக்கியுள்ளது. இப்பயிற்சி NAITA யுடன் சேர்ந்து மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக 80 நபர்கள் நாட்டின் எல்லாப் பாகத்திலும் இருந்து பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவர்கள் பயிற்றுவிப்பாளராக பயிற்றுவிக்கப் பட்டனர். இவர்கள் ASTA அலுவலர்களை பயிற்றுவித்தனர். 5 பேர் சிங்கள மொழியிலும், 2 பேர் தமிழ் மொழியிலும் பயிற்றப்பட்டனர். தற்போது இத்திட்டம் மொனராகலை, பதுளை, மாத்தளை, நுவரெலியா, காலி, கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், புத்தளம் ஆகிய 10 மாவட்டங்களில் நடைபெறுகின்றது.

பீடை நாசினிகளில் ஆசனிக் மற்றும் நச்சுத்தன்மையான பார மூலகங்கள்

பீடை நாசினிகள் பதிவாளர், பீடை நாசினி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவுடன் சேர்ந்து, பொது சுகாதாரத்தையும், சூழலையும் பாதிக்கும் பாரமான மூலகங்கள் பீடை நாசினிகளில் இருப்பதை பற்றிய ஆய்வை ஆரம்பித்துள்ளார். முதலில் பீடை நாசினி பதிவு செய்த அனைவரையும் 9 பாரமான மூலகங்கள் (மேக்கூரி, ஆசனிக், குரோமியம், கட்மியம், லெட், நிக்கல், கோபோல்ற், ரின், தாலியம்) மற்றும் சயனைற் பற்றிய விபரமான பகுப்பாய்வு அறிக்கையை நம்பகமான சுயாதீன ஆய்வுகூடத்தில் இருந்து சமர்பிக்கும் படி கேட்கப்பட்டனர். பீடை நாசினிகள் சூழல் பாதிப்பு முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம், நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பீடை நாசினிகள் ஒழுங்குப்படுத்தப்பட்டது. PeTAC பாரமான மூலகங்கள், பீடை நாசினியில் உள்ள அளவு காரணமாக ஏற்படும் பாதிப்பைப் பற்றி தொடர்ந்து ஆய்வு செய்கின்றது. எல்லா பீடை நாசினி பதிவுவாளர்களையும் பகுப்பாய்வை கண்டுபிடித்தல் மட்டத்தில் அல்லது அதற்குக் கீழ் (LOD), ஆசனிக், மேக்கூரி, கட்மியம் ஆகியவற்றிற்கு 0.1 ppm, ஏனைய எல்லா பார மூலகங்களுக்கும், சயனைட்டிற்கும் 1.0 ppm இற்கு பகுப்பாய்வு செய்யும் படி கேட்கப்பட்டனர்.

பீடை நாசினி சிபார்சில் திருத்தம்

விவசாயத் திணைக்களம் தற்போதுள்ள பீடை நாசினி சிபார்சுகளை மதிப்பீடு செய்வதற்கு குழு ஒன்றை அமைத்துள்ளது. விவசாயத் திணைக்களப் பீடை நாசினி சிபார்சுப் புத்தகம் 2009 இல் வெளியிடப்பட்டது. இது தடைசெய்யப்பட்ட, பாவனையில் இல்லாத, நாசினிகளையும் உள்ளடக்கியுள்ளது. முக்கியமாக, ஒரு குறிப்பிட்ட பீடை / பயிருக்கு

சிபார்சு செய்யப்பட்ட பீடை நாசினிகளின் எண்ணிக்கை அதிகமாகும். எனவே விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம், ஆகியோரின் வழிகாட்டலுக்கமைய ஒரு பீடைக்கு / பயிருக்கு சிபார்சு செய்யப்பட்ட பீடை நாசினிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

இது விஞ்ஞான பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி பிரமாணங் கள் உருவாக்கப்பட்டு ஒரு பயிர் /பீடை சேர்க்கைக்கு அதிகூடியது ஆறு பீடை நாசினிகளாக தீர்மானிக்கப்பட்டது. மற்றைய பிரமாணங்கள் உற்பத்தியின் பயன், அதன் தொழிற்பாடு, சுகாதாரம் மற்றும் சூழல் பாதிப்பு (இது WHO பாதிப்பு வகை/ LD50) சூழலை தாக்கும் (ESQ), சேர்க்கையின் தன்மை என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலில் பூச்சி நாசினி, பங்கசு நாசினி, களை நாசினி என்பவற்றின் திருத்தப்பட்ட சிபார்சு விரைவில் வெளியிடப்படவுள்ளன.

உயிரியல் வினைத்திறன் பரிசோதனை (Bio efficacy test)

பயிர் / பீடை சேர்க்கைக்குரிய பீடை நாசினிகளில் தெரிவு செய்யப்பட்டவற்றில் உயிரியல் செயற்றிறன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, தகுந்த சிபார்சு செய்யப்பட்ட பாவனை அளவு உறுதி செய்யப்படும். இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன் படி 6 வருடங்களுக்கு முன்பு சிபார்சு செய்யப்பட்ட பீடை நாசினிகள உயிரியல் செயற்றிறன் பரிசோதனை ஊடாக திரும்ப மதிப்பீடு செய்வதற்கான பரிசோதனைகள் ஆராய்ச்சிப் பகுதி (DOA) மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படவுள்ளன. வீட்டுப் பாவனை பீடை நாசினிகளிற்கு வைத்திய ஆராய்ச்சி நிலையம் தெரிவு செய்யப்பட்டது. இதன் முடிவுகள், அந்தப் பீடை நாசினிகளுக்கு விளம்பர சீட்டை பெறக்கூடியதாக இருப்பதுடன், சரியான நோய் / பீடை பராமரிப்பு, பீடை பரிபாலன திட்டத்தில் பாரபட்சமற்ற பீடை நாசினிப் பாவனை, மீதிபடிவு குறைவு என்பவற்றிற்கு உதவியாக இருக்கும்.

பீடை நாசினி பகுப்பாய்வு ஆய்வுகூடத்தைத் தரமுயர்த்தல்

பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலக பரிசோதனைக் கூடம் அதிக உணர்திறனுள்ள பகுப்பாய்வு உபகரணங்களான காஸ்குரோமாற் றோகிராவ்ஸ் காஸ் குரோமாற்றோகிராவ்ஸ் மாஸ் ஸ்பெக்றோமீற்றர், உயர் தரமுள்ள திரவ குரோமாற்றோகிராப்ஸ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. தரநிர்ணயம், பீடை நாசினிச் சேர்க்கையை மதிப்பிடல் என்பதே இப்பரிசோதனைக் கூடத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த உபகரணங்கள் சரியான முறையில் இயங்குவது இவற்றின் பகுப்பாய்வில் உபயோகம் தங்கியுள்ளது. அத்துடன் மிகவும் சுத்தமான நீர் (Ultrapure water – ionized) பகுப்பாய்விற்கு தேவைப்படும். இந்நீர் கண்ணாடி பாத்திரங்கள் சுத்தம் செய்தல், தாங்கல் கரைசல் தயாரித்தல், மேற்குறிக்கப்பட்ட உபகரணங்களுக் கான மாதிரி தயாரிப்பில் பாவிக்கப்படும். 2013 ஆம் ஆண்டு பீடை நாசினிகளில் காணப்படுகின்ற பார மூலகங்களைப் பகுப்பாய்வு செய்யப்படவுள்ளதால் டி-அயோனைஸ்ட் (de – ionized) நீர் உபகரணம் இருந்தால் உதவியாக இருக்கும். இதன்படி மிகவும் உணர்வுள்ள பகுப்பாய்வு தராசு, டி-ஐயோனைஸ்ட் (de-ionoxed) நீர் உற்பத்தி உபகரணம் ஒன்றும் 2012 இல் பெறப்பட்டது.

இலங்கையில் சூழல் கண்காணிப்பு அபிவிருத்தி

சர்வதேச அணு சக்தி அதிகார சபையின் நிதி உதவியுடன் உமாஓயா விவசாயப் பகுதி, மேல் மகாவலி படுக்கையில் ஆராயச்சி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மேலதிக நிதி உதவி கனடா நியூ பிறன்ஸ்விக் சர்வ கலாசாலையினால் வழங்கப்பட்டது. இத்திட்டத் தின் முழுமையான குறிக்கோள் சூழல்

மதிப்பிடல் திட்டத்தை உருவாக்குவதாகும். இது உயிரியல் பிரதிபலிப்பு அறிதல், தாக்கத்தின் வகை, மீன் அளவில் உள்ள தாக்கம் என்பவற்றை கொண்டுள்ளது. இதன் நீண்ட கால நோக்கமானது விவசாய சமூகத்தினால் மீன் இனத்தின் இனப் பெருக்கத்தில் உள்ள தாக்கமாகும். சென்றினால் மீன் இனம் நிலையான சூழலுக்கான திட்டத்தில் பாவிக்கப்படல், விவசாய தாக்கத்தில் திருத்தமான மதிப்பிடல் திட்டம் என்பனவை அடங்கும். இந்த ஆராய்ச்சிகளின் முடிவின் படி உயர் மட்டத்தில் நற்போசணையாக்கம் தாக்கமும், கீழ்மட்டத்தில் இரசாயனங்கள் காணப்பட்டதோடு, மட்டத்திற்கும் போசணைக்கும் இடையில் இடைத் தாக்கமும் காணப்பட்டது குறிப்பிடதக்கது.

பீடை நாசினிகளின் மூலம் மாற்றப்படுவதற்கான புதிய வழிகாட்டி

பீடை நாசினி பதிவாளர் அலுவலகம் பீடை நாசினிகளின் மூலத்தில் மாற்றம் செய்யும்படி பதிவு செய்தவர்களிடமிருந்து பதிவுக்கு முன்பும், பின்பும் அடிக்கடி வேண்டுகோள் விடப்படுகின்றன. எனவே புதிய வழிகாட்டி தயாரிக்கப்பட்டு PeATC யிடம் அனுமதிக்காக 2012, ஒக்டோபரில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் செயற்பாட்டு மூலகத்தின் மூலம், அனுமதிக்கப்பட்ட உற்பத்திகளின் சேர்க்கை என்பவற்றுடன் மூலகத்தை மாற்றுவதற்காக பதிவு செய்தவர்கள் செய்ய வேண்டியவை என்பன உள்ளடக்கப் பட்டுள்ளது. மாற்றங்கள் செய்யப்படும் போது கட்டாயமாக பீடை நாசினி பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

உபயோகமில்லாத பீடை நாசினிகளை சரியான முறையில் அழித்தலுக்கான ஆரம்பம்

விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து 2012 மார்சில் காலாவதியான பீடை நாசினிகளை அழிப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதில் 1083Kg திண்மம், 508L திரவம் ஆகிய நாசினிகள் அடங்கும். இது தொடர்பாக சூழலுக்கான அமைச்சுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டது. மீதையில் புரோமைட் மிகவும் ஆபத்தானதாகும். அழிக்கப்பட வேண்டிய நாசினிகளில் 1,915Kg மீதைல் புரோமைட்டும் அடங்கும்.

மிகவும் ஆபத்தான பீடை நாசினிகளின் சேர்க்கை மதிப்பீடலின் ஆரம்பம்

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பீடை நாசினிகளின் சேர்க்கை அங்குள்ள பாதுகாப்பான சட்டங்களினால் பாதுகாப்பாக மேற்கொள்ளப் பட்டாலும், இலங்கையில் நிலவும் சமூக, பொருளாதார மற்றும் காலநிலை காரணமாக இது பாதுகாப்பானதாக இருக்கமாட்டாது. ரொற்றர்டொம் மகாநாட்டு காரியதரிசியுடைய காரியாலயம் மற்றும் தெற்காசிய மருந்துவ களஞ்சியப் பரிசோதனை கூட்டு ஆசியவற்றுடன் இணைந்து பீடை நாசினிகள் பதிவாளர் காரியாலயம் ஐந்து பயிற்சிகளை அநுராதபுரம், பொலன்நறுவை, குருணாகல், அம்பாந்தோட்டை, நுவரேலியா மாவட்டங்களில் மேற்கொண்டது.

பீடைக் கட்டுப்பாட்டு சேவையை வழங்குபவர்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்

பீடை நாசினிகள் தடுப்புச் சட்டம் இலக்கம் 33(1980) கீழ், பீடை கட்டுப்பாட்டாளர்களுக்குரிய ஒழுங்கு முறைகள் விஷேட வர்த்தமானி இலக்கம் 1655 / 7, திகதி 22.5.2010 பகுதி 26 இல் வெளியிடப்பட்டுள்ளது. நிறுவனத்திற்கான அனுமதி கொடுக்கப்படுவது அதன் தொழில்நுட்ப சக்தி, அனுபவம், பயிற்சி, கிடைக்கக்கூடிய உபகரணங்கள் என்பவற்றில் தங்கியுள்ளது. பீடை கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரத்திற்காக 42 நிறுவனங்கள் சோதிக்கப்பட்டு டிசம்பர் 2012 வரை 31 இற்கு, வெவ்வேறு வகையான கட்டுப்பாட்டு சேவைகளுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

செயற்கை பைரித்திரோய்ட் (Synthetca pyrethroids) பாவிப்பதற்கு முன்னான அனுமதி பெறுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படியான கட்டுப்படுத்தப்பட்ட பீடை நாசினிகள் பாவிப்பது தகுதி பெற்றவர்களைக் கொண்ட பதியப்பட்ட பீடை தடுப்பு சேவை நிறுவனங்கட்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில கட்டுப்படுத்தப்பட்ட பீடை நாசினிகளின் பாவனை நாட்டின் நுளம்புக் கட்டுப்பாட்டிற்கு பாவிக்கப்படுவதாகும். இதற்கான அனுமதி பீடை நாசினிகள் பதிவாளரினால் வழங்கப்படுகின்றது. பிரதேசசபை, நகரசபை போன்றவற்றிற்கான அனுமதி, மலேரியா நிகழ்ச்சித் திட்டம், டெங்கு கட்டுப்பாட்டு அலகு, சுகாதார திணைக்களம் என்பவற்றின் ஆலோசனைக்கமைய முன் அனுமதி முறை நடைமுறை படுத்தப்படுகின்றன. 2012 ம் ஆண்டு மொத்தமாக 400 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.

பீடைக் கட்டுப்பாட்டுப் பயிற்சி

விவசாயப் பீடத்துடன், (பேராதனைப் பல்கலைக்கழகம்) இணைந்து 25 நாட்கள் கொண்ட சான்றிதழ்களுடன் கூடிய பீடை கட்டுப்பாட்டுப் பயிற்சித் தொடர் உருவாக்கப்பட்டுள்ளது. இதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பவியலாளர், உத்தியோகத்தர், இயக்குனர்கள் ஆகியோருக்கு இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப் பயிற்சியில் வகுப்புக்கள், ஆய்வுக்கூடம் பயிற்சிகள், பயிற்சிகள் என்பன அடங்கும். முதலாவது பயிற்சி 2013 ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இரசாயனங்கள் பரியாலன பூர்வாங்க வேலை

உலக சூழல் வசதி (Global Enviromantal Facility - GEF) ஐக்கிய நாடுகள் சூழல் திட்ட நிதி உதவியுடன் இரசாயனம் / பீடை நாசினிகள் பரிபாலனத்திற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு. இதற்குரிய செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளது.

பீடை நாசினிகள் பரிபாலனம் இலங்கையில் பீடை நாசினி தடுப்புச் சட்ட இலக்கம் 33(1980) அதன் சேர்க்கை இலக்கம் 06(1994) என்பவற்றினூடாக மிகவும் ஒழுங்குப்படுத்தப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. POP பீடை நாசினிகள் பாவனை 1970 களில் ஆரம்பத்தில் தடுக்கப்பட்டதுடன் கடைசி POP பீடை நாசினி கறையானுக்குரியதாகும். இது 1996 இல் தடுக்கப்பட்டது. இருந்தபோதும், POP பீடை நாசினிகள் மிகச்சிறிய அளவில் முறையற்ற வகையில் இறக்குமதி நடை பெறுவதால் இதற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

பீடை நாசினி கைத்தொழிலில் இணையும் புதியவர்களுக்கான வழிகாட்டிகள்

புதிய நிறுவனங்கள் பீடை நாசினி வர்த்தகத்தில், அதாவது பீடை நாசினி இறக்குமதி, களஞ்சியப்படுத்தல், பகிர்ந்தளித்தல், விற்பனை செய்தல், ஆகியவற்றில் ஈடுபடுவதற்கு வழக்கமாக பீடை நாசினி தொழில்நுட்ப ஆலோசனை குழு (PeTAC) அனுமதி வழங்குகின்றது. போதிய கட்டமைப்பு வசதி (களஞ்சியப்படுத்தல், பெரிய அளவில் பீடை நாசினிகள் பராமரித்தல்) சந்தைப்படுத்தலில் சிறந்த அனுபவம், மற்ற நடவடிக்கைகளில் அனுபவம் என்பவற்றின் திருப்தியின் அடிப்படையில் பதிவு வழங்கப்படும். இதனுடன் தொடர்பாக பீடை நாசினிகள் பதிவு அலுவலகம் PeTAC யுடன் கலந்தோசித்து புதிய நிறுவனங்கள் பதிவுக்கான வழிகாட்டி ஒன்றை தயாரித்துள்ளது. 2012 ம் ஆண்டு இரண்டு நிறுவனங்களுக்கு பீடை நாசினி வர்த்தகத்தில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

பாவித்த பீடை நாசினி வெற்றுப் பாத்திரங்களைக் கையாள்தல்

பீடை நாசினிகள் பதிவாளர் அலுவலகம், சூழல் அமைச்சுடன் இணைந்து பாவித்த பீடை நாசினி வெற்றுப் பாத்திரங்களை பாதுகாப்பாக, வினைதிறனாக அழித்தல் சம்பந்தமாக ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இவ் அழிப்பு கொடுப்பவை மீளப் பெறும் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. ஓகஸ்ட் 2012 இல் விவசாய அமைச்சு, மற்றும் சூழல் அமைச்சிற்குரிய அமைச்சர்கள், பீடை நாசினி வெற்று பாத்திரங்களை விவசாய வயல்

மட்டத்தில் அழிப்பதற்கு பொருத்தமான பொறிமுறையை உருவாக்க ஒப்புக் கொண்டனர். சூழல் அமைச்சினால் நடாத்தப்பட்ட தரவு சேகரிப்பின் படி (விவசாயிகள், வர்த்தகர், பொதுசனம் என்பவர்களிடம் இருந்து பெறப்பட்டது) இத்திட்டத்திற்கு பெரிய ஏற்றுக் கொள்ளும் தன்மை அவதானிக்கப்பட்டது. முதலில் கண்ணாடிப் பாத்திரங்களும், அடுத்ததாக பிலாஸ்ரிக் பாத்திரங்களும் அழிப்பதற்கான வசதிகள் உருவாக்கப்படும். ஒக்டோபர் 2012 இல் பிளாஸ்ரி மீள் சுழற்சி முறைக்கு பாவனையாளர்களிடம் இருந்து முன்மொழிவுகள் வரவேற்கப்பட்டன. மத்திய சூழல் அதிகாரியிடம் இருந்து வேண்டிய அனுமதி பெறப்படும். 2012ல் 23,000 பிளாஸ்ரிக் தகரங்கட்கு அதிகாரமுள்ள பகுதியினருக்கு, முன் அனுமதி முறைப்படி கொடுக்கப்பட்டது. உருக்கினால் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள் முன் அனுமதி முறைப்படி மீள் சுழற்சிக்கு அனுமதிக்கப்பட்டது. 2012ல் 8000 உருக்குத் தகரங்கள் (180 மெ.தொன்) மீள் சுழற்சி செய்யப்பட்டது. அடுத்த வருடத்தில் வெற்றுப் பாத்திரங்களின் பராமரிப்பு பீடை நாசினிகள் அலுவலகத்திற்கு ஒரு புதிய செயற்பாடாகும்.

2012 காலப்பகுதியின் முன்னேற்றகரமான செயற்பாடுகள்

	உப செயற்பாடு	மொத்த வருடாந்த பௌதீக இலக்கு	வருட முடிவில் நிறைவேற்றப் பட்டவை	வீதம் (%)
01.	தெரிவு செய்யப்பட்டு, விண்ணப்ப இலக்கம் வழங்கப்பட்ட பின் பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டவை	150	149	99
02.	பதிவுக்கான மூல விண்ணப்ப மதிப்பீடு	30	30	100
03.	பதிவுக்கான மூன்றாம் பங்காளி விண்ணப்ப மதிப்பீடு	140	34	24
04.	மீள் பதிவுக்கான மதிப்பீடு	140	189	135
05.	உள்ளூர் பரிசோதனைக்கான தரவு மதிப்பீடு	30	94	313
06.	இறக்குமதி அனுமதி கொடுத்தவை	1400	874	62
07.	பீடை நாசினி தர சான்றிதழ் மதிப்பீடு	1400	595	42
08.	அனுமதிப்பிற்காக விளக்கச் சீட்டுத் தெரிவு	750	497	66
09.	அனுமதிப்பிற்காக விளம்பரப் பொருட்கள் தெரிவு	250	122	49
10.	தொழிற்சாலை பரிசோதித்தல்	12	09	75
11.	அனுமதிக்கப்பட்ட மீள் பொதி செய்தலும், களஞ்சியப் பரிசோதனையும்	02	09	450
12.	இரசாயனப் புகையிடல், வீட்டு பீடைத் தடுப்பு என்பவற்றில் ஸ்தலம் பரிசோதித்தல், சான்றிதழ் கொடுத்தல்	30	27	90
13.	பீடை தடுப்பு சேவை பதிவு	30	33	110

14.	கப்பலில் இருந்து இறக்கு முன் பரிகரணம், தாவர தடுப்பு பாதுகாப்பு சேவை (quarantine) இற்காக CH_3 Br அனுமதித்தல்	60	88	147
15.	MRI, ITI பரிசோதனை அறிக்கை பெற மாதிரிகள் அனுப்புதல் (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் சம்பந்தமாக)	25	38	152
16.	தொகுதியின் மாதிரிகள் தரப்பகுப்பாய்வு – பொதி செய்தல் அனுமதி	800	284	36
17.	விற்பனை நிலைய (Sales outlet) பரிசோதனை	140	70	50
18.	பீடை நாசினி பதிவுக்கான வழிகாட்டி திருத்தம் வெளியீடு / புதிதாக இணைபவர்களுக்கான வழிகாட்டி	04	03	75
19.	ஊடக நிகழ்ச்சிகள் (தொலைக்காட்சி / வானொலி / அச்சு)	12	25	208
20.	ASTA பயிற்சி / சான்றிதழ்	25	0	0
21.	கண்காட்சி (புரிந்து கொள்ளல்)	04	03	75
22.	வர்த்தக பயிற்சி வகுப்பு	30	0	0
23.	வர்த்தக பயிற்சி சான்றிதழ் வழங்கல்	1100	129	12
24.	வர்த்தக சான்றிதழ் வழங்கல்	2000	1184	59
25.	வயல் முறைப்பாடு	04	12	300
26.	வழங்குகள்	02	02	100
27.	தொழில்நுட்ப ஆலோசனை குழு கூட்டம்	06	06	100
28.	PeTAC தீர்மானங்களை அறிவிப்பதற்காக கைத்தொழிலாளருடன் கூட்டம்	06	05	67
29.	பீடை நாசினி உப குழு (மூன்று உப குழுக்கள்) கூட்டம்	09	06	66
30.	சேர்க்கைப் பகுப்பாய்வு	800	1096	137
31.	பீடை நாசினி தூய்மை பரீட்சித்தல் (எழுந்தமானமாக)	12	07	58
32.	வெற்றுப் பத்திரம் அழிதலுக்கான திட்டங்கள் உருவாக்கம் / நடைமுறைப்படுத்தல்	02	03	150

33.	திணைக்களத்திற்கிடையில் / வெளியில் கூட்டத்தில் தொழில்நுட்ப நிபுணர் / அங்கத்தவர் / வளவாளர்	33	29	87
34.	மற்ற நிறுவனங்களுக்கான வளவாளர்	10	19	190
35.	இறக்குமதி தரவு சேகரித்தல், பதிதல், பகிர்தல்	40	06	15
36.	ஏனைய செயற்பாடுகள் (வயல் ஆய்வுகள்)	4	2	50

2013 இற்கான திட்டங்கள்

தொழில்நுட்ப வேலைத்திட்டம் ~ 2013

நிகழ்ச்சி : பீடைநாசினிப் பதிவு

இல	செயற்பாடு	மொத்த வருட பௌதீக இலக்கு	திரள் பௌதீக இலக்கு (கால் ஆண்டு)				எதிர்பார்க்கப்படும் அனுகூலங்கள்
			1	2	3	4	
1	பதிவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் (தெரிவு, விண்ணப்பம் இலக்கம் வழங்கிய பின்)	150	40	80	120	150	உள்ளூர் நிலைக்கு பாதிப்பு இல்லாமல் / விவசாய உள்ளீட்டுச் செலவு குறைவு போன்ற தீர்மானங்களுக்கு வருவதற்கு
2	பதிவுக்கான மூல விண்ணப்பம் மதிப்பீடு	30	05	15	25	30	
3	மூன்றாம் நபர் (third party) விண்ணப்பம் பதிவிற்கான மதிப்பீடு	140	35	70	105	140	
4	மீள்பதிவுக்கான மதிப்பீடு	140	35	70	105	140	
5	அனுமதி பெறுவதற்காக பதிவுச் சான்றிதழ் தயாரித்தல்	280	70	140	210	280	
6	உப குழுவுக்காக தரவு தயாரிப்பு, மதிப்பிடல்	30	05	15	25	30	மனித, சூழல் நேசமுள்ள சேர்க்கை வெளியீட்டுக்கு

7	ROP அனுமதிக்காக இறக்குமதி அனுமதி தயாரித்தல்	1400	300	550	1000	1400	சரியான மூலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும், தேவையற்ற மேலதிக அளவு இறக்குமதியை தடுக்கவும்
8	இறக்குமதி அனுமதி வழங்கல்	1400	300	550	1000	1400	
9	பீடைநாசினி தரத்தின் மதிப்பீடு	1400	300	550	1000	1400	தரமான பீடைநாசினிகளை இறக்குமதி செய்வதை உறுதிப்படுத்தலும், FAO அளவுக்கமைய இருப்பதை உறுதிப்படுவத்தவும்
10	விளம்பரச் சீட்டை அனுமதிப்பதற்கான தெரிவு	750	100	300	500	750	சரியான செய்தியை விவசாயி, தொடர்புடைய அதிகாரிகளுக்கு வழங்கல், சாதுரியமான பாவனை, பாதுகாப்பு
11	விளம்பரப் பொருட்கள் அனுமதிப்பதற்கான தெரிவு	250	50	100	200	250	
12	தொழிற்சாலைச் சோதனை	12	3	6	9	12	தொழிற்சாலை நியமத்தை சரியாக பின்பற்றுவதை உறுதிப்படுத்தல்
13	மீள் பொதி செய்தல் களஞ்சிய பரிசோதனை	12	3	6	9	12	பொதி செய்யும் நியமங்கள் பின்பற்றுவதை உறுதிபடுத்துவது, தரம் பராமரிப்பது
14	இரசாயனப் புகையிடல், வீட்டு பீடை தடுப்பு என்பவற்றை சோதித்தல், அனுமதி வழங்கல்	30	5	10	20	30	இரசாயன புகையூட்டல் ஒழுங்குபடுத்தவதன் மூலம் இறக்குமதி மறுப்பை தவிர்ப்பதற்கு
15	பீடை தடுப்பு சேவை	30	05	10	20	30	திறமையற்றவர்கள் இக்கைத்தொழிலுக்கு வருவதை தடுத்தல்
16	கப்பலில் இருந்து இறக்க முன் பரிகரணம், (quarantine) தாவர தடுப்பு பாதுகாப்பு சேவைக்கு CH_3Br அனுமதி பெறல்	60	15	30	45	60	
17	விற்பனை நிலைய (sales outlets) சோதனை	140	30	75	110	140	போலியான உற்பத்திகளின் விற்பனையை தடுப்பது

18	MRI & ITI களின் பரிசோதனை அறிக்கை பெற மாதிரிகள் அனுப்புதல் (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் சம்பந்தமாக)	25	7	15	20	25	தரமான உற்பத்தி சந்தையில் இருப்பதை உறுதி செய்தல்
19	தொகுதியின் மாதிரிகள் தரப்பகுப்பாய்வு – பொதி செய்தல் அனுமதி	800	200	400	650	800	
20	ஊடக நிகழ்ச்சிகள் தொலைக் காட்சி, வானொலி அச்சு	264	22	142	155	264	பயிற்சியாளரை பயிற்றுவித்தலும், சமூகத்தின் புரிந்து கொள்ளல் முன்னேற்றலும்
21	ASTA பயிற்சி, சான்றிதழ்	25	5	10	20	25	
22	கண்காட்சி	4	1	2	5	4	
23	AUOS இற்காக புரிந்து கொள்ளல் திட்டங்கள்	2	-	1	2	2	பீடை நாசினிப் பயிற்சி பெற்றவர்களால் விற்கப்படுவதையும், சான்றிதழ் பெற்ற நிலையத்தில் விற்கப்படுவதையும் உறுதி செய்வதற்கு
24	வர்த்தக சான்றிதழ் வழங்கல்	2000	500	1000	1500	2000	
25	வயல் முறைப்பாடு	6	1	2	4	6	விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டவர்களுக்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு
26	சட்டப்படியான வழக்குகள்	4	-	2	3	4	
27	தொழில்நுட்ப ஆலோசனை குழு கூட்டம்	6	2	3	5	6	COP சட்டம் சம்பந்தமாக அறிவுரை வழங்கல்
28	PeTAC தீர்மானங்களை அறிவிப்பதற்கு கைத்தொழிலாளருடன் கூட்டம்	6	2	3	5	6	சிபார்சு சம்பந்தமான பரிசீலனை, கைத்தொழிலில் பீடை நாசினி பாவனை
29	பீடை நாசினி உப குழு கூட்டம் (மூன்று கூட்டம்)	18	6	9	12	18	சிபாரிசு சம்பந்தப்பட்டவை பரிசீலனை, சுகாதார, பொதுசுகாதார, வீட்டுப் பீடை தடுப்பு என்பவற்றிற்கு பீடை நாசினி பாவனை
30	சேர்க்கை பகுப்பாய்வு	800	150	350	625	800	பீடை நாசினிகளின் தரப்,

31	பீடை நாசினி தூய்மை பரிசோதனை (எழுந்தமானம்)	12	4	8	12	12	பகுப்பாய்வும், உணவு, நீர் என்பவற்றில் இரசாயன மீதி பகுப்பாய்வும்
32	பீடை நாசினி தூய்மை (பார மூலகம் உட்பட) அபாய மதிப்பீடு						பீடை நாசினிகளின் பார மூலக தூய்மை தன்மை ஒழுங்குத் திட்டம்
33	பீடை நாசினி காரணமாக சூழலில் உள்ள இலக்கு அற்ற உயிரினங்களின் தாக்கம்						சூழலில் பாதிப்பை ஏற்படுத்தும் பீடை நாசினி சிபாரிசில் இருந்து அகற்றல்
34	பீடை நாசினிக்கு எதிர்ப்பு உருவாதலை மதிப்பிடல்						பீடை நாசினிகட்கு எதிர்ப்பு பரிபாலன திட்டம் நடை முறைப்படுத்தல்
35	மரக்கறி, பழங்களில் இரசாயன மீதியின் அளவை உறுதிப்படுத்த ஒழுங்குத் திட்டம் உருவாக்கல்						MRI கண்காணிப்புத் திட்டம்
36	வீட்டுப் பீடை நாசினிகளின் வயல் திறன் மதிப்பீடு						வீட்டுப் பீடை நாசினிகளின் வினைத்திறனை பரிசோதிப்பதற்கான சரியான முறை
37	வெற்றுப் பாத்திரங்கள் அழிப்பிற்கான திட்டம் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல்	2	1	1	2	2	சூழல் மாசடைதலை குறைத்தல்
38	திணைக்களுக்கிடையில், வெளியில் கூட்டத்தில் தொழில்நுட்ப நிபுணராக, அங்கத்தவர், வளவாளர்கள்	27	5	12	19	27	சுகாதார, சூழல் தாக்கங்களை (பீடை நாசினி சம்பந்தமாக) குறைத்தல்
39	மற்ற நிறுவனங்களுக்காக வளவாளராகச் செயற்படல்	10	2	5	8	10	
40	இறக்குமதி தரவு சேகரித்தல் பதிதல், பகிர்தல்	40	10	20	30	40	
41	பீடை நாசினிகளை பதிதல் சம்பந்தமான ஒழுங்கு விதிகள் திருத்தம் வெளியிடல், புதிய வர்க்கங்கள் பீடை நாசினி வர்த்தகத்திற்கு வருவதற்கான ஒழுங்கு விதிகள்	2	-	1	2	2	
42	மற்ற செயற்பாடுகள் (வயல் ஆய்வு)	4	1	2	3	4	

அலுவலர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பீடைநாசினிப் பதிவாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	04
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	04
விவசாயக் கண்காணிப்பு அலுவலர்	02
நிகழ்ச்சி உதவியாளர் (விவசாயம்)	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர்	05
சாரதி	03
காவலாளி	01
தொழிலாளர் (ஒப்பந்தம்)	02
KKS	01
தொழிலாளி	02
மொத்தம்	**35**

2.1.5 தாவர பிறப்புரிமை மூல வள நிலையம் (PGRC), கன்னொறுவை

தாவர பிறப்புரிமை மூலவள நிலையம் (PGRC) தொடர்ந்து தனது நடவடிக்கையான உணவுப் பயிரின் தாவரப் பிறப்புரிமை மூலவளங்களை பாதுகாப்பதும், பாவிப்பதை ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகின்றது. இதை அடைவதற்காக தாவர பிறப்புரிமை மூலவள நிலையம் (PGRC) தொடர்ந்து உணவுப் பயிர் மற்றும் அதனுடன் தொடர்புடைய இனங்களின் பிறப்புரிமை வேறுபாடு உடைய மூலவளங்களை சேகரிப்பது, அறிமுகம் செய்தல், பாதுகாத்தல், மதிப்பிடல், தரவு பதிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இந்நிலையத்தின் சேகரிக்கும் நடவடிக்கை இக்குறிக்கப்பட்ட வருடத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்துள்ளது. முக்கியமாக நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து சேகரிக்கப் பட்டன. விதை மரபணு வங்கியில் 12,980 பிறப்புரிமை மூலவுயியிருக்கள் பாதுகாக்கப்படு கின்றது. விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்க ளினால் பிறப்புரிமை மூலவுயியிருக்கள் பயன்படுத்தப் படுதல் அதிகரித்துள்ளது.

இந்நிலையத்தின் உயிரியல் தொழில்நுட்ப பிரிவு தக்காளி கலப்பினவர்க்கம் மகேசியின் (Maheshi) தூயத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இரண்டு இலகு வரிசை காட்டிகளை (Simple seguence Repeat markers) இனங்கண்டுள்ளது.

இந்த அறிக்கை 2012ம் ஆண்டு PGRC யினால் அடையப்பட்ட முன்னேற்றத்தின் சுருக்கமாகும்.

பாதீடு

2012 ஆம் வருடத்திற்குரிய பாதீடு 2.1.5.1 அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.5.1 வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கப்பட்ட தொகை	செலவிடப்பட்ட தொகை	செலவு வீதம்
நடைமுறைக் கணக்கு	11,306,000	10,838,719	96
மூலதன கணக்கு	2,580,000	2,170,522	84
கருத்திட்டங்கள்			
PGR ஒருங்கிணைந்த பராமரிப்பு (AFACI)	1,132,000	448,447	40
தேசிய விவசாய ஆராய்ச்சிக் கருத்திட்டம் (NARP)	1,725,700	1,709,467	99
மொத்தம்	**16,743,700**	**15,167,155**	**91**

முன்னேற்றம்

தாவர பிறப்புரிமை மூலவுயிரிருக்களைத் தேடியறிதலும், சேகரித்தலும்

எமது நாடு உயிரியல் பல்லினத்தன்மையை அதிகளவில் கொண்டிருப்பதனால் அதிகளவில் தாவர மூலவுயிரிருக்களைச் சேகரிக்கக் கூடியதாக உள்ளது. தாவர பிறப்புரிமை மூலவள நிலையம் (PGRC), அமைக்கப்பட்டு 23 வருடங்களின் பின்பு வடகிழக்குப் பகுதியில் இருந்து தாவர பிறப்புரிமை மூலவுயிரிருக்களைச் சேகரித்துள்ளது. தேடியறிதல், சேகரிக்கும் பகுதி (Exploration Unit) மேலே குறிக்கப்பட்ட மாகாணங்களில் உள்ள விவசாய நிறுவனங்கள், மற்றும் விவசாய உத்தியோகத்தர்களுடன் மீண்டும் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. வயல் சேகரிப்புடன் விட, விவசாய திணைக்களத்தின் ஏனைய ஆராய்ச்சி நிலையங்களில் இருந்தும் பிறப்புரிமை மூலவுயிரிருக்கள் சேகரிக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டு 814 சேகரிப்புகள் (மாதிரிகள்) சேகரிக்கப்பட்டன. மொத்தமாக 784 சேகரிப்புகள் (விதை) சேமிப்பிற்காக மரபணு வங்கியிற்கு வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 30 சேகரிப்புகள் பதிய முறையில் இனப்பெருக்கம் செய்யப்படும் வகையைச் சேர்ந்ததால் அவை வயலில் ஸ்தாபிக்கப்பட்டன.

தேடியறிதலும், சேகரித்தலும்

2012 ஆம் ஆண்டு தேடியறிதல், சேகரித்தல் பகுதி ஆறு சேகரிப்புக்களை மேற்கொண்டது. இவை அநுராதபுரம், புத்தளம், கண்டி, மன்னார், அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக 394 சேகரிப்புகள் விவசாய வயல்களில் இருந்து சேகரிக்கப்பட்டன. அதனுடைய சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

தேடியறிதலும், சேகரித்தலும் –01 நுவரெலியா

மூன்று உத்தியோகத்தர்கள் இந்த சேகரிப்பில் ஈடுபட்டனர். இது 2012, மார்ச் மாதம் 6ம் திகதி மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக நாற்பத்தி யொரு சேகரிப்புகள் வெவ்வேறு பயிர் வகைகளில் இருந்து சேகரிக்கப்பட்டன.

அட்டவணை 2.1.5.2 நுவரெலியா பகுதியில் பயிர் மூலவுயிருருச் சேகரிப்பு

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
மரக்கறிகள்	16	நாவலப்பிட்டி
சரக்குப் பயிர்கள்	25	
மொத்தம்	**41**	

தேடியறிதலும், சேகரித்தலும் –02 மன்னார் மாவட்டம்

இந்த சேகரிப்பு மன்னார் மாவட்டத்தில் உள்ள விரிவாக்க உத்தியோகத்தர்களின் உதவியுடன் 2012, மார்ச் 19 தொடக்கம் 22ம் திகதி வரை நடைபெற்றது. இது PGRC அமைக்கப்பட்ட பின் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சேகரிப்பாகும். மொத்தமாக அறுபத்தி நான்கு சேகரிப்புகள் வெவ்வேறு வகையான பயிர்களில் இருந்து பெறப்பட்டன.

அட்டவணை 2.1.5.3 பயிர் மூலவுயிருருச் சேகரிப்பு மன்னார் மாவட்டம்

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
நெல்	01	நானாட்டான், முருங்கன்
வன் தானியங்கள்	02	பண்டிவிரிச்சான்
மரக்கறிகள்	39	பேசாலை
அவரைத் தானியம்	01	கீரி
எண்ணெய்ப் பயிர்	02	வண்சியன் குளம்
சரக்குப் பயிர்	14	வெள்ளான் குளம்,
கிழங்கு வகை	03	மடு
பழப்பயிர்	02	
மொத்தம்	**64**	

தேடியறிதலும், சேகரித்தலும் –03 திருகோணமலை மாவட்டம்

இது 2012 ஆம் ஆண்டு திருகோணமலையில் மேற்கொள்ளபட்ட இரண்டாவது சேகரிப்பாகும்.

இது மார்ச் மாதம் 28 இலிருந்து 30 திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. வெவ்வேறு பயிர் வகைகளில் இருந்து மொத்தம் நூற்றி இரண்டு சேகரிப்புகள் சேகரிக்கப்பட்டன.

அட்டவணை 2.1.5.4 பயிர் முலவுயிருருச் சேகரிப்பு திருகோணமலை மாவட்டம்

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
நெல்	01	
வன் தானியங்கள்	09	
மரக்கறிகள்	54	முள்ளிப் பொத்தான
அவரைத் தானியம்	01	கோமரன் கடவள
சரக்குப் பயிர்	16	பதிவிய சிறீபுர
கிழங்கு வகை	12	
பழமரங்கள்	04	
மருந்துப் பயிர்	04	
கரும்புப் பயிர்	01	
மொத்தம்	**102**	

தேடியறிதலும், சேகரித்தலும் ~04 கலஹா பகுதி

மூன்று உத்தியோகத்தர்கள் ஓகஸ்ட் மாதம் 9ம் திகதி கலஹா பகுதியில் சேகரிப்பில் ஈடுபட்டனர். மொத்தமாக முற்பத்தி நான்கு சேகரிப்புகள் வெவ்வேறு வகையான பயிர்களில் இருந்து பெறப்பட்டன.

அட்டவணை 2.1.5.5 பயிர் முலவுயிருருச் சேகரிப்பு கலஹா பகுதி

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
மரக்கறிகள்	18	
சரக்குப் பயிர்	16	கலஹா
மொத்தம்	**34**	

தேடியறிதலும், சேகரித்தலும் ~05 அம்பாறை மாவட்டம்

ஏழு வருடங்களின் பின்பு அம்பாறை மாவட்டத்தில் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது. இது 2012 செப்டெம்பர் மாதம் 24 இலிருந்து 26 ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக நூற்றி இருபது சேகரிப்புகள் வெவ்வேறு வகைப் பயிர்களில் இருந்து சேகரிக்கப்பட்டன.

அட்டவணை 2.1.5.6 பயிர் முலவுயிருருச் சேகரிப்பு அம்பாறை மாவட்டம்

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
வன் தானியங்கள்	19	அம்பாறை, டமாண
மரக்கறிகள்	67	லகுகல, பொத்துவில்
அவரைத் தானியம்	17	திருக்கோவில்,
சரக்குப் பயிர்	09	மகா ஓயா,
எண்ணெய்ப் பயிர்	05	பதியத்தலாவ
மருந்துப் பயிர்	03	
மொத்தம்	**120**	

தேடியறிதலும், சேகரித்தலும் ~06 கங்குரான் கெற்ற பகுதி (Haguranketta)

இரண்டு உத்தியோகத்தர்களை கொண்ட சேகரிப்புக் குழு 33 சேகரிப்புக்களை வெவ்வேறு வகையான பயிர்களில் இருந்து சேகரித்தது.

அட்டவணை 2.1.5.7 பயிர் முலவுயிருருச் சேகரிப்பு கங்குரான் கெற்ற பகுதி

பயிர் கூட்டம்	மாதிரிகளின் எண்ணிக்கை	சென்ற பகுதி
வன் தானியங்கள்	11	உனன்தன்ன,
மரக்கறிகள்	15	
அவரைத் தானியம்	04	மாராசன
சரக்குப் பயிர்	01	
எண்ணெய் பயிர்	02	
மொத்தம்	**33**	

ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து பயிர் முலவுயிருருக்களின் சேரிப்பு

விவசாய வயல்கள், மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் என்பவற்றில் இருந்து, முலவுயிருருக்களை சேகரித்தல் தாவர பிறப்புரிமை முலவள நிலையத்தின் பொறுப்பாகும். வெவ்வேறு பயிர்களின் முலவுயிருருக்கள் இந்த ஆராய்ச்சி

நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. அத்துடன் வர்க்க இனவிருத்தித் திட்டங்களில் உருவாக்கப்படும் இனவிருத்தி வம்சாவழிகள் சேமிக்கப்படல் அவசியமாகும். சில சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்கள் PGRC இற்கு கிடைக்கப்பெறவில்லை. வெவ்வேறு மூலங்களில் இருந்து வெவ்வேறு பயிர்களின் மூலவுயிருருக்கள் சேகரிக்கப்பட்டு PGRCஇல் சேமிப்பது எதிர்கால பயிர் இனவிருத்திக்கு உதவியாக இருக்கும்.

ஆராய்ச்சி நிலையங்களில் வெவ்வேறு பயிர்களின் மூலவுயிருருக்கள் அந்நிலையத்தின் இனவிருத்தி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுடன் அதிகரித்துச் செல்லும். எனவே பெறுமதிமிக்க இந்த மூலவுயிருருக்கள் இழக்கப்படாமல் இருக்க அடிக்கடி சேகரிப்புகள் மேற்கொள்ளப்படல் நல்லது. ஆராய்ச்சி நிலையங்களில், முக்கியமாக வட, கிழக்கு நிலையங்களில் இருந்து பல வருடங்களாக மூலவுயிருருக்கள் சேகரிக்கப்படவில்லை.

A. பயிர் மூலவுயிருருச் சேகரிப்பு – ஆராய்ச்சி நிலையங்கள்

நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (RRDI), வயற்பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் (FCRDI) மகாஇலுப்பள்ளம மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட மற்ற ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து, 2012 செப்டெம்பர் மாதம் 5 தொடக்கம் 7ம் திகதி வரை சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

கீழ் வரும் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து சேகரிக்கப்பட்டன.

1. RRDI, பத்தலகொட
2. FCRDI, மகா இலுப்பள்ளம
3. ARS, வவுனியா
4. RARDC, கிளிநொச்சி
5. ARS, தின்னவேலி

அட்டவணை 2.1.5.8 மூலவுயிருருச் சேகரிப்பு – ஆராய்ச்சி நிலையங்கள் (5~7 செப்டெம்பர், 2012)

ஆராய்ச்சி நிலையம்	சேகரிக்கப்பட்ட மூலவுயிருருக்களின் எண்ணிக்கை							
	நெல்	வன் தானியம்	அவரை யினப்பயிர்	எண்ணெய்ப் பயிர்	சரக்குப் பயிர்	மரக்கறிகள்	பழப்பயிர்	ஏனையவை
RRDI, பத்தலகொட	07	-	-	-	-	-	-	-
FCRDI மகா இலுப்பள்ளம	-	01	46	02	12	01	02	-
ARS வவுனியா	02	-	-	-	-	09	01	01
RARDC, கிளிநொச்சி	03	02	01	-	-	03	-	-
ARS, தின்னவேலி	-	-	-	-	04	11	11	-
மொத்தம்	**12**	**03**	**47**	**02**	**16**	**24**	**14**	**01**
கூட்டு மொத்தம்				**119**				

B. மூலவுயிருருச் சேகரிப்பு – ஆராய்ச்சி நிலையங்கள்

ARS - கிரான்துருக்கோட்டை, ARS - மதுருக்கெற்றிய, GLORDC - அங்குணகொலபெலஸ்ஸ, FCRDC- கொரண, RRRC - போம்புவல, மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களான அம்பலாந்தோட்ட, லபுதுவ, பென்தோட்ட ஆகிய நிலையங்களில் இருந்து 2012 ஒக்டோபர் மாதம் 10 தொடக்கம் 12ம் திகதி வரை சேகரிக்கப்பட்டது.

அட்டவணை 2.1.5.9 மூலவுயிருருச் சேகரிப்பு – ஆராய்ச்சி நிலையம்

ஆராய்ச்சி நிலையம்	சேகரிக்கப்பட்ட மூலவுயிருருக்களின் எண்ணிக்கை							
	நெல்	வன் தானியம்	அவரை யினப்பயிர்	எண்ணெய்ப் பயிர்	சரக்குப் பயிர்	மரக்கறிகள்	பழப்பயிர்	மற்றவை
ARS கிரான்துருக் கோட்டை	-	03	04	13	-	10	-	-
ARS, மதுருகற்றிய	01	01	-	-	01	05	-	-
GLORDC, அங்குணகொல பெலஸ்ஸ	-	-	-	-	-	42	-	-
FCRDC, கொரண	-	-	-	-	02	06	-	-
RRAC, போம்புவெல	11	-	-	-	-	-	-	-
RRS, அம்பாலாந் தோட்ட	15	-	-	-	-	-	-	-
RRS, லபுதுவ	12	-	-	-	-	-	-	-
RRS, பென்தோட்ட	02	-	-	-	-	-	-	-
மொத்தம்	**41**	**04**	**04**	**13**	**03**	**63**	**-**	**-**
முழு மொத்தம்				**128**				

C. ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெறப்பட்ட பயிர் முலவுயிருருக்கள்.

பிராந்திய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், பண்டாரவளையில் இருந்து போஞ்சி சேகரிப்புகள் 175 கிடைக்கப்பெற்றது.

கடவுச்சீட்டு தரவுகள்

மொத்தம் 200 பதிவுகளின் (ACC No 012779 – 012979) கடவுச்சீட்டு தரவுகள் தரவு முகாமைத்துவப் பகுதிக்கு கொடுக்கப்பட்டது.

விதைகள் சேமிப்பு

2012ம் ஆண்டு 73 புதிய சேகரிப்புக்கள், 171 பெருக்கப்பட்ட சேகரிப்புகளும் மரபணு வங்கியில் சேமிக்கப்பட்டன. இந்த வருடக் கடைசியில் மரபணு வங்கியில் உள்ள மொத்த எண்ணிக்கை 12,980 ஆகும். மரபணு வங்கியின் சேமிப்பு பற்றிய விபரம் அட்டவணை 2.1.5.10 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.5.10 மரபணு வங்கியின் சேமிப்பு விபரம்

பயிர் கூட்டம்	எண்ணிக்கை
நெல்லும் அதனுடன் தொடர்புடைய இனங்களும்	4541
மற்ற தானியங்களும், தொடர்புடைய இனங்களும்	1657
அவரையினங்களும், தொடர்புடைய இனங்களும்	2062
அவரையின மரக்கறி	1302
சொலனேசியே மரக்கறி, சரக்குப் பயிர்கள், அதனுடன் தொடர்புடைய இனங்களும்	1221
பூசணி இன மரக்கறிகள்	785
பிரசிகேசியே மரக்கறிகள் (Brassicace)	31
வெங்காய இனம் (Alliums)	20
வேறு மரக்கறிகள்	371
இலை மரக்கறிகள்	167
வேர், கிழங்கு வகை	09
கடுகு, அதனுடன் தொடர்புடைய இனங்களும்	124
எண்ணெய்ப்பயிர்	434
நார்ப்பயிர்	66
மருந்துவப் பயிர்	27
பழப்பயிர்	167
மொத்தம்	**12,980**

முலவுயிருருக்கவின் பாவனை

ஆராய்ச்சித் தேவைகளுக்காக மொத்தம் ஆயிரத்து முன்நூறு மூலவுயிருருக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அத்துடன் 553 மூலவுயிருருக்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

விதையின் நடத்தை பற்றிய ஆராய்ச்சி, மரபணு வங்கியில் 1989 இல் இருந்து 2007 வரை சேமிக்கப்பட்ட சிறகவரை, எள், கடுகு என்பவற்றின் வாழ்தகவு பரிசோதிக்கப்பட்டது. மொத்தம் ஆயிரத்து பதின்மூன்று, மூலவுயிருருக்களின் வாழ்தகவு பரிசோதிக்கப் பட்டன. பரிசோதனையின் முடிவுகளின்படி உயிர்ப்பான சேமிப்பில் இருந்த கடுகு, மற்றும் எள் என்பவற்றின் வாழ்தகவு குறையாமல், ஆரம்பத்தில் இருந்த வாழ்தகவை ஒத்திருந்தது. ஆனால் சிறகவரையின் வாழ்தகவு 1989 இல் இருந்து 1991 வரையில் 85% இன் கீழ் குறைந்து காணப்பட்டது. இருந்தபோதிலும் 1991 இன் பின்பு வாழ்தகவில் மாற்றமில்லை.

முலவுயிருருக்களை மதிப்பிடவும், பெருக்குதவும்

கீழ்வரும் மூலவுயிருருக்கள் பெருக்கப்பட்டு மரபணு வங்கியில் சேமிப்பிற்காக கையளிக்கப்பட்டது.

தக்காளி (53), கத்தரி(44), பயற்றை(11), பீர்க்கு(5) சிறகவரை(7), வெண்டி (34), கீரை (Amaranthus) (22), குரக்கன்(8), கம்பு (6), தினை(2), வரகு(3), சாமை(2), கையாசின்த் (Hyacinth bean) அவரை (7), ஜாக் அவரை (Jack bean) (7), வாள் அவரை (Sword bean) (15), கொத்தவரை (Clustor bean) (1), யாம் அவரை (Yam bean) (1).

மொத்தம் 23 சின்னவெங்காய சேகரிப்புகள் பெருக்கப்பட்டது. இந்த சேகரிப்புகள் உலர் வலயத்தில் பரிசோதிக்கப்படவுள்ளன.

முன் இனவிருத்தி (Pre breeding)

தும்பை மற்றும் பாவற்காய் பயிர்களுக்கிடையில் கலப்பு ஏற்படுத்தப்பட்டு பெறப்பட்ட F_1 விதைகள் 6 மாத உறங்கு நிலையை கொண்டிருந்தது. சில விதைகள் முளைத்தன. அந்த நாற்றுக்கள் மேலதிக பரிசோதனைக்காக நடுகை செய்யப்பட்டது.

வாழை வயல் மரபணு வங்கியின் நிர்மாணம்

விவசாய வயல்களில் இருந்து நூற்றிப்பத்து, வாழை சேகரிப்புக்கள் சேகரிக்கப்பட்டு மதிப்பீடு மற்றும் இயல்புகளின் கற்கைக்காக படிப்பதற்காக வயலில் ஸ்தாபிக்கப்பட்டன.

உயிரியல் தொழில்நுட்பம்

கலப்பின வர்க்கங்களின் பிறப்புரிமை தூய்மை (Genetic purity) பரிசோதனை (தக்காளி, கத்தரி)

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு பயிரிடப்படும் கலப்பின வர்க்கங்களின் பிறப்புரிமை தூய்மையை மூலக்கூற்று காட்டியை பாவித்து அறிவதற்கு உயிர் தொழில்நுட்ப நெறிமுறையை (Protocol) விருத்தி செய்வதே இப்பரிசோதனை யின் நோக்கமாகும். தக்காளி கலப்பின வர்க்கம் மகேசியின் (Maheshi) தூய்மையை அறிவதற்கு இரண்டு SSR முதன்மைகள் (SSR Primers) அடையாளம் காணப்பட்டன. மேலும் இது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மரபணு வங்கியில் சேகரிக்கப்பட்டுள்ள வெண்டி மூலவுயிருருக்களின் உருவவியல் தோற்றம் மற்றும் மூலக்கூற்று இயல்புகள் அறிதல்

பதின்மூன்று வெண்டி மூலவுயிருருக்களில் இருந்து உருவவியல் தோற்ற இயல்புகள் பெற்ப்பட்டன. இத்தரவுகள் PGRC தரவு தளத்தில் (database) இல் இணைக்கப்பட்டன. ஆறு RAPD முதன்மைகளைப் பாவித்து மூலக்கூற்று இயல்புகள் சேகரிக்கப்பட்டன.

டயஸ்கொரியா, வற்றாளை, உருளைக்கிழங்கு, வாழை ஆகியவற்றின் மூலவுயிருருக்களின் சோதனைக் குழாய் முறை மூலமும், தாவர வீடுகளிலும் சேமித்தல்

மூலவுயிருருக்கள் சோதனைக் குழாய் முறை மற்றும் தாவர வீடுகளில் பாதுகாத்தல், இதன் முக்கிய நோக்கமாகும்.

டயஸ்கொரியா இனத்தின் எழுபது சேகரிப்புகள் சோதனைக் குழாய் மற்றும் தாவர வீட்டிலும் சேமிக்கப்பட்டது. வற்றாளையில் 109 சேகரிப்புக்கள் சோதனைக் குழாய் முறையிலும், 114 சேகரிப்புக்கள் தாவர வீட்டிலும் பாதுகாக்கப்பட்டன. உருளைக்கிழங்கின் 15 சேகரிப்புக்கள் சோதனைக்குழாய் முறையில் பாதுகாக்கப்பட்டது.

தாவர பிறப்புரிமை மூலவள (PGR) தகவல் முகாமைத்துவ தொகுதி

தாவர பிறப்புரிமை மூலவளங்கள் தரவுத்தளம்

தரவுகள் தரவுதளத்தில் சேர்க்கப்படுதல் தொடர்ப்படுகின்றன. தற்சமயம் தரவுத்தளம் மொத்தம் 12,979 மூலவுயிருருக்களில் கடவுச்சீட்டு தரவுகளை கொண்டுள்ளன. 25 பயிர்களின் இயல்புகளுக்கான தரவுகளையும் தரவுத் தளம் கொண்டுள்ளது. நெல், சோளம், குரக்கன், தினை, கௌபி, பயறு, உழுந்து, சோயா, அவரை, துவரை, நிலக்கடலை, போஞ்சி, சிறகவரை, பயற்றை, கத்தரி, தக்காளி, கறிமிளகாய், வெண்டி, பூசணி, புடோல், பாகல், கீரை, கடுகு, எள், என்பன இதில் அடங்கும்.

உலகளாவிய செயல்திட்டத்தில் தேசிய தரவு பகிரும் பொறிமுறை தரவுத்தளம் (NISM – GPA)

NISM – GPA தரவுத்தளம் தற்போது PGRC யில் பராமரிக்கப்படுவதுடன் இது நாளுக்கு நாள் புதிப்பிக்கப்படுவதால் பாவனையாளருக்கு உதவியாக உள்ளது.

விழிப்புணர்வு நிகழ்ச்சி

மொத்தம் ஐம்பது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இக்காலப்பகுதியில் பாடசாலை மாணவர்கட்கு நடாத்தப்பட்டது. இது மற்ற பகுதிகளின் உதவியுடன் சேகரிப்புப் பகுதியினால் நடாத்தப்பட்டன. பத்து பட்டப்படிப்பிற்கு பின்னான மற்றும் பட்டப்படிப்பு மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பின் பகுதியை PGRC யில் முடித்துள்ளனர். பத்து டிப்ளோமா மாணவர்கள் 4 மாத விஷேட செயல்முறைப் பயிற்சியை PGRC யில் பெற்றுள்ளனர். மேலும் 6 ஆசிரியர் குழு, 8 விவசாயக் குழு, 21 வேறு நிறுவனங்களின் குழுக்கள் என்பவற்றிற்கு சேகரிக்கும் பகுதியினால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2012 இற்கான திட்டம்

- தொடர்ந்து தாவர மூலவுயிருருக்களை தேடியறிதல், சேகரித்தல் செயற்பாடு மேற்கொள்ளல்
- சேகரித்தல் பகுதியில் இருந்து பெறப்பட்ட விதைச் சேமிப்புடன் தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு சேமிக்கப் படல்
- பல்லாண்டு தாவர மூலவுயிருருக்களின் பராமரிப்பு
- தாவர மூலவுயிருருக்களை சோதனைக் குழாய் முறை மூலம் பராமரித்தல்
- தாவர மூலவுயிருருக்களை தொடர்ந்து பரிமாறல்
- பாதுகாக்கப்பட்ட மூலவுயிருருக்களின் வாழ்தகவு பரிசோதனை தொடர்தல்
- தாவர மூலவுயிருருக்களின் பெருக்கப்படல், இயல்புகள் அறிதல், மற்றும் மீள் உயிர்ப்பித்தல்
- தாவர மூலவுயிருருத் தரவுத்தளம் தொடர்ந்து பராமரிக்கப்படல்
- தாவர மூலவுயிருருக்களின் மூலக்கூற்று இயல்புகள் அறிதல், வெவ்வேறு பயிரில் விரும்பதக்க பரம்பரை அலகு அடையாளம் காணல்
- தாவர மூலவுயிருருக்களின் DNA தடைகள் அறிதல் (DNA Finger print)
- மூலக்கூற்று தொழில்நுட்பத்தை பாவித்து வர்க்கங்களின் தூய்மை அறிதல் பரிசோதனை
- தாவரப் பிறப்புரிமை மூலவளம் பாதுகாத்தல், பராமரித்தலுடன் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்

அலுவலர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
விவசாயப் பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	10
நிர்வாக உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	02
விவசாயப் போதனாசிரியர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	06
பொது முகாமைத்துவ உதவியாளர்	08
களஞ்சியப் பொறுப்பாளர்	01
பணியாளர்	01
சாரதி	04
பார ஊர்தி உதவியாளர்	01
உழவு இயந்திர சாரதி	01
மின்னியலாளர்	03
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
காவலாளி	04
சினிமா இயந்திர இயக்குனர்	01
தொழிலாளர் (தரம் - I)	11
தொழிலாளர் (தரம் - II)	05
தொழிலாளர் (ஒப்பந்த)	22
மொத்தம்	**90**

2.2 விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை

விதை மற்றும் நடுகைப் பொருளின் உயர் தரமானது விளைவை அதிகரிப்பதற்கும் விளைபொருளின் தரத்தினை உயர்த்துவதற்கும் உற்பத்திச் செலவினைக் குறைப்பதற்கும் மிக முக்கியமானவையாகும். விதை மற்றும் நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையமானது வித்துக்களையும் நடுகைப் பொருட்களையும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் தயாரித்து நாடுமுழுவதும் வினியோகிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் பிரதான பங்கினை வகிக்கின்றது. அந்த வகையில் உள்ளூரில் சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள் மறுவயற் பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு போன்றவற்றின் அடிப்படை விதைகளை யும் தரமான மரக்கறிகள் பழங்களுக்கான நடுகைப் பொருட்களையும் தயாரித்து வினியோகிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் இந்நிலையம் பிரதானமான சவால்களை எதிர்நோக்குகின்றது. SPMDCன் கீழ் 19 விதை உற்பத்திப் பண்ணைகள் இயங்குகின்றன. இப்பண்ணைகளில் மேற்கூறப்பட்ட பயிர்களுக்கான அடிப்படை விதைகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நடுகைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இருப்பினும், நெல் மறுவயற் பயிர்களுக்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளும் மரக்கறிப் பயிர்களுக்கான நியம விதைகளும் ஒப்பந்த அடிப்படையில் செய்கை பண்ணுவோரால் நாடளாவிய ரீதியில் பரந்துள்ள 13 பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர்களின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றது. தற்போது SPMDC ஆனது தனது தொழிற்பாடுகளை மேற்கூறப்பட்டவாறு பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) மூலம் மேற்கொள்கின்றது. இவ் உதவி விவசாயப் பணிப்பாளர்கள், பணிப்பாளர் SPMFD பிரதிப் பணிப்பாளர் (நெல்) பிரதிப் பணிப்பாளர் (மரக்கறி மற்றும் மறுவயற்பயிர்கள்) பிரதிப் பணிப்பாளர்கள் (உருளைக்கிழங்கு) பிரதிப் பணிப்பாளர் (பூங்கனியியல்) மற்றும் தலைமைப்பீட உதவி விவசாயப் பணிப்பாளர்களின் வழிநடத்தலிலும் கண்காணிப்பின் கீழும் கடமைகளை மேற்கொள்கின்றனர். SPMDCன் பணிக்கூற்று யாதெனில் இலங்கையிலுள்ள விவசாய சமூகத்திற்கு தரம் உறுதிப்படுத்தப்பட்ட விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை போட்டி விலையில் வழங்கல் அரச பண்ணைகளில் அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது நியம விதைகளை, அத்தாட்சிப்படுத்தப்பட்ட நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல், அடிப்படை விதைகளை விதையுற்பத்தியாளர்களுக்கு வினியோகித்தல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளை ஒப்பந்த அடிப்படையில் வளர்போரின் மூலம் பெருக்குதல், அரச பண்ணைகளை முகாமைத்துவம் செய்தல், விதையுற்பத்தியின் அபிவிருத்தி மற்றும் இணைப்பு, விதையின் தாங்கல் தொகுதியை (Buffer stock) பேணுதல், விதை மற்றும் நடுகைப் பொருள் வழங்கலை இணைத்தல் போன்றவை ஆகும்.

நோக்கங்கள்

- அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மற்றும் நடுகைப்பொருட்களின் உற்பத்தியை, பதப்படுத்தலை, களஞ்சியப்படுதலை, வினியோகித்தினை உறுதிப்படுத்தல்.
- அரச மற்றும் தனியார் துறையில் விதை மற்றும் நடுகைப்பொருள் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஆதரவுகளை வழங்குதல்.

- உற்பத்தியார்களுக்கு தேவையான பயிற்சிக் குரிய வசதிகளை, தகவல்களை எல்லா வழிகளிலும் வழங்குதல்.
- நாட்டின் விதை மற்றும் நடுகைப்பொருள் பாதுகாப்பினை பெற்றுக் கொள்ளல்.

பின்வரும் செயற்பாடுகள் 2012ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதனுள் 2011 / 2012 ம் ஆண்டு காலபோகம் மற்றம் 2012 சிறுபோகம் போன்றன உள்ளடக்கப்பட்டு இந்நிலையத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாதீடு

அட்டவணை 2.2.1: வருடாந்தப் பாதீடு –2012 (மில்லியன் ரூபாய்கள்)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
சாதாரண மூலதனம்	40.9	33.7	82
சாதாரண மீண்டுவரும் செலவு	51.4	44.3	86
விதையுற்பத்தியும் கொள்வனவும்	432.0	421.5	98
சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட விதையுற்பத்தி	6.0	4.7	78
சோள கலப்பின விதையுற்பத்தி	0.78	0.65	83
அரச விதையுற்பத்திப் பண்ணைகளான பரந்தன் மற்றும் முருங்கன் பண்ணைகளை மீள இயக்குதல் (JAICA)	77.21	62.5	81
விதைப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்	236.0	215.7	91
மொத்தம்	**844.29**	**783.1**	**93**

முன்னேற்றம்

விதைநெல்லின் உற்பத்தியும், வழங்கலும்

அரச பண்ணைகளின் 2012ம் ஆண்டில் அடிப்படை விதை நெல் உற்பத்தி மற்றம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி

10 அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் 25 சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்களின் அத்திவார விதைகள் (FSP) பதிவுசெய்யப்பட்ட விதைகள் (RSP) உற்பத்தி செய்யப்பட்டன. அத்திவார விதைகளின் உற்பத்திக்கு வேண்டிய உற்பத்தியாளர் விதைகள் பத்தலகொடவி லுள்ள நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRDI), பொம்புவெலவிலுள்ள விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RRS), லபுதுவவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றால் வழங்கப்பட்டது.

2012ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தியானது 126273 புசல் (2588.6 மெற்றிக் தொன்கள்) களாக் காணப்பட்டதுடன் 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 12% மான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. SPMDC ன் விதையுற்பத்திப் பண்ணைகளும் வயல் நிலங்களைப் பிரயோகித்து அத்தாட்சிப்படுத்தப் பட்ட விதைநெல்லையுற்பத்தி செய்கின்றன. ஆனால் இது அடிப்படை விதை நெல்லுற்ப்பத்திக்கு பயன்படுத்தபடவில்லை. அடிப்படை விதை நெல்லிலிருந்து தரம் குறைக்கப்பட்ட விதைகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உள்ளடங்கலாக 2012ம் ஆண்டில் 9488 புசல் (194.5 மெற்றிக் தொன்கள்) பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 2.2.2: 2012ம் ஆண்டு காலப்பகுதியில் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதை நெல் உற்பத்தி பற்றிய விபரம்

பண்ணை	2011/2012 பெரும்போகம்			2012 சிறுபோகம்			மொத்தம்		
	FSP	RSP	CSP	FSP	RSP	CSP	FSP	RSP	CSP
அளுத்தறம	14.23	114.23	13.37	8.84	100.16	33.83	23.07	214.39	47.2
மல்வத்த	10.48	190.61	7.18	1.89	123.88	18.86	12.37	314.49	26.04
பொலனறுவை	15.97	431.67	0.39	19.21	255.59	0	35.18	687.26	0.39
பட்டாத்தை	0	22.84	5.78	4.72	49.0	6.97	4.72	71.84	12.75
அம்பலான்தோட்டை	2.07	93.40	14.27	0	0	0	2.07	93.40	14.27
மகாஇலுப்பள்ளம	18.90	420.76	25.83	10.68	92.56	0	29.58	513.32	25.83
குண்டசாலை	9.14	210.0	0	10.25	218.53	0.1	19.39	428.53	0.1
முருங்கன்	1.52	107.99	7.75	0	0	0	1.52	107.99	7.75
பரந்தன்	5.84	98.40	8.02	3.81	41.45	0	9.65	139.85	8.02
கரடியனாறு	0	0	0	0	17.53	52.15	0	17.53	52.15
மொத்தம் (தொன்)	**78.15**	**1689.9**	**82.59**	**59.4**	**898.7**	**111.91**	**137.55**	**2588.6**	**194.5**
மொத்தம் (புசல்)	**3812**	**82434**	**4029**	**2898**	**43839**	**5459**	**6710**	**126273**	**9488**

2012ம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையிலான விதையுற்பத்தி நிகழ்ச்சியின் ஊடாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தி

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தியானது ஒப்பந்த அடிப்படை உற்பத்தியாளர்களினூடாக மேற்கொள்ளப் பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டு SPMDC 90,000 புசல்களை கொள்வனவு செய்யும் இலக்கைக் கொண்டு ள்ளது. (2011 / 2012 பெரும்போகத்தில் 60,000 புசல்களும் 2012 சிறுபோகத்தில் 30,000 புசல்களும் ஆகும்) 2011/2012 பெரும்போகத்தில் நிலவிய சாதகமான காலநிலை காரணமாகவும் ஒப்பீட்டளவில் DOAன் உயர்விலை காரணமாகவும் 60366 புசல் (1237.5 மெற்றிக் தொன்) அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டது. 2012ம் ஆண்டு சிறுபோகத்தில் நாடளாவிய ரீதியில் நிலவிய வறட்சி காரணமாக 3917 புசல் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லே கொள்வனவு செய்யப்பட்டது. அட்டவணை 2.2.3 (i) ல் CSP ன் வருடாந்த மொத்தக் கொள்வனவு தரப்பட்டுள்ளது. 9 பிராந்திய உதவி விவசாயப் பணிப்பாளர்களின் கீழ் 64283 புசல்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது உற்பத்தி இலக்கின் 71% மாகக் காணப்படுகின்றது.

அட்டவணை 2.2.3 (i): 2012ம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையிலான அத்தாட்சிப்படுத்திய நெல் கொள்வனவின் அளவு

	கொள்வனவு செய்யப்பட்ட அளவு			
பிராந்தியம் (ADA)	**2011/12 பெரும்போகம் (மெ.தொன்)**	**2012 சிறுபோகம் (மெ.தொன்)**	**மொத்தம் (மெ.தொன்)**	**மொத்தம் (மெ.தொன்)**
அம்பாறை	168.1	0	168.1	8200
அளுத்தறம	129.9	27.4	157.3	7673
பட்டஅத்தை	174.2	0	174.2	8498
பொலநறுவை	40.8	0	40.8	1990
கந்தளாய்	92.1	0	92.1	4493
வவுனியா	0	4.8	4.8	234
கிளிநொச்சி	33.3	27.2	60.5	2951
மகாஇலுப்பள்ளம	156.2	3.4	159.6	7785
நிக்கரவெட்டிய	97.7	10.4	108.1	5273
பெல்வெஹர	345.2	7.1	352.3	17185
மொத்தம் (தொன்)	**1237.5**	**80.3**	**1317.8**	
மொத்தம் (புசல்)	**60366**	**3917**		**64283**

2012ம் ஆண்டிற்கான அவசர விதை நெல் (ESP) வினியோக நிகழ்ச்சித் திட்டம்

2012ம் ஆண்டில் நிலவிய வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 2012/13 பெரும்போகத்தில் 289.666 புசல்கள் விதை நெல் விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வினியோகிக்கப்பட்டது. SPMDC ஆனது 161760 புசல் விதை நெல்லை வழங்குவதற்கு பொறுப்பாகவிருந்தது. அதாவது 84416 புசல்கள் அவசர விதை நெல் 42847 புசல்கள் பதிவு செய்யப்பட்ட விதை நெல் 34,497 புசல்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் ஆகும். தேவையின் எஞ்சிய பகுதியை தனியார் நிறுவனம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அட்டவணை 2.2.3 (11): 2012ம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட அவசர விதை நெல்லின் அளவு

	கொள்வனவு செய்யப்பட்ட அளவு		
பிராந்தியம் (ADA)	**2012 சிறுபோகம் (மெ.தொன்)**	**மொத்தம் (மெ.தொன்)**	**மொத்தம் (புசல்)**
அம்பாறை	291.5	291.5	14218
அளுத்தறம	189.1	189.1	9224
பொலநறுவை	319.6	319.6	15590
கந்தளாய்	558.9	558.9	27104
வவுனியா	104.8	104.8	5114
கிளிநொச்சி	42.9	42.9	2094
மகாஇலுப்பள்ளம	84.9	84.9	4142
நிக்கவரெட்டிய	80.3	80.3	3917
பெல்வெஹர	61.8	61.8	3031
மொத்தம்	**1733.8(தொன்)**	**1733.8(தொன்)**	**84416(புசல்)**

வர்த்தக ரீதியான வர்க்கங்களின் விதை நெல்லின் தரத்தினை அதிகரிப்பதற்கு SPMDC ஆனது தரமான விதை நெல்லுற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை வெவ்வேறு நிறுவனங்களுடன் இணைந்தும் குறிப்பாக தனியார் துறையினை உள்ளடக்கியும் மேற்கொண்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விதை நெல்லானது தொடர்புடைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. விளைச்சலின் மூலம் பெறப்பட்ட விதைகளும் தாவரங்களும் விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் பதிவு செய்யப்பட்ட விதை நெல்லானது துணையான விதை நெல்லுற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக விவசாயிகளுக்கு வழங்கப் பட்டது. இதன் மூலம் விதை நெல்லின் தரம் உயர்த்தப்பட்டது. அட்டவணை 2.2.4ல் வெவ்வேறு நிறுவனங்களால் அதாவது தனியார் மற்றும் அரச நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லின் அளவுகள் தரப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட உண்மையான விதை நெல்லின் அளவு அதிகமாகக் காணப்பட்டது. ஏனெனில் சில நிறுவனங்கள் அலுவலக ரீதியாக விதை நெல்

அத்தாட்சிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றவில்லை. இவை தமக்குரிய தரக்கட்டுப்பாட்டுத் தொகுதியினை கடைப்பிடித் தமையாகும். 2012ம் ஆண்டில் அலுவலக ரீதியான அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லின் அளவு 14,523 மெ. தொன் (708,709 புசல்) அட்டவணை 2.2.4 ல் தரப்பட்டுள்ள அளவுகள் நாட்டின் விதை நெல்லின் தேவையின் மொத்த அளவின் 12% ஆகும். இருப்பினும் அவசர விதை நெல்லின் வழங்கலையும் இணைத்து நோக்கும் போது மொத்தமாக வர்த்தக ரீதியான விதை நெல் உற்பத்திக்கு வழங்கப்பட்ட மொத்த விதை நெல் 911,564 புசல்களாகக் காணப்பட்டது. இது நாட்டின் மொத்த தேவையின் 15.43% ஆகும். தேசிய தேவையின் 15% மான அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்லினை வழங்கலானது திருப்தி கரமானதாகக் கருதப்படுகின்றது.

அட்டவணை 2.2.4: 2012ம் ஆண்டிற்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல்உற்பத்தியின் இணைந்த நிகழ்ச்சித் திட்டம்

நிறுவனம்	2011/12காலபோகம்		2012 சிறுபோகம்		2012ம் ஆண்டு		உற்பத்தி	
	DOA னால் வினியோகிக்கப்பட்ட RSP ன் அளவு (மெ.தொ)	அத்தாட்சிப்படுத்திய விதையுற்பத்தி விஸ்தீரணம் (AC)	DOA னால் வினியோகிக்கப்பட்ட RSP ன் அளவு (மெ.தொ)	அத்தாட்சிப்படுத்திய விதையுற்பத்தி விஸ்தீரணம் (AC)	DOA னால் வினியோகிக்கப்பட்ட RSP ன் அளவு (மெ.தொ)	அத்தாட்சிப்படுத்திய விதையுற்பத்தி விஸ்தீரணம் (AC)	உற்பத்தி தொன்	புசல்
DOA	78.5	1916	13.65	333	92.2	2249	1317.8	64283
மாகாணம்	128.5	1512	34.4	598	162.9	2110	2970	144895
மாகாண இடைப் பிரதேசம்	36.50	430	27.1	471	63.6	901	1090	53200
கமநலசேவைகள் திணைக்களம்	25.6	301	1.0	17	26.6	318	508	24798
மகாவலி	14.0	165	2.5	43	16.5	208	305	14919
கூட்டுத்தாபனங்கள்	7.6	89	6.9	120	14.5	209	244	11951
விவசாய அமைப்பு	106.5	1253	74.4	1293	180.9	2546	3115	151980
தனிப்பட்ட விவசாயிகள்	150.6	1765	61.6	1070	212.2	2835	3772	184042
தனியார் நிறுவனங்கள்	26.6	313	37.1	645	63.7	958	1041	50828
ஏனையவை	7.62	90	0.92	16	8.54	106	160	7813
மொத்தம்	**582.0**	**7834**	**259.5**	**4606**	**841.5**	**12440**	**14523**	**708709**

விதை நெல் வினியோகம்

2012ம் ஆண்டில் DOA னால் விதை நெல்லுற்பத்திக்காக வினியோகிக்கப்பட்ட விதை நெல்லின் மொத்த அளவும் வர்த்தக ரீதியான செய்கையும் அட்டவணை 2.2.5ல் தரப்பட் டுள்ளது. கடந்த போகத்தில் உற்பத்தியாக்கப் பட்ட உற்பத்தியாளர் விதையிலிருந்து அத்திவார விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவை அரச பண்ணைகளில் பதிவு செய்யப்பட்ட விதைகளின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டன. இப்பதிவு செய்யப்பட்ட விதைகள் ஒப்பந்த அடிப்படையில் வளர்ப்போர் தனிப்பட்ட ரீதியான விதையுற்பத்தியாளர் மற்றும் தனியார் துறைசார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. 2012ம் ஆண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட விதை நெல்லின் மொத்த வழங்கல் 1588.94 மெ. தொன் (77.509 புசல்கள்) வழங்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் 1001.9 மெ. தொன். (48.874 புசல்கள்) அட்டவணை 2.2.5: 2012ம் ஆண்டு DOA னால் வினியோகிக்கப்பட்ட விதை நெல்லின் அளவைக் (மெ. தொன்) காட்டுகின்றது.

அட்டவணை 2.2.5: விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட விதைநெல் அளவுகள் (மெ.தொன்)

பருவ காலம்	நிகழ்ச்சித் திட்டம்	அத்தி வார விதை	பதிவு செய்யப் பட்டது	மொத்தம்	அத்தாட் சிப்படுத்த பட்டது	மொத்தம்	
						(தொன்)	(புசல்)
2012 சிறுபோகம்	பண்ணை ஒப்பந்த அடிப்படையில்	33.72	3.94	37.66	0	37.66	1837
	வளர்த்தல்	2.34	13.65	15.99	3.38	19.37	945
	தனியார்	8.86	267.09	275.95	40.12	316.07	15418
	விரிவாக்கம்	0.18	486.42	486.60	262.54	749.14	36543
	மொத்தம்(மெ.தொ)	**45.10**	**771.10**	**816.20**	**306.04**	**1122.24**	
	மொத்தம் (புசல்)	**2200**	**37615**	**39815**	**14929**		**54744**
2012/13 காலபோகம்	பண்ணை ஒப்பந்த அடிப்படையில்	39.8	6.17	45.97	106.72	152.69	7448
	வளர்த்தல்	0	28.97	28.97	0	28.97	1413
	தனியார்	5.8	168.3	174.10	12.22	186.32	9089
	விரிவாக்கம்	1.31	1492.76	1494.017	1390.84	2884.91	140727
	மொத்தம்(மெ.தொ)	**46.91**	**1696.2**	**1743.11**	**1509.78**	**3252.89**	
	மொத்தம் (புசல்)	**2288**	**82741**	**85030**	**73648**		**158678**
2012 ல் வழங்கிய அளவு	பண்ணை ஒப்பந்த அடிப்படையில்	73.52	10.11	83.63	0	83.63	4080
	வளர்த்தல்	2.34	42.62	44.96	3.38	48.34	2358
	தனியார்	14.66	435.39	450.05	52.34	502.39	24507
	விரிவாக்கம்	1.49	1979.2	1980.7	1653.4	3634.0	177273
	மொத்தம்(மெ.தொ)	**92.01**	**2467.3**	**2559.3**	**1709.12**	**4268.45**	
	மொத்தம் (புசல்)	**4488**	**120357**	**124845**	**83372**		**208217**

2012ம் ஆண்டில் உற்பத்தி செய்து வினியோகிக்கப்பட்ட மறுவயற்பயிர் வித்துக்கள்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் பன்னிரண்டு வகையான மறுவயற் பயிர்களுக்குரிய முப்பத்து மூன்று வர்க்கங்களிற்குரிய நான்கு வகுப்புக்களையும் உள்ளடக்கிய வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அவையாவன அத்திவார விதை, பதிவு செய்யப்பட்ட விதை, அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மற்றும் வர்த்தக ரீதியான விதை.

2012ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட அடிப்படை விதைகள் (அத்திவார மற்றும் பதிவு செய்யப்பட்ட விதைகள்)

அட்டவணை 2.2.6ல் 2012ம் ஆண்டில் மொத்தமாக அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அத்திவார விதைகளும் அரச பண்ணைகளாலும் ஒப்பந்த அடிப்படையிலான விதையுற்பத்தியாளர்க ளாலும் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பதிவு செய்யப்பட்ட விதைகளும் தரப்பட்டடுள்ளது.

இவ்வாண்டில் மொத்த அடிப்படை விதையுற்பத்தி 70,750kg ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 17.25% குறைவாகக் காணப்பட்டது. போதியளவு தாங்கல் தொகுதி சோயா அவரை விதைக்குக் காணப்பட்டதனால் (25000kg) ஒப்பந்த அடிப்படை யிலான விதையுற்பத்தியினால் பெறப்பட்ட குறைந்த உற்பத்தி இலக்கு சரி செய்யப்பட்டது. முதன் முறையாக MIல் உள்ள அரச விதையுற்பத்திப் பண்ணையில் பெரிய வெங்காய விதையுற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதையுற்பத்தி

ஒப்பந்த அடிப்படையிலான அத்தாட்சிப்படுத்தப் பட்ட மறுவயற்பயிர் விதையுற்பத்தி பண்ணை களில் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் கலப்பினச் சோள வர்க்கமான சம்பத்திற்கான விதையுற்பத்தி பிரதானமாக அரச பண்ணைகளில் அதாவது மகாஇலுப்பள்ளம, அளுத்தறம, பத்தாத்தை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 38% மான உற்பத்தி அதிகரிப்பு அத்தாட்சிப்படுத்திய விதையுற்பத்தியில் அவதானிக்கப்பட்டது. இது 443.12 மெ.தொன் ஆகும். காரணம் இவ்வருடம் உழுந்து, மிளகாய், நிலக்கடலை, கௌபி, எள் மற்றும் சோளம் (OVP) என்பவற்றிற்கான ஒப்பந்த அடிப்படையிலான விதையுற்பத்தியின் விஸ்தரிப் பாகும். இருப்பினும் சோயாஅவரை ஒப்பந்த அடிப்படையிலான விதையுற்பத்தியிலிருந்து பெறப்படவில்லை. காரணம் போதியளவு தாங்கல் சரக்கிருப்பு இருந்தமையாகும். அரச விதையுற்பத்திப் பண்ணைகளிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும் பசுந்தாட் பசளைக்குரிய தாவரமாகப் பயன்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் சணலின் வர்த்தக ரீதியான வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

2012ம் ஆண்டு வினியோகிக்கப்பட்ட மறுயவயற்பயிர் வித்துக்கள்

2012ம் ஆண்டில் வினியோகிக்கப்பட்ட அடிப்படை வித்துக்களின் (அத்திவார பதிவு செய்யப்பட்ட) அளவுகள் அட்டவணை 2.2.8 ல் தரப்பட்டுள்ளது. மொத்தமாக 2012ம் ஆண்டில் வினியோகிக்கப் பட்ட மறுவயற்பயிர் வித்துக்கள் ஏறக்குறைய 551.64 மெ.தொன் இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்காகும். (268.73மெ.தொன்) இதனால் 2012ம் ஆண்டின் ஆரம்பகாலத்தில் OFC (மறுவயற் பயிர்கள்) ற்கான பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு வேண்டிய வித்துக்களை வழங்குவதற்கு வசதியாக இருந்தது.

அட்டவணை 2.2.6: 2012ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட OFC அடிப்படை வித்துக்கள் (Kg)

பயிர்	அத்திவார விதை விதையுற்பத்திப் பண்ணை			பதிவு செய்யப்பட்ட விதை விதையுற்பத்திப் பண்ணை			ஒப்பந்த அடிப்படையிலான நிகழ்ச்சி			மொத்த அடிப்படை விதையுற்பத்தி
	2011/ 12 கால போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	2011/ 12 கால போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	2011/ 12 கால போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	
உழுந்து	304	692	996	693	843	1536	3884	3083	6967	9499
மிளகாய்	243	720	963	0	0	0	0	0	0	963
பெரிய வெங்காயம்	68	0	68	0	0	0	0	0	0	68
கௌபி	2054	277	2331	3614	885	4499	2601	1564	4165	10995
எள்	0	107	107	387	218	605	170	453	623	1335
பயறு	973	1130	2103	1255	621	1876	2083	3062	5145	9124
நிலக்கடலை	400	522	922	1672	87	1759	1653	2042	3695	6376
குரக்கன்	968	213	1181	2151	375	2526	1806	0	1806	5513
சோளம்(OPV)* வித்துக்கள்	866	2048	2914	3376	1620	4996	9315	8370	17685	25595
சோயாஅவரை	146	482	628	654	0	654	0	0	0	1282
மொத்தம்	**6022**	**6191**	**12213**	**13802**	**4649**	**18451**	**21512**	**18574**	**40086**	**70750**

(OPV)* திறந்த மகரந்தச் சேர்க்கை அடையும் வர்க்கங்கள்

அட்டவணை 2.2.7: 2012ம் ஆண்டில் அரச பண்ணைகளினும் ஒப்பந்த அடிப்படையினும் உற்பத்தி செய்யப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட OFC வித்துக்கள்

பயிர்கள்	ஒப்பந்த அடிப்படையிலான திட்டம்							விதையுற்பத்திப் பண்ணை 2011/ 12							
	2011/ 12 பெரும் அத்தாட்சிப்படுத்தப்பட்டது	போகம் வர்த்தகம்	மொத்தம்	2012 சிறுபோகம் அத்தாட்சிப்படுத்தப்பட்டது	வர்த்தகம்	மொத்தம்	உப மொத்தம்	பெரும் போகம் அத்தாட்சிப்படுத்தப்பட்டது	வர்த்தகம்	மொத்தம்	2012 சிறுபோகம் அத்தாட்சிப்படுத்தப்பட்டது	வர்த்தகம்	மொத்தம்	மொத்தம்	மொத்தம்
உழுந்து	52113	168	52281	12827	5471	18298	70579	544	0	544	0	0	0	544	71123
மிளகாய் வித்து	0	0	0	942	8701	9643	9643	59	0	59	167	0	167	226	9869
கௌபி	10921	333	11254	6378	4969	11347	22601	272	0	272	116	27	143	415	23016
எள்	512	48	560	3583	923	4506	5066	156	55	211	245	0	245	456	5522
பயறு	27933	1679	29612	107903	2525	110428	140040	0	0	0	0	0	0	0	140040
நிலக்கடலை	12511	14169	26680	31258	61294	92552	119232	0	0	0	1105	0	1105	1105	120337
குரக்கன்	297	0	297	0	0	0	297	323	0	323	0	0	0	323	620
சோளம் (OPV)* வித்துக்கள்	31037	8000	39037	15556	0	15556	54593	0	0	0	0	0	0	0	54593
சோளம் (சம்பத்) வித்து	0	0	0	0	0	0	0	3189	0	3189	502	0	502	3691	3691
சோயாஅவரை	0	0	0	7691	6214	13905	13905	0	0	0	0	0	0	0	13905
சணல்	0	0	0	0	0	0	0	0	230	230	0	125	125	355	355
Sebania rostrata	0	0	0	0	0	0	0	0	50	50	0	0	0	50	50
மொத்தம்	**135324**	**24397**	**159721**	**186138**	**90097**	**276235**	**435956**	**4543**	**335**	**4878**	**2135**	**152**	**2287**	**7165**	**443121**

OPV - திறந்த மகரந்தச் சேர்க்கையடையும் வர்க்கங்கள்

அட்டவணை 2.2.8: 2012ம் ஆண்டில் வினியோகிக்கப்பட்ட OFC வித்துக்கள்

பயிர்	2012 சிறுபோகம் (kg)						2012 13 பெரும் போகம் (kg)						2012ம் ஆண்டு(kg)					
	உற் பத்தி யாளர் விதை	அத்தி வார விதை / அடிப் படை	பதிவு செய்ய பட்ட	அத்தாட் படுத்திய/ தரமான	வர்த் தகம்	மொத் தம்	உற் பத்தி யாள ர்விதை	அத்தி வார விதை/ அடிப் படை	பதிவு செய்ய பட்ட	அத்தாட் படுத்திய/ தரமான	வர்த் தகம்	மொத் தம்	உற் பத்தி யாளர் விதை	அத்தி வார விதை/ அடிப் படை	பதிவு செய்ய பட்ட	அத்தாட் படுத்திய தரமான	வர்த் தகம்	மொத் தம்
உழுந்து	66.8	401	3291	13527	2899	20185	73	412	6300	23222	2217	32224	140	813	9591	36749	5116	52409
மிளகாய்	11.95	79	0	3523	0	3614	1	57	0	2996	0	3054	13	136	0	6519	0	6668
கௌபி	72.1	486	1615	11788	878	14875	12	820	2767	13154	643	17396	84	1306	4418	24992	1521	32271
எள்	0	16	1464	2109	484	4013	0	41	379	2239	698	3357	0	57	1843	4348	1182	7430
பயறு	62	441	4209	55773	19568	80053	75	160	6725	96000	31344	134304	137	601	10934	151773	50912	214357
நிலக்கடலை	159.05	857	4339	24405	26337	56097	226	463	2843	13259	46898	63689	385	1320	7182	37664	73235	119786
குரக்கன்	3.75	14	68	366	134	586	9	82	2408	627	862	3988	13	96	2476	993	996	4574
சோளம் (OPV)*	40	807	3671	6117	0	10635	40	479	15353	46612	4763	67247	80	1286	19024	52729	4763	77882
சோளம் கலப்பினம்	0	0	0	318	0	318	0	0	0	623	0	623	0	0	0	941	0	941
சோயாஅவரை	63	75	4822	22292	0	27252	0	158	796	6058	250	7257	63	233	5618	28345	250	34509
சணல்	0	0	0	0	525	525	0	0	0	0	295	295	0	0	0	0	820	820
பெரிய வெங்காயம்	0	2	0	0	0	2	0	0	0	0	0	0	0	2	0	0	0	02
மொத்தம்	**479**	**31785**	**23515**	**140218**	**50825**	**218215**	**436**	**2672**	**37571**	**204785**	**87970**	**333434**	**915**	**5850**	**61086**	**345003**	**138795**	**551649**

2012ல் மரக்கறி வித்துக்களின் உற்பத்தியும் வழங்கலும்

அடிப்படை வித்துக்களின் உற்பத்தி

நாட்டில் 18 மரக்கறிப் பயிர்களுக்கான 55 சிபாரிசு செய்யப்பட்ட விவசாயத் திணைக்களத்தின் வர்க்கங்கள் உள்ளன. ஏழு அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் சில வர்க்கங்களுக்குரிய அடிப்படை வித்துக்களின் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. (அட்டவணை 2.2.9) 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012ற்கான மொத்த உற்பத்தி இருமடங்காகக் காணப்பட்டது. (3136.67kg) இது பிரதானமான போஞ்சி, புசிட்டாவோ, கீரை, சிறகவரை போன்ற பயிர்களின் உற்பத்தியதிகரிப்பின் காரணமான ஏற்பட்டது.

அட்டவணை 2.2.9: 2012ல் அரச பண்ணைகளில் அடிப்படை மரக்கறி வித்துக்களின் உற்பத்தி

பயிர்	உற்பத்தி செய்யப்பட்ட அளவு (முப)		
	2011 / 12 காலபோகம்	2012 சிறுபோகம்	மொத்தம்
போஞ்சி	3227.0	969.0	4196.0
பாகற்காய்	-	5.9	5.9
கத்தரிக்காய்	19.2	18.7	37.9
புஷிட்டாவோ	-	267.7	267.7
பயற்றை	197.1	-	197.1
வெண்டி	356.7	-	356.7
புடோல்	51.1	16.2	67.3
சிறகவரை	172.0	126.0	298.0
தக்காளி	10.0	25.0	35.0
முளைக்கீரை	198.9	289.4	488.3
பீர்க்கு	183.8	39.1	222.9
கெக்கரி	-	0.8	0.8
வத்தகை	-	28.5	28.5
பசளி	-	11.6	11.6
மொத்தம்	**4415.80**	**1797.90**	**6213.70**

தரமான மரக்கறி விதையுற்பத்தி (Standard Vegetable Seed Production)

தரமான விதையுற்பத்தியில் தனியார் துறையினரும் அரச துறையினரும் ஈடுபடுக்கின்றனர். அட்டவணை 2.2.10ல் SPMDC னால் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் மற்றும் ஒப்பந்த அடிப்படை உற்பத்தியாளர்களினாலும் உற்பத்தி செய்யப்பட்ட அளவுகள் காட்டப்பட்டுள்ளன. 2012ல் உற்பத்தி செய்யப்பட்ட தரமான விதையினளவு இதற்கு முன்னைய ஆண்டில் உற்பத்தியான தொலையிலும் இரட்டிப்பாகக் காணப்பட்டது. (ஏறத்தாழ 2.56 மடங்குகள்) அதாவது 16785.5Kg. இதற்கு அடிப்படை விதையுற்பத்தியின் அதிகரிப்பிற்கான காரணத்தையே கூறலாம். ஒப்பந்த அடிப்படையிலான விதையுற்பத்தியில் உச்ச உற்பத்தி காண்பிக்கப்பட்டதற்கான காரணம் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகளவு போஞ்சி வித்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட மையாகும்.

அட்டவணை 2.2.10: DOA னால் 2012ல் உற்பத்தி செய்யப்பட்ட தரமான மரக்கறி விதை (Kg)

பயிர்	பண்ணை நிகழ்ச்சிகள்			ஒப்பந்த அடிப்படையிலான நிகழ்ச்சிகள்			மொத்தம்
	2011/12 கால போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	2011/12 கால போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	
போஞ்சி	24.5	-	24.5	21521.5	-	21521.5	21546.0
பாகல்	46.3	100.9	147.2	99.0	3364.0	3463.0	3610.2
கத்தரி	37.4	234.7	272.1	69.0	-	69.0	341.1
புஷிடாவோ	3.6	94.8	97.8	1047.5	783.0	1830.5	1928.3
கறிமிளகாய்	177.9	488.0	665.9	-	30.4	30.4	696.3
கெக்கரி	55.1	-	55.1	32.2	118.1	150.3	205.4
பீர்க்கு	426.8	-	426.8	-	665.0	665.0	1091.8
பயற்றை	874.2	170.0	1044.2	3082.8	861.0	3943.8	4988.0
வெண்டி	544.7	902.9	1447.6	269.1	184.2	453.3	1900.9
பசளி	85.3	150.0	235.3	43.6	-	43.6	278.9
புடோல்	133.6	393.5	527.1	160.5	861.5	1022.0	1549.1
தக்காளி	245.6	120.9	366.5	-	-	-	366.5
சிறகவரை	666.3	-	666.3	234.4	2926.8	3161.2	38275
முள்ளங்கி	186.5	-	186.5	192.8	100.0	292.8	479.3
மொத்தம்	**3507.8**	**2655.1**	**6162.9**	**26752.4**	**9894.0**	**36646.4**	**42809.3**

கலப்பின மரக்கறி விதையுற்பத்தி

விதைப் பண்ணையில் ஒரு கத்திரி வர்க்கத்தினதும் இரண்டு தக்காளி வர்க்கத்தினதும் F_1 கலப்பின வித்துக்கள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டது. (அட்டவணை 2.2.11) கத்தரி குண்டசாலை, அம்பேபுச, அளுத்தறம போன்ற இடங்களிலும் தக்காளி குண்டசாலைப் பண்ணையில் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இரு பயிர்களினதும் F_1 வித்துக்களின் உற்பத்தி உயர்வாகக் காணப்டடது.

அட்டவணை 2.2.11: 2012ல் அரச பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட கலப்பின மரக்கறி விதையுற்பத்தி (kg)

பயிர்	2011/ 12 காலபோகம்	2012 சிறுபோகம்	மொத்தம்
தக்காளி	15.615	6.8	22.415
கத்தரி	49.150	31.5	80.650
மொத்தம்	**64.77**	**38.3**	**103.07**

மரக்கறி விதைகளின் வினியோகம்

மரக்கறி வித்துக்கள் DOAன் விற்பனை நிலையங்களினூடாக வினியோகிகப்படும். அத்துடன் பதிவு செய்யப்பட்ட வழங்குனர் வலையமைப்பினூடும் வினியோகிக்கப்படும். இவ்வகையான வினியோகஸ்தர்களுள் கமநல சேவைகள் நிலையங்கள் (ASCS) கூட்டுறவுச் சமூகங்கள், விவசாயிகள் கழகங்கள், மாகாண DOA, பதிவு செய்யப்பட்ட தனியார் விதை விற்பனையாளர்கள் DOA னால் வினியோகிக்கப்படும் மரக்கறி விதைகள் அட்டவணை 2.2.12 ல் தரப்பட்டுள்ளது. 2012ம் ஆண்டில் தரமான விதையின் வழங்கல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மிகவும் உயர்வானது. 2012ல் அடிப்படை விதைக்குரிய வழங்கலானது சிறிதளவு உயர்வாக இருந்தது. 2012ம் ஆண்டில் தரமான மரக்கறி வித்துக்களின் வழங்கலானது அதிகரிக்கப்பட்டு "திவிநெகும" செயற்திட்டத்தின் தேவை நிறைவு செய்யப்பட்டது. மேலும் 2012ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வழங்கலானது குறிப்பிடத்தக்களவு உயர்வானது.

அட்டவணை 2.2.13: 2012ல் DOA வழங்கிய மரக்கறி விதையின் அளவு (kg)

பயிர்கள்	அடிப்படை வித்து			தரமான வித்து			
	2012 சிறு போகம்	2012 / 13 பெரும் போகம்	மொத்தம்	2012 சிறு போகம்	2012 / 13 பெரும் போகம்	மொத்தம்	மொத்தம்
போஞ்சி	448.40	1261.00	1709.40	1027.80	3936.00	4963.80	6673.20
பாகல்	38.48	70.90	109.38	2780.40	289.10	3069.50	3178.88
கத்தரி	2.43	3.78	6.20	338.40	458.44	796.84	803.04
புஷிடாவோ	208.50	224.50	433.00	2278.25	2204.20	4482.45	4915.45
கறிமிளகாய்	7.65	5.20	12.85	147.30	295.00	442.295	455.15
கெக்கரி	3.35	5.85	9.20	341.91	257.20	599.11	608.31
பீர்க்கு	13.00	58.30	71.30	950.40	431.10	1381.50	1452.80

பயிற்றை	72.50	101.50	174.00	1783.60	1272.60	3056.20	3230.20
வெண்டி	140.90	167.70	308.60	2101.85	96.65	2198.50	2507.10
பூசணி	4.90	0	4.90	1.00	4.50	5.50	10.40
முள்ளங்கி	10.25	55.00	65.25	1571.39	270.95	1842.34	1907.59
புடோல்	44.65	103.80	148.45	1650.40	284.60	1935.00	2083.45
பசளி	1.30	1.30	2.60	18.95	34.80	53.75	56.35
வத்தகை	0.25	0.95	1.20	17.50	13.00	30.50	31.70
தக்காளி	4.48	4.79	9.63	314.60	62.00	376.60	386.23
சிறகவரை	44.80	156.30	201.10	3644.10	1036.90	4681.00	4882.10
முளைக்கீரை	1.35	1.00	2.35	7.00	0	7.00	9.35
மொத்தம்	**1047.54**	**2221.87**	**3269.40**	**18974.85**	**10947.04**	**29921.89**	**33191.29**

திவிநெகும நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்கிய வீட்டுத் தோட்டத்திற்குரிய மரக்கறி வித்துக்களின் பொதிகள்

2012ம் ஆண்டில் திவிநெகும திட்டத்தின கீழ் 1.1 மில்லியன் பொதிகள் 10 பயிர்கள் உள்ளடங்கலாக வழங்கப்பட்டன.

அட்டவணை 2.2.12: 2012ல் திவிநெகும திட்டத்தில் வழங்கிய வீட்டுத் தோட்டத்திற்குரிய மரக்கறி வித்துக்களின் பொதிகள்

மாதம்	**வழக்கங்கப்பட்ட பொதிகளின் எண்ணிக்கை**
ஏப்ரல் - 2012	100,000
ஒக்டோபர் - 2012	1002,408
மொத்தம்	**1,102,408**

2012ல் விதை உருளைக்கிழங்கின் உற்பத்தியும் வழங்களும்

2011/12 காலபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முன் அடிப்படை (GO) அடிப்படை (G_1, G_2, G_3) மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட Granola உருளைக் கிழங்கு வர்க்கத்தின் வித்துக்கள் முறையே 1.5 மெ.தொ, 82.29 மெ.தொ 13.44 மெ.தொ ஆகும். Desiree வர்க்கத்தின் அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகள் முறையே 6.48 மெ.தொ, 0.8 மெ.தொ ஆகும். (அட்டவணை 2.2.13)

2012 சிறுபோகத்தில் Granola வர்க்கத்தின் முன் அடிப்படை, அடிப்படை மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வித்துக்களின் உற்பத்தி முறையே 6.710மெ.தொ, 295.92, 127.64மெ.தொ ஆகும். 2012ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த விதையின் அளவு 534.0 மெ.தொ (அட்டவணை 2.2.13 உம் 2.2.14உம்)

இருப்பினும் 2012ம் ஆண்டு சிறுபோகத்தில் நிலவிய வறட்சி காரணமாக குறிப்பிட்ட இலக்கை அடைய முடியவில்லை. 2011ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது உற்பத்தி 1.5% உயர்வானது. ஒப்பீட்டளவில் உயர்ந்தளவில் உணவிற்குரிய உருளைக்கிழங்கு கிடைக்கப் பெற்றமைக்கான காரணம் உருளைக் கிழங்கு அந்துவின் தாக்கமாகும். வறட்சியின் காரணமாக இவ்வந்துவை கட்டுப்படுத்த முடியாதிருந்தது.

2012ம் ஆண்டில் விதை உற்பத்தியார்களுக்கு வினியோகிக்கப்பட்ட விதையின் அளவு 443.9மெ.தொ ஆகக் காணப்பட்டது. (அட்டவணை 2.2.15)

அட்டவணை 2.2.13: 2012ம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட முன் அடிப்படை (GO) மற்றும் அடிப்படை (G_1, G_2, மற்றும் G_3) விதை உருளைக் கிழங்கு (மெ.தொ)

வர்க்கங்கள்	முன் அடிப்படை வித்து			அடிப்படை வித்து		
	2011 /12 பெரும் போகம்	2012 சிறு போகம்	மொத்தம்	2011 /12 பெரும் போகம்	2012 சிறு போகம்	மொத்தம்
Granola	1.501	6.710	8.211	82.291	295.926	378.217
Desirec	-	-	-	6.481	-	6.481
மொத்தம்	**1.501**	**6.710**	**8.211**	**88.772**	**295.926**	**384.698**

அட்டவணை 2.2.14: 2012ம் ஆண்டில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு விதையுற்பத்தி (மெ.தொ)

வர்க்கம்	2011 /12 பெரும் போகம்	2012 சிறு போகம்	மொத்தம்
Granola	12.641	127.646	140.287
Desirec	0.802	-	0.802
மொத்தம்	**13.443**	**127.646**	**141.089**

அட்டவணை 2.2.15: 2012ம் ஆண்டு DOA னால் வழங்கப்பட்ட உருளைக்கிழங்கு விதையுற்பத்தி (மெ.தொ)

வர்க்கம்	2011 /12 பெரும் போகம்	2012 சிறு போகம்	மொத்தம்
Granola	350.0	93.9	443.9

2012ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்ட நடுகைப் பொருட்கள்

பண்ணை முன்னேற்றக் கணக்கின் கீழ் நடுகைப் பொருள் உற்பத்தித் திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டது. 20 DOA பண்ணைகளில் தரமான நடுகைப் பொருள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதனால் நடுகைப் பொருளுக்கான தேசிய ரீதியிலான தேவை நிறைவேற்றப்பட்டது. 2012ம் ஆண்டு 547.019 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 230,895 கன்றுகள் வினியோகிக்கப்பட்டன. மரக்கறிச் செய்கையாளர்களின் வேண்டுகோளுக்கமைய மரக்கறி சமூக நாற்றுச்சாடிகள் உற்பத்தி செய்யப்பட்டன. (அட்டவணை 2.2.16) 250,000 மா, மற்றும் றம்புட்டான் ஒட்டுக்கட்டைகள் ஒட்டுக்காக ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 2.2.16: 2012ல் DOA பண்ணையால் உற்பத்தி செய்து வழங்கிய நடுகைப் பொருள்

தாவரம்	உற்பத்தி செய்தது	வழங்கியது
ஒட்டுக் கன்றுகள்		
ஆனைக்கொய்யா	14693	10556
Belifruit	1149	853
டூரியன்	13040	8258
கொய்யா	4514	26
விளாம்பழம்	2719	1471
பலா	12891	8210
உக்கரச	966	712
தேசி	2427	1525
மா	173857	43508
மன்டரின்	2992	2769
ஜம்பு	2451	1426
தோடை	18692	23979
ரம்புட்டான்	49121	44656
அன்னமுன்னா	1868	712
சீமைஇலுப்பை	2145	1383
விளிம்பி	2563	1337
மங்குஸ்தான்	139	121
பேரிக்காய்	1915	1072
அப்பிள்	161	154
பீச்	100	62
ஏனையவை	2663	2437
மொத்தம்	**311066**	**155427**

தாவரம்	உற்பத்தி	வினியோகம்
வேர் தண்டுத் துண்டம்		
திராட்சை	758	99
ஜம்பு	2418	1784
மாதுளை	1565	2024
தேசி (Lemon)	2252	2024
தேசி	13	05
கொய்யா	04	04
பேரிக்காய்	835	0
டிரகன் பழம்	2760	0
கிரனடில்லா	1817	0
ஏனையவை	9432	8138
மொத்தம்	**21854**	**14078**

தாவரம்	உற்பத்தி	வினியோகம்
நாற்றுக்கள்		
அம்பரெல்லா	14600	4252
விளிம்பி	3544	916
பப்பாசி	5456	3873
மாதுளை	30479	10869
கொய்யா	5242	1903
அகத்தி	4456	1953
முருங்கை	3846	9273
மங்குஸ்தான்	2010	606
தேசி	23512	15017
நெல்லி	2367	584
அன்னமுன்னா	4063	1478
கொடித்தோடை	7794	2694
ஏனையவை	106730	7972
மொத்தம்	**214099**	**61390**
மொத்தம்	**547019**	**230895**
மரக்கறி பொதிகள்	**60483**	**59564**

அட்டவணை 2.2.17: ஏனைய பொருட்களின் உற்பத்தி

பொருள்	அளவு
பழங்கள் (kg)	
வாழை	21384
மா	9311
பப்பாசி	1335
திராட்சை	80
அன்னாசி	4712
கொய்யா	138
ரம்புட்டான்	52
மாதுளை	28
பேரிக்காய்	227
தோடை	14
விலங்கு உற்பத்தி	
பால்(1)	22950
தயிர் (சட்டி)	6098
கூட்டெரு (மெ.தொ)	458
உணவுக்குரிய நெல் (kg)	20598
உணவுக்கான உருளைக்கிழங்கு	138941
உணவுக்கான மரக்கறி (kg)	34701

உற்பத்திப் பொருள்	அளவு
உணவுக்கான OFC (Kg)	
சோளம்	3192
சோள பொத்தி (எண்ணிக்கை)	2916
செத்தல் மிளகாய்	381
பயறு	1064
கௌபி	1815
எள்	479
சோயாஅவரை	127
குரக்கன்	1251
உழுந்து	307
கச்சான்	3280
ஏனையவை	
மரவள்ளி (kg)	11150
அம்பரெல்லா (kg)	84
தேங்காய் (எண்ணிக்கை)	47529
இளநீர் (எண்ணிக்கை)	3317
பாக்கு (எண்ணிக்கை)	13785
வாழைக்குட்டி (எண்ணிக்கை)	1225

2012ம் ஆண்டில் முற்கணக்கறிக்கையின் முன்னேற்றம்

பண்ணை முற்கணக்கின் முன்னேற்ற அறிக்கை அட்டவணை 2.2.18ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.18: முற்கணக்கின் முன்னேற்றம்

பண்ணை	வருமானம் (ரூபா)	செலவு (ரூபா)	இலாபம் நட்டம் (ரூபா)
அளுத்தறம	34949,002	45364818	-6,201,412
அம்பலாந்தோட்டை	7490,793	9661,727	1,398,739
பத்தாத்தை	9,988,140	36,689,309	-22,298,515
கந்தளாய்	30,077,878	21,520,838	9,004,137
மகா இலுப்பள்ளம	54,261,726	60,029,122	5,758,950
மல்வத்தை	24,825,192	28,341,727	1,421,550
பொலன்னறுவை	47,991,732	43,811,034	11,358,036
அம்பேபுச	9,981,503	15,735,208	5,035,640
குண்டசாலை	16,728,587	19,157,851	3,251,500
மித்தெனியா	1,850,873	15,413,367	-10,931,573

பேதுறுதலாகலை	29,516,750	19,535,791	7,112,178
சீத்தா எலிய	19,324,869	25,076,434	-2,645,657
உதறதெல்ல	25,421,936	11,932,435	11,713,457
மீபிலிமான	12,473,766	12,847,431	1,596,189
கரடியனாறு	7,170,482	9,493,464	1,338,286
கந்தபொல	17,868,623	12,452,497	4,238,065
முருங்கன்	6,885,220	3,863,897	1,433,647
பரந்தன்	9,511,017	8,550,472	2,620,635
மொத்தம்	**366,318,089**	**399,477,422**	**67,281,099**

13 பண்ணைகள், தகாத வறள் காலநிலை நிலவிய போதும் பாதிக்கப்படாமல் இலாபத்தினை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2013ம் ஆண்டிற்கான திட்டம்

- பண்ணை அபிவிருத்தியின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்தல், அதாவது நில அபிவிருத்தி, நீர்ப்பாசன வசதிகளின் அபிவிருத்தி, இயந்திரங்களின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல், பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், தட்டையான கற்களால் அமைக்கப்பட்ட பாதைகளை உருவாக்கல் போன்றவற்றின் மூலம் விதையுற்பத்திப் பண்ணையில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் அடிப்படை விதையுற்பத்தியை மேம்படுத்தல்
- ஒப்பந்த அடிப்படையில் விதையுற்பத்தியை வலுப்படுத்தலும் நெல், OFC, மரக்கறி போன்றவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதையுற்பத்தியை அதிகரித்தலும் ஆகும்.
- 2013ம் ஆண்டில் திவி நெகும தேசிய திட்டத்திற்கு வேண்டிய மரக்கறி வித்துப் பொதிகள் மற்றும் நடுகைப் பொருட்களின் வழங்கலின் 40% ஐ பங்களிப்புச் செய்தல்
- வித்துக்களின் வினியோகத்தினை புதிய விற்பனை நிலையம் ஒன்றினை திறந்து வைப்பதன் மூலம் மேம்படுத்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	இலக்கம்
பணிப்பாளர்	01
விவசாய உத்தியோகத்தர்	28
கணக்காய்வாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	136
பண்ணை இயந்திரப் போதனாசிரியர்	01
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	03
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	02
நிர்வாக உத்தியோகத்தர்	02
முகாமைத்துவ உதவியாளர்	83
பண்ணை எழுதுவிளைஞர்	16
சாரதி	36
உழவு இயந்திர இயக்குனர்	36
மின்னியலாளர்	02
இயந்திர இயக்குனர்	08
மேசன்	01
தச்சுவேலை செய்பவர்கள்	03
ஒட்டு வேலை செய்பவர்	24
தங்குமிட பராமரிப்பாளர்	04
KKS	05
களஞ்சிய பொறுப்பாளர்	21
காவலாளி	59
பாரவூர்தி பராமரிப்பாளர்	10
விசேட களஞ்சிய பணியாளர்கள்	02
சுத்திகரிப்புத் தொழிலாளர்	04
தொழிலாளர் (தரம் III)	351
மொத்தம்	**839**

2.3 சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை

விவசாய கொள்கைகளை வகுப்பதிலும், ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டமிடலிலும் சமூக, பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்வதிலும் விவசாயக் கொள்கைகளை பகுப்பாய்தலிலும் விவசாயத் திணைக்களத்திற்கும் விவசாய அமைச்சிற்கும் உதவுகின்ற ஓர் பிரதான ஆலோசனை உறுப்பாக சமூக, பொருளாதார திட்டமிடல் நிலையம் தொழிற்படுகிறது. விவசாய புள்ளிவிபரத் தகவல்களைத் தொகுப்பதற்காக புள்ளி விபரவியல் அலகொன்றையும் இந்நிலையம் பேணி வருகின்றது. அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு நிதிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயத் திணைக்களத்தின் கருத்திட்டங்களது செயற்பாடு களையும் இந்நிலையம் ஒருங்கிணைத்து வருகிறது.

பாதீடு

அட்டவணை 2.3.1: வருடாந்தப் பாதீடு -2012 (மில்லியன் ரூபாய்கள்)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	1,584,770	1,497,865	95
மீண்டுவரும் செலவு	2,960,913	3,091,818	99
NARP நிகழ்ச்சி	2,552,990	693,117	27
TRIVSA நிகழ்ச்சி	183,565	182,088	99
மொத்தம்	**7,282,238**	**5,464,888**	**75**

முன்னேற்றம்

சமூக, பொருளாதார ஆராய்ச்சி

பதின்நான்கு சமூக, பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஏழு ஆய்வுகள் 2013ம் ஆண்டில் தொடரப்பட வேண்டும். பயிர் உற்பத்திச் செலவு பற்றிய ஆய்வுகளுக்குப் புறம்பாக இலங்கையில் சிபார்சு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள் பற்றிய விவசாயிகளின் அறிவும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் தன்மை பற்றியதுமான ஆய்வு, இலங்கையில் நெற் செய்கை உற்பத்தி வினைத்திறன் பற்றிய மதிப்பீடு, இலங்கையில் விவசாய உற்பத்தி மற்றும் உருளைக்கிழங்குப் பிரிவின் மதிப்புரை பற்றிய ஆய்வு போன்ற நான்கு சமூக, பொருளாதார ஆய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு அறிக்கைகள் ஆரம்பக் கட்ட எழுத்து வடிவில் உள்ளன.

இலங்கையில் நெற் செய்கை உற்பத்தித் திறனின் வீழ்ச்சிக்கான மொத்தக் காரணி, இலங்கையில் நெற் செய்கைச் செறிவாக்கமும் பல்லினத் தன்மையும், பயிர் உற்பத்தி மீதான வன ஜீவராசிகளின் அபாயம் பற்றிய மதிப்பீடு, நெல் தொழில்நுட்பத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்

கொள்ளும் தன்மையும் சமூக மூலதனமும், கலப்பின சம்பத் (Sampath) இனுடைய பண்புகளுக்கான பண்ணை மட்ட விருப்ப மதிப்பீடு ஆகிய மேலும் ஏழு சமூக, பொருளாதார ஆராய்ச்சிக் கற்கைகள் 2013ம் ஆண்டில் தொடரப்படும்.

உற்பத்திச் செலவு பற்றிய கற்கைகள்

உற்பத்திச் செலவு கற்கையின் தரவுகள் சராசரி விளைச்சல், மொத்த மற்றும் நிகர இலாபங்கள், மொத்த மற்றும் அலகு உற்பத்திச் செலவு, பண்ணை நுழைவாயில் விலை என்பவற்றை உள்ளடக்குகிறது.

பண்ணை மட்டத்திலும் தேசிய மட்டத்தில் கொள்கைகளை வகுப்பதிலும் இத் தரவுகள் மிகவும் பயனுள்ளவை. பிரதானமாக வாகனங்கள் பழுது படுவதனால் ஏற்படும் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாகவும் நிதிப் பற்றாக்குறை காரணமாகவும் நிர்ணயிக்கப்பட்ட கால வரையறையை விடத் தாமதமானதாகும். உற்பத்திச் செலவு பற்றிய கற்கைத் தொடரை துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. பெரும் போகம் 2010/11 சிறுபோகம் 2011 க்கான பயிர் உற்பத்திச் செலவுக்கான ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன. பெரும் போகம் 2011 / 12 க்கான ஆய்வுக் கட்டுரை வருட முடிவில் பூர்த்தியாகும். சிறுபோகம் 2012க்கான வெளிக்கள ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் எரிபொருளுக்கான ஒதுக்கீட்டுப் பற்றாக்குறை வினாலும் வருட பிற்பகுதியில் நிலவிய பாதகமான காலநிலை காரணமாகவும் போக்குவரத்து மிகவும் கடினமாக இருந்ததாலும் கற்கைக்கான முன்னேற்றத்தில் தடங்கல் ஏற்பட்டது. சிறுபோகம் 2011, பெரும் போகம் 2011 / 12 சிறுபோகம் 2012 க்கான ஆய்வுகளின் ஆங்கில, சிங்கள மொழி மூல மட்டுப்படுத்திய பிரதிகளுக்காக உப மாதிரிகளிலிருந்து தற்காலிக அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

தகைப்புக்குள்ளாகும் சுற்றாடல்களில் நெல்லின் இசைவாக்கத் தன்மை

தகைப்புக்குள்ளாகும் சுற்றாடல்களில் நெல் விளைச்சல், விவசாயியின் வருமானம், வறுமை என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தகைப்புக்குட் படும் கிராமங்களில் பெரும் போக, சிறு போக சராசரி நெல் விளைச்சல்கள் முறையே 2.7 தொ/ ஹெ ஆகவும் 2.5 தொ / ஹெ ஆகவும் காணப்பட்டது. இவை பெரும் போகம், சிறு போக சராசரி நெல் விளைச்சல்களான 4.6 தொ/ ஹெ, 4.4 தொ / ஹெ ஐ விட குறைவாகும். இப்படியான தகைப்புக்குள்ளாகும் சுற்றாடல்களில் வர்க்கங்களின் உயிர்ப்பு, உயிர்ப்பற்ற தகைப்புகளைத் தாங்கி வளரும் தன்மை விளைச்சலை அதிகரிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை உணர்த்துகிறது. விளைச்சல் அதிகரிப்பைப் பொறுத்து முன்னேற்றகரமான தொழில்நுட்பங்கள் குடும்ப வருமானத்தை ரூ 15,300 – 31,750 ஆல் உயர்த்தலாம். இந்த வருமான அதிகரிப்பு வறுமையை 4-8% ஆல் குறைப்பதற்காக மாற்றப்பட முடியும். முன்னேற்றகரமான தொழில்நுட்பங்களை 3,000 – 24,000 வறிய நெற் செய்கையாளர்களை வறுமைக் கோட்டின் மேல் உயர்த்தும். இம்மதிப்பீடானது வறிய விவசாயிகள் மீதான நேரடியான தாக்கத்தையும் குறைவான விலை மூலம் வறிய நுகர்வோர் அடையும் மறைமுகமான நன்மையையும் உள்ளடக்குகிறது. பெரும்பான்மையான Bg வர்க்கங்கள் உள்ளூர் இசைவாக்கத்துடன் விருப்பத்திற்குரிய தானியப் பண்புகளையும் கொண்டிருக்கையில், Bg பெற்றார் வர்க்கங்களுக்குள் GSR மூலப்பொருட்களி லிருந்தான புதிய இயல்புகள் உட்புகுத்தப்படுவது விவசாயிகளினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய உயர் விளைச்சல் தரும் வர்க்கங்களை விருத்தி செய்வதற்கு ஓர் உபாயமாக அத்தியாவசியமாகிறது.

இலங்கையில் நெல் வர்க்க இசைவாக்கம்

இலங்கை நிலைமைகளுக்கு சிறப்பாக ஒத்திசையும் நெல் வர்க்கங்களை மேம்படுத்துவதற்கான இனவிருத்தித் திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்தல் நெல் உற்பத்தித் திறன் வளர்ச்சியை நிலைபேறாக பேணுவதற்கு அவசியமாகும். நெல் ஆராய்ச்சியில் தற்போதைய முதலீட்டை பகுப்பாய்வதற்கும் முன்னேற்றப்பட்ட வர்க்கங்களின் கீழ் குறித்த பேத இசைவாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கும் நிபுணர் மதிப்பீட்டையும் ஆய்வு முறையையும் பயன்படுத்தி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சிக்காக ஈடுபடுத்தப்படும் மொத்த நேரத்தை அளவிடுவதன் மூலம் வேறுபட்ட சூழல் தொகுதிகளில் நெல் ஆராய்ச்சிக்கான முதலீட்டைப் பகுப்பாய்வு செய்வதற்காக ஆராய்ச்சியாளர் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

இது முழு நேர சமமான அடிப்படையில் (FTE) அறிக்கையிடப்பட்டது. இலங்கையில் குறித்த பேத நெல் வர்க்க ஒத்திசைவுக்கான ஆய்வின் கண்டுபிடிப்புகளுடன் நிபுணர் குழு வெளிப்பாடுகளின் முடிவுகள் முழுமையான பேறுபேறைப் பெறுவதற்காக ஒப்பிடப்பட்டன. பெரும்பான்மையான ஆராய்ச்சி முதலீடுகள் உலர், இடை வலய சூழல் தொகுதிகளைப் பார்க்கினும் ஈரவலய நெல் உற்பத்திக்கே செலவு செய்யப்படுகின்றன என்பதை முடிவுகள் வெளிப்படுத்தின. உலர், இடை வலய நெற் செய்கை ஏறத்தாழ அதன் உற்பத்தி, உற்பத்தித் திறனின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டன. ஆகவே, ஈரவலய நெற் செய்கையிலிருந்து அடையக்கூடிய பயன்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கையில் வர்க்கப் பரவல் பற்றிய நிபுணர் குழு மதிப்பீடானது வர்க்க இசைவாக்க ஆய்வு முடிவுகளுடன் ஒப்பு நோக்குகையில் ஒரே கோலத்தைக் காட்டின. தேசிய செய்கையின் கீழ் 20% ஆன பரப்பளவில் பரவலாக செய்கை பண்ணப்படும் அதி பிரபல்யமான வர்க்கமாக Bg352 அறிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே வினைத்திறனான மூலவளப் பகிர்ந்தளிப்புக்கு ஏதுவாக தீர்மானம் எடுப்பதற்காக கொள்கை வகுப்பவர்கள், இனவிருத்தியாளர்கள், விவசாயிகள் ஆகியோர் நெல் வர்க்கங்களின் இசைவாக்கம் பற்றி முன் கூட்டியே அறிவுறுத்தப்படல் வேண்டும்.

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் ஆய்வுகள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய ஐந்து ஆய்வுகளில் SEPC ஈடுபடுத்தப்பட்டு, அவற்றுள் இரண்டின் நகல் அறிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன; (அ) இலங்கையில் நெற் செய்கைத் தொழிலின் சந்தைப்படுத்தல் எல்லைகளின் பகுப்பாய்வு; (ஆ) இலங்கையில் பாசிப்பயறுச் செய்கையின் இலாபகரத்துக்கான பொருளாதார மதிப்பீடு.

மூன்று கற்கைகள்; (அ) சீத்தா எலியவிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் திட்டத்தின் மதிப்பீடு. (ஆ) இலங்கையில் விவசாய – உணவுத் தொழிற்சாலைகளின் ஏற்றுமதிச் சந்தை செயற்றிறன் (இ) சோள உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் பற்றிய ஓர் ஆய்வு 2013ம் ஆண்டில் தொடரப்படும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இடைப்போக பாசிப்பயறுச் செய்கையின் இலாபகரத் தன்மையின் நிதி மதிப்பீடு

இலங்கையில் 2011ம் ஆண்டில் தேசிய மட்டத்தில் வருடாந்தம் பாசிப்பயறு செய்கை பண்ணப்படும் பரப்பளவாக 9,335 ஹெக்டயரும் தேசிய உற்பத்தியாக 10,838 தொன்களும், இறக்குமதி செய்யப்பட்ட அளவாக 11,515 தொன்களுமாக இருந்தன. 2015ம் ஆண்டில் தேசிய வருடாந்த பாசிப்பயறு உற்பத்தியை 45,170 மெ.தொன்களாகவும் வருடாந்த இறக்குமதியை 200 மெ.தொன்களாகக் குறைக்கவும் இலங்கை அரசின் அபிவிருத்திக் கொள்கை அமைப்பு திட்டமிட்டுள்ளது.

எதிர்காலத்துக்கான மகிந்த சிந்தனை நோக்கு தேசிய வருடாந்த பாசிப்பயறு உற்பத்தியை உயர்த்துவதில் ஓர் பிரதான உபாய மார்க்கமாக இடைப் போக (மூன்றாம் போகம்) பாசிப் பயறுச் செய்கையை விவசாயத் திணைக்களமும் விவசாய அமைச்சும் இனங்கண்டுள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டம் 2011ம் ஆண்டில் இடைப்போக பாசிப்பயறுச் செய்கையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதுடன் நெல் வயல்களில் செய்கை பண்ணப்படும் பரப்பளவு 8,000 ஹெக்டயர்களைத் தாண்டியுள்ளது. இடைப்போக பாசிப்பயறு செய்கையின் நிதியினை மதிப்பீடு செய்வதற்கும் இம்மாவட்டத்தில் இடைப்போக பாசிப்பயறுச் செய்கையை விரிவுப்படுத்துவதில் சாதக மற்றும் பாதக காரணிகளை இனங்காணப்பதற்கும் எதிர்கால திட்ட வடிவமைத்தலிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமான கருத்துக்களை சேகரிப்பதற்குமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மூன்று விதை நடுகை முறைகள் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளதுடன் வேறு ஆறு வர்க்கங்கள் மேலுள்ள முறைகளில் விவசாயிகளால் பின்பற்றப்பட்டு வருகின்றது.

MI 5 30% உம் MI6 16% உம் அவுஸ்திரேலியன் 54% உம் செய்கை பண்ணப்பட்டன. விதைகள் 50% குறைந்த விலையில் வழங்கப்பட்டாலும் சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்கள் போதியளவு வழங்கப்படாததன் காரணமாக கூடிய வீதமான விவசாயிகள் நுகர்வு விதைகளைப் பயன்படுத்தும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் அவுஸ்திரேலியன் மூல விதைகளை செய்கை பண்ணினர். அவுஸ்திரேலியன் விதைகள் 9 கி.கி / ஏக் உம் MI5 விதைகள் 10.4 கி.கி / ஏக் உம் MI6 விதைகள் 8.3 கி.கி / ஏக் உம் விவசாயிகளால் விதை அளவாகப் பயன்படுத்தப்பட்டது. சீரான தன்மைக்காக அவுஸ்திரேலியன் விதைகள் விவசாயிகளால் விரும்பப்பட்ட அதேவேளை MI வர்க்கங்கள் நோய் சகிப்புத்தன்மைக்காக விவசாயிகளால் விரும்பப்பட்டது. அவுஸ்திரேலியன் விதைகளை விட MI வர்க்கங்கள் உயர்வான சராசரி விளைச்சலைக் கொண்டிருந்தன. சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்களைப் பார்க்கினும் அவுஸ்திரேலியன் வகை உயர் விலையைப் பெற்றது.

விவசாயக் கொள்கைக் கற்கைகள்

இலங்கையில் உருளைக்கிழங்கு தொழிற்துறை மீதான வர்த்தகக் கொள்கைகளின் பொருளாதார தாக்கம், இலங்கையில் உணவுப் பயிர்த் துறையில் வர்த்தகத் தாராளமயமாக்கலின் தாக்கம், இலங்கையில் சோள ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மீளுதல், விவசாய சமூகத்தின் அபிவிருத்திக்காக விவசாயத் திணைக்களத்தின் 100 வருட சேவையின் பங்களிப்பு ஆகிய நான்கு கொள்கை பகுப்பாய்வுக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் மூன்று கற்கைகளும் 2013ம் ஆண்டு தொடரப்படும். இறுதி ஆய்வு ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதுடன் SEPC கூறு பிரதான ஆராய்ச்சியாக அனுப்பப்பட்டது.

பயிர் எதிர்வு கூறல்

பயிர் எதிர்வு கூறலானது நெல், மறுவயற்பயிர்கள், மரக்கறிப் பயிர்களின் மாதாந்த செய்கை முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் ஓர் மாதாந்த பிரசுரமாகும். இந்த அறிக்கையானது பயிர்ச் செய்கை மீதான தற்போதைய நிலைமை, உற்பத்தியினை எதிர்வு கூறல், உற்பத்தியின் பிரதேச பகிர்ந்தளிப்பு, அறுவடைக் காலங்கள், அதீத காலநிலை மற்றும் நோய் பீடைகள் நிலவும் தன்மை போன்ற தகவல்களை வழங்குகின்றது. தேசிய மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரதான கொள்கைத் தீர்மானங்களை பல்தரப்பட்ட பங்காளர்கள் எடுப்பதற்கு இது ஓர் வழிகாட்டியாக அமைந்தது. இவ்வருடத்தில் எட்டு மாதாந்த பயிர் எதிர்வு கூறல் அறிக்கைகளை SEPC உருவாக்கியது.

பெரும் போகம் 2011 / 12 நெல் விதைக்கப்பட்ட பரப்பளவு 774,828ஹெ ஆக அறிக்கையிடப்பட்டதுடன் விளைச்சல் எதிர்வு கூறல் 3 மில்லியன் மெ.தொ ஆக இருந்தது; இது கடந்த காலங்களை விடவும் உயர்வானதாக இருந்தது. சிறுபோகம் 2012 இல் 395,902 ஹெ இல் நெல் விதைக்கப்பட்டது. ஆனால் பிரதான நெல் உற்பத்திப் பிரதேசங்களிலுள்ள 48,000 ஹெ நெல் வயல்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டன; குறிப்பாக குருநாகல், மட்டக்களப்பு, மொனராகலை மாவட்டங்களிலும் மகாவலி H வலயத்திலும். உற்பத்தி எதிர்வு கூறல் வறட்சிப் பாதிப்புக்காகச் சீராக்கப்பட்டது. 1,213,671 மெ. தொன்களாகும். 2011 / 12 பெரும் போக உயர் விளைச்சலுடன் 2012ம் ஆண்டில் எதிர்ப்பார்க்கப்பட்ட நெல் உற்பத்தி 4.2 மில்லியன் மெ.தொ ஆகும். இது கடந்த 5 வருட (2007 – 2011) சராசரி விளைச்சலின் 12% அதிகரிப்பாகும். 2011 / 2012 பெரும் போகம் முழுவதிலும் மறுவயற்பயிர்களின் பயிர்ச் செய்கை முன்னேற்றமானது 135,724 ஹெ ஆகக் காணப்பட்டதுடன் அது கடந்த பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் பரப்பளவில் 57% அதிகமாகும். 2012 சிறுபோக மறுவயற் பயிர்ச் செய்கைப் பரப்பளவு 71,478 ஹெ ஆக இருந்ததுடன் 4,987ஹெ வறட்சியால் பாதிக்கப்பட்டது, (குறிப்பாக எள் மற்றும் சோயா அவரைச் செய்கைகள்.) ஆயினும் கடந்த சிறுபோகத்தை விடவும் குரக்கன், எள் தவிர்ந்த எல்லா மறுவயற்பயிர்களின் உற்பத்தி எதிர்வு கூறல் அதிகமாகவே உள்ளது.

கருத்திட்டம் திட்டமிடல், தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு

விவசாய திணைக்களத்தின் பல்வேறு நிறுவனங்கள் / நிலையங்கள் / அலகுகள் என்பவற்றிலிருந்து SEPC 31 செயற்திட்ட பிரேரணைகளைச் சேகரித்து திறைசேரியின் பரிசீலனைக்காக விவசாய அமைச்சிடம் (MOA) ஒப்புவித்தது. SEPC அதன் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மூலம் தனது இணைக்கும் தொழிற்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்டது. (அ) சேதன உர உற்பத்தியும் அதன் பயன்பாடும் செயற்திட்டம்; (ஆ) ஒழுக்காற்று வேலைக் குழுக்கள்; (இ) விவசாயத் திணைக்களத்திற்கான தேசிய விவசாய உற்பத்தி திட்டம்; (ஈ) பண்ணை அபிவிருத்தித் திட்டம், (உ) புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்துதல். ஆகியவற்றை ஒருங்கிணைப்பதில் SEPC வெற்றிகரமாக செயற்பட்டு NARP செயற்திட்டத்திற்கான மனிதவள ஆட்சேர்ப்புக்கான அனுமதியைப் பெற்றது.

மறுவயற் பயிர்கள், மரக்கறிகள், பழங்கள் 2013 – 2015க்கான சந்தை மானத்தை நோக்கிய தேசிய உணவு உற்பத்தி திட்டத் தயாரிப்பு

எதிர்காலத்துக்கான மகிந்த சிந்தனை நோக்கு. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கைத் திட்டமானது நாட்டில் தேசிய மற்றும் குடும்ப உணவு, போசணைப் பாதுகாப்பை அடைவதை வலியுறுத்துவதுடன் விவசாயத் துறையின் தற்போதைய வளர்ச்சி வீதமான 4.5% ஐ 10% க்கு உயர்த்துவதையும் திட்டமிடுகிறது சந்தை விலைத் தளம்பல்கள் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதிக்கிறது. விலைகள் குறைவாக இருக்கும் போது விவசாயிகளையும் விலைகள் மிகவும் அதிகமாக உள்ள போது நுகர்வோரையும் பாதிக்கின்றது. பொதுவாக அபாயத்தை வெறுக்கும் விவசாயிகளால் உயர் விலையான சந்தர்ப்பங்களில் நன்மை அடைய முடிவதில்லை. ஏனெனில் அப்படியான சந்தர்ப்பங்களில் உற்பத்தி அளவு குறைவாக இருக்கும். இதனடிப்படையில் உயர் விலைத் தளம்பல்கள் உள்ள சந்தர்ப்பங்கள் விவசாயிகள், நுகர்வோர் இரு சாராரினதும் குடும்ப வருமானத்தைப் பாதிக்கிறது. மேலும் வறுமைச் சக்கரத்தில் (Vicious circle) உயர் விலைத் தளம்பல்களுடன் தொடர்புடைய அபாயங்கள் விவசாயிகளை விவசாயத்திலிருந்து பின்வாங்கச் செய்வதுடன் தொடர்ந்து வரும் உற்பத்தி

வீழ்ச்சியால் ஏற்படும் உயர் விலைகளின் விளைவாக வறியோர் மத்தியில் உணவுப் பாதுகாப்பின்மை நிலைமை ஏற்படுத்துகிறது. இந் நிலைமையில், விவசாயிகள், நுகர்வோர் இரு சாராருக்கும் உகந்த விலைகளுடன் திடமான சந்தை விலையை அடைவதன் மீது விவசாய அமைச்சு அதி முக்கியத்துவத்தை வைத்துள்ளது. மறுவயற் பயிர்கள், மரக்கறிகள், பழங்கள் ஆகியவற்றுக்கான சந்தைமானத்தை நோக்கிய தேசிய உணவு உற்பத்தித் திட்டமானது, ஜீவனோபாய விவசாயத்தை வர்த்தக விவசாயமாகவும், முன்னணி விவசாயத்தை விவசாய வர்த்தகமாகவும், விவசாயிகளை பண்ணை வான்மையாளர்களாக வும் மாற்றுவதன் மூலம் விவசாய உற்பத்திப் பொருட்களின் உறுதியான விலையை அடைவதற்கான ஓர் முயற்சியாகும். இது விலைத் தளம்பல்களைக் குறைப்பதன் மூலம் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் (Medical Research Institute) சிபார்சுடன் மாதாந்த உணவுத் தேவையுடன் பொருந்துமாறு வருடம் முழுவதும் உணவுற்பத்தியை அதிகரிப்பதன் மேல் கவனம் செலுத்துகிறது. விவசாய அமைச்சுடனும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்துடனும் இணைந்து இத் திட்டத்தைத் தயாரிப்பதில் SEPC பிரதான பங்கை வகிக்கிறது.

தேசிய விவசாய ஆராயர்ச்சித் திட்டம்

தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் (NARP) ஒன்பது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு SEPC நிதியுதவியைப் பெற்றது. இவற்றுள் மூன்று செயற்திட்டங்கள் முடிவடைந்துள்ளவேளை மிகுதி 2013ம் ஆண்டில் தொடரப்படும்.

சிறிய அளவிலான செயற்திட்டம் (TRIVISA)

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து தெற்காசியாவில் முன்னேற்றப்பட்ட வர்க்கங்களின் கண்காணிப்பு (TRIVISA) என்ற சிறிய அளவிலான செயற்திட்டத்தை SEPC பூர்த்தியாக்கியது.

விவசாயத் தரவு முகாமைத்துவம்

திட்டமிடுதலிலும் ஆராய்ச்சி வேலைகளிலும் உதவுவதற்காக விவசாயத் திணைக்களத்திற்கும் விவசாயத் திணைக்களத்திற்கு வெளியேயுள்ள வாடிக்கையாருக்கும் SEPC தொடச்சியாக தரவுகளை வழங்கியுள்ளது.

2012க்கான AgStat வெளியிருதல்

உணவுப் பயிர்த் துறையின் முக்கிய தகவல்கள் தொடர்பான விவசாய புள்ளிவிபரவியலை உள்ளடக்கிய கையேடாகிய AgStat 2012 (பாகம் VIII) ஆவணி – 2012 இல் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இக்கையேட்டில் சமூக பொருளாதார தரவு, நிலப் பயன்பாட்டு வகைகள், விஸ்தீரணமும் உற்பத்தியும், இறக்குமதியும் ஏற்றுமதியும், தனி மனிதனுக்கு கிடைக்கும் தன்மை, மொத்த மற்றும் சில்லறை விலைகள் போன்ற அநேக தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த புள்ளிவிபரவியல் தகவல்கள் ஆராய்ச்சியாளர்கள், கொள்கை திட்டமிடுவர்கள், மாணவர்கள், கல்விசார்ந்தவர்கள், நிர்வாகிகள், விவசாயிகள் ஆகியோர்களால் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

பயிர்த் தொழில் துறைக்கான வரவு செலவுத் திட்டம் (பழப்பயிர்களும் மலரியல் பயிர்களும்)

தெரிவு செய்யப்பட்ட பழப் பயிர்களுக்கும் (தோடை, தேசி, வாழை, கொடித்தோடை, அன்னாசி, றம்புட்டான், பப்பாசி, மரமுந்திரிகை, மாதுளை, றகன் பழம், பேரிக்காய், மா, தூரியன்) மலரியல் பயிர்களுக்குமான (Anthuim, Alstromeria, Gebera, Carnation, madona lity) தொழிற்பயிற்சி வரவு செலவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருட இறுதியில் அச்சிடப்பட்டது. இப்பயிர்களின் சிபார்சு செய்யப்பட்ட தொழில் நுட்பங்களுடன் கூடிய வர்த்தக ரீதியான பயிர்ச்

செய்கையின் வரவு செலவு பகுப்பாய்வை இவ்வரவு செலவுத் திட்டம் உள்ளடக்குகிறது. உள்ளீடு அளவுகள், செலவுகள், வருமானங்கள், வரவு செலவு விகிதங்கள், தற்போதைய நிகர பெறுமானங்கள் போன்ற அண்மைக்கால பொருளாதார தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் தொழில் முயற்சியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், கொள்கை வகுப்பவர்களுக்கும் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தீர்மானங்கள் எடுக்கும் போது பயனளிக்கிறது. பயிர்ச் செய்கைக்கான வருமான செலவு விகிதம் தோடைக்கு 3.59 ஆகவும், தேசிக்கு 2.25 ஆகவும், வாழைக்கு 1.26 ஆகவும், கொடித்தோடைக்கு 1.92 ஆகவும், அன்னாசிக்கு 4.4 ஆகவும், றம்புட்டானுக்கு 5 ஆகவும், பப்பாசிக்கு 1.3 ஆகவும், மரமுந்திரிகைக்கு 1.9 ஆகவும், மாதுளைக்கு 6.6 ஆகவும், றகன் பழத்துக்கு 16.74 ஆகவும், பேரைப் பழத்திற்கு 5.98 ஆகவும், மாவுக்கு 1.69 ஆகவும், தூரியனுக்கு 5.3 ஆகவும் காணப்பட்டது.

மனித வளங்கள் கிடைக்கும் தன்மையும் அபிவிருத்தியும்

ஒரு மேலதிக பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடமும் ஒரு நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடமும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இவ்வருடத்தில் ஒரு விவசாய பொருளியலாளர் தனது பட்டப்பின் படிப்பைத் தொடருவதற்காக கற்கை விடுமுறை எடுத்துள்ளதுடன் பிறிதொரு விவசாய பொருளியலாளர் வெளிநாட்டில் தொழில் புரிவதற்காக விடுமுறை எடுத்தார். அரச முகாமைத்துவ உதவியாளர்களுள் ஆறு உறுப்பினர்கள் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான பயிற்சிப் பட்டறையில் பங்குப்பற்றினர்.

பங்குபற்றிய பயிற்சிகள்

- Ms. C. சந்திரசிறி, விவசாயப் பொருளியலாளர், ‘‘நிறைவான பொருளியல் தத்துவங்களைப் பின்பற்றி அடிமட்ட பொருளியல் அபிவிருத்தி’’ பயிற்சியில் பங்கேற்றார், ஆனி 25 – ஆவணி 2012, பாங்கொக், தாய்லாந்து, TICA நிதியீட்டம்
- Dr.R.M.ஹேரத், விவசாயப் பொருளியலாளர், 13.05.2012 – 18.05.2012 வரை தாய்லாந்தில் நடைபெற்ற விவசாய கணக்கெடுத்தலும் களத்தரவுச் சேகரிப்புக்குமான மாதிரியெடுத்தல் தொடர்பான பிராந்திய பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றினார்.
- Dr.R.M. ஹேரத், விவசாயப் பொருளியலாளர், 18.07.2012-20.07.2012 வரை தாய்லாந்தில் நடைபெற்ற விவசாய புள்ளிவிபரவியல் வழிநடத்தும் குழுவுக்கான இரண்டாவது கூட்டத்தில் பங்குபற்றினார்.
- Dr.R.M. ஹேரத், விவசாயப் பொருளியலாளர், 05.10.2012-12.10.2012 இல் வியட்நாமில் நடைபெற்ற ஆசிய பசுபிக் இரண்டாவது அமர்வில் பங்குபற்றினார்
- திருமதி. N.P லியனகே விவசாயப் பொருளியலாளர் கொழும்பிலுள்ள SLAAS தலைமைக் காரியலாயத்தில் நடைபெற்ற ‘SAT’ ஆராய்ச்சியை விசேடமாகப் பின்பற்றி மாதிரி சேகரித்தலும் மாதிரி சேகரித்தலின் அடிப்படைத் தத்துவங்களும்: என்ற பயிற்சியில் 15 ஆடி 2012 இல் பங்குபற்றினார்.
- திருமதி. B.R வலிசிங்கே, AE, RRDI பத்தலகொட ஒர் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றார். சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் (IRRI) பிலிப்பைன்ஸ் இன் ஆதரவில் பங்குனி 23-24, 2012 KIIT இல் புவனேஸ்வர், ஒரிசா, இந்தியாவில் நடைபெற்ற TRIVSA (தெற்காசியாவிலுள்ள முன்னேற்றப்பட்ட வர்க்கங்களின் கண்காணிப்பு) செயற்திட்ட திட்டமிடல் பயிற்சிப் பட்டறை

- திருமதி. B.R வலிசிங்கே, AE, RRDI பத்தலகொட ESCAP மற்றும் ADB ஆதரவில் ஹோட்டல் கலதாரி, கொழும்பு, இலங்கையில் நடைபெற்ற ஆசிய பசுப்பிக் இராச்சிய கொள்கைப் பிரச்சினைகளை ஒழுங்கிணைத்தல் தொடர்பான பயிற்சியில் கார்த்திகை, 2, 2012 இல் பங்குபற்றினார்.
- திரு. H.U வர்ணகுலசூரிய, மேலதிக பணிப்பாளர் 23 - 27 ஆடி, 2012 இல் பாங்கொக், தாய்லாந்தில் நடைபெற்ற தேசிய குடும்பத் தொடர்பான ஆய்வில் சேகரிக்கப்பட்ட உணவு நுகர்வு தரவுகளின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிராந்திய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்றார்.

இணைப்பாளர் / குழு அங்கத்தவர்களாக SEPC உத்தியோகத்தர்களின் பங்களிப்பு

- திரு. T.H.C.S பெரேரா, SEPC பணிப்பாளர் 56 ஆராய்ச்சி செயற்திட்டங்களை உள்ளடக்கிய தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்திற்காக (NARP) விவசாயத் திணைக்களத்தின் இணைப்பாளராகக் கடமையாற்றினார்.
- திரு. H.U வர்ணகுலசூரிய, மேலதிக பணிப்பாளர் விவசாயத் திணைக்களத்தின் விலைக் குழுவின் தலைவராகக் கடமையாற்றினார்.
- திரு. H.U வர்ணகுலசூரிய, மேலதிக பணிப்பாளர் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் வர்த்தக இலகுவாக்கும் தேசிய ஆலோசனை குழுவில் ஓர் அங்கத்துவராக சேவை செய்தார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாயப் பொருளியலாளர் விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவையினால் நீதி வழங்கப்பட்டு விவசாய திணைக்களத்தின் நிறுவனங்களாலும், நிலையங்களினாலும் அமுல்படுத்தப்பட்ட "சேதன உரங்களின் உற்பத்தியையும் பயன்பாட்டையும் ஊக்குவித்தல்" என்ற செயற்திட்டத்தின் இணைப்பாளராகக் கடமையாற்றினார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாயப் பொருளியலாளர் விவசாய திணைக்களத்தின் ஒழுக்காற்று வேலைக் குழுக் கூட்டங்களின் இணைப்பாளராகக் கடமை புரிந்தார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாயப் பொருளியலாளர் விவாய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நெல் அபிவிருத்திக் குழுவில் ஓர் அங்கத்தவராக சேவை புரிந்தார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாயப் பொருளியலாளர் விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்ப வெளியீட்டுக் குழுவின் செயலாளராக சேவையாற்றினார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாயப் பொருளியலாளர் UNESCAP மற்றும் FAO வினால் ஸ்தாபிக்கப்பட்ட விவசாய புள்ளிவிபரவியலுக்கான இயக்கும் குழுவில் ஓர் அங்கத்துவராக சேவை புரிந்தார்.
- கலாநிதி. R.M ஹேரத், விவசாய பொருளியலாளர் IFAD செயற்திட்ட பிரேரணைகளை மதிப்பீடு செய்யும் குழுவில் ஓர் அங்கத்தவராக சேவையாற்றினார்.

2013 க்கான திட்டம்

அட்டவணை 2.3.2: வேறுபட்ட பிரிவுகளுக்களின் கீழ் செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை

பிரிவுகள்	எண்ணிக்கை
விவசாயக் கொள்கைப் பகுப்பாய்வு	03
சுற்றாடல் ஆய்வுகள்	01
மனிதவள அபிவிருத்தி	02
விவசாய தரவு முகாமைத்துவமும் தகவல் வழங்கல் முகாமைத்துவமும்	07
செயற்திட்ட உருவாக்கமும் மதிப்பீடும்	04
உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் ஆராய்ச்சி	04
சமூக பொருளாதார ஆராய்ச்சி	10
மொத்தம்	**31**

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
மேலதிக பணிப்பாளர்	01
விவசாயப் பொருளியலாளர்	12
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
பொருளியலாளர் உதவியாளர்	09
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	09
விவசாயப் போதனாசிரியர்	02
முகாமைத்துவ உதவியாளர் சேவை	08
சாரதி	04
ஊழியர்	03
KKS	01
மொத்தம்	**47**

3.1 விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம் (ETC), பேராதனை

விரிவாக்கம் மற்றும் பயிற்சிக்குமான பிரிவின் இலக்கு என்பது விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் என்பதுடன் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவ தற்காக பயிர் உற்பத்தித் துறையின் உற்பத்தித் திறனில் உச்சமட்டத்தினை அடைதல் என்பதாகும். இப்பிரிவினது அடைவு என்பது நான்கு பிரதான பரப்புக்களிற்கு முன்னிலைப் படுத்தப்படுகிறது. அவையாவன விரிவாக்கம், பயிற்சி, விவசாயக் கல்வி மற்றும் பரீட்சை என்பனவாகும். நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் செயற்பாடுகள் உரிய பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகிறது.

- பெரும் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழுள்ளதும் மாகாண இடைப் பிரதேசங்களாக உள்ள (Inter provincial area) ஆறு பிரதேசங்களிற் குமான நேரடியான விரிவாக்கத் திட்டம்
- மாகாணசபைகள் மற்றும் மகாவலிப் பிரதேசம் என்பவற்றுடனான கூட்டு விரிவாக்கத் திட்டம்
- மூன்று சேவைக்காலப் பயிற்சி நிலையங்கள் நான்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணை இயந்திரப் பயிற்சி நிலையம் என்பவற்றில் விரிவாக்க உத்தியோகத்தர்கள், விவசாயிகள், முதலீட்டாளர்கள் மற்றும் ஏனையவர்களிற்கு மான பயிற்சிகளை வழங்குதல்.
- குண்டசாலை, பல்வெகர, அங்குணுகொலப் பலச, வவுனியா மற்றும் கரப்பிஞ்ச ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை விவசாயப் பாடசாலைகளில் விவசாயத்தில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை வழங்குதல்.
- இளம் விவசாயிகள் கழக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பிந்துநுவெவ மற்றும் மாவத்தகம ஆகிய இடங்களில் அமைந்துள்ள இரண்டு தேனீ விருத்திப் பிரிவுகளின் மூலம் தேனீ விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பயிர்ப் போசணையும் சேதன விவசாயமும் எனும் பிரிவின் மூலம் சூழல் நேயவிவசாயத்தை நாட்டில் பிரபல்யப்படு த்தல்
- விவசாய முயற்சியாண்மை விருத்தி, மறுவயற் பயிர்கள் விருத்தித் திட்டம், நுண் நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்பான விவசாயம் என்பவற்றுடன் பெண்களிற்கான விவசாய விரிவாக்க நிகழ்ச்சி என்பவற்றையும் மேற்கொள்ளல்
- பிபிலையில் அமைந்த பூங்கனியியல் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் அப்பயிர்களிற்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படல்
- விசேட பயிற்சி நிலையங்களில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிற்கான பயிற்சியினை மேற்கொள்ளல்

பாதீடு

அட்டவணை 3.1.1: ஆண்டுப் பாதீடு -2012 (மில்லியன் ரூபாய்கள்)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனச் செலவு	48.54	45.8855	95
மீண்டுவரும் செலவு	120.422	110.382	92
விசேட முதலீடுக் கருத்திட்டம் விவசாயத் திணைக்களத்தின் செலவுத்தலைப்பின் கீழான நிதி			
பயிற்சியும் திறன் விருத்தியும்	10	8.844	88
விவசாயப் பயிற்சிப் பண்ணை	20	15.3631	77
அமைச்சு ஒழுக்கீட்டின் கீழான நிதி			
பண்ணை விருத்தி திட்டம்	17.2	13.7	80
நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்துடனான நடுத்தர அளவிலான மரக்கறிப் பண்ணை நிர்மாணம்	2.8	2.8	100
சமூகமட்டத்திலான விதை அபிவிருத்தித் திட்டம்	3.75	3.75	100
நிலைபேறான சேதனப் பண்ணைத் தொழில்நுட்பத்திற்கான ஆசிய வலையமைப்பு	0.05	0.05	100
மொத்தம்	**222.7**	**200.77**	**90**

விசேட கருத்திட்டம்

1. பயிற்சி மற்றும் திறன்விருத்தி

ஒரு வருட பயிற்சியை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிற்கு வழங்குகின்ற விசேட பயிற்சி நிலையங்கள், சேவைக்காலப் பயிற்சி நிறுவனங்கள், மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணை இயந்திரங்கள் பயிற்சி நிலையம் என்பவற்றால் வழங்கப்படுகின்ற பயிற்சியினை சேவையின் தரம் மற்றும் ஆளுமை என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் விசேட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

மேற்படி நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற பயிற்சியின் தரம் மற்றும் திறன் என்பவற்றை முன்னேற்றுவதற்காக ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனங்கள், பூங்கனியியல் உபகரணங்கள், விலங்கு வேளாண்மை உபகரணங்கள், கட்புல செவிப்புல சாதனங்கள், பயிற்சி உதவி உபகரணங்கள் என தேவைப்பட்ட பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலதிகமாக விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு உள்நாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் அவர்களிற்கான வெளி நாட்டுப் பயிற்சிக்கு இதன் மூலம் உதவியளிக்கப் பட்டது.

மேற்சொல்லப்பட்ட நடவடிக்கைகளிற்காக மொத்தம் ரூபா 8.844 மில்லியன் செலவிடப் பட்டது.

2. விவசாயப் பயிற்சிப் பண்ணை நில அபிவிருத்தி

இந்தக் கருத்திட்டத்தின் கீழ் விவசாயக் கல்லூரிகள், சேவைக்காலப் பயிற்சி நிலையங்கள், மாட்ட விவசாயப் பயிற்சி நிலையம், பொலநறுவை, விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிற்கு ஒரு வருட பயிற்சியை வழங்கும் விசேட பயிற்சி நிலையங்கள் மற்றும் விவசாயத் திணைக்களத் தலைமைக் காரியாலயம் என்பவற்றின் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அதற்காக ரூபா 15.36 மில்லியன் செலவிடப்பட்டது.

3. பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சி

அடையாளம் காணப்பட்ட ஏழு உப நிறுவனங்களான சேவைக்காலப் பயிற்சி நிலையங்கள் கசயபலம மற்றும் அங்குணுகொலபலச, விவசாயக் கல்லூரிகளான குண்டசாலை, அங்குணுகொலபலச, பெல்வெகர வவுனியா மற்றும் பூங்கனியியல் பயிர் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனமான பிபல என்பவற்றின் பண்ணைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அத்துடன் விசேடமாக விதை மற்றும் நடுகைப் பொருள் என்பவற்றின் தேவைக்காக பயிர்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மண் பாதுகாப்பும் பொருத்தப்பாடான நீர்வடிப்புத் தொழில்நுட்பமும், நீர்விநியோக அபிவிருத்தி, பயிர்ச் செய்கைக்கான பந்தல் அமைப்புக்கள் என்பவற்றுடன் வேறு சில தரை அபிவிருத்திச் செயற்பாடுகளும் பண்ணைகளில் மேற்கொள்ளப் பட்டன. இதற்கான ரூபாய் 13.7 மில்லியன் செலவிடப்பட்டது.

4. நுண் நீர்ப்பாசனத்தின் மூலமான நடுத்தர அளவிலான மரக்கறிப் பண்ணை நிர்மாணம்

விவசாயிகளின் 50% பங்களிப்புத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிற்கு 40 தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள் வழங்கப்பட்டன. மேலும் நுண் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தில் 15 பயிற்சி வகுப்புக்கள் விவசாயிகளிற்கு வழங்கப் பட்டது.

5. சமூக மட்டத்திலான விதை உற்பத்திக் கிராமம்

நிலைப்பேறான விதை விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகள் மூலம் கிராமமட்டத்தில் விதை உற்பத்தியை மேம்படுத்துவதே இக்கருத்திட்ட த்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 3.75 மில்லியன் என்பதுடன் அவ் ஒதுக்கீடு மொத்தமாகச் செலவிடப்பட்டது. 2012ம் ஆண்டில் கருத்திட்டத் தின் முன்னேற்றம் என்பது பின்வருமாறு தொகுக்கப்படலாம்.

இந் நிகழ்ச்சியானது அடையாளம் காணப்பட்ட 158 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மூலம் 324 விவசாயிகள் பயன் அடைந்தார்கள். விவசாயிகள் விதை உற்பத்தித் தொழில்நுட்பத்தில் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

மேலும் அடிப்படை விதை மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்திற் கான உபகரணங்கள் என்பன விவசாயிகளின் குழுவிற்கு வழங்கப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தல் மத்திய நிலையத்தில் 125 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டார்கள்.

6. ANSOFT கருத்திட்டம் (நிலைபேறான சேதனப் பண்ணைத் தொழில்நுட்பத்திற் கான ஆசிய வலைப்பின்னல்)

இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட சேதனக் கிராமங்களில் 10 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன. இதில் 104 அலுவலர்களும் 284 விவசாயிகளும் பங்குபற்றினர். அண்ணளவாக மறுவயற்பயிர்களின் விதைப் பொதிகள் 200 உம் உள்ளூர் நடுகைப் பொருட்களும் விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன. இங்கு விவசாயிகளின் சேதன உற்பத்திகள் தனியார்

நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்படு கின்ற சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

7. அரிசி ஏற்றுமதி வலயக் கருத்திட்டம்

இக்கருத்திட்டமானது பொலநறுவை, அம்பாந்தோட்டை, மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உயர்தர (ஏற்றுமதித் தரம்) நெல்லை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனத்தின் பொறியியலாளர்களால் தரமான அரிசி பதனிடல் என்பது பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி தெரிவு செய்யப்பட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், உதவி விவசாயப் பணியாளர்கள் போன்றோரிற்கு வழங்கப்பட்டது. இருபத்தியிரண்டு அரிசி ஆலை உரிமையாளர் கள் உயர் தர அரிசி பதனிடலிற்காக அடையாளங் காணப்பட்டனர்.

3304 விவசாயிகள் 2214 கெக்டர் விஸ்தீரணத்தில் பயிர் செய்து 8523 மெ.தொ நெல்லை உற்பத்தி செய்தனர். எவ்வாறாயினும், நெல்லிற்கான உற்பத்திச் செலவு ஏனைய நெல் உற்பத்தி நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்வாகக் காணப்பட்டதுடன் உலக சந்தையில் அந்நாடுகளுடன் போட்டியிடுவது என்பது சிரமமாகக் காணப்பட்டது. விவசாயிகள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் போன்றோரிற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் ஒழுங்கமைக்கவும் ரூபா 273,220.50 செலவிடப்பட்டது.

8. விவசாய இரசாயன விற்பனைத் தொழில்நுட்ப உதவியாளர்களின் பயிற்சி (ASTA)

இந்நிகழ்ச்சியானது விவசாயத் திணைக்களத்தின் பீடை நாசினிப் பதிவாளர் அலுவலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. 12 அலகுகளைக் கொண்ட பாடத்திட்டம், தேசியத் தொழிற்பயிற்சிச் சான்றிதழ் பாடத்திட்ட வரைபு, மற்றும் பயிலுநர்களிற்கான கையேடுகள் என்பன தயாரிக்கப்பட்டன. அத்துடன் 2012ம் ஆண்டு காலப்பகுதியில் பயிற்றுனர்களிற்கான பயிற்சி 47 NAITA உத்தியோகத்தர்கள் மற்றும் 78 விவசாயப் போதனாசிரியர்கள் போன்றோருக்கு மேற்கொள்ளப்பட்டது. வருட இறுதியில் ஏழு மாவட்டங்களில் விவசாய இரசாயன விற்பனைத் தொழில்நுட்ப உதவியாளர்களிற்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

மாகாண இடைப் பிரதேசங்களிற்கான (Inter Provincial Areas) விரிவாக்க நடவடிக்கைகள்

பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வருகின்ற ஆறு மாகாண இடைப் பிரதேசங்களின் விரிவாக்க நடவடிக்கையானது மத்திய விவசாயத் திணைக்களத்தின் கீழ்க் காணப்படுகிறது. அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, பொலநறுவை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களின் பகுதிகள் மாகாண இடைப் பிரதேசங்களாக அடையாளப் படுத்தப்படுகின்றன.

அட்டவணை 3.1.2: 2011, 2012ம் ஆண்டுகளில் மாகாண இடைப்பிரதேசங்களில் நெல் பயிற் செய்யப்பட்ட மொத்த விஸ்தீரணங்களின் ஒப்பீடு

பயிர்ச் செய்கை காலம்	பயிர்ச் செய்கை விஸ்தீரணம் (கெக்)	பயிர்ச் செய்கை காலம்	பயிர்ச் செய்கை விஸ்தீரணம் (கெக்)
2011 சிறுபோகம்	1,41,886	2012 சிறுபோகம்	1,24,645
2010 / 11 பெரும் போகம்	1,94,612	2011 / 12 பெரும் போகம்	1,84,206

மேற்படி அட்டவணை 2012 சிறுபோகம் மற்றும் 2011 / 12 பெரும் போகம் என்பவற்றில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட விஸ்தீரணங்களைக் காட்டுகிறது. இதன் மூலம் பயிர்ச் செய்கை விஸ்தீரணம் குறைந்துள்ளது அறிக்கையிடப் படுகிறது. 2011 / 12 பெரும் போக பயிர்ச் செய்கைக்காக நீர்சேமிக்கின்ற செயற்பாடு காணப்படுகின்ற நிலையில் 2012 சிறுபோகத்தில் இலக்கிடப்பட்ட பரப்பளவில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு நீர்த்தேக்கத்தில் காணப்பட்ட நீர்ப்பற்றாக்குறை அனுமதிக்கவில்லை.

குறிப்பிடக்கூடியளவிலான பயிர் அறுவடை வீழ்ச்சி இதுவரை அறிக்கையிடப்படவில்லை

ஆறு மாகாண இடைப் பிரதேசங்களில் பயிரிடப்பட்ட மறுவயற்பயிர்களாவன பெரிய வெங்காயம், சிறிய வெங்காயம், சோளம், பயறு, நிலக்கடலை, எள்ளு, கௌபி, சோயாஅவரை, மிளகாய், குரக்கன் மற்றும் உழுந்து என்பனவாகும்.

மறுவயற்பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த விஸ்தீரணங்கள் 2011 / 12 பெரும் போகத்தில் 7298.945 கெக்டயர் ஆகவும் 2012 சிறுபோகத்தில் 13135.95 ஆகவும் இருந்தது. ஒவ்வொரு மாகாண இடைப் பிரதேசங்களினதும் குறிப்பிடக்கூடிய தகவல்கள் மற்றும் நடவடிக்கைகள் என்பன கீழே தரப்படுகின்றன.

மாகாண இடைப் பிரதேசம் - அம்பாந்தோட்டை

1. அறிமுகம்:~

இப்பிரதேசமானது பெரிய நீர்ப்பாசனத்தின் கீழ் அண்ணளவாக 15000 கெக்டர் நெற் செய்கையை உள்ளடக்குவதுடன் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழ் 1400 கெக்டர் மற்றும் மழை வீழ்ச்சியின் கீழ் 50 கெக்டர் விஸ்தீரணங்க ளையும் உள்ளடக்குகிறது. மேட்டு நிலப்பயிர்ச் செய்கையாக அண்ணளவாக 39546 கெக்டரில் தாழ் நாட்டு மரக்கறி, வாழை மற்றும் பப்பாசி போன்ற பழப்பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன. லுனுகம்வெகர, லியன்கஸ் தோட்டை (றிதியகம, நீர்த்தேக்கம்) மற்றும் நமனால வாவி என்பன பயிர்ச் செய்கைக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்குகின்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களாகும். மேலே குறிப்பிட்ட மூன்று நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் இரண்டு பிரதான பயிர்ச் செய்கை போகங்களான பெரும் போகம், சிறு போகம் என்பவற்றுடன் மூன்றாவது போகமாக சிறு போகத்தின் பின்னரும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

2. விவசாய விரிவாக்க நடவடிக்கைகள்

அம்பாந்தோட்டை மாகாண இடைப் பிரதேச மானது வளவ மற்றும் கிரிந்தி ஓயா எனப்படு கின்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இரண்டு மாவட்டங்களான அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி என்பவற்றைக் உள்ளடக்கும் இவ்விரு பிரிவுகளினதும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களால் விவசாய வரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் இரண்டு விவசாயப் பிரிவுகளும் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்குகிறது. அவையாவன அம்பலாந்தோட்டை, அம்பாந்தோட்டை, திஸ்சமகாராம, லுனுகமுவெகர, சூரியவெவ மற்றும் பலாங்கொடை. இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற விரிவாக்க நடவடிக்கை கள் அம்பலாந்தோட்டை, லுனமா, பண்டகிரிய, வீரவில, ஜோடாகண்டிய, பெரலிகெல மற்றும் கல்தோட்டை ஆகிய 07 கமநல சேவைகள் நிலைய அதிகாரத்தின் கீழ் வருகிறது.

கிரிந்தி ஓயா விவசாயப் பிரிவில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி மத்திய நிலையம் 25 நபர்களிற்கான தங்குமிட வசதியைக் கொண்டுள்ளது.

விவசாய சேவையானது ஓர் கூட்டுச் சேவையாக விவசாயிகளிற்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் மனோபாவம் விருத்தியாவதுடன் அறிவு, ஆற்றல் என்பன அதிகரிக்கப்படுகின்றன. இதனால் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படுவதுடன் விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்படுகிறது.

அம்பாந்தோட்டை மாகாண இடைப் பிரதேசத்தின் பிரதான செய்கைப் பயிராக நெல் காணப்படுவதுடன் இறுதி ஆண்டுச் சராசரி விளைவு அண்ணளவாக 7.1 மெ.தொன் / கெக்டர் ஆகக் காணப்பட்டது. இங்கு விசேடமாக வாழைப் பயிர்ச் செய்கை அதிகரித்துச் செல்லக்கூடிய போக்கு காணப்படுவதாக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

3. 2012 இன் விசேட அடைவுகள்

3.1 பயறின் மூன்றாம் போகப் பயிர்ச் செய்கை

3.2 சிறிய மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் காலத்திற்குப் புறம்பான பயிர்ச் செய்கையின் ஊக்குவிப்பு

3.3 மிளகாய் மற்றும் குரக்கன் என்பவற்றின் உற்பத்தி அதிகரிப்பு

3.4 சேதனப் பசளையின் உற்பத்தியையும் பாவனையையும் பிரபல்யப்படுத்துதல்

3.5 சமூதாய மட்டத்திலான விதை உற்பத்தி

3.6 பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து சமூக மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி எனும் கருத்திட்டத்திற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கல்

மாகாண இடைப் பிரதேசம் - கண்டி

1. அறிமுகம்

மாகாண இடைப் பிரதேசம் - கண்டி மினிப்பே, வில்கமுவ, கந்தகெட்டிய, ரிடீமலீயத்த, மகியங்கனை ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை கண்டி, மாத்தளை, மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் உள்ளடக்குகிறது. இவ் மாகாண இடைப் பிரதேசம் 12474 கெக்டர் தாழ் நிலத்தையும் 7403 கெக்டர் மேட்டு நிலத்தையும் உள்ளடக்கி 32385 விவசாயக் குடும்பங்களையும் கொண்டுள்ளது. சொறபோற, மப்பகடவெவ, டம்பறாவ, நாகதீப, பத்மடில்லா, பதுலுஓயா, மினிப்பே I, மற்றும் II, ரத்தெல்ல மற்றும் மினிப்பே III, மற்றும் IV, ஆகிய 6 நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. பெரும் போகம் மற்றும் சிறு போகம் என்பவற்றில் தாழ்நிலங்களில் கூடிய விஸ்தீரணத்தில் விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொள் கின்றனர். சிறுபோகத்தில் (கோடைகாலம்) அண்ணளவாக 40% ஆன நெற்காணிகள் மறுவயற்பயிர்களின் செய்கைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. சோளம், நிலக்கடலை, பயறு மற்றும் மிளகாய் என்பன செய்கை பண்ணப்படும் மறுவயற் பயிர்கள் ஆகும்.

2. விரிவாக்க நடவடிக்கைகள்

மூன்று மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மூன்று விவசாய பிரிவுகளாக விரிவாக்க நடவடிக்கைகள் வழங்கப்பட்ட போதும் நிகழ்காலத்தில் காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக இரண்டு பிரிவுகளை ஓர் பிரிவாக இணைத்து பிரச்சினைக்குத் தீர்வாக்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தில் இரண்டும் மாத்தளை மாவட்டத்தில் இரண்டும், பதுளை மாவட்டத்தில் மூன்றுமாக ஏழு கமநல சேவைகள் நிலையங்கள் இப்பிரதேசத்தில் இருக்கின்றன. இக்கமநல சேவைநிலைய அதிகாரப் பரப்பானது 14 விவசாய விரிவாக்க பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

3. 2012ம் ஆண்டின் விசேட அடைவுகள்

a. விவசாயத் திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப விவரணம்

பரசூட் முறைமூலமான நெல் நடுகையானது ஓர் உயர் தொழில் நுட்பமாகும். விதைத் தேவையைக் குறைத்தல் பயிர்ச் செய்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு ½ ஏக்கர்

பரப்பளவைக் கொண்ட 80 விவரணத் துண்டங்கள் அமைக்கப்பட்டன.

இவ் விவரணத் துண்டங்கள் சாதாரண விதைப்பு முறைக்கு மாற்றாக பரசூட் தொழில்நுட்ப முறையின் சாதகங்களை விவசாயிகள் ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டன.

அட்டவணை 3.1.3 சாதாரண விதைப்பு முறைக்கு மாறாக பரசூட் முறை மூலம் பெறப்படும் விளைவிற்கான ஒப்பீடு

	பரசூட் விதைப்பு முறை	சாதாரண விதைப்பு முறை
சராசரி விளைவு (புசல் / ஏக்கர்)	136	105
உற்பத்திச் செலவு (ரூபா / கி.கி)	13.34	18.6
இலாபம் (ரூபா / ஏக்கர்)	40,854	20,160

பரசூட் முறை மூலமான விதைப்பானது சாதாரண விதைப்பிலும் பார்க்க குறைந்தளவிலான உற்பத்திச் செலவு மற்றும் இரண்டு மடங்கான இலாபம் என்பவற்றைப் பதிவு செய்துள்ளது.

b. நெற் செய்கையை மேற்கொள்ளும் சமூகத்தின் மத்தியில் சுய விதை நெல் உற்பத்தியில் ஓர் குறிப்பிடப்படும் படியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது

அட்டவணை 3.1.4: சுயவிதை நெல் உற்பத்தியின் ஒப்பீடு

போகம்	2011 சிறுபோகம்	2012 சிறு போகம்
விவசாயிகளின் எண்ணிக்கை	622	1013
விஸ்தீரணம்(கெக்)	49	100

c. புதிய இடங்களில் போகத்திற்குப் புறம்பான மறுவயற் பயிர்ச் செய்கை

2012 சிறுபோகத்தில் நாகதீபம் மற்றும் பத்மடில்ல பகுலுஓயா ஆகிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பதுளை மாவட்டத்திலுள்ள நெற்கைப் பிரதேசங்களில் குறித்த எண்ணிக்கையான விவரணத் துண்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பெறுபேறு அட்டவணை 3.1.5 இல் காட்டப்படுகின்றன.

அட்டவணை 3.1.5: புதிய சகாப்தத்தின் போகத்திற்குப் புறம்பான பயிர்ச் செய்கையின் பெறுபேறுகள்

பயிர்	விவரணத்துடங்களின் எண்ணிக்கை	விஸ்தீரணம் (ஏக்கர்)	சராசரி விளைவு (கி.கி / ஏக்கர்)
சிறிய வெங்காயம்	40	01	8000
பெரிய வெங்காயம்	36	04	4000
பெரிய வெங்காய விதை உற்பத்தி	23	¼	107

மாகாண இடைப் பிரதேசம் - அம்பாறை

1. அறிமுகம்

மாகாண இடைப் பிரதேசம் - அம்பாறையின் பிரதிப் பணிப்பாளர் அலுவலகமானது உகன, தமன, அட்டாளைச்சேனை, மற்றும் சம்மாந்துறை ஆகிய நான்கு நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்நான்கு நிர்வாகப் பிரிவுகளும் இருபத்தைந்து கமநலசேவை நிலையங்களையும், எண்பத்தைந்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளையும், பதினாறு பிரதேச செயலாளர் பிரிவுகளையும், நானூற்று முப்பது கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்குகின்றன. இப்பிரதேசத்தில் பிரதான மாகச் செய்கை பண்ணப்படுவது நெல்லாகும். பிரதான மறுவயற் பயிர்கள் சோளம், பயறு, கௌபி, நிலக்கடலை, மிளகாய் என்பனவாகும். இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பிரதான மரக்கறிகள் வெண்டி, பாகல், புடோல், பீர்க்கு, பயற்றை, கத்தரி, தக்காளி, மற்றும் முள்ளங்கி என்பனவாகும். வாழை, பப்பாசி, அன்னாசி, மா என்பன செய்கை பண்ணப்படும் பிரதான பழப்பயிர்களாகும்.

அட்டவணை 3.1.6: 2012 இல் இரு பயிர்ச் செய்கைப் பருவங்களில் பண்ணப்பட்ட மரக்கறிகள்

மரக்கறி	பயிர்ச் செய்கை விஸ்தீரணம் (கெக்டர்)	
	சிறுபோகம்	பெரும் போகம்
முள்ளங்கி	06	105
வெண்டி	140.2	194
பாகல்	57.2	153
புடோல்	92	135
பீர்க்கு	64.5	167
பயற்றை	90.15	178
கத்தரி	108.7	299
தக்காளி	540	128

2. 2012 சிறுபோக அடைவுகள்

2.1 மாகாண இடைப் பிரதேசம் - அம்பாறையில் பெரும் போகத்தில் மிளகாய் பிரதானமாகப் பயிரிடப்படுகிறது. 2012 இல் இரு போகங்களிலும் மிளகாய்ச் செய்கை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்காக ஓர் பிரச்சார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2012 பெரும் போகத்தில் 510 கெக்டரும் 2012 சிறுபோகத்தில் 182 கெக்டரும் பெறுபேறாகக் குறிப்பிடப்பட்டன.

2.2 விவசாய சமூகத்தினரால் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டதானது மற்றும் ஓர் குறிப்பிடத்தக்க அடைவாகக் காணப்பட்டது. 2012 இல் 10,000 விவசாயிகள் சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபட்டதுடன் அவற்றைப் பயன்படுத்தியும் உள்ளனர். அவர்கள் 20,000 மெ.தொன். சேதனப் பசளையை உற்பத்தி செய்தனர்

மாகாண இடைப் பிரதேசம் - மொனராகலை

மாகாண இடைப் பிரதேசம் மொனராகலையானது சியம்பலான்கடுவ, ஒக்கம்பிட்டிய, எதிமலே, மற்றும் தெலுள்ள ஆகிய கமநல சேவைகள் நிலையப் பிரிவுகளை உள்ளடக்குகிறது. மொத்த நெற் செய்கைப் பரப்பளவு அண்ணளவாக 2984 கெக்டர்கள் ஆகும். எதிமலே, கொட்டியாகல, முத்துக்கண்டிய மற்றும் கந்தப்பானகல என்பன இம்மாகாண இடைப் பிரதேசத்தில் உள்ள

பிரதான நீர்ப்பாசனக் குளங்கள் ஆகும். பிரதான பயிர்ச் செய்கையாக நெற் செய்கை காணப்படுவதுடன் அடுத்ததாக சோளம் கூடிய அளவில் செய்கை பண்ணப்படுகிறது. வழமை யான தொழில் நுட்ப நிகழ்ச்சிகளைத் தவிர பின்வரும் விசேடமான திட்டங்கள் 2012ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது.

1. பரசூட் முறையிலான நெல் விதைப்பு

முத்துக்கண்டிய விவசாய போதனாசிரியர் பிரிவில் 35 ஏக்கர் பரப்பளவில் பரசூட் முறையிலான விதைப்பு மேற்கொள்ளப்பட்டது. சாதாரண விதைப்பு முறையுடன் ஒப்பிடும் போது 20% ஆன விளைவு அதிகரிப்புக் காணப்பட்டது.

2. விவசாயம் ஒரு வியாபாரமாக

பண்ணை வியாபாரப் பாடசாலைத் திட்டத்தின் கீழ் 40 விவசாயிகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் விவசாயத்தை ஓர் வியாபார முயற்சியாக உருவாக்குவதற்காக அவர்களை மீளுருவாக்கம் செய்யும் பொருட்டு வியாபாரத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் 22 விவசாய விற்பனை நிலைய முகாமையாளர்கள் அடிப்படை வியாபார முகாமைத்துவம் பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர். (5 நாள் பயிற்சித் திட்டம்)

3. மறுவயற் பயிர் நிகழ்ச்சி

மறுவயற்பயிர் உற்பத்தியை ஸ்திரப்படுத்துவதற் காக 512 கெட்டரில் ஓர் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. பயறு, உழுந்து, குரக்கன், எள்ளு, மிளகாய், பெரிய வெங்காயம் (போகத்திற்கு புறம்பான பயிர்ச் செய்கை) என்பன 2012 சிறுபோகத்தில் ஊக்குவிக்கப் பட்டன. மறுவயற் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகளை வலுவூட்டும் பொருட்டு பின்வரும் பொருட்கள் அவர்களிடை யே பகிர்ந்தளிக்கப்பட்டது.

விதையின் தரத்தைக் கூட்டுவதற்காக தார்ச்சீலையும் பெறுமதி சேர் செயற்பாடுகளிற் காக அரைக்கும் இயந்திரமும் தூவல் நீர்ப்பாசனத் தொகுதி, விவசாய இரசாயனங்கள் மற்றும் விதைகள் (வெங்காயம், மிளகாய், மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றிற்கு மட்டும்) மிளகாய் (பூச்சிப் பாதுகாப்புவலை-இலைச்சுருள் சிக்கலைக் கட்டுப்படுத்துவதற்குரிய பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு) மற்றும் சோளம் (இடைவெளியுடன் கூடிய வரிசை முறையிலான நடுகை முறையை அறிமுகப்படுத்துவதற்காக வரம்புகளின் பயன்பாடு) என்பவற்றின் விதைகளைக் கொண்ட விவரணச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இவை பணப் பயிர்களாக இருந்தபோதும் விவசாயத் திணைக்களத்தால் நிரூபிக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் விவசாய சமூகத்தினரால் பயன்படுத்தப்படவில்லை.

மாகாண இடைப் பிரதேசம் - அநுராதபுரம்

1. அறிமுகம்

மாகாண இடைப் பிரதேசம் அநுராதபுர மானது அநுராதபுரம், குருனாகல், மாத்தளை மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் 12 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்குகிறது. இது 35 விவசாய போதனாசிரியர் பிரிவுகளையும், 175 கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. 2012ம் ஆண்டில் வழமையான தொழில்நுட்ப திட்டங்கள் தவிர்ந்த விசேடமாக நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டங்கள் வருமாறு:

2. 2012ம் ஆண்டின் விசேட அடைவுகள்

முன்றாவது போகத்தில் பயறுப் பயிர்ச் செய்கை

ராஜங்கன நீர்ப்பாசனத் திட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் கூட்டிணை ந்து 2011 / 2012 பெரும்போக அறுவடை யைத் தொடர்ந்து 120 கெக்டர் பரப்பளவில் பயறுச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 250 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு 50% விவசாயிகளின் பங்களிப்புடன் அரசினால் விதை வழங்கப்பட்டது. வேறுப்பட்ட விதைப்பு முறைகளான வரிசைவிதைப்பு, வீசி விதைப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. குறைந்தளவான பயிர் முகாமைத்துவம்

காணப்பட்டது. விதை கொள்வனவு செய்தது தொடக்கம் அறுவடை வரை ஒரு ஏக்கரிற்கான உற்பத்திச் செலவு ரூபாய் 5000 ஆகக் காணப்பட்டது. ஏக்கரிற்கான வருமானமாக ரூபாய் 40,000.00 பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெரிய வெங்காய விதை உற்பத்தி மற்றும் பெரிய வெங்காயப் பயிர்ச் செய்கை

பெரிய வெங்காய விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 2012ம் ஆண்டில் ரகங்களையில் 45000 கி.கிராம் பெரிய வெங்காய குமிழ்கள் வசந்தகால நிலைப்படுத்தப்பட்டு 1200 விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. விவசாயிகளின் முயற்சிக்கு ஆதரவு வழங்கும் பொருட்டு அவர்களிற்கு பொலித்தீன், மீன்வலை மற்றும் பிளாஸ்ரிக் கூடைகள் என்பன வழங்கப்பட்டன. அண்ணளவாக 4500 கி.கி பெரிய வெங்காய விதை உற்பத்தி செய்யப்பட்டது. இது 2012 சிறுபோகத்தில் 300 கெக்டரிலும் கூடிய பரப்பளவில் பெரிய வெங்காயச் செய்கையைச் சாத்தியமாக்கியது. விவசாயிகள் ஒரு கி.கி வெங்காய விதையை ரூபாய் 10,000 இற்கும் அதிகமாக விற்பனையும் செய்திருக்கிறார்கள். பெரிய வெங்காய விதை உற்பத்தியை விவசாயிகள் ஓர் இலாபகரமான தொழில் முயற்சியாக அடையாளம் கண்டிருக்கிறார்கள்.

PEACE கருத்திட்டம் (Pro. Poor Economic Advancement and Community Enhancement project)

வர்த்தகப் பழப் பயிர்ச் செய்கைத் திட்டத்தின் கீழ் 16 கெக்டர் மா, மற்றும் 5 கெக்டர் தோடைச் செய்கை உருவாக்கப்பட்டுள்ளது. 50 கத்தரித்தல் உபகரணத் தொகுதியானது தற்போது காணப்படுகின்ற மாந்தோப்புக்களை மீளமைப்புச் செய்வதற்காக பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. கறுத்தக் கொழும்பானிற்குப் புறம்பாக ஏற்றுமதிச் சந்தைக்கு கூடிய தராதரமுள்ள TOM EJC எனும் வர்க்கத்தின் நடுகைப் பொருள் 50% விவசாயிகளின் பங்களிப்புடன் வழங்கப்பட்டன. ராஜங்கனை நீர்ப்பாசனத்தின் இடது மற்றும் வலது கரைகளான நச்சதுவ மற்றும் நுவரவெவ போன்ற இடங்களில் இத்திட்டமானது தெரிவு செய்யப்பட்ட 50 விவசாயிகளுடன் நடை முறைப்படுத்தப்படுகிறது.

தேசத்திற்கு மகுடம் - 2012

அநுராதபுர மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் - 2012 கண்காட்சியை ஒட்டியதாக 10 மாதிரிக் கிராமங்கள் நிறுவப்பட்டன. மாதிரி வீட்டுத் தோட்ட நிர்மாணம், வதிவிட அபிவிருத்தி, காணப்படுகின்ற பழத் தோட்டங்களின் கத்தரிப்பு, நீர்க்களைக் கட்டுப்பாடு, தேனீ வளர்ப்பு, பரசூட் முறையிலான நெல் விதைப்பின் ஊக்குவிப்பு ஆகியன இம்மாதிரிக் கிராமங்களில் மெற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். இக்கருத்திட்டத்தினூடாக 1000 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பயனடைந்தன.

நெல் விதைப்பில் பரசூட் முறை

உற்பத்திச் செலவைக் குறைக்கும் பொருட்டும் விளைவை அதிகரிக்கும் பொருட்டும் இத்தொழில் நுட்பமானது 2008ம் ஆண்டு விவரண மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தொழில்நுட்பமானது 2012ம் ஆண்டு சிறுபோகத்தில் 2000 கெக்டர் பரப்பளவிற்கு பின்பற்றப்பட்டுள்ளதாக அறிக்கை யிடப்படுகிறது.

மாகாண இடைப் பிரதேசம் - பொலநறுவை

1. அறிமுகம்

மாகாண இடைப் பிரதேசம் பொலநறுவையானது மூன்று உதவி விவசாயப் பணிப்பாளர் பிரிவுகளையும், எட்டு கமநல சேவைகள் நிலையப் பிரிவுகளையும், முப்பது விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது. பிரிவு I ஆனது மெதிரி கிரிய மற்றும் கிக்குறக்கொட

கமநல சேவை நிலைகளையும், பிரிவு II ஆனது எலகற மற்றும் கிரிதல கமநல சேவை நிலையங்களையும், பிரிவு III ஆனது சேவாகம, புலஸ்திகம மற்றும் கலமுன கமநல சேவை நிலையங்களையும் கொண்டுள்ளன. அத்துடன் இப்பிரதேசத்தின் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களாக பராக்கிரம சமுத்திரம், கிரித்தல, கௌடுல்ல மற்றும் மின்னேரியா என்பன காணப்படுகின்றன.

இப்பிரதேசமானது ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் நூற்றுத் தொண்ணூரு கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்குகிறது. மாகாண இடைப் பிரதேசம் பொலநறுவையின் மொத்தப் பரப்பளவு 96000 கெக்டராகக் காணப்படுவ துடன் இது 46092 விவசாயக் குடும்பங்களையும் உள்ளடக்குகிறது. பயிர் செய்யக்கூடிய மொத்தப் பரப்பளவாக 34739 கெக்டர் காணப்படுகிறது. பிரதான பயிரான நெல்லைத் தவிர மறுவயற்பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், மற்றும் பழப்பயிர்கள் என்பனவும் செய்கை பண்ணப்படுகின்றன.

2. 2012ம் ஆண்டின் விசேட அடைவுகள்

இளவயதினரின் ஈடுபாடு

மத்திய விவசாயத் திணைக்களத்தின் தலைமைப்பீட இளம் விவசாயிகள் கழகத்தினால் நடாத்தப்பட்ட தேசிய வினாவிடைப் போட்டியில் மாகாண இடைப் பிரதேசம் - பொலநறுவையை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் விவசாயிகள் கழகம் சம்பியன் கிண்ணத்தை வெற்றியீட்டியது. புளற்சிகம கமநல சேவைகள் நிலையப் பிரிவில் தெபரல்ல கிராம சேவையாளர் பிரிவிலுள்ள திவுலகிரிய எனும் இவ் இளம் விவசாயிகள் கழகத்தின் அங்கத்தவர்கள் ஓர் கூட்டுறவுப் பண்ணையை இயக்கிவருவதுடன் விதைநெல், சோளம், மிளகாய், மற்றும் வத்தகை (Watermelon) என்பவற்றை உற்பத்தி செய்கிறார்கள். விவசாயத்திற்கான இவர்களின் உன்னதமான பங்களிப்பை மத்திய மாகாண சபையானது நிதிவழங்கி உதவியதன் மூலம் கௌரவித்தது. மாகாண அபிவிருத்தி நிதியின் மூலம் மாகாண சபையானது 50% பங்களிப்பை 75 புசல் / மணித்தியாலம் எனும் திறனுடைய மின்சாரத்தில் இயங்கும் நெல் சுத்தப்படுத்தியையும் மின்சாரத்தில் இயங்கும் தனிவரிசை பொலித்தீன் பை தையல் இயந்திரத்தையும் பொலித்தீன் பைகளையும் கொள்வனவு செய்ய உதவி வழங்கியது. இதற்காக மாகாண சபை செலவிட்ட மொத்தப் பணம் ரூபாய் 65,000.00 ஆகக் காணப்பட்டது. (கொள்வனவிற்கான மொத்தச் செலவின் 50% வழங்கப்பட்டது)

மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம்

மூன்று விவசாயப் பிரிவுகளில் குறிப்பிடக் கூடிய விவசாயத்திற்கான சாத்தியப்பாடு களைத் தன்னகத்தே கொண்டிருந்த நாற்பத்திநான்கு மாதிரிக் கிராமங்கள் விருத்தி செய்யப்பட்டன. மாகாண இடைப் பிரதேசம் - பொலநறுவையின் விவசாய சமூகத்தினிடையே உறுதிப்படுத்தப்பட்ட விவசாயத் தொழில் நுட்பங்கள் இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பரப்பப்பட்டது. இந்த 44 மாதிரிக் கிராமங்கள் 05 தேனீ வளர்ப்புக் கிராமங்களையும், 10 பழப் பயிர்ச் செய்கைக் கிராமங்களையும், கொண்டிருந்த துடன் கால் ஏக்கர் பரப்பளவுள்ள பரசூட் முறை மூலம் விதைப்புச் செய்யப்பட்ட 370 நெற் செய்கைத் துண்டங்களையும் கொண்டிருந்தன. 2012ம் ஆண்டு ஒவ்வொரு விவசாயப் பிரிவிலும் சிறந்த மாதிரிக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மாதிரிக் கிராமங்களின் விவசாயப் போதனாசிரியர்களின் ஈடுபாடு மற்றும் நோக்கு என்பவற்றிற்காக அவர்கள் பிரதிப் பணிப்பாளர் (விவசாய விரிவாக்கம்) அலுவலகம் பொலநறுவையினால் உதவியளிக்கப் பட்டார்கள்.

நெல் உற்பத்தித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சி - 2012 இன் அடைவுகள்

பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் நீர்வழங்கப்படுகின்ற அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய ஆறு மாகாண இடைப் பிரதேசங்களும் கூடியளவான நெல் உற்பத்தியினை மேற்கொள்ளக்கூடிய பிரதேசங்களாக அறியப்படுகின்றன. இவை நாட்டின் வருடாந்த மொத்த நெல் உற்பத்தி விஸ்தீரணத்தின் 30% இணைக் கொண்டுள்ளதுடன் தேசிய நெல் உற்பத்தியில் 40% பங்களிப்பையும் வழங்குகின்றன.

2011 / 2012 பெரும்போகம் மற்றும் 2012 சிறுபோகம் என்பவற்றில் மாகாண இடைப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட விஸ்தீரணங்கள் முறையே 184206 கெக்டயர் மற்றும் 124645 கெக்டயர் என்பவனவாக இருந்தன. 2012 சிறுபோகம் ஆரம்பத்தில் நிலவிய வறட்சியான நிலைமை காரணமாக இலக்கிடப்பட்ட நெற் செய்கை விஸ்தீரத்தை அடைய முடியவில்லை. இந்நீடித்த வறட்சி காரணமாக மாகாண இடைப் பிரதேசம் பொலநறுவையின் 7614 கெக்டரையும் மாகாண இடைப் பிரதேசம் மொனராகலையின் 241 கெக்டரையும் உள்ளடக்கியதான 7855 கெக்டர் மாகாண இடைப் பிரதேச நெற் செய்கையானது பாதிப்படைந்தது. எவ்வாறாயினும் இந்த ஆறு மாகாண இடைப் பிரதேசங்களும் நெல் உற்பத்தியினை 2011 / 2012 பெரும்போகத்தில் 1.01 மில்லியன் மெ.தொன்களாகவும் 2012 சிறுபோகத்தில் 0.66 மில்லியன் மெ. தொன்களாகவும் அடைந்தன.

மாகாண இடைப் பிரதேச விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கங்களாக நெல்லின் சராசரி விளைவை 5 மெ.தொ/ கெக்டயரில் இருந்து அதிகரிப்பது, நெல்லின் உற்பத்திச் செலவை 13 ரூபா / கிலோ விற்குக் குறைப்பது மற்றும் சூழல் பாதிப்பைக் குறைப்பது என்பனவாக இருந்தன. இந்நோக்கங்களை அடைவதற்கு பின்பற்றிய தந்திரோபாயங்களாக பயிர் நடுகையில் நாற்றுக்களை வீசி விதைத்தல் (பரசூட் முறை), மண் வளத்திற்கான ஒருங்கிணைந்த பயிர்ப் போசணை முகாமைத்துவம் பீடை கொல்லிப் பாவனையை குறைப்பதற்காக ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஊக்குவிப்பு என்பன காணப்பட்டன. உயர்தர விதை நெல்லின் கிடைப்பனவை அதிகரிப்பதற்காக இரண்டாம் நிலை விதைப் பண்ணை நிறுவப்பட்டதுடன் சுய விதை நெல் உற்பத்தித் திட்டத்திற்கான ஊக்குவிப்பு என்பன மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலாக மாகாண இடைப் பிரதேசங்களில் களை நெல்லைக் கட்டுப்புடுத்துவற்கான விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் - கன்னொறுவை

சேவைக் காலப் பயிற்சி நிறுவனம்-கன்னொறுவையானது தேசிய மட்டத்தில் ஓர் பிரதான விவசாயப் பயிற்சி நிறுவனமாக இருப்பதுடன் விவசாய உத்தியோகத்தர்கள், முதலீட்டாளர்கள், விவசாயிகள் மற்றும் விவசாயத்தில் ஆர்வமுடைய ஏனையவர்கள் என்போரின் அறிவு, ஆற்றல் மற்றும் மனோபாவம் என்பவற்றை முன்னேற்றுவதற்குப் பொறுப்புடையதாய் இருக்கிறது.

2012இல் மொத்தமாக வழங்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் 127 (14,025 மனித நாட்கள்) ஆக இருந்ததுடன் இது 82 (12603 மனித நாட்கள்) மற்றும் 11 (529 மனித நாட்கள்) பயிற்சி வகுப்புக்களை முறையே அலுவர்கள் மற்றும் விவசாயிகள் போன்றோருக்காக கொண்டிருந்த துடன் 34 வயற் பயிற்சி வகுப்புக்களையும் கொண்டிருந்தது (893 மனித நாட்கள்)

சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் - அங்குணுகொலப்பலச

இது தென் மாகாணத்தில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இது விவசாய உத்தியோகத்தர்கள், தொழிலாண்மை

முகவர்கள், விவசாயிகள் மற்றும் ஆர்வமுடையோர் என்போரின் விவசாயம் சார்ந்த அறிவு, ஆற்றல், மனோபாவம், என்பவற்றை விருத்தி செய்வதற்குப் பொறுப்பாக உள்ளது. இந்நிறுவனம் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய தென் மாகாண மாவட்டங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாகாண இடைப் பிரதேசம் என்பவற்றில் மேற்குறிப்பிட்ட குழுவினரிற்கு சேவைக் காலப் பயிற்சியினை வழங்குகிறது.

இவ்ஆண்டுக்காலப் பகுதியில் மொத்தம் 74 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன. (3012 மனித நாட்கள்) இது உத்தியோகத்தர்களிற்காக 11 (660 மனித நாட்கள்) விவசாயிகளிற்காக 08 (438 மனித நாட்கள்) என்பதுடன் வயற் பயிற்சி வகுப்புகளையும் கொண்டிருந்தது. அத்துடன் 07 பயிற்சிப் பட்டறை / கருத்தரங்கு / கூட்டம் கலந்துரையாடல் (287 மனித நாட்கள்) என்பனவும் நடாத்தப்பட்டன.

சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் - ஹன்சயபலம, அறலகன்வில

சேவைக் காலப் பயிற்சி நிறுவனம் - அறலகன்வில மகாவலி B துண்டத்தில் அமைந்துள்ளது. இது மகாவலி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஏனைய அரச உத்தியோக த்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மற்றும் மகாவலிப் பிரிவுகள் B, C, D, G என்பவற்றின் வியாபார முயற்சியாண்மையாளர்கள் அது போன்று அம்பாறை மற்றும் பொலநறுவை ஆகிய மாகாண இடைப் பிரதேசங்களைச் சேர்த்த மேற்படி நபர்களிற்கான பயிற்சி வகுப்புக்களை வழங்குகிறது.

பயிற்சிக்கான கருவிகளாக மாதிரிப் பண்ணை, விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப வெளியீடுகள் மற்றும் பூச்சிய விரிவாக்கத் தொழில்நுட்பம் என்பன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2013ம் ஆண்டு காலப்பகுதியில் இந்நிறுவனமானது இளம் விவசாயிகளிற்கான இலாபகரமான மற்றும் சுய நிலைபேறான வர்த்தக ரீதியான ஓர் மாதிரிப் பண்ணையை உருவாக்க எண்ணுகிறது.

2012இல் 64 பயிற்சி வகுப்புகள் (2053 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இது 14 பயிற்சி வகுப்புக்களை (685 மனித நாட்கள்) உத்தியோகத்தர்களிற்காகவும் 12 பயிற்சி வகுப்புக்களை (244 மனித நாட்கள்) விவசாயிகளிற்காகவும் கொண்டிருந்ததுடன் 32 வயற்பயிற்சி வகுப்புக்களையும் (1125 மனித நாட்கள்) கொண்டிருந்தது. மேலும் பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் நில அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் பண்ணை அபிவிருத்தி செய்யப்பட்டதன் மூலம் நிறுவனமானது வலுவூட்டப்பட்டது.

பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம்

பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம் (FMTC) ஆனது அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன் தேசிய ரீதியில் பண்ணை இயந்திர மயமாக்கலிற்காக இருக்கின்ற ஒரேயொரு நிறுவனமாக இருக்கிறது. FMTC யின் பயிற்சி ஆணையாக பிரதானமாக பின்வரும் விடயங்களில் கருத்தூன்றப்படுகிறது.

- நான்கு சில்லு உழவு இயந்திர இயக்குதலும் பராமரிப்பும் - 10 நாட்கள்
- இரண்டு சில்லு உழவு இயந்திர இயக்குதலும் பராமரிப்பும் - 05 நாட்கள்
- நீர் இறைக்கும் இயந்திரங்களின் இயக்குதலும் பராமரிப்பும் - 02 நாட்கள்
- தெளிகருவிகளின் இயக்குதலும் பராமரிப்பும் - 02 நாட்கள்
- இணைந்த அறுவடை இயந்திரத்தின் இயக்குதலும் பராமரிப்பும் - 02 நாட்கள்
- நுண் நீர்ப்பாசன அறிமுகப் பயிற்சி - 02 நாட்கள்

- நுண் நீர்ப்பாசன வடிவமைப்பு பயிற்சி - 05 நாட்கள்
- விவசாயக் கைக் கருவிகள்
- வீட்டுத் தோட்டம்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் FMTC 68(6097 மனித நாட்கள்) பயிற்சி வகுப்புக்களை நடாத்தியது. அதில் 21 பயிற்சி வகுப்புக்கள் (858 மனித நாட்கள்) உத்தியோகத்தர்களிற்காகவும் 12 பயிற்சி வகுப்புக்கள் (508 மனித நாட்கள்) விவசாயிகளிற்காகவும் 35 பயிற்சி வகுப்புக்கள் (4731 மனித நாட்கள்) பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகள் என்பவற்றின் மாணவர்களிற்காகவும் அமைந்திருந்தது.

மேலும் FMTC யானது இதன் ஆதரவினை பண்ணை இயந்திரமயமாக்கலுடன் தொடர்புடைய களநிலை விரிவாக்க உத்தியோகத்தர்களிற்கு வழங்கி வருகிறது. இதற்கு அப்பால் FMTC யானது பண்ணை இயந்திரமயமாக்களின் ஆலோசனைச் சேவைகளை அவசியமான நிறுவனங்களிற்கு வழங்கி வருகிறது.

மேலும், ரூபா 1469421.00 மதிப்புள்ள மூன்று நெல் நாற்று நடும் கருவிகள், இரண்டு விதையிடுகருவிகள், ஓர் வலுக் களை கட்டுப்படுத்தி, மற்றும் 400 நாற்றுத் தட்டுக்கள் என்பன ஜன்மார் கம்பனி, ஜப்பான் இனால் ஜய்க்க (JICA) திட்டத்தினூடாக அன்பளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் இரண்டு சில்லு உழவுஇயந்திரங்கள் மூன்று, ஒரு தொகுதி சாவிகள், மற்றும் ஒரு தொகுதி உதிரிப்பாகங்கள் என்பன மொத்தமாக ரூபா 2881635.00 பெறுமதி இலங்கையின் JICA அலுவலகத்தால் அன்பளிப் பாக வழங்கப்பட்டது.

பூங்கனியியல் பயிர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் - பிபிலை

பூங்கனியியல் பயிர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் - பிபிலை யானது 01.04.2003 இல் விவசாயக் கல்லூரி பிபிலை மற்றும் ஆராய்ச்சிப் பண்ணை (HORDI) பிபிலை என்பவற்றை ஒன்றாக இணைத்ததன் மூலம் ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம் மொனராகலை மாவட்டத்தின் பிபிலையில் அமைக்கப்பட்டுள்ளது. (விவசாய சூழலியல் வலயம் IL_2)

நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாவன

- பூங்கனியியல் இலாபகரமான வர்த்தகப் பண்ணையை பராமரித்தலிலும் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தலும்
- புதிய தொழில்நுட்பத்துடன் வேறுப்பட்ட பழப்பயிர்களை உற்பத்தி செய்தல்
- பழப்பயிர்களின் நகல்களைக் (குளோன்களைப்) பாதுகாத்தல்
- அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் மாணவர்கள் போன்றோரிற்கு புதிய தொழில்நுட்ப வகுப்புக்களை வழங்குதல்
- பயிற்சிக்கான விவரணத்துண்டங்களை நிறுவுதலும் பராமரித்தலும்
- புதிய சிபார்சுகளில் வயற் பரிசோதனையை மேற்கொள்ளல்

நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற சேவைக்களின் தரத்தை அதிகரிப்பதற்காக பண்ணை இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றை வழங்கியதனூடாகவும், பண்ணையின் உட்புற வீதி புனரமைப்பூடாகவும், மற்றும் சுற்று வேலி அமைத்ததனூடாகவும் 2012இல் நிறுவனம் பலப்படுத்தப்பட்டது.

2012ம் ஆண்டு காலப் பகுதியில் நிறுவனத்தால் நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் விபரங்கள் பின்வருமாறு

- ஒரு வருட பயிற்சித் திட்டத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களில் 62 உத்தியோகத்தர்கள் (இரு அணி) பயிற்றுவிக்கப்பட்டனர்.

- 20 இலங்கை விவசாய சேவை உத்தியோகத்தர்களிற்கான 5 நாள் பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டது.
- 40 நாற்று மேடை உற்பத்தியாளர்களிற்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்பு நடாத்தப் பட்டது.
- பழப்பயிர்ச் செய்கை தொழில்நுட்பத்தில் 150 பாடசாலை மாணவர்கள் பயிற்றுவிக்கப் பட்டனர்.

மேலும் 12,000 நாற்றுக்களும் 28,000 அரும்பொருட்டுத் தாவரங்களும் உருவாக்கப் பட்டன.

2012ம் ஆண்டு அமுல்ப்படுத்தப்பட்ட பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 16.3 கெக்டர் நிலப்பரப்பில் வேறுபட்ட பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. [(நெல் (7.6 கெக்) மிளகாய் (0.8 கெக்) நிலக்கடலை (1கெக்) வாழை (1கெக்) ரம்புட்டான் (0.6கெக்) கொடித்தோடை (0.6கெக்) அன்னாசி (1கெக்)] தோடை (2கெக்) மா (0.5கெக்) சோயாஅவரை (1.2 கெக்)] அத்துடன் மாவட்ட விவசாயப் பணிப்பாளரினூடாகப் பெறப்பட்ட நிதியின் கீழ் 1.6 கெக்டர் அன்னாசியும் 0.8 கெக்டர் தோடையும் பயிரிடப்பட்டன.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - வீரவில

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் (DATC) வீரவில வானது தாழ் நில உலர் வலயத்தில் அமைந்துள்ளது. (DL_{15} – DL_{16}) இந்நிலைய மானது 1986ம் ஆண்டில் லுமுகம்வெகர மக்கள் குடியேற்ற கருத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப் பட்டது. இந் நிலையமானது விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவின் கீழ் இயங்குவதுடன் இதன் பொறுப்பு விவசாய சமூகத்தினர், மாணவர்கள், அதேபோல் அரச அலுவலர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாகாண விவசாயத் திணைக்களை உத்தியோகத்தர்கள் போன்றவர்களிற்கு விவசாயக் கல்வியை ஊட்டி அதன்மூலம் அவர்களின் அறிவையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதாக அமைகிறது.

2012ம் ஆண்டு காலப்பகுதியில் இந்நிலையமானது 42 விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியளார்களிற்கு ஒரு வருட கால பயிற்சி நெறியினை நடாத்தியது. அத்தோடு விவசாயிகளிற்கான 13 பயிற்சி வகுப்புக்களையும் (285 மனித நாட்கள்) 05 பயிற்சிப் பட்டறைகளையும் (196 மனித நாட்கள்) நடாத்தியது.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - அம்பாறை

2012ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 53 பயிற்சித் திட்டங்கள் (2070 மனித நாட்கள்) மேற்கொள்ளப்பட்டன. இது உத்தியோகத்தர்களிற் கான பயிற்சி 13ஐயும் (714 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான பயிற்சி 17 ஐயும் (430 மனித நாட்கள்) 07 களப் பயிற்சியையும் (653 மனித நாட்கள்) 11 வயல் விஜயத்தையும் (143 மனித நாட்கள்) விசாயிகளிற்கான 05 வெளிப்புறப் பயிற்சியையும் (130 மனித நாட்கள்) கொண்டிருந்தது. கூடவே 18 பயிற்சிப் பட்டறைகள் (529 மனித நாட்கள்) வேறுப்பட்ட விடயங்களில் நடாத்தப்பட்டது.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - பொலநறுவை

பொலநறுவை மாவட்ட விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் விவசாயத் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சித் தேவைகளை இந்நிலையம் பூர்த்தி செய்கிறது. DATC பொலநறுவையின் பண்ணைப் பரப்பளவு 4.5 ஏக்கரிற்கு பரந்துள்ளதுடன் இதில் நெல், மரக்கறி, பழப்பயிர் மற்றும் மறுவயற் பயிர்கள் என்பன மாதிரிப் பயிர்ச் செய்கைகளாக பண்ணையில் செய்கைப் பண்ணப்படுகின்றன. இங்கு வேறுபட்ட பயிர் வர்க்கங்கள் மற்றும் விவசாயத் தொழில் நுட்பங்கள் என்பன பிரயோக ரீதியாக விபரிக்கப்படுகின்றன.

2012ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 56 பயிற்சி வகுப்புகள் (1497 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இவை அலுவலர்களிற்கான 32 பயிற்சி வகுப்புக்களையும் (957 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான 14 பயிற்சி வகுப்புக்களையும் (326 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான 10 வெளிப்புறப் பயிற்சி வகுப்புக்களையும் (214 மனித நாட்கள்) உள்ளடக்குகின்றன.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - பாலமுனை

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் - பாலமுனையானது அலுவலக மற்றும் கற்பித்தல் உதவி உபகரணங்கள் என்பவற்றுடன் UNDP யினால் விவசாயத் திணைக்களத்திடம் 27 செப்டம்பர் 2007 இல் கையளிக்கப்பட்டது.

இப் பயிற்சி நிலையத்தின் நோக்கம் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக விவசாயிகள், தொடர்புபட்ட விவசாய அலுவலர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், சமூர்த்தி அலுவலர்கள் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள் போன்றவர்களிற்கு விவசாய தொழில்நுட்பத்தில் கொள்கை மற்றும் செயல்முறை சார்ந்த விடயங்களை தமிழ் மொழி மூலமான பயிற்சி மூலம் வழங்குதலாகும்.

இந்நிலையத்தின் மொத்த பரப்பளவான 01 ஏக்கரில் இருந்து 0.75 ஏக்கர் பரப்பளவானது விவரணத்துண்டத்திற்காக ஒதுக்கிடப்பட்டிருக் கிறது.

2012ம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தம் 33 பயிற்சி வகுப்புக்கள் (1193 மனித நாட்கள்) நடாத்தப்பட்டன. இது அலுவலர்களிற்கான 10 பயிற்சிகளையும் (316 மனித நாட்கள்) விவசாயிகளிற்கான 12 பயிற்சிகளையும் (401 மனித நாட்கள்) 07 களப் பயிற்சியையும் (228 மனித நாட்கள்) விவசாய இரசாயன முகவர்களிற்கான 02 பயிற்சிகளையும் (191 மனித நாட்கள்) மற்றும் பாடசாலை மாணவர்களிற்கான 02 பயிற்சிகளையும் (57 மனித நாட்கள்) உள்ளடக்கியது.

பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் (WAE)

பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகூற்று 'குடும்ப அலகின் போசணைமட்டம் மற்றும் வாழ்க்கைத் தரம் என்பவற்றை முன்னேற்றுவதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல் என்பதாக இருக்கிறது. இத்திட்டத்தின் நோக்கம் பெண்களை மையப்படுத்திய குடும்பங்களிற்காக சிறந்த குடும்பச் சூழலை ஊக்குவித்தலும் வருமானம் தரும் நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் ஆகும்.

WAE திட்டமானது ஒவ்வொரு விவசாய நிர்வாக மாவட்டத்திலும் உள்ள பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு (விரிவாக்கம்) இணைக்கப்பட்ட பெண்கள் விவசாய விரிவாக்க அலுவலர்கள் மூலம் அடிமட்டத்தில் அமுல்படுத்தப்படுகிறது.

2012ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விரிவாக்க நடவடிக்கைகள்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் 948 மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலர்கள் பெண்கள் விவசாய விரிவாக்கத் திட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்டனர். உணவு மற்றும் போசணை, வியாபார முயற்சியாண்மை அபிவிருத்தி என்பவற்றில் 5104 பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். மேலும் 140 பெண்கள் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டது. 1653 குடியிருப்புக்கள் வீட்டுத் தோட்டம் மற்றும் சமையலறை விருத்தி என்பவற்றினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டன. மூன்று கட்டுரைகள், மூன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், ஓர் வானொலி நிகழ்ச்சி, 65 வயல் விழாக்கள் மற்றும் 16 கல்விச் சுற்றுலாக்கள் என்பன பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. மேலதிகமாக நான்கு கண்காட்சி நிகழ்வுகளில் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டன.

இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய விசேட நடவடிக்கைகளாவன

- உள்ளூர் உணவு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 2012ம் ஆண்டு அநுராதபுர மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பெண்கள் விவசாய வியாபார முயற்சியாண்மையாளர்களின் பங்களிப்புடன் 05 விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டன.
- விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தையொட்டி கன்னொறுவையில் நடாத்தப்பட்ட கண்காட்சியில் கண்டி மாவட்ட பெண்கள் விவசாய வியாபார முயற்சியாண்மையாளர்களால் புதிய அணுகுமுறைகளினூடாக உடன் பழங்கள், மரக்கறிகள், மற்றும் இலை மரக்கறிகள் என்பவற்றின் நுகர்வைக் கூட்டும் நோக்கோடு 02 விற்பனைக்கூடங்கள் அமைக்கப்பட்டன.
- 29 வியாபார முயற்சியாண்மையாளர்கள் வெற்றிகரமாக பயிற்றவிக்கப்பட்டதுடன் அவர்களது உள்ளூர் உணவு உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் விவசாய தொழில் நுட்பப் பூங்கா கன்னொறுவையின் "கெலபோஜன் அலவி பியச" வில் வழங்கப்பட்டது.
- உலக உணவுத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் (யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்) அறுவடைக்குப் பின்னரான உதவிக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம், வருவாய் உருவாக்கம் மற்றும் குடும்பத்திற்கான போசணை என்பவற்றில் பண்ணைப் பெண்கள் குழுக்களிற்கு ஆதரவளிப்பதாகும்.
    - இக்கருத்திட்டத்தின் கீழ் அறுவடைக்குப் பின்னரான கையாளுதல் மற்றும் அரிசி சார் உற்பத்திகள் என்பவற்றில் 30 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
    - அறுவடைக்குப் பின்னரான தொழில் நுட்பத்தில் விசேடமாக அரிசி சார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியில் 885 பண்ணைப் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
    - நடமாடும் உணவு விவரணப் பிரிவாக ஓர் சிறிய கப்வாகனம் உருவாக்கம் செய்யப்பட்டது.
    - வேறுபட்ட உணவுப் பண்டங்களைக் உள்ளடக்கியதான அரிசி சார் உணவு உற்பத்திகள் எனும் பயிற்சி கையேடு தயாரிக்கப்பட்டது.

விவசாய வியாபார முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும் தகவல் சேவை (AgEDIS)

பொருத்தப்பாடான தொழில்நுட்ப ஆதரவினை வழங்குவதன் மூலம் விவசாயத் திணைக்களத்தின் வேலை வரையறை அமைப்புக்கு உட்பட்டு விவசாயம் சார் வியாபார நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கான உதவிகளை வழங்குவதே விவசாய வியாபார அபிவிருத்தி மற்றும் தகவல் சேவையின் பிரதான கடமையாகும். தற்போது இந்நிறுவனம் அதனை செய்வதற்கு பின்வரும் வழிகளில் பங்களிப்புச் செய்கிறது.

- சாத்தியமான வியாபார முய்றசியாண்மையாளர்களிற்காக விவசாய வியாபாரம் சார்பாக குறுகிய கால விழிப்பூட்டல் மற்றும் திறன்விருத்திப் பயிற்சி நிகழ்வுகளை மேற்கொள்ளல்
- விவசாயச் சொத்துடமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்றோரிற்கான நேரடிப் பண்ணைத் தொழில்நுட்ப ஆலோசனைகளை வல்லுநர் குழு மூலம் வழங்குதல்
- வியாபார முய்றசியாண்மையாளர்களிற்கு தேவைப்படுமிடத்து தொழில்நுட்பத் தகவல்களையும் தரவுகளையும் வழங்குவ துடன் தொடர்புடைய பங்காளர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

- விவசாயிகளிற்கு நம்பிக்கைக்குரிய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விவசாயத் திணைக்களத் தின் தொழில்நுட்ப கூட்டிணைப்பை பெறுகின்ற "குருசி சேவா பியச" என அழைக்கப்படுகின்ற விவசாய சேவை நிலையங்களை நிறுவுதல்

- FOATCP 3302 பரீட்சார்த்தக் கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளுடன் "பண்ணை வியாபாரப் பாடசாலை" (FBS) அணுகுமுறை மற்றும் தொடர்புடைய பயிற்சி வகுப்புகள் என்பவற்றை மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளின் வியாபார முயற்சியாண்மைத் திறனை விருத்தி செய்வதற்கு மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலர்களிற்கு ஆதரவுவளித்தல்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் பிரிவின் அடைவுகள் பின்வருமாறு

- விவசாய வியாபாரம் தொடர்பான 10 பயிற்சி வகுப்புக்கள் 176 பயனாளிகளிற்கு மேற்கொள்ளப்பட்டது.

- நேரடிப் பண்ணைத் தொழில்நுட்ப ஆலோசனை சேவை வழங்கலின் கீழ் ஒகஸ்தவத்தை, தொடங்கொல்ல மற்றும் தங்கொட்டுவ ஆகிய இடங்களைச் சேர்ந்த இரண்டு சொத்துடமையாளர்கள் 17 ஏக்கர் விவசாயச் சொத்தினை அபிவிருத்தி செய்வதற்காக சேவை வழங்கப் பட்டார்கள். மேலும் 35 விவசாயிகளின் பங்களிப்புடன் கொடயன, சியம்பலண்டு ஆகிய இடங்களில் செய்முறை விவரணம் மேற்கொள்ளப்பட்டது.

- குளியாப்பிட்டிய புத்தளை, அயகம, கல்மிலவெவ, பலாங்கொடை, மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களில் ஆறு புதிய விவசாய சேவை நிலையங்கள் நிறுவனப்பட்டன. அதேபோல் அடிப்படை விவசாய வியாபார முகாமைத்துவத்தில் விவசாய சேவைகள் நிலையங்களின் 22 முகாமையாளர்களிற்கு 5 நாள் விசேட தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்பட்டது.

- பண்ணை வியாபார பாடசாலை (FBS) இல் முதுநிலைப் பயிற்றுநர்களாக 10 மாவட்டங்களில் இருந்து நூற்று எட்டு விரிவாக்க அலுவலர்கள் பயிறறுவிக்கப்பட்டார்கள். பயிற்றுவிக்கப்பட்ட இவ் அலுவலர்கள் தங்களுடைய மாவட்டங்களில் 2012 சிறு போகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விசாயிகள் குழுக்களிற்கு FBS பயிற்சியை மேற்கொண்டு வருகிறார்கள்.

தேனீ அபிவிருத்தி அலகு – பிந்துனுவெவ, பண்டாரவளை

தேனீ அபிவிருத்தி அலகானது விவசாயிகளி டையே தேனீ வளர்ப்பை அபிவிருத்தி செய்தவற்கும் விரிவாக்கம் செய்வதற்கும் பொறுப்பாக இருக்கின்றது. நவீன தேனீ வளர்ப்பு தொழில்நுட்பங்களைப் பரம்பலடையச் செய்யும் பொருட்டு இவ் அலகினால் பின்வரும் வசதிகள் வழங்கப்படுகின்றன.

- விவசாயிகள், அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் போன்றோரைப் பயிற்றுவித்தல்

- தேனீ வளர்ப்பு உபகரணங்களை உற்பத்தி செய்தல்

- தேனீ வளர்ப்பு உபகரணங்களை உற்பத்தி செய்வோரைப் பயிற்றுவித்தலும் அத்தாட்சிப்ப டுத்தலும்

- தேனீ வளர்ப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்கு தொழில்டநுட்ப ஆதரவை வழங்குதல்

- ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்ளல்

கடந்த ஆண்டு மீள்பார்வையில் அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோரிற்காக 23 பயிற்சி வகுப்புகள் தேனீ வளர்ப்பில் மேற்கொள்ளப்

பட்டது. அத்துடன் தேனீ வளர்ப்பு உபகரணங்கள் உற்பத்தி செய்தலிலும் இரண்டு பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன.

மேலும் இவ்வலகானது 450 கி.கி தேன் 240 தேனீக் குடித்தொகைகள், 486 தேனீ வளர்ப்புப் பெட்டிகள், 280 புகையூட்டிகள், 352 அடைகாக்கும் சட்டங்கள் 265 தேனீ சட்டங்கள், மற்றும் 2991 ராணிப் பாதுகாப்புச் கவசம் என்பவற்றை உற்பத்தி செய்தது. 7000 வரையான தேனீ வளர்ப்பு உபகரணங்கள் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுடன் வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் நிலையத்திற்கு வெளியே ஆறு பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டது. மேலும் இதன் பங்களிப்பானது மூன்று கண்காட்சிகளான ''தேசத்திற்கு மகுடம்'', "விவசாயிகள் வாரம்" மற்றும் ''விவசாயத் திணைக்கள நூற்றாண்டு விழா'' என்பவற்றிற்கும் வழங்கப்பட்டது.

தேனீ வளர்ப்பில் 20 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளது. நிலையத்திற்கு வெளியே வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் ஆறு பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இவ் அலகினால் கடந்த ஆண்டில் நிறை வேற்றப்பட்ட ஏனைய நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

தேனீ வளர்ப்பில் ஒன்பது மாதிரிக் கிராமங்கள் பராமரிக்கப்படுகின்றன.

இளம் விவசாயிகள் கழகம் (YFC)

இளம் விவசாயிகள் கழகம் என்பது இளம் விவசாயிகள் கழகங்களின் இயக்கத்தின் கிராம மட்டத்திலான நிறுவனமாகும். இளம் விவசாயிகள் கழக இயக்கத்தின் ஏனைய உறுப்புக்கள் மாவட்ட மட்ட ஆரம்ப ஆலோசனைக் குழு, மாகாண மட்ட ஆலோசனைக் குழு மற்றும் தேசிய மட்ட சம்மேளம் என்பனவாகும்.

அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இக்குழுக்க ளால் பொருத்தப்படான நடவடிக்கைகள் வேறுபட்ட மட்டங்களில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அண்ணளவாக ஆயிரம் வரையிலான இளம் விவசாயிகள் கழகங்கள் உருவாக்கப்பட்டதுடன் அவற்றுள் மூன்றில் ஒரு பங்கானவை தலைமைப்பீட அலுவலகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

2012ம் ஆண்டு காலப்பகுதியில் விவசாய விரிவாக்கத்திற்காக இளம் விவசாய சந்ததியின் பங்களிப்பை உருவாக்குவதற்கு நாடளாவிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அலுவலர்களிற்கான 15 பயிற்சி வகுப்புக்களும் இளம் விவசாயிகள் கழக அங்கத்தவர்களிற்காக 82 பயிற்சி வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. மேலும் 105 கலாசார நிகழ்வுகள், 95 சமய நிகழ்வுகள், 35 கல்வி நிகழ்வுகள் மற்றும் 32 சமூக நிகழ்வுகள் என்பன நடாத்தப்பட்டன. மேலும், பிராதானமாக இளம் விவசாயிகளிற்காக நடாத்தப்பட்ட 25 வானொலி வினாவிடைப் போட்டிக்கான வசதிகள் வழங்கப்பட்டன.

நீர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பான விவசாய அலகு

நீர் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பான விவசாய அலகானது விவசாயத்திணைக்களத்தின் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இலங்கை யின் விவசாய சமூகத்தினர் ஆகியோருக்காக பின்வரும் விடயங்களில் தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பரம்பல் போன்றவற்றைக் கையாள்கிறது.

- நீர்ப்பாசனமும் நீர்ப்பாசன முகாமைத்துவமும்
- நுண் நீர்ப்பாசன முகாமைத்துவமும் பசளைப் பாவனையும்
- சூழல் கட்டுப்பாட்டு விவசாயம் (பாதுகாப்பான விவசாயம் : பொலித்தீன் கூடாரம், மழைப் பாதுகாப்புக் இல்லங்கள், வலை இல்லங்கள்)
- ஆண்டுக்குரிய மற்றும் பல்லாண்டுக்குரிய வர்த்தகப் பண்ணைகள் (வர்த்தகப் பண்ணைகளின் உயர் திட்டமிடல்)
- உயர் நாற்று மேடை முகாமைத்துவம்

சிறிய மற்றும் பெரிய அளவிலான பண்ணை களின் ஸ்தாபனைக்காக தேவைப்படுகின்ற தொழில்நுட்ப அறிவுகளைப் பரப்புவதும் இந்த அலகின் ஓர் பிரதான கடப்பாடு ஆகும். மேலும் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பான விவசாயம் என்பவற்றில் தொழில்நுட்ப ஆதரவும் வழங்கப்படுகின்றது. மேலும், இவ்வாண்டில் ஓர் பொலித்தீன் வலை இல்லமும் வடிவமைக்கப் பட்டது. 2006 – 2011 ஆண்டு காலப்பகுதியில் இவ்வலகினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங் களின் முன்னேற்றம் பற்றி கண்டறிவதற்காக ஓர் புள்ளிவிபரச் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

2012ம் ஆண்டுக்கான அடைவுகள் பின்வருமாறு

- அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரிற்காக நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பான விவசாயம் என்பவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது.
- விசேட கருத்திட்ட நிதி ஒதுக்கீடு ரூபா 2.8 மில்லியன் ஆக இருந்ததுடன் இவ்வாண்டில் 100% ஆன செலவீடு மேற்கொள்ளப்பட்டது. இத்தொகையானது பிரதானமாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளிற்கு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகளை பகிர்ந்தளிப்பதற் காக செலவிடப்பட்டது.
- வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு இல்லப் பயிர்ச் செய்கைக்கான பொருத்தப் பாடான தொழில்நுட்ப ஆதரவு (வடிவமைப்பு மற்றும் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள்) வழங்கப்பட்டது.
- விவசாயிகள் மற்றும் எல்லா மாவட்டங் களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட அலுவலகர்களிற்கு மழைப் பாதுகாப்பு இல்லப் பயிர்ச் செய்கை என்பதில் பயிற்சி வகுப்பு மேற்கொள்ளப் பட்டது.

திட்டமிடல் மற்றும் முன்னேற்றக் கண்காணிப்பு அலகு

திட்டமிடல் மற்றும் முன்னேற்றக் கண்காணிப்பு அலகானது நிதி மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் மற்றும் விரிவாக்கமும் பயிற்சியும் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட கருத்திட்டங்களினதும் செயல் திட்டங்களைத் தயாரித்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றில் கருத்தூன்றுகிறது. இவ் அலகானது வருட அமுல்படுத்தல் திட்டங்களிற்கான குறிப்பிடப்படும் இலக்குகளைத் தயாரிப்பதிலும் விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தச் செயற்பாட்டு அறிக்கை, மத்திய வங்கி அறிக்கை, மற்றும் பாதீட்டு உரை என்பவற்றிற்கான தகவல்களை வழங்குவதிலும் மற்றும் தொடர்புடைய முகவர்களிற்கு தகவல்களைப் பரப்புவதிலும் ஈடுபடுகிறது.

விவசாயக் கல்வி

ஐந்து இலங்கை விவசாயப் பாடசாலைகள் குண்டசாலை, பல்வெகர, அங்குணுகொலபலச, வவுனியா மற்றும் கரப்பிஞ்ச ஆகிய இடங்களில் இரண்டு வருட விவசாய டிப்ளோமா பயிற்சியை வழங்கி வருகின்றன. லபுதுவ, வாரியபொல, மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் உள்ள விவசாயப் பாடசாலைகள், விசேட பயிற்சி நிலையங்களாக இருந்து வருவதுடன் விவசாயத்தில் குறுகிய காலப் பயிற்சிகளையும் வழங்குகின்றன. 2012ம் ஆண்டு காலப்பகுதியில் 202 மாணவர்கள் விவசாயப் பாடசாலைகளில் இருந்து சித்திபெற்று வெளியேறினர்.

2012ம் ஆண்டில் வேறுப்பட்ட விவசாயப் பாடசாலைகளில் கல்விகற்ற மாணவர்களின் எண்ணிக்கை அட்டவணையில் தரப்படுகிறது.

அட்டவணை 3.1.7: விவசாயப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை -2012

விவசாயப் பாடசாலைகள்	வருடம்	மொழி மூலம்						தொகை	கூட்டுத் தொகை
		சிங்களம்		தமிழ்		ஆங்கிலம்			
		ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்		
குண்டசாலை	1ம்	31	33	9	10	09	17	109	215
	2ம்	45	20	6	10	13	12	106	
அங்குணுகொலபலச	1ம்	31	21					52	89
	2ம்	26	11					37	
பெல்வெகர	1ம்	39	15					54	97
	2ம்	34	09					43	
வவுனியா	1ம்			15	15			30	60
	2ம்			23	07			30	
கரப்பிஞ்ச	1ம்	24						24	24
	2ம்								
மொத்தம்		**230**	**109**	**53**	**42**	**22**	**19**	**485**	**485**

விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிற்கான (ARPA) ஓராண்டு செய்முறை விவசாயப் பயிற்சி நெறி

இப்பயிற்சி நெறியின் இலக்குக்குழு கமநல சேவைகள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களாகும். இப்பயிற்சி நெறியானது 2005ம் ஆண்டு எட்டுப் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அனைத்து விவசாய உற்பத்தி உதவியாளர்களும் ஆராய்ச்சிப் பயிற்சியினை முடிக்கும் வரை தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகிறது. 676 நபர்களைக் கொண்டிருந்த முதலாவது குழு பயிற்சியினை 2006இல் நிறைவு செய்தது. 246 பேரைக் கொண்ட இரண்டாவது குழு 2008 இலும் 278 பேரைக் கொண்ட மூன்றாவது குழு 2011 இலும் பயிற்சியை நிறைவு செய்தன. 2011 / 2013 இல் பயிற்றுவிக்கப்பட்ட ARPA களின் விபரம் கீழே தரப்படுகிறது.

அட்டவணை 3.1.8 2011 / 2012 இல் மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டத்தின் முன்னேற்றம்

பயிற்சி நிலையங்கள்	பயிற்றப்பட்ட ARPAஇன் எண்ணிக்கை		மொத்த எண்ணிக்கை
	அணி I	அணி II	
	2011 / 1	2012/11	
விவசாயப் பாடசாலை, அநுராதபுரம்	18	-	18
விவசாயப் பாடசாலை, வாரியபொல	25	-	25
விவசாயப் பாடசாலை, லபுதுவ	13	24	37
மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், வீரவில	22	20	42
பூங்கனியியல் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் பிபில	39	24	63
மொத்தம்	**117**	**68**	**185**

பரீட்சை அலகு

விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தின் பரீட்சை அலகினால் 2012ம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு

- இரண்டு வருட டிப்ளோமா பயிற்சி நெறிக்காக விவசாயப் பாடசாலைகளிற்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் அறுபது உத்தியோகத்தர்களும் பாடசாலை விட்டு விலகிய 1744 மாணவர்களும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.
- மேலும் விவசாயப் பாடசாலைகளின் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறிக்காக 281 முதலாம் வருட மாணவர்களும், 204 இரண்டாம் வருட மாணவர்களும் முதலாம் மற்றும் இரண்டாம் வருடப் பரீட்சைகளிற்கு முறையே தோற்றியிருந்தார்கள்
- விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிற்கான இறுதிப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் இப்பரீட்சைக்கு 138 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தார்கள்
- மேலும் 1055 விவசாயத் திணைக்கள அலுவலர்களிற்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டது.

சேதன விவசாயம் மற்றும் பயிர்ப் போசணை அலகு

இந்த அலகின் குறிக்கோள் சூழல் நேயமான விவசாயத்தை நாட்டில் பிரபல்யம் அடையச் செய்வதாகும். பின்வரும் மூன்று கருத்திட்டங்கள் 2013ம் ஆண்டில் இவ்வலகின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

1. ANSOFT (நிலைபேறான சேதனப் பண்ணைத் தொழில்நுட்பத்திற்கான ஆசிய வலையமைப்பு)
2. சமூக மட்டத்திலான விதை உற்பத்திக் கருத்திட்டம்
3. நெல் ஏற்றுமதி வலயக் கருத்திட்டம்

மேலும் இவ் அலகின் உத்தியோகத்தர்கள் சேவைக் காலப் பயிற்சி நிலையம் மற்றும் ஏனைய நிறுவனங்களிலும் விவசாயிகள் மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பயிற்சிகளிற்கு வளவாளர்களாக பங்குபற்றினார்கள்.

அத்தோடு சேதனப் பண்ணைக்குப் பொருத்தப்பாடான தொழில் நுட்பத்தை பரம்பலடையச் செய்யும் பார்வையில் விவசாயத்திணைக்களத்தின் நூற்றாண்டு விழாக் கண்காட்சியில் ஓர் சேதனப் பண்ணைக் கூடாரம் அமைக்கப்பட்டது.

2013ம் ஆண்டிற்கான திட்டம்

விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

விரிவாக்கம் மற்றும் பயிற்சி பிரிவால் 2013ம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சிகள் அமுல்ப்படுத்தப்படும்

- ஆறு மாகாண இடைப் பிரதேசங்களில் விவசாய விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம்

2013ம் ஆண்டுக்கான கருத்தூன்றலானது நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாகாண இடைப் பிரதேசங்களில் பயிரிடப்படும் பிரதான பயிரான நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாக அமையும். இவ் இலக்கை அடைவதற்காக பெரிய நீர்ப்பாசனம் சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி நிலங்கள் என்பவற்றின் கீழ் பயிர்ச் செய்கை காலத்தில் தொழில்நுட்ப நடவடிக்கைகள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகள் என்பவை அமுல்ப்படுத்தப்படும்

சமூக மட்டத்தில் தரமான விதை நெல்லை உற்பத்தி செய்வது என்பதும் இந்தளவில் ஓர் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியவிடயமாகும்.

இறக்குமதியைக் குறைப்பதற்கும் அன்னிய செலாவணியை சேமிப்பதற்கும் ஓர் தீர்வாக போகத்திற்குப் புறம்பான மூன்றாம் பருவ பயிர்ச்

செய்கையாக மறுவயற்பயிர்களின் பயிர்ச் செய்கை விதைந்துரைக்கப்படும். பரப்பளவு, உற்பத்தி, மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிக்கவும் தரமான விதைகளை உற்பத்தி செய்யவும் ஏதுவாக விரிவாக்க நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படும்.

பழமரங்களைப் புத்துயிர் அளித்தல் திட்டத்தின் மூலமும் விவசாயச் சூழலியல் வலயங்களுக்குப் பொருத்தமான பழப்பயிர் வர்க்கங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமாகவும் பழங்களின் உற்பத்தி அதிகரிக்கப்படும். மாகாண இடைப் பிரதேச ரீதியாக பொருத்தமான முறையில் மரக்கறி உற்பத்தியும் அதிகரிக்கப்படும்.

ஒவ்வொரு மாகாண இடைப் பிரதேசத்தின் முயற்சியினூடாகவும் மொத்தப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சி திட்டமானது சந்தைப்படுத்தலுடன் (உள்ளூர் மற்றும் ஏற்றுமதி) தொடர்புபடுத்தப் படும்.

விவசாய திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்களைப் பரம்பலடையச் செய்வதற்கு கமநல சேவைகள் நிலையங்களின் அதிகாரப் பிரதேசங்களில் தொழில் நுட்பக் கைக்கொள்ளுகை வலயங்களை (TAZ) நிறுவுதல். தாங்கள் பணிபுரியும் பிரதேசத்தில் பொருத்தப்பாடான ஆராய்ச்சி அலுவலர்களின் கூட்டிணைவுடன் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர்களும் இதை (TAZ) நிறுவ வேண்டியவர்ளாக இருப்பார்கள். இரண்டு பயிர்ச் செய்கைப் போகங்களிற்காக ஓர் TAZ ஐ அபிவிருத்தி செய்வது இலக்காக இருக்கிறது. ஆனால் நேரவரையறை தொழில்நுட்பத்துடன் வேறுபடும். உதாரணமாக மண் பாதுகாப்பு முறைகள், பழப்பயிர் ஒன்றின் கத்தரித்தல் என்பனவாகும். இது பயிராக்கவியல் ஆராயச்சியாளர்களிற்கு மட்டுமான அடிப்படை யாக அமையாது சமுகப் பொருளாதார ஆய்வாரள்கள், மற்றும் விவசாய விரிவாக்க ஆய்வாளர்களிற்கானதாகவும் அமையும். TAZ இன் கண்டுபிடிப்புகள் சமூகத்தின் பொருத்தப்பாடு மற்றும் இலாபமீட்டல் போன்ற விடயங்களின் அடிப்படையில் தொழில்நுட்பங்களை மீள் சீராக்கம் செய்வதற்கு பயன்படுத்தப்பட முடியும் என்பது மற்றுமொரு முககிய விடயமாக உள்ளது.

விவசாயப் பாடசாலைகளில் (SOA) விவசாயப் பாட நிகழ்ச்சித் திட்டம்

குண்டசாலை, பல்வெகரஈ வவுனியா, அங்குணுகொலபலச, கரப்பிஞ்ச ஆகிய ஐந்து விவசாயப் பாடசாலைகளில் இரண்டு டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ளல் அண்ணளவாக 250 டிப்ளோமாதாரிகள் வெளியேறுவதுடன் புதிய அணியும் 2013 இல் பயிற்சிக்காக உள்ளீர்க்கப்படும்

- 2013ம் ஆண்டு காலப்பகுதியில் லபுதுவ, வாரியப்பொல, பிபில, வீரவில, அநுராதபுரம் ஆகிய விசேட பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒருவருடப் பயிற்சி நெறியினைப் பின்பற்றுகின்ற விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களில் அண்ணளவாக 45 பயிலுனர்கள் இறுதிப்ப ரீட்சைக்குத் தோற்றுவார்கள். இரண்டு வருட டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பொருத்தப்படான உள்ளீர்ப்பினை விருத்தி செய்யும் பொருட்டு விசேட பயிற்சி நிலையங்களான லபுதுவ, வாரியப்பொல, பிபில, வீரவில மற்றும் அநுராதபுரம் ஆகியவற்றில் இளைஞர் யுவதிகளை உயர் விவசாயத் தொழில்நுட்பத்தில் பயிற்றுவிப்பதன் பொருட்டு NVQ மட்டம் 3 மற்றும் மட்டம் 4 என்பவற்றுடனான ஒரு வருட விவசாய சான்றிதழ் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கு (Agriculture Certificate Course) திட்டமிடப்பட்டுள்ளது.
- அலுவலர்கள் மற்றும் விவசாயிகளிற்கு மூன்று சேவைக் காலப் பயிற்சி நிலையங்கள், நான்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையங்கள், பண்ணை இயந்திரமயமாக்கற் பயிற்சி நிலையம், மற்றும் தேனீ வளர்ப்பு அபிவிருத்தி அலகு

என்பவற்றில் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.

பின்வரும் பரீட்சைகளை 2013ம் ஆண்டுக்கான பரீட்சை நாட்காட்டிக்கமைவாக நடாத்துதல்

- இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியின் பரீட்சை
- ARPA களின் ஒரு வருட பயிற்சி நிகழ்ச்சியின் பரீட்சை
- விவசாயத் திணைக்கள அலுவலர்களின் திணைக்களப் பரீட்சை
- விவசாயப் பாடசாலைகளிற்கு பயிலுநர் களை உள்ளீர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை
- விவசாயத் திணைக்கள அலுவலர்களிற் கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை
- விவசாயப் பாடசாலைகளிற்கு தெரிவு செய்யப்படுகின்ற அரச அலுவலர்களிற் கான புலமைப் பரீசில்களை வழங்குவதற்கான பரீட்சை

- இளம் விவசாயிகள் கழகத்தினருக்கான வினாவிடைப் போட்டி நிகழ்ச்சி மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை நடாத்துதல்
- பெண்கள் விவசாய விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம்
  - விவசாயத் திணைக்கள உத்தியோகத்த ர்கள் மற்றும் விற்பனை நிலையங்களிற்கான புதிய வியாபார முயற்சியாண்மையாளர்கள் என்போரிற்கு கன்னொறுவை தொழில் நுட்பப் பூங்காவில் பயிற்சி
  - நடமாடும் உணவு விவரண அலகின் உள்ளூர் வயல் உணவுகளின் விவரணம்
  - கையேடுகள், மடிதாள் (Filp chart) போன்ற கற்பித்தல் உதவிப் பொருட்களின் தயாரிப்பு
  - வருமானம் ஈட்டல் மற்றும் வியாபார முயற்சியாண்மை அபிவிருத்தி என்பவற்றில் உணவு ஆராய்ச்சிப் பிரிவுடன் கூட்டிணைந்த கருத்திட்டம்
  - வானொலி நிகழ்ச்சி, தொலைகாட்சி நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி என்பவற்றினூடான தொழிழ்நுட்பப் பரம்பல்

- விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சி
  - 200 வியாபார முயற்சியாளர்களிற்கான 10 விவசாய வியாபாரம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் திறன் விருத்திக்கான குறுகிய காலப் பயிற்சிகளை மேற்கொள்ளல்
  - 10 விவசாய விற்பனை நிலையங்களை ஸ்தாபித்தல்
  - FAO வினால் நிதியளிப்புச் செய்யப்படும் விசேட கருத்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் பண்ணை வியாபாரப் பாடசாலை (FBS) திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக விரிவாக்க அலுவலர்களிற்கு நிர்வாக ரீதியான ஆதாரம் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
  - FAO கருத்திட்டத்தின் கீழ் பயிர்த் தலைவர் மற்றும் நுகர்வோர் என்பவர்களிற்கு இடையிலான சந்தைப்படுத்தல் தொடர்பை வலுப்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ள கருவியாக அமையக்கூடியதாக ஒர் விவசாயிகளின் தகவல் வலயமைப்பை உருவாக்குதலும் நிர்வகித்தலும்.
  - மழைப் பாதுகாப்புக் இல்லங்களில் பாதுகாப்பான விவசாயம் மற்றும் நுண் நீர்ப்பாசனம் என்பவற்றில் பயிற்சியினை

நுண் நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்பான விவசாயப் பிரிவு மேற்கொள்ளல்

நுண் நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்பான விவசாயம் என்பவற்றில் தேசிய மட்டக் குழுவின் நடவடிக்கைகள்

- நாட்டில் சூழல் நேய விவசாயத்தை பிரபல்யப்படுத்துவதற்கு விவசாய விரிவாக்க நிகழ்ச்சியை மேற்கொள்ளல்

2013ம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட விசேட கருத்திட்டம்

- சேவைக் காலப் பயிற்சி நிறுவனம், விவசாயப் பாடசாலைகள் பண்ணை இயந்திரமயமாக்கல் நிலையம், மற்றும் தேனீ வளர்ப்பு அபிவிருத்தி அலகு என்பவற்றில் நிலஅபிவிருத்தி நடவடிக்கைகள்
- விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவின் அலுவலர்களிற்கான பயிற்சி மற்றும் திறன் விருத்தி
- பல்வெகர விவசாயப் பாடசாலையில் புதிய மாணவர் விடுதி நிர்மாணித்தல்
- சேவைக் காலப் பயிற்சி நிறுவனம், கன்னொருவையில் ஓர் மலசலகூடத் தொகுதி நிர்மாணித்தல்
- தேர்ச்சி மிகு தொழில் வல்லுநர்களை உருவாக்கும் பொருட்டு விவசாயப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்

அலுவலர் மட்டியல்

பதவி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
மேலதிக பணிப்பாளர்	02
பிரதிப் பணிப்பாளர்	08
உதவிப் பணிப்பாளர்	39
விவசாய உத்தியோகத்தர்	07
விரிவுரையாளர்	44
விடயதான வல்லுனர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	14
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	26
பட்டதாரிப் பயிலுநர்	05
விவசாயப் போதனாசிரியர்	233
ஆராய்ச்சி உதவியாளர்	02
பண்ணை இயந்திர போதனாசிரியர்	01
தொழில்நுட்ப அலுவலர்	01
வாகன திருத்துநர்	01
தேனீ வளர்ப்பாளர்	05
ஒட்டு வேலையாளர்	04
தச்சு வேலையாளர்	04
இயந்திரப் பராமரிப்பாளர்	02
இயந்திர இயக்குனர்	03
நிர்வாக உத்தியோகத்தர்	02
முகாமைத்துவ உதவியாளர்	94
மொழிப் பெயர்ப்பாளர் (ஆங்கிலம்)	01
களஞ்சிய உதவியாளர்	09
பண்ணை எழுதுநர்	03
அலுவலக உதவியாளர்	11
கால்நடை மேற்பார்வையாளர்	03
சமையற்காரர்	18
காவலாளி	73
சுத்திகரிப்பு தொழிலாளர்	08
சாரதி	35
பாரவூர்தி காப்பாளர்	01
புல்வெட்டி இயக்குனர்	11
நீர்ப்பம்பி இயக்குனர்	01
தொழிலாளர்	187
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	02
அச்சுக் கோர்வையாளர்	01
ஒப்பந்தத் தொழிலாளர்	189
மொத்தம் **1052**	

3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் (ICC), பேராதனை

தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்தின் தொலை நோக்கு யாதெனில் தேசிய வெற்றிக்கு சிறப்பான விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எய்துவதாகும்.

இந்நிலையத்தின் பணிக்கூற்று யாதெனில் விவசாயத்தில் உணவுப் பயிர்ப் பகுதியை வினைத்திறனாகவும் செய்திறனாகவும் மாற்று வதற்கும் விவசாயத் திணைக்களத்தினை இலகுவாக நெருங்குவதற்கும், பெருமளவு பிரஜைகளை மையமாகக் கொண்ட அரசாங்கத்தினை உருவாக்குவதற்கும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களுக்கு இசைவாக்கமடைதலாகும்.

தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் புதிதாக 1ம் திகதி மார்ச் மாதம் 2012ம் ஆண்டு பிரத்தியேகப் பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. இந்நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் தொழிற்பாடுகள் இந்நிலையத்தின் இலக்கு களையும் நோக்கங்களையும் கொண்டமை ந்துள்ளது. அவையாவன, இந்நிலையத்தின் கீழ் தொழிற்படும் ஐந்து அலகுகளின் ஊடாக தகவல்களை சேகரித்தல், முகாமைத்துவம் செய்தல் இலத்திரனியல், பிரசுரிப்பு மூலம் தகவலை பரப்புதலுமாகும். இந்நிலையத்தின் கீழ் உள்வாங்கப்படும் அலகுகளாவன பண்ணை ஒலிபரப்பு நிலையம், கட்புல செவிப்புல நிலையம், விவசாய பிரசுரிப்பு நிலையம், கன்னொறுவையில் உள்ள விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் பத்தாத்தையில் அமைந்துள்ள விவசாயத் தொழில்நுட்பம் பூங்கா என்பனவாகும்.

அரச கொள்கையான மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் பிரகாரம் விவசாய தகவல்கள் பரிமாற்றப்படுவதற்காக கன்னொறு வையில் தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இக்கட்டட நிர்மாணிப்பானது மூன்று வருடங்களை உள்ளடக்கிய செயற்திட்டம். இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவு 325 மில்லியன் ரூபாய்கள் ஆகும். ஏற்கனவே அமைச்சரவையினால் 550 கமநல சேவைகள் நிலையங்களுக்கிடையில் விவசாய தகவல் வலையமைப்பினை ஸ்தாபிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செயற்திட்டமானது ஓர் ஒழுங்கான முறையில் விவசாயிகளின் உற்பத்தி சம்பந்தமான தகவல் திரட்டுக்களை பேணும். இதனால் சந்தைப்படுத்தலை பிரச்சினையாக எதிர் கொள்ளும் விவசாயிகளுக்கு சிறந்ததொரு தீர்வாக அமையும் இத்தகவல் திரட்டானது பின்வருவனவற்றை வழங்கும்.

1. விவசாயிகளையும் உள்ளூர் மற்றும் வெளியூர் மொத்த கொள்வனவாளர் களையும் இணைக்கும் பொறி முறையைக் கொண்டது.
2. வழங்குனர்களுக்கு அவர்களுடைய மூலப் பொருள் சம்பந்தமான தேவைகள் பற்றிய தகவல்களை வழங்கும்
3. பயிர்கள் பற்றிய எதிர்வுகூறல்களுக்கு வேண்டிய தகவல்களை வழங்கும். இதனால் நாட்டின் தேவையை தற்போது கிடைக்கும் அளவினை அறிந்து கொண்டு எதிர்வுகூறல் களை மேற்கொள்ள முடியும்.

பாதீடு

வெவ்வேறு செலவுத்தலைப்புகளின் கீழ் இடம் பெறும் ஒதுக்கீடுகளும் செலவினங்களும் அட்டவணை 3.2.1 ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2.1: வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	6,920,372	6,013,831	87
மீண்டுவரும் செலவினம்	19,403,000	18,539,000	96
செயற் திட்டங்கள்	24,285,266	24,263,600	99
ஊடக நிகழ்ச்சிகள்	4,500,000	3,867,294	85
பூங்கா	15,000,000	15,000,000	100
தேசத்தின் மகுடம் 2012	1,760,000	1,735,580	98
பயிர் எதிர்வு கூறல்	20,755,000	20,721,752	99
திவிநெகும	2,500,000	2,210,621	88
AFACI			
மொத்தம்	**95,123,638**	**92,357,948**	**97**

கட்புல செவிப்புல நிலையம்

இது தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்தின் கீழ் கொண்டுவரப்படும் விவசாயத் திணைக்களத்தின் பிரதான தகவல் மற்றும் தொடர்பாடல் அலகு. இவ்வலகின் பிரதான கடமைப்பாடு யாதெனில் விவசாயத் திணைக்களத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். ஆகவே இந்நிலையம் பல்வேறுபட்ட அறிவுறுத்தல் ஆதாரங்களைத் தயாரிப்பதுடன் இலங்கையின் விவசாய அபிவிருத்திக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களையும் நடைமுறைப்படுத்துகின்றது.

பின்வரும் செயற்பாடுகள் இந்நிலையத்தினால் முன்னெடுக்கப்படுகின்றது.

- கிழமைக்கு இரண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குகின்றது. ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு தேசிய தொலைகாட்சியில் "கொவிபிமட்ட அருணலு" என்ற நிகழ்ச்சியையும் வெள்ளிக் கிழமைகளில் மாலை 6.15 மணிக்கு "மிஹிகத டினுவோ" என்ற நிகழ்ச்சியையும் வழங்கி வருகின்றது.
- விவசாயப் பிரசுரங்கள், கையேடுகள், சுவரொட்டிகள், பதாதைகள் போன்றவற்றை வடிவமைத்து உற்பத்தி செய்தல்
- கன்னொறுவையில் பத்தாதையிலும் அமைந்துள்ள விவசாய தொழில்நுட்ப பூங்காவினை முகாமைத்துவம் செய்தல்
- பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் விவசாயக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்
- இலவசத் தொலைபேசி விவசாய ஆலோசனைச் சேவை (1920) அதாவது

"கொவிசஹன சரண சேவை" யை வழங்கல்

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஆரம்பத் திட்டங்களை அமுல்ப்படுத்தல் அவையாவன
  - விவசாயத் திணைக்களத்தின் இணையத் தளம் www.agridept.gov.lk, விக்கிகொ விய இணையத்தளம் www.goviya.lk இலங்கை நெல் அறிவு வங்கி போன்றவை
  - வெவ்வேறு பாடவிதானங்களுக்கும் பயிர்களுக்குமான பல்லூடக இறுவட்டுக் களைத் தயாரித்து வழங்கல்
  - பூச்சிய விரிவாக்க செயற்திட்டம் மற்றும் AgMIS விவசாயி தகவல் தளம்
  - கட்புல செவிப்புல கற்பித்தல் ஆதாரங்கள் சம்பந்தமான பயிற்சி வழங்கலும் தொழில்நுட்ப விளக்கமளித் தலும்.
  - தேசிய விவசாய தகவல் வலையமைப்பு சார்ந்ததும் விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் சார்ந்ததுமான செயற்பாடுகளை ஸ்தாபித்தல்

முன்னேற்றம்

பயிற்சி

கட்புல செவிப்புல ஆதாரங்கள், பூச்சிய விரிவாக்கம் மற்றும் இணையத்தள வடிவமைப்பிற்கென 10 பயிற்சி நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதில் 425 மனித நாட்கள் உள்ளடக்கப்பட்டது.

கட்புலக் கலையுடன் தொடர்புடைய தொடர்பாடல்

தொழில்நுட்ப பிரசுரங்கள்

பத்து வகையான புதிய தொழில்நுட்பப் பிரசுரங்கள் வடிவமைக்கப்பட்டன. இதில் 2012ம் ஆண்டுக்கான நூற்றாண்டு நாட்குறிப்பும் உள்ளடக்கப்படும். இவற்றுடன் ஐந்து நூற்றாண்டுப் பிரசுரங்களான உண்ணக்கூடிய பயிர்களை உள்ளடக்கிய தரை அலங்காரம், சோளம், மரக்கறிப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், பயன்பாடு குறைந்த பழப்பயிர்கள், ஏனைய வயற்பயிர்களில் பூச்சி, சிற்றுண்ணிகள் போன்றவை.

இவற்றுடன்

கையேடுகள் - 34

கண்காட்சிப் பலகை – 11

கண்காட்சி / ஆராய்ச்சி சுவரொட்டிகள் - 984

சமநிலை அச்சுப்பதிப்பானில் அச்சுப்பதித்த சுவரொட்டிகள் - 30

மேற்றள வெளிப்படுத்தல்கள் (Desk top Presentation) - 15

வர்ணத்தாள் / அழைப்பிதழ் / வாழ்த்து மடல் - 155

பெயர்ப் பலகைகள் / சுட்டிகள் - 4023

பதாதைகள் - 66

படப்பிடிப்பு

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தயாரித்தல், வடிவமைத்தல், ரூபவாஹினியில் ஒளிப்பரப்பச் செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளல். இதில் "திவிநெகும" நிகழ்ச்சிகளும் உள்ளடக்கப்படும்.

நிகழ்ச்சிகள்

"மிகிகத டினுவோ" – 48

"கொவிபிமட அருணலு" – 53

ஏனைய நிகழ்ச்சிகள் - 07

தொலைக்காட்சித் தொடர்கள் - 20

பிரதி செய்யப்பட்ட ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் - 17

எண்மான படிப்பிடிப்பு (Digital photography) – 19135

தகவல் தொழில்நுட்பம்

புதுப்பிக்கப்பட்ட பக்கங்கள் வருமாறு

விவசாயத் திணைக்களத்தின் இணையத்தளம் - 555 மணி / 163 வகை RKB இணையத்தளம் - 02 வகை

விக்கிபீடியா இணையத்தளம் 18 மணி / 74 வகை தகவல் திரட்டு மற்றும் மென்பொருள் அபிவிருத்தி 1140 மணி

கொவி சகாண சரண ஆலோசணைச் சேவை

பிரச்சினைகளுக்கான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன.

விசாரணைகளின் எண்ணிக்கை – 50,000

ஒளிப்பதிவு அழைப்புக்கள் 60

கடிதங்கள் 400

வலையமைப்பு நிர்வாகமும் கண்காணிப்பும்

1172 மணி நேரம் 61 வகையானவை கண்காணிக்கப்படுவதுடன் 2057 மணி நேரம் 602 வகை வன் பொருள் பேணுதல்

கண்காட்சிகள்

நூற்றாண்டு கொண்டாட்டத்திற்காக மூன்று கண்காட்சி இடங்கள் வடிவமைக்கப்பட்டன. அவையாவன கன்னொறுவை, தேசத்தின் மகுடம், ஓயமடுவ. கடந்த ஏழு வருட காலமாக விவசாயத் திணைக்களத்தின் கண்காட்சிப் பகுதிகள் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நூற்றாண்டுக் கண்காட்சி

விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டுக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 2012ம் ஆண்டு இடம் பெற்றது. இக்கண்காட்சி கட்புல செவிப்புல நிலையத்தினால் வடிவமைக்கப்பட்டு கண்காணிக் கப்பட்டது.

கன்னொறுவையில் உள்ள பூங்கா

நூற்றாண்டுக் கண்காட்சியின் விளைவாக உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டன. (புதிய மலசலகூட கட்டடத் தொகுதி, உணவு மண்டபம், கொங்கிறீற் கற்களால் ஆன தளங்கள், குளங்கள் இணைப்பாறும் இடங்கள் போன்றவை)

விவசாயத் தொழில்நுட்பங்களின் பரம்பலும் பாடசாலை மாணவர்களுக்கான மற்றும் பொது மக்களுக்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படு வதும் கீழ்த் தரப்பட்டுள்ளது.

வருகைதந்தோரின் எண்ணிக்கை – பாடசாலை மாணவர்கள் 65,107

வருகைதந்தோரின் எண்ணிக்கை – முதியவர்கள் 77,539

வருமானம் ரூபாய் 951, 765.00

நிறுத்தல் கடையொன்று (Stop Shop)

நிறுத்தற் கடையின் பிரதான தத்துவம் யாதெனில் உணவு மண்டபத்திற்கு மேலதிகமாக விவசாய தொழில்நுட்பப் பூங்காவினை வலுப்படுத்தல் ஆகும். இதில் பாரம்பரிய உணவுப் பொருட்களின் விற்பனையை ஊக்குவிப்பதுடன் பதிவு செய்யப்பட்ட தனியார் நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய தாவரங்களின் உற்பத்தியை ஊக்குவித்தலும் ஆகும்.

விவசாய பிரசுர அலகு

இவ்வலகின் பிரதான பரந்த நோக்கம் யாதெனில் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்களை யும் ஏனைய தொடர்புடைய தகவல்களையும் அச்சிடப்பட்ட வடிவில் இறுதிப் பயன்பாட்டாளர்க ளுக்கிடையில் விவசாயிகள் உள்ளடங்கலாக பரப்புவதாகும். இப்பரந்த நோக்கத்தினை அடைவதற்கு விவசாயப் பிரசுர அலகு விவசாயத் திணைக்களத்தின் பிரசுரங்களைப் பிரசுரிப்பதிலும் அதனை விநியோகித்து களத்தில் விரிவாக்க செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பதற்கும் பொறுப்பாகவுள்ளது. இவ்வலகின்

கீழ் விவசாய அச்சகமும் தகவல் நிலையமும் உள்ளடக்கப்படுகின்றது. இவ்வலகு 29ம் திகதி யூன் மாதம் 2012ம் ஆண்டு மீள ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வலகின் கீழ் இயங்கும் விவசாய அச்சகமானது விவசாயத் திணைக்களத் திற்குத் தேவையான சகல பிரசுரிப்புத் தேவைகளையும் ஏற்று நடாத்துவதுடன் இதில் தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரசுரங்களும் அடங்கும். இவற்றுடன் விவசாய அமைச்சின் பிரசுரிப்புக்களையும் ஏற்று நடாத்துகின்றது. தொழில்நுட்ப நிலையமானது அச்சிட்ட பிரசுரங்களை விற்பனை செய்வதிலும் இலவச விநியோகங்களை மேற்கொள்ளவதற்கும் பொறுப்பாகவுள்ளது. 2012ம் ஆண்டில் முன்னேற்ற பெறுபேறுகளும் முன்னெடுக்கப்பட்ட தொழிற்பாடுகளும் கீழ்த்தரப்பட்டுள்ளன.

வருவாய்

வேறுபட்ட தொழிற்பாடுகள் காரணமாக 2012ம் ஆண்டு 3 மில்லியன் ரூபாய்கள் சம்பாதிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாள 2.5 மில்லியன் ரூபாய்கள் பிரசுர விற்பனை மூலமும் IMM இறுவட்டுக்கள் விற்பனை மூலமும் பெறபட்டது. இவ்வலகிற்குச் சொந்தமான இரண்டு விற்பனை அலகுகள் மூலம் விற்பனை நடாத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விளக்கம் அட்டவணை 2ல் தரப்பட்டுள்ளது. தேசத்தின் மகுடம் கண்காட்சியில் ஸ்தாபிக்கப்பட்ட விற்பனை நிலையம் மூலம் விவசாயத் திணைக்களப் பிரசுரங்கள் இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு 367,963.00 ரூபாய்கள் சம்பாதிக்கப்பட்டது. 2012ம் ஆண்டு மொத்தமாக ரூபா 187,795.00 க்கு கழிவுக் காதிதாதிகள், பாவிக்கப்பட்ட தட்டுக்கள், ஏனைய பாவணைக்குட்படுத்திய பதார்த்தங்கள் விற்பனை செய்யப்பட்டதுடன் கேள்விப் பத்திரங்களும் விநியோகிக்கப்பட்டன.

அட்டவணை 3.2.2 பிரசுரங்களின் விற்பனை (ரூபா)

மாதம்	கலகா சந்தியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் இல 01	கன்னொறுவையில் அமைந்துள்ள விற்பனை நிலையம் இல 02
தை	23,788	84,882
மாசி	49,129	52,169
பங்குனி	67,732	102,838
சித்திரை	33,535	73,437
வைகாசி	54,901	75,428
ஆனி	77,792	70,819
ஆடி	23,489	580,398
ஆவணி	32,409	103,232
புரட்டாதி	66,155	51,107
ஐப்பசி	117,930	121,680
கார்த்திகை	36,735	92,320
மார்கழி	64,789	86,896
மொத்தம்	**648,384**	**1,495,206**

முன்னேற்றம்

இவ்வருடம் மீள்பார்வையின் கீழ் பின்வரும் புதிய புத்தகங்கள் பிரசுரிக்கப்பட்டன. மா (சிங்களம், தமிழ்) அன்னாசி (சிங்களம், தமிழ்) மரக்கறி களின் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம் (சிங்களம், தமிழ்) உண்ணக்கூடிய பயிர்களால் நில அலங்காரம் (சிங்களம், தமிழ்) சோளம், பியர்ஸ் செய்கை, 2013ம் ஆண்டு நாட்குறிப்பேடு, கொவிகம் கங்கரவ மற்றும் கமத்தொழில் விளக்கம். மேற்கூறப்பட்டவற்றைத் தவிர ஏறதாழ 28 பிரசுரங்கள் மீள்பதிக்கப்பட்டன. ஆறு பிரசுரங்கள் அச்சிடப்பட்டு ஏனைய அலகுகளுக்கு விநியோகிக்கப்பட்டன. அச்சிடப்பட்ட பிரசுரங் களின் விபரம் கீழ்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

அட்டவணை : 3.2.3 2012ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட புதிய புத்தகங்கள்

இல	புத்தகத்தின் பெயர்	பிரதிகளின் எண்ணிக்கை
1.	மா (சிங்களம்)	2,500
2.	மா (தமிழ்)	1,000
3.	அன்னாசி (சிங்களம்)	2,500
4.	அன்னாசி	1,000
5.	ஒருங்கிணைக்கப்பட்ட பீடை முகாமைத்துவம் (சிங்களம்)	2,500
6.	ஒருங்கிணைக்கப்பட்ட பீடை முகாமைத்துவம் (தமிழ்)	1,000
7.	உண்ணக்கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் (சிங்களம்)	2,500
8.	உண்ணக்கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் (தமிழ்)	1,000
9.	சோளம் (சிங்களம்)	2,500
10.	பியர்ஸ் செய்கை (சிங்களம்)	2,000
11.	நாட்குறிப்பேடு (ஆங்கிலம்)	5,000
12.	கொவஜகம் சங்கரவ	10,000
13.	கமத்தொழில் விளக்கம்	650

அட்டவணை 3.2.4 ஏனைய பிரிவுகளுக்கான பிரசுரங்கள்

பிரசுரத்தின் பெயர்	தொகை	பிரிவு
உற்பத்தி செலவு விவசயப் புள்ளிவிபரவியல் - 2012 Agstat – 2012)	200 350	SEPC SEPC
Tropical Agriculturist	750	விவசாயத் திணைக்களம்
புதிய பயிர் வர்க்கங்கள்	1250	ஆராய்ச்சிப் பிரிவு
பூச்சி பீடைகள் மற்றும் நோய்களுக்கான - சோதனைப் பட்டியல் (Check list)	1250	NPQS
ASDA பிரசுரம்	1050	ASDA பிரிவு
சுய விதை நெல் உற்பத்தி	500	SCS

அட்டவணை 3.2.5 மீன் அச்சுப்பதிக்கப்பட்ட பிரசுரங்களின் விடயம்

பெயர்	பிரசுரிக்கப்பட்ட எண்ணிக்கை
மாதுளை (சிங்களம்)	2500
வத்தகை (சிங்களம்)	2500
இலை மரக்கறிகள் (சிங்களம்)	5000
காளான் (சிங்களம்)	5000
வாழை நோய்கள்	2500
மரக்கறி பயிர் செய்கை (சிங்களம்)	10,000
கத்தரி (சிங்களம்)	2500
சுய விதை நெல் உற்பத்தி (சிங்களம்)	3000
குள்ளமான அம்ரல்லா (சிங்களம்)	2000
தேனீ வளர்ப்பு (சிங்களம்)	2500
வீட்டுத் தோட்டம் (சிங்களம்)	20,000
போஷணை (சிங்களம்)	2500
உள்ளூர் உணவுற்பத்தி	10,000
நெல்லில் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளல் (சிங்களம்)	2500
வீட்டுத் தோட்டம் (தமிழ்)	5000
நெல்லில் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ளல் (தமிழ்)	2500
தோடை (சிங்களம்)	2500
விவசாயச் சூழலியல் வலயங்கள்	1500
நெல்லில் வயற்பிரச்சினைகள் (சிங்களம்)	2500
விதை நெல் களஞ்சியப்படுத்தல் (தமிழ்)	1200
சுய விதை நெல் உற்பத்தி	1100
பப்பாசி (தமிழ்)	500
நீர்வளர்ப்பு (சிங்களம்)	2500

விவசாய அச்சகம்

மேற்கூறப்பட்ட விவசாயத் திணைக்களப் பிரசுரங்கள் தவிர விவசாய அச்சகம் வெவ்வேறு வகையான அச்சுப்பிரதிகளை அச்சிடுகின்றது. இதில் கையேடுகள், சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள் போன்றவை அடங்கும். விதை அத்தாட்சிப்படுத்தல் பிரிவின் விதை அத்தாட்சிப்படுத்தலுக்கான சுட்டிகள், படிவங்கள் அனைத்தும் இப்பிரிவிலேயே அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. அட்டவணை 6ல் விவசாய அச்சகத்தினால் அச்சிட்டு வெளியிட்ட பிரதிகளின் எண்ணிக்கையின் சுருக்கம் தரப்பட்டுன்னது.

அட்டவணை 3.2.6 அச்சிடப்பட்ட பிரதிகளின் சுருக்கம்

பிரசுரத்தின் வகை	அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை
சுவரொட்டிகள்	191,300
புத்தகங்களும் சிறு புத்தகங்களும்	23,406
அழைப்பிதழ்	12,365
சான்றிதழ்கள்	33,962
செய்திக் கடிதங்கள்	33,650
கடிதங்கள்	43,450
படிவங்கள்	153,010
கோவை உறைகள்	1992
கடிதத் தலைகள்	3650
ஏனையவை	11,135
SCS சுட்டிகள்	300,000
பயிர் எதிர்வு கூறல் நிகழ்ச்சிக்கான படிவங்கள்	172,102
பயிர் எதிர்வு கூறல் நிகழ்ச்சிக்கான புத்தகங்கள்	25,000
கையேடுகள்	1055.120

இலவசமாக வழியோகிக்கப்படும் பிரசுரங்கள்

இவ்வருடம் கீழ்வரும் எண்ணிக்கையான பிரசுரங்கள் விவசாயத் திணைக்களத்தினதும் மாகாண விவசாயத் திணைக்களத்தினதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்க்கிடையில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

1. **கொவி சங்கரவ**

   நூல் 42 இல 4 – 3820

   நூல் 43 இல 1 – 3570

   நூல் 43 இல 2 – 3570

2. **கமத்தொழில் விளக்கம்**

நூல் 49 இல 2-4 – 408

3. **கமநூட்பம்**

நூல் 13 இல 3 உம் 4 உம் (சிங்களம்) – 3820

நூல் 14 இல 1 உம் 2 உம் (சிங்களம்) – 3570

நூல் 14 இல 1 உம் 2 உம் (தமிழ்) – 284

நூல் 14 இல 3 உம் 4 உம் (சிங்களம்) – 3570

நூல் 14 இல 1 உம் 2 உம் (தமிழ்) – 284

4. **சிபாரிசு செய்யப்பட்ட பயிர் வர்க்கங்கள் - 460**

சித்திரப் போட்டி

விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டு கொண்டாடத்தினைக் கருத்திற் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கிடையில் சித்திரப் போட்டி ஒன்று நடைபெற்றது. இப்போட்டியில் இருபத்தாறாயிரம் சிங்கள மற்றும் தமிழ் மாணவர்கள் பங்குபற்றினர். பங்கு பற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்ணை ஒலிபரப்புச் சேவை

விவசாயத் திணைக்களத்தின் பண்ணை ஒலிபரப்புச் சேவையானது. விவசாய வானொலி நிகழ்ச்சிகளை தயாரித்து, தகவல்கள் விவசாய சமூகத்தின் மத்தியில் பரப்பப்பட்டு அவர்களது அறிவு விருத்தி செய்யப்படுவதுடன் மனப்பாங்கும் விரும்பத்தக்க வகையில் மாற்றப்படுகின்றது. கொழும்பில் உள்ள பண்ணை ஒலிபரப்புச் சேவை மற்றும் ஒளிபரப்புச் சேவையுடன் இணைந்த வகையில் ஓர் முறைமையில் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. இதனுடன் மூன்று பிராந்திய ஒலிபரப்பு அலகுகள் அனுராதபுரம், மாத்தறை, கண்டியில் இயக்கி வருகின்றது. இவை வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்து முறையே ராஜரட்டை, றுகுணு கந்துரட்டை பிராந்திய ஒலிபரப்பு அலைவரிசை யினூடு ஒலிபரப்புச் செய்கின்றது.

விவசாய வானொலி நிகழ்ச்சிகள், பண்ணை ஒலிபரப்புச் சேவையால் தயாரிக்கப்படுவதுடன் வெவ்வேறு வடிவங்களில் அதாவது ஆவணங்கள், வேறுப்பட்ட வகையான நிகழ்ச்சிகள், சஞ்சிகைகள், நாடகங்கள், நேரடி நிகழ்ச்சிகள், குறுகிய செய்திகள் போன்றவை பிரதானமானவை. பெரும்பாலான நிகழ்ச்சிகளின் அடிப்படை யாதெனில், உரையாடல் ஒன்று அனுபவம் வாய்ந்த ஆராய்ச்சியாளர் விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்க உத்தியோகத்தர் கள் அனுபவம் நிறைந்த விவசாயிகள் போன்றோருடன் குறித்த விவசாயச் செயன்முறை பற்றி அல்லது விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் பற்றி ஆராய்வதாகும். நேரடி நிகழ்ச்சிகளில் கேட்போர் தொலைபேசி மூலம் நேரடியாக தமது சந்தேகங்களை, மேலதிக விளக்கங்களை பெறுதல் பொதுவானதும் பிரபல்யமானதுமாகும். இதனால் இவர்கள் உடனடியாக விவசாயப் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றினைப் பெறக்கூடியதாகவுள்ளது. இந்நிலையமானது

1. விவசாயிகள் மத்தியில் புதிய உற்பத்தித் திறன் மிக்க விவசாயச் செயன்முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
2. விவசாயத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினை கள் அவற்றிற்கான வினைத் திறனான தீர்வு என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3. விவசாயமானது இலாபத்துடன் கூடிய வருமானத்தை ஈட்டித்தரும் தொழில் என்பது பற்றிய ஆர்வத்தை தூண்டுதல்.
4. விவசாயம் சம்பந்தமாக விவசாயிகள் மத்தியில் நேரான மனப்பாங்கை விருத்தி செய்தல்.
5. விவசாய சமூகம் மத்தியில் வெவ்வேறு விவசாயம் செயன்முறைகள் காரணமாக எழும் பாதகமான விளைவுகள் பற்றியும், சூழல் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

6. விவசாயம் சார்ந்த நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்படும் விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் பற்றிய நோக்குகளை, எண்ணங்களை விவசாயிகளுக்கு வழங்கல்

7. வீட்டுத் தோட்டச் செயன்முறையை நாட்டிலுள்ள சகல வீடுகளிலும் ஊக்குவித்தல். இதனால் உணவுப் பாதுகாப்பை போஷணையை இரசாயனங்கள் அற்ற உணவுப் பதார்த்தங்களை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துதல்.

8. விவசாயத்தை கவர்ச்சிகரமான தொழிலாக இந்நாட்டின் இளைஞர், யுவதிகள் மத்தியில் உருவாக்குதல்

முன்னேற்றம்

இச்சேவை விவசாயம் சார்ந்த வானொலி நிகழ்ச்சிகளை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நாடுமுழுவதும் வெவ்வேறு அலைசரிசைகளினூடாக ஒலிபரப்பிவருகின்றது. 2012ம் ஆண்டு காலப்பகுதியில் ஒலிபரப்பிய வானொலி நிகழ்ச்சிகள் கீழ்த்தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.2.7 இவ்வகுடம் ஒலிபரப்புச் செய்யப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சி	நேரலை / பதியப்பட்டது.	அலை வரிசை	நேரம்	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
கொழும்பு அலகு சிங்கள நிகழ்ச்சிகள்				
கொவிதடை பயாக்	நேரலை	சிங்கள ஸ்வதெசியா FM 91.7 / FM 91.9	திங்கள் மு.ப 9.00 மு.ப 10.00 மணி வரை	51
கொவிகெதர	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	திங்கள் மாலை 6.45 முதல் 7.00 மணி வரை	51
சரபூமி	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	ஞாயிறு மாலை 6.45 முதல் 7.00 மணி வரை	47
இளைஞர்களுக்கான குறும் வினா நிகழ்ச்சி	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	சனி மாலை 7.00 முதல் 7.30 மணி வரை	42
செய்லாம	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	சனி மாலை 6.30 முதல் 6.37 மணி வரை	51
மஹகேடரின் கொவிகேடரட	நேரலை	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	வியாழன் மாலை 6.30 முதல் 7.30 மணி வரை	40
பெண்கள் விரிவாக்க நிகழ்ச்சிகள்	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9	திங்கள், வியாழன், வெள்ளி காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை	53
அந்தஹாரயா	பதியப்பட்டது	ஸ்வதேசியா FM 91.7 / FM 91.9 வர்த்தக சேவை FM 94.3 / FM 94.5 City FM – FM 89.6/FM 89.8	நாள்தோறும் காலை 6.20 மணியும் மாலை 6.20 மணியும்	360

கொழும்பு அலகு தமிழ் நிகழ்ச்சிகள்				
வீட்டுத் தோட்டம்	பதியப்பட்டது	தமிழ் சுவதேசியா FM 107.8	வெள்ளி காலை 7.00 மணி முதல் 8.00 மணி வரை	49
வண்ண மாருதம்	பதியப்பட்டது	தமிழ் சுவதேசியா FM 107.8	சனி மாலை 7.00 மணி முதல் 7.30 மணி வரை	45
ராஜரட்டை அலகு சிங்கள நிகழ்ச்சிகள்				
சாருகேதா	பதியப்பட்டது	இராஜரட்டை FM 107.3	புதன் மாலை 7.07 மணி முதல் 7.15 மணி வரை	42
போரடியா மங்கத	பதியப்பட்டது	வயம்ப கந்த FM 90.1	திங்கள் மாலை 6.45 மணி முதல் 7.00 மணி வரை	12
சுத்தம	பதியப்பட்டது	வயம்ப கந்த FM 90.1	நாள்தோறும் மாலை 7.20	100
வயம்ப கேவத்த	நேரடி	வயம்ப கந்த FM 90.1	வியாழன் மாலை 3.00 – 3.30 மணி வரை	8
அத்வல	பதியப்பட்டது	ரங்கிரி இலங்கை FM 104.4/105.4	நாள்தோறும் மாலை 7.20 மணிக்கு	100
மஹேஷிகா வசபவன	பதியப்பட்டது	ரங்கிரி இலங்கை FM 104.4/105.4	நாள்தோறும் மாலை 2.00 முதல் 4.00 மணி வரை	120
கந்துரட்ட அலகு – சிங்கள நிகழ்ச்சிகள்				
கலவித	பதியப்பட்டது	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	நாள்தோறும் காலை 7.00 மணி முதல் 7.30 வரை. மற்றும் மலை 4.00– 4.30 மணி வரை	390
அஸ்வன்ன	நேரலை	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	வெள்ளி காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை	54
கொவிபிம	பதியப்பட்டது	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	சனி காலை 8.00 மணி முதல் 8.15 மணி வரை	47
கந்துரட்ட அலகு – தமிழ் நிகழ்ச்சிகள்				
குறிஞ்சி மலர்கள்	பதியப்பட்டது	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	புதன் மாலை 7.00 - 7.30 மணி வரை	48
விழுதுகள்	பதியப்பட்டது	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	வெள்ளி மாலை 7.00 - 7.15 மணி வரை	46
குறுந் தகவல்கள்	பதியப்பட்டது	கந்துரட்ட சேவை FM 107.3/107.5	தினமும் மாலை 6.30 – 7.30 மணி வரை 3/ தடவைகள் நாள்	1080

றுகுனு அலகு சிங்கள நிகழ்ச்சிகள்				
றுகுணு பீமயி கொவி டதயி	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	புதன் மாலை 5.45 - 6.00 மணி வரை	47
திவிமகட அத்வலக்	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	சனி மாலை 3.45 -4.00 மணி வரை	47
கொவிடதட அபே சவிய	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	நாள்தோறும் மாலை 2.00-4.00 மணி வரை	460
ஹத்அடிய	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	திங்கள் மாலை 7.00 மணி	44
சலுபவிய	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	புதன் மாலை 6.30-7.30 மணி வரை	44
கந்தமல்ல	பதியப்பட்டது	றுகுணு சேவை FM 107.3/107.5	சனி மாலை 6.45-7.00 மணி வரை	39

FBS இன் கண்காட்சி நிகழ்ச்சிகள்

கண்காட்சியில் பண்ணை ஒலிபரப்புச் சேவையின் நிகழ்ச்சிகள் ஊடக பிரசுரங்கள், விவசாயக் கண்காட்சி சம்பந்தமான ஊடக சேவை, மற்றும் வயல் விழாக்கள் , தேசிய தினங்கள் பற்றிய விபரம் வருமாறு

அட்டவணை 3.2.8 கண்காட்சிகளில் FBS ன் நிகழ்ச்சிகள்

கண்காட்சிகள் / வயல் விழாக்கள் தேசிய விழாக்கள்	நாட்கள்
தேசத்திற்கு மகுடம்	09
விவசாயத் திணைக்களத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்டம்	05
விவசாய கருவிகளை யப்பானிய உதவியில் வழங்கல்	01
தக்ஷினா குருஷிகர்ம	05
நவோதயா – லபுதுவ இசுறுடிரிய விழாவும் விவசாயக் கண்காட்சியும்	01
வயல் விழா – பொம்புவெல நெல் ஆராய்ச்சி நிலையம்	02
டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம்	01

பண்ணை ஒலிபரப்புச் சேவையால் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் கேட்போர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நெறிகள் வருமாறு

அட்டவணை 3.2.9 FBS னால் முன்னெடுக்கப்பட்ட பயிற்சி நெறிகள்

தலைப்பு	பயிற்றுவிப்பாளர் எண்ணிக்கை	அலகு
தேனீ வளர்ப்பு	38	கொழும்பு
உணவுத் தொழில்நுட்பம்	33	கொழும்பு
ஒட்டுதல்	21	கொழும்பு
வீட்டுத் தோட்டமும் நில அலங்காரமும்	48	கொழும்பு
பழப்பயிர் கத்தரிப்பு	47	கொழும்பு
நகர விவசாயம்	27	கொழும்பு
பயிர் சிகிச்சை	48	கொழும்பு
பழப்பயிர் கத்தரிப்பு	25	கந்துரட்ட
வீட்டுத் தோட்டம்	28	கந்துரட்ட
பழப்பயிர் பொதி செய்தல்	32	கந்துரட்ட
பலாக்காய் வடை தயாரிப்பு	30	கந்துரட்ட
கத்தரிப்பு	30	கந்துரட்ட

விவசாய தொழில்நுட்பப் பூங்கா – பத்தாத்தை

இப்பூங்காவின் பிரதான நோக்கம் யாதெனில் விவசாயத்தில் ஈடுபடும் வெவ்வேறு மக்களின், விவசாயிகளின், பல்கலைக்கழக மாணவர்களின், முயற்சியாளர்களின் திறனை கட்டியெழுப்பு வதாகும். பாடசாலை மாணவர்களே பிரதான இலக்குக் குழு ஆவார்கள். சிறந்த செயன்முறை அறிவுடன் கூடிய விவசாய விஞ்ஞானத்தைக் கற்பதற்கு இவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது.

இப்பூங்காவானது விவசாயிகள், பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் விவசாயத்தை கற்பதற்கு ஓர் சொர்க்கமாகக் கருதப்படுகின்றது. இப்பூங்காவின் பிறிதொரு கோணம் யாதெனில் விவசாய உல்லாசத்துறையை விருத்தி செய்தலாகும். இது இலங்கைக்கு வருகைதரும் உல்லாப்பயணிகளை உற்சாகப்படுத்துவதற்கு சிறந்த இடமாகும். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள், காட்டு விலங்கினங்கள், மணல், கடல், போன்ற இடங்கள் தவிர இலங்கையில் உல்லாசத் துறையை விருத்தி செய்வதற்கு புதிய உபாயமாகும்.

ஆகவே பத்தாத்தை விவசாய ஆர்வலர்களின் சொர்க்கமாகக் கருதப்படுகின்றது. கோடைகால குடில்கள், மேலிருந்து அவதானிக்கக்கூடிய ஏரி, வயல்கள், பழமரத் தோட்டங்கள் போன்றவை பொதுவானவை. இவை இயற்கை அழகின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டும்.

பத்தாத்தை பூங்கா வெவ்வேறுபட்ட முன்மாதிரிச் செய்கைகளைக் கொண்டது. அவையாவன நெல் வயல்கள், இலை மரக்கறித் தோட்டம், பழ மரங்கள் நிறைந்த பகுதி, பாவனை குறைந்த பழங்களின் தோட்டம் மூலிகைத் தோட்டம், சேனைப் பயிர்ச் செய்கை, வாசனைத் திரவியங்களின் தோட்டம், வாழைத் தோட்டம் போன்றவையுடன் உண்ணக்கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் மேலும் அழகூட்டுவதாக அமைகின்றது. உயர் பெறுமதியான தாவரங்கள் சம்பந்தமான விருந்தாளிக்களுக்கான தகவல் யாதெனில் உண்ணக்கூடிய பழம் இலங்கையில் விலை கூடியது.

இப்பூங்காவின் ஏனைய முக்கியத்துவம் யாதெனில் விவசாயக் கல்விக்கு வேண்டிய வசதிகளை வழங்குவதாகும். ஏறக்குறைய 15 உதவியாளர்கள் இப்பூங்காவில் கடமை யாற்றுகின்றனர். இவர்கள் விருந்தாளிகளை நெறிப்படுத்துகின்றனர். உலகிலுள்ள ஏனைய சாதாரண பூங்காக்களைப் போலல்லாது உதவியாளர்களின் சேவை விவசாயிகளை பாடசாலை மாணவர்களை பொது மக்களை பூங்காவின் ஒவ்வொரு பகுதி சம்மந்தமான விழிப்புணர்வை ஊட்டுவதாக அமைகின்றது. உதவியாளர்கள் விவசாய டிப்லோமா முடித்தவர்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏனைய முக்கியமான வசதி யாதெனில் சுய விளக்கப் பலகைகள் மூன்று மொழிகளிலும் அதாவது சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் தொழில்நுட்பத் தகவல்களை வழங்கி நிற்கின்றது. ஊழியப் பகிர்விற்கு எடுத்துக் காட்டான இரு கோர்த்த கரங்கள் வாயிலில் வரவேற்று நிற்கின்றது.

இப்பூங்காவில் வேறுபட்ட காய்கறிகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் உயிர்ப்பூட்டமான விவசாய பல்வகைமை, உயிர்ப்பூட்டமான விவசாய பயிர் நூதனசாலை என்பன மகிழ்ச்சியான சூழலை ஆக்கிநிற்கின்றது. இவை தற்போது உண்ணக் கூடிய பயிர்களால் ஆன நில அலங்காரம் என அழைக்கப்படுகின்றது. இத்தாவரம் உலர் காலநிலை நிலமைகளுக்கு மிகப்பொருத்த மானது. இது கள்ளித் தாவர குடும்பத்தைச் சேர்ந்தது.

முன்னேற்றம்

அட்டவணை 3.2.10: 2012ம் ஆண்டிற்கான முன்னேற்றம்

விபரணம்	வருமானம் (ரூபா)
பாடசாலை மாணவர்கள்	52,575.00
ஏனைய மாணவர்கள்	21,220.00
முதியோர்	282,620.00
உல்லாசப்பயணச் சிறுவர்கள்	1,000.00
உல்லாசப் பயண முதியோர்	21,000.00
வாகன தரிப்பிட கட்டணம்	28,620.00
கேட்போர் கூடம்	1,500.00
பண்ணை உற்பத்தி	150,295.00
விதை நெல் உற்பத்தி (5661Kg)	237,766.62
மொத்தம்	**796,236.62**

2013ம் ஆண்டிற்கான திட்டம்

கட்புல செவிப்புல நிலையம்

- பெல்வெஹெர பண்ணையில் நிறுத்தற்கடை (Stop shop) ஒன்றை ஸ்தாபித்தல்
- சீத்தா எலியவில் விவசாயப் பூங்கா ஒன்றினை ஸ்தாபித்தல்
- இரு தொலைக்காட்சி நிகழ்வுகளை தயாரித்தலையும் அச்சிடப்பட்ட ஊடக பிரசுரங்களின் உற்பத்தியையும் தொடர்ச்சி யாக மேற்கொள்ளல்
- தேசிய விவசாயத் தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையத்தின் கட்டடப் பணிகளைத் தொடர்தல்
- தேசத்தின் மகுடம், விவசாயிகள் வாரம் போன்ற கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்
- ICT தொழிற்பாடுகளை தொடர்தல் (புதிய தகவல் திரட்டினை பெறுமதியான சங்கிலித் தொடராக்கல்)
- விவசாயப் பூங்கா (கன்னொறுவை) விற்குள் ஒருங்கிணைந்த விவசாயத்தை சேர்த்துக் கொள்ளல்

விவசாயப் பிரசுரங்கள்

- 10 மீள்பரிசீலிக்கப்பட்ட பிரசுரங்கள்
- கொவிகம் சங்கரவ (GS), கமத்தொழில் விளக்கம் போன்ற சஞ்சிகைகளுக்கு புதிய விடயங்களை வெளிக்கொணரும் பாங்கினை அறிமுகப்படுத்தி மேலும் மெருகூட்டு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.
- AFACI செயற்றிட்டத்தின் கீழ் ஆறு புதிய பிரசுரங்கள் பிரசுரித்தல்
- 200,000 கையேடுகள் வெவ்வேறு பாடங்களில் பிரசுரிக்கப்படும்

பண்ணை ஒலிபரப்புச் சேவை

- புதிய வானொலி நிகழ்ச்சியை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை வாரந்தோறும் வழங்கல்
- அலைவரிசையின் மீடிறன் புதிய அலைவரிசைக்குத் தடையாகவுள்ளது.

பத்தாத்தையில் அமைந்துள்ள விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா

- விவசாயிகளுக்கான பயிற்சி நெறிகள் பின்வரும் தலைப்புகளில் இடம்பெறவுள்ளன. அவையாவன நாற்றுமேடை முகாமைத்துவம், பழம் மற்றும் மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி தேனீ வளர்ப்பு, தானியம் மற்றும் மறுவயற் பயிர்களின் முகாமைத்துவம் போன்றனவாகும்.
- உணவு விடுதி, சிறுவர் பூங்கா என்பன ஸ்தாபிக்கப்படவுள்ளன.

அலுவலர் பட்டியல்

பதவி	இலக்கம்
பணிப்பாளர்	01
மேலதிக பணிப்பாளர்	01
பிரதிப் பணிப்பாளர் விவசாயம்	02
உதவிப் பணிப்பாளர் விவசாயம்	04
பாடவிதான வல்லுனர்கள்	01
விவசாய உத்தியோகத்தர்	05
விரிவுரையாளர்கள்	02
விவசாய போதனாசிரியர்	50
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	04
ஊடக உதவியாளர்	03
கட்புல செவிப்புல உதவியாளர்	03
IT உதவியாளர்	02
முகாமைத்துவ உதவியாளர்	13
வரைபட கலைஞர்	02
Forman (பதில் கடமை)	01
படப்பிடிப்பாளர்	01
AV தொழில்நுட்பவயலாளர்	01
புத்தகம் கட்டுபவர்கள்	01
இயந்திர திருத்துனர்கள்	03
அச்சிடுவதற்குரிய உதவியாளர்	01
பண்ணைக் எழுது வினைஞர்	01
அலுவலக வேலை உதவியாளர்	02
சாரதிகள்	14
உழவு இயந்திர சாரதி	01
சினிமா இயக்குனர்	02
களஞ்சியப் பொறுப்பாளர்	01
காவலாளி	07
சுத்திகரிப்பு தொழிலாளி	01
பாரவூர்தி நடத்துனர்	01
தச்சன்	01
ஒட்டு வேலை செய்பவர் (உலோகம்)	01
மின்சார வேலை செய்பவர்	01
வர்ணம் தீட்டுபவர்	01
தொழிலாளர் (நிரந்தரம்)	22
தொழிலாளர் (ஒப்பந்த அடிப்படை) / கணினி வேலையில் ஈடுபடுவர்கள்	166
மொத்தம்	**321**

4.1 நிர்வாகப் பிரிவு (AD), பேராதனை

பதவி நியமனம் தொடக்கம் ஓய்வு பெறுவது வரையான காலப் பகுதியில் தாபன விடயங்களுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் மேற் கொள்வதே நிர்வாகப் பிரிவின் பணிகளாகும் என இதன் பங்கை சுருக்கமாக வரைவிலணக்கனஞ் செய்ய முடியும். கல்வி விடுமுறையை வழங்கல், பொது நடத்தைகளுடன் தொடர்புடைய விடயங்கள் என்பனவும் இப்பிரிவின் பணிகளில் உள்ளடங்கும். பொதுச் சேவை ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பாராளுமன்ற மதியுரைஞர் குழு, பல்வேறு முறையீடுகள் தொடர்பான பாராளுமன்ற அலுவல்கள் ஆணையாளர் அலுவலகம், ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள் போன்ற பல நிறுவனங்களுடன் தொடர்புடைய விடயங்களிலும் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. விவசாய அமைச்சின் வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்களிற்கு அமைய மேற்குறிப் பிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் பொறுப்பு இப் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது

பாதீடு

2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஒதுக்கீடுகள், செலவுகள் அனைத்தும் அட்டவணை 4.1.1 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1.1: வருடாந்தப் பாதீடு– 2012 (ரூபா)

செலவுத்தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	14,419,414.36	14,414,946.93	99.75
மீண்டு வரும் செலவீனம்	7,533,255.00	7,399,164.56	96.67
மொத்தம்	21,952,669.36	21,814,111.49	98.21

முன்னேற்றம்

நியமனங்கள்

விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட நியமனங்கள்.

பதவி	நியமனங்களின் எண்ணிக்கை
இலங்கை விவசாயச் சேவை	01
இலங்கை நிர்வாகச் சேவை	03
இலங்கை கணக்காளர் சேவை	02
இலங்கை பொறியியலாளர் சேவை	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை (சுப்ரா)	15
விவசாயப் போதனாசிரியர்கள்	156
ஆராய்ச்சி உதவியாளர்கள்	84
அச்சுக் கோப்பாளர்	01
களஞ்சிய உதவியாளர்	47
ஆராய்ச்சி உப உதவியாளர்கள்	12
விதைத் தொழில்நுட்பவியலாளர்கள்	12
உழவு இயந்திர இயக்குனர்	49
தாவர ஒட்டுபவர்	53
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	11

பதவி உயர்வுகள்

மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தில் பின்வரும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

பதவி	நியமனங்களின் எண்ணிக்கை
இலங்கை விவசாயச் சேவை II/I	12
மின்னியலாளர் II/I	04
உழவு இயந்திர இயக்குனர்	17

தரங்களிற்கு உள்ளீர்க்கப்பட்டவர்கள்

ஆராய்ச்சி உதவியாளர் விசேட தரம்	03
விவசாயப் போதனாசிரியர்கள் தரம் I	63
விவசாயப் போதனாசிரியர்கள் தரம் II	42
தொழிலாளர்கள்	510

சேவையிலிருந்து ஓய்வு பெற்றோர்

இலங்கை விவசாயச் சேவை	14
ஊடக உதவியாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்கள்	33
வேலைப் பரிசோதகர்	01
பொது முகாமைத்துவ உதவியாளாகள் (சுப்ரா)	33
பண்ணை முகாமையாளர்கள்	26
சாரதிகள்	16
இயந்திர பராமரிப்பாளர்	01
காய்ச்சி இணைப்பவர்	01
நீர் பம்பி இயக்குனர்	01
எந்திர வேலையாள்	01
தச்சர்	01
விதைத் தொழில்நுட்பவியலாளர்	16
ஆராய்ச்சி உப உதவியாளர்கள்	02
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
சமையற்காரர்	01
அலுவலக உதவியாளர்கள்	06
தொழிலாளர்கள்	02
துப்பரவு தொழிலாளர்	01

பணியாற்றும் போது இறந்தவர்கள்

இலங்கை விவசாயச் சேவை	02
இலங்கை கணக்காளர் சேவை	02
சாரதிகள்	03
உழவு இயந்திர இயக்குனர்	01
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
மேசன்	01

ஏனைய பதவிகளிற்கு விடுவிக்கப்பட்டோர்

இலங்கை விவசாயச் சேவை	01

பதவி வறிதாக்கப்பட்டோர்

இலங்கை விவசாயச் சேவை	01
விவசாயப் போதனாசிரியர்கள்	03
எந்திர வேலையாள்	01

இராஜினாமாச் செய்தோர்

இலங்கை விவசாயச் சேவை	01
விவசாயப் போதனாசிரியர்கள்	41
ஆராய்ச்சி உதவியாளர்கள்	06
பண்ணை இயந்திர போதனாசிரியர்	01

பதவி நீக்கம் செய்யப்பட்டோர்

விவசாயப் போதனாசிரியர்	01

மாகாண சபைகளிற்கு விடுவிக்கப்பட்டோர்

இலங்கை விவசாயச் சேவை	01
விவசாயப் போதனாசிரியர்கள்	07
ஆராய்ச்சி உதவியாளர்	01

பணியில் மீள அமர்த்தப்பபட்டோர்

இலங்கை விவசாயச் சேவை	01

ஒழுக்காற்று நடவடிக்கைகள்

அட்டவணை 4.1.2: 2012 இல் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று விசாரணைகள்

	2012 ஆரம்பத்தில் நிலுவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை	2012 இல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	2012 இல் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	2012.12.31அன்றுள்ளவாறு நிலுவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை
முறைப்பாடுகளின் ஆரம்ப புலன் விசாரணைகளும், ஆய்வுகளும்	87	69	46	100

நிதிப் பிரமாணங்கள் 104 விசாரணைகள்

அட்டவணை 4.1.2: 2012 இல் மேற்கொள்ளப்பட்ட நிதிப் பிரமாண விசாரணைகள்

2012 ஆரம்பத்தில் நிலுவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை	2012 இல் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	2012 இல் பூர்த்தி செய்யப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை	2012.12.31அன்றுள்ளவாறு நிலுவையிலிருந்த விசாரணைகளின் எண்ணிக்கை
540	91	145	486

அனுமதிக்கப்பட்ட கடன் தொகைகளும், வழங்கப்பட்ட சம்பள முற்கொடுப்பணவுகளும்

இடர் கடன்

அனுமதிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை 774
செலுத்திய தொகை ரூபா. 92,815,029.00

சைக்கிள் கடன்

அனுமதிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை 35
செலுத்திய தொகை ரூபா. 210,000.00

சொத்துக் கடன்

அனுமதிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை 57
செலுத்திய தொகை ரூபா. 61,603,000.00

மோட்டார் சைக்கிள் கடன்

அனுமதிக்கப்பட்ட செலவுச் சான்றுகளின் எண்ணிக்கை 09
செலுத்திய தொகை ரூபா. 1,350,000.00

'அக்ரஹாரா' காப்புறுதித் திட்டம்

- வைத்தியசாலைக் கட்டணம், மூக்குக் கண்ணாடிச் செலவுகளை மீளப் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டணச் சீட்டுகளின் பெறுமதி:
  ரூபா: 8,673,161.84
  விண்ணப்பங்களின் எண்ணிக்கை: 932
- சமர்பிக்கப்பட்ட மரணத்திற்கான கோரிக்கைகள் 06
- இயற்கை மரணத்திற்கான கொடுப்பணவு ரூபா 600,000.00
- இயற்கை மரணத்திற்காகச் சமர்பிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 12

விடுக்கப்பட்டக் கோரிக்கைகளிற்காக மீளச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை
ரூபா 8,673,161.84

பாதுகாப்பு வைப்புகள்

- ஓய்வு பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புகளின் எண்ணிக்கை: 73
- விடுவிக்கப்பட்ட தொகை: 1,085,690.53
- அரசாங்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டத் தொகை 8,677,582.08
- பாதுகாப்பு வைப்பிற்காக அமைச்சிற்கு சமர்பிக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புக ளின் எண்ணிக்கை 586

ஓய்வூதியக் கொடுப்பணவுகள்

ஓய்வூதியக் கொடுப்பணவுகளிற்காக பெறப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை

- ஓய்வூதியக் கொடுப்பணவுகள் 280
- மரணப் பணிக்கொடை 10
- கருணைத்தொகை 01
- முன்னைய பணிக்கு திரும்பிய மைக்கான கொடுப்பணவுகள் 195
- சிறு கொடுப்பணவுகளிற்கு விடுவிக்கப்பட்டவை 08

கல்வி விருமுறை

பட்டப்பின் கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடுகளிற்கு சென்ற அலுவலர்கள்

கலாநிதி பட்டம்

ஆராய்ச்சி உதவியாளர் 01

முதுமானி

பிரதிப் பணிப்பாளர் 01

உதவிப் பணிப்பாளர் 01

ஆராய்ச்சி அலுவலர்கள் 03

நிகழ்ச்சி உதவியாளர் 01

பட்டப்பின் கற்கைகளைப் பூர்த்தி செய்த பின்னர் திரும்பிய அலுவலர்கள்

முதுமானி

ஆராய்ச்சி அலுவலர்	01
தனிப்பட்ட விஜயம்	01

கலாநிதி

ஆராய்ச்சி அலுவலர்கள்	02

தீவிஹவ் பீஎஸ்சி,எம்எஸ்சி கற்கைகளிற்காக விடுவிக்கப்பட்டோர்

கலாநிதி

ஆராய்ச்சி அலுவலர்	01

முதுமானி

உதவி விவசாயப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	01

தீவிஹவ் பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தோர்

பீஎஸ்சி

விவசாயப் போதனாசிரியர்	01

முதுமானி

விவசாய அலுவலர்	01
விரிவுரையாளர்	03
ஆராய்ச்சி அலுவலர்	01

பயிற்சிகள், பட்டறை, ஏனைய மாநாடுகளிற்கு வெளிநாடு சென்றவர்கள்

பதவி	விஜயங்களின் எண்ணிக்கை
விவசாயப் பணிப்பாளார் நாயகம்	03
மேலதிக விவசாயப் பணிப்பாளர் நாயகம்	03
பணிப்பாளர்கள்	17
பிரதான பொறியியலாளர்	01
மேலதிகப் பணிப்பாளர்கள்	03
பீடைநாசினிகள் பதிவாளர்	01
பிரதிப் பணிப்பாளர்கள்	12
உதவி விவசாயப் பணிப்பாளர்கள்	12
பொறியியலாளர்கள்	04
விவசாயப் பொருளியலாளர்கள்	05
விரிவுரையாளர்கள்	12
ஆராய்ச்சி அலுவலர்கள்	43
விவசாய அலுவலர்கள்	05
பாட விதான விசேடத்துனர்	01
விவசாயப் போதனாசிரியர்கள்	10
நிகழ்ச்சி உதவியாளர்கள்	04
ஊடக உதவியாளர்	01
தொழில்நுட்ப உதவியாளர்	01
பண்ணை இயந்திர போதனாசிரியர்	01

உள்நாட்டுப் பயிற்சிகள்

வருடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டப் பயிற்சிகள்	பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை
பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான பயிற்சி	77
பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கான தனிப்பட்டக் சுயவிபரக் கோவைகளைப் பராமரித்தல் தொடர்பான பயிற்சி	97
பொது முகாமைத்துவ உதவியாளர்களிற்கும், ஏனைய இரண்டாம் நிலை அலுவலர்களிற்குமான	43

உற்பத்தித்திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சி	
பயிற்சிப் பட்டறை – 1, நிலை 1,	
பயிற்சிப் பட்டறை – 2, நிலை 1,	47
பயிற்சிப் பட்டறை – 3, நிலை 1,	78
சாரதிகளிற்கான தொழில்நுட்ப அறிவு தொடர்பான பயிற்சிப் பட்டறை	15

வெளி நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சிகளிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர்கள்	பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை
தேசிய சுவடிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆவண முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி	01
மத்திய வங்கி	02
பல்வேறு நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட தொழில்நுட்பம் அல்லாது வேறு பயிற்சிகள்	30
நிர்வாகப் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்டப் பயிற்சி	01
பொதுச் சேவை பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சிகள்	32

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 27 பயிலுனர்களிற்கு பிரயோக பயிற்சிக்கான வசதிகள் வழங்கப்பட்டன.

மீளப்பெறல்

உடன்படிக்கைகளை முறித்துக் கொண்ட அலுவலர்களிடமிருந்து மீளப்பெற்று அரசாங்கத்திற்கு செலுத்திய மொத்தத் தொகை ரூபா 4,182,187.56 ஆகும்.

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)	01
பணிப்பாளர் (நிர்வாகம்)	01
பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	01
உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	01
நிர்வாக அலுவலர்கள்	06
மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலம்)	02
மொழிபெயர்ப்பாளர்கள் (தமிழ்)	01
நிகழ்ச்சி அலுவலர்	11
சட்ட உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர்கள்	93
சாரதிகள்	06
அலுவலக உதவியாளர்கள்	21
காவலாளிகள்	06
தொழிலாளர்கள்	27
மொத்தம்	**178**

4.2 பொறியியற் பிரிவு (ED), பேராதனை

பொறியியற் பிரிவின் முதன்மை நோக்கமாகக் காணப்படுவது விவசாயத் திணைக்களத்தின் திணைக்கள இலக்குகளை அடைவதற்கு ஏற்ற வகையில் தரமான உட்கட்டமைப்பு வசதிகளைத் திறம் பட வழங்குவதாகும்.

பொறியியற் பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட முடியும்.

- மூலதனச் சொத்துக்களைப் பெறுதல்
  - குடியியல் சார் பொறியியல் நிர்மாணம்
  - இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு
- உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரித்தல்
  - கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள்
  - வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள்
  - அலுவலக உபகரணங்கள்
- ஏனைய சேவைகள்
  - குண்டசாலையில் காணப்படும் குடிநீர் வழங்கல் திட்டத்தின் செயற்படுத்துகையும் பராமரிப்பும்
  - விவசாயத் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பொறியியற் சார் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

இந்நிலையத்தின் மேற்படி சேவைகளை முன்னேற்றகரமாகவும் விரிவாகவும் வழங்கும் நோக்குடன் 4 இடங்களில் பிராந்திய பொறியியல் வேலைத் தளங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. (குண்டசாலை, சீதாஎலிய, பொலன்னறுவை மற்றும் அங்குணகொலபலஸ்ஸ)

மேற்படி நிலையங்களின் முக்கிய செயற்பாடுகளாக வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் சுத்தப்படுத்தி சீர்செய்தல் (Servicing) என்பன அமைகின்றன. அத்துடன் பிராந்திய ரீதியாக குடியியல் சார் பொறியியல் தேவைகளை வினைத்திறனான வகையில் நிறைவேற்றுவதற்காக 3 பிராந்திய அலுவலகங்களில் வேலைப் பரிசோதகர்கள் வதிவிடப்படுத்தப்பட்டுள்ளனர்.

பாதீடு

வெவ்வேறு செலவுத் தலைப்புகளின் கீழ் 2012 ஆம் ஆண்டில் பாதீட்டுக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவு செய்யப்பட்ட தொகைகளின் விபரங்கள் வருமாறு:

அட்டவணை 4.2.1. வருடாந்தப் பாதீடு 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனச் செலவு	2,892,245	2,124,748	73
நடைமுறைச் செலவு	8,835,945	7,893,912	89
மொத்தம்	**11,728,190**	**10,018,661**	**85**

முன்னேற்றம்

குடியியல் சார் பொறியியல் வேலைகளின் முன்னேற்றம்

இங்கு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட முடியும்.

- இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட புதிய நிர்மாண மற்றும் திருத்த வேலைகள்: இதில் மதிப்பீடு தயாரித்தல், கேள்வி மனுக்கோரல் முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்தங்களைக் கையளித்தல், வேலை மேற்பார்வை மற்றும் கொடுப்பனவுகளுக்கான அனுமதி வழங்கல் என்பன அடங்கும்.
- இப்பிரிவின் கடமைகளை நிறைவேற்றுவதற் கேற்ற வகையில் மதிப்பீடுகளைத் தயாரித்தல், வரையறுக்கப்பட்ட அளவில் காணப்படுகின்ற மனித வளப் பற்றாக்குறையின் காரணமாக (குறிப்பாக தொழில் நுட்ப அலுவலர்கள்) பொறியியற் பிரிவானது பணிப்பாளர்களின் வேண்டு கோள்களுக்குரிய மதிப்பீடுகளை மாத்திரம் தயாரிக்கின்றது.

இப்பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட குடியியல் சார் பொறியியற் வேலைகளின் சுருக்கம் வருமாறு

பெற்றுக் கொள்ளப்பட்ட வேண்டுகோள்கள்:-

- புதிய நிர்மாணங்கள் 149
- திருத்த வேலைகள் 549

மொத்தமாக மேற்கொள்ளப்பட்ட வேலைகள்

- அனுப்பி வைக்கப்பட்ட மதிப்பீடுகள் 454
- கோரப்பட்ட கேள்வி மனுக்கள் 167
- பராமரிப்புடன் தொடர்புடைய சிறு திருத்த வேலைகள் 80
- தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் 621

அட்டவணை 4.2.2 இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட குடியியல்சார் பொறியியல் வேலைகளின் பெறுமதி (பிரிவு வாரியான தொகுப்பு)

பிரிவு / விபரம்	வழங்கப்பட்ட பெறுமதி (ரூ)
நிருவாகம்	9,590,282.26
நிதி	2,310,084.56
பிஆஅநி	-
விஅதாபாநி	5,891,648.72
விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	42,850,107.65
சபொதிநி	852,440.00
பூஆஅநி	12,998,382.36
விநபொஅநி	26,130,686.23
இவமுநி	568,399.41
மபஆஅநி	4,561,365.59
பொறியியல் பிரிவு	1,055,398.59
மொத்தத் தொகை	**93,810,413.12**

இயந்திரவியல் மற்றும் மின் பொறியியற் வேலைகளின் முன்னேற்றம்

இந்நிறுவனத்தினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

a. கொள்வனவு வேலைகள்

- வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சுத்தப்படுத்தி சீர்படுத்தும் நிலையங்களின் பதிவு
- வழங்குனர்களை பதிவு செய்தல்

b. வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு

அட்டவணை 4.2.3 வாகனங்களின் பழுது பார்த்தல் மற்றும் வழங்கப்பட்ட பரிந்துரைகள்

வேலைத்தள அமைவிடம்	பாரிய திருத்த வேலைகள்	சிறு திருத்த வேலைகள்	பரிந்துரைகள்	மொத்தம்
குண்டசாலை	10	96	6	127
தலைமைக்காரியாலயம்			125	125
பொலநறுவை	3	17	45	73
அங்குணகொலபெலஸ்ஸ	40	95	200	346
சீதாஎலிய	9	92	96	208
மொத்தம்	**62**	**300**	**472**	**879**

c. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு

அட்டவணை 4.2.4 2012 ஆம் ஆண்டில் பொறியியல் பிரிவினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி

பிரிவு	தொகை
பொறியியற் பிரிவு	633,535.80
நிருவாகப் பரிவு	843,848.28
நிதிப் பிரிவு	1,845,817.00
விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	23,833,741.40
சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம்	346,447.60
விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	10,725,554.68
இயற்கை வள முகாமைத்துவ நிலையம்	731,579.80
பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனம்	3,448,077.54
விதை அத்தாட்சிப் படுத்தல் தாவரம் பாதுகாப்பு நிலையம்	22,662,918.43
வயற் பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	6,608,048.00
நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	2,878,078.50
முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு	170,672.40
விவசாய அமைச்சு	55,000.00
மொத்தம்	**74,783,319.43**

குண்டசாலை நீர்வழங்கல் திட்டம்

மேற்படி திட்டம் நாளாந்தம் மகாவலி ஆற்றில் இருத்து அண்ணளவாக 200,000 கலன் தண்ணீரை வழங்குகின்றது. இந்த நீர் வழங்கும் நிறுவனமானது நாள் ஒன்றுக்கு 18 மணித்தியாலங்கள் வேலை செய்வதுடன் இதன் வலு நுகர்வு அண்ணளவாக 60Kw ஆகவும் காணப்படுகின்றது. விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களமல்லாத

நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இத்திட்டம் மூலம் நீர் வழங்கப்படுகின்றது. குளோரினால் பரிகரிக்கப்பட்ட நீரானது குடித்தல் மற்றும் வீட்டுத் தேவைகளுக்காக வழங்கப்படுகின்றது. அதேவேளை குளோரினால் பரீகரிக்கப்படாத நீர் வறட்சிக் காலங்களில் விவசாயப் பண்ணைகளின் தேவைக்கு ஏற்றவாறு வழங்கப்படுகின்றது.

ஏனைய சேவைகள்

பொறியியற் பிரிவானது விவசாயத் திணைக்களத்தின் நிறுவனங்கள், நிலையங்கள், மற்றும் அலகுகள் ஆகியவற்றுக்கு அவற்றின் கட்டிட நிர்மாண வேலைகள் மற்றும் திருத்த வேலைகள் என்பவற்றுக்கான மதிப்பீடுகளை வழங்குவதோடு, வேலை மேற்பார்வை சேவையையும் வழங்குகின்றது. அத்துடன் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றின் திருத்த வேலைகளுக்கான மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளுக்கான சிபாரிசுகளையும் வழங்குகின்றது. சேவைக்குட்படுத்த முடியாத வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றைப் பரீட்சித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலையும் மேற்கொள்கின்றது. கேள்வி மனுக்கோரல் சபையின் தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் ஆலோசனை சேவை வழங்குதல் போன்றவற்றிலும் இப்பிரிவு துடிப்புடன் பங்கேற்கின்றது.

பொறியியற் பிரிவின் அலுவலர்கள்

பயிற்றப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் களின் பற்றாக்குறையின் காரணமாக இப்பிரிவின் வேலை செய்யும் கொள்ளளவு, வினைத்திறன் மற்றும் செயற்றிறன் என்பன வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. தற்போது தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பல பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றது. மேற்படி தடைகளில் காரணமாக புதிய குடியியல் சார் பொறியியல் வேலைகளை மேற்கொள்வதில் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதேவேளை வழமையான செயற்பாடுகளான குண்டசாலையில் உள்ள நீர் வழங்கல் திட்டத்தைச் செயற்படுத்துதல், போன்றவற்றையும் சீராக மேற்கொள்ள முடியாமல் உள்ளது. தற்போது இந்நிலையத்தில் போதிய அளவிலான வேலை மேற்பார்வையாளர்கள், கட்டிட மேற்பார்வையாளர்கள் மற்றும் பட வரைஞர்கள் இல்லாததால் குடியியல் சார் பொறியியற் வேலைப் பழுவைக் கையாள்வது கடினமாக உள்ளது.

2013 ற்கான திட்டம்

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	எதிர்பார்க்கைக் காலம்
2011 – அலுவலர் விடுதிகளின் திருத்த வேலை	1,500,000.00	ஒக்டோபர் 2012
2102 – அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	450,000.00	ஓகஸ்ட் 2012
2103 - இயந்திரங்கள்	300,000.00	ஜுன் 2012
2105 – நில விருத்தி	500,000.00	நொவம்பர் 2012
2401 பயிற்சி, தகுதி மேம்பாடு	300,000.00	நொவம்பர் 2012

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பிரதான பொறியியலாளர்	01
இயந்திரப் பொறியியலாளர்	02
குடிசார் பொறியியலாளர்	02
மின் பொறியியலாளர்	01
பொறியியல் உதவியாளர்	02
வேலை மேற்பார்வையாளர்	06
பொறியியல் போமன்	01
பண்ணை இயந்திர ஆலோசகர்	03
நிர்வாக உத்தியோகத்தர்	02
முகாமைத்துவ உதவியாளர்	14
சாரதிகள்	06
இயந்திரங்கள் பழுது பார்ப்பவர்	12
மின்னியலாளர்	03
தச்சன்	02
மேசன்	01
தகர ஒட்டுனர்	01
தகர வேலையாளர்	01
பொறி இயக்குனர்	01
களஞ்சிய பொறுப்பாளர்	02
தொழிலாளி (விசேட - களஞ்சிய)	01
அலுவலக உதவியாளர்	01
காவலாளி	02
தொழிலாளி	10
மொத்தம்	**77**

4.2.1 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (FMRC), மகாஇலுப்பள்ளம

பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையமானது (FMRC) அனுராதபுர நகரில் இருந்து 35km தொலைவில் உள்ள மகாஇலுப்பள்ளம விவசாயக் கூட்டுத் தொகுதியில் அமையப் பெற்றுள்ளது. இலங்கையில் பண்ணை இயந்திர மயமாக்கலுடன் தொடர்புடைய தொழில் நுட்பங்களை அறிமுகப் படுத்துவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்தல், விவசாய உற்பத்திகளின் அளவை அதிகரித்தல், தரமான உற்பத்திகளைப் பெறுதல் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக FMRC ஆனது நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையில் வெவ்வேறு பிரதேசங்களில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் வயல் நிலமைகளுடன் பொருத்தக் கூடிய வினைத்திறனான விவசாய இயந்திரமயமாக்கல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதே FMRC இன் முக்கிய நோக்கமாகும். FMRC யினால் நிறைவேற்றப்படுகின்ற ஏனைய செயற்பாடுகள் வருமாறு:-

- வேறுபட்ட விவசாயத் தொகுதிகளில் நிலவுகின்ற தடைகளுக்கு உகந்த இயந்திரமயமாக்கல் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் அடையாளங் காணல்
- கட்டமைப்பு, தொழிற்பாடு, சமூக மற்றும் பொருளாதார காரணிகளுக்கு ஏற்புடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பரிசோதித்தலும் தெரிவு செய்தலும்
- உள்ளூர் நிலமைகளுக்குப் பொருத்தமான உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் அபிவிருத்தி, மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் இசைவாக்கம்
- தெரிவு செய்யப்பட்ட உபகரணங்களுக்கான தொழில்நுட்ப வரைதல்கள், பரிசோதனை அறிக்கை மற்றும் அறிவுறுத்தல் கையேடு ஆகியவற்றின் உருவாக்கம்
- பொருத்தமான விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உற்பத்தி தொடர்பில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்பங்களை வழங்குதலும் அவர்களது உற்பத்தித் திறனை அதிகரித்தலும்
- விவசாய இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையேயும் ஏனைய பாவனையாளர்களிடையேயும் பிரபல்யப்படுத்தும் முகமாக விவசாய விரிவாக்கல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உதவி புரிதல்

இந்நிறுவனமானது பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகின்றது

1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. பரிசோதனை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
3. விவசாய மற்றும் கைத்தொழில் விரிவாக்கல் பிரிவு
4. பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைப் பிரிவு
5. நிர்வாகப் பிரிவு

பாதீடு

வேறுபட்ட செலவுத் தலைப்புகளின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 4.2.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபாய்)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவுவீதம்
நடைமுறைச் செலவு	6,054,710.16	5,830,487.77	96.29
மூலதனச் செலவு	2,355,196.00	2,173,716.92	92.29
மொத்தம்	**8,409,906.16**	**8,004,204.69**	**95.17**

முன்னேற்றம்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

விதை நெல் சுத்தமாக்கி

உயர் கொள்ளளவுடைய விதை நெல் சுத்தமாக்கும் இயந்திரத்திற்கு தன்னிச்சையாகச் செயற்படக் கூடிய உள்வழங்கும் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பகுதிகளைப் பரீட்சிக்கும் செயற்பாடு தொடர்கிறது. அத்துடன் தற்போது காணப்படுகின்ற விதை நெல் சுத்தமாக்கி மற்றும் தானிய சுத்தமாக்கியைப் பயன்படுத்தி ஆரம்பக் களப் பரிசோதனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அச்சுப் சுழற்சிக்குரிய நீர் இறைக்கும் இயந்திரம்

நான்கு சக்கர உழவு இயந்திரத்தினால் வலு வழங்கக்கூடிய அச்சுச் சுழற்சிக்குரிய நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று வடிவமைக்கப்பட்டு பொருத்தி வெற்றிகரமாகப் பரிசோதிக்கப் பட்டுள்ளது.

தாழ் நில வலுக் களைகட்டும் கருவி

தற்போது காணப்படுகின்ற களைகட்டும் கருவியில் உள்ள குறைபாடுகள் அடையாளங் காணப்பட்டு, புதிய வலுக் களைகட்டும் கருவி ஒன்று (Proto type) வடிவமைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட உட்புகுத்தி நாற்று நடுங் கருவி

நான்கு சக்கர உழவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட உட்புகுத்தி நாற்று நடுங் கருவியுடன் பசளைப் பிரயோகிப்பான் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

Riding type Drum Seeder

முதலான வகையின் பரீச்சித்தல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் வயல் செயலாற்றல் பரிசோதனையும் நிறைவேற்றப் பட்டுள்ளது. வர்த்தக அளவிலான உற்பத்திககு ஏற்ற வகையில் இறுதி வடிவமைப்பு செய்வதற்கான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தற்போது காணப்படுகின்ற நிலக்கடலை கோதுடைக்கும் கருவியில் மாற்றங்கள்

தற்போது காணப்படுகின்ற இயந்திரத்தில் அடிப்படையான மாற்றங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது காணப்படுகின்ற அவரைத் தானிய பதப்படுத்தும் இயந்திரத்தில் மாற்றம்

இதில் சுத்தப்படுத்தும் மற்றும் தரப்படுத்தும் பிரிவுகள் பொருத்தப்பட்டு பரீட்சிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வயல் பரிசோதனைகளும் நடைபெற்றுள்ளது.

விவசாய மற்றும் கைத்தொழில் விரிவாக்கற் பிரிவு

பண்ணை இயந்திரங்களின் கற்றல் மற்றும் பயிற்சி நோக்கங்களுடன், இந்நிறுவனத்திற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் அடங்கலாக பட்டப் படிப்பு மாணவர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் எனப் பல்வேறு தரப்பினர் வந்து சென்றுள்ளனர்.

நெல் இயந்திரமயமாக்கல் பொதி, சோள இயந்திரமயமாக்கல் பொதி, வெள்ள நீர்ப்பாசனத் தொகுதி போன்றவற்றில் விவசாயிகளுக்கும் மற்றும் விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் உடனடி அனுபவ அறிவை வழங்கும் நோக்குடன் இலங்கையின் பல்வேறு இடங்களில் வயல் செய்து காட்டல்கள் இடம் பெற்றன. ஓயமடுவவில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம் மற்றும் கன்னொறுவையில் இடம் பெற்ற விவசாயிகள் வாரம் போன்ற கண்காட்சி நிகழ்வுகள், பண்ணை இயந்திரங்கள் தொடர்பிலான மிகவும் பிரயோசனமான தகவல்களை வழங்குவதில் சிறந்தவையாக அமைந்திருந்தன.

அட்டவணை 4.2.2 2012 காலப் பகுதியில் இடம் பெற்ற விரிவாக்கல் நிகழ்ச்சிகள்

நிகழ்ச்சியின் வகை	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
வயல் செய்து காட்டல்கள்	25
வானொலி நிகழ்ச்சிகள்	03
கண்காட்சிகள்	02
வருகை தந்தோர்	1838

பரிசோதனை மற்றும் மதிப்பீட்டு பிரிவு

பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்தின் மேற்படி பிரிவானது இலங்கையின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற இயந்திரங்களைப் பரிசோதித்து மதிப்பீடு செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளது. பின்வரும் இயந்திரங்கள் 2012ஆம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்டன.

அட்டவணை 4.2.3 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பரிசோதிக்கப்பட்ட இயந்திரங்கள்

இயந்திரத்தின் வகை	பெறபட்ட இயந்திரங்கள்	சித்தியடைந்தவை	சித்தியடையாதவை	பரிசோதனையில் உள்ளவை
நான்கு சக்கர உழவு இயந்திரங்கள்	4	1	2	4
இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள்	1	2	2	7
கைத் தெளி கருவிகள்	3	3	4	1
வலுத் தெளி கருவிகள்	2	2	1	6
சுழல் பண்படுத்தி	-	-	-	2
இணைந்த அருவி வெட்டும் கருவி	1	-	-	1
உழவு இயந்திரத்துடன் இணைந்த உபகரணங்கள்	-	-	2	8
நீர் இறைக்கும் இயந்திரங்கள்	5	3	-	11
பல் துண்டாக்கி	1	1	-	1
கைக்கருவிகள்	7	7	8	4
மொத்தம்	**24**	**19**	**19**	**45**

பண்ணை இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைப் பிரிவு

இப்பரிவானது விவசாயத் திணைக்களத்தின் பண்ணை இயந்திரங்களினதும் வாகனங்களினதம் திருந்த வேலைக்களுக்காக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அத்துடன் சகல வகை இயந்திரங்களின் திருத்த வேலைகளுக்கான பரிசோதனை, மதிப்பீடு, திருத்த வேலைச் சிபாரிசு, மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றையும் வழங்குகின்றது. 2012 காலப் பகுதியில் பின்வரும் பரிந்துரைகள் திருத்த வேலைகளுக்காக வழங்கப்பட்டன.

அட்டவணை 4.2.4 பண்ணை இயந்திரங்களின் பராமரிப்பும் திருத்த வேலையும்

	பாரம் குறைவான இயந்திரங்கள் (வெளியே)	பாரம் குறைவான இயந்திரங்கள் (FMRC)	உந்துருளி (வெளியே)	உந்துருளி (FMRC)	பார இயந்திரங்கள் (வெளியே)	பார இயந்திரங்கள் (FMRC)	மொத்தம்
பரிந்துரைகளின் எண்ணிக்கை	98	00	13	00	47	00	158
திருத்த வேலைகளின் எண்ணிக்கை	51	14	07	04	23	10	109

மொத்தமாக 13 சேவைகள் 2012 காலப் பகுதியில் நிறைவு செய்யப்பட்டடுள்ளன

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
இயந்திர பொறியியலாளர்	04
பொறியியல் பட வரைஞர்	01
பொறியியல் போமன்	01
முகாமைத்துவ உதவியாளர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	01
பண்ணை இயந்திர ஆலோசகர்	02
விவசாய ஆலோசகர்	02
சாரதி	02
களஞ்சிய சாலையாளர்	01
உழவு இயந்திர இயக்குனர்	02
வேலைத் தள உதவியாளர்	02
இயந்திர வல்லுனர்	03
இயந்திர திருத்துனர்	02
பொருந்துனர்	01
ஒட்டுனர்	02
தகட்டுத் தொழிலாளி	01
பொற் கொல்லன்	01
தச்சன்	01
காவலாளி	01
திறனற்ற தொழிலாளி	09
அமைய ஊழியர்	29
மொத்தம்	**71**

4.3 நிதிப் பிரிவு (FD), பேராதனை

நிதிப் பிரிவின் பிரதான நோக்கங்கள்

- விவசாயத் திணைக்களத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு வினைத்திறனான நிதி முகாமைத்துவத் தொகுதியினை ஸ்தாபித்த லும் நடைமுறைப்படுத்தலும் ஆகும்.

நிதிப் பிரிவின் தொழிற்பாடுகளாவன

- வருடாந்த வருமான மற்றும் செலவின மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- வங்கிக் கணக்குகளைப் பேணல்
- திணைக்கள, அமைச்சின் கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்தல்.
- திணைக்களத்தின் வருவாயை வசூலித்தலும் கணக்கீடு செய்தலும்
- எல்லா வகையான மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களை வகுத்தல் இதில் தனிநபர் வருமானம் உள்ளடக்கப் படும்.
- உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- நிதி தொடர்பான முன்னேற்ற அறிக்கை களைத் தயாரித்தலும் மதிப்பீடு செய்தலும்
- உள்ளூர், வெளியூர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நிதி நடவடிக்கை களை இணைத்தல்
- வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- பண்ணை முற்பணக் கணக்கீட்டு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தல்
- இறுதிக் கணக்கினை ஒதுக்கீடு மற்றும் வருமானக் கணக்கு உள்ளடங்கலாகத் தயாரித்தல்
- வருடாந்த பொருட் கணக்கீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல்
- தொழிலாளர்களுக்கான கடன் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்
- கணினிப் பிரயோகம், நிதி முகாமைத்துவம் சம்பந்தமாகப் பயிற்சி வழங்கல்

முன்னேற்றம்

மூலதனச் செலவினம்

அட்டணை 4:3:1: 2012ம் ஆண்டு காலப்பகுதிக்கான மூலதனச் செலவீனம் (ரூ '000)

செயற் திட்டம்	செயற்திட்ட விபரணம்	மீள்பரீசிலிக்கப் பட்ட மதிப்பீடு	செலவு	முன்னேற்றம் %
285-1-1	நிர்வாகமும் ஸ்தாபிப்பு சேவையும்	25.753	21.891	85.01
285-2-2	விவசாய ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்	403.859	290.949	72.04
285-2-3	விவசாய விரிவாக்கமும் பயிற்சியும்	125.385	115.148	91.84
285-2-4	விதை அத்தாட்சிப்படுத்தலும் பயிர்ப்பாதுகாப்பும்	817.283	727.359	89.00
	மொத்தம்	**1,372,280**	**1,155,348**	**84.19**

2012ம் ஆண்டிற்கான கட்டுநிதியின் பற்றாக்குறை காரணமாக மூலதன செயற்திட்டத்தில் எதிர்ப்பார்க்கப்பட்ட நிதி முன்னேற்றம் எய்தப்படவில்லை. இதன் காரணமாக வைப்புக் கணக்கிலிருந்து 122 மில்லியன் ரூபாய்கள் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் மாற்றீடு செய்யப்பட்டன.

ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமான மூலதனச் செலவீனமும் அதனுடன் தொடர்புடைய பொறுப்புகளும் கீழ்வருமாறு

பொறுப்புக்களுடனான மூலதனச் செலவீனம்

அட்டவணை 4.3.2: 2012ம் ஆண்டிற்கான பொறுப்புகளுடனான மூலதனச் செலவீனம் (ரூபாய் 000)

செயற்திட்டம்	செயற்திட்ட விபரணம்	மீள்பரிசீலிக்கப்பட்ட மதிப்பீடு	பொறுப்புக்களுடனான செலவு	முன்னேற்றம் (%)
285-1-1	நிர்வாகமும் ஸ்தாபிப்பு சேவையும்	25,753	22,465	87.23
285-2-2	விவசாய ஆராச்சியும் அபிவிருத்தியும்	403,859	365,805	90.58
285-2-3	விவசாய விரிவாக்கமும் பயிற்சியும்	125,385	119,627	95.41
285-2-4	விதை அத்தாட்சிப்படுத் தலும் பயிர்ப் பாதுகாப்பும்	817,283	770,139	94.23
	மொத்தம்	**1,372,280**	**1,278,037**	**93.13**

மீண்டுவரும் செலவீனம் – 2012

அட்டவணை 4.3.3: 2012ம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவீனம் (ரூபாய் 000)

செயற் திட்டம்	செயற்திட்ட விபரணம்	மீள்பரிசீலிக்கப்பட்ட மதிப்பீடு	செலவு	முன்னேற்றம் (%)
285-1-1	நிர்வாகமும் ஸ்தாபிப்பு சேவையும்	202,235	221,690	99.58
285-2-2	விவசாய ஆராச்சியும் அபிவிருத்தியும்	773,956	769,386	99.41
285-2-3	விவசாய விரிவாக்கமும் பயிற்சியும்	586,915	581,822	99.13
285-2-4	விதை அத்தாட்சிப்படுத் தலும் பயிர்ப் பாதுகாப்பும்	410,994	409,957	99.75
	மொத்தம்	**1,994,498**	**1,982,855**	**99.42**

முற்பணக் கணக்கின் தொழிற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

அட்டவணை 4.3.4: 2012ம் ஆண்டிற்கான முற்பணக் கணக்கின் தொழிற்பாடுகள் (ரூபாய் 000)

விபரம்	அனுமதியளிக்கும் எல்லை மீள் பரிசீலிக்கப்பட்டது (ரூபா)	சரியான தொகை (ரூபா)
1. விவசாயப் பண்ணையைப் பராமரித்தல்		
அதிகூடிய செலவு எல்லை	385,000	382,826
குறைந்த வருமான எல்லை	375,000	404,861
2. பொதுச் சேவையாளர்களின் முன்னேற்றக் கணக்கு		
அதிகூடிய செலவு எல்லை	180,000	165,925
குறைந்த வருமான எல்லை	110,000	164,017

பண்ணை முற்பணக் கணக்கு

பண்ணை முற்பணக் கணக்கின் விபரம் வருமாறு

இலாப நட்டக் கணக்கு

2002ம் ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரையான காலப்பகுதியின் பண்ணை முற்பணக் கணக்கிற்கான இலாப நட்டக் கணக்கு வருமாறு

அட்டவணை 4.3.5: இலாப நட்டக் கணக்கு

ஆண்டு	மானியம் மாற்றம் செய்ய முன்னர் இலாபம் / இழப்பு (மில்லியன் ரூபாய்)	மானியம் (மில்லியன் ரூபாய்)	அபிவிருத்தி மானியம் மாற்றம் செய்த பின்னர் தேசிய இலாபம் / நட்டம் (மில்லியன் ரூ)
2002	-21.6	-	-21.6
2003	-28.5	-	-28.5
2004	-44.3	-	-44.3
2005	-24.6	39.0	14.4
2006	-50.6	51.0	00.4
2007	14.0	50.0	64.0
2008	-94.0	50.0	-44.0
2009	1.3	50.0	51.3
2010	2.2	50.0	52.2
2011	-60.7	-	-60.7
2012	67.3	-	67.3

2012ம் ஆண்டு இந்த கணக்கு மாதிரியானது மாற்றியமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த நிதிப் பிரமாணங்கள், கணக்கு நியமங்கள் என்பவற்றின் கணக்கு மாதிரிகள் புதுப்பிக்கப்பட்ட பின்னர் பின்பற்றப்படவுள்ளன. அத்துடன் இப்புதிய கணக்கு மாதிரியில் நிதிப் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகள் மாற்றியமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது.

2012 ஆண்டிற்கான கணக்கில் பின்வரும் விபரணங்கள் விபரிப்பு

அட்டவணை 4.3.6: 2012ம் ஆண்டிற்கான கணக்கிற்கான விபரிப்பு

விபரம்	தொகை (மில்லியன் ரூபாய்)
வேலை இலாபம்	182.73
மாற்றம் செய்ய முன்னர் பெயரளவிலான தேறிய இலாபம்	67.328
மாற்றம் செய்த பின்னர் பெயரளவிலான தேறிய இலாபம்	51.333

2012ம் ஆண்டின் ஆரம்பத்தில் கடுமையான வறட்சி நிலவியது. (இந்நிலை அரசாங்கத்தினால் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு விதை நெல் விநியோகம் செய்தமை மூலம் உறுதிப்படுத்தப்படும்) இவ்வாண்டின் இறுதியில் வெள்ள அனர்த்தம் இடம் பெற்றது. இதன் காரணமாக "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சி பிற்போடப்பட்டு 4.02.2013 தொடக்கம் 23.03.2013 வரை இடம் பெற்றது. ஏனெனில் வெள்ள அனர்த்தம் காரணமாக தேசத்திற்கு மகுட கண்காட்சியின் கட்டுமானப் பணிகள் தடைப்பட்டது. இது 2012ம் ஆண்டின் வெள்ள அனர்த்தத்திற்கு ஆதாரமாகக் கொள்ளப்படு கின்றது. தகாத நிலைமைகள் நிலவியும் கூட நோக்கங்கள் எய்தப்பட்டதை எண்ணி நாம் திருப்தியடையலாம். 2012ம் ஆண்டில் எய்தப்பட்ட முன்னேற்றம், முற்பணக் கணக்கின் வரலாற்றில் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

விசேட செயற்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு திணைக்கள வாக்குகளின் கீழ் பெறப்படல்

அட்டவணை 4.3.7: விசேட செயற்திட்டங்களுக்கான ஒதுக்கீடும் செலவீனமும் (ரூபா 000)

சுட்டெண்	செலவு விடய இலக்கம்	செயற்திட்டத்தின் பெயர்	மீள்பரிசீலிக்கப்பட்ட ஒதுக்கீடு	உண்மை செலவு	முன்னேற்றம் (%)
01	285-2-2-22502	நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேம்பாட்டிற்குத் தேவையான உட்கட்டமைப்பு அபிவிருத்தி	67,505	65,408	96.89
02	285-2-2-3-2502	கலப்பின நெல், சோள அபிவிருத்தி பழம் மற்றும் காய்கறிகள்	9,000	8,176	90.84
03	285-2-24-2502	சிறியளவிலான விவசாய ஆராய்ச்சி செயற்திட்டம் (US)	15,000	14,999	100
04	285-2-3-2-2105	விவசாயப் பாடசாலைப் பண்ணைகள்	20,000	18,418	92.09
05	285-2-3-4-2502	ஊடக நிகழ்ச்சிகள்	26,200	26,199	100
06	285-2-3-6-2401	விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு(ASDA)	3,000	2,879	95.98
07	285-2-4-1-2502	விதை உற்பத்தியும் கொள்வனவும் நிகழ்ச்சித் திட்டம்	432,162	431,661	99.88
08	285-2-4-4-2502	விதைச் சட்டம்	17,000	13,969	82.17
09	285-2-3-7-2502	விவசாயத் தொழில்நுட்ப பூங்கா	4,500	3,458	76.85
10	285-2-4-5-2502	பண்ணை அபிவிருத்தியை விரைவுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்	236,460	216,443	91.53
11	285-2-4-7-2502	விதை அத்தாட்சிப்படுத்தல் தொழிற்பாட்டினை உறுதிப்படுத்தல்	53,120	11,324	21.32

வருமதிகளைச் சேகரித்தல்

2012ம் ஆண்டு காலப்பகுதியில் வருமானங்களை சேகரித்தல்

வருமானத் தலைப்பு	வகை	உண்மையான பற்றுச்சீட்டு (ரூபா 000)
20-02-02-99	கடனுக்கான வட்டி	14,901
20-03-02-99	ஏனைய சொத்துக்களை விற்றல்	812
20-03-99-00	ஏனைய பற்றுச் சீட்டுக்கள்	181,809
20-02-01-01	வாடகையும் ஏனையவையும்	18,331
20-03-02-18	திணைக்கள விற்பனையும் ஏனைய கட்டணங்களும்	140,236
20-04-01-00	விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் (W & O.)	67,582
	மொத்தம்	**423,671**

அலுவலர் பட்டியல்

பதவி	இலக்கம்
பிரதம கணக்காளர்	01
பிரதிப் பணிப்பாளர் (நிதி)	06
உதவிப் பணிப்பாளர் (நிதி)	02
பாதீட்டு உதவியாளர்	02
மொழி பெயர்ப்பாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர்	83
K.K.S	07
சாரதிகள்	04
திறனற்ற பணியாட்கள்	14
மொத்தம்	**120**

4.4 முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு (PMEU), பேராதனை

முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டலகானது விவசாயத் திணைக்களத்தின் எல்லா நிறுவனங்களினதும், நிலையங்களினதும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. இதற்கு மேலதிகமாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையைத் தயார் செய்தல், வருடாந்த நிறைவேற்று அறிக்கையைத் தயார் செய்தல், மாதாந்த முன்னேற்ற அறிக்கையினைத் தயார் செய்தல் மற்றும் ஏனைய தொடர்புடைய அறிக்கைகளைத் தயார் செய்து விவசாய அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்க ளுக்கும் வழங்குவதற்குப் பொறுப்பாயுள்ளது. முன்னேற்ற வெளிப்பாட்டுக் கூட்டங்கள் PMEU னாலேயே ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதனால் விவசாயத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை ஓர் ஒழுங்கு முறையில் கொண்டு நடாத்தக் கூடியதாகவுள்ளது.

பாதீடு

அட்டவணை 4.4.1: வருடாந்தப் பாதீடு – 2012 (ரூபா)

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	1,006,168	696,942	70
மீண்டுவரும் செலவீனம்	1,844,700	1,467,639	80
மொத்தம்	**2,850,868**	**2,164,581**	**76**

முன்னேற்றம்

செயல் திட்டங்களின் தொகுப்பு

2012ம் ஆண்டிற்கான செயல்திட்டம் பின்வரும் தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

- மூலதனச் செலவு
- மீண்டு வரும் செலவீனம்
- விவசாயத் திணைக்களத்தினூடாக முதலீடு செய்யப்படும் விசேட கருத்திட்டங்கள்
- விவசாய அமைச்சினனூடாக முதலீடு செய்யப்படும் விசேட கருத்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் கேள்வி கோரல் திட்டம்.

மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவின முன்னேற்றக் கண்காணிப்பு

பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் சம்பந்தமான மூலதன வேலைகளும் மீண்டுவரும் செலவீனங்களையும் கண்காணித்தல் 2012லும் தொடரப்பட்டது. மூலதன மற்றும் மீண்டுவரும் செலவீனம் சார்ந்த மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு விவசாய அமைச்சிற்கு ஒப்புவிக்கப்பட்டது.

அட்டவணை 4.4.2: 2012ம் ஆண்டிற்கான விவசாயத் திணைக்களத்தின் (DOA) முன்னேற்றத்திற்கான சுருக்கம்

செலவுத் தலைப்பு	ஒதுக்கீடு (மில்.. ரூபா)	செலவு (மில்.. ரூபா)	செலவு%
மூலதனம்	324	209	64
மீண்டுவரும் செலவீனம்	1994	1982	99
விவசாயத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழுள்ள			
கருத்திட்டங்கள்	1048	946	90
அமைச்சின் கீழ் உள்ள கருத்திட்டங்கள்	141	103	73
மொத்தம்	**3507**	**3240**	**92**

விஷேட கருத்திட்டங்களுக்கான முன்னேற்றக் கண்காணிப்பு

விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்புக்களின் கீழுள்ள விஷேட கருத்திட்டங்கள்

விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் 14 விஷேட கருத்திட்டங்கள் கண்காணிக்கப்படுவதுடன் மாதாந்த அறிக்கைகள் அதாவது பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் உள்ளடங்கலாக தயாரித்து விவசாய அமைச்சிற்கு ஒப்புவிக்கப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் விசேட கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம் அட்டவணை இல 4.4.3. இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4.3: 2012ம் ஆண்டு காலப்பகுதியில் விவசாயத் திணைக்கள செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

கருத்திட்டம்	நிறுவனம்	நிதி ஒதுக்கு மில் ரூபா.	செலவு மில் ரூபா	செலவு%
1. நில மற்றும் நில முன்னேற்றம்	DOA	64.2	60.38	94
2. பயிற்சியும் கொள்ளளவு விருத்தியும்	DOA	14.78	12.32	83
3. உட்கட்டமைப்பு அபிவிருத்தி	RRDI/	67.5	65.4	96.9
4. கலப்பின வித்துக்களின் அபிவிருத்தி	FCRDI/ HORDI/ RRDI/	9.0	8.17	90
5. சிறிய அளவிலான கருத்திட்டம்	RRDI/ HORDI/	15	15	100
6. தேசிய விவசாய ஆராச்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்தல் (NARP)	DOA	80	53.58	67
7. இழைய வளர்ப்புத் தொழில்நுட்பம்	HORDI	25.3	25.28	99.9
8. வெகுஜன தொடர்பு நிகழ்ச்சிகள்	ETC	26.2	26.2	100
9. விவசாயத் திணைக்களத்தின் வருடாந்தக் கருத்தரங்கு	ETC	3	2.88	96
10. விவசாயத் தொழில்நுட்பப் பூங்கா	ETC	4.5	3.46	77
11. விதையுற்பத்தியும் கொள்வனவும் நிகழ்ச்சித்திட்டம்	SPMDC	432	431.7	99.9
12. விதைச்சட்டத்தினை அமுல்ப்படுத்தல்	SPMDC	17	13.97	82
13. விதைப் பண்ணைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை துரிதப்படுத்தல்	SPMDC	236.46	216.44	91.5
14. விதை அத்தாட்சிப்படுத்தல் தொழிற்பாட்டினை பலப்படுத்தல்	SPMDC	53.12	11.32	21
மொத்தம்		**1048**	**946**	**90**

அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் விஷேட கருத்திட்டங்கள்

விவசாய அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழுள்ள 18 விஷேட கருத்திட்டங்கள் கண்காணிக்கப்படு வதுடன் மாதாந்த நிதி மற்றும் பௌதிக அறிக்கைகள் அமைச்சிற்கு ஒப்புவிக்கப்பட்டது. அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் விஷேட கருத்திட்டங்களுக் குரிய நிதி சம்பந்தமான முன்னேற்றம் அட்டவணை 4.4.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.4.4: அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படும் விசேட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

கருத்திட்டம்	நிறுவனம்	நிதி ஒதுக்கு மில் ரூபா.	செலவு மில் ரூபா	செலவு%
1. நில அபிவிருத்தி	GLORDC	0.5	0.5	100
2. உயிரினப் பல்வகைமைப் பூங்கா	FCRDC	6.4	5.9	92
3. பண்ணை அபிவிருத்தி	DOA	75.95	63.85	84
4. MR விளையாட்டுக் கட்டடத் தொகுதி	FCRDC	25	14.45	58
5. சமுதாயம் சார்ந்த விதையுற்பத்திக் கிராமம்	SPMDC	6	5.26	88
6. பழங்களின் உற்பத்தி	FCRDC	10	8.43	84
7. LCWZ ல் நெல்லின் உற்பத்தித் திறனை உயர்த்தல்	RRDI	5	2.1	42
8. CO_2 னால் நிரப்பப்பட்ட சூழலில் பரிசோதனை	HORDI	2.325	1.773	76
9. பூச்சி நாசினிகளின் பாவனையைக் குறைத்தல்	ROP	5.3	1.75	33
10. டுரியனினதும் மன்ஜினதும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்	FCRDC	1.116	0.53	47
11. விவசாய வானொலி அலைவரிசை	FBS	5	0.655	13
12. சேதன உர உற்பத்தி	RARDC மாக்கந்துறை	9.87	8.798	89
13. மண் பாதுகாப்புச் சட்டம்	NRMC	2.5	1.74	69

14. நுண் நீர்ப்பாசனம்	ETC	2.8	2.799	100
15. தேசிய விவசாயிகள் தினம்	ETC	5	4.429	88.5
16. தேசத்திற்கு மகுடம்	ETC	10.5	10.499	100
	FCRDI	0.5	0.4	80.6
	HORDI	0.1	0.096	96
	ICC	19.898	8.595	43
17. அரிசி ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டம்	ETC	7.858	0.345	4.4
18. பருவம் அல்லாத காலத்தில் சின்ன வெங்காய உற்பத்தி	FCRDI	0.555	0.471	84
மொத்தம்		**202**	**143**	**71**

விவசாயத் திணைக்களத்தின் அடைவுகள் (Achievements)

2012ம் ஆண்டிற்கான விவசாயத் திணைக்களத்தின் அடைவகளின் தொகுப்புக்கள் விவசாய அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் ஒப்புவிக்கப்பட்டது. காரணம் இவ் முன்னேற்ற அறிக்கையானது பாதீட்டு உரைக்கான முன்னோடியாக இருப்பதுடன் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டது.

வருடாந்த செயலாற்றல் அறிக்கை

விவசாயத் திணைக்களத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டறிக்கையானது தயார் செய்யப்பட்டு பாராளுமன்றம், தொடர்புடைய அமைச்சுக்கள், பல்கலைக்கழங்கள், நூலகங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

ஏனைய அறிக்கைகள்

''மஹிந்த சிந்தனையின் கீழ் உள்ளடக்கப்படும் செயற்பாடுகளுக்குரிய முன்னேற்ற அறிக்கைகளுக்கும் கருத்திட்டங்களுக்குமான மதிப்பீடு செய்யப்பட்ட தொகையானது 50 மில்லியன் ரூபாவை விஞ்சியிருந்தபடியால் இவை விவசாய அமைச்சிற்கு ஒப்புவிக்கப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டிற்கான திட்டம்

- விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செயற்திட்டம் தயாரித்தல்
- மூலதன, மீண்டுவரும் செலவின மற்றும் விசேட கருத்திட்டங்களுக்கான முன்னேற்றத் தினை கண்காணித்தல்.
- மாதாந்த பௌதிக மற்றும் நிதி சம்பந்தமான முன்னேற்ற வெளிக் கொணர்வுக் கூட்டங் களை நடாத்தல்
- விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினைத் தொகுத்தல்.
- மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கும் பாதீட்டு உரையாடலுக்குமான தகவல்களை வழங்குதல்.
- 50 மில்லியனுக்கும் அதிகமான கருத்திட்டங் களுக்கான முன்னேற்ற அறிக்கைகளைத் தொகுத்தல்

அலுவலர் பட்டியல்

பதவி	எண்ணிக்கை
பிரதிப்பணிப்பாளர்	01
மொழி பெயர்ப்பாளர்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	02
விவசாயப் போதனாசிரியர்	01
முகாமைத்துவ உதவியாளர் சேவை	02
சாரதி	03
K.K.S	01
ஊழியர்கள்	03
காவலாளி	01
மொத்தம்	16

5. காலநிலை அறிக்கை

இலங்கையின் பல்வேறு விவசாயச் சுற்றாடல் வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 விவசாய வானிலை அவதான நிலையங்களிலிருந்து 2011/2012 கால போகத்தின் (செப்ரம்பர் - பெப்ரவரி) போதும், 2012 சிறு போகத்தின் (மார்ச் - ஆகஸ்ட்) போதும் சேகரிக்கப்பட்ட வானிலை தரவுகள் இந்த அறிக்கையில் சாராம்சமாகத் தரப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களத்தின், இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலைய காலநிலையியற் பிரிவினால் இந்த அறிக்கை தொகுக்கப்பட்டது.

இரண்டு போகங்களிலும் மொத்த மழை வீழ்ச்சி அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளது. 14 நிலையங்களிற்குமான மாதந்த மழைவீழ்ச்சி, 10 வருட காலத்திற்கான சராசரி மழை வீழ்ச்சி, என்பன முறையே அட்டவணை 5.2, 5.3 என்பனவற்றிற் தரப்பட்டுள்ளன. ஏனைய முக்கிய விவசாய - வானிலை நியமங்களான வாய்ப்பான ஆவியுயிர்ப்பு (திறந்த ஆவியாதற் தட்டிலிருந்து மதிப்பிடப்பட்டது), வெப்பநிலை, சாரீரப்பதன், பிரகாசமான சூரிய வெளிச்சம் கிடைத்த மணித்தியாலங்கள், காற்றின் வேகம் என்பன அட்டவணைகள் 5.4, 5.5. 5.6, 5.7, 5.8 ஆகியனவற்றிற் தரப்பட்டுள்ளன. பொதுவாக நாட்டின் அனைத்து பிராந்தியங்களிலும் 2011/2012 காலபோக மழை வீழ்ச்சி எதிர்பார்த்ததை விட குறைவாகவேக் காணப்பட்டது. இது பிரதானமாக ஒக்ரோபரிலும், நவம்பரிலும் பருவ காலங்களிற்கு இடைப்பட்ட பலவீனமாக காலநிலையாலும், இதனையடுத்து வங்காள விரிகுடாவில் காலநிலை மாற்றங்கள் ஏற்படாமையாலும் இந்நிலை உருவாகியது. இதேவேளை மார்ச்சிலும், ஏப்ரலிலும் நிலவிய மோசமான பருவ காலங்களிற்கு இடைப்பட்ட பருவம், அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு அண்மையில் பலவீனமான தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசியமை என்னபவற்றின் காரணமாக 2012 சிறுபோகமும் வெற்றிகரமான பயிர்ச் செய்கைகுச் சாதகமானதாக அமையவில்லை. காலநிலைத் தரவுகளை மேலோட்டமாக ஆராய்ந்த போது தொடர்ச்சியாக இரண்டாவது தடவையும் சிறு போக மழை வீழ்ச்சி அதன் வழமையான போக்கில் பெய்யவில்லை என்பது தெரிய வந்தது. அடுத்தடுத்து தொடர்ச்சியாக இரண்டு சிறு போகங்களில் தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை பெய்யவில்லை என்பதை இது வெளிப்படுத்துகின்றது. இந்நிகழ்வு கால நிலை மாற்றம் ஏற்கனவே தனது பங்கை தென்மேல் பருவப் பெயர்ச்சி மழையிலிருந்து பெற்று விட்டமைக்கான ஒரு சமிஞ்சையாகும். தென் மேல் பருவப் பெயர்ச்சி மழையே இந்நாட்டின் நம்பிக்கையான பருவ மழைக் காலம் ஆகும்.

தாழ்நாட்டு ஈரவலயம்

இரத்தினபுரி (WL1a)

நீண்ட கால சராசரியான 1,651 மி.மீ மழைவீழ்ச்சியுடன் ஒப்படும் போது இபிரதேசத்தின் ஈரவலயப் பகுதிகள் 2011 / 2012 காலபோகத்தின் போது 30% குறைவான மழை வீழ்ச்சியையேப் பெற்றன. இந்த எதிர்மறையான ஒழுங்கற்ற மழைவீழ்ச்சிப் போக்கு பிரதானமாக இரண்டாவது பருவகாலங்களிற்கு இடைப் பட்ட மழைக் காலத்திலும் (ஒக்ரொபர், நவம்பர்), டிசம்பரிலும் சராசரியை விடக் குறைவான மழை பெய்வதற்குக் காரணமாக அமைந்தது. அயன குவிவு வலயத்தின் செல்வாக்கின் கீழ் வங்காள விரிகுடாவில் காலநிலைத் தொகுதிகள் உருவாகுவதன் காரணமாகவே வருடத்தின் இக்காலப் பகுதியில் பொதுவாக மழை பெய்யும். ஆனால் குறிப்பிட்ட இப்பருவகாலத்தில் அயன குவிவு வலயத்தின் செயற்பாடு மிகவும் பலவீனமாவேக் காணப்பட்டது. இதன் விளைவாக ஒக்ரோபர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் சராசரியை விடக் குறைவான மழையே பெய்தது. இக்காலப் பகுதியாயனது பொதுவாக தீவின் “கொந்தளிப்பான பருவ காலம்” என அழைக்கப்படும்.

இதேவேளை நீண்ட கால சராசரியான 2,148 மி.மீ மழை வீழ்ச்சியுடன் ஒப்பிடும் போது 2012 சிறுபோகத்தில் 15% குறைவான மழையே பெய்தது. இது பிரதானமாக மே முதல் ஜூலை வரையான காலப் பகுதியில் இப்பிரதேசத்தில் தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் தொழிற்பாடு பலீனமாகக் காணப்பட்டதால் ஏற்பட்டது. எனினும் சம்பந்தப்பட்ட மாதங்களின் மாதாந்த மொத்த வாய்ப்பான ஆவியுயிர்ப்புப் பெறுமானம் மொத்த மழை வீழ்ச்சியின் பெறுமானத்தை விடக் குறைவாகவேக் காணப்பட்டது. எனவே இப்பிராந்தியத்தில் செய்கை பண்ணப்பட்ட மேட்டு நிலப்பயிர்களிற்கு நீர் பற்றாக்குறைவால் ஏற்பட்ட பாதிப்பு மிகக் குறைவாகும்.

போம்புவலை (WL1b)

நீண்ட கால சராசரியான 1,542 மி.மீ மழைவீழ்ச்சியுடன் ஒப்படும் போது 2011 / 2012 கால போகத்தின் போது இப்பிரதேசத்தின் மொத்த மழை வீழ்ச்சியில் 27% குறைவு ஏற்பட்டது. றுடு1ய பிராந்தியத்தில் இந்த எதிர்மறையான போக்கிற்குக் கூறப்பட்ட காரணங்களே இப்பிரதேசத்திற்கும் எயடனை பொருத்தமானதாகும்.

2012 சிறு போகத்தின் மொத்த மழை வீழ்ச்சியில் 10 வீத குறைபாடே காணப்பட்ட போதிலும் கூட, அப்பருவ காலத்தினுள் அதன் பரவல் அதிகளவில் ஒழுங்கற்றதாகவேக் காணப்பட்டது. ஏப்ரல், மே மாதங்களில் இப்பிராந்தியத்தல் நிலவிய பலவீனமான மேற்காவுகை தொழிற்பாடுகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்டதை விட மிகக் குறைந்தளவான மழையே பெய்தது. இதே போன்றதொரு நிலைமை பலவீனமான தென் மேல் பருவப் பெயர்ச்சித் தொழிற்பாட்டின காரணமாக ஜூலை மாதத்திலும் ஏற்பட்டது. எவ்வாறாயினும், ஆகஸ்டில் எதிர்பாராத மழைக்காலம் நிலவியதோடு, மாதாந்த மொத்த மழை வீழ்ச்சியில் 80 % அதிகரிப்புக் காணப்பட்டது. இருந்தபோதிலும் சம்பந்தப்பட்ட மாதங்களின் வாய்ப்பான மாதாந்த மொத்த ஆவியுயிர்ப்புப் பெறுமானம் மொத்த மழை வீழ்ச்சியை விடக் குறைவாகவேக் காணப்பட்டதனால், இப்பிராந்தியத்தில் செய்கை பண்ணப்பட்ட மேட்டு நிலப்பயிர்களிற்கு நீர் பற்றாக்குறைவால் ஏற்பட்ட பாதிப்பு மிகக் குறைவாகவேக் காணப்பட்டது.

மத்திய நாட்டு ஈரவலயம்

பேராதனை (WM2b)

2011 / 2012 காலபோகத்தின் மொத்த மழைவீழ்ச்சி சுமார் 567 மி.மீ மாத்திரமே ஆகும். இது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 47 வீத குறைவாகும். தாழ் நாட்டு ஈரவலயத்திற்குக் குறிப்பிட்ட அதே காரணங்களினால் செப்ரெம்பரைத் தவிர இப் போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வழமையான மழை வீழ்ச்சியை விடக் குறைவான மழை பெய்தமையின் விளைவாகவே இந்த எதிர்மறையான குறைவேற்பட்டது. எனினும் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே ஜனவரி மத்தியிலிருந்து, பெப்ரவரி இறுதி வரையான காலப்பகுதியில் வழமையான உலர் காலநிலை நிலவியது. இது இப்பிராந்தியத்திலுள்ள பழ மரங்களில் பூக்கள் உருவாகுவதற்கான சாதகமான காலநிலையாக நிச்சயம் விளங்கியிருக்கும்.

பலவீனமான பருவப் பெயர்ச்சிக் காலங்களிற்கு இடைப்பட்ட பருவகாலம், குறைவான தென் மேற்குப பருவப் பெயர்ச்சிக் காற்று என்பன இப்பிரதேசத்தில் காணப்பட்டமையால் 2012 சிறுபோகத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட 66% குறைவான மழையே பெய்தது. மே மாதம் ஒவ்வொரு நாளும் வானிலை நிகழ்வியக்கங்களின் அடிப்படையில் உலர் நாட்களாகவேக் காணப்பட்டன. நாட்டின் இப்பாகத்தில் இவ்வாறான காலநிலை மிகவும் அரிதாகவே ஏற்படும் ஒரு நிகழ்வாகும். ஜூன் மாதத்தில் பெய்த மழையும் கூட ஆவியுயிர்ப்பின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கூடப் போதுமானதாக இருக்கவில்லை. இப்பிராந்தியத்தில் ஆகஸ்ட் மாதத்தில் மாத்திரமே எதிர்பார்த்த அளவான மழை பெய்தது. முன்னைய காலநிலைப் பதிவுகளை மேலோட்டமாக ஆராயும் போது இதே போன்ற நிலைமையே கடந்த சிறுபோகத்தில் (2011) ஜூன், ஜூலை மாதங்களில் காணப்பட்டதை வெளிப்படுத்தியது. எனினும் இப்பிராந்தி யத்தில் பதிவு செய்யப்பட்ட ஏனைய விவசாய – வானிலை நியமங்கள் குறிப்பாக வெப்பநிலையானது இங்கு

வறட்சியான காலநிலை நிலவிய போதிலும் கூட மிக அதிகளவில் உயர்வடையாது, பயிர்களின் வளர்ச்சிக்குச் சாதகமானதாகவேக் காணப்பட்டது.

மலை நாட்டு ஈரவலயம்

சீத்தா எலிய (WMU^3)

2011 / 2012 காலபோகத்தின் போது இப்பிராந்தியத்தின் மொத்த பருவ கால மழைவீழ்ச்சி சுமார் 1,125 மி.மீ ஆகும். இது அதன் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 15% குறைவாகும். செப்ரெம்பர் மாதத்தில் வழமையான மழையை விடக் குறைந்தளவான மழை பெய்தமையே இதற்கான காரணமாகும். ஈர வலயத்திலுள்ள ஏனைய பிராந்தியங்களைப் போலல்லாது, றுரு3 பிராந்தியத்தில் கால போக மழை வீழ்ச்சியானது தெளிவாகத் தெரியவில்லை. உண்மையில் இது பாரம்பரிய மரக்கறிச் செய்கைக்கு வாய்ப்பானதாகக் காணப்பட்டது.

இப்பிராந்தியத்தின் 2012 சிறுபோகத்தின் மொத்த மழை வீழ்ச்சி சுமார் 449 மி.மீ ஆகும். இது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது ஏறத்தாழ 45% குறைவாகும். இந்திய உப கண்டத்தின் மேல் நிலவிய பலவீனமான தென் மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றின் காரணமாக மே, ஜுன் மாதங்களில் குறைவான மழை பெய்தமையே இக்குறைவிற்கான பிரதான காரணியாகும். மே, ஜுன் மாதங்களில் மொத்த வாய்ப்பான ஆவியுயிர்ப்பானது, இதே காலப் பகுதியில் மொத்த மழை வீழ்ச்சியை விட அதிகமானதாகக் காணப்பட்டது. இதேவேளை ஜுலையில் மழை வீழ்ச்சியானது ஆவியுயிர்ப்புத் தேவையை மாத்திரமே பூர்த்தி செய்யக் கூடியதாயிருந்தது. பொதுவாக இவ்வாறான விவசாயக் காலநிலைத் தோற்றப்பாடு மிக அரிதாகவே இப்பிராந்தியத்தில் ஏற்படும். ஆனால் கடந்த 2011 சிறுபோகத்தில் நிலவிய காலநிலையே மீளவும் நிலவியதாக காலநிலைப் பதிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தாழ் நாட்டு இடை வலயம்

பத்தலகொடை (IL1a)

2011 / 2012 காலபோகத்தின் போது இப்பிராந்தியத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த மழை வீழ்ச்சி 648 மி.மீ ஆகும். இது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் 40% குறைவாகும். காலபோகத்தின் மழை வீழ்ச்சியில் இவ்வாறான எதிர்மறையான முரண்பாடு ஏற்படுவதற்கு பலவீனமான பருவகாலங்களிற்கு இடைப்பட்ட நிலைமையும், வங்காள விரிகுடாவில் காலநிலைத் தொகுதிகள் ஏற்படாமையுமே காரணம் ஆகும். செயற்றிறனான பயிர் வளர்ச்சிப் பருவத்தில் எந்தவொரு மாதத்திலும் எதிர்பார்க்கப்பட்ட அளவு மழை பெய்யவில்லை. இதன் விளைவாக இப்பிராந்தியத்தில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களில் நீரின் மட்டம் குறைவாகவேக் காணப்பட்டது. இப்பிராந்தியத்திற்கான பிரதான, நம்பிக்கைக்குறிய மழைக் காலமாக விளங்கிய போதிலும் கூட மானாவாரிப் பயிர்ச்செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டது.

இப்பிராந்தியம் தென் மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் நேரடியான பயனுறுதியான பிரதேசத்தில் இல்லாமையால், சிறு போகத்தில் ஏற்பட்ட மழைவீழ்ச்சிக் குறைவு ஈரவலயத்தைப் போன்று பாரதூரமானதாகக் காணப்படவில்லை. எனினும் பதிவு செய்யப்பட்ட மொத்த மழை வீழ்ச்சி 600 மி.மீ ஆகும். நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது இது 20% இழப்பு ஆகும். நாட்டின் ஏனைய பிராந்தியங்களைப் போன்று மே மாதத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவு குறைந்தளவான மழை பெய்தமையால் பிரதானமாக ஏற்பட்டிருக்கலாம். இதனைத் தவிர ஏனைய அனைத்து மாதங்களிலும் எதிர்பார்த்த மழை பெய்தது. மே மாதம் தவிர போகத்தின் மற்றைய எல்லா மாதங்களிலும் மொத்த ஆவியுயிர்ப்பை விட, அதிகளவான மொத்த மழை பெய்தது.

மொணராகலை (IL1c)

நாட்டின் ஏனைய பாகங்களிற்கு முரணாக இப்பிராந்தியத்தில் 2011 / 2012 காலபோகத்தின் போது பதிவு செய்யப்பட்ட மொத்த மழை வீழ்ச்சியில் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 15% அதிகரிப்புக் காணப்பட்டது. ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் வழமைக்கு அதிகமான மழை பெய்தமையே இதற்கான காரணமாகும். போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும ஆவியுயிர்ப்பானது மழை வீழ்ச்சியை விடக் குறைவாவேக் காணப்பட்டது. இது மானாவாரி மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் சாதகமான மண் ஈரப்பதனை உறுதி செய்தது. இப்போகத்தின் போது ஏனைய விவசாய வானிலை நியமங்கள் யாவும் சிறந்த பயிர் வளர்ச்சிக்குச் சாதகமானதாகவேக் காணப்பட்டது. இரவு நேர குறைந்த வெப்பநிலையானது, தாழ் நாட்டு இடை, உலர் வலயங்களின் ஏனைய பாகங்களை விட தொடர்ந்தும் குறைவாகவேக் காணப்பட்டது. இது சித்திரசு, கரும்பு, ஏனைய பழப் பயிர்களிற்கு மிகவும் சாதகமானதாக விளங்கியது.

இப்பிராந்தியத்தில் 2012 சிறுபோகத்தின் போது பெறப்பட்ட மொத்த மழை வீழ்ச்சி 482 மி. மீ ஆகும். இது இப்பிராந்தியத்தின் நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 20% குறைவாகும். ஏப்ரலைத் தவிர இப்போகத்தின் ஏனைய அனைத்து மாதங்களிலும் வழமையை விடக் குறைவான மழை பெய்தமையே இவ்வாறு மொத்த மழை வீழ்ச்சிக் குறைந்தமைக்கான காரணமாகும். இதேவேளை போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் மொத்த வாய்ப்பான ஆவியுயிர்ப்பானது மழை வீழ்ச்சியை விட அதிகமானதாகவேக் காணப்பட்டது. எனவே மேலதிக நீர்பாசனத்தை வழங்காது, மேட்டு நிலப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வது சாத்தியமானதாக அமையவில்லை. எனினும், வழமையாக சிறு போகம் முழுவதும் இப்பிராந்தியத்தில் அரிதாகவே நன்கு பரவலாக மழை பெய்யும். எனவே இந்த சிறுபோகத்தை வழமைக்கு மாறான ஒன்றாகக் கருத முடியாது.

மாஹோ (IL3)

2011 / 2012 காலபோகத்தின் போது இப்பிராந்தியத்தில் பெய்த மொத்த மழை வீழ்ச்சி 768 மி.மீ ஆகும். இது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் 20% குறைவாகும். இந்த எதிர்மறையான முரண்பாட்டிற்கான காரணம் நவம்பரில் 40% குறைவான மழை பெய்தமையே ஆகும். ஜனவரியும் இப்பிராந்தியத்திற்கு வழமைக்கு மாறாக உலர்வானதாகக் காணப்பட்டது. முழு மாதத்திலும் 3 மி.மீ மழை மாத்திரமே பெய்தது. இதற்கு மாறாக நீண்ட கால சராசரியான 25 மி.மீ உடன் ஒப்பிடும் போது பெப்ரவரியில் வழமைக்கு மாறாக ஈரமான காலநிலை நிலவியதுடன் மொத்தமாக 153 மி.மீ மழை பெய்தது.

இப்பிராந்தியத்தின் நீண்ட கால சராசரியான 647 மி. மீ உடன் ஒப்பிடும் போது 2012 சிறுபோகத்தின் போது மொத்த பருவகால மழை வீழ்ச்சியில் 30% குறைவு காணப்பட்டது. மே முதல் ஆகஸ்ட் வரையான காலப் பகுதியில் வழமையை விட குறைவான மழை பெய்தமையே இக்குறைவு ஏற்படுவதற்கான காரணமாகும். இக்காலப் பகுதியில் இக்காலப் பகுதியில் மே மாதம் ஒரு நாளாவது அளவிடக் கூடியளவான மழை பெய்யவில்லை. இதேவேளை ஏனைய மூன்று மாதங்களிலும் கூட வளிமண்டலத்தின் ஆவியுயிர்ப்புத் தேவையை விடக் குறைந்தளவான மழையே பெய்தது. எனவே இப்போகத்தின் போது வறட்சியால் ஏற்பட்ட தாக்கங்கள் பொதுவானதொரு பிரச்சினையாகக் காணப்பட்டது.

மத்திய நாட்டு இடை வலயம்

குண்டசாலை (IM3a)

இப்பிராந்தியத்தின் நீண்ட கால சராசரியான 881 மி. மீ உடன் ஒப்பிடும் போது 2011 / 2012 காலபோகத்தின் போது மொத்த பருவகால மழை வீழ்ச்சியில் 23% குறைவு காணப்பட்டது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழமையை விடக் குறைவான மழை பெய்தமையே இவ்வாறு எதிர்மறையாகப் பதிவு செய்யப்பட்டதற்கான காரணமாகும். எவ்வாறாயினும் பொருத்தமான முகாமைத்துவ

நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பின் மண் ஈரப்பதன் தகைப்பு இப்பிராந்தியத்தில் பயிரிடப்பட்டப் பயிர்களிற்கு ஒரு பிரச்சினையாக அமைந்திருக்காது என்பதை பதிவு செய்யப்பட்ட ஆவியுயிர்ப்பு வீதம் வெளிப்படுத்தியது.

